# எங்கள் தமிழ்க் கோவை

## முதற் புத்தகம்

## பொதுப் பகுதி

தொகுத்தோர் :

**ஸ்ரீமான் T. S. அருணாசலம் பிள்ளை, B.A. L.T.,**
தலைமை ஆசிரியர் போர்டு ஹைஸ்கூல்,
நாச்சியார் கோயில் தஞ்சை ஜில்லா

,, **N. நஞ்சப்பா, M.A. B.O.L. L,T.,**
தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல்,
பாபிரெட்டிபட்டி சேலம் ஜில்லா.

,, **வித்வான் G. சந்திரமௌளீசுவரன்,**
தமிழாசிரியர், லண்டன் மிஷின் ஹைஸ்கூல், சேலம்.

**விந்திய வெளியீடுகள்**

1-1, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1.

 1952 [விலை ரூ. 1

First Edition November, 1952.

T. V. C. Press, Madras

# முன்னுரை

**'எங்கள் தமிழ்க் கோவை'** என்னும் பெயரோடு வெளி வரும் இக் கோவை நூல்கள் உயர் நிலைப் பள்ளிகளில் நான்கு—ஐந் தாம் படிவங்களில் பயிலும் மாணவர்கட்குப் பாட நூல்களாக அமை வதற்குரியனவாகும். மண்டல மொழி முதன்மையாக்கப்பட்ட பின்னர், அந்நிலைக்கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாட வியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கவும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப் புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக் கெனப் பாட வியலில் குறிக்கப்பட்டுள்ள அளவினும் சிறிது மிகுதி யாகவே செய்யுட்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள் ளன. ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும், மாணவர்களின் தகு திக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துதற்கு இடமிருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள் ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும், உரை நடைப் பாடங்களுக்குப் பயிற்சி வினாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணை கொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சி யும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவ தாக வெளிவரும் இக் 'கோவை' நூல் வரிசையை ஆசிரியர்களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான் ம. வி. இராகவன், வித்து வான். எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகம் கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட்களையும் கட்டுரைகளையும் இக் 'கோவை' வரிசையில் கோத் துக் கொள்ள இசைவுதந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# உள்ளுறை

## செய்யுள்

# உரை நடை

# எங்கள் தமிழ்க் கோவை

## முதற் புத்தகம்

## பொதுப் பகுதி

# செய்யுள்

## I. கடவுள் வாழ்த்து

---

### 1. தேவாரம்

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்;
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்;
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்;
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்;
பொன்னானாய் மணியானாய் போக மானாய்;
பூமிமேல் புகழ்தக்க பொருளே! உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே?

—திருஞான சம்பந்தர்

### 2. திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

—மாணிக்கவாசகர்

## 3. பெருமாள் திருமொழி

இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம் ஆயிரங்களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையைமேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும்நாளே ?

—குல சேகர ஆழ்வார்.

## 4. பெரிய திருமொழி

வந்தாய் என்மனம் புகுந்தாய் ; மன்னி நின்றாய் ;
நந்தாத கொழுஞ்சுடரே ! எங்கள் நம்பீ !
சிந்தா மணியே திருவேங் கடமேய
எந்தாய் ! இனியான்உனை என்றும் விடேனே. 4

—திருமங்கையாழ்வார்.

## 5. திருவருட்பா

அன்பெனும் பிடியு ளகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகு மரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தம ரமுதே
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவுள் ளமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

—இராமலிங்க சுவாமிகள்.

### குறிப்புரை :

1. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச் செய்த பாக்கள் தேவாரம் எனப்படும். இப்பாட்டைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவர் நடு நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் வேளாளர் மரபிற் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர்—புகழனார்; தாயார் பெயர்—மாதினியார். இவரது இயற் பெயர்—மருணீக்கியார். திருநாவுக்கரசு என்ற பெயர் இவருக்கு இறைவரால் கொடுக்கப் பட்டது. தருமசேனர், அப்பர், வாகீசர், தாண்டகச் செல்வர் என்பன இவருக்கு

வழங்கப்பட்ட வேறு பெயர்களாம். இவர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதி யென்பர்.

**அருஞ் சொற்கள்**

வித்து-விதை, மறை—வேதம், அங்கம்—வேதாங்கம்.

2. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்ற நால்வரும் சைவ சமய குரவர். இந்நால்வருள் திருவாசகத்தை இயற்றியருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் பாண்டிய நாட்டில், திருவாதவூரில், அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவரது பெற்றோர் இவருக்கு வாதவூரர் எனப் பெயரிட்டனர். இவர் இளமைப் பருவத்திலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தன் முதல் அமைச்சராக்கினன். 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டப் பெயர் இவருக்கு அரசரால் கொடுக்கப்பட்டது. இவர் திருப் பெருந்துறையில் ஞானோபதேசம் பெற்ற பின்னர், இறைவன்மீது பல பாக்களைப் பாடினார். இவர் பாக்களின் பெருமை நோக்கி சிவபெருமான் இவருக்கு " மாணிக்க வாசகன் " என்ற பெயரை அளித்தார். இவர் தில்லையில் சிவனடி சேர்ந்தார். திருக்கோவையார் என்பது இவர் பாடியருளிய வேறு நூலாகும். இவரது காலம் கி. பி. 3—ஆம் நூற்றாண்டு என்றும், கி பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

இந்நூலில் உள்ள பாக்கள் பக்திச்சுவை மிகுந்தவை; கேட்போர் மனத்தைக் கரைக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இக்காரணம் பற்றியே "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் " என்ற பழமொழி வழங்குகின்றது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் இது எட்டாந் திருமுறையாகும்.

**அருஞ் சொற்கள் :**

நினைந்து-பசிக்கும் காலம் அறிந்து, சால—உரிச்சொல், பரிந்து-அன்பினால் இரங்கி, ஊன்-உடல், உள்ளொளி-ஞானம்.

3. இச் செய்யுள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் ஒரு பகுதியாகிய பெருமாள் திருமொழியில் உள்ளது. இதனை அருளிச் செய்தவர் குலசேகர ஆழ்வார். இவர் சேரநாட்டுத் திருவஞ்சைக் களத்தில் அவதரித்தவர் ; சேர மரபினர்: அரசராய் விளங்கியவர். இவர் தந்தையார் திருட விரதர். இவர் 9—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இருள் இரிய—இருள் கெட, நெற்றி-உச்சி, துத்தி-படப்புள்ளி, பணம்-படம், அனந்தன்-ஆதிசேடன், அணை-படுக்கை, திரை-அலை, வருட-தடவ, கருமணி-கருமாணிக்கம்; மரகதம், கோமளம்-அழகு.

4. **பெரிய திருமொழி**: பெருமையையுடைய திருமொழி என்பது பொருள். திருமொழி என்பது மேன்மையான சொற்களாலாகிய நூலைக் குறித்ததால் அடையடுத்த கருவி ஆகுபெயர் : திரு : அடை மொழி. இது நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் அடங்கியது. ஆழ்வார்கள் பன்னிருவர் பாடிய பிரபந்தங்களில் இது பெரியது ; ஆகையால் **பெரிய திருமொழி** எனப்பட்டது.

இதனை இயற்றியவர் **திருமங்கை யாழ்வார்** என்பவர். இவர் சோழ மண்டலத்தில் திருமங்கை என்னும் நாட்டில், திருக்குறையலூரில் பிறந்தவர். இவர் திருமாலிடத்தில் பக்தி மிக்கவராய்ப் பாசுரங்கள் பலவியற்றித் திகழ்ந்தார். இவர் காலம் **கி. பி. எட்டாம் நூற்றாண்டு** என்பர்.

4. நின்றாய்–நின்றவனே; விளி, நந்தாத–அழியாத, நம்பி – ஆண்பாற் சிறப்புப் பெயர். எம் + தந்தை = எந்தை; மரூஉ. வந்தாய், புகுந்தாய்: முற்றெச்சங்கள்.

5. **அருட்பா** என்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையுடைய நூல். இதனைப் பாடியவர் **இராமலிங்க சுவாமிகள்.** இவர் ஏறத்தாழ 70 ஆண்டுகட்கு முன் இருந்தவர்; சிறந்த சிவ பக்தர்; இவர் பாக்கள் இனிமையும் உணர்ச்சியும் கொண்டவை. பிடி–பிடிப்பு, குடில்-குடிசை. கடம்-குடம்.

## பயிற்சி

### I. விடை கூறுக :—

1. தேவாரம்–பொருள் கூறுக.
2. தேவாரத்தைப் பாடிய புலவர்கள் யாவர் ?
3. "நின்னுவார்" என்று தொடங்கும் செய்யுளைப் பாடியவர் யார் ?
4. அவருக்கு வழங்கும் வேறு இரண்டு பெயர்களைக் கூறு.
5. அவர் பெற்றோர் யாவர் ?
6. ஆசிரியர் இறைவனை நோக்கி யாது கூறுகின்றார் ?
7. திருவாசகம் என்ற நூலைப் பாடியவர் யார் ?
8. இந்நூலைப் பற்றிய பழமொழி யாது ?
9. தாயின் இயல்பு யாது ?
10. சிவபெருமான் மாணிக்க வாசகருக்குச் செய்த நன்மைகள் யாவை ?
11. பெருமாள் திருமொழியைப் பாடினவர் யார் ?
12. திருமங்கை யாழ்வார் வாழ்ந்த காலம் யாது ?
13. இராமலிங்க சுவாமிகள் வரலாறு யாது ?
14. திருமால் எங்கு எவ்வாறு பள்ளிகொண்டுள்ளார் ?
15. அனந்தன் யார் ? அவன் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளான் ?
16. திருமங்கை யாழ்வாருக்குத் திருமால் எவ்வாறு அருள் புரிந்தார் ?
17. திருவேங்கடம், திருவரங்கம்–குறிப்பு எழுதுக.
18. அருட்பாவில் பரசிவம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
19. நினைப்பார்கள் — (அ) இதைப் பெயர்ச் சொல்லாக வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

    (ஆ) இதை வினைச்சொல்லாக வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### கல்வி

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 2

தொட்டனைத் தூறு மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. 3

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு;
மாடல்ல மற்றை யவை. 4

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். 5

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம்; தீயொழுக்க
மென்று மிடும்பை தரும். 6

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 7

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். 8

### ஊக்கமுடைமை

உடையர் எனப்படுவ தூக்கம் ஃ தில்லார்
உடையதுடையரோ மற்று. 9

ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை. 10

வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு, 11

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 12

## நாடு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. 13

கேடறியாக் கெட்டவிடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை. 14

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து 15

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு. 16

## மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். 17

அற்று லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றுன் னெடிதுய்க்கு மாறு. 18

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 19

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய். 20

—திருவள்ளுவர்.

### குறிப்புரை

திருக்குறளை இயற்றியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். இவர் வள்ளுவர் குடியைச் சேர்ந்தவர். இக்குடியினர் அரசனது பட்டத்து யானையின்மேல் இருந்து முரசறைந்து திருவிழா, திருமணம், படையெழுச்சி முதலிய நற்செயல்களை நகரமாந்தருக்கு அறிவிக்கும் மரபினர்.

இவரைப்பற்றி வழங்கும் கதைகள் பல, அவை உண்மை என்று கொள்ளச் சான்றுகள் இல. இவரது காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகும்.

திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்ததாகும். இந்நூல் எந்நாட்டாருக்கும் பயன்படும் முறையில் எழுதப்பட்டுள்ளதால், பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதனுல் தான் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு" என்றுர் பாரதியார். "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி" என்ற பழமொழி இந்நூலின் பெருமையை விளக்கும்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளையுடையது. இதனால் இதை முப்பால் என்றும் கூறுவர். இது ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பப்பத்துக் குறளாக 1330 குறட்பாக்களை உடையது.

### அருஞ் சொற்கள்

**கல்வி:**– கற்றற்குரிய நூல்களைக் கற்றல். 1. கசடுஅற – பழுதற. 2. இதில் கற்றார் உயர்வும், கல்லார் இழிவும் கூறப்பட்டன. 3. கேணி–சிறுகுளம்; இங்குச் சிறுகுளத்திலுள்ள நீர். மாந்தர்-மக்கள். 4. கேடில்—கேடு + இல்—அழிவில்லாத, விழு-சீரிய, மாடு-செல்வம்.

**ஒழுக்கமுடைமை:**— 1. விழுப்பம்-சிறப்பு, உயிரினும் ஓம்பப்படும்-உயிரைக் காட்டிலும் பாதுகாக்கப்படும். 2. வித்து-விதை; இடும்பை—துன்பம். 3. ஒல்லா-முடியா, வழுக்கியும்—மறந்தும். 4. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் பலகற்றும் அறிவிலாதார் எனக்கூட்டுக.

**ஊக்கமுடைமை:**—அஃதாவது மனத்தளர்ச்சியின்றி, தொழில் செய்தலில் எழுச்சியுடனிருத்தல். 1. ஊக்கம்–மனக்கிளர்ச்சி. 2. அதர்–வழி, அசைவு இலா-துன்பம் முதலியவைகளால் தளராத, உழை–இடம். 3. வெள்ளத்தனைய–நின்ற நீரினது அளவினவாம், நீட்டம்-நீளம். "நீரளவே யாகுமாம் நீராம்பல்" என்ற மூதுரை ஈண்டு நோக்கத்தக்கது. 4. உள்ளுவது-நினைப்பது, உள்ளல்-நினைக்கக்கடவர், அது-அவ்வுயர்ச்சி.

**நாடு:**—1. தள்ளா விளையுள்–குறையாத விளைவைச் செய்யும் உழவர், தக்கார்-அறிவோர். 2. கேடு–பகைவராற் கெடுதல். 3. ஏமம்–காவல், என்ப-என்று சொல்லுவர் நூலோர். 4. நாடா வளத்தன-தம்மிடத்து வாழ்வார் தேடிவருந்தாமல் அவரிடத்துத் தானே அடையும் செல்வத்தையுடைய நாடுகளே.

**மருந்து:**...1. அருந்தியது அற்றது-முன் உண்டது அற்ற தன்மையை, போற்றி–குறிகளால் அறிந்து. 2. அளவறிந்து-அறும் அளவு அறிந்து, நெடிது உய்க்கும் ஆறு-நெடுங்காலம் கொண்டு செலுத்தும் வழி. 3. துவர–மிக, மாறு கொள்ளாமையாவது-உண்பான் பகுதியொடும், காலவியல்பொடும், சுவை வீரியங்களாலும் மாறு கொள்ளாமை. 4. இழிவு அறிந்து–குறைதலே நன்றென்று அறிந்து. இரை-இகழ்ச்சிக் குறிப்பு.

### பயிற்சி

**விடை கூறுக:**—

1. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர் கூறு.
2. அதன் ஆசிரியர் யார் ?
3. அவர் எக்குடியைச் சேர்ந்தவர் ?
4. அவர் முரசறைந்து தெரிவிக்கும் செய்திகள் யாவை ?
5. திருக்குறளைப்பற்றி வழங்கும் பழமொழி யாது ?

6. மக்கள் எவற்றைக் கற்கவேண்டும் ? எவ்வாறு ?
7. கற்றோரைக் கண்ணுடையவரென்றும், கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் கூறக் காரணம் யாது ?
8. தொட்டனைத் தூறு மணற்கேணி—இது எதனை விளக்க வந்தது ?
9. எவை செல்வமாகா ?
10. ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் எவ்வாறு சிறந்ததாகும் ?
11. இடும்பைக்குக் காரணம் யாது ?
12. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே—எவை ?
13. பல கற்றும் அறிவிலாதார் யார் ?
14. செல்வம் எவனை யடையும் ?
15. மாந்தர் தம் உள்ளத் தனைய துயர்வு – இதனை விளக்கவந்த உபமானம் யாது ?
16. அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து—எது ? ஏன் ?
17. நாட்டில் வாழ்வோர் யார் ?
18. எது சிறந்த நாடாகும் ?
19. சிறந்த நாட்டின் ஐந்து தன்மைகள் யாவை ?
20. ஒருவனுக்கு மருந்தே வேண்டியதில்லை-எப்பொழுது ?
21. அளவறிந்து உண்பதால் உண்டாகும் நன்மை யாது ?
22. நோய் யாரை அடையும் ?

II. வள்ளுவரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 2. நீதி நெறி விளக்கம்

### கற்றவற்றைப் போற்றுதல்

வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல். 1

### பெரியோர் பணிவு

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப ;—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு. 2

## தன்னைப் புகழ்தல் தகாது

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை அன்றே நலம் ? 3

## பெருமை பெறுதற்குரிய வழி

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு :—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 4

## உட்பகையை ஒழிக்கும் உபாயம்

புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் ;—கழிபெருங்
கண்ணோட்டம் செய்யேல் ; கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. 5

—குமரகுருபர சுவாமிகள்

இந்நீதி நூலை இயற்றியவர் **குமரகுருபரசுவாமிகள்** என்பவர். இவர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர்; இளமையிலேயே துறவறம் பூண்டு வாழ்ந்தவர். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு. இவர் காலத்தில் திருமலை நாயகர் என்னும் நாயக மன்னர் மதுரை நகரிலிருந்து ஆட்சி புரிந்து வந்தார். அவர் விருப்பத்தின்படியே குமரகுருபரர் இந்நீதி நூலை இயற்றினார். நாயக மன்னர் இதற்குப் பரிசாக இருபதினாயிரம் பொன் வருவாயுடைய அரியநாயகி புரத்தை இவருக்கு நன்கொடையாக அளித்தார்.

1. கற்றன—படித்த பொருள்களை (வினையாலணையும் பெயர்), ஓம்பாது—பாதுகாவாமல் (நினைவில் வைத்திராமல்), பரிந்து-விரும்பி, கற்பான்-படிக்கும் பொருட்டு (பான் ஈற்று எதிர்கால வினையெச்சம்), கருந்தனம்-மிக்க செல்வம், உய்த்து—தாங்கிச் சென்று, எய்த்து-வருந்தி.

2. ஆக்கம்-செல்வம் (கல்வி, பொருள்), மீச் செலவு—வரம்பு கடந்த நடத்தை, நனி-மிகவும் (உரிச்சொல்), துலை-தராசு.

3. வியப்பிப்பான்-(பிறர்) நன்கு மதிக்கும்படி செய்ய முயல்பவன், தன் புகழ்தல்-தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல். வளர்த்து அற்று—வளரச் செய்வது போலாகும், ஆல்-ஆதலால், வியவாமை—தற்புகழ்ச்சி செய்துகொள்ளாமையே, நயவாமை - விரும்பாதிருத்தல், வியவாமை, நயவாமை – எதிர்மறைத் தொழிற் பெயர்கள்.

4. சுட்டு-நன்கு மதிக்கப்படுதல் (முதல் நிலைத் தொழிற் பெயர்), யாண்டும்-எப்பொழுதும், மறவாமே-எதிர்மறை வினை எச்சம், நோற்பது-கடைப்பிடியாகக் கொள்ளத் தக்கது, சீர்-புகழ், தூற்றி-பிறரறியச் சொல்லி, சிறுமை-குற்றங்கள், புறங்காத்து—வெளிப்படுத்தாது மறைத்து.

5. நட்பு-நட்புக்கொண்டு, அகம் வேர்ப்பார்-மனம் புழுங்குவோர், நச்சு-விஷம் (நஞ்சு என்பதன் வலித்தல் விகாரம்), கழி—மிகுதி (உரிச்சொல்), கண்ணோட்டம்-தாட்சணியம், பொதிந்து-மறைத்து.

**விடை கூறுக :—**

1. நீதிநெறி விளக்கத்தை இயற்றிய ஆசிரியர் யார்? அவர் வரலாறு யாது?
2. இந்நூலை இயற்றுவித்தவர் யார்? அவர் ஆசிரியருக்கு வழங்கிய பரிசு யாது?
3. கற்றவற்றைப் போற்றவேண்டும் என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. பெரியார் இயல்பு யாது? அதற்குக் கூறப்பட்டுள்ள உபமானத்தை விளக்குக.
5. 'தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்த்தற்று'—எது?
6. தற்புகழ்ச்சி தகாது என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
7. பெருமை பெறுவதற்குரிய வழி யாது?
8. நச்சுப் பகைமை என்றது யாது? அதனை என்ன செய்யவேண்டும்?

## 3. நாலடியார்

### யாக்கை நிலையாமை

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை;—இன்னினியே
நின்றான், இருந்தான், கிடந்தான், தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லால். 1

### சினமின்மை

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை;—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. 2

### கல்வி

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 3

### மேன்மக்கள்

அங்கண் விசும்பில் அகல்நிலாப் பாரிக்குந்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்;—திங்கள்
மறுவாற்றும் சான்றோர:். தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின். 4

### நட்பாராய்தல்

யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 5

### குறிப்புரை

நாலடியார் என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இந்நூல் நான்கு அடிகளைக்கொண்ட வெண்பாக்களால் இயற்றப்பட்டதால் நாலடியார் எனப்பட்டது. ஆர் விகுதி சிறப்புப்பற்றி வந்தது. இந்நூலை 'நாலடி நானூறு' என்றும் கூறுவர். இது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை யுடையது. "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்பது இதனைப் பற்றி வழங்கப்படும் பழமொழியாகும். இதனை இயற்றியவர் சமண முனிவர்கள்.

### அருஞ் சொற்கள்

1. எடுத்த உடல் கணப்பொழுதில் அழியும் இயல்பினது. ஆகையால், அறத்தை விரைந்து செய்யவேண்டும். முதலடி-உவமையணி, இன்னினி-இனி+இனி, கேள்-கேளிர்.
2. கூர்த்து-கோபம் மிக்கு. பேர்த்து-மாறுபட்டு, நீர்த்து அன்றி-குணமுடைய சொல் ஒன்றையும் கூறுமல், சொல்பவோ-சொல்லார், இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி.
3. குருகு-அன்னம், அமைவுடைய-சாரமான நூல்களையே.
4. கண்-இடம், பாரிக்கும்-வீசும், மறு-களங்கம், ஆற்றார்-பொறார், தெருமந்து-வருந்தி, இச்செய்யுள் வேற்றுமை யணி.
5. ஒரீஇ-விட்டு, கேண்மை—நட்பு, கெழீஇ-சேர்த்து.

**பயிற்சி**

I. விடை கூறுக :—

1. நாலடியார் என்ற நூல் எத்தொகுப்பைச் சேர்ந்தது ?
2. அதனை இயற்றியவர் யாவர் ?
3. அந்நூலைப்பற்றி வழங்கும் பழமொழி யாது ?
4. புல் நுனிமேல் நீர்—இது எதனை விளக்க வந்தது ?
5. யாக்கை நிலையாமையை அறிந்தோர் செய்யவேண்டியது யாது ?
6. மேன்மக்கள் கோபங்கொள்ளார் என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார் ?
7. குருகின் இயல்பு யாது ?
8. அமைவுடைய கற்பவே—என்று கூறக் காரணங்கள் யாவை ?
9. சான்றோர் எக்காரணம் பற்றித் திங்களுக்கு ஒப்பாவார் ?
10. சான்றோர் திங்களினும் மேம்பட்டவர் என்பது எவ்வாறு பொருந்தும் ?
11. நாம் யாருடைய நட்பினைக் கொள்ளவேண்டும் ? ஏன் ?
12. நாம் யாருடைய நட்பினை நீக்கவேண்டும் ? ஏன் ?

II. 1. **பகுதி காட்டுக :—**

செய்க, நின்றான், குழைக்கும், கௌவினர்.

2. விகுதி காட்டுக.

செய்க, நின்றான், கவ்வி,

3. திங்களும் சான்றோரும் ஒப்பர்.

(அ) திங்கள்—திணையும் பாலும் கூறுக.

(ஆ) சான்றோர்-திணையும், பாலும், எண்ணும் கூறுக.

# III. காதை

## 1. ஆசிய ஜோதி

### அருள் உரிமை

### சித்தார்த்தர் கூறுதல்

"எய்த அம்பினால்—பறவை
இறந்து வீழ்ந்திடுமேல்
எய்தவர்க் காகும்—உரிமை
யாதும் ஐயமில்லை. 1

நீண்ட சிறகினிலே—விசைதான்
நின்றி ருப்பதல்லால்
மாண்டதில்லை அன்னம்—உயிர்த்து
வாழு கின்றதப்பா ! 2

சந்தேகம் வேண்டாம்—அதனைத்
தரமு டியாதப்பா ;
எந்த உயிரையும்—காப்ப(து)
என்க டமையப்பா!" 3

### தேவதத்தன் கூறுதல்

சாற்றும் உரைகேட்டுத்—தேவ
தத்தனும் ஓடிவந்து
சீற்றம் எழுந்தவனாய்—நின்று
செப்பும் மொழியிதுவாம் : 4

"மடிய நேர்ந்தாலும்—உயிர்த்து
வாழ நேர்ந்தாலும்
படியில் வீழ்ந்திடுமேல்—பறவை
பாணம் எய்தவர்க்காம். 5

என்கை அம்பினால்—விழுந்த
இப்ப றவையினை
சங்கை இல்லாமல்—இங்கே
தந்திடுவாய் ஐயா." 6

### சித்தார்த்தர் மறுமொழி கூறுதல்

சொன்ன மொழிகேட்டான்—ஐயன்;
துன்பம் மிக அடைந்தான் ;
அன்னப் பறவையினைக்—கன்னத்தோ(டு)
அணைத்து வைத்துக்கொண்டான். 7

பாரில் உயிரையெல்லாம்—அருளால்
பாதுகாக்க வந்தோன்
சீரிய நன்மொழிகள்—உள்ளம்
தெளிந்து கூறுகின்றான் : 8

" இல்லை இல்லை ஐயா—பறவை
என்ப றவைஐயா
வல்லடி வழக்கு—நீயும்
வளர்க்க வேண்டாமையா. 9

தொல்லு லகமெல்லாம்—அருளால்
சொந்த மாக்கவந்தேன் ;
வெல்லும் பொருள்களில்—முதலில்
வென்ற பொருளிதாம். 10

எம்ம னிதருமே—உளத்தில்
இரக்க முற்றிடயான்
செம்மை நெறியினை—நன்கு
தெரிந்து கூறிடுவேன். 11

துன்பம் அண்டாமல்—அதனைத்
துரத்தி ஓட்டிடுவேன் ;
இன்பம் இவ்வுலகில்—நிலைக்க
என்றும் வென்றிடுவேன். 12

மனிதர் மட்டுமல்ல—உலகில்
வாழும் எவ்வுயிரும்
இனிய வாழ்வடையும்—வழியை
இனிது காட்டிடுவேன். 13

என்னு ரைகளைநீ—மறுக்கின்
இன்றே இப்பொழுதே
மன்னும் நீதிமன்றம்—ஏறி
வழக்கு ரைப்போமையா." 14

இருவரும் நீதி மன்றத்திற்குச் சென்று, தத்தம் வழக்குகளை எடுத்துக் கூறினர். சிலர் சித்தார்த்தர் கூறியதே முறை என்றனர். சிலர் தேவதத்தன் கூறியதே நீதி யென்றனர். முடிவில், சிறந்த அறிவுடைய புரோகிதன் ஒருவன் எழுந்து நின்று, யாவருங் கேட்கப் பின்வருமாறு கூறத் தொடங்கினன்.

## புரோகிதன் கூறுதல்

" உயிரைக் கொன்றிடவே—முயலும்
ஒருவனுக் கந்த
உயிரின் மேலேதும்—உரிமை
உண்டோ கூறுமையா ? 15

உயிரைக் காப்பவனே—என்றும்
உயிர்க்கு டையவனும்;
அயர்வு வேண்டாமையா—இதுவே
அறநூல் விதியையா. 16

இன்னும் வீண்வாதம்—பேசி
இருப்ப தேனையா?
அன்னம் சித்தார்த்தன்—பொருளாம்
ஐய மில்லையையா." 17

[என்று நீதியை எடுத்து யாவரும் உணரும்படி சொல்லி, மன்றிலிருந்து மாய மாக மறைந்து போயினன்.]

## குறிப்புரை

இதனை இயற்றியவர் கவிமணி-தேசிக விநாயகம் பிள்ளை, இவர் தந்தையார்—சிவதாணுப் பிள்ளை; தாயார்-ஆதிலட்சுமி அம்மாள். இவர் கி. பி. 1876-ல் பிறந்தவர்.

தேவதத்தன் சித்தார்த்தருடைய உறவினன். அவன் ஒரு அன்னத்தின்மீது அம்பெய்ய, அது கீழே விழுந்தது. சித்தார்த்தர் அதனைத் தம் மடிமீது வைத்துத் தடவிப் பாதுகாத்தார். தேவதத்தன் பணியாள் அன்னப் பறவையைத் தரும்படி கேட்கிறான்.

## அருஞ் சொற்கள்

5. படி-பூமி, 6. சங்கை-சந்தேகம். 9. வல்லடி வழக்கு—உடல் வலிமையினால் முறை தவறி வழக்காடுதல்,

## பயிற்சி

**விடை எழுதுக :—**

1. சித்தார்த்தர் அன்னப் பறவையை ஏன் கொடுக்கவில்லை?
2. தேவதத்தன் எக்காரணம்பற்றிப் பறவையைத் தன்னிடம் கொடுக்குமாறு கேட்டான்?
3. தேவதத்தன் மொழிகளைக் கேட்ட சித்தார்த்தர் அன்னப் பறவையை என்ன செய்தார்?
4. அன்னப் பறவையைக் கேட்ட தேவதத்தனிடம் சித்தார்த்தர் கூறிய நன்மொழிகள் யாவை?
5. புரோகிதன் அறநூல் விதி யாதெனக் கூறினன்?
6. அன்னப்பறவை யாருக்குரிய பொருளாயிற்று.

I. 'அருள் உரிமை'—இக்கதையை 20 வரிக்குள் எழுதுக.

## 2. பாஞ்சாலி சபதம்

(தருமபுத்திரன் சூதில் தன் நாடு நகரங்களை இழந்தான்; தன் மனைவி திரௌபதியையும் தோற்றான். துரியோதனாதியர் திரௌபதியை அவமானப்படுத்தத் தொடங்கினர்.)

### விகர்ணன் சொல்வது

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்.
அப்போது விகர்ணனெழுந் தவைமுன் சொல்வான் :
"பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன், பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி

ஏதெனிலுஞ் செய்திடலாம் என்றான் பாட்டன்;
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறிஎன்றான்; வழுவே சொன்னான்.
எந்தையர்தம் மனைவியரை விற்ப துண்டோ?
இதுகாறும் அரசியரைச் சூதிற் றோற்ற

விந்தையைநீர் கேட்டதுண்டோ ? விலைமா தர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்து விட்டார் !
சொல்லளவே தானாலும், வழக்கந் தன்னில்
இந்தவிதஞ் செய்வதில்லை; சூதர் வீட்டில்

ஏவற்பெண் பணயமில்லை என்றுங் கேட்டோம்.
'தன்னையிவ னிழந்தடிமை யான பின்னர்த்
தாரமேது? வீடேது? தாத னான
பின்னையுமோ ருடைமை யுண்டோ?' என்று நம்மைப்
பெண்ணரசி கேட்கின்றாள் பெண்மை வாயால்.

மன்னர்களே, களிப்பதுதான் சூதென் றாலும்
மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னையிரு விழிபார்க்க வாய்பே சீரோ ?
தாத்தனே, நீதியிது தகுமோ ?" என்றான்.

### அரசர் சினம் கொள்ளல்

இவ்வாறு விகர்ணனு முரைத்தல் கேட்டார்;
எழுந்திட்டார் சிலவேந்தர் இரைச்ச லிட்டார்;

''ஒவ்வாது சகுனிசெய்யுங் கொடுமை'' என்பார்;
''ஒருநாளு முலகிதனை மறக்கா'' தென்பார்;
''எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்;
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா;
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழியிஃ'' தென்பார்.

—கவி பாரதியார்

### அருஞ்சொற் பொருள்

வரி 2. விகர்ணன்–துரியோதனனுக்குக் கடைசித் தம்பி.
5. விலங்கு–மிருகம்.
16. ஏவற்பெண்-வேலை செய்யும் பெண். பணயம்–பந்தயம்.
18. தாரம்-மனைவி. நாதன்–நாசன்; அடிமை.
19. உடைமை-உடைமைப் பொருள்.
24. தாத்தனே-பாட்டனே.
30. ஏந்திழை-திரௌபதி.
33. செருக்களம்–போர்க்களம்.

**விடை கூறுக:**

1. பாட்டன் வீட்டுமன் கூறியது யாது?
2. எது விந்தையாகும்?
3. இந்த விதஞ் செய்வதில்லை—எந்த விதம்?
4. பெண்ணரசி யார்? அவள் கேட்டது யாது?
5. விகர்ணன் வீரமொழிகளைக் கேட்ட மன்னர் யாது கூறினர்?

## 3. நளவெண்பா

### கலிநீங்கு காண்டம்

### வாகுகன் உருவம் மாறிய தன்மை

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

**உண்மையுருவில் நளனைக் கண்டதும் அவன் மக்கள் புலம்புதல்**

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீரரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணீர்ப் புனலாற் கழுவினன்
மின்னிடையா ளோடும் விழுந்து. 2

**தமயந்தி நளனடியில் விழுதல்**

பாதித் துகிலோடு பாய்ந்திழியுங் கண்ணீரும்
சீதக் களபகலஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீர் அவற்கு. 3

**தேவர் நளனைப்போற்றிப் பூமாரி பொழிதல்**

"உத்தமரில் மற்றிவனை யொப்பா ரொருவரிலை
இத்தலத்தில்" என்றிமையோர் எம்மருங்கும்—கைத்தலத்தின்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 4

**கலிபுருடன் நளனை நோக்கி "வரம் கேள்" எனல்**

"தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகில் ஒப்பாயார் போதுவார்?—காவலனே!
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்" என்றான்
முற்றன்பால் பாரளிப்பான் முன். 5

**கலிபுருடனை நோக்கி நளன் வரங்கேட்டல்**

"உன்சரிதஞ் செல்ல உலகாளுங் காலத்தும்
மின்சொரியும் வேலாய்! மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையேல்" என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. 6

**கலிபுருடன் வரமளித்தல்**

"என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன்
மின்கால் அயில்வேலோய்! மெய்" என்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி. 7

### விதர்ப்பன் விருந்தளித்தல்

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 8

### இருதுபன்னன் அயோத்திந்நகர் செல்லல்

"உன்னையா னென்று முணரா துரைத்தவெலாம்
பொன்னமரு மார்ப பொறு" என்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்று வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியார் மன். 9

### நளன் தன் மனைவி மக்களோடு நிடத நாட்டிற்குச் செல்லல்

விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான்—முற்றும்பல்
தேனீ ரளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன். 10

### மாவிந்த நகரின் இருப்பிடத்தை நளன் தமயந்திக்குக் கூறுதல்

"தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலோய்!
ஏனைநெறித் தூரமினி எத்தனையோ?"—"மானே! கேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனும் நம்பதிதான் மிக்கு." 11

### சூரியன் உதித்தல்

இக்கங்குல் போக இகல்வேல் நளன்எறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்(கு)
இருக்குமா காண்பான்போல் ஏறினான் குன்றில்
செருக்குமான் தேர்வெய்யோன் சென்று. 12

### நளன் தன் மனைவி மக்களோடு மாவிந்த நகரஞ் சேர்தல்

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தவொரு
பூவிந்தை வாழும் பொழில். 13

### புட்கரனை அழைத்துவரும்படி நளன் தூதரை ஏவுதல்

''மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவிர்'' என்று குலத்தூதரைவிடுத்தான்
தண்டெரியல் தேர்வேந்தன் தான். 14

### புட்கரன் வந்து நளனைக் காணல்

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டான் எதிர். 15

### புட்கரன் நளனை நலம் வினவல்

செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினன்—''அங்கோலக்
காவற் கொடைவேந்தே! காதலற்குங் காதலிக்கும்
யாவர்க்குந் தீதிலவே'' என்று. 16

### நளனும் புட்கரனும் சூதாடுதல்

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
''யாது பணையம் ?'' எனவியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மால்பராய் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து. 17

### நளன் வெற்றி பெறுதல்

அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து. 18

### புட்கரன் தோற்று ஏகுதல்

அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லால் நளனென்று போற்றிசைக்குங்
கோவேந்தற் கெல்லாம் கொடுத்து. 19

## நளன் மாவிந்த நகரை அடைதல்

ஏனை முடிவேந்தர் எத்திசையும் பேற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 20

—புகழேந்திப் புலவர்

### குறிப்புரை

நளவெண்பா என்னுந் தொடர் நளனைப்பற்றிய வெண்பா எனப்பொருள்படும். நளன்+வெண்பா=நளவெண்பா. வெண்பா-நால்வகைப் பாக்களுள் ஒன்று.

நளவெண்பா—சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்னும் மூன்று காண்டங்களையுடையது. இது வழி நூலாகும். கலிநீங்கு காண்டம்—கலி புருஷன் நளனைவிட்டு நீங்கின செய்தியைக் கூறும் பாகம்.

இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை நாட்டில், செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன்விளைந்த களத்தூரில் தோன்றியவர்; வைஷ்ணவ சமயத்தினர். இவர் இன்றைக்குச் சுமார் எழுநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர். இவர் தம்மை யாதரித்த சந்திரன் சுவர்க்கி என்னும் மள்ளுவ நாட்டுச் சிற்றரசனை நளவெண்பாவில் இடையிடையே போற்றியுள்ளது இவரது நன்றியறிதலைப் புலப்படுத்தும்.

### அருஞ் சொற்கள்

1. கரந்து – மறைந்து. மால் நகம் தேர்-பெரிய மலை போன்ற தேர். மிக்கோன்-திருமால். புக்கோர்—அடைந்தவர். அருவினை—தீராத பாவம்.
2. குஞ்சியான் – இந்திரசேனன் (நளகுமாரன்), மின்னிடையாள்-இந்திரசேனை (நளன்மகள்) கோது-குற்றம்,
3. துகில்-ஆடை. சீதம்-குளிர்ச்சி. களபம்-கலவைச் சாந்து. அவற்கு–நளனுக்கு. அலர்ந்தது–பெருகிற்று.
4. தேன்+மாரி–தேமாரி.
5. போதுவார்—வருபவர்.
6. வாள்தானை—வளாயுதம் ஏந்தியபடை. மின்—ஒளி. கிளர் மணிபூண்—ஒளி வீசும் கற்கள் இழைத்த ஆபரணம்.
7. நல்காவி—நறுமணமுள்ள கருங்குவளை. மட்டு-தேன். அயில்—கூர்மையான.
8. விதையம் கோன்—விதர்ப்ப நாட்டரசனுகிய வீமன். தடம்-உரிச்சொல்,
9. பொன்—திருமகள்.
10. வில்தானை—வில்லேந்திய படைவீரர்,
11. தானவர்-அசுரர். வைவேல்-கூர்மையான வேல்.

12. இகல் வேல்—வீரம் பொருந்திய வேல். கங்குல்—இரவு. செருக்கும் மான் தேர் வெய்யோன் — விரைந்தோடும் குதிரைகள் பூட்டிய தேரையுடைய வனான சூரியன்.

13. மன்றல் இளம் கோதை — நறுமணமுள்ள புதுமலர் மாலையைச் சூடிய தமயந்தி. பூவின்கை-தாமரை மலரில் வாழும் திருமகள். பொழில் சோலை.

14. தண் தெரியல்—குளிர்ச்சியான மலர்மாலை. கொற்றவனுக்கு—நிடதநாட்டை அதுவரை ஆண்டுவந்த புட்கரனுக்கு. பணயம் — பந்தயப்பொருள். குலம்தூதர்—பரம்பரையாக ஊழியம் செய்யும் தூதர்.

15. மாயம்-வஞ்சனை. வன்னெஞ்சன்—புட்கரன். பெடைநடையாள்-தமயந்தி.

16. தேர்ச்சி இலா-அறிவில்லாத, வெம்கோல் அரசன்-கொடுங்கோலரசனாகிய புட்கரன்.

17. ஓராது-ஆராய்ந்து பாராமல், ஆழியில் துயிலும் மை மால்—பாற்கடலில் அறிதுயில் புரியும் கரியநிறமுள்ள திருமாலை, பராய்-வணங்கி, வண்மை புனை—ஈகை அழகைப்பூண்ட, கைஆழி-வலக்கைவிரல் மோதிரத்தை.

18. பலகை-பலகையில் ஆடும் சூதாட்டம், வென்றானை-வென்றபுட்கரனை.

19. வழிக்கொண்டான்-வந்த வழியாகவே திரும்பிச் சென்றான். நா ஏய்ந்த— நாவில் பொருந்திய, போற்று-வாழ்த்து.

20. ஏனைமுடி வேந்தர்-புட்கரன் ஒழிந்த மற்ற முடிவேந்தர், பொன் நகாம்-அமராவதி என்னும் தேவநகரத்தை, புரந்தரன்-இந்திரன்.

## பயிற்சி

## I. விடை கூறுக:—

1. நளவெண்பாவிற்கு அப்பெயர் வரக்காரணம் யாது?
2. அதனை இயற்றியவர் யார் ?
3. அது எத்தனைக் காண்டங்களை உடையது ?
4. புகழேந்திப்புலவரை ஆதரித்த மன்னன் யார் ?
5. தேர்ப்பாகன் வடிவு எதைப்போல் போயிற்று ?
6. நளனைக்கண்டு அவன் மக்கள் புலம்பியதைக் கவி எவ்வாறு வருணித்துள்ளார் ?
7. நளனடியில் விழுந்த தமயந்தியின் தோற்றத்தைக் கவி எவ்வாறு கூறுகின்றார் ?
8. "உத்தமரில் மற்றிவனை யொப்பா ரொருவரிலை இத்தலத்தில்" —இது யார் கூற்று ?
9. கலிபுருடனை நோக்கி நளன் கேட்ட வரம் யாது ?
10. கட்டுரைத்துப் போனான் கலி-உரைத்தது யாது ?
11. விதர்ப்பநாட்டின் சிறப்பு யாது ?
12. நிடதநாட்டின் சிறப்பு யாது ?

13. ஏனை நெறித் தூரமிலி எத்தனையோ ?—இடஞ்சுட்டி விளக்குக.

14. சூரியன் உதித்ததலைக் கவி எங்ஙனம் வருணிக்கிறார் ?

15. நளன் தூதரிடம் யாது கூறியனுப்பினன் ?

16. இருந்தானைக் கண்டான் எதிர்.

(அ) இருந்தவன் யார் ?
(ஆ) எங்கு இருந்தான் ?
(இ) கண்டவன் யார் ?

17. "யாது பணயம் ?"—இது யாருடைய வினா ?
—பணயம் யாது ?

18. பொன்னகரம் எய்தும் புரந்தரன்—உவமையை விளக்குக.

1. **சொற்களைப் பிரித்து எழுதுக:—**

உலகளந்த, கரந்துறையும், புக்கணைந்து, கோதிலா, கண்ணீர், பாய்ந்திழியும், தேமாரி, வாட்டானை, அம்பலகை, தேரேறி.

2. **பகுதி காட்டுக:—**

கரந்து, கழுவினன், கேட்டு, வைத்தான், சென்று,

## 4. இரட்சணிய யாத்திரிகம்

### இயேசுநாதரும் அடியார்களும் பூஞ்சோலையை அடைதல்

1. இனையன வளங்கொண் டோங்கி
இரும்புசூழ் கிடந்த வந்தப்
புனைமரக் காவின் பாங்கர்
பொலங்கெழு கெதுசே மென்னும்
நனிசிறந் தொப்பி கந்த
நறுமலர்ச் சோலை கண்ணுற்
றனகனு மன்பின் மிக்க
அடியரு மாண்டுப் புக்கார்.

2. செழுமலர்ச் சோலை யோங்கு
சினைதொறும் நிறையப் பூத்த
கொழுமுகை யவிழ்ந்து செந்தேன்
குளிர்நறுந் துளிவார் காட்சி
அழகிய மணவா ளன்தன்
அகத்துவந் தடையு மான்மக்
கழிதுயர்க் கிரங்கிச் சிந்துங்
கண்ணினீர்த் தாரை போலும்.

## இயேசுநாதர் ஆத்தும வேதனை யடைதல்

3. கிரிமிசை முன்னர்த் தம்மைக்
கேழ்கிளர் மகிமை யோடு
தரிசனஞ் செய்த மூன்று
தாசரை யுடன்கொண் டேகி
ஒருசிறை யுற்றுத் துன்பம்
உறுவதற் குரிய தான
நரகபா வத்திற் பாடு
நயந்தனு பவிக்க லுற்றார்.

4. வாக்கினுக் கதீத மான
மகிமையை யிழந்துங் கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப்
பையுளே பழங்க ணுற்றும்
ஆக்கமற் றேழை யாகி
யலைந்துஞ்சற் றவியா தோங்கி
மீக்கிளர் தேவ நீதி
வெந்தழல் குளிப்ப தானார்.

5. வெந்துய ரென்னுந் தாப
மிகுகனல் மூள மூளச்
சுந்தரக் குமர னாவி
துடித்துள முடைந்து சோர்ந்து
நைந்தனன் மெழுகு போல
வுருகியே குடரி னுப்பண்
சிந்திய தென்னே யேது
பாவியேம் தீமை யன்றோ.

6. முழங்கெரி நடுவ ணுய்த்த
முருகுலாம் அலங்கல் போலும்
தழங்குவெண் திரைவா யுற்றுத்
தளர்ந்துழல் திரணம் போலும்
பழங்கணுக் குடைந்து தேம்பிப்
பரிவுறீஇப் பாருக் கின்பம்
வழங்குவான் துணிந்து வந்த
மானுவேல் வருந்தி னாரால்.

## இயேசுநாதர் வேண்டுதல்

7. காலினை முடக்கி யந்தக்
கரணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத்
திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக்
கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன
தயாளரின் அருளை நாடி.

8. அப்பனே யெல்லா மும்மா
லாகுமிவ் வவத்தை யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக்
கழித்திடக் கருத்துண் டாயின்
அப்படி யாக அன்றேல்
ஐயவென் சித்த மன்று
மெய்ப்படு முமது சித்தம்
விளைந்ததே யாக வென்றார்.

## தேவதூதன் தேற்றிச் செல்லுதல்

9. இம்முறை யாக மேனி
இரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய
சிந்தையுள் ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக் கிட்டிச்
செபித்தனர் முனிவொன் றின்றி
எம்முறை பாட்டுக் குள்ள
மிரங்கியா தரிக்கு மீசன்.

10. அத்தனைக் கருதிக் கூவு
மளவையி லடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித்
தேற்றினன் சென்று ளுக
இத்தரா தலத்து மாந்தர்
எவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி
எழுந்தனர் விமலற் போற்றி.

—H. A. கிருஷ்ணப் பிள்ளை

## குறிப்புரை

இந்நூலை இயற்றிய ஆசிரியர், H. A. கிருஷ்ணப் பிள்ளை என்பவர். இவர் பாளையங் கோட்டைக்கு அருகில் உள்ள ரெட்டியார் பட்டி என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் கி. பி. 1827–ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் கிறிஸ்துமதத் தொடர்பாகத் தமிழ்மொழியில் பல நூல்களைச் செய்துள்ளார். இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள், இரட்சணிய சமய நிர்ணயம் முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள்.

ஆன்மாவின் பாதுகாப்பை விரும்பி வேத நெறியிலே நடப்பவர்க்கு வரும் நிகழ்ச்சிகளை இந்நூல் விளக்கிக் கூறுகிறது, John Bunyan என்னும் ஆங்கிலப் புலவரால் இயற்றப் பெற்ற 'Pilgrim's Progress' என்ற நூலை ஆதரவாகக் கொண்டு, இந்நூல் இயற்றப்பெற்றது.

1. இறும்பு–மலை, நனி–மிகவும், அனகன்–பாவம்இல்லாதவன்; இயேசு நாதர்.

2. சினை–கிளை, முகை-அரும்பு, துளிவார்காட்சி–தேன்துளி ஒழுகும் காட்சி, ஆன்மக் கழிதுயர்–ஆத்தும வேதனை,

3. கிரிமிசை-மலையின்மேல், மூன்றுதாசர்–பேதுரு, யோவான், யாக்கோபு என்ற மூன்று அடியார்கள். ஒருசிறை-ஒருபக்கம், பாடு-துன்பம்.

4. வாக்கினுக்கு அதீதமான மகிமை-வார்த்தையால் கூறமுடியாத பெருமை, கன்னி-மரியம்மை; இயேசுநாதரின் தாய், ஆக்கம்-செல்வம், வெந்தழல்-கொடு நெருப்பு.

5. தாபம்-வெப்பம், கனல்–நெருப்பு, சுந்தரக் குமரன்-இயேசுநாதர்.

6. முருகு–மணம், அலங்கல்-மாலை, திரணம்-சிறுதுரும்பு, மாநுவேல்–இயேசுநாதர்.

7. காலினை முடக்கி–இரண்டு கால்களையும் மடக்கி, கஞ்சம்–தாமரை மலர். கோலம் ஆர்-அழகு பொருந்திய, தீனதயாளர்-ஏழைகட்கு இரங்கியருளும் கடவுள்.

8. அவத்தை – துன்பம், கைப்புறு பாத்திரம் - வெறுக்கத்தக்க அழுக்கு நிறைந்த பாத்திரம் போன்ற உடம்பு, விழைந்ததே–விரும்பியதே.

9. இரத்தவேர் – இரத்த வியர்வை. செம்முறை திறம்பா – நல்ல முறையிலிருந்து மாறுபடாத. முனிவு–வெறுப்பு. முறைபாடு-வேண்டுகோள். ஈசன்–இயேசு நாதர்.

10. அத்தன்–கடவுள். சித்த சஞ்சலம்-மனத்துன்பம். தேற்றினன் சென்றுன்–தேற்றிச் சென்றான். புனித மூர்த்தி–தூய்மையுடைய இயேசுநாதர்.

**விடை கூறுக :**

1. சோலையில் செந்தேன் துளிக்கும் காட்சி எவ்வாறு இருந்தது ?
2. மூன்று தாசர் யாவர் ?
3. சுந்தரக் குமரன் யார் ?
4. மாநுவேல் வருந்தக் காரணம் யாது ?
5. ஏசுநாதர் எவ்வாறு தயாளரின் அருளை நாடினர் ?
6. ஏசுநாதர் ஆண்டவனிடம் யாது கூறினர் ?
7. தேவதூதன் என்ன செய்தான் ?

# IV. சிறு நூல்கள்

## நால்வர் நான்மணிமாலை

### நேரிசை வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

### கட்டளைக் கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த! பொது
வாட்டிற்கு வல்ல ஞெருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

### அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

படியிலா நின்பாட்டி லாரூர!
நனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்; வான் ஞெருழுமீச
னிணைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா
லினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்குமாறே. 3

### நேரிசை ஆசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்,
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்;
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமும் கரைந்துகக் கண்கள்

தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

—சிவப்பிரகாச சுவாமிகள்

## 2. திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி

ஒளிமதி முடித்த வேணி
யொருவனே! கருவை யானே!
தெளிவுறு நெஞ்சந் தன்னைத்
தெருட்டிநின் னிலையைக் காட்டி
அளியினு லென்னை ஆண்ட
அருட்குன்றே! உன்னை யின்னும்
எளியனேன் பிறவி வேட்டோ
வேத்திடா திருக்கின் றேனே. 1

இருக்கினு நிற்கும் போதும்
இரவுகண் டுயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்தியூண் டுய்க்கும் போதும்
முருக்கிதழ்க் கனிவா யாரோ
டில்லற மாற்றும் போதும்
திருக்களா வுடைய நம்பா!
சிந்தையுன் பால தாமே. 2

சிந்தனை யுனக்குத் தந்தேன்;
திருவரு ளெனக்குத் தந்தாய்;
வந்தனை யுனக்குத் தந்தேன்,
மலரடி யெனக்குத் தந்தாய்;
பைந்துண ருனக்குத் தந்தேன்,
பரகதி யெனக்குத் தந்தாய்;
கந்தனைப் பயந்த நாதா !
கருவையி லிருக்குந் தேவே. 3

தேவனே நின்னை யல்லாற்
பிறிதொரு தேவை யெண்ணேன்;
பாவனை நின்னி னல்லாற்
பிறிதொரு பற்று மில்லேன்;

யாவையுங் காட்டக் கண்டேன்;
　　என்னுளே நின்னைக் கண்டேன்;
காவலா! கருவை யானே!
　　இனிமற்றோர் காட்சி யுண்டோ ? 4

உண்டென மறைக ளோதும்
　　ஒருதனி முதலே! நாளும்
அண்டரு முனிவர் தாமுங்
　　காண்கிலர்; அடியே னுன்னைத்
தெண்டிரை வளாக முற்றுந்
　　தேடினேன்; தேடித் தேடிக்
கண்டனன் களாவின் நீழல்;
　　கருவைமா நகரத் தானே!

—அதிவீரராம பாண்டியர்

### குறிப்புரை

### நால்வர் நான்மணிமாலை

இது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரைப்பற்றியும் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாமணிகளால் பாடப்பட்ட ஒரு பிரபந்தம். இந்நூலாசிரியர் துறைமங்கலம்–சிவப்பிரகாச சுவாமிகள்; வீரசைவர்; 17-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர்.

1. இது சம்பந்தரைப் பற்றிக் கூறும். பொய்கை–சீகாழிக் கோவிலில் உள்ள குளம். கமலமே - திருவடிகளே.
2. சொல் வேந்தர்–திருநாவுக்கரசர். குடர் நோய்-சூலை நோய்.
3. ஆருரர்-சுந்தரர். நனி-மிகவும். மிடி-வறுமை. உழன்றமை-அலைந்தமை.
5. விளங்கு இழை–உமாதேவி. ஆரணம்-வேதம், வாதவூர்–திருவாதவூர்; மதுரையிலிருந்து 8 மைல் தூரத்தில் உள்ளது. அண்ணல் - பெருமை பொருந்தியவன். இச்செய்யுள் திருவாசகத்தின் சிறப்பைக் கூறுகிறது.

## திருக் கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி

இந்நூல் பாண்டிய நாட்டில் உள்ள கருவையில் கோயில் கொண்டுள்ள சிவபிரான் மீது பாடப்பட்டது. அந்தாதி - ஒரு செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுளின் ஆதியாகப் பாடப்படும் ஒரு பிரபந்தமாகும். இந்நூல் 'குட்டித் திருவாசகம்' என வழங்கப்படுகிறது. இதன் ஆசிரியர்: அதிவீரராம பாண்டியன்.

1. வேணி-சடை, ஒருவன்-ஒப்பற்றவன். தெருட்டி-தெளியச் செய்து. அளி–அருள். வேட்டோ-விரும்பியோ.

2. முருக்கிதழ்-முருக்கம்பூப் போன்ற சிவந்த உதடுகள், கனிவாயார்-இன் சொற் பேசும் பெண்டிர்.

3. துணர்—பூங்கொத்து. பரகதி-மேலான நிலை.

4. தேவை-கடவுளை, பாவனை—பக்தி. காவலா-பக்தரைக் காப்பவனே.

5. தெண் + திரை + வளாகம்—தெள்ளிய அலைகளைக் கொண்ட கடலால் சூழப்பட்ட உலகம், களா-களாமரம்.

**பயிற்சி :**

**விடை யெழுதுக :-**

1. நால்வர் நான்மணிமாலை—இங்குக் கூறப்பட்ட நால்வர் யாவர் ? நான்மணி என்பது எவற்றைக் குறிக்கும் ?
2. சிவப்பிரகாசர் எதனை வீடாகக் கூறுகிறார் ?
3. ஆசிரியர் திருநாவுக்கரசரைப்பற்றி யாது கூறியுள்ளார் ?
4. ஆரூரர் பாட்டில் விருப்பமுடையவன் பரமன் என்பது எவ்வாறு விளங்கும் ?
5. திருவாசகம் வேதத்தினும் சிறந்ததெனக் கூறக் காரணம் யாது ?
6. திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியின் ஆசிரியர் யார் ?
7. கருவை என்னும் பதி எங்குள்ளது ?
8. இந்நூல் எத்தனைச் செய்யுட்களை உடையது ?
9. இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர் யாது ?
10. ஒளிமதி முடித்த வேணி யொருவன்—யார் ? இதில் கூறப்பட்ட கதை யாது ?
11. திருக்களாவுடைய நம்பா சிந்தையுன் பாலதாமே - எவ்வெப்பொழுது ஆசிரியர் நம்பனை நினைப்பர் ?
12. கந்தனைப் பயந்த நாதனுக்கு ஆசிரியர் கொடுத்த பொருள்கள் எவை ? பெற்ற பொருள்கள் எவை ?
13. ஆசிரியர் கருவையானை எங்குக் கண்டதாகக் கூறுகிறார் ?
14. மறைகளோதும் முதல்வன் யார் ? அவனைக் காணுதோர் யார் ? ஆசிரியர் அவனை எங்குத் தேடினர் ? எங்குக் கண்டார் ?

# V. வருணனை

## 1. காலைக் கதிரழகு

காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன் ;
தங்கமுருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோ ரிங்கிதமோ ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாய் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ ?
கண்ணையினி தென்றுரைப்பர் ; கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை யளக்குமொளி மேம்படுமோ ரின்பமன்றோ ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும்
மேலவரு மஃதோர் விரியுமொளி யென்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப்புளதோ ?
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து;
விண்ணை வெளியாக்கி, விந்தைசெயும் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்;
நாலு புறத்துமுயிர் நாதங்க ளோங்கிடவும்
இன்பக் களியி லியங்கும் புவிகண்டேன்.

— பாரதியார்

## 2. மாலைக் காலம்

செங்கதிர் வெம்மை தணிந்ததடி—வாசத்
தென்றல் உலாவி எழுந்ததடி
பொங்கி வருஞ்சோணை மாநதியும்—ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலிந்ததடி. 1

முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி—ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி
எல்லை யிலாமலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி. 2

தாயும் இரங்கி வருகுதடி—கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி
ஆயும் பொழிலில் பறவையெல்லாம்—அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி. 3

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## 3. முழு நிலா

நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தை;
கோலமுழு தும்காட்டி விட்டாற் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ! 1

## 4. அழகின் சிரிப்பு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இளகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனிலந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்.

—பாரதி தாசன்

## 5. மலை

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடவரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்
அங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை யம்மே.

—குமரகுருபர சுவாமிகள்

## 6. ஆறு

துளிதரு துளியா வானந் தூவுநீர் திரிகூ டத்துத்
தெளிபுனல் திரள்கால் ஆறாய்த் திசைதொறும் பரந்த தம்மா;
ஒளிர்விடைப் பெருமா னெம்மை யுடையவன் அடியார்க் கீயும்
குளிர்பொருள் ஒன்று நூறு கோடியாய் அனந்த மாபோல்.

—திரிகூடராசப்பக் கவிராயர்

## 7. மருத நிலம்

தண்டலை மயில் களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

## 8. சோலை

குயிலினம் வதுவை செய்யுக் கொம்பிடை குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடும் அரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை அரச அன்னம் பனிமலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

1. **காலைக் கதிர் அழகு :**—இதனைப் பாடியவர் கவி சுப்பிரமணிய பாரதியார். காலையில் கதிரவன் தோன்றும்போது காணப்பெறும் இயற்கை அழகு களைக் கவிஞர் தம் உணர்ச்சிகளுடன் கூட்டி வியந்து பாடுகின்றார்.

கதிர்-சூரியன், இங்கிதம்-இனிமை, சோதி-ஒளி, விந்தை-வித்தை, கண்ணுக் குக் கண்ணாகி-கண்ணுக்கு ஒளிகொடுக்கும் கருவியாகி, மூலத் தனிப்பொருள்-கடவுள், மோனத்தே சிந்தை செய்யும் மேலோர்-முனிவர், முனிவர் கடவுளை ஒரு விரியும் ஒளி என்பர். ஞாலம், புவி நிலம்.

2. **மாலைக் காலம் :**—இதனைப் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. பிம்பிசாரன் செய்ய இருந்த யாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ஆடுக ளுடன் புத்தர் நடந்து சென்று இராஜக்ருக நகரத்தின் புறமதிலை அடைந்தார். அப்பொழுது மாலைநேரம். அந்த மாலைநேர வருணனையே இங்குத் தரப்பட்டுள்ளது.

செங்கதிர்-சூரியன், வாசம்—வாசனை, சோணை-கங்கையாற்றில் கலக்கும் ஒரு துணையாறு, பொழில்-சோலை, அங்காடி-கடைவீதி.

3. **முழு நிலா :**—இதனைப் பாடியவர் பாரதிதாசன். இது 'பில்கணீயம்' என்னும் வடமொழி நூலைத் தழுவிப் பாடப்பெற்ற 'உதாரன்' வரலாற்றில் காணப் படுவது.

கோலம்-அழகு, கொள்ளை-மிகுதி, செம்பரிதி-சூரியன், கனல்-வெம்மை, சொக்க-அழகிய, பிழம்பு-கற்றை.

4. **அழகின் சிரிப்பு :**—இதுவும் பாரதிதாசனால் பாடப்பெற்றது.

இளம்பரிதி-உதய சூரியன், புனல்-நீர், தட்டுப்பட்டாள்-புலப்பட்டாள்.

5. **மலை:**—இதனைப் பாடியவர் குமரகுருபர சுவாமிகள்; இது மீனாட்சியம்மை குறத்தில் உள்ளது. களிறு-ஆண் யானை, மடப்பிணை-இளமையான பெண்மான், மரை-மான், விட அரவு-விஷமுள்ள பாம்பு, கவிகை-குடை, கும்பமுனி-அகத்திய முனிவர்.

6. **ஆறு** :—இதனைப் பாடியவர் திரிகூட ராசப்பக் கவிராயர். வானம்-மேகம், திரிகூடம்-திரிகூடமலை, குற்றாலமலை, தெளிபுனல்-தெளிந்த நீர், கால்-வாய்க்கால், விடை-எருது, விடைப்பெருமான்-சிவபெருமான், அனந்தம்-அளவற்றது.

7. **மருத நிலம்** :—இது கம்பரால் பாடப்பெற்றது. மருதநிலம் - வயலும் வயல் சார்ந்த இடமும், தண்டலை-சோலை, விளக்கம்-விளக்கு, கொண்டல்-மேகம், முழவு—மத்தளம், ஏங்க-ஒலிக்க, குவளை-நீலோற்பலம், தெண்திரை-தெளிந்த அலை, எழினி-திரைச்சீலை, தேம்பிழி மகர யாழ்-தேன்போன்று இனிமையான மகர யாழின் இசை, மகரயாழ்-மகரமீன் வடிவமாக அமைந்த ஒருவகை யாழ்.

8. **சோலை** :—இதுவும் கம்பர் பாட்டு. வதுவை—திருமணம், துனிக்கும்-நடிக்கும், மஞ்ஞை—மயில், அயில்விழி—வேல்போன்ற கண், அரங்கு-மேடை, பனி மலர்-குளிர்ச்சி பொருந்திய மலர், பள்ளி-படுக்கை, செவ்வழி-ஒருபண், முரல்வ-ஒலிப்பன.

**பயிற்சி**

1. காலைக் கதிரின் அழகு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
2. மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும் மேலவர் யார் ? அவர்கள் கடவுளை என்ன என்பர் ?
3. காலையில் சூரியன் செய்யும் விந்தை யாது ?
4. மாலைக்காலத்தில் நிகழ்வன யாவை ?
5. முழுநிலாத் தோற்றம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ?
6. பொதிய மலையின் வளமையும் பெருமையும் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?
7. ஆற்றின் பெருக்கு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?
8. மருத நிலத்தைக் கம்பர் எவ்வாறு வருணித்துள்ளார் ?
9. சோலையிற் காணப்படும் இன்பக் காட்சிகள் யாவை ?
10. 'அழகு' காட்சியளிக்கும் இடங்கள் யாவை ?

# VI. தனிப்பாடல்கள்

## சிலேடை

### பாம்புக்கும் எள்ளுக்கும்

ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேஇரையும்;
மூடித் திறக்கின் முகங்காட்டும்;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும், பாரிற்பிண் ணாக்குமுண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது. 1

### பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும்

பெரியவிட மேசேரும்; பித்தர்முடி ஏறும்;
அரியுண் ணும்; உப்புமேல் ஆடும்;—எரிகுணமாம்;
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

## சீட்டுக்கவி

ஏடாயிரங் கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை,
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்நீர்த்த
செழியன் எதிர்கொண்டு காண்க;
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்கு அனற்பண்ணுத கோடைஐம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்து முடியாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல் வேண்டுமே. 3

### குறிப்புரை

சிலேடை-இருபொருள் தோன்றப் பாடுவது இப்பாடல்கள் காளமேகப் புலவர் பாடியவை. இவர், 'வசைபாடக் காளமேகம்' எனச் சிறப்பிக்கப் பட்டவர் சிலேடைக்கவிகள் பாடுவதில் சமர்த்தர்; 15-ஆம் நூற்றுண்டினர்.

1. முகங்காட்டும்-கோபிக்கும்; முகத்தைத் தெரிவிக்கும். பிண்ணாக்கு-பிளவுபட்ட நாக்கு.
2. பெரியவிடம்-மிக்க நஞ்சு, பெரிய + இடம், பித்தர்முடி-சிவபிரான் சடைமுடி, பைத்தியம் பிடித்தோர் மயிர்முடி, அரி உண்ணும்-காற்றைப் புசிக்கும், அரியப்படும். உப்புமேல் ஆடும்-உப்பு மேலிடப்படும், உப்புப் பட்டதின்மேல் நஞ்சு மிகும்.
3. புலவர் தம் தேவையைக் குறிப்பிட்டு வள்ளல் ஒருவருக்கு அனுப்பும் செய்யுள் சீட்டுக்கவி எனப்படும். பண்டைக் காலத்தில் புலவர் திருமுகத்தைப் பாட்டிலேயே எழுதியனுப்புவர். சீட்டுக்கவியில் தமது புலமையைக் குறித்தும் தம்மைக் குறித்தும் புகழ்ந்து எழுதுவர். இக்கவி அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் பாடப்பட்டது. இவர் இற்றைக்கு 250 ஆண்டுகட்கு முன் விளங்கியவர்.

சேடாதிபன் - ஆதிசேடன், கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன குதிரையைக் குறிக்கும்.

## பயிற்சி

**விடை எழுதுக:—**

1. சிலேடை என்பது யாது?
2. பாம்புக்கும், எள்ளுக்கும் உள்ள பொதுத்தன்மைகள் யாவை?
3. பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்கும் உள்ள பொதுத் தன்மைகள் யாவை?
4. சீட்டுக்கவி எனப்படுவது யாது?
5. அந்தகக்கவி தம் சிறப்பை எவ்வாறு கவியில் குறிப்பிட்டுள்ளார்?
6. அந்தகக்கவி சீட்டுக்கவியை யாருக்கு அனுப்பினர்?
7. புலவர் விரும்பும் பொருள்யாது?
8. இருபொருள் கூறுக:—கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம்.

# உரைநடை

## 1. தமிழ் நாடு

(R. P. சேதுப் பிள்ளை அவர்கள், B. A., B. L.)

நமது தாய் நாடு தமிழ் நாடு; தாய் மொழியும் தமிழ் மொழியே

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று பாரதியார் பாடியவாறு இன்பமும் வீரமும் தமிழ் நாடெங்கும் பொங்கித் ததும்புகின்றன. தமிழ் நாட்டின் பெருமை, நமது பெருமையே யாகும். நினைப்பிற்கும் எட்டாத நெடுங் காலமாக இந் நாடு, செம்மை சான்ற நன்னாடாய்ச் சிறப்புற்று விளங்கிற்று.

### வளங்கள் நிறைந்த தமிழ் நாடு

பழந் தமிழ் நாட்டில் பலவகை வளங்களும் நிறைந்திருந்தன. நீர் வளமும் நிலவளமும் நிலைத்திருந்தமையால் தமிழ் மக்கள் பசியும் பிணியும் அறியாராய் வசியும் வளனும் சிறக்க வாழ்ந்து வந்தார்கள். செந் தமிழ் நாட்டின் சென்னியாய்த் திகழ்ந்த வேங்கடமலையின் ஓங்குயர் சாரலும், தமிழ்முனி வதியும் தென் தொடர் மலையும், அம் மலைக்குத் தென்பால் மந்திரமலையாய் இலங்கிய மகேந்திர மலையும், தமிழகத்தில் நீங்கா வளத்தை நிலைபெறச் செய்தன. இன்னும் பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடப் புலவர் பாடும் புகழமைந்த பொன்னியாறு, சோழநாட்டை நீர் நாடாக்கியது. வையை யென்னும் பொய்யா நதியும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை யெனும் திருநதியும் பழம் பதியாய பாண்டி நாட்டை வளம்பெறச் செய்தன. இன்னும் மஞ்சு சூழ்சோலை மலைநாடாய சேர நாட்டில் பெரியாறு பொழிந்து பெருவளம் பெருக்கியது. தென் குமரிக்குத் தென் பால், பல துளியாய்ப் பெரு வெள்ளமாய்ப் பல்கிப் பெருகிய பஃறுளி யாறும் பரந்து சென்றது, இத்தகைய நீர்வளமும் நில வள

மும் நிறைந்த தமிழ்நாடு அறத்திற்கோர் இருப்பிடமாய் அமைந்து விளங்கிற்று.

## வண்மை மிகுந்த தமிழ் நாடு

''தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது', என்னும் உண்மையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித் தொழுகினர்கள். வேளாண்மை என்னும் விழுமிய பணியை மேற்கொண்ட தமிழ் மக்கள் அறவோர்க்கும் ஆதரவாய் நின்று அறநெறியைப் போற்றினர்கள். வறுமைநோயகற்றும் வள்ளன்மை, தமிழ்நாட்டினைத் தலைசிறப்ப விளக்கிற்று. வரையாது பொருள் வழங்கி வண்மைக்கோர் இருப்பிடமாய் விளங்கிய வள்ளல்களின் வரலாற்றைத் தமிழ் நூல்கள் விளக்குகின்றன. அறிவால் குறைந்த உயிர்களிடத்தும் அருள் நெறி காட்டிய வள்ளல்களின் பெருமை உலகம் உள்ளளவும் அழியாததாகும். செழித்தோங்கிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றி நிலத்தில் குழைந்து கிடந்த ஓர் முல்லைக் கொடியின் துவண்ட நிலை கண்டு மனமுருகி, அக் கொடிக்குப் படரிடமாய்த் தன் அழகிய தேரை விட்டுச் சென்ற வள்ளலின் வரலாறு பழந் தமிழ் நூல்களில் பாராட்டப்படுகின்றது. இன்னும் ''கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை'' என்று புகழப்பட்ட பாரி என்னும் வள்ளலும் நம் தமிழ் நாட்டின் திருமகனே யாவான். இவ்வாறு அன்பும், அருளும் தமிழ் நாட்டில் நிறைந்து தமிழ் மக்கள் களித்துச் செழித்து வாழ்வாராயினர்.

## வீரம் செறிந்த தமிழ் நாடு

வண்மையில் ஒப்புயர்வற்று வாழ்ந்திருந்த தமிழ் மக்கள், ஆண்மையிலும் அவ்வாறே தலை சிறந்திருந்தார்கள். ஆண் மக்கள் அனைவரும் ஆண்மையும் நிறைந்து விளங்கினர்கள். பெண்களும் வீரமக்களைப் பெற்றெடுத்த வீரத் தாயராக விளங்கினர்கள். அமர்க்களம் செல்லுமாறு போர்க்கோலம் புனைந்து நின்ற தன் மகனை நோக்கி, ''ஐயனே ! நீ மாற்றாருடன் போர்புரிந்து வெற்றிபெற்று மீண்டால், நான் மிக மகிழ்வேன். அவ்வாறின்றித் தோல்வியுற நேரின், அஞ்சா நெஞ்சோடு அமர்க்களத்தில் நின்று மாற்றாரது அம்பு, நின் மார்பில் பாய்ந்து உயிர் துறப்பாயாயின் உன்னைப் பெற்ற போதினும் பெருமகிழ்வடைவேன்'' என்று ஆசி கூறித் தன் அருமைத் திருமகனை அமர்க்களத்துக்கு அனுப்பிய வீரத்தாயர் விளங்கிய நாடு நம் தமிழ் நாடேயாகும். இன்னும் தமிழ் நாட்டின் பெருமையை இந்திய நாடு

முழுமையும் பரப்பக் கருதித் தமிழ்ச் சேனை கொண்டு வட நாடு சென்று அயலரசர் அனைவரும் அஞ்சி அடங்க, இமயமலை வரையும் சென்று அம் மலையில் தனது வெற்றிக் கொடியை நாட்டிய வீரனான கரிகாற் பெருவளத்தான் தமிழ் அரசனே யாவான்.

அன்றியும், தமிழ் நாட்டின் பெருமையையும் ஆற்றலையும் அறியாது வட நாட்டரசர் இருவர் தமிழ் வீரத்தை இகழ்ந்துரைத்தார் என்று கேள்வியுற்று அடங்காச் சீற்றம் கொண்டு வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவரது செருக்கையும் சிறுமையையும் அமர்க்களத்தில்அழித்துச் சிறைசெய்து மீண்ட சேரன் செங்குட்டுவனும் தமிழ் அரசனே யாவான். இவ்வாறு பெருமையும் புகழும் நிறைந்து வீரம் செறிந்த நாடாய் நம் தமிழ் நாடு விளங்கிற்று.

## மறைகள் மலிந்த தமிழ்நாடு

இனி உலகில் வாழும் மக்களது உயிர்க்கு உறுதி பயப்பனவாகிய உண்மைகளை உயரிய ஞானத்தால் கண்டு உணர்த்திய ஆன்றோர் தோன்றிய நாடும் தமிழ் நாடேயாகும். அறம், பொருள், இன்பம், வீடென்னும் உறுதிப் பொருள் நான்கையும் மறை முனிவர் நால்வர்க்கும் தென்முகப் பெருமான் தெரிவித்த நாடு தமிழ் நாடேயாகும். உறுதிப் பொருள்களில் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீட்டை விடுத்து அறம், பொருள், இன்பமாகிய மூன்றையும் முப்பாலாக வகுத்துரைத்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தோன்றியதும் தமிழ் நாடேயாகும். உலகில் வாழும் மக்களுக்கெல்லாம் உயர்நெறி காட்டிய புலவர் பெருமான் தோன்றிய பெருமை, தமிழ் நாட்டிற்கே உரிய தென்னும் உண்மை,

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்னும் அழகிய மொழிகளால் இனிதுணரப்படும். இன்னும் நயம் தெரி புலவர்க்கு நல்விருந்தாய், கவிநயமும் கற்பனையும் கனிந்து இலக்கிய காவியம் வரைந்த கம்பர் பெருமான் பிறந்ததும் தமிழ் நாடேயாகும். இன்னும் தமிழ் மக்களது பெருமைக்கும் செம்மைக்கும் என்றும் அழியாச் சான்று பகர்வதாய்ச் சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூலைச் செய்த சேரர் சிகாமணி தோன்றியதும் தமிழ்நாடேயாகும். இந்நூல் கற்றறிந்த புலவர்களுள்ளத்தைக் கவர்ந்து தமிழ்

நாட்டின் பெருமைக்கு ஓர் கலங்கரை விளக்கமாய் நிற்கும் தன்மை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்னும் உண்மை உரையால் இனிது விளங்கும்.

இனி, கற்றோர் யாவரும் அறியா அறிவு பெற்ற ஆன்றோர், பத்திமையால் பணிந்து பாமாலை பாடி, உலகினுக்கு ஒளி நெறி காட்டியதும் தமிழ் நாடேயாகும். நிறை மொழி மாந்தர் ஆணையில் அமைந்த மறைமொழியாய மந்திரம் நிறைந்ததும் தமிழ் நாடேயாகும். தொண்டர் நாதனைத் தூதனாய் விடுத்ததும், முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுருவாகக் கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும் தமிழ் மொழியின் மந்திர வலிமையேயாகும்.

மன்னனது வெப்பு நோய் மாற்றிய மந்திர ஏடும், வெந்தழலால் வேகாது விளங்கிய ஏடும், வெள்ளத்தை எதிர்த்த வீர ஏடும், இன்னும் எண்ணிய மந்திர ஏடும் இலங்குவது தமிழ் மொழியிலன்றோ? இறைவனை நினைந்து நெக்குருகி நெஞ்சம் குழைந்து உயிர்கள் அன்பு நெறியைப் போற்றுதற்குரிய ஆலயங்கள் அழகுற விளங்குவதும் தமிழ் நாடேயாகும். பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் மலிந்து உயிர்களுக்கு ஒளிநெறி காட்டிய நாடு தமிழ் நாடேயாம். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' மென்னும் பழமொழியைப் போற்றி வாழ்ந்த தனி மக்கள் வாழ்ந்ததும் தமிழ் நாடேயாகும்.

## நீதி நிறைந்த தமிழ் நாடு

நீதியே உயிரினும் உயர்ந்ததென்று கருதி ஒழுகிய நாடு தமிழ் நாடேயாகும். பல வகுப்பார் வாழும் நாட்டில் ஒரு வகுப்பார்க்கு ஒரு நீதி என்னாது எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அரச நீதி ஒன்றே என்று அறிவுறுத்தியது தமிழ் நாடேயாகும். தன் மகன் தவறு செய்யினும், தானே தவறு செய்யினும், செம்மை தவறாது நீதி செலுத்திய மன்னவர் தமிழ் மன்னவரே யாவர். ஒரு பசுவின் கன்றை அறியாது கொன்ற மைந்தன்மீது தேராழியைச் செலுத்தி நீதி போற்றிய மன்னவன் ஆரூரை ஆண்ட தமிழ் அரசன் அன்றோ? தவறு செய்த மைந்தன் தன் மைந்தன் என்றும் கருதாது, அரச குலத்தை வாழ்விக்க அவன் ஒருவனே யுள்ளான் என்பதையும் உணராது, அறநெறி நிற்றலே அரசன் கடமை என்னும் உயரிய உண்மை

ஒன்றையே துணைக்கொண்டு, தன் மைந்தன் மீது தானே தேர்க் காலைச் செலுத்திய அரச நீதியின் பெருமையை அளவிட்டுரைத்தல் ஆகுமோ ? இன்னும் குற்றம் ஒன்றும் செய்யாத கோவலனைக் கொல்லுமாறு ஆணை செய்த தமிழ் மன்னன், தான் அறியாது இயற்றிய தவற்றை அறிந்தபோது ஆவி சோர்ந்து தாழ்ந்த குடையோடும் தளர்ந்த செங்கோலோடும் அரியாசனத்தினின்றும் மயங்கி விழுந்து மாண்டான் அன்றோ? இவ்வாறு அரசன் நீதி தவறாது செங்கோல் செலுத்திய தன்மையால் தமிழ் நாட்டில் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் தலைசிறந்து விளங்கின. இத்தகைய மன்னரை உயிராகவும் மன்னுயிரை உடலாகவும் தமிழ் நாடு கருதிய தன்மை,

> " நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்னும் புறநானூற்று அடிகளால் இனிது விளங்கும். தமிழ் மன்னன் குடிகொன்று இறைகொள்ளும் கொடுங் கோலனாய் அமையாது, ஆறிலொன்று இறை பெற்றுக் குடிகளைக் கண்ணும் ஆவியுமாய்க் காத்து வந்தான் என்று பழந்தமிழ்க் கதைகள் பாராட்டிக் கூறுகின்றன. அடுவேலால் அரசாங்கத்தை நடத்தாது செங்கோல் அரசு புரிந்தமையால் தமிழ் அரசு நெடுங்காலம் நிலைத்திருந்தது. இன்னும் அறிவினாற் சிறந்த ஆன்றோரைத் துணைகொண்டு அரசியல் நிகழ்ந்தமையால் செம்மைசான்ற நன்னெறியே அரச நெறியாகத் திகழ்ந்தது. அமர் நிகழுங் காலத்து அரசனே போர்க்கோலம் புனைந்து வீரமாலை அணிந்து சேனையின் முன்னின்று போர் புரியும் பெரு வீரனாய் விளங்கினான். இத்தகைய அரசர் சமயப்பற்றும் தாய் மொழிப் பற்றும் உடையராய்த் திகழ்ந்தமையால், தமிழ் நாடு எங்கும் எண்ணிறந்த ஆலயங்களும், தமிழ் மொழியில் தலைசிறந்த நூல்களும் இயற்றுவித்தார்கள். இவர்கள் அமைத்த ஆலயங்களின் அருமை பெருமைகளை இக்காலத்திய மேல் நாட்டுப் புலவரும் வாயாரப் புகழ்ந்து வாழ்த்துகின்றார்கள். இந் நாட்டுப் பழைய ஆலயங்களில் விளங்கும் அழகிய சிற்பவேலைகளும், சித்திர வேலைகளும், விசித்திர வேலைகளும் தமிழ் மக்களது தொன்மை சான்ற நாகரிகத்தினை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன.

**காதலும் கற்பும் இனிதமைந்த கன்னியர் வாழ்ந்ததும் தமிழ் நாடு.** தாம் காதலித்து மணந்த கணவரையன்றி மற்றைய ஆடவரை மனத்திலும் தீண்டாத மறுவிலா நெறியே தமிழ் மாதர் நெறியாகும்.

அவ்வாறே தாம் மணந்த மங்கையரையன்றி மற்றைய மாதரைச் சிந்தையாலும் தொடாத செந்நெறியே தமிழ் நாட்டு ஆடவரது அற நெறியாய் அமைந்திருந்தது. தம் தலைவரல்லாத பிறர் நெஞ்சு புகுதலே நிறையமைந்த மாதர்க்குக் குறையெனக் கருதிய நாடு தமிழ் நாடேயாகும். கற்பெனும் பெருமையைத் தெய்வமாகக் கொண்டு வணங்கிய நாடும் தமிழ் நாடே. கற்பின் அளப்பரும் பெருமையை உலகிற்கு அறிவுறுத்தியதும் இந் நாடே. ஆக்கலும் அழித்தலும் நிறை யமைந்த மாதரால் ஆகுமென்று வெள்ளிடை மலைபோல் விளக்கியதும் இந் நாடே. மன நிறை வாய்ந்த மங்கையர் வாழ்ந்த தமிழ் நாட்டில் காதலனை இழந்து கண்ணீர் வடித்த கண்ணகியார்,

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையையும்"

என்று வஞ்சினம் கூறியபோது மதுரைமாநகரம் எரியினுக் கிரையாயிற் றென்று செந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரம் கூறுகின்றது ; இதனால் மறுவிலாக் கற்பு வாய்ந்த மங்கையர் தம் சொல்லால் உலகழிக்கும் திறம் பெற்றிருந்தாரென்பது இனிது விளங்கும். இவ்வாறன்றி உலகினை வாழ்விக்கும் உயரிய திறமும் கற்பமைந்த மங்கையர்பால் களித்திலங்கக் காணலாம். ஆசிலாக் கற்பு வாய்ந்த ஆதிரை என்னும் நல்லாள் கையினால் அளித்த அன்னம் அள்ள அள்ளக் குறை யாது தமிழ் நாட்டில் ஊண் ஒலியை ஒடுக்கிற்றென்று மணிமேகலை கூறுகின்றது. இன்னும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்று பொய்யாப் புலவர் புகழ்ந்த வண்ணம் வாய்மொழியால் உலகினை வாழ்விக்கும் உயரிய திறமை, நிறையமைந்த தமிழ் மாதர் வரலாற்றில் இனிது இலங்குகின்றது. அருந்தவ முடையார்க்கே உரியதாகப் புகழ்ந்து கூறப்படுகின்றதாகிய ஆக்கும் திறமும் அழிக்கும் திறமும் மாதரது கற்பு நெறியில் அமைந்திருந்ததாலேயே அந் நெறியைத் திருநெறியாகக் கொண்டு தமிழ்நாடு வாழ்த்தி வணங்கி வழிபடுவதாயிற்று. கற்பினால் சிறந்த கண்ணகியார் பொற்புடைய தெய்வமாய் இத் தமிழ் நாட்டில் இன்றும் நின்று நிலவுவதே இவ் வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும்.

### எம்மதமும் சம்மதமாய் ஏற்று நின்ற தமிழ் நாடு

பழந் தமிழ் நாட்டில் பலவகைச் சமயங்கள் பரவியிருந்தும் பல் வேறு வகுப்பார் வாழ்ந்திருந்தும் சமயப் போரும் சாதிப் போருமின்றி ஒரு வயிற்றில் பிறந்த மக்கள் போலவே தமிழ் மக்கள் வாழ்வா ராயினர். செம் பொருளாய சிவபெருமான் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், அறவோர் பள்ளியும் தமிழ் நாட்டில் அடுத் தடுத்து அமைந்திருந்தன. தமிழ் மக்கள் தமது அறிவிற்கும் மனப் பான்மைக்கும் பொருந்திய சமயநெறியை ஏற்றொழுகும் உரிமை பெற்றிருந்தார்கள். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் சமண சமய அடியாராகவும், அவரது உடன் பிறந்தவனாகிய சேரன் செங் குட்டுவன் சைவ சமய சீலனாகவும் விளங்கிய தன்மையே இவ்வுண்மைக் குத் தலைசிறந்த சான்றாகும். இவ்வாறே அறுபான் மும்மை அடியார் களில் ஒருவராய மங்கையர்க்கரசியார் சைவ நெறியில் சிறந்த பற் றுடையராயிருப்ப அவரது தலைவனான பாண்டியமன்னன் சமண சமயம் சார்ந்தொழுகுவானாயினான். இத்தகைய மனப் பான்மை, தமிழ் நாட்டில் சமயப் பொதுமை இனிது இலங்கிற்றென்பதற்கு என்றும் அழியாச் சான்று தருவதாகும்.

### சாதி எனும் சுழி கடந்த சமத்துவ நன்னாடு

இன்னும் இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்தாரெல்லாம் பிறப்பால் ஒற்றுமை யுடையவரென்றும், ஒழுக்கத்தாலும், செய்தொழிலாலுமே வேற்றுமை உலகில் உண்டென்றும் விளக்கமாக எடுத்துரைத்த நாடு இத் தமிழ் நாடேயாகும். ஏனைய நாடுகள் சாதி, குலம், பிறப்பு என் னும் சுழிப்பட்டுத் தடுமாறி நின்ற காலத்தில் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்தியது தமிழ் நாடேயாகும். தொழில் முறையில் எத்தொழிலையும் இழிதொழில் என்று இகழாது மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களெல்லாம் சிறந்த தொழில்களாகவே பாராட்டப்பட்டன. இதனாலேயே தமிழ் நாட்டில் வழங்கும் வகுப்புப் பேர்களெல்லாம் பிறப்பினை அடிப்படை யாகக் கொள்ளாது, தொழில் முறையால் பிறந்த பேர்களாகவே விளங்கக் காண்கிறோம். மறை பயிலும் தொழிலை மேற்கொண்ட மாந்தர் மறையோர் என்றும், வேளாண்மை என்னும் விழுமிய தொழிலை மேற்கொண்ட மக்கள் வேளாளரென்றும், வாசம் விற்பவர் வாசவர் என்றும், வெற்றிலை விற்போர் இலை வாணிகர் என்றும், பறை சாற்று

வோர் பறையர் என்றும், பண்ணோடு பாடவல்லோர் பாணரென்றும் இவ்வாறே பல வகுப்பாரும் அவரவர் மேற்கொண்ட தொழிலுக்குரிய பெயர் பெற்று வாழ்வாராயினர். எக் குடியில் பிறப்பினும் எத் தொழிலைச் செய்யினும் ஒழுக்கமுடையவர் உயர்ந்தவரென்றும், ஒழுக்க மற்றவர் தாழ்ந்தவரென்றும், தமிழ் மக்கள் கருதுவாராயினர்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் திருவாக்காகும்.

## இறை ஒளியும் இசை ஒளியும் இலங்கி நின்ற தமிழ் நாடு

இன்னும் இயற்கை நலங்கள் இனிதமைந்த இந்நாட்டில், இறைவனை இயற்கை அழகில் கண்டு வணங்கிய வரலாறு அறிவுடையார் கருத்தைக் கவர்வதாகும். கண்ணினைக் கவரும் வனப்பு வாய்ந்த மலை நாட்டில், மந்தியு மறியா மரங்களும், மஞ்சு தோய்ந்த சோலைகளும், மனத்தினை ஊக்கி ஒரு வழி நிறுத்த, இளமையும் அழகும் இனிதமைந்த பாலன் வடிவமாக இறைவனைக் கண்டுவழிபாடியற்றிய பெருமை தமிழ் நாட்டிற்கே யுரியதாகும், இன்னும் வேங்கட மலையின் விழுமிய சோலையினும், "கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்" குற்றாலத்தினும் இறைவனது பெருமையைக் கண்டு வழிபட்டு நின்றது தமிழ் நாடேயாகும். இறைவனது பெருமையைக் குழலினும் யாழினும் அமைத்து ஊன் கரைந்து, உயிர் கரைந்து உருகி நின்றதும் தமிழ் நாடேயாகும், குழலும், வீணையும், யாழும் குழைய மழலை மொழிகளால் மறைமொழி யோதிய ஞானப்பாலர் பிறந்ததும் இந் நாடே. திறம்படக் கற்ற கல்வியின் திண்மையால் இறைவனது நெற்றிக் கண்ணைக் கண்டும் கலங்காது நின்ற புலவரேறுகள் பிறந்ததும் இந் நாடே. இத்தகைய புலவரது வண்மையால் வளம்பெற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் மேம்பட்டு, என்றும் சீர் இளமை குன்றாச் செம்மொழியாய் விளங்கும் தமிழ் மொழி வழங்கும் திரு நாட்டை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேன்.

### பயிற்சி

1. **பொருள் எழுதுக.—**
புனல், வதி, மஞ்சு, விழுமிய, அமர்க்களம், மாற்றார், பத்தி, தொன்மை, வஞ்சினம், வாசவர், பொற்பு.

2. **கீழ் வரும் சொற்களை வாக்கியங்களில் அமைக்க:—**
வன்மை, வண்மை; இரை, இறை; ஊன், ஊண்; கரை, கறை.

3. **கீழே கொடுத்துள்ள சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைக்க:—**

புலவர் பாடும் புகழ், நெக்கு நெக்குருகி, அளவிட்டுரைத்தல், தலை சிறந்த, வெள்ளிடைமலை, ஆக்கலும் அழித்தலும்.

4. **சொற்களைப் பிரித்து எழுதுக:—**

நன்னாடு, நன்னெறி, செந்நெறி, எண்ணரிய, மறுவிலாக்கற்பு, அவரவர், ஒழுக்கமற்றவர்.

5. **விடை எழுதுக:—**

i. பாண்டிய நாட்டை வளம்பெறச் செய்த நதிகள் எவை ?

ii. பாரி அருளுடைய நெஞ்சினன் என்பது எவ்வாறு விளங்கும் ?

iii. தமிழ் நாட்டில் வீரத்தாயர் விளங்கினர் என்று கூறக் காரணம் என்ன ?

iv. உறுதிப் பொருள்கள் எவை ?

v. தமிழ் நாட்டில் தலை சிறந்து விளங்கும் நூல்கள் எவை ?

vi. தமிழ் மொழி மந்திரவலிமையுடைய தென்பதற்குச் சான்றுகள் கூறுக,

vii. மறுவிலாக் கற்புவாய்ந்த மங்கையர் உலகழிக்கும் திறம் பெற்றிருந்தனர் என்பது எவ்வாறு விளங்கும் ?

### கட்டுரையாக்கம்

7. **கீழே கொடுத்துள்ள பொருள்களைப் பற்றிச் சிறு கட்டுரைகள் வரைக:—**

i. தமிழ்மொழியின் சிறப்பு.

ii. தமிழர் நீதி,

iii. தமிழ்ப் பெண்டிர்.

## 2. இளையான்குடி மாற நாயனார்

**(ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள், யாழ்ப்பாணம்)**

இளையான்குடி யென்னும் ஊரிலே, வேளாளர் குலத்திலே, எத்தொழிலினும் சிறந்த வேளாண்மையால் வரும் குற்றமற்ற அளவிறந்த செல்வத்தையும், சிவனடியார்கண்மேலே முழுமையும் பதிந்த அன்பு கொண்ட சிந்தையையும் உடையவராகிய மாறனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர், தம்முடைய கிருகத்துக்கு வரும் சிவபக்தர்கள் எந்த வருணத்தாராயினும், மெய்யன்போடு அவர்களை எதிர்கொண்டு அஞ்சலி செய்து, இன்சொற்களைச் சொல்லி, வீட்டிற்கு அழைத்துக்

கொண்டு வந்து, கரகநீர் கொண்டு அவர்கள் திருவடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து, உள்ளும் பருகி, அத்திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தினலொற்றி, ஆசனத்திலிருத்தி, சைவாகம விதிப் படி அருச்சித்து நமஸ்கரித்து, பின்பு கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, என்னும் அறுவகைச் சுவையை யுடையனவாய் உண்ணப்படுவதும், தின்னப்படுவதும், நக்கப்படுவதும், பருகப்படுவதும் என நால்வகைப்படும் உணவுகளை அவரவர் பிரீதிப் படி திருவமுது செய்விப்பார். இப்படித் தினந்தோறும் மகேசுவர பூசை பண்ணுதலாகிய சிவ புண்ணியத்தினலே செல்வம் அபிவிருத்தியாக, அவர் குபேரனை ஒத்து வாழ்ந்திருந்தார்.

அப்படி இருக்குங் காலத்திலே, சிவபெருமான், அவ்விளையான் குடி மாற நாயனர் இந்தச் செய்கையை வறுமை வந்த காலத்திலும் தளராது செய்ய வல்லவர் என்பதையும், தாம் நல்லோருக்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின் பொருட்டே என்பதையும், அந்நயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள்ளே, புண்ணியஞ் செய்த நமக்குக் கடவுள் இடர்செய் தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும் பிறர்க்குத் தெரிவித்து உய்விக்கும் பொருட்டுத் திருவுளங்கொண்டு, அந்நாயனரிடத்தில் உள்ள செல்வமெல்லாம் நாடோறும் சுருங்கி வறுமை யெய்தும்படி அருள்செய்தார். அப்படிச் செல்வம் சுருங்கவும், நாயனர் மாகேசுவர பூசையிலே பதிந்த தம்முடைய மனம் சிறிதும் சுருங்குதலின்றி, தம்மிடத்துள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும், தம்மைக் கூட விற்று இறுக்கத்தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும், முன் போலவே தாஞ்செய்யும் திருப்பணியை விடாது செய்து வந்தார்.

அவர், மழைக்காலத்திலே மழை பெய்யும் ஒரு நாள் இரவில் நெடு நேரம் எதிர்பார்த்திருந்தும், ஒருவருடைய உதவியும் இல்லாமல், பகல் முழுதும் போசனம் செய்யாமையால் பசி அதிகப்பட்டு, வீட்டுக் கதவைப் பூட்டிய பின்பு, திருக்கைலாச பதியானவர் சைவ வேடங் கொண்டு எழுந்தருளி வந்து, கதவைத் தட்டி அழைக்க, நாயனர் கதவைத் திறந்து, அவரை உள்ளே அழைத்துக் கொண்டுபோய், மழையினல் நனைந்த அவரது திருமேனியை வஸ்திரங் கொண்டு துடைத்து இருத்தற்கு இடங் கொடுத்து, அவருக்கு அமுதூட்டல் வேண்டும் என்னும் ஆசை மிகுதியால் தம்முடைய மனைவியாரை நோக்கி, "இந்தச் சைவர் மிகப் பசி கொண்டு வந்திருக்கின்றார். நமக்கு

முன்னமே போசனத்துக்கு ஒன்றுமில்லை. ஆயினும் இவருக்கு எப்படியும் அன்னங் கொடுக்க வேண்டுமே; இதற்கு யாது செய்வோம்?'' என்றார். அதற்கு மனைவியார். ''வீட்டிலே ஒரு பதார்த்தமுமில்லை, அயலவர்களும் இனி உதவ மாட்டார்கள், நெடு நேரம் ஆயிற்று. அரிசிக் கடன் கேட்கப் போவதற்கு வேறிடமும் இல்லை. பாவியாகிய நான் இதற்கு யாது செய்வேன்?'' என்று சொல்லிப் பின்பு, ''இன்று பகற் காலத்திலேயே வயலில் விதைக்கப் பட்ட ஈரத்தினால் முன்னமே முளை கொண்டிருக்கிற நெல்லை வாரிக் கொண்டு வந்தால், இயன்ற படி அன்னஞ் சமைக்கலாம். இதுவே யன்றி வேறொரு வழியும் அறியேன்'' என்று சொல்லித் துக்கித்தார்.

இந்த வார்த்தை செவிப்புலப் படுவதற்குமுன், இளையான் குடி மாற நாயனார் மிக மனமகிழ்ந்து, அதற்கு உடன் பட்டு, மிக மழை பொழிகின்ற மகா அந்தகார மயமாகிய அந்த ராத்திரியிலே, ஒரு பெரிய இறை கூடையைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு, காலினாலே தடவிக் குறி வழியே தம்முடைய வயலிற் சென்று, அதிலே அதிக மழையினால் நீர் மேலே மிதக்கின்ற நெல் முளைகளைக் கைகளினாலே கோலி வாரி இறை கூடை நிறைய இட்டு,தலையிலே வைத்துச் சுமந்து கொண்டு, சீக்கிரம் திரும்பி வந்தார். அவரை எதிர்பார்த்துக்கொண்டு வாயிலில் நின்ற மனைவியார் மன மகிழ்ச்சியோடு அந்த நெல் முளையை வாங்கி, சேறு போம்படி நீரினாலே கழுவியூற்றி, பின்பு தம்முடைய பிராண நாயகரை நோக்கி, ''அடுப்பிலே நெருப்பு மூட்டுதற்கு விறகு இல்லையே'' என்று சொல்ல, அவர் சிதைந்து இருக்கின்ற வீட்டின் மேற் கூரையிலுள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினார். மனைவியார் அவைகளை முறித்து அடுப்பிலே மாட்டி நெல்முளையை ஈரம் போய்ப் பதமாகும்படி வறுத்து, பின் அரிசியாக்கி, நீர் வார்த்துக் காய்ந்திருக்கிற உலையில் அதையிட்டுச் சோறாக்கி, தம்முடைய நாயகரைப் பார்த்து, ''இனிக் கறிக்கு யாது செய்வோம்? என்றார். உடனே நாயனார் புறக்கடைத் தோட்டத்திற்குச் சென்று, குழியினின்று மேற்படாத சிறு பயிர்களைக் கையினாலே தடவிப் பிடுங்கிக் கொண்டு வந்து, கறி சமைக்கும்படி கொடுக்க, மனையார் அவைகளை வாங்கி ஆய்ந்து, நீரினாலே கழுவி, தமது சாமர்த்தியத்தினால் வெவ்வேறு கறியமுதுகள் செய்து முடித்து, நாயகருக்கு அமுதும் கறியும் பாகம் பண்ணப் பட்டமையைத் தெரிவித்து, சைவரை அமுது செய்விப்போம்'' என்று சொன்னார்.

நாயகர், நித்திரை செய்பவர்போலக் காட்டிய ஐயருக்குச் சமீபத்திற் சென்று, "சுவாமி, அமுது செய்ய எழுந்தருளும்" என்று சொல்லி அழைக்க, அவர் ஒரு சோதி வடிவாய் எழுந்து தோன்றினர். அதைக் கண்ட இளையான்குடி மாற நாயனரும், மனைவியாரும் திகைத்து நின்றார்கள். பின்பு, பரமசிவன் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றி, இளையான் குடி மாற நாயனரை நோக்கி, "அன்பனே, நம்முடைய அடியார்களை அமுது செய்வித்த நீ உன் மனைவியோடும் நம்முடைய பதத்தையடைந்து பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிரு" என்று திருவாய் மலர்ந்தருளி, அந்தர்த்தான மாயினர்.

**பயிற்சி**

1. பொருள் கூறுக:—வருணம், பிரீதி, மாகேசுரபூஜை, இடபாரூடர், அந்தர்த்தானமாயினர்.
2. பின்வரும் தொடர்களை வாக்கியங்களில் அமைக்க:—எதிர்கொண்டு, வெவ்வேறு, தினந்தோறும், நெடுநேரம், அந்தர்த்தானம்.
3. பிரித்து எழுதுக : இடபாரூடர், நாடோறும், வேறிடம்,
4. விடை தருக:—

1. இளையான்குடிமாற நாயனர் என்பவர் யார் ? அவர் எவ்வாறு வாழ்ந்து வந்தார் ?
2. மாறனர் சிவனடியார்களை வழிபட்டு வந்த முறை யாது ?
3. சிவபெருமான், மாறனரை வறுமை யெய்துமாறு செய்தது ஏன் ?
4. மாறனர் செல்வக்காலத்திலன்றி வறுமையுற்ற காலத்திலும் தாம்மேற்கொண்ட திருப்பணியை விடாமற் செய்பவர் என்பது எவ்வாறு தெரிகிறது ?
5. சிவபெருமான் மாறனரை எவ்வாறு சோதித்தார்?
6. மாறனர் அடியாராக வந்த சிவபெருமானுக்கு அமுது செய்விக்க என்ன செய்தார் ?
7. சிவபெருமான் மாறனர்க்கு எவ்வாறு அருள் புரிந்தார் ?

# 3. இசைக் கருவிகள்

(கடிதம்)

15, மாரியம்மன் தெரு,
சேலம்.
29—8—52.

அன்பு கெழுமிய நடராசனுக்கு,

வணக்கம். நலம், நலம் அறிய அவா. உன் கடிதம் கிடைத்தது. நீ இசைக் கருவிகளைப்பற்றி அறிய விழைகின்றாய். அவைகளைப் பற்றி இக்கடிதத்தில் எழுதுகின்றேன்.

நமது தாய் மொழியாகிய தமிழ் மொழி உலகத்தில் பேச்சு வழக்குள்ள மொழிகள் பலவற்றுள்ளும் மிகப் பழமையானது. அது இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்படும். பண்டைக் காலத்தில் தமிழர் இசைத் தமிழுக்குரிய பல நூல்களை யாத்தனர். பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் போன்ற பல இசைத் தமிழ் இலக்கண நூல்கள் நாட்டில் எங்கும் பெருகியிருந்தன. ஆனால் இந்நூல்களை நாம் இன்று காண இயலாது. இசைத் தமிழைப்பற்றிய பல குறிப்புகளைப் பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, சீவக சிந்தாமணி, கல்லாடம் போன்ற பழந்தமிழ் நூல்களில் காணலாம். எனவே, பழங்காலத் தமிழர் இசையை வளர்த்தனர் என்பது அங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

தமிழ் நாட்டில் விளங்கிய இசைக் கருவிகள் தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி என ஐவகைப் படும். மிடறு என்பது கழுத்து. மிடற்றுப் பாட்டென்பது வாய்ப் பாட்டாகும். சீவக சிந்தாமணியின் ஆசிரியர் மிடற்றுக் கருவியை வீணை என்றே கூறுவர். இது தவிர, ஏனைய இசைக் கருவிகள் "குயிலுவக் கருவிகள்" எனப்படும். இவை மக்களின் வாய், கை, விரல், கால் முதலிய உறுப்புக்களால் ஒலிக்கப்படும்.

தோற்கருவிகள் தோலைச் சிறந்த உறுப்பாய்க் கொண்டவை. மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை முதலிய பழங்கால இசைக்

கருவிகளும், மிருதங்கம், தபேலா, தவுல், கஞ்ஜரா என்னும் தற்கால இசைக் கருவிகளும் இவ்வினத்தைச் சேர்ந்தவை. இவ்விசைக் கருவிகளில் தோலைக் கொட்டினால் ஓசை எழும். மத்து, ஓசைப் பெயர். இசை தோன்றுதற்கு இடமாகிய கருவிகட்கெல்லாம் தலம். ஆதலான் மத்தளம் எனப்பட்டது. சல்லென்ற ஓசையை உடையது சல்லிகை எனப்படும். இடக்கையால் அடித்து ஓசை எழுப்பப்படுதலால் இடக்கை என்ற பெயராயிற்று. இக்கருவிக்கு ஆவினுடைய வஞ்சித் தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்றும், குடுக்கையாக அடைத்தலால் குடுக்கை என்றும் பெயர் வழங்கும். கரடி கத்துவதுபோல் ஓசை செய்யும் கருவியைக் கரடிகை என்பர்.

இனி, குழல், நாதசுரம், மகுடி முதலியவை துளைக் கருவிகள் எனப்படும். இவைகளின் துளை வழியே ஊதினால் ஓசை உண்டாகும். குழலை வாசிக்கும்போது அக்கருவியின் துளை வழியே வெளியே ஊதுகிறோம். நாதசுரத்தை வாயில் வைத்து அதன் துளை வழியே உள்ளே ஊதினால் ஓசை எழும். நாம் வாயில் வைத்து ஊதும் பாகத்திற்குச் சீவாளி என்று பெயர். நாம் ஊதும் காற்று சீவாளியை அடைந்ததும் அதிர்ச்சி யடைந்து, ஒலியை உண்டாக்குகிறது. நாதசுரத்தில் உண்டாகும் ஒலிக்குக் காரணம் இவ்வுறுப்பேயாகும். பாம்புப் பிடாரர் மகுடியை வாசிக்கும் பொழுது. இனிய ஓசை உண்டாகிறது. ஓசை உண்டாவதற்குக் காரணம் இதனுள்ளிருக்கும் நாணலால் செய்யப்பட்ட உறுப்பாகும். இதனை நெகிழம் என்பர். ஆங்கிலத்தில் கூறப்படும் 'ரீட்ஸ்' என்ற உறுப்பு இதுவே. ஈண்டுத்துளை வழியே நெகிழத்தினுள் ஊதுகிறோம்.

இனி, நரம்புக் கருவிகளைக் கவனிப்போம். கட்டப்பட்ட நரம்புகளை மீட்டுவதால் இன்னோசை கொடுக்கும் கருவிகள் நரம்புக் கருவிகள் எனப்படும். யாழ், தம்பூர், பிடில், கோட் முதலிய கருவிகள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றுள் யாழ் பலவகைப்படும். அவற்றுள் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன மிகச் சிறந்தவை. இவையே பெரு வழக்கில் உள்ளவை. பேரியாழ் இருபத்தொரு நரம்புகளையுடையது.

பத்தொன்பது அல்லது பதினேழு நரம்புகளையுடையதும், சுறுமீன்போன்ற தோற்றத்தையுடையதும் மகரயாழ் எனப்படும். சகோட

யாழ் பதினான்கு அல்லது பதினாறு நரம்புகளையுடையது. இசைக்கருவிகளுள் யாழும், குழலும் மிக்க இன்பத்தைத் தருவன, இதனை.

" குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர் "

என்ற குறட்பாவால் அறியலாம்.

ஜாலர், குண்டுதாளம், ஜலதரங்கம் முதலியன கஞ்சக் கருவிகள் எனப்படும். கஞ்சம் என்பது வெண்கலம். இவை இணை இணையாகவே இருக்கும். இவற்றை ஒன்றின்மேல் ஒன்று மோதிக் கொட்டுவதால் ஓசை பிறக்கும்.

இனி, வாய்ப்பாட்டுப் பாடுவோருக்குக் கருவியாய் உள்ளது மிடறேயாம். மூலாதாரத்திலிருந்து வெளிவரும் மூச்சை வாய்விடும் காற்றால் கிளப்பி, கருத்தால் இசைகளை ஆராய்ந்து, குரல் வளையைத் தாக்கச் செய்து, பண்ணின் தன்மை தோன்றப்பாடுவது மிடற்றுப் பாடலாகும். பாடும் பொழுது வயிறு குழியவும், முகத்தை விகாரமாகச் செய்தும், புருவம் மேலேறும் படியும், தலையை அசைத்தும், பற்களைக் காட்டியும், பையைப்போல் வாயைத்திறந்தும் பாடுவதை உடற் குற்றங்களாகப் பரஞ்சோதி முனிவர் கருதுவர். இசைக்குரிய குணங்களும், பாடலுக்குரிய பண்புகளும் பொருந்துமாறு பாடுவதே சிறந்த முறையாம். தமிழர் இசையை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழாகப் பகுத்துள்ளனர்.

இசைக் கருவிகளைப்பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளேன். வணக்கம்.

உன் நல்வாழ்வை விரும்பும்,
**சந்திரமவுலி.**

முகவரி
**திரு. ம. ரா. நடராஜன்,**
40, கடைத்தெரு,
மதுரை.

**பயிற்சி**

1. **பொருள் கூறுக:—**
   யாத்தனர், கஞ்சம், மிடறு, ஞெகிழம்.
2. **வாக்கியங்களில் அமைக்க:—**
   நாதசுரம், சுறுமீன், பண்பு, யாழ்.

3. **விடை எழுதுக :—**

(அ) இசைத் தமிழ் இலக்கண நூல்கள் எவை ?
(ஆ) தமிழர் இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும் ?
(இ) தோற்கருவிகள் எவை ?
(ஈ) நாதசுரத்தில் ஓசையை உண்டாக்கும் உறுப்பு எது ?
(உ) பாடுவோருக்குரிய உடற் குற்றங்கள் எவை ?
(ஊ) ஏழிசைகள் எவை ?

**கட்டுரையாக்கம்**

இசைக் கருவிகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 4. ஆயிரத்தில் ஒருவர்

(S. V. வரதராசய்யங்கார் M.A., M.O.L.)

தமிழிலக்கியங்களில் போற்றியுரைக்கப்படும் உயரிய குணங்களுள் சிறந்தவை வீரமும் ஈகையுமாகும். இவையிரண்டையும் வாழ்க்கையின் இரு கண்களாகத் தமிழர் கருதிவந்தவராவர். இவ்விரு குணங்களாலும் தம் புகழை நிறுவிய சான்றோர் வரலாறுகள் பல உண்டு. அவை கற்பார் மனத்தை உருக்கிப் பரவசமாக்கும் பெற்றி வாய்ந்தவை. இவ்விரு குணங்களுள் முன்னது இன்றியமையாத காலங்களிலே மாந்தரிடத்துத் தோன்றுவதாகும். பின்னதோ, பிறர் துன்பங்கண்டுழி இளகிய மனமுடையார் எவர்மாட்டும் உண்டாகத் தக்க உள்ளநெகிழ்ச்சியின் செயலாகத் திகழ்வது. தமிழர் ஈகையினை எவ்வாறு போற்றிவந்தனர் என்பது,

'சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை'

என்ற மறைமொழியால் நன்கு விளங்கும். ஈகையென்னும் பேரறத்தினால் ஈட்டுதற்குரியது புகழேயாகும். இதுபற்றியே வள்ளுவனாரும் 'ஈகை' என்ற அதிகாரத்தை யடுத்துப் 'புகழ்' என்ற அதிகாரத்தை யமைத்து,

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்றனர். உரையாசிரியராகிய பரிமேலழகரும் 'இது (புகழ்) பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது' என்றார்.

தாம் பெற்ற செல்வத்தினைச் சிறைப்படுத்தாமல் தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு ஈதல் என்னும் அருங்குணம், பரந்த நோக்கமும் கனிந்த உள்ளமும் உடைய சிலரிடமே அமைவதாகும். இத்தகைய ஈகைக்குணம் மாந்தர் பசிப்பிணியை நீக்கி வந்ததுடன் கலைகளையும் வளர்த்து வந்திருக்கிறது. ஈகையின் பயனை எய்தினோரது உள்ளத்திலே சுரந்த நன்றியறிவானது பாடல்களின் உருக்கொண்டு நமது இலக்கியங்களில் ஆங்காங்கே மிளிர்கின்றது.

ஈகையென்னும் இன்குணத்தால் புகழ் நிறுவிய கடையெழு வள்ளல்களின் வரலாறுகளேயன்றிப் பிற்காலத்தே விளங்கிய கொடை வள்ளல்கள் சரிதங்களும் பல உள. அவற்றுள், இங்கு யாம் கூறப் புகுந்தது சோழநாட்டுத் தருமதேவதை என்று போற்றப்பெற்ற **சடையப்ப வள்ளலின்** சரிதப்பகுதி ஆகும்.

சடையப்ப வள்ளலார் சோழநாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலே தோன்றி விளங்கியவர். இவர் தந்தையின் பெயர் சங்கர வள்ளல் என்பது. இவர்கள் வமிசத்தினர் கடற்கரைப்பட்டினமாகிய புதுவை (புதுச்சேரி)யில் கப்பல்வாணிகம் நடத்திவந்தனர். மற்றும், பல்லாயிரம் ஏர் வைத்து உழுவித்துண்ணும் செல்வவளமும் இவர் களுக்கு வாய்த்திருந்தது. நம் வள்ளல்பெருந்தகைக்குச் **சடையன், சரராமன், கண்ணன், திரிகர்த்தராயன்** என்னும் பெயர்களும் வழங்கி வந்தன. அவற்றுள் சடையன் என்பது இவரது குலப்பெயராகும்; சரராமன் என்பது இவர்க்கு இடுகுறியான் அமைந்த பெயர் என்பர். இவ் வள்ளல் தம்மை நாடிவந்த பல்லோர்க்குக் கண்போன்று உண்டி யும் பரிசிலும் பரிவுடனளித்துக் காத்து வந்ததால், கண்ணன் என்று அழைக்கப்பெற்றார்; ஒருகால் மூவேந்தரையும் அழைத்துச் சிறப்பாக விருந்தளித்த காலத்து இவர்க்குத் திரிகர்த்தராயன் என்ற பெயர் அன்னோரால் வழங்கப் பெற்றது.

இவ் வள்ளலை, 'ஆயிரத்தில் ஒருவர்' என்று கருதினார் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடர். இவர் தமிழ் நாட்டிலே தோன்றியது அந் நாட்டின் தவப்பயனே என்று கூறத் தடையில்லை. இவர் தோன்றி யிராவிடின் கம்பர் என்ற கவிதிலகரைத் தமிழகம் அவரது தகுதிக்குத் தக்க அளவிலே பயன்படுத்திக் கொண்டிராது என்னலாம். கம்ப ராமாயணம் நமக்குக் கிடைப்பதற்கு ஏவுதற்கருத்தாவா யிருந்தவர்

இவரேயாவர். தம்போன்ற இன்கவிப்புலவர்களைச் சடையப்ப வள்ளல் எங்ஙனம் ஆதரித்தார் என்பதைக் கம்பநாடர்,

'ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தல்லால் இனி'

என்று தம்முள்ளத்தே ஊறியெழுந்த நன்றியறிவினால் பாராட்டி யுள்ளார்.

அணைத்தூட்டுந் தாயையும் ஆதரித்து வளர்க்குந் தந்தையையும் இளம்பிராயத்திலேயே இழந்து, அநாதனாய்த் தமது வீட்டுவாயில் கம்பத்தைப் பற்றி நின்றவண்ணம் வள்ளலின் வதனத்தைக் காண ஆவலுடனிருந்த கம்பரைச் சடையப்பர் கண்டார்; கண்டதும் இரங்கி, அவரது ஆதரவற்ற நிலையை உசாவியறிந்து தமது இல்லத்திலேயே தமது குமாரருக்குத் தூக்குத்தூக்கியாக அமர்த்திக்கொண்டார். ஆயினும், கம்பரிடம் பொருந்தியிருந்த அறிவுவளம் கண்டு, அவர் கல்விபயில்வதற்கு ஏற்பாடுசெய்தார். கல்வியில் கம்பர் பெரியவராகி வரவரத் தூக்குத்தூக்கிவேலை நீங்கிற்று. வள்ளல் கம்பரைத் தமக்கு ஒப்பான நிலையில் வைத்துப் போற்றலானார். அவராலேயே கம்பருக்குக் குலோத்துங்க சோழ மன்னரின் அவைப்புலவராக விளங்கும் பதவியும் கிடைத்தது. இராமகதையைத் தமிழில் இயற்றுமாறு குலோத்துங்க சோழரைக் கொண்டு தூண்டியவரும் இவ் வள்ளலே யாவார்.

கம்பர் இராமாயணத்தைப் பாடி முடித்தபின், அதைத் திருவரங்கத்திலே அரங்கேற்றும்போது, அக் கதையில் நூறுபாட்டுக்கு ஒரு பாட்டுவீதம் வள்ளலாரின் பெயரையும் அவரது ஈகைக்குணத்தையும் பாராட்டியிருப்பது கண்ட வைணவ அறிஞர்கள், '' 'படிகொண்ட சீர்த்தி இராமாயணமென்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட' இக் கதையில் அடிக்கடி நரஸ்துதி வருகின்றதே'' என்று தடை கூறலாயினர். கம்பர், சடையப்ப வள்ளலாரிடம் தமக்குள்ள கடப்பாட்டை எடுத்து விண்ணப்பிக்க, அந்த வைணவ அறிஞர்கள் ''ஆயின், ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடலில் சடையன்பெயர் வரலாம்'' என்று பணித்தார்கள். கவிதிலகர் 'இதுவும் நன்றே, சரராமன் நூற்றில் ஒருவர் அல்லர். **ஆயிரத்தில் ஒருவரே** யாவர்!' எனக் கொண்டு மனந்தேறி, அவ்வாறே அமைக்கலானார். ஆயினும், அநாதனை

தம்மைக் கவியரசாக்கிய வள்ளல்பெருந்தகைக்கு எவ்வாறு நன்றி காட்டுவது என்பதில் கம்பருக்கு ஒருமுடிவும் ஏற்பட்டிலது. எனினும், இராமபிரானுக்கு முடிசூட்டிய நிகழ்ச்சியைக் கூறும் ஓர் அழகிய செய்யுளில் கம்பர்,

''அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் வாங்க,
பரதன்வெண் கவிகை யேந்த, இருவரும் கவரி பற்ற,
விரைசெறி குழலி யோங்க, வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி''

என வள்ளலின் முன்னோருள் ஒருவரை இராமாயணகாலத்தில் அயோத்தியில் அரண்மனைக் கருவூலக் காப்பாளராக்கி, அவர் தம் கையால் முடியை எடுத்துத் தர, வசிட்டமாமுனிவர் அதை வாங்கி இராமபிரானுக்குப் புனைந்தார் என்று கூறி, தமது நன்றியைத் தலைக் கட்டுகிற அழகு யாவரும் உணர்ந்து இன்புறத் தக்கது.

சடையப்ப வள்ளலின் கொடைப்பயனைக் கம்பர் போன்ற கவிஞரேயன்றி, வேற்றுநாட்டினரான வேந்தரும் பெற்ற செய்திகள் உண்டு. அதனால் இந்த வள்ளலின் கீர்த்தி தமிழ்நாட்டில் மட்டுமே யன்றி வெளிநாடுகளிலும் விளங்குவதாயிற்று. 'அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தார் எனப்படுஞ் சொல்' என்பது முதுமொழியன்றோ ?

சடையப்ப வள்ளலின் ஆதரவில் கவலையற்று உண்டு வாழ்ந்திருந்த கவிஞர் ஒருவர் நாடுகாணும்பொருட்டு ஈழநாட்டை யடைந்தார். அவர் அந் நாட்டின் ஒரு பகுதியாகிய கண்டிநாட்டை எய்தி, அங்குச் செங்கோல் செலுத்திவந்த **பரராச சிங்கன்** என்னும் மன்னனைக் கண்டார். அச்சமயம் அந்நாடெங்கும் வற்கடம் சூழ்ந்திருந்தது. தமிழறிஞனை அவ் வேந்தன் புலவரை வரவேற்று உபசரித்தான். பஞ்சத்தால் மாந்தர் பலர் பட்டினி கிடக்க நேர்ந்திருப்பதையும், பலர் மரித்துவருவதையும் அவ்வரசன் வாயிலாகப் புலவர் அறிந்தார். உடனே அவர் அவனைத் தேற்றிச் சோழநாட்டின் உண்டிவளத்தையும், அங்கு அறத்தை வளர்த்துவரும் வள்ளலாரின் கொடைத்திறத்தையும் எடுத்துரைத்து, வள்ளலின் உதவியை நாடும்படி அவனைத் தூண்டினார். குடியோம்பிக் கோலோச்சுங் கடப்பாடுடையவனன அவ்வேந்தனும் அதற்கிசைந்து நம் வள்ளலுக்கு ஒருசெய்யுள் எழுதிவிடுத்தனன். அச் செய்யுள் வருமாறு :—

"இரவுநண்பகல் ஆகிலென்? பகல் இருளறுவிர வாகிலென்?
இரவியெண்டிசை மாறிலென்?கடல் ஏழுமேறிலென்?வற்றிலென்?
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலென்? ஆகிலென்?
வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாக்வே
கருதுசெம்பொனின் அம்பலத்திலொர் கடவுள்நின்று நடிக்குமே ;
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகில் துயிலுமே ;
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தன்னில்மன்னிய சேகரன்
சங்கரன்தரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே."

"வளப்பம் மிகுந்த சோழநாட்டில் வாழும் பேறு ஒருவருக்கு வாய்க்கு மாயின், இரவுநண்பகலாக மாறினுலென்ன? பகலின்றி இரவாகவே இருப்பினும் என்ன? சூரியன் எந்தத் திசையில் உதித்து எங்கே மறைந்தால்தான் என்ன? ஏழு கடல்களும் பொங்கிவரினும், அன்றி வற்றி வறண்டேபோயினும் என்ன? குடிகளைக் காக்கும் நன்மரபி லுதித்த வேந்தர் வாழ்ந்தாலும் என்ன? தாழ்ந்தாலுமென்ன?" என்பது இச்செயுளின் முற்பகுதியின் பொருள்.

இவ்வித இறுமாப்புக்குக் காரணமாவது யாது என்பதை அச் செய்யுளின் பிற்பகுதி விளக்குகின்றது. அது 'அந் நாட்டில் யாவரும் கருதி வழிபடும் பொன்னம்பலத்தில் ஒரு கடவுள் நின்று நடிக்கின்றது. மேலும், காவிரியின் நடுவிலே யுள்ள திருவரங்கத்தில் கருணையே வடிவெடுத்த காளமேகம் துயில்கின்றது. மற்றும், மரங்கள் வானளாவி வளர்ந்துள்ள புதுவையில் மன்னி வாழுந் தலைவனும் சங்கரவள்ள லுக்குப் புதல்வனுமான சடையன் என்ற ஒரு தருமதேவதை வாழ் கின்றது' என்பதாகும்.

இப் பாடலில், சோழநாட்டில் வாழும் பேறு ஒருவருக்கு வாய்ப் பின், அவர் வயிறார உண்டு வாழ வழி யுண்டு என்பது முற்பகுதியின் கருத்து. பின், அந் நாட்டின் ஏற்றத்திற்குச் சைவ வைணவ சமயங் களுக்குத் தாயகமான இரண்டு ஸ்தலங்களும் சோழநாட்டின்கண் அமைந்திருத்தலின் சிறப்பு உணர்த்தப்பட்டது. முடிவில் சோழநாட் டின் தனிச்சிறப்பிற்கு அடிப்படையாயுள்ளது 'தருமதேவதையின் வாழ்வு' ஒன்றே என்று சொல்லப்பட்டுள்ளது. அத் தருமதேவதையும் சடையப்ப வள்ளலே யாவார் என்று கூறி, சோழநாட்டிற்குச் சிறப் பினை ஈட்டித் தந்தவர் 'செல்வத்தின் பயனே ஈதல்' என்ற வாக்கை மெய்ப்பித்த நம் வள்ளலே யாவார் என்பதை நிலைநாட்டுகின்றது இச்

செய்யுள். மேலும், 'கருது செம்பொனின் அம்பலத்தில் **நடிப்பவனை யும்** காவிரித் திருநதியிலே **துயில்கின்றவனையும்** நம்பாதேயுங்கள்; புதுவைச் சடையனுரே காப்பவர், அவரை அடைந்தவருக்குக் குறை யில்லை' என்ற தொனிப்பொருளும் அமையச் சமத்காரமாகக் கூறியுள் ளது அறிந்து இன்புறத்தக்கது.

இந்த அரிய பாடலைக் கண்டிராஜன் எழுதி வள்ளலுக்கு அனுப் பியதும் 'ஈதல் இயலாதவிடத்து இறத்தல் இன்பந்தருவது' என்பதைக் கடைப்பிடியாகக் கொண்ட அவ் வள்ளல் ஆயிரம் மரக்கலங்களில் நெல்மூட்டைகளை ஏற்றி விடுத்து, 'வான் பொய்ப்பினும் தான் பொய் யாத' காவிரிநாட்டின் வளத்தையும் தம் கொடைத்திறத்தையும் நிலை நாட்டி, 'தருமதேவதை' என்ற பெயருக்கு உரியவரானார். கண்டி நாடும் பஞ்சம் நீங்கி உயர்ந்தது. 'இறைத்த கிணறு ஊறும்' என் பதற்கு ஏற்ப, வள்ளலுக்கும் செல்வம் வளர்ந்துகொண்டேயிருந்தது. இத்தகைய சடையப்ப வள்ளலை **ஆயிரத்தில் ஒருவர்** என்றார் கவி யரசர். கோடியில் ஒருவர் என்று சொல்லியிருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது, இக் காலநிலையை நோக்குமிடத்து!

**பயிற்சி :**

1. **பொருள் எழுதுக:—**

   இன்றியமையாத, ஈட்டுதல், ஊதியம், மிளிர்கின்றது. இடுகுறி, பரிவு, அரம்பை, நரஸ்துதி, அரியணை, கருவூலம், கடப்பாடு, துயில், வற் கடம், இறுமாப்பு.

2. **வாக்கியங்களில் அமைக்க :—**

   பெற்றி வாய்ந்தவை, இன்றியமையாத, பரந்த நோக்கம், அரங்கேற்ற, மனந்தேறி, கடப்பாடுடையவன், இறுமாப்பு, வானளாவி

3. **கீழ்வரும் வாக்கியங்களைப் பூர்த்திசெய் :—**

   (i) .........வாழ்க்கையின் இரு கண்களாகத் தமிழர் கருதி வந் தனர்.

   (ii) ஈகைக் குணம் மாந்தர் பசிப்பிணியை நீக்கி வந்ததுடன்.........

   (iii) சடையப்பர் கம்பரைத் தமது குமாரருக்கு.........

   (iv) காவிரியின் நடுவிலேயுள்ள திருவரங்கத்தில்...........

   (v) 'இறைத்த கிணறு ஊறும்' என்பதற்கு ஏற்ப ..........

4. **விடை எழுதுக :—**

   (i) சாதல் எப்பொழுது இனிதாகும்?

   (ii) சடையப்ப வள்ளலார் எங்குப்பிறந்தார்?

(iii) வள்ளலுக்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை ?
(iv) கம்பர் இராம கதையை இயற்றக் காரணம் யாது ?
(v) கம்பராமாயணம் அரங்கேற்றும் போது வைணவ அறிஞர்கள் ஏன் தடை செய்தனர் ?
(vi) கம்பர் நன்றியறிதல் எவ்வாறு புலப்படுகிறது ?
(vii) பரராச சிங்கன் யார் ?
(viii) வள்ளல் எவ்வாறு 'நருமதேவதை' என்ற பெயருக்கு உரியவரானர் ?

**கட்டுரையாக்கம்**

சடையப்ப வள்ளலைப் பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

# 5. இந்தியாவும் கைத்தொழிலும்

**(வித்துவான் ம. வி. இராகவன்)**

உலகத்தில் நாகரிகம் சிறந்துள்ளனவாகக் கருதப்படும் நாடுகள் பலவற்றிலும் கைத்தொழில் முதன்மை பெற்று மிக்க அளவில் பெருகியுள்ளது. அந் நாடுகளில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களே மிக்க வருமானம் பெறுகின்றனர். அரசாங்கத்தார்க்கும் கைத்தொழிலின் மூலமாகவே அதிக வருமானம் கிடைக்கின்றது. அந் நாடுகளின் செல்வ நிலையும் அதனுலேயே உயர்வடைந்து உள்ளது. எந்நாட்டினும் கைத்தொழிலாற் கிடைக்கும் வருமானத்தினும் விவசாயத்தாற் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. அதனுலேயே நாகரிக நாடுகள் கைத்தொழிலையே முதன்மையானதாகக் கருதுகின்றன. விவசாயம் ஒன்றையே பற்றிக் கைத்தொழிலைப் புறக்கணித்து வருவதனுலேயே நம் நாடு செல்வ நிலையில் சிறப்பிழந்திருக்கிறது.

இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு தொழிலாளியும் சராசரி இருநூறு பவுன்கள் பெறுமானமுள்ள பொருள்களை ஆக்கி வருகின்றனர். இவ்வொரு வகையில் மட்டுமே அந் நாட்டுக்கு ஆண்டில் இருநூற்றிருபது கோடி பவுன்கள் வருமானம் கிடைப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. ஆயின், நம் மாகாணத்தில் உள்ளோர் அனைவருடைய வருமானத்தையும் கூட்டிக் கணக்கிடினும் இருபத்தைந்து கோடி பவுன்கட்குமேல் உயரவில்லை. ஐம்பது ஆண்டுகட்கு முன்னர்

ஜப்பான் நாடு நம் நாட்டினும் இழிந்த நிலையில் இருந்தது. முப்பது ஆண்டுகட்கு முன்வரை நூலும் உடையும் நம் நாட்டினின்றும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆயின், இன்று ஜப்பானின் வருமானம் வியக்கத்தக்க அளவில் பன்மடங்கு பெருகியுள்ளது. இப்பொழுது நூலுக்கும் ஆடைக்கும் நாம் அதனை எதிர்பார்த்து நிற்கிறோம். அது செல்வத்திலும் சிறப்பிலும் உயர்ந்து உலக வல்லரசுகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இழி நிலையில் இருந்த கானடா நாடும் கைத்தொழிலின் உதவியால் இப்பொழுது உயர் நிலை எய்தி விளங்குகின்றது. பத்துக்கோடி மக்கள் தொகையே உள்ளதாகிய அக் கானடா தேசம் செல்வத்தில் தலைசிறந்து நிற்கிறது. முப்பத்தைந்து கோடிகட்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள நம்நாடு வறுமை நிலையில் வாடுகின்றது. நாம் ஜப்பான், கானடா ஆகிய நாடுகளிடமிருந்து முன்னேற்றத்திற்கு உரிய இரகசியங்களை அறிய வேண்டும்; அவற்றைப் பின்பற்றிக் கைத்தொழிலை ஓம்பி முன்னேற முயல வேண்டும்.

நம் வாழ்க்கைக்கு வேண்டும் பல பொருள்களையும் நாமே ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதற்குக் கைத்தொழில் இன்றியமையாதது. நம்நாட்டுக் கைத்தொழில்கள் நம்மவர்களாலேயே நடத்தப்படுதல் வேண்டும். அந் நிலையிலேயே அவற்றால் கிடைக்கப் பெறும் பொருள் நம்மிடமே இருக்கும். நாம் நம் நாட்டுப் பொருள்கட்குக் கொடுக்கும் பணம் நம் நாட்டுத் தொழிலாளர்களையே அடைவதால், நம்மிடையே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கும். அதனால் நாட்டில் கைத்தொழிலும் வர்த்தகமும் பெருகும். நாம் இப்பொழுது உழவுத் தொழிலினின்று பெறும் வருமானத்தையும், நாட்டின் மூலப் பொருள்களை விற்றுக் கொள்ளும் விலையையும் அயல்நாட்டு வணிகர்கட்கு அள்ளிக் கொடுத்து வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைக் கொள்ளுகிறோம். அவ்வாறு வெளிநாடு செல்லும் செல்வம் மீண்டும் நம்பால் திரும்பாது. அவர்கள் நம் நாட்டு மூலப் பொருள்களையும் அவற்றிற்கு விலையாகத் தந்த பணத்தையும் ஒருங்கே கவர்ந்து கொள்ளுகின்றனர். நாம் இரண்டையும் இழந்து வறுமையாற் சிறுமையுற்று வருந்துகிறோம். ஆகவே நம் நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டு நமக்கு வேண்டும் பொருள்கள் அனைத்தையும் நாமே செய்துகொள்வதே நம்மை உயர்த்திக் கொள்வதற்குரிய நெறியாகும்.

நாட்டில் நடைபெறுதற்குரிய தொழில்களை உயர்தரப் பெருந் தொழில்கள், இடைத்தரத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பருத்தி ஆலை, சணல் ஆலை, நிலக்கரித் தொழில், இரும்புத் தொழில், கட்டிடப் பொருள் தொழில், இருப்புப் பாதைப் பொருள் தொழில், கப்பல் தொழில் முதலியன **உயர்தரப் பெருந் தொழில்** வகையைச் சேர்ந்தவை. நாட்டின் செல்வம் பெருகுதற்கு இவை இன்றியமையாதனவாகும். காகிதத் தொழில், எண்ணெய் ஆலைத் தொழில், தோல் பதனிடும் தொழில், கண்ணாடிப் பொருள் தொழில், இரசாயன எரு, மருந்து, அலுமினியம் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகியவை **இடைத்தரத் தொழில் களாகும்**. கையால் **நூல் நூற்றல்**, நெய்தல், தோற்பொருள் செய்தல், மட்பாண்டம் வனைதல், தீக்குச்சி செய்தல், விவசாயக் கருவிகள் செய்தல், மரத்தைக் கொண்டு பல்வேறு பொருள்கள் செய்தல் போல்வன **குடிசைத் தொழில்கள்** எனப்படும். ஒவ்வோர் ஊரும் இவற்றுள் ஏதேனும் ஒருவகைத் தொழிலைத் தொடங்கி நடத்த முயலல் வேண்டும். இங்ஙனம் ஊர்களில் தொழிற்சாலைகள் தோன்றுவதால் நாட்டில் வாணிகமும், செல்வமும் பெருகும்; உழவுத் தொழிலும் உயர்வடையும்; மக்கள் யாவரும் தொழில் பெற்று வறுமை நீங்கி வளமுற வாழ்வர்.

நாட்டில் கைத்தொழில்களைத் தொடங்கி நடத்துவதற்குமுன் மக்களிடையே தொழிற் கல்வியைப் பரப்பி, அத் துறையில் பலருக்கும் பயிற்சி அளிக்க வேண்டும். அன்றியும் இதுபோது நாட்டில் நடத்தப் பட்டு வரும் எல்லாக் கைத் தொழில்களையும் பற்றிய முழு விவரங்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாத தாகும். நடைபெறும் கைத் தொழில்கள், அவற்றில் ஈடுபட்டுள்ளோர் தொகை, அவர்கட்குக் கொடுக்கப் படும் கூலியின் அளவு, நாட்டில் கிடைத்தற்குரிய மூலப் பொருள்களும் அவை கிடைக்கும் இடங்களும், அவற்றின் அளவும், ஏற்றுமதி யாகியவரும் பொருள்கள், இறக்குமதி யாகும் பொருள்கள் ஆகியவற்றை முன்னர் அறிந்து கொண்டாற்றான், இங்கு எவ்வெத் தொழில்களைத் தொடங்கி, எவ்வெப் பொருள்களைச் செய்து கொள்ளுதல் கூடும் என்பது நமக்குப் புலப்படும். இவற்றை அறிந்த பின்னர், நன்கு ஆய்ந்து கைத்தொழில் முன்னேற்றத்திற்குரிய திட்டம் ஒன்றை வகைபெற வகுத்துக்

கொண்டு, அதற்கியையத் தொழில்களைத் தொடங்கி நடத்த முயல வேண்டும்.

கைத் தொழில்களைத் தொடங்கிச் சிறப்புற நடத்துவதற்கு நிருவாகம், பணம், இயந்திரம், ஆட்கள், பொருள்கள், சந்தை ஆகிய ஆறு சாதனங்களும் இன்றியமையாது வேண்டற்பாலன. கைத் தொழில்களை நிருவகிக்கும் திறமை வெறுங் கல்வியினால் பெறத்தக்க தொன்று அன்று. ஆகையால், அத்திறமை வாய்ந்தோர் நாட்டில் அரியராவர். ஆகவே, அத்தகையோரை முயன்று தேடி அமர்த்திக் கொள்ளுதல் வேண்டும். அவர்கள் தங்கள் தொழில் செய்வோருடன் ஒத்துழைத்து, தொழில் வளர்ச்சிக்கும், முதலாளிகளின் நன்மைக்கும் உரிய முறையில் தங்கள் நிருவாகத்தைத் திறமையாக நடத்த வேண்டும். தொழில் நடத்துதற்கு வேண்டும் முதற் பொருளைப் பலருடைய உதவியைக்கொண்டு திரட்டுதலே சிறந்த முறை. இம்முறையில் முதல் பொருட்டுப் பங்கு உதவுவோர் இலாபத்தில் பங்கு பெறுதற்கு உரியராகலின், தொழிலின் வளர்ச்சியில் கருத்துடையராய், அதற்குத் தம்மால் ஆவன புரிவர். வேண்டும் அளவு முதற் பொருள் திரட்டப்பட்டு விடுமாயின், அதனைக் கொண்டு வேண்டும் இயந்திரங்களை எளிதில் பெறலாம். நமது நாடு மிக்க ஜனத்தொகை உடையதாகையால், இங்குத் தொழில் செய்வோர்க்குப் பஞ்சம் இல்லை.

இந்தியா மூலப் பொருள்கள் நிறைந்த நாடு. ஆண்டு தோறும் இங்கிருந்து அளவற்ற மூலப் பொருள்கள் அயல் நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. நாம் அவற்றைக்கொண்டு நமக்கு வேண்டும் பொருள்கள் அனைத்தையும் குறைவறச் செய்து கொள்ளலாம். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பதற்குப் பொதுவான சந்தைகளும் உள்ளன. போக்கு வரவுக்கு உரிய வசதிகளும் சாதனங்களும் நமக்கு வேண்டற் பாலன. அவ்வகையில் அரசியலாரும் இரயில்வே அதிகாரிகளும் நம்மோடு ஒத்துழைத்து உதவி புரிய முன்வருதல் வேண்டும். நம் நாட்டு அரசாங்கம் இங்குத் தொடங்கிச் செய்யப்படும் கைத் தொழில்களைப் பாதுகாத்தற் பொருட்டுப் பிற நாட்டுப் பொருள்கட்குச் சுங்கவரி விதிக்கும் முறையையே மேற்கொள்ளல் வேண்டும். இதுகாறும் கூறிவந்த சாதனங்களைப் பெற்று விடுவோமாயின், இப்பொழுதே இங்குப் பல கைத் தொழிற்சாலைகளை நிறுவி, அவற்றின் மூலம் பல கோடி ரூபாய்கள் பெறுமான பொருள்களைச் செய்யலாம்.

நம் நாட்டில் இன்னும் தொடங்கப்படாத கைத்தொழில்கள் பல உள்ளன. பல்வேறு இயந்திர வகைகள், தொடர் வண்டி எஞ்சின்கள், மோட்டார் வகைகள் போன்ற பெரிய தொழில்கள் இன்னும் இங்குத் தொடங்கி நடத்தப்படவில்லை. இங்கு இரயில்கட்கும் இரா ணுவத்திற்கும் வேண்டும் எல்லாப் பொருள்களையும் செய்தற்குரிய தொழிற்சாலைகள் பல நிறுவப்படுதல் வேண்டும். இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள நெசவுத் தொழிற் சாலைகள் நம் நாட்டின் தேவைக்குப் போதிய அளவு ஆடைகளை உற்பத்தி செய்யக் கூடியன வாக இல்லை. ஆகவே, அவையும் பெருகுதல் வேண்டும். இத்த கைய தொழில்களுள் சிலவற்றைச் செல்வர் பலர் சேர்ந்து கூட்டு முறையில் நடத்துதல் கூடும். சிலவற்றை அரசாங்கத்தாரே ஏற்றுக் கொண்டு நடத்துதல் வேண்டும். உரிமை பெற்ற நமது நாட்டு அர சாங்கம் இப்பொழுது இத்துறையில் கருத்தைச் செலுத்த முற்பட்டு, சில தொழில்களைத் தொடங்கியும், சிலவற்றைத் தொடங்கத் திட்ட மிட்டும் இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

இவை யாவினும் முக்கியமாக நாம் செய்ய வேண்டுவது மற் றென்று உண்டு: அது, நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் ஏட்டுக் கல்வி ஒன்றையே பரப்புவதோடு அமையாது தொழில் துறையிலும் கருத்தைச் செலுத்துமாறு செய்வதாகும். அவை பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய உணவு, உடை, இருத்தற் குரிய இடம் முதலியவற்றைப் பெறுதற்குரிய வழிகளை மாணுக்கர் கட்குப் போதிக்க வேண்டுவது பல்கலைக் கழகங்களின் கடமைகளுள் தலையாயது ஆகும். கலாசாலைகளிற் பயிலும் மாணவர்கட்கு, அவர் கள் தம் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறினதும் ஏதேனும் ஒரு தொழில் துறையில் இறங்குதற்கு உதவியாகத் தக்க அளவில் சில தொழில்களிலேனும் பயிற்சியளிக்க முன்வரல் வேண்டும்.

இவ்வளவும் நேர்பட்டுவிடின், சில ஆண்டுகளுக்குள் நம் நாட்டை உலகில் உள்ள மற்றைய கைத்தொழில் நாடுகள் யாவினும் சிறந்து விளங்குமாறு செய்தல் எளிதில் இயலும்; செல்வம் செழித்து இன்பம் பெருகச் செய்தல் அமையும்; பெருமை மிகுந்து தலைமை எய்துமாறு செய்தல் கூடும்.

**பயிற்சி**

**விடை தருக:-**

1. நாகரிக நாடுகள் கைத்தொழிலையே முதன்மையாகக் கருதுவது ஏன் ?
2. கைத்தொழிலால் உயர்ந்த நாடுகள் எவை?
3. எந்நிலையில் நம் நாட்டுப்பொருள் நம்மிடையே நிற்கும் ?
4. நம்மை உயர்த்திக் கொள்வதற்குரிய வழி யாது?
5. கைத்தொழில் வகைகள் யாவை? அவ் வகைகட்குரிய தொழில்கள் எவை ?
6. மக்கள் வறுமை நீங்கி வளமுற வாழ்வதற்குச் செய்யவேண்டுவது யாது ?
7. கைத்தொழிலைத் தொடங்கி நடத்துவதற்கு முன் நாம் செய்ய வேண்டுவன யாவை?
8. கைத்தொழில் சிறப்பாக நடைபெறுவதற்குரிய சாதனங்கள் யாவை ?
9. கைத்தொழில் வளர்ச்சிக்கு முக்கியமாக நாம் செய்யவேண்டுவது என்ன?
10. கைத்தொழில் வளர்ச்சிக்குப் பல்கலைக் கழகங்களும் அரசாங்கமும் செய்ய வேண்டும் உதவிகள் எவை ?

# 6. பரம்பரைக் குணம்

**மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், D. Litt.**

மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்க முடியாது. மணிமேகலை முகவுரையில் 'இவற்றுள் மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும், மற்றைப் பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போகிய பாகங்களை யெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும், கோப்புச் சிதைந்து அழகு கெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்துகொள்ளும் வண்ணம் செப்பஞ் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே' என்று எழுதியுள்ளேன். தமிழ் நாட்டில் எவ்வளவோ புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன. சிவ ஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் சுப்பிரமணிய ஸ்தலங்களும் பல உள்ளன. அவற்றைப்போல் தமிழ்த் தெய்வம் கோயில் கொண்டிருந்த ஸ்தலங்களுள் ஒன்றாக அதைக் கருதியிருக்கின்றேன். அது சிவகங்கை ஸமஸ்தானத்தைச் சார்ந்தது. அங்கிருந்து நான் பெற்ற ஏட்டுச் சுவடிகள் சில. அவற்றை எனக்கு உதவியவர் **அழகிய சிற்றம்பலக் கவிராயர்** என்னும் ஓரன்பர்.

அவருடைய பரம்பரை, தமிழ் வித்வான்கள் பரம்பரை யாதலின், பல அரிய தமிழ்ச் சுவடிகள் பல நூற்றுண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டிற் பாதுகாக்கப் பெற்றிருந்தன. பண்டைக் காலத்தில் அவருடைய முன்னோர்கள் பல ஸமஸ்தானங்களில் யானை முதலிய பரிசுகளும் மானியங்களும் பெற்றவர்கள். அவர் வீட்டின் பக்கத்தில் பழைய காலத்தில் யானை கட்டிய கல்லையும், பழைய சிவிகையையும் பார்த்திருக்கிறேன். அங்கே கலைமகளும் திருமகளும் ஒருங்கே தாண்டவமாடினர்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர். அவரோடு நான் பழகிய காலத்தில் அவருடைய முன்னோர்களைப்பற்றிய பல வரலாறுகளை எனக்குச் சொல்லியிருக்கிறார். தம்முடைய சொந்த அனுபவங்கள் பலவற்றையும் சொன்னதுண்டு. அவற்றுள் ஒன்று வருமாறு :

அவர் ஒரு நாள் எங்கோ நெடுந்தூரமுள்ள ஓருருக்கு ஒரு கலியாணத்திற்குப் போயிருந்தார். மீண்டும் ஊருக்குத் திரும்ப எண்ணி ஒரு வண்டிக்காரனிடம் வண்டி பேசி அமர்த்திக் கொண்டார். இரவு முழுவதும் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. வண்டிக்காரன் மூன்று ரூபாய் வாடகை கேட்டான். அன்றியும், "ஊருக்குப் போகையில் பொழுது விடிந்துவிடுமாகையால், நாளைக் காலையில் எனக்குச் சாப்பாடுபோட்டு அனுப்ப வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டான். அவ்வாறே செய்விப்பதாக அவர் உடன்பட்டார்.

இராத்திரியில் வண்டி புறப்பட்டது. கவிராயர் அதிற் படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. வண்டிக்காரன் ஆனந்தமாகத் தெம்மாங்கு முதலியவற்றைப் பாடிக்கொண்டே வண்டி ஓட்டினன். காளைகள் வேகமாகச் சென்றன. பாட்டுக்களைக் கவிராயர் கேட்டுப் பாராட்டிக் கொண்டே வந்தார். பின்பு வண்டிக்காரன் மெல்ல அவருடைய குடும்ப நிலையைப்பற்றி விசாரித்தான். அவர் தம்முடைய குடும்ப வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருப்பது மிதிலைப்பட்டிதான். எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்துவான்கள். அவர்கள் எவ்வளவோ நூல்களைச் செய்திருக்கிறார்கள். பல இடங்களிற் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். முதலில் அவர்கள் சேலத்தைச் சார்ந்த ஓருரில் இருந்தனர். அக்காலத்தில் தாரமங்கலம் கோயில் திருப்பணிகள் செய்த **கட்டியப்ப முதலியார்** என்பவரால் ஆதரிக்கப்பெற்று வந்தனர். அவர்களில் ஒருவரா

கிய அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு இந்த மிதிலைப்பட்டி என்னும் கிராமமானது அக்காலத்தில் இந்தப் பக்கத்தில் ஜமீன்தாராக இருந்த **வெங்களப்ப நாயக்கர்** என்பவராற் கொடுக்கப்பட்டது. இது சம்பந்த மான சாஸனம் எங்கள் வீட்டில் இருக்கிறது. இராமநாதபுரம் சேது பதிகளிடத்திற் பலவகைப் பரிசுகளை எங்கள் முன்னோர்கள் பெற்றி ருக்கிறார்கள். மருங்காபுரி ஜமீன்தாரிடமிருந்தும் பலவற்றை அடைந் திருக்கிறார்கள். சிவகங்கையிலும் அப்படியே. அந்தக் காலத்தில் தமிழருமை அறிந்த அரசர்களும் ஜமீன்தார்களும் இருந்தார்கள். அவர் கள் வித்துவான்களை ஆதரித்தார்கள். அதனால் வித்துவான்களும் பிரபுக்களைப் போலக் கவலையின்றி வாழ்ந்து வந்தார்கள். எங்களுக்கு எப்பொழுதும் ஜீவனாதாரமாக இருப்பதும், எங்கள் குடும்பத்தில் லக்ஷ்மீ கடாக்ஷம் குறையாமல் இருக்கும்படி செய்வதும் அந்த வெங் களப்ப நாயக்கர் கொடுத்த கிராமமே. அவருடைய அன்னத்தைத் தான் இப்பொழுதும் நாங்கள் சாப்பிட்டு வருகிறோம். என்ன, கேட் கிறாயா ?"

" ஆமாம், சொல்லுங்கள் " என்றான் அவன்.

" வெங்களப்ப நாயக்கர் செய்த பல தர்மங்களும் அவருடைய புகழும் இன்றும் நிலைத்திருக்கின்றன. அவரால் ஆதரிக்கப் பெற்ற பரம்பரையினராகிய நாங்களும் பிறரும் நல்ல நிலையில் இருக்கிறோம். அவருடைய பரம்பரையோ இருந்த இடம் தெரியாமற் போய்விட்டது. எங்கள் முன்னோர்களைப்போன்ற எவ்வளவோ பேர்களுக்கு அவர் அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் பரம்பரையினர் கொடுத்துக் கொடுத்துப் புகழைச் சம்பாதித்தனர். ஆனாலும் பிற் காலத்தில் அக்குடும்பத்திற் பல பிரிவுகள் உண்டாயின. செல்வமும் குறைந்துவிட்டது. வெங்களப்ப நாயக்கருடைய பரம்பரையினர் யாரேனும் இப்போது எங்கேயாவது இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. அவர்களுடைய நிலை எப்படி இருக்கின்றதோ! காலச் சக்கரமானது இப்படி மாறிக்கொண்டே வருகிறது," என்று சொல்லிக் கொண்டே வந்த அவர் அயர்ச்சி மிகுதியால் தூங்கிவிட்டார்.

விடியற்காலையில் வண்டி மிதிலைப்பட்டி வந்து சேர்ந்தது. வீட்டை அடைந்த கவிராயர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டார். தம் முடைய வேலைக்காரனை அழைத்து வண்டிக்காரனுக்குப் பழையது போடும்படி சொன்னார். அப்பொழுது வண்டிக்காரன, " எனக்குச்

சாப்பாடு வேண்டாம். நான் போய் வருகிறேன். உத்தரவு கொடுங்கள்" என்று சொன்னான். அவர், "நீ ஊர் போய்ச் சேர்வதற்கு அதிக நாழிகையாகுமே. சாப்பிட்டுவிட்டுப் போ" என்று வற்புறுத்தினர்.

**வண்டிக்காரன்** :—"இல்லை; இப்பொழுது எனக்குப் பசி இல்லை. போகும் வழியில் தெரிந்தவர் வீட்டில் சாப்பிடுவேன்."

**கவிராயர்** :— "சரி. இதோ வாடகை ரூபாயை வாங்கிக் கொண்டுபோ" என்று சொல்லி ரூபாயைக் கொடுக்க ஆரம்பித்தார்.

"ரூபாய் தங்களிடமே இருக்கட்டும். நான் போய்வருகிறேன்" என்று பணிவோடு அவன் சொன்னான்.

கவிராயர் திகைத்துவிட்டார்; அவன் அதிக வாடகை விரும்புகிறானோ வென்று எண்ணினர்.

"நான் பேசினது மூன்று ரூபாய்தானே?" என்று அவர் கேட்டார்.

"இது கிடக்கட்டும், ஐயா! நான் போய் வருகிறேன். தாங்கள் வேறு ஒன்றும் நினைத்துக்கொள்ளக் கூடாது" என்று கம்பீரமாக வண்டிக்காரன் சொன்னான்.

"ஏனப்பா? இவ்வாறு நீ சொல்லுவதற்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லையே !" என்று இரக்கத்தோடு அவர் கேட்டார்.

"ஐயா நேற்று இராத்திரி உங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிற் பிறந்தவன் அடியேன். ஏதோ தலைவிதி இப்படி என்னை வண்டி யோட்டச் செய்தது. '**என்ன செய்தாலும் கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது**' என்று பெரியவர்கள் சொல்வார்கள். எங்கள் முன்னோர்களாற் கொடுக்கப் பட்டவைகளில் ஒரு துரும்பையாவது உங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள என் மனம் துணியவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன். இவ்வளவாவது தங்களுக்கு நான் உபயோகப்படும்படி கடவுள் கூட்டி வைத்தது என் பாக்கியந்தான்" என்று சொல்லிவிட்டுக் கவிராயர் மேலே பேசத் தொடங்குவதற்குள் வண்டியை அவன் ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

கவிராயருடைய மனம், அவனுடைய கம்பீரத்தையும், வெங்களப்ப நாயக்கர் பரம்பரையின் பெருமையையும், அவனுடைய நிலையையும் நினைந்து இரங்கியது. அவர் கண்களில் நீர் ததும்பியது. இந்த

வரலாற்றைப் பிற்காலத்தில் எனக்குக் கூறும் பொழுதுகூட இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தைச் சொல்லுகையில் அவர் கண்களில் நீர்த் துளிகள் புலப்பட்டன; நாத் தழுதழுத்தது.

உயர்ந்த பரம்பரையில் பிறந்தவர்களுடைய கம்பீரமும் உதார குணமும் எக்காலத்தும் அழியாதவை. ''கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே'' என்ற அருமையான வாக்கியத்திற்கு இந்த வரலாற்றைவிடச் சிறந்த உதாரணம் வேறு கிடைக்குமோ ?

### பயிற்சி

1. **பொருள் எழுதுக :—**
   மாசு, மானியம், சிவிகை, சாஸனம், தெம்மாங்கு.
2. **வாக்கியத்தில் அமைத்தெழுதுக :—**
   இன்றியமையாத, செப்பம் செய்து, கோயில் கொண்டிருந்த, சாஸனம், காலச்சக்கரம்.
3. **விடை எழுதுக :—**
   (i) ஆசிரியர் மிதிலைப்பட்டியை ஏன் மறக்கமுடியாது ?
   (ii) அது எங்கு இருக்கிறது ?
   (iii) அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டில் கலைமகளும், திருமகளும் ஒருங்கே தாண்டவமாடினர் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் ?
   (iv) மிதிலைப்பட்டி யாரால் யாருக்குக் கொடுக்கப்பட்டது ?
   (v) வண்டிக்காரன் ஏன் வாடகை வாங்காது சென்றான் ?
   (vi) கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே—என்ற உண்மைக்குச் சான்று கூறு.

# 7. பரமார்த்தன் என்னும் குரு கதை

## வாடகை மாடேறிப் போனது

### (வீரமா முனிவர்)

பல நாள் சென்றபின்பு தூரபயணம் போகும்படி அவசரமுண்டா யிற்று. சீஷர்கள், 'அவ்வளவுதூரம் நம்முடைய குருவானவர் கால்நடை யாகப் போக முடியாது, அதிக பிரயாசமாம்' என்று ஒரு மோழைமாடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம்கொடுக்கத் தீர்த்துப் பல அலுவலினாலே விடிந்ததன்மேல் ஒரு சாமங் கடந்தபின் குருவும் சீஷர்களும் பயணம் புறப்பட்டுப் போனார்கள். கடுவேனில் என்னுங் கோடைகாலமாகை யால் அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளிகொண்டு சுடுகிறதுபோலச் சுள்ளு சுள்ளென வெயிலெறிக்க, மரம்மட்டு குளம் குட்டை இல்லாமை யால், உண்ண நீரும் ஒதுங்க நிழலும் கிடையாத வெட்டவெளியாகிய பாலை நிலத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். அப்படியே போகப் போக அகோரமும் கடூரமுமான வெயிலின் வெப்பம் பொறுமல், பசிய இளங்கீரைத்தண்டு போலக் கிழக்குருக்கள் துவண்டு கீழே விழத் தலைப்பட்டார். அதைக்கண்டு சீஷர்கள், மாட்டை நிறுத்தி, அவரை இறக்கி, அவர் வெப்பத்தை ஆற்றுதற்கு நிழல் எங்கு மில்லாமையால் நிறுத்தப்பட்ட மாட்டின் நிழலிலே தரையில் துணியை விரித்துப் போட்டுக் கிடத்தி, விசிறியில்லாததினால் வஸ்திரத்தினாலே விசிறிக் கொண்டிருந்தார்கள். அவருக்கு அதிலே கொஞ்சம் ஆறுதலான பிறகு குளிர்ந்த காற்று வீச, மறுபடியும் மாட்டின் மேலேற்றி மெள்ள மெள்ள நடத்திக் கொண்டுபோய்ப் பொழுது போகுமுன்னே ஒரு சிற்றூரிற் சென்று இறங்கினார்கள். அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையில் போயி ருக்கும்படி வாசலுக்குள் நுழைந்தவுடனே மாட்டுக்காரனுக்கு மூன்று பணத்தை எடுத்துக் கொடுத்தார்கள். அது அவன், 'போதாது' என் றான். 'இதென்ன, முன் உன்னோடே பேசிச் சம்மதித்த நாட்கூலி மூன்று பணந்தானல்லவோ?' என்று அவர்கள் சொல்ல, அவன் மறுத்து, 'மாடு வாகனமாயேறிப் போவதற்காக உதவினதற்கு இந்தக் கூலி பொருந்தினது சரிதான் ; பிறகு நடுவழியில் வெயிலுக்குக் குடை யாக உதவினதற்குக் கூலி கொடுக்கவேண்டாமா?' என்று கூச்சல் போட, 'இது அநியாயம், அநியாயம்' என்று அவர்கள் கோபித்துக்

க்டூரமாய்ப் பேச, அப்புறம் மாட்டுக்காரனுக்கும் அவர்களுக்கும் சண்டையாய்ப் பெரிய ஆரவார முண்டானதினால், ஊரார் அறிந்து, ஆண் பெண் பெரியோர் சிறியோரெல்லாரும் ஒரு கூட்டமாகக் கூடி மொய்த்து வந்தார்கள். அவர்களில் நியாயக்காரனொருவன் சந்தடியை விலக்கிவந்து கூச்சலையடக்கி, இருதிறத்தார் வழக்கையும் விசாரித்து, 'நல்லது, நான் சொல்லுகிற தீர்ப்புக்குள்ளாவீர்களோ, உங்கள் சம்மதி யென்ன ? சொல்லுங்கள்' என்று கேட்டுப் பின்பு சொல்லத் தொடங்கினான் :

'நான்தான் சிலநாளைக்குமுன் தூரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகையில் நடுவழியிலே ஒரு இராத்திரி ஓர் ஊரில் ஒரு பெரிய விடுதியில் தங்கினேன் ; அங்கே வந்தவர்களுக்கெல்லாம் வசிக்கும் இடம் குடிக்கூலிக்கு விடுவதன்றிச் சாப்பிடுகிறதற்கு வேண்டிய சோறு கறி முதலானவைகளும் கிரயத்துக்குக் கொடுப்பார்கள் ; ஆகையால், 'உனக்கு ஏதாவது வேண்டுமா ?' என்று அவர்கள் என்னைக் கேட்டபொழுது, எனக்குச் செலவுக்குப் பணமில்லாமையால் நான் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; வேறொன்றும் தேவையில்லை' என்றேன். அத்தருணத்தில் அங்குவந்த மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆட்டுத் தொடையை இருப்புச் சலாகையிற் கோத்து நெய்தடவித் தணலின்மேல் காட்டிப் பக்குவமாய்ச் சுழற்றிச் சுட்டார்கள். அது சிவக்க வேகவேக அதிற் பூசிய நெய் உருகி நெருப்பில் துளித்துப் புகையத் தலைப்பட்டது ; அப்பொழுது அதின் வாசனை அதிக இரம்மியமான பரிமளமா யிருந்தது ; நான் கொண்டு வந்த கட்டுச்சாதத்தை அந்த மணத்தோடே சாப்பிடுகிறது நல்லதென்று நினைத்து அதை அப்படியே சற்றுநேரஞ் சுழற்றிக்கொண்டிருக்கும்படி உத்தரவு கேட்டேன். அவ்வாறே சுழற்றிக் கொண்டிருக்க, நான் சாதத்தை அவிழ்த்தெடுத்துச் சீலையோடே ஒரு கையால் அந்தப் புகையின்மேற் பிடித்து, மற்றொரு கையால் சீக்கிரமாய் அள்ளி யள்ளி அவ்வாசனையிலேயே இன்பமாய்ச் சாப்பிட்டேன். பிறகு போக வேணுமென்றிருக்கையில் விடுதிக்காரன், வாசனை முகந்ததற்காகக் கூலி கேட்டான். நான், 'அதற்கேது கூலி?' என்றேன் ; அவன் 'கொடுக்கவேணும்' என்றான் ; நான் 'கொடுக்கிறதில்லை' என்று எழுந்து நடந்தேன். அவன், 'நீ கொடாமற் போகக்கூடாது' என்று ஆணையிட்டுத் தடுத்தான். இந்தப்படி இருவரும் வழக்கிட்டு அந்த ஊர் அதிகாரியண்டைக்குப் பிராதுக்குப் போனோம். அவனோ பூரண

பண்டிதன் ; சகல சாஸ்திர நிபுணன் ; அதிக புத்திமான்; மகா சமர்த்தன் ; மிகவும் நியாய சூட்சுமந் தெரிந்தவன். அந்த மகானுபாவன் பண்ணின நியாயத் தீர்ப்புக் கேளுங்கள் : 'கறி தின்றதற்கு விலை பணமும், கறிமணம் முகந்ததற்கு விலை பணத்தின் மணமுமாகும்; இதுதான் தீர்ப்பு' என்று விடுதிக்காரனை அருகே அழைத்துப் பணம் நிறைந்த பையை எடுத்து அவன் மூக்கிலே அழுந்த உரைத்துத் தேய்த்தான். அவனும் 'மூக்குப் போச்சுது! ஐயோ, மூக்குப் போச்சுது! இந்த மட்டில் வந்த கூலி போதும் போதும்!' என்றான். பார்த்தீர்களோ! இதுவே நல்ல நியாயமும் உத்தம நீதியுமாம் அல்லவா? இந்தத் தீர்ப்புத்தான் உங்களுக்கும் ; எப்படியென்றால், 'மாடேறி வந்ததற்குக் கூலி பணமும், மாட்டின் நிழலிலிருந்ததற்குக் கூலி பணத்தின் நிழலும் போதுமானவை. ஆகிலும் மாட்டுநிழற் கூலிக்கு இப்போது அஸ்தமித்ததனால் பணநிழல் அகப்படாது. அதற்குப் பதிலாகப் பணச்சத்தத்தை ஒத்துக்கொள்' என்று சொல்லி, அவனைச் சிக்கெனப் பிடித்துப் பணப்பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதினால் மோதியடித்து, 'பணச்சத்தங் கேட்டையா?' என்றான். அவனும், 'ஆமையா கேட்டேன் கேட்டேன், காது நோகிறது, போதும் கூலி, போதும், அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது, என்னை விட்டுவிடு' என்றான். அந்தச் சமயத்தில் அவனைப் பார்த்துக் குருவும், 'உன் மாடெனக்குப் போதும் ; இந்தச் சஞ்சலம் இனி ஆகாது ; நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போ; இன்னங் கொஞ்சந் தூரந்தான் பயணம் போகவேணும் ; காலமே மெள்ள மெள்ள நடந்து போகிறேன்' என்று அவனைப் போகச்சொல்லி, பின்பு நியாயக்காரனைப் பார்த்து, 'ஐயா, நீர் எங்கள் வழக்கைப் பாரபட்சமில்லாமல் எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாய்த் தீர்த்தீர்' என்று அவனைப் புகழ்ந்து ஆசீர்வதித்தனுப்பினார்.

1. **பொருள் எழுதுக :—**

   மோழை, அலுவல், தருணம், உரம்.

2. **வாக்கியங்களில் அமைக்க :—**

   கால் நடையாக, வெட்டவெளி, மெள்ளமெள்ள, வாகனம், சஞ்சலம்,

3. **பின்வருபவை எவற்றிற்கு உவமையாகக் கூறப்பட்டவை?**

   (i) பசிய இளங் கீரைத்தண்டுபோல
   (ii) கொள்ளி கொண்டு சுடுகிறதுபோல
   (iii) எள்ளுக்காய் பிளந்தாற்போல.

4. **கீழே கொடுத்துள்ள பகுதியைப் படித்து மூன்றில், ஒரு பங்கு அளவிற்குச் சுருக்கி எழுதுக.**

இரண்டாம் பத்தியில், 'நான்தான் சிலநாளைக்கு முன்......இந்த மட்டில் வந்த கூலி போதும் போதும்' என்றான்.

5. **விடை எழுதுக :—**

   1. சீடர்கள் மோழை மாட்டை வாடகைக்கு ஏன் அமர்த்திக் கொண்டு வந்தனர் ?
   2. குருவிற்கு எது நிழலைக்கொடுத்தது ?
   3. மாட்டுக்காரன் ஏன் வாடகையை வாங்கவில்லை ?
   4. நியாயக்காரன் கட்டுச் சாதத்தை எப்பொழுது சாப்பிட்டதாகக் கூறினான் ?
   5. ஊர் அதிகாரி செய்த தீர்ப்பு யாது ?

# 8. சுவிட்சர்லந்து

**சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ.,**

சுவிட்சர்லந்து என்று சொன்னவுடனே, இயற்கைக் காட்சிகள் பலரின் மனக் கண்ணெதிரில் தோன்றும் ; நமது முதலமைச்சரின் வாழ்க்கைத் துணைவி கமலா நேரு உயிர்நீத்த நாடு என்ற நினைவு சிலருக்கு ஏற்படும் ; கொந்தளிப்பான உலகில், அமைதிக்கு அடையாளமாக விளங்கும் சிறுநாடு என்று சிலர் அதனைக் கருதுவர். ஆனால். எல்லோருமே தாம் அணிந்திருப்பது சுவிஸ் நாட்டில் செய்யப்பெற்ற கடிகாரந்தானா என்பதைக் கவனிப்பார்கள்.

சுவிட்சர்லந்து பூலோக சுவர்க்கம் போன்றது. அந்த நாட்டில் அழகு நடமாடுகிறது. நீர் மட்டுமன்று ; இலக்கியமும் விஞ்ஞானமுங் கூட அங்கே வெள்ளமாகப் பெருகியிருக்கின்றன.

எழில் மிக்க காடுகள், மலைப்பகுதிகள், கடல் மட்டத்துக்கு 700 அடி மேலிருந்து 15,400 அடி வரையுள்ள இயற்கை அமைப்புகள், ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில் சிதறியோடும் "வான் பொய்ப்பினுந் தான் பொய்யாத" ரயின் ஆறு, பல அருவிகள், இணையற்ற பெரிய ஏரிகள், இரண்டரை லட்சம் நீர் ஊற்றுக்கள், நோயைப் போக்கும் ஊருணிகள், பசுமையான வயல்கள், உள்ளக் கிளர்ச்சியைத் தரும் காட்சிகள், 16,000 சதுர மைல் (அதாவது ஐக்கியத் திருவாங்கூர்,

கொச்சி இராச்சியத்தைப் போல் ஒன்றரைப் பங்கு) பரப்புள்ள கடற் கரையில்லாத பகுதியில் "இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன" என்ற மனப்பான்மையுடைய சுறுசுறுப்பான, சுத்த மான 44 லட்சம் மக்கள் (கல்கத்தா நகரத்திலுள்ள மக்களை விடக் குறைவு) கூட்டம்—இவற்றை ஐரோப்பாவின் நடுவில், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளுக்கிடையே இயற்கை யான எல்லைகளுடன் அமைத்துக் கொள்ளுங்கள். அதுதான் சுவிட் சர்லந்து.

## ஐரோப்பாவின் இராமேசுவரம்

நோயுற்றவர்கள் உடல்நலம் பெறவும், மற்றவர்கள் பொழுது போக்கவும் பிற நாடுகளிலிருந்து சுவிட்சர்லந்துக்கு வந்த வண்ணமாக இருக்கின்றனர். இவ்வாறு, இந்நாட்டில் மூன்று லட்சத்துக்கு மேற் பட்டவர்கள் எப்போதும் காணப்படுகிறார்கள். இவர்களுக்குத் தொண்டு செய்து வாழ்க்கை நடத்தும் சுவிஸ்காரர் மிகப்பலர். இது, இராமேசுவர வாசிகள் அங்கு வரும் பக்தர்களை எதிர்பார்த்து வாழ் வதை ஒக்கும். வெளிநாட்டாரை நம்பியே, 7,000 ஹோட்டல்களும், 20,000 சிற்றுண்டிச் சாலைகளும் இச்சிறு நாட்டில் உள்ளன.

பணிவிடை செய்பவர்களுக்கு இனம் (பக்ஷீஸ்) கொடுக்கும் வழக்கம் பல நாடுகளில் உண்டு; ஆனால், சுவிட்சர்லந்தில் இந்தத் தொகை 15 சதம் வரை ஆகும். அதாவது, ஒரு காரை வாடகைக்கு எடுத்து அதற்குக் கட்டணம் ரூ 5 செலுத்தினால், கார் இயக்குபவ ருக்கு அன்பளிப்பு ரூ 0—12—0-ம் உடன் கொடுக்கவேண்டும். ஜினீவா நகரில், ஒரு கடையில் சில பொருள்களைப் பொறுக்கிவைத்து விட்டு, அவைகளுக்கு என் கணக்கில் பணம் கொடுக்கும்படி நான் தங்கியிருந்த ஹோட்டல் அதிகாரியிடம் சொன்னேன். மறுநாள், அந்தப் பொருள்களின் விலைக்கும் 15% சேர்த்துப் பட்டியல் வந்தது! பெரு முயற்சியின் பேரில் பேரம் செய்து வெற்றிபெற்றேன். இவை போன்ற சில இடையூறுகள் இருப்பினும் பிற நாட்டினரைக் காந்தம் போல் சுவிட்சர்லந்துக்கு இழுப்பது அங்கே நிலவும் சுகாதாரச் சிறப்பே யாகும்.

### சுகாதாரம்

சுவிஸ் மக்கள் மிகத்தூய்மையானவர்கள்; அகத்தூய்மை மட்டு மன்று, புறத்தூய்மையையும் அவர்களிடம் மிகுதியாகக் காணலாம்,

உடலையும், உணவையும், சுற்றுப்புறங்களையும் சிறப்பாக வைத்திருப்பது அவர்களுக்கு உடன் பிறந்த குணம். 11,523 அடி உயரத்தில், உலகிலேயே உயர்ந்த மலை ரயில் உள்ள ஜுவங்பிராவோச், மற்றும் கஸ்டாட், மாண்ட்ரீவக்ஸ், இண்டர் லேகன் போன்ற பல சுக வாசஸ் தலங்களை இந்நாட்டினர் மிகவும் பேணி வருகின்றனர். சுவிஸ் மக்களுக்கு முதிர்ந்த வயதில் செலவுக்குப் பொருள் கிடைக்கவும், நோயைக் குணப்படுத்திக் கொள்ளவும் அந்த அரசியலார் திட்டங்கள் வகுத்துள்ளனர்.

உலகின் சிறந்த வைத்தியரில் பலர் சுவிஸ்காரர்கள்; சுவிஸ்காரருள் எழுவரில் ஒருவர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுவிஸ் பல்கலைக் கழகங்கள் அனைத்துக்கும் பொதுவாக ஒரு 'செனட்டோரியம்' (Sanatorium) உண்டு. மாணவர்கள், மிகச் சிக்கனமான செலவில், உடல் நலம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இங்கே உண்டு. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகக் **கூர்சால்** என்னும் பொழுது-போக்கு இடங்களை, இயற்கையழகு நிறைந்த இடங்களில் நகராண்மைக் கழகங்கள் நிருவகிக்கின்றன. கோடை மாதங்களில், கால் நடைகளையும் மலைப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்லுவது நான் சுவிட்சர்லந்தில் கண்டு வியந்தவற்றுள் ஒன்று. ஏனவே, சுவிஸ் மக்கள் சுகாதார மேம்பாடு அடைந்திருப்பது இயற்கையே; விளையாட்டுக்கு அவர்கள் கொடுக்கும் சிறப்பும் இத்தன்மையானதே.

## விளையாட்டுகள்

சுவிஸ் நாடு முழுவதுமே ஒரு பெரிய விளையாட்டு மைதானமாக இருக்கிறது என்று கூறுவது பொருந்தும். பிரிட்டன், ஹாலந்து போன்ற சில நாட்டினர் உறைந்த பனிக்கட்டியின் மீது ஓடும் போட்டிப் பந்தயங்களை இந்த நாட்டில் தான் நடத்துகின்றனர். இதனால், இந்த நாட்டுக்கு "ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்" எனப் பெயர் ஏற்பட்டுள்ளது. உறைந்த பனிக்கட்டியின்மீது ஹாக்கி விளையாடுவது, மலைமீது ஏறிச்செல்லுவது, மீன் பிடிப்பது, படகோட்டுவது, நீந்துவது, கோல்ப் (Golf) விளையாடுவது ஆகியவற்றிலும் இந்நாட்டினருக்கு விருப்பம் மிகுதியாக உண்டு. ஆனால், இவர்களுடைய தேசீய விளையாட்டு என்று சொல்லக்கூடியது துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடுவதாகும். இப்பயிற்சியில் இவர்களை ஒப்பாரில்லை என்பதோடு, மிக்காரும் இல்லை எனலாம். **வில்லியம் டெல்** என்ற சுவிஸ்

காரர் தம் மகன் தலைமீது இருந்த ஓர் ஆப்பிள் பழத்தைப் பையனுக்குச் சிறிதும் காயமின்றி எய்த நிகழ்ச்சி பள்ளி மாணவர் அறிந்ததே. நம் நாட்டில் இராமாயண, மகாபாரதக் கதைகள் போல சுவிஸ்நாட்டில் 'டெல்'லின் புகழ் தலைமுறை தலைமுறையாக வழங்கி வருகிறது. இந் நிகழ்ச்சி நடந்த இடத்தை வெளிநாட்டினருக்குக் காட்டுவதிலும் சுவிஸ் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். இவ்விளையாட்டுக்கான உலகப்போட்டிகளில், (ஓராண்டு நீங்கலாக) முப்பது ஆண்டுகளாக ஒலிம்பிக் தங்கப் பரிசுகளை இந்நாட்டினரே பெற்றுள்ளனர். 1928-இல் பரிசு பெற்றவர் **ஷர்டாக்** என்ற அமெரிக்கர். அவருடைய பெற்றோர்கள் அமெரிக்காவுக்குச் சுவிஸ் நாட்டிலிருந்துதான் குடியேறிச் சென்றனராம் !

### படை

சுவிட்சர்லந்தின் குதிரைப் படையும் காலாட் படையும் புகழ் பெற்றவை; ஆனால் காலாட் படை என்று நிரந்தரமாக அங்கே இல்லை. இதற்குக் காரணம் மக்கள் எல்லோருமே போர் வீரராக இருப்பது தான். இருபதாவது வயதில், சுவிஸ் நாட்டினர் எல்லோரும் நான்கு மாத காலம் கட்டாய இராணுவப் பயிற்சி பெறவேண்டும். அதன்பின் ஆண்டு தோறும் மூன்று வாரங்களுக்குப் படையில் பணியாற்ற வேண்டும். இந்தத் திட்டப்படி, நாட்டுக்கு அபாயம் நேரிட்டால் 72 மணி நேரத்தில், 9 லட்சம் போர் வீரரைத் திரட்ட இயலுமாம்; போர்க் கருவிகளும் உடையும் பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படுகின்றன ; மரணம் வரை இவை அவரவரைச் சேர்ந்தவை.

### வியத்தகு நிகழ்ச்சிகள்

நிரந்தரப் படையின்றியிருப்பது போல, வேறு பல விந்தைகளும் சுவிஸ்நாட்டில் உண்டு. இவற்றுள் ஒன்று, பெண் மக்களுக்கு இன்னும் வாக்குரிமை வழங்கப்படாமல் இருப்பதாகும். இதனால், அங்கே பெண்பாலருக்கு உரிமைகளோ, செல்வாக்கோ, சலுகைகளோ, சமூக வாழ்க்கையில் அவர்களுடைய நிலையோ குறைவானது என்று கருதி விடக் கூடாது.

உலகிலேயே மிகப் பழமையான குடியரசு சுவிட்சர்லந்தே; 700 ஆண்டுகளாக அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரையுடைய குடியாட்சி அரசியல் முறை செவ்வையாகவும் சிறப்பாகவும் நடந்து வருகிறது; ஐக்கிய நாடுகள் சபையில் சுவிஸ் நாடு ஓர்

உறுப்பினராகச் சேரலாமா கூடாதா என்பதும் அந்த நாட்டு மக்களின் முடிவுக்கு விடப்பட்டது; அச்சபையில் சேரக்கூடாது என்று அம்மக்கள் பொது வாக்கெடுப்பில் முடிவு செய்தனர்.

நாட்டின் நிருவாகம் பற்றிய எல்லா அதிகாரங்களும் பொது அரசியலாரிடமே இருக்கவேண்டும் என்ற கருத்து சுவிட்சர்லந்தில் கிடையாது; மிகுதியான அதிகாரங்கள் **காண்டன்** என்னும் இராச்சிய அரசியலாரே செலுத்துகின்றனர். நாட்டின் எல்லாப் பகுதியினருக்கும் திருப்தியாக, அரசியல் தலைநகராகப் **பெர்ன்** நகரும், நீதி மன்றங்களுக்கு **லாசேன்** நகரும், பொருளாதாரத் துறைக்கு **சூரிக்** நகரும், அயல் நாட்டு விவகாரங்களுக்கு **ஜினீவா** நகரும் வணிக வாயிலாக **பால் (Basle)** நகரும், கடிகாரத் தொழிலின் தலைநகராக **பீயன்** நகரும் அமைந்திருக்கின்றன.

போரில் ஈடுபடாததாலும், போரிட்ட நாடுகளுக்குப் பொருள்களை விற்று ஊதியம் அடைந்ததாலும், சுவிஸ் நாடு பொருளாதாரத் துறையில் நன்னிலையில் இருக்கிறது; இவற்றின் விளைவாக அவர்களுடைய நாணயம் வலுவான நிலையில் இருக்கிறது; இந்த நாட்டிலேயே அமெரிக்கரும் மற்றவர்களும் தங்களுடைய சேமிப்புக்களை முதலீடு செய்துள்ளனர்.

சுவிஸ் மக்களுள் பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய இனங்களைச் சேர்ந்தவர் உண்டு. அந்த நாடுகள் ஒன்றோடொன்று போர் புரிந்த போதுங்கூட, பிரெஞ்சு சுவிஸ்காரர்களும், ஜெர்மன் சுவிஸ்காரர்களும் இரண்டறக் கலந்து வாழ்வது வேறு நாட்டில் காண இயலாததோர் அரிய நிகழ்ச்சி. பல வேற்றுமைகளுக்கிடையே நிலவும் இந்த ஐக்கிய மனப்பான்மைதான் சுவிஸ் நாட்டின்—ஏன்? எந்த நாட்டுக்கும்—மதிப்பிட முடியாத செல்வம்.

ஒரே கிறித்தவ ஆலயத்தில், கத்தோலிக்கரும், சற்று நேரத்துக்குப் பின்னர் பிராடஸ்டண்டுகளும் இறைவனை வழிபடுவதும் சுவிட்சர்லந்தில் தவிர வேறு எங்கும் நிகழாததொன்று.

சுவிஸ் என்று ஒரு மொழி கிடையாது; சுவிஸ் என்ற பெயரோடு தனித்த மொழி ஒன்று இருப்பதாக நம் நாட்டில் சிலர் நினைப்பது, 'இந்தியன்' என்று ஒரு மொழி இருப்பதாயும், அதையே எல்லா இந்தியரும் பேசுவதாயும் வெளிநாடுகளில் சிலர் தவருகக் கருது

வதைப் போன்றதாகும். ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரொமான்ச் ஆகிய மொழிகளை முறையே சுவிஸ் மக்களில் 72,20,5,1 சத விகிதம் பேசுகின்றனர். இந் நான்குமே அரசியலார் மொழிகளாக உள்ளன. சட்ட சபையில் இந்த மொழிகளில், எதை வேண்டுமாலும் உறுப்பினர் பேசுவதைக் கண்டு இன்புற்றேன். நீதி மன்றங்களிலும் இக்காட்சிகளைக் காண இயலுமென்று அன்பர்கள் தெரிவித்தனர். சுவிஸ் ஜெர்மன் வழக்கறிஞர் ஜெர்மன் மொழியில் எழுதும் நிருபத்திற்குச் சுவிஸ் பிரெஞ்சு வழக்கறிஞர் பிரெஞ்சு மொழியில் பதில் அனுப்புவதும், இருவரும் தாமே பிறர் உதவியின்றி அச்செய்திகளை அறிந்து கொள்ளுவதும் சுவிட்சர்லந்தில் நாள்தோறும் நிகழும் வியத்தகு நிகழ்ச்சிகளில் ஒன்று.

சுவிட்சர்லந்து தொலைப்பேச்சு (Telephone) கம்பெனியார், அவ்வப்போது நேரத்தைத் தெரிவிப்பதற்காக அறிவிப்பாளர் பேசுவதைப் போல, மணி நிமிஷம் விநாடி இவற்றைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பதற்கு ஒலிப்பதிவு செய்த சுருள்களை வைத்திருக்கின்றனர். எப்போது யார் 'நேரம் என்ன?' என்று கேட்டாலும், அந்த இயந்திர மனிதர் உடனுக்குடன் நேரத்தைச் சொல்லுகிறார் !

**மக்களின் பண்பாடும் குணங்களும்**

சுவிஸ் மக்கள் மிகவும் வேகமாக எந்தக் காரியத்தையும் செய்கின்றனர்; வாடகைக் கார்கள்கூட அந்த நாட்டில் மணிக்கு 100 கிலோ மீட்டர், அதாவது 65 மைல் வேகத்தில் செல்லுகின்றன. தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கடிதம் ஆகியவற்றை அனுப்ப நேரமாகிவிடும் என்பதற்காக, அவர்கள் ரசீது கொடுப்பதில்லை; தனிக்கட்டணம் கட்டி, ரசீது கேட்பவர்களுக்கு மட்டுமே அதைக் கொடுப்பது வழக்கம். ஆனால் ரசீது பெற்றுக் கொண்டாலும்,பெற்றுக்கொள்ளாவிட்டாலும், தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தபால்கள் உறுதியாக உரியவருக்குக் கிடைத்து விடும். என்னே, அவர்களுடைய நாணயம்! சுணக்கமின்றித் தபால்களை அனுப்புவதற்கு உதவியாக, எல்லா ஊர்களிலும் ரயில் நிலையத்துக்கு எதிரிலேயே தபால் நிலையத்தை அமைத் திருப்பதும் அந்த நாட்டின் மற்றொரு சிறப்பு.

ஜப்பானியர் 1945-இல் சரணடைவதாகச் சுவிஸ் அரசியலாரிடம் தெரிவித்தபோது,! அச்செய்தியைப் பதினைரு நிமிஷங்களில், அவர்

கள் அமெரிக்க அரசியலாருக்கு அனுப்பிப் போரை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனராம்! எனது டைப் ரைட்டர் கருவியில் சில எழுத்துக்களை ஒரு சிவிஸ்காரர் ஐந்து நிமிஷங்களில் மாற்றிக் கொடுத்தார்!

தமிழ் மக்களைப் போலவே, சுவிஸ் மக்களும், ஒரு சிறு பகுதி நீங்கலாக, அனைவரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கற்பனை, நகைச்சுவை யுணர்ச்சி, விருந்தினரை ஓம்புதல், இசை ஞானம், கலைப் பற்று முதலிய பண்பாடுகளை அவர்களிடமும் கண்டேன். மேலும் பண்டைத் தமிழரைப் போலவே, இன்றைய சுவிஸ் மக்களும் சிற்பக் கலையில் பேரார்வமுடையவர்களாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறிய குடும்பமே வாழ்க்கையை இன்பமயமாக்கும் என்ற அடிப்படை இரகசியத்தை சுவிஸ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர்; ஒரு சுவிஸ் அன்பர் மற்றொருவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, "அவர் குடும்பம் பெரியது" என்றார்; "எத்தனைக் குழந்தைகள்?" என்று யான் ஆவலோடு கேட்க, "மூன்று" என்று அவர் குறிப்பிட்டார்! "இது பெரிய குடும்பமா?" என்று யான் மேலும் கேட்டபோது, இரண்டு குழந்தைகள் இருப்பதே சுவிட்சர்லந்தில் அரிது என்று அன்பர் பதிலளித்தார்.

## வாழ்க்கை நிலை

மக்களின் உழைப்பு, நாட்டின் வளம், போரில் ஈடுபடாதநிலை, சிறிய ஜனத்தொகை—இவற்றின் விளைவாகச் சுவிஸ் நாட்டின் வாழ்க்கைநிலை சிறப்பாக விளங்குகிறது. இந்நாட்டு அரசியலார் 586 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தைச் சேமித்து, அதை அமெரிக்காவில் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர். பிற நாடுகளில் இவ்வரசியலார் 600 கோடி ரூபாய்க்குச் சொத்துக்களையும் வாங்கியிருக்கின்றனராம்!

## போக்கு வரவு வசதிகள்

சுவிஸ் நாட்டில் ரயில்கள் அனைத்தும் மின்சாரத்தால் இயங்குகின்றன; உள் நாட்டுக்குள் செல்லும் ரயில்களுக்குத் தனி பான்ஹாப் (ரயில் நிலையம்)பும், வெளி நாடுகளுக்குச் செல்லும் ரயில்களுக்குத் தனி பான்ஹாப்பும் அமைக்கப் பெற்றுள்ளன; பிரயாணச் சீட்டு விற்கும் இடங்களில் இருபுறமும் தட்டுக்கள் உள்ள ஒரு கருவி பொருத்தப்பட்டிருக்கிறது; பிரயாணி ஒரு தட்டில் பணத்தை வைத்ததும்,

ரயில் ஊழியர் மற்ருெரு தட்டில் பிரயாணச் சீட்டை வைப்பார்; ஒரு பொத்தானை அமுக்கியவுடன், பிரயாணியிருக்கும் பக்கத்தில் சீட்டும் ரயில் ஊழியரிருக்கும் பக்கத்தில் பணமும் கிடைக்கும்படி இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது! வெளி நாட்டார் சுவிட்சர்லந்தில் மிகுதியாகச் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வசதியாக, அந்த ரயில் நிருவாகிகளே ஏரி, மலைப்பிரயாணங்களுக்கும் ஏற்பாடு செய்திருக்கின்றனர்; 90 ரூபாய் கொடுத்து உல்லாசப் பிரயாணச் சீட்டு ஒன்றை வாங்கிவிட்டால், ஒரு திங்களுக்குச் சுவிஸ் ரயில்களில் எங்கு வேண்டுமானுலும் இரண்டாம் வகுப்பில் செல்லலாம் என்ற ஏற்பாடும் அந்த நாட்டில் உண்டு. பிரயாணச் சீட்டு வாங்கிய பின் 'பிளாட்பாரத்'துக்குச் செல்லவேண்டும் அல்லவா? குறிப்பிட்ட ரயில் எந்தப் 'பிளாட்பாரத்தில் வருகிறது என்பதை ஒருவரிடமும் கேட்க வேண்டுவதில்லை; அறிவிப்புப் பலகைகளைப் பார்க்க வேண்டுவதுமில்லை. ரயில்கால அட்டவணைப் புத்தகத்திலும், தினத்தாள்களிலும், ஒவ்வொரு ரயிலும் நிற்கும் பிளாட்பார எண் இன்னதென்று கொடுக்கப்பட்டுள்ளது. பிளாட் பாரத்திற்குச் செல்லும்போது சீட்டுகளைச் சரிபார்க்கும் பழக்கம் சுவிஸ் நாட்டில் இல்லை. பிளாட்பாரத்துக்குச் செல்லுவவற்கெனத் தனிச்சீட்டும் அங்கே கிடையாது. ஓடும் ரயில்களில் மட்டுமே, ரயில் கண்டக்டர்கள் சீட்டுக்களைப் பிரயாணிகளிடமிருந்து வாங்கிப் பார்ப்பது வழக்கம்.

புனிகுலர், ஏர்கேபிள் என்ற இருவகைப் போக்குவரவுக் கருவிகளும் சுவிஸ் நாட்டில் உண்டு. புனிகுலர் என்பது மாடிப்படிபோல், படிப்படியாக அமைக்கப்பட்டு மலைமீது செங்குத்தாய்ச் செல்லும் ஒரு வகை ரயில். ஏர்கேபிள் என்பது மின்சார 'லிப்ட்' போன்றது. ஆனுல், இது சிறிய மலையிலிருந்து பெரிய மலைக்கு மின்சாரக் கம்பி மூலம் செல்லப் பயன்படுவது. ஏர்கேபிள் வாயிலாகத்தான் கோடை காலத்தில் கால்நடைகளுக்கு உணவு அனுப்பப்படுகிறது; அவை தரும் பாலும் கொண்டுவரப்படுகிறது.

சுவிஸ் மக்களின் தேசீய வாகனம் சைகிள்தான். ரயில் பிரயாணம் செய்யும்போது, அவர்கள் சைகிளைத் தம்முடன் கொண்டு செல்வர். சைகிள்களை வைப்பதற்கென ஒரு தனி வண்டி ஒவ்வொரு ரயிலிலும் உண்டு. பொது இடங்களிலும் சாலைச் சந்திப்புக்களிலும், குறுகிய இடத்தில் ஏராளமான சைகிள்களை நிறுத்தி வைக்கத்தக்க அமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

## கல்வி

பாடப் புத்தகங்கள் வாயிலாக இன்றி, சூழ் நிலையைக் கூர்ந்து நோக்கிப் பொது அறிவைப் பெறுதல் சுவிஸ் நாட்டில் கல்வியின் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிறுவர் கல்வி மாண்டிசோரி முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்குச் சிறு கைத்தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன; மாணவர்கள் விளையாட்டுகளிலும், தொழிலிலும் படிப்பிலும் அவரவர் விருப்பப்படி செய்யவும் ஆராயவும் அக்கல்வி முறையில் வாய்ப்பு உண்டு. உயர் நிலைப் பள்ளிகள் மாணவருக்கான டிராயிங் (Drawing) பாடங்களை உயிரினக் கூடங்களிலேயே நடத்துவதையும் சூரிக் நகரில் கண்டேன். அதாவது, இந்த வாரத்தில் டிராயிங் வகுப்பில் 'மான்' படம் வரைவதாயிருந்தால், உயிரினக்கூட்டத்தில் மான் இருக்கும் இடத்தின் அருகிலேயே அவ்வகுப்பு நிகழும்; மாணவர் அந்த உயிருள்ள மானைப் பார்த்தே உயிரில்லாத மான்களை வரைவர்! கலைக்காட்சி மண்டபங்கள், பொருட்காட்சிச் சாலைகள், பூங்காவனங்கள் ஆகியவற்றுக்கு மாணவரை அழைத்துச் செல்லுவது, கூத்தாடுவது, நீந்துவது, பொம்மைகள் செய்வது, இயற்கை அழகில் ஈடுபடுவது ஆகிய நிகழ்ச்சிகளும் அரசியலாரின் எட்டு ஆண்டு இலவசக் காட்டாயக் கல்வி முறையின் உட்பகுதிகளாயுள்ளன. "பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்; சமூக உணர்ச்சியைப் பெருக்க வேண்டும்; பொறாமையை ஒழிக்க வேண்டும்; உலக அமைதிக்காகப் பாடுபடவேண்டும்" என்ற மனப்பான்மை இளைஞரிடையே வளர்க்கப்படுகிறது.

சுவிட்சர்லந்தில் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன. பல் வைத்தியம், உயினங்களுக்குச் சிகிச்சை செய்தல், பொறியியற்கலை, சித்திரக்கலை, சுரங்கம், விவசாயம், காட்டு நிருவாகம், இசை, பிரயாணிகளுக்குத் தொண்டு செய்வது போன்ற படிப்புகளும் இங்கே உண்டு. ஜினீவாவில், பிறமொழிகளில் மொழிபெயர்ப்பாளர்களாகப் பயிற்சி தரும் கல்லூரியும் இருக்கிறது; இங்கே 24 மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. சுவிஸ் பல்கலைக் கழகங்களில் கற்கும் மாணவரில் சரி பாதிப் பேர் வெளிநாடுகளிலிருந்து கல்விபயில வந்தவர்களே.

சூரிக் நகரிலுள்ள வணிகர், ஏற்றுமதி இறக்குமதிப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சிப் படிப்புக்கான கல்லூரி நிறுவி

யுள்ளனர். கடிகாரத்தொழில் சுவிஸ் நாட்டில் சிறப்பாக நிலவி வருவதற்கு நியூச்சேட்டால் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி நிலையமும் அரசியலாரின் வானிலை மண்டபங்களும் செய்யும் உதவியே காரணம்,

## தொழில்கள்

சுவிஸ் நாட்டின் மிகுதியான உற்பத்திகள்—கம்பளி, லினன். சில்க் துணிகள், வெண்ணெய், பால், அலுமினியம், இரசாயனப் பொருள்கள், ஊசி மருந்துகள், வைத்தியக் கருவிகள், படம் எடுக்கும் கருவிகள் (Camera), தொலை பார்வைக் கருவிகள் (Binoculars), இசைக் கருவிகள் ஆகியவை. ஓராண்டுக்கு 4 கோடி கடிகாரங்களும் இங்கே செய்யப்படுகின்றன. அச்சு வேலைகள் சுவிட்சர்லந்தில் மிக நன்ருகச் செய்யப்படுகின்றன. பல நாடுகள் தம் தபால் ஸ்டாம்புகளை இந்நாட்டிலேயே அச்சிடுகின்றன; நம் நாட்டில் பயன்படுத்தப்பெற்ற மஹாத்மா காந்தியடிகளின் படமுள்ள ஸ்டாம்புகள் சுவிட்சர்லந்திலேயே அச்சிடப்பட்டன. பஞ்சு ஆலைத் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களைச் செய்வதிலும், பல விதமான வர்ணச் சாயங்களைச் (Manufactured Dye Stuffs) செய்வதிலும் இந்நாட்டார் வல்லுனராயுள்ளனர்.

சுவிட்சர்லந்தில் பழ உற்பத்தியும் பால் உற்பத்தியும் மிகுதி. அமெரிக்காவில் வெள்ளி முழுவதையும் திரைப் படங்கள் தயாரிக்க ஹாலிவுட்டிலுள்ள குழுக்கள் வாங்கி விடுவதுபோலச் சுவிட்சர்லந்தில் பால் முழுவதையும் நெசில்ஸ் கம்பெனியார் சாக்லட் செய்வதற்காக வாங்கி விடுகின்றனர்.

சுவிட்சர்லந்தின் முக்கிய ஏற்றுமதி—ஆண்டுகளுக்கு 5 கோடி கிலோவாட்டு மின்சாரம்; பிரான்சு, இத்தாலி போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து மின்சாரம் செல்லுகிறதாம். அந்நாட்டின் முக்கிய இறக்குமதி—பல லட்சம் யாத்ரிகர்கள்!

சுவிஸ் மக்களின் வெளிநாட்டு வாணிகம் வளர்ந்துகொண்டே வருகிறது; 1947-ல் அவர்கள் இந்தியாவுக்கு 10 கோடி ரூபாய் பெறுமான பொருள்களை விற்றனர்; 1949-ல் இவ்விரு நாடுகளுக்கிடையே பொருளாதார உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது.

## விஞ்ஞான முன்னேற்றம்

நீரில் மூழ்கினாலும் சரி, கீழே விழுந்தாலும் சரி, கெடாதபடி ஓடிக் கொண்டிருக்கும் கடிகாரங்களை இப்போது நடை முறையில் காண்

கின்றோம்; ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்யும் போது, அந்த விமானம் எவ்வளவு வேகத்தில் பறக்கிறது என்பதை நாம் கையில் அணிந்திருக்கும் கடிகாரத்திலிருந்தே அறிந்து கொள்ளவும் இப்போது இயலும்! இத்தகைய கடிகாரங்களையும் சுவிஸ் நாட்டவர் செய்திருக்கின்றனரெனின், அவர்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்துக்கு வேறு சான்று வேண்டுமோ?

பென்சிலின், ராடார் இவைகளைப் போன்று இரண்டாவது உலகப் போரில் புகழ்பெற்றது டி. டி. ட்டி. (D. D. T.) என்னும் இரசாயனப் பொருள்; இது மலேரியா நோயை ஒழிக்கப் பயன்படுவது. உருளைக்கிழங்குச் செடியை வண்டுகள் சேதம் செய்த போது, அவற்றின்மீது சுவிஸ்காரர்கள் டி. டி. ட்டியைத் தெளித்துப் பூச்சிகளை அழித்து இம்மருந்தின் சக்தியைக் கண்டறிந்தனராம்.

### நகரங்கள்

முக்கிய நகரங்கள் சிலவற்றில் சிறிது நேரம் தங்கிவிட்டுச் சுவிஸ் பிரயாணத்தை முடித்துக் கொள்ளுவோம்.

### பெர்ன்

700 ஆண்டுகளாக, பெர்ன், சுவிட்சர்லந்தின் தலைநகராக இருந்து வந்திருக்கிறது; இது ஓர் அழகிய நகரம்; "சுவிஸ் நகரங்களுள் மாணிக்கம்" என்ற புனைபெயர் இந்நகருக்கு வழங்கி வருகிறது. இந்நகர் ஓர் ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது; சிற்பக்கலை நிறைந்த கட்டடங்கள் பலவற்றை இங்கே கண்டு களிக்கலாம். தரை மட்டத்துக்குக்கீழ் ஐந்து மாடிகளுக்கு மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடமும் இந்நகரில் கண்டின்புறத்தக்க காட்சிகளுள் ஒன்று.

பெர்னிலிருந்து சுவிஸ் நாட்டில் எந்த இடமும் 100 மைல் தொலைவில்தான் இருக்கிறது; இக்காரணத்தாலேயே, மற்றப் பெரிய நகரங்கள் இருக்க, இது தலைநகராகத் தேர்தெடுக்கப் பட்டது போலும். சுவிட்சர்லந்துக்குச் செல்லுபவர்கள் இந்நகரில் பல நாட்கள் தங்கினால், இங்கிருந்து கொண்டு ஜினீவா, லூசர்ன் ஏரிகளுக்குச் சென்று வரலாம். ஆல்ப்ஸ் மலையின் உயர்ந்த பகுதிக்கும் செல்லலாம்; சூரிசன்ஸ், லுகானோ போன்ற இயற்கை யழகு நிறைந்த பகுதிகளுக்கும் போய் வரலாம்.

பெர்னில் சுவிஸ் குடியரசுத் தலைவரின் மாளிகையும், பாராளு மன்றக் கட்டடமும் உள்ளன. இங்கே, 1949-ல் நமது முதலமைச்சர் ஜவஹர்லால் நேரு சுவிஸ் குடியரசுத் தலைவருடன் தங்கி, பாராளு மன்றத்திலும் அரியதோர் உரை நிகழ்த்தினர்; அவ்வமயம் உலக அமைதிக்குப் பாடுபடும் இந்தியாவும் சுவிட்சர்லந்தும் என்றும் நண் பர்களாக இருப்பது உறுதி என்பதை அவர் தெளிவு படுத்தினர். பெர்ன் நகரில் சுவிட்சர்லந்திலுள்ள இந்தியத் தூதரின் அலுவலகம் ஜங்ப்ரா ஸ்ட்ராசே என்ற சாலையில் நிறுவப்பட்டிருக்கிறது. இப்போது நமது தூதராக இருப்பவர் திருபாய் தேசாய் என்பவர். இவர் காலஞ் சென்ற புலபாய் தேசாயின் மகனர்.

## ஜீனீவா

முடியிழந்த மன்னர்கள், பதவியிழந்த பெரியோர்கள், பிரஜா உரிமையைப் பறிகொடுத்த பிற நாட்டவர், திரை நட்சத்திரங்கள், அகதிகள், மாண்டுபோன சர்வதேச சங்கத்திற்காக ஒரு கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட மாளிகை, உயிரோடிருக்கிற சர்வ தேசத் தொழிலாளர் ஸ்தாபனம், செஞ்சிலுவைச் சங்கம், செல்வம் பொழியும் சாலைகளும் கடைகளும், உல்லாசமான ஹோட்டல்கள்— இவைகளை ஒருங்கே கொண்ட அந்த அழகிய பூங்காவுக்குத்தான் ஜினீவா என்று பெயர்.

ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியின்போது ஓடிவந்த வர்கட்கும், பிரெஞ்சு நாட்டிலிருந்து தப்பி வந்த கவிஞர் ரூஸ்ஸோ வுக்கும் தஞ்சம் அளித்தது ஜினீவா. பிராடஸ்டண்டு மத இயக்கம் ஆதரவு பெற்றதும் இந்நகரிலேயே யாகும்; இந் நிகழ்ச்சிகளை யொட் டிய சின்னங்களும், ரூஸ்ஸோவின் சிலையும், மதப்புரட்சி வீரர் கால் வினின் சிலையும் இங்கே இன்றும் காணத்தக்கன.

## சூரிக்

சுவிஸ் நாட்டிலேயே சூரிக் மிகப் பெருநகரம்; இதன் ஜனத் தொகை $3\frac{1}{2}$ லட்சம்; இந்நகர் மேடும் பள்ளமுமான நிலப் பரப்பில் அமைந்துள்ளது. ஐரோப்பாவின் பொருளாதாரத் தலை விதியை முடிவு செய்யும் இந்த அழகிய பட்டணத்தின் வாணிகத் தெருவான பான் ஹாப் ஸ்ட்ராசியில் எப்பொருளாவது வாங்க இயலாவிட்டால், அது வேறு எங்கே கிடைக்கும்?

## பயிற்சி

1. **பொருள் கூறுக :—**

எழில், அருவி, ஊருணி, இயக்குபவர், இடையூறு, நிரந்தரமாக, நீதிமன்றம், நிருபம், பண்பாடு, பென்சிலின், ராடார்.

2. **வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—**

உடல் நலம்பெற, தொண்டுசெய், இடையூறு, நிரந்தரமாக, இரண்டறக் கலந்து.

3. **விடை எழுதுக :—**

1. சுவிட்சர்லந்து நாட்டில் பாயும் ஆறு எது ?
2. சுவிட்சர்லந்தைச் சூழ்ந்த நாடுகள் எவை ?
3. சுவிட்சர்லந்திற்கு மக்கள் செல்லக் காரணங்கள் எவை?
4. சுவிட்சர்லந்தில் உள்ள இரண்டு சுக வாசஸ்தலங்களைக் கூறுக.
5. குர்சால் என்பது யாது ?
6. சுவிஸ் நாட்டினர் விளையாடும் விளையாட்டுக்கள் எவை ?
7. சுவிஸ் நாட்டினர் எந்த இடத்தை வெளிநாட்டினருக்குக் காட்டுவதில் மகிழ்ச்சி யடைகின்றனர் ?
8. சுவிஸ்மக்கள் எந்தவயதில் இராணுவப் பயிற்சி பெறுகின்றனர் ?
9. அந்நாட்டில் காணும் ஏதேனும் இரண்டு வியக்கத்தக்க நிகழ்ச்சிகளைக் கூறுக.
10. தபால் நிலையத்தில் ஏன் ரசீது கொடுப்பதில்லை ?
11. புனிதுலர் என்பது யாது ?
12. சுவிஸ் மக்களின் தேசிய வாகனம் யாது ?
13. இளைஞரிடையே எத்தகைய மனப்பான்மை வளர்க்கப்படுகிறது?
14. சுவிட்சர்லந்தில் கிடைக்கும் பால் முழுவதையும் வாங்குவோர் யாவர் ? ஏன் ?
15. D. D. T. யின் பயன் யாது ?
16. ஜினிவாவில் வாழ்வோர் யாவர் ?

# 9. சர்க்கரை

(திரு R K. விஸ்வநாதன் அவர்கள், M.A.)

முன்னாளில் நமது இந்திய நாடே சர்க்கரை உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தது. இது முதலில் மருந்தாகப் பயன்பட்டுப் பின்னர் உணவுப் பொருளாக ஆயிற்று. நம்மைக் காட்டிலும் வட இந்தியாவிலுள்ளவர்கள்தான் நாள் தோறும் சர்க்கரைப் பண்டங்களை மிகுதியாக உட்கொண்டு வருபவர்கள். அதிலும் வங்காளிக்குத் தான் இதில் மிகுந்த விருப்பம். அவர்கள் உணவில் இரண்டு வேளையும் சர்க்கரைப் பண்டங்கள் இல்லாமல் இரா. ஒரு சமயம் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் சர்க்கரை ஏற்றுமதி ஆகி வந்தது. அந்நிலைமை மாறி அயல் நாடுகளிலிருந்து சர்க்கரையைப் பெருவாரியாக இப்பொழுது நாம் இறக்குமதி செய்து வருகின்றோம். சர்க்கரையைத் தரும் கரும்புப் பயிர் வளர்வதற்குத் தகுந்த நிலம் இந்திய நாட்டில் தான் மிகுதி. இதற்கு வேண்டிய சூடு, நீர்வசதி, நிலஉரம் முதலியவை இங்கு மிகுதியாயுள. இப்பொழுது உலகின் பல இடங்களில் கரும்புப் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. முக்கியமாகத் தென் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் மக்கள் மிகுதியாகக் கரும்பைப் பயிர் செய்து வருகிறார்கள். ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளிலும் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. கரும்பில் பல வகைகள் இருக்கின்றன. யானைக் கரும்பு என்னும் வகை முதற்கொண்டு குச்சிக் கரும்பு என்னும் வகை வரை எண்ணற்ற வகைகள் இருக்கின்றன.இவையனைத்தும் நன்றாக வளர்வதற்கு வேண்டிய சோதனைகள் கரும்புப் பண்ணைகளில் நடந்து வருகின்றன. இச்சோதனைகளில் சிலவற்றைச் செய்து, ஸர். டி. எஸ். வேங்கடராமன் என்பவர் எளிதில் கரும்பின் வகையை உயர்த்தும் வழியைக்கண்டு பிடித்தார். இதன் பயனாக நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி பெருகிச் செல்வ நிலை உயர்ந்தது என்று கூறப்படுகிறது.

நன்றாக வளர்ந்த கரும்பில் நூற்றுக்கு எழுபது பங்கு தண்ணீரும், பதினெட்டுப் பங்கு சர்க்கரையும், பத்துப் பங்கு "செலுலோஸ்" என்று கூறப்படும் மூல தாவரப் பொருளும் இருக்கும். கரும்பை நசுக்கிச் சாறு எடுத்து அதைக் காய்ச்சிச் சர்க்கரையாக மாற்ற வேண்டும். சிற்றூர்களில் எண்ணெய் எடுப்பதற்குப் பயன்

பட்டுவரும் செக்குகள் போன்றவற்றைக் கொண்டு இன்னும் பல இடங்களில் கரும்பிலிருந்து சாறு பிழிந்து வருகிறார்கள். செக்குகளில் மாடுகளைப் பூட்டி ஓட்டுவதற்குப் பதிலாக, மேனாட்டில் காற்றின் விசை அல்லது நீரின் விசையைப் பயன்படுத்திய காற்றாடியைக் கொண்டு இச்செக்குகளைச் சுற்றி வந்தார்கள். இக்காலத்தில் நீராவி இயந்திரத்தால் சுற்றப்படும் உருளைகள்தான் இவ்வேலைக்குப் பல இடங்களில் பயன்பட்டு வருகின்றன. இதனால் சாறு சிறிதும் சேதமாகாமல் எடுக்கப்படுகிறது. நசுக்கும்போது கரும்புகளை நீராவியினால் தாக்கி நசுக்குவார்கள்; கரும்புச் சக்கையை வீணாக்காமல் அதையே பயன்படுத்தி நீரைக் கொதிக்க வைப்பார்கள்; இதற்கென்று தனி முறையில் அடுப்பையும் செய்திருக்கின்றார்கள். வேண்டுமென்ற போது சக்கைக்குப் பதிலாகக் கரியையோ அல்லது மரக் கட்டையையோ பயன்படுத்திக் கொள்ளுமாறு அந்த அடுப்பு அமைந்திருக்கும். சாறு எடுக்கப்பட்ட பின்னர் அதில் மிதக்கும் தூசி முதலியவை இயந்திரத்தைக் கொண்டு நீக்கப்படும். இந்த இயந்திரத்திலுள்ள உருளைகளின்மீது உருளும் நீண்ட சல்லடை அமைப்பினால் மிதக்கும் பொருள்களெல்லாம் நீக்கப்பட்டு விடுகின்றன. இச் சல்லடையின் துளைகள் மிகச் சிறியவை யாதலால் சாறு மிகத் தெளிவாக மாறிவிடுகிறது. இதில் கரைந்துள்ள அசுத்தங்களையும் முக்கியமாகக் காடியையும் நிவர்த்தி செய்வதற்குச் சுண்ணாம்புத் தண்ணீரைச் சேர்த்துக் காய்ச்சுவார்கள். சேர்க்க வேண்டிய சுண்ணாம்புத் தண்ணீரின் அளவும், காய்ச்சப்பட வேண்டிய நேரமும், சூடும் சாறுக்குத் தகுந்தபடி மாறும். சுண்ணாம்பு, தண்ணீரின் மாசுகளை எல்லாம் மேலே மிதக்கச் செய்யும். சிறிது நேரம் கழித்து அதை வடிக்கட்டி மிதக்கும் மாசுகளை நீக்கி விடுவார்கள்.

சாற்றிலுள்ள சர்க்கரையை மட்டும் பிரிக்கவேண்டுவது அடுத்த வேலை. இதற்காகச் சாறு காய்ச்சப்படும். நீர் கொதித்து ஆவியாக வெளிப்பட்டுவிட்டால் சர்க்கரையை மட்டும் பிரித்துவிடலாம். இங்கே கொதித்தல் நிகழ்ச்சியைப் பற்றிய விவரம் ஒன்றைக் கூறவேண்டியிருக்கிறது. பெரும்பாலும் எல்லாத் திரவங்களும் ஆவியாக மாறும் தன்மை வாய்ந்தவையே. ஆனால் சில திரவங்கள் மிக விரைவில் ஆவியாகிவிடும். சான்றாக "ஸ்பிரிட்" என்னும் திரவம் மிக விரைவில் ஆவியாகிவிடும். இத்துணை விரைவில் தண்ணீர் ஆவியாக

மாறுது. தண்ணீரைக் கொதிக்க வைத்துத்தான் அதை ஆவியாக மாற்ற முடியும். அதைக் காய்ச்சத் துவங்கியதும் அதன் சூடு உயர்ந்து கொண்டே சென்று ஒரு நிலையில் நின்றுவிடும். இச்சூட்டையே கொதி நிலைச் சூடு (Boiling point Temperature) என்று கூறு வார்கள். சாதாரணமாகத் தண்ணீரின் கொதிநிலைச் சூடு சென்டி கிரேடு திட்டத்தில் நூறு டிகிரி இருக்கும். இதைப்போல ஒவ்வொரு திரவத்துக்கும் ஒரு கொதி நிலைச் சூடு உண்டு. இக்கொதி நிலைச் சூடு திரவப் பரப்பின் மீதுள்ள இறுக்கத்துக்குத் (Pressure) தகுந்தவாறு வேறுபடும். இறுக்கம் மிகுதியானல் கொதி நிலை உயரும். இறுக்கம் குறைந்தால் கொதி நிலை தாழும். சாற்றிலுள்ள நீரை அகற்றவேண்டு மானல் அதன் மீதுள்ள இறுக்கத்தைக் குறைத்துக் கொண்டுதான் கொதிக்க வைப்பார்கள். எனவே நூறு டிகிரிக்குக் குறைந்த சூட்டி லேயே சாற்றிலுள்ள நீர் ஆவியாக மாறும்படி செய்யப்படும். நீர் நன்ருகச் சுண்டியவுடன் அதன் நிறத்தைப் போக்குவதற்கென்று நன்ருகப் பொடி செய்யப்பட்ட எலும்புக்கரி (Bone Charcoal) யின் மூலம் அதைச் செலுத்துவார்கள். இவ்வேலை மிகவும் முக்கிய மானது. இதற்காக எலும்புக் கரியைச் சிறந்த முறையில் ஆலைகளி லேயே செய்வார்கள். விலங்குகளின் எலும்புகளை உடைத்து, அவற்றிலுள்ள கொழுப்புப் பொருள்களை ஈதர், கரிகந்தகத் திரவம் (Carbon-di-Sulphide), பென்ஸீன் (Benzene) முதலிய திரவங் களால் கரைத்து முதலில் அவற்றை நீக்கிவிடுவார்கள். மிகுதியுள்ள பொருளை நீராவியைக் கொண்டு சூடு செய்து அதிலிருந்து கோழை போன்ற பொருள்கள் (Colloids) யாவும் பிரிக்கப்படும். இவ்விதம் துப்புரவாக்கப்பட்ட ஏலும்புகள் மீண்டும் இரும்பு உலைகளில் காற் றுப்படாமல் சூடு செய்யப்படும். இதனல் இதில் எஞ்சியுள்ள சேதனப் பொருள்கள் முழுவதும் வெளியேறிவிடும். சில வாயுப் பொருள்களாகவும் மற்றும் சில திரவங்களாகவும் பிரிந்துவிடும். தங்கி நிற்பதுதான் எலும்புக்கரி. இதை இயந்திரத்தினுல் பொடி செய்தபின் இப்பொடியே சர்க்கரையைத் துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட சர்க் கரைப் பாகு ஸ்படிக உரு (Crystallisation) கொள்ளுமாறு செய்யப்பட்டுச் சர்க்கரையாக்கப்படுகிறது. இதைச் செய்வதற்குப் பாகை மறுபடியும் குறைந்த இறுக்கத்தில் கொதிக்க வைத்து, குளிர் வித்துச் சர்க்கரை இறுகும்படி செய்யப்படுகிறது. பின்னர் இதை

நொறுக்கிச் சீரான தூளாக ஆகுமாறு சுழற்சி இயந்திரம் (Centrifugal Machine) பயன்படுத்தப்படுகிறது. இத்தொழிலின் துவக்கம் முதல் இறுதி வரை பல தொழில் நுட்பங்கள் உண்டு. எனவே ஒவ்வொரு சமயத்திலும் வேலை சரியாக நடந்து வருகிறதா என்று கண்காணித்துக் கொண்டு வருதல் வேண்டும்.

ஐரோப்பாவில் பீட் (Beet) என்னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை உற்பத்தி ஆகிறது. முதன் முதலில் ஒரு ஜெர்மன் விஞ்ஞானிதான் இக்கிழங்கில் சர்க்கரை இருப்பதை உணர்ந்தார். எனவே இம்முறை முதலில் ஜெர்மனியில்தான் சிறப்படைந்தது. அமைப்பில் இக்கிழங்கு முள்ளங்கிக் கிழங்கைப்போல் இருக்கும். நன்றாகப் பயிர் செய்யப்பட்ட கிழங்குகளில் நூற்றுக்கு எண்பது பங்கு நீரும் பத்துப் பங்கு சர்க்கரையும் இருக்கும். கிழங்குகளின் உயர்வு தாழ்வை அவற்றிலிருந்து பெறப்படும் சாற்றின் செறிவைக் (Density) கொண்டு அறியலாம். சர்க்கரை மிகுதியுள்ள கிழங்குகளின் சாறு மிகுந்த செறிவுகொண்டிருக்கும். கரும்புப் பண்ணைகளில் செய்வது போல இவற்றையும் பண்ணைகளில் பயிராக்கி முதல் வகைக் கிழங்குகள் உற்பத்திக்கு வேண்டிய விவரங்களை அறிந்து வருகின்றார்கள் இக்கிழங்கு கண்டு பிடித்த புதிதில் இதில் மிகக்குறைந்த அளவுக்குத் தான் சர்க்கரை இருந்தது. ஆனால் இக்காலத்தில் பயிர் செய்யப்படும் கிழங்குகளில் சர்க்கரையின் அளவு முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு மிகுந்துளது. இக்கிழங்குகளிலிருந்து சாறு எடுக்கப்படும் வகையினை இப்பொழுது பார்ப்போம் :

முதலில் கிழங்குகளிலிருந்து இலைகள் வேர்கள் முதலியவை நீக்கப்படும். பின்னர் இவை நன்றாகக் கழுவப்பட்டு இயந்திரத்திலிட்டுச் சிறிய வில்லைகளாகத் துண்டிக்கப்படும். இதைச் செய்யும் இயந்திரம் சாதாரணமாக ஒரு நாளில் நூறு டன் கிழங்குகளை வில்லைகளாகச் செய்து விடும். ஒரு வில்லையின் கனம் ஒரு அங்குலத்தில் நூற்றில் நான்கு பாங்கு இருக்கும். அகலம் சுமார் அரை அங்குலம் இருக்கும். நீரிட்ட பெரிய பாண்டங்களில் இவ்வில்லைகள் போட்டுக் கொதிக்க வைக்கப்படும். நீரின் மேலுள்ள இறுக்கத்தைத் தக்கவாறு குறைத்துக் கொண்டுதான் கொதிக்க வைக்கப்படும். இதனால் நீர் வில்லைகளினுள் செல்லும். வில்லைகளிலிருந்து சர்க்கரைச் சாறு வெளிப்படும். இந்நிகழ்ச்சியைப் பரவுதல் (Diffusion) என்று கூறு

வார்கள். வெளியிலிருக்கும் நீரின் செறிவும் உட்சென்ற நீரின் செறிவும் சரிசமானமாகும்வரைகொதிக்கவைக்கப்படும். இதனல் சர்க்கரை சத்து முழுவதும் கிழங்குகளிலிருந்து நீக்கப்பட்டு நீருடன் கலந்து விடும். கரும்புச்சாற்றைத் துப்புரவு செய்தது போல இதையும் துப்புரவு செய்வார்கள். இதனுடன் சுண்ணும்புத் தண்ணீரைக் கலந்து காய்ச்சி, எலும்புக்கரி மூலம் செலுத்தி, மறுமுறை காய்ச்சி, குளிர்வித்து ஸ்படிக உருவை அடையச் செய்து சர்க்கரை உற்பத்தி செய்வார்கள். இதன் இனிப்பு கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையை விடக் குறைவுதான். இதில் சில உப்புக்கள் (Potash-Salts) பிரியாமல் சிறிதளவு தங்கிவிடுவதால் இதன் இனிப்புக் குறைந்து விடுகிறது. மாப்பசையிலிருந்தும் (Starch) சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு மாப்பசையைக் கந்தகக் காடியுடன் (Sulphuric Acid) கலந்து கொதிக்க வைப்பார்கள். நீண்ட நேரம் கொதிக்க வேண்டும். பின்னர் இதில் தங்கியுள்ள காடியை நீக்கி விட்டுக் கரும்புச்சாறு, பீட் கிழங்குச்சாறு இவற்றைத் துப்புரவு செய்தது போலவே இதையும் துப்புரவு செய்வார்கள். இவ்வாறு சர்க்கரையை உற்பத்தி செய்வதில் செலவு குறையும் என்று கூறப்படுகிறது. மற்றும் சர்க்கரையைப் பழங்களிலிருந்தும், பாலிலிருந்தும், ஈச்சஞ் சாறு பனஞ் சாறு முதலிய வேறு சாறுகளிலிருந்தும் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொருவிதச் சர்க்கரையையும் சிறிது நீரில் கரைத்து அதன் மூலம் ஒரு வித ஒளியைச் (Plane Polarised Light) செலுத்தி, அதன் போக்கில் ஏற்படும் மாறுதலை உணர்ந்து சர்க்கரையின் இனிப்பு அளவைக் கணக்கிட்டு விடுவார்கள். இதனல் ஆலைகளில் சர்க்கரைகளின் இனிப்பு அளவு மிக்க விரைவில் கணக்கிடப்பட்டு விடும்.

சர்க்கரையை உற்பத்திசெய்யும் ஆலைகளில் அதன் கழிவுச்சரக்குகளை வீணுக்குவதில்லை. குளிர்விக்கும் போது சர்க்கரைப் பாகில் சிறிது பாகம் ஸ்படிக உரு ஆகாமல் தங்கிவிடும். இதில் சிறிதளவு புரை (Yeast) சேர்த்துச் சிறிது நேரம் வைக்கப்படும். புரையுடன் கலந்த பாகு சாராயமாகவும் (Alcohol), கரியமிலவாயு (Carbon-di-Oxide) வாகவும் பிரிந்து விடும். சாராயம் நீருடன் கலந்து விடுவதால் அதைக் காய்ச்சி வடித்தல் (Distillation) முறையினுல் பிரிக்கப்படும். கரியமிலவாயுவையும் வீணுக்குவதில்லை. சோடாத் தண்ணீர்முதலிய பானங்கள் செய்வதற்கு அது பயன்படும்.

சர்க்கரை உற்பத்தியில், அதைத் துப்புரவு செய்து பகட்டாகச் செய்வதில்தான் செலவு மிகுதியாகிறது என்றும், பகட்டாகச் செய்யாமல் வெல்லமாகச்செய்து பயன்படுத்துவதில் கெடுதல் ஒன்றுமில்லை என்றும் சிலர் கூறுகிறார்கள்; இதனால் இத்தொழிலையும் குடிசைத் தொழில்களில் ஒன்றாக ஏன் செய்யக்கூடாது என்றும் கருதுகிறார்கள். சிற்றூர்களிலுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவு வெல்லத்தைத் தாங்களே செய்துகொள்வதில் தடை ஒன்றுமிராது; விஞ்ஞானத்தின் துணைகொண்டு பெருத்த அளவில் சர்க்கரை செய்வதில்தான் பல நன்மைகள் உண்டு.

I. **பொருள் கூறுக :—**

திரவம், இறுக்கம், ஸ்படிகம், கண்காணித்துக் கொண்டு.

II. **வாக்கியத்தில் அமைக்க :—**

முன்னாளில், ஏற்றுமதி, பெருவாரியாக, வடிகட்டி, இத்துணை, துப்புரவாக, நொறுக்கி, கண்காணித்து, செறிவு.

III. **விடை எழுதுக :—**

1. இந்தியாவில் அதிகமாய்ச் சர்க்கரையை உபயோகிப்பவர் யார் ?
2. உலகத்தில் கரும்பு பயிரிடப்படும் நாடுகள் எவை ?
3. சர்க்கரை எப்பொருள்களிலிருந்து செய்யப்படுகிறது ?
4. கரும்பில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன ? அவை எந்த அளவில் உள்ளன ?
5. கம்ருபுச் சக்கையை எவ்வாறு உபயோகிக்கிறார்கள்?
6. சாற்றில் கரைந்துள்ள அசுத்தங்களை எவ்வாறு போக்கலாம் ?
7. மிக விரைவில் ஆவியாகும் திரவம் எது ?
8. கொதி நிலைச்சூடு என்பதை விளக்குக.
9. கொதிநிலைச்சூடு உயரக் காரணம் என்ன ?
10. சர்க்கரை செய்வதில் எலும்புக்கரியின் பயன் யாது ?
11. எலும்புக்கரியைத் தயார் செய்வது எப்படி ?
12. பீட் கிழங்கில் சர்க்கரை இருப்பதை உணர்ந்தவர் யார் ?
13. பீட் கிழங்கிலிருந்து எவ்வாறு சர்க்கரை செய்கிறார்கள் ?

# 10. தோற்ற வேற்றுமை

திரு. G. வேங்கடராமன், M. A., M.Sc., L.T.,

பார்க்கவும், பார்க்கப்படவும் வெளிச்சம் அத்தியாவசியமானது. ஜீவராசிகளுக்கு வெளிச்சம் சூரியனிடமிருந்தோ, சந்திரனிடமிருந்தோ, நக்ஷத்திரங்களினிடமிருந்தோ தான் வரவேண்டும். மனிதன் ஒன்றைப் பார்க்கிறனென்றால், அப்பொருளிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியின் அடர்த்தி, பொருளின் உருவம், அதன் நிறம், இருக்கும் தூரம் முதலியவைகளை அறிந்து கொள்கிறன். இதற்குக் காரணம் மூளை யின் விருத்தியே; கண்கள் உதவிக் கருவிகள் மட்டும்தான். பல் வேறு ஜீவராசிகளில் ஒவ்வொன்றினுடைய மூளையும் ஒவ்வொருவித மாக இருப்பதுடன், அவைகளின் கண்களினமைப்புகளும் வித்தி யாசப்படுகின்றன. அதனால் ஒவ்வொரு ஜந்துவுக்கும் உலகம் எப் படித் தோன்றும் என்று அறிய வேண்டாவோ!

## பகலில் உலாவும் பிராணிகள்

பகலிலுலாவும் பிராணிகளும், இரவிலுலாவும் பிராணிகளும் இவ்வுலகிலிருக்கின்றன. நல்ல வெளிச்சத்திலேயே பார்க்கக்கூடிய பிராணிகளுக்குள் நாமும் ஒன்று. இருந்தாலும் பழக்கத்தால் கிராம வாசிகளில் சிலர் நல்ல இருட்டிலும் பார்க்கப் பழகிக்கொண்டிருக் கின்றனர். பட்சிகளில் சிலவற்றைத் தவிர, மற்றவையெல்லாம் பகலிலேயேதான் அங்குமிங்கும் பறந்து தீனி தேடித் திரிகின்றன; பொழுதுபோகு முன்னரே தம் இருப்பிடத்தைச் சேர்ந்துவிடுகின்றன. அவைகளின் தெளிவான தூரப்பார்வை மிகக் கூர்மையானது. பருந்து வட்டமிடுவது பூமியில் ஊர்ந்து செல்லும் சிறு பிராணிகளைப் பிடித்துத் தின்னவேதான். வெளிகளிலும், தோட்டங்களிலும், உல்லாசமாகப் பூக்களைத் தேடித் திரிந்துகொண்டிருக்கும் வண்ணத்திப் பூச்சிக்கு அதிக வெளிச்சம் தேவை. ஒரு மேகம் சூரியனைச் சற்று மறைத்தால் கூட, பூக்களைக் காணமுடியாமல், அது இறகுகளை மடக்கிக்கொண்டு மேகம் போகுமளவும் உட்கார்ந்துகொண்டிருக்கும்.

## இரவில் உலாவும் பிராணிகள்

இரவில் வெளிக்கிளம்பும் பிராணிகளாகிய ஆந்தை, வௌவால், கோட்டான் முதலியவைகளுக்குப் பகல் வெளிச்சத்தில் ஒன்றும் தெரி

யாது. அவைகளின் கண்கள் கூசும்; எல்லாம் ஜகத்ஜோதி மயமே. பூனை, எலி, மீன்கள் முதலியன இரவிலும், பகலிலும், நல்ல இருட்டிலும், நல்ல வெளிச்சத்திலும் தெளிவாகப் பார்க்கின்றன. மேற்கூறிய எல்லாவற்றினுடைய கண்களமைப்பும் அநேகமாக ஒரேமாதிரிதான்; கண் திரையில் (Retina)தான் வித்தியாசம். கண் திரையில் இருவிதமான உயிரணுக்கள் இருக்கின்றன; ஒன்று தடிவடிவானது (Rods); மற்றொன்று கூம்பு வடிவானது (Cones). இரவிலுலாவும் பிராணிகளின் கண்திரையில் மங்கிய வெளிச்சத்தையும் காணும் சக்தியுள்ள தடிவடிவ உயிரணுக்களே அதிகம். அம்மாதிரி தடிவடிவ அணுக்களனேகம் நம் கண் திரையோரங்களிலே இருக்கின்றன. அதனால் இருண்ட ஆகாயத்தில் ஓர் மங்கிய சிறு நக்ஷத்திரத்தை நன்கு காணத் தலையைச் சற்று ஒரு பக்கமாகச் சாய்க்கவேண்டும்.

## குவியம் (Focus)

கண் பார்வைக்கு வில்லை (lens) அவசியம். கண்ணாடி வில்லைக்கும், கண்ணுக்குள்ளிருக்கும் உயிர் வில்லைக்கும் ஓர் வித்தியாசமுண்டு. கண்ணாடி வில்லையின் குவியத்தொலையை (Focal length) மாற்றமுடியாது. உயிர் வில்லைக்குத் தானாகப் பருத்தோ, மெலிந்தோ, 'குவியத்தொலையை' மாற்றிக்கொள்ளும் சக்தி இருக்கிறது. அதனாலேதான் தூரத்திலிருக்கும் ஒரு மரத்தையும், அடுத்த விநாடியே புத்தகத்திலிருக்கும் சிறு எழுத்தையும் தெளிவாகப் பார்க்கமுடிகிறது. எல்லாப் பிராணிகளுக்கும் இது முடியாது. சுறுமீனின் கண்வில்லை கண்ணாடி வில்லையைப்போன்றது. இம்மீன் தெளிவாக எதையும் பார்க்க, வில்லையின் குவியத் தொலைதூரம்வரை நீந்திச் செல்லவேண்டும். பிறகேதான் காண்பது விரோதியா, இரையா என்று தெரியும். தவளையும், தேரையும் தெளிவான பார்வைக்கு முன்னும் பின்னும் போவதற்குப் பதிலாகக் கண்களை வெளியே தள்ளியும், உள்ளே இழுத்தும் பார்க்கின்றன.

## படம் பதிவியல் (Photographic) கண்களும், கன உருக்காட்டி (Stereoscopic) கண்களும்

முயல், குதிரை, மீன் இவைகளுக்குக் கண்கள் பக்கங்களிலிருப்பதால் முன்னிருப்பவைகளையும் ஒரே சமயத்தில் சர்வ சாதாரணமாகப் பார்க்கின்றன. இரு கண்களும் முகத்தின் முன்புறத்தில் நமக்கிருப்பதுபோலிருந்தால், ஒரு பொருளை இரு கண்களும் ஒரே சமயத்

தில் பார்க்கும்பொழுது, அப்பொருளின் கனஉரு தெரிகிறது. பிறவியி லேயே ஒருவனுக்கு ஒரு கண் குருடாக இருந்தால் அவனுக்குப் பொருள்களின் கனஉரு தெரியாது; எல்லாம் படங்களில் காணும் சித்திரங்களைப் போல்தானிருக்கும். அதேமாதிரி, பக்கங்களிலிருக்கும் கண்களை உடைய மிருகங்கள் பொருள்களை நாம் காணும் சலனப் படங்கள் மாதிரியே பார்க்கின்றன. நம்மைப்போல் கன உருவையும் பார்க்கமுடியும் மிருகங்களிற் சில பூனை, புலி, சிங்கம், குரங்கு, ஆகியவையுமாம்.

## நிறங்களின் உண்மை

ஆடு, மாடு, நாய், நரி, யானை, பூனை முதலிய நாற்கால் பிராணி களுக்குப் பல நிறங்களையும் பகுத்தறியும் சக்தி கிடையாது. எல்லா நிறங்களும் அவைகளின் கண்களுக்கு வெள்ளையும், கறுப்பும், அதன் சாயைகளுமாகத்தான் தெரிகின்றன. நிறங்களற்ற உலகிலே வாழும் இம்மிருகங்களின் நிறங்களும் வெள்ளை, கறுப்பு அல்லது பழுப்பாகத் தானிருக்கின்றன. ஆனால் குரங்குகளுக்குமட்டும் பல நிறங்களையும் பகுத்தறியும் சக்தியுண்டெனப் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடித் திருக்கின்றனர். பல நிறங்களும் கலந்த அழகான பட்சிகளின் சிறகு களைக்கண்டு ஆனந்திக்காதவர் இல்லை. பட்சிகளில் ஆண்களே அழகு நிறைந்தவை. அந்த அழகைப் பெண் பட்சிகள் பார்க்கின்ற னவா? பழங்களையே ஆகாரமாகக் கொண்டிருக்கும் சில பட்சிகள் பழ நிறங்களைப் பார்க்கின்றனவா? இதைப் பரீட்சிக்கச் சுலபமாக ஒரு பரிசோதனை செய்யலாம். ஓர் இருட்டு அறையில் கண்ணாடி முக்கோண உருட்டின் (Prism) வழியாக நல்ல வெளிச்சத்தைவிட்டு, தரையில் வான வில்லில் காணும் நிறங்களை விழச்செய்ய வேண்டும். சிறுதானியங்களைத் தரையில் சமமாகத் தூவிவிட்டு ஒரு கோழியை உள்ளேவிட, சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை நிறங்களாகக் காணும் தானியங்களைப் பொறுக்கித் தின்றுவிடும்; நீலம், ஊதா நிறங்களாகக் காணும் தானியங்களைப் பொறுக்குவதில்லை. ஊதா நிறத்துக்கு அடுத்தாற்போல் ('ultra violet') கதிர்கள் இருக்கின் றன. நம் கண்ணுக்கு அவை புலப்படுவதில்லை. தேனீயின் கண்கள் இந்நிறத்தைப் பார்க்கின்றனவாம். நிறமாலை (Spectrum)யின் மறு முனையில் சிவப்புக்கு அடுத்தாற்போலிருக்கும் ('Infra-red') கதிர்கள் நம் கண்ணுக்குத் தெரியா, இக்கதிர்களையும் பதிவுசெய்யும்

புகைப்படத் தட்டுகளை உபயோகப்படுத்தி, மூடுபனி அதிகமாக இருக்கும்பொழுது படம் பிடித்தால் தெளிவாக எல்லாம் தெரியும். ஆந்தையின் கண்களுக்கும், எறும்பின் கண்களுக்கும் இக்கதிர்கள் தெரிகின்றனவென்றால், அவைகளின் கண்களுக்கு உலகம் எப்படித் தெரியும் என்று நம்மால் ஊகிக்கவும் முடியாமலிருக்கிறது. பரிசோதனைகள் மூலம், தேனீ வெள்ளையை நீலங்கலந்த பச்சையாகவும், சிவப்பைக் கறுப்பாகவும், இளஞ் சிவப்பை நீலமாகவும் பார்க்கிறதெனக் கண்டுபிடித்திருக்கின்றனர். தேனீ பார்க்கும் உலகில் வெள்ளை நிறம் கிடையாது ; எல்லாம் பல நிறங்களடங்கியதே.

## பார்வை

மிக்க தூரத்திலிருக்கும் மரங்கள், மலைகள், மேகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப் பார்க்கும் சக்தி நமக்கு இருக்கிற மாதிரி, பிற ஜீவன்களும் அப்படியே பார்க்கமுடியுமா வென்றால், ஒவ்வொன்று பார்ப்பதும் ஒவ்வொரு விதத்தில் வினோதமாக இருக்கிறது. அநேகமாக எல்லாப் பூச்சிகளும் மூன்றடி தூரத்திற்குள் இருப்பவைகளையேதான் பார்க்கமுடியும். அவைகளின் கண்களுக்கு உலகில் பெரிய பொருள்களே கிடையா. பூச்சிகளின் கண்களைக் கலப்புக் கண்கள் (Compound eyes) என்று சொல்லுகிறார்கள். அநேக சிறு கண்கள் சேர்ந்ததே ஒரு கலப்புக்கண். தலையின் இருபக்கங்களிலும் இரு பெரிய கண்களிருக்கின்றன. அதனால் முன்னும், பின்னும் பக்கங்களிலும் பார்க்கமுடிகிறது. தேனீ, வண்ணாத்திப்பூச்சி, தும்பி போன்ற அதிவேகமாகப் பறந்து செல்லும் பூச்சிகளின் கண்கள் சலனத்தைக் காணுமாறு நன்றாக விருத்தியடைந்திருக்கின்றன. புகை வண்டியில் நாம் வேகமாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஜன்னல் வழியாக வண்டியோடும் பக்கம் பார்த்தால் ஒன்றுமே சரியாகத் தெரிவதில்லை. ஓர் உருவம் கண்திரையில் பட்டு அதை அறிந்து கொள்ளுமுன், மற்றோர் உருவம் அதற்குமேல் படுவதே காரணம். ஆனால் மணிக்குப் பத்து மைலுக்குமேல் வேகமாகப் பறக்கும் மேற்கூறிய பூச்சிகள் ஒவ்வொரு நொடி நேரத்திலும், கலப்புக் கண்ணின் ஒவ்வொரு தொகுதியே வேலை செய்வதால் உருவங்களைத் தெளிவாகப் பார்க்கின்றன. கம்பளிப் புழுவுக்கு ஆறு ஜோடி கண்களிருந்தபோதிலும் அதன் உலகம் தானிருக்கும் செடிதான். ஒன்றரை அங்குல தூரமே அதற்குத் தெரிகிறது. சிலந்தியின் கண்களுக்கு

எல்லாமே மங்கல். நத்தை எட்டி எட்டிப் பார்த்தாலும் ஓர் இலைக்கு மேல் பார்க்க முடியாது.

தான் பார்க்கும் உலகம்தான் உண்மையானது என்று ஒவ்வொரு பிராணியும் எண்ணிக்கொண்டிருக்கிறது. நாமும் அப்படியே எண்ணுகிறோம். ஆனால் உண்மை எது ?

**1. ஆசிரியரைக் கேட்டு அறிக :—**

வில்லை (lens); குவியத்தொலை (Focal length), முக்கோண உருட்டி (prism); நிறமாலை (spectrm.)

**2. வாக்கியத்தில் அமைக்க :—**

அத்தியாவசியமானது, கூம்புவடிவம், பரிசோதனை, பரீட்சிக்க, பதிவுசெய்தல், கதிர்கள்.

**3. விடை எழுதுக :—**

1. பெரும்பாலும் பறவைகள் பொழுதுபோகு முன்னரே இருப்பிடத்தை அடைகின்றன. ஏன் ?
2. பருந்து வட்டமிடக் காரணம் யாது ?
3. இரவில் உலாவும் பிராணிகள் எவை ?
4. கண்திரையில் உள்ள உயிரணுக்கள் எவை ?
5. கண்ணாடி வில்லைக்கும், கண்ணுக்குள்ளிருக்கும் உயிர் வில்லைக்கும் உள்ள வித்தியாசம் யாது ?
6. சுறுமீன் தெளிவாகப் பார்க்கவேண்டுமானால் யாது செய்யும் ?
7. குதிரையின் கண்கள் பக்கங்களில் இருப்பதால் அதற்கு ஏற்படும் நன்மை யாது ?
8. நிறங்களைப் பகுத்தறியும் சக்தி எப்பிராணிகளுக்கு இல்லை ?
9. கோழி எந்நிறங்களை அறிவதில்லை ? இதனை அறிய என்ன பரிசோதனை செய்யலாம் ?
10. நிறமாலையில் எக்கதிர்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை ?
11. எல்லாப் பூச்சிகளும் எவ்வளவு அடி தூரத்திற்குள் உள்ள பொருள்களைப் பார்க்கமுடியும் ?
12. நத்தை எவ்வளவு தூரம் பார்க்கமுடியும் ?

# 11. வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

திருவாளர். சிவ. குப்புசாமிப்பிள்ளை அவர்கள்

## இயல் 2. காட்சி 3.

**உறுப்பினர் :**—அதியமான், ஔவையார், காவலன்.

**இடம் :**—தகடூர்ப்புறம்.

**பொழுது :**—நடுப்பகல்.

### அதியமான் ஔவைக்கு நெல்லிப்பழம் தருதல்

**அதியமான் :**—அம்மையே வருக! வருக!! தங்களைப் பிரிந்திருந்த இந்நாட்கள் எனக்குப் பல ஆண்டுகளாகத் தோன்றின. ஆமாம், தாங்கள் ஏன் நான் இவ்வாறு வெளிச்சென்று வருவதற்குள் என் இல்லத்தில் இருக்காது தனியே இப்படி வருகின்றீர்கள், அங்கு ஏதாவது தங்கள் நெஞ்சம் வருந்துமாறு நிகழ்ந்ததோ?

**ஔவையார் :**—அன்புடை அதிக! அவ்வாறு எனக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை; நான் சற்றுமுன்தான் இங்கு வந்தேன். நின்னைக் காணவேண்டுமென்னும் பேரவா என்னைப் பிடர் பிடித்து உந்த நின் மாளிகையினுட் சென்றேன். நின் தேவியும் மற்றைய தோழியர்களும் என்னைக் கண்டதும் பணிந்து, முகமன்கூறி வேண்டுவன யாவும் திட்டம் செய்தனர். ஆயினும் நீ இல்லாது அவற்றைப் பெற என் நெஞ்சம் விழையவில்லை. எனக்குற்ற களைப்பையும் பொருட்படுத்தாது, நீ வரும் வரையில் இருக்க உளங்கொண்டேன் எனினும், என் நெஞ்சம் அமைதியுறவில்லை. ஆதலால் சற்றுப் பொழுது கழியும் பொருட்டு நீ வரும் வழி நோக்கி வந்தேனேயன்றி வேறெதுவுங் கருதியன்று.

**அதியமான் :**—தங்கள் முகத்தை நோக்கின் தாங்கள் மிகவும் களைப்புற்றிருப்பது தெரிய வருகின்றது. இதோ, இப்பழத்தை முதலில் உண்ணுங்கள். களைப்பை இஃது உடனே மாற்றும். (நெல்லிப் பழத்தை ஔவை பெறுதல்)

**ஔவையார் :**—இஃதென்ன நெல்லிக்கனியா? நாவறட்சியைப் போக்குதற்கு இஃதொரு நல்ல பொருளே. (சுவைத்து உண்ணல்) ஆ! என்ன சுவை! இத்தகைய் நெல்லிப் பழத்தை நான் என்றும்

உண்டதில்லையே. தெவிட்டாத அமுதம்போலக் குறைவுபடாத இனிய சுவையுடனிருக்கிறதே. இஃது எங்குள்ளது ?

**அதியமான் :**—அன்னையே! புலனழுக்கற்ற சான்றோர் ஒருவர் என்பால் எழுந்தருளினர். அப்பெரியார் என்னிடம் கொண்ட பெரு விருப்பத்தினால் இப்பழம் தோன்றும் இடத்தைக்கூறி, இதனை உண்ணு மாறு பணித்தார். இஃது உண்டவர்களை உலகில் நெடுநாள் வாழ் விக்கும் வலிமையுடையதாகும். ஆதலால், தங்களைக் கண்டவுடன் எனக்கு, என்னினும் " தாங்களே இவ்வுலகத்துக்குப் பயன் உள்ள வர்கள்," என்ற எண்ணமும் விரைந்து தோன்றிற்று. தாங்கள் இந் நிலவுலகில் நெடு நாள் உயிர் பெற்று வாழ்வதால் இந்நாட்டின் பல பகுதிகளிலும், தங்களது திறமைமிக்க மொழி நலத்தைப் பருகி, நன்னிலை பெற்றுய்ய வாய்ப்புண்டு. அதற்கு மாறாக எம்மனோர் தம் வாழ்நாளைப் பெருக்குவதால் ஏற்படும் பயன், தன்னலத்துடனேயே ஆகும். இவை கருதியே உலகு அவாவும் உயரிய புலமை பெற்ற தங்கட்கு, யான் அரிதிற் பெற்ற இப்பழத்தை மனமுவக்க நல்கினேன்.

**ஔவையார் :**—(வியப்பு மேலிட) என் அருமருந்தாய அன்ப! நின்பால் ஊற்றெடுத்துத் தோன்றுங் கொடைத் திறத்தால் உற்ற அன்பின் போக்கை அளவிட்டுக்கூற எவராலாகும்? நீ என்னிடம் கொண்டுள்ள எல்லையில்லாப் பேரன்பிற்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன் ?

**அதியமான் :**—தமிழ்த்தாயே ! வருக! நம் இல்லம் செல்லலாம். உணவு கொண்டபின் நாம் யாவும் பேசலாம். (அதியமானும் ஔவை யும் செல்லுதல்)

**வாயிற் காவலன் :**—(தனித்து நின்று நெட்டுயிர்ப்புவிட்டு) என்ன நட்பு! ஔவை என்ற சொல்லை முடிப்பதற்கு முன்னேயே, எங்கள் வேந்தர் - 'எங்கே' என்று கூடக் கேட்பதில்லை.—'வருக! வருக !! தாயே வருக !!!' என்றன்றோ அழைக்கின்றார். முப்பது நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அவரைக் காணாது ஏங்கி, ஏதோ ஓர் ஆண்டு பெரும் பிணியால் துயருற்றாரைப் போலவே இருந்தார் - அது தொலையட்டும் - இரண்டு நாட்களாகக் கல்லென்று மில்லை; முள் ளென்றுங் கிடையாது; முழங்காலைப் பிடித்துக் கொண்டும் என்னால் ஏறமுடியவில்லை; நடையாய் நடந்தோம்; நுழையாத இடமெல்லாம் நுழைந்தோம்; அப்பப்பா, நானும், எங்கள் ஐயாவும் பட்ட துன்பம்

இருக்கிறதே, அடடா, 'சொல்லி முடியாது. எங்கள் குதிரை மலை உச்சியிலே - ஏ, அப்பா! கீழே விழுந்தால், கருமத்துக்குக்கூட ஓர் எலும்புங் கிடைக்காது.—என்ன செங்குத்தான நெடும் பாறை! அங் கிருந்து மெதுவாக ஒரு குகைக்குள் நுழைந்து கடைசியில் ஒருவாறு கண்டு பிடித்தோம் அந்த மரத்தை. கண்டதும் ஆகிவிட்டதா? அதைச் சுற்றிலும் தேள் கொடுக்குப்போன்ற முள்களுடன் எத் தனையோ வகையான புதர்கள் கிட்ட அணுக முடியாதவாறு சூழ்ந்து கிடந்தன. எங்களுக்கு மேலெல்லாம் காயம் - எப்படியோ துன்பத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டு தத்தித்தடுமாறி மரத்தின் மேல் ஏறினோம்; ஏறினால்! அங்கே என்ன இருந்தது? அந்த மரம் ஒரு பழம் தான் பழுக்குமாம். அதுவும் எத்தனையோ ஆண்டுகளுக்கு ஒரு தடவைதானும்! என்ன துன்பம் ஐயா! கிளை கிளையாகத் தேடி னோம்; இலை இலையாகப் பார்த்தோம். கடைசியில் எங்கள் தலைவர் தான் பழத்தைக் கண்டார் - பொறுக்க முடியாத மகிழ்ச்சி - உண வைக் கூடப் பிறகு விரும்பவே இல்லை - கொண்டு சென்றவை எல் லாம் நானே சாப்பிடுமாறு முடிந்தது. இப்படியெல்லாம் - பகீரதன் கெட்டானே-எத்தனையோ பாடுபட்டுத் தேடிக் கொணர்ந்த பழத்தை- கைக்குக் கிட்டியது வாய்க்கு எட்டாதது போல, இல்லத்துக்கு வருவ தற்குள்ளாகவா இந்தக் கிழவி எதிர்ப்படுவாள்! அட, போகட்டும்; மிகுந்த அன்புள்ளவளாக இருக்கலாம். அவளாவது ஒரு பாதிப் பழத்தை 'நீங்கள் உண்ணுங்கள்' என்று எங்கள் மன்னர்க்குச் சிறி தும் எனக்குச் சிறிதுமாகத் தந்திருக்கலாமல்லவா? கொடுத்தவுடன் அப்படியேயா தின்று விழுங்கி விடுவாள்?...........என்னவோ, பேசி இனி என்ன ஆகும்! கொடுத்து வைத்தவள் கொட்டையோடே சாப் பிட்டாள். ஏமாந்த பேதை நான் இப்படியே போகிறேன். (வருத்த மாகச் செல்லுதல்)

## இயல் 3. காட்சி 1.

**உறுப்பினர்** :—ஔவையார், அதியமான்.

**இடம்** :—அதியமான் மாளிகை.

**பொழுது** :—மாலைப்போது.

(அதியமான். ஔவையாரைத் தொண்டைமான் பால் தூது போகவேண்டுதல்)

**ஔவையார்** :—வெற்றி மிகும் தப்பாத வாளினை ஏந்தியவனே! போரில் பகைஞர் மடியுமாறு அழித்த வீரவாள் மிளிரும் கைகளை

யுடையவனே! மிக்க மகிழ்ச்சிக்குரிய மதுவினையுடைய அதியர் தலைவ! எதிர்த்தவரைப் போர் முனையிற் கொல்லும் வீர வாழ்வும், பொன் மாலையும் அணிந்த அஞ்சி வேந்த! நீ, பழைய பெரிய மலையினில் எவரும் அடைய முடியாத உயரத்து இரு பிளவுகளின் இடையே தோன்றிய சிறு இலைகளைப் பெற்ற நெல்லியின் பழத்தை, அஃதுண்டவரடையும் பெரு வாழ்வை யுணர்த்தாது, பால்போன்ற பிறை நிலா நெற்றி மீது விளங்கும் திருமுடியையும், நீலமான அழகிய கழுத்தையுமுடைய, ஒப்பற்ற முதல்வனும் சிவபெருமானைப்போல, நான் சாகாமலிருக்குமாறு எனக்குத் தந்து மகிழ்ந்தனையே !

**அதியமான்** :—அம்மையே ! ஒன்றுக்கும் பற்றாத யான் உண்டு உலகுக்குச் சுமையாவதினும், உலகு அவாவும் விழுமிய கல்விச் செல்வம் படைத்த தாங்கள் வாழ்தல் சிறப்பன்றோ ?

**ஒளவையார் :**—காவல் மதில் சூழும் பல அரண்களை வென்ற நெடுமான் அஞ்சி ! யாழ்போல இனிய ஓசையும் பெறாது; இசைக்குரிய கால அளவும் கூடியிராது; பொருளும் உணர இயலாது; ஆயினும், பிள்ளையின் மழலை மொழிகள் தந்தைக்கு அன்பு நிலை ஆகின்றன. அதுபோல நீ அருள் புரிதலால் எனது வாய்ச்சொற்களும் அவ்வாறே அமைகின்றன. மேலும் என்னை ஒத்த புலவர்கள் தமது நெஞ்சை நோக்கி, 'உண்ண விரும்பும் நெஞ்சமே! நீ பரிசுக்காக வருந்தாதே; யாம் ஒரு நாள் மட்டும் செல்லாது, இரண்டு நாள் மட்டும் போகாது, எத்தனையோ முறை, பல நண்பர்களோடு சென்று பழகினாலும், முதல் முறையாகப் பெற்ற அன்பைப் போலவே, அணிகள் பூணப்பெற்ற ஆனையையும் இயலும் தேரையும் உடைய அதியமான், எப்போதும் பெற்றுளான். பரிசு பெறுகின்ற நாள் கூடினாலும் குறைந்தாலும், யானை தன் பெரிய கொம்புகளின் நடுவே வைத்துள்ள ஒரு வாய் உணவு போல அப்பரிசு நம் கையிலிருப்பதேயாகும். அது பொய் அன்று. 'அவன் திருவடி வாழ்க', என நாளும் வாழ்த்தி வருவது பொய்க்குமா ?

**அதியமான் :**—அன்னாய்! 'எட்டுத் தேர்களை ஒரே நாளில் செய்யும் தச்சன், ஒரு திங்கள் முயன்று முடித்த ஒரு தேரின் கால் போன்ற வலிமையுள்ளவன்,' எனவும், 'அணி வகுக்கப் பெற்றனவும் முன்னதாகச் செல்வனவும் ஆய படைகளால்அவனுடன் போர் புரிவோம் என மொழியும் சொற்களை ... சிறந்த வலிமையால் மேன்மை பெற்று

விளங்கும் நீண்டவேலினைப் பெற்ற மழவர்களின் பெருந் தலைவனும், ஒளிமிக்க, தொழில் நுட்பமுள்ள அணிகள் அழகு செய்யும் மார்பனும், போர்க்கள வேள்வியால் நல்ல சிறந்த போரினைப் புரியும் முழவம் போன்ற வலிமையான தோளைப் பெற்றவனும் ஆய, என் தலைவனைக் காண்பதற்கு முன்னதாகவே, எத்தகையவராக இருப்பினும் காப் பாற்றிக் கொள்ளுங்கள்,' எனவும் பலவாறு என்னைத் தாங்கள் புகழ்ந்துரையாடினும் என் உள்ளம் அவற்றைக் கேட்டும் அமைதியுற வில்லை. மலையன் ஒரு திசையிலும், மூவேந்தர் மற்றொரு புறமும், இன் னொரு பக்கம் திதியன், பொருநன், எருமையூரன், இருங்கோவேள் என்பவர்களும் என்மீது நாளும் அழுக்காறும் வஞ்சமும் கொண்டவர் களாக உள்ளனர். போதாக் குறைக்குக் காஞ்சித் தொண்டைமானும் என்னை வெறுக்கின்றனனும்.

**ஔவையார்** :—பெரும! ஊர்ச்சிறுவர்கள் தன் வெண்மையான கொம்புகளைக் கழுவுமாறு நீர்த்துறையினில் அடங்கியிருக்கும் பெரிய யானை போலப் புலவர்களாகும் எங்கட்கு இனியனாகின்றாய்; பின்னர் அவ்யானை பிறர் அணுகமுடியாதவாறு பெற்ற மதங்கொண்ட நிலை மையைப் போல, உன்பகைவர்களுக்கு நீ கொடியவனாகின்றாய். இச் செய்தி உலக மறிந்திருக்க, ஏனோ அம்மன்னர்பொருட்டு நீ கவலை யுறவேண்டும் ?

**அதியமான்** :—அம்மே! தாங்கள் என் சொலினும் என் திடம் கொண்ட நெஞ்சம் இதுபோது விடங் கொண்ட மீனைப் போலக் கலங்குகின்றது. எனக்குற்ற உழுவலன்பன் எனக் கருதப்பெற்ற காஞ்சித் தொண்டைமானும் மாற்றலர் தம் கூட்டுறவால், சார்ந்ததன் வண்ணமாகி எமது முன்னைய நட்பு மேன்மையையும் எவ்வாறோ மறந் தனன். அவன் செயலே என்னைப் பெரிதும் வருத்துகின்றது.

**ஔவையார்** :— எழுமரம் போன்ற முழந்தாளினைத் தொடுகின்ற பெரிய கைகளோடுற்றவனே! தவறாத வலிய கைகளையுடைய மழவர் களின் தலைவனே! முறிந்த வளை போன்ற மலர்ந்த காந்தட்பூ இலை மிக்க மல்லிகையோடு மணம் வீசும் மலைச்சாரிவினுள்ள கடும் புலி சீறி னால், அதனை எதிர்க்கும் மான் கூட்டங்களும் உண்டோ ? ஞாயிறு வெப்ப முற்றுத் தோன்றும் போது மருண்டவானத்தும் திசைகளிலும் செறிந்த இருள் நிறையுமோ ? அச்சு உரசிப் பார்மீது படிய நகர்ந்த, பண்டம் நிறைந்த வண்டியுருளையின் அழுந்திய நிலையைப் பொருட் படுத்தாது, மணல் வரிகள் சிதறவும் கற்கள் பொடி படவும் நடக்கும்

பெரு மிதங்கொண்ட வலிமை மிக்க எருதுகளுக்குச் செல்லமுடியாத வழிகளு முண்டோ? அதுபோல, நீ போர்க்களம் புகுந்தால், பெரிய உலகமாகிய நிலத்தைப் பெற்று ஆரவாரம் செய்யும் வீரர்களும் உளரோ? எனவே, மன்ன! நீ எதன்பொருட்டும் கவலற்க; உன் நெஞ்சம் விழைவதை என்பால் கூறின் யான் இயன்றன ஆற்றுவன்.

**அதியமான் :**—எம்மனோர்க்கு உற்ற துணையாய் தாயே! என் பொருட்டுத் தாங்கள், காஞ்சி வேந்தனை தொண்டைமான்பாற் சென்று, அவனது நட்பு எனக்கு என்றும் இருக்குமாறு செய்ய வேண்டும். எனது கருத்துக்கு இயைந்த அவனது கூட்டுறவு என்னை இன்னும் மிகுந்த வலிமை பெற்றவனாக்கும். இதுவே எனது உளம் நிறைந்த விருப்பமாம்.

**ஔவையார் :**—அன்புடையாளனோடு உண்டு உறவு பெற வல்லவனே! போர் முறையிலும் கொடைத்திறன் கெடாதவனே! அறிவிலாதாரும் மகிழ்வோடு நின்னையே துணையாகக்கருதும் பெரு நிலை படைத்த நெடுமான் அஞ்சியே! நீ வீட்டின் இறவாணத்தில் செருகப் பெற்ற தீக்கடை கோல் போல நினது வலிமை வெளிப்படவேண்டாத நாளில் அடங்கி வாழ வல்லவனாகின்றாய். இன்றும் அத்தீக்கடை கோலால் கக்கப்பட்டு வெளியாகும் காட்டுத்தீயை ஒப்ப, நீ விரும்பிய போது மிகவும் வலிமை பொருந்திய வீரனாகவும் விளங்குகின்றாய். ஆதலால் எம் நண்ப! நீ வளமையிற் குறைந்தா யெனக்கருதி அஞ்சற்க. நின்னை வெல்வார் எவரும் ஈண்டில்லை; இஃதுறுதியே. யானும் இன்றே தொண்டை மான்பாற்சென்று, அவனும் நீயும் நேர்மையுற்ற நேசராக நெடிதுவாழ முயலுவேன். கவலற்க. வாழ்க மன்ன! வாழ்க நின்கொற்றம்! செல்கின்றேன்; விடைதருக.

**அதியமான் :**—தாயே! வணக்கம். அவ்வாறே ஆகுக. என்றும் நீங்கா என் நன்றியையும் அன்பினையும் ஏற்றருள்க.
(நின்று கைகூப்பி வணங்குதல்).

## இயல் 3, காட்சி 2.

**உறுப்பினர் :**—காஞ்சி நகர் வேந்தன் தொண்டைமான் இளந்திரையன்; ஔவையார்.

**இடம் :**—காஞ்சி மன்னன் மாளிகை.

**பொழுது :**—மாலைப்போது.

(ஔவையார் தொண்டைமானை அஞ்சியின் நண்பனாக்குதல்.)

தொண்டைமான் :—விறலியர் தலைவீ! அதியனது நாட்டில் என்னோடு போரில் வெற்றி கொள்ளும் வீரர் உளரோ ?

ஔவையார் :—போர்ப்படை மிகுந்த வேந்தே! எமது நாடு, அடிக்கும் கோலுக்கு அஞ்சாமற் சீறி எதிர்த்து வரும் பாம்புபோல, வலிமை பெற்ற இளமை மிக்க வீரர்களைப் பெற்றது. இன்னும் பொதுமன்றத்தில் கொட்டுவாரற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும் முழவம், காற்றின் அசைவினால் சிறிதளவு ஓசையை எழுப்பினும் போர்ப் பறையின் முழக்கம் அஃது எனக் கருதும் எம் தலைவனும் உளன்.

தொண்டைமான் :—நன்று, என் அன்னையே! தாங்கள் எளியனின் போர்ப்படைக் கூடத்தைக் கண்ணுற்றீர்களோ ?

ஔவையார் :—அன்ப! நன்கு கண்டு மகிழ்ந்தேன். படைக்கலக் கொட்டிலிலுள்ள உன் படைக் கலன்கள் யாவும் மயிற்றோகையால் அலங்கரிக்கப் பெற்றுள்ளன; மாலைகள் சூட்டப் பெற்றும் உள. அவற்றின் உடலிடந் திரண்டுள்ள வலிய காம்புகள் அழகு பெற அமைக்கப் பெற்றுள்ளன. இன்னும் நெய் தடவப் பெற்றுக் காவல் பெற்ற அகன்ற நகரத்தேயும் உள்ளன. ஆனால் செல்வம் வந்தபோது உணவு அளித்து, இல்லாத நாளில் தாம் பெற்றதைப் பலரோடுங்கூடி உண்ணும் வறிஞர்களின் உறவினர்க்குத் தலைவனாய, எம் அதியமான்-அஞ்சி மன்னனின் கூர்மையான நுனியையுடைய வேல், பகைவர்களைக் குத்துவதால் கங்கு நுனிமுறிந்து கொல்லனது சிறிய உலைக் களத்தில் கிடக்கின்றன.

தொண்டைமான் :—தமிழ்ப் பெருமாட்டியே! நும் அஞ்சி என்னினும் வலியன் ஆவனோ? நன்று கூறினீர். பல்லாண்டு போர்ப் பயிற்சியும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற என்பால் அவனது திறமை என்ன ஆகும் ?

ஔவையார் :—மறவீர்! பாதுகாமின், யாம் கூறுகின்றோம். ஊர்ச்சிறார்கள் ஆடுவதனால் கலங்கக் கூடிய காலினது அளவேயுள்ள குறைந்த நீரினில், இழுக்கும் வலிமை பெற்ற முதலை, யானையைக் கொன்று வீழ்த்தும். அஃது ஒத்தவன் நம் தலைவன் அஞ்சி; அவனது நுணுக்கமான பலசெயல்களைக் கருதிப்பாராது 'இளைஞன் அவன்' என மதியாது பேசினால், நீவிர் வெல்வது அரிதாம்.

**தொண்டைமான் :**—தமிழன்னாய்! அதியமான் நெடு மானஞ்சி, காஞ்சித் தொண்டைமான் இளந்திரையனை விடப் போர்ப் படை பெற்றவன் என்பதுதானே தங்கள் உள்ளக் கிடக்கை.

**ஔவையார் :**—அன்பு கெழுமிய வேந்தே! வேற்றுமை நாடாது யான் கூறுவதன் பொருளைச் செவி மடுப்பாய்-அன்ப, உங்கள் இருவரையும் யான் நன்கு உணர்வேன். நீவிர் இருவீரும் ஒத்த நலனும் வலிமையும் கொண்டவர்கள் என்பது திண்ணம். ஆயினும் அஞ்சி பேராற்றல் படைத்தவன்; நீயோ, பெரும் படைகொண்டவன். ஆதலினால் நீவிர் இருவீரும் உம்முள் எவர் வலியவர் என நாட விழைவது நலனன்று. அதற்கு மாறாக யான் விரும்புவது ஒன்றுண்டு. நீ தடை செய்யாது, யாவர் நலனையுங் கருதி யுடன்படுவாயானால், அதனைக் கூற ஆணை தருக.

**தொண்டைமான் :**—தமிழச் செல்வி! உலகு இன்புறுதற்கு ஏதுவாய ஒன்றினை, யான் என்றும் தடை செய்யேன். எனது இயல்புக்கு உரித்தாயின், யான் தங்களது ஆணையை மறுக்கேன். இஃது உறுதியே.

**ஔவையார் :**—கற்றவரைக் காக்கும் காஞ்சித்தலைவ! நீ நெடிது வாழ்க. ஒரு நாள், யான் ஒரு சிறு சோலையை அடைந்தேன். அஃது ஓர் அரிய பாலைவெளியி லிருந்தது. அவண் வாழ்ந்த ஒரு விறலி எளிய நிலையில் இருந்தாள்; அவள் கைகளில் சில வளையல்களே காணப் பெற்றன. இன்னும், பதலை என்ற ஒலிப்பறை ஒருபாலும், முழுவம் என்ற அகத்துளை பெற்ற மற்றொரு கருவி மற்றோரிடத்திலும், கொட்டி ஒலி எழுப்புவாரற்றுத் தொங்கிக்கொண்டிருந்தன. கொடுப்போர் இன்மையால் அவளது 'திருவோடு' ஒன்றுமில்லாமற் கவிழ்ந்துகிடந்தது. 'என் பசிக்குரிய உணவால் இக்கடிஞையை நிரப்புவார் உண்டோ?' என அவள் கூறியிருந்தாள். அஃது அறிந்த யான். 'ஏ! விறலீ! மிக்க அருகிலுள்ள ஓர் ஊரில் பல வேற்படைஞருடன் அஞ்சி என்ற மன்னன் உள்ளான்; போர்முனையில் பகைவரின் ஊர்களைச் சுடுவதால் எழுகின்ற புகை, மலைகளைச்சுற்றி வரும் கரிய முகில் போன்று அவன் யானைகளைச் சூழ்ந்துவரப் பகைவரின் நாடுகளை வென்றவன் நீ, அவன்பாற்சென்று வழிபட்டால், என்றும் ஓயாமல் உண்ணுதற்குரிய கொழுப்பு மிக்க உணவால் உனது திருவோடு தேனடை போலப் பசை யுற்றிருக்க, உலகம் வறண்டு போகும் நாளிலும் உன்னைப் புறக் கணியாது பாதுகாப்பான். அவன் தன் திருவடி வாழ்க', என அவளை

ஆற்றுப்படுத்தினேன். ஆதலால் பெரும! எம்போன்ற புலவர்கள். பாடுதற்குற்ற பெருமைபெற்றவனுய அவனது தொடர்பு நினக்கு மிகவும் வேண்டற்பால தெனவுணர்க.

**தொண்டைமான் :**—தமிழ்த்தேவி! அதற்காக யான் என்ன செய்யவேண்டும்? மிக்க புகழ்பெற்றவனுக அவன் இருப்பின், யான் வலியச்சென்று புகவேண்டுமோ?

**ஔவையார் :**—அற்றன்று, அரசே! அவன் சிறந்தவன்; வீரன்; புகழால் மிக்கவன்; இன்னும் நட்புக்கு மிகவும் உரியவன், அத் தகைய அஞ்சி இதுபோது, நின் நட்புப் பேற்றை நாடுகின்ருன். நீ. ஏதேனும் அவன் பால் சிறிது பிணக்கங் கொண்டிருப்பினும், இது போது அதனை அறவே நீக்கி, அவனுக்குற்ற உழுவலன்பினன் ஆக வேண்டும். இஃதொன்று தான் என் உளங்கொண்ட வேண்டுகோ ளாகும்.

**தொண்டைமான்:**—தமிழ்த்தாயே! தாய் சொல் தடுத்தல் சேயர்க் குத் தகுமோ? தங்கள் கருத்துப்படியே ஆகுக. எம் இருவரது நட்பும் நாளும் முற்பக்கத்து மதியம் போலப் பெருகிவளரத் தாங்களே துணை புரியவேண்டும். இனி எனக்கு என்ன குறை?

**ஔவையார் :**—இனிய நன்மொழிகளும் இன்ப வாழ்வும் கொண்ட எம் வேந்தே! நின் இனிய தேன் போன்ற மொழிகள் எனது உள்ளத்தை மிகவும் களிக்கச் செய்கின்றன. இன்று இவ்வுலகில் என்னினும் பேறு பெற்ருர் எவரும் இல்லை யென்பேன். வாழிய மன்ன! நினதுவாழ்வு ஓங்குக! நின் புகழ் நிலைபெறுக! நீயும் நெடு நாள் பன்னலமுஞ் சூழ வாழ்வாயாக!

### பயிற்சி

**பொருள் கூறுக .—**

பேதை, நெட்டுயிர்ப்பு. விழுமிய, உழுவலன்பன், கவலற்க, பாலை வெளி, மதியம்.

**I. விடை கூறுக:—**

1. பெறுதற்கரிய நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தது என்?
2. நெல்லிக் கனியுண்ட ஔவையார் அதியனை எவ்வாறு பாராட்டினர்?

3. அதியனுக்காக ஔவையார் செய்த உதவி யாது ?
4. ஔவையார் தொண்டைமான் மனத்தை எவ்வாறு மாற்றினர் ?
5. நெல்லிக்கனி பற்றி வாயிற் காவலன் தனக்குள் கூறிக்கொண்டது யாது ?
6. இப்பாடப் பொருளை உளங்கொண்டு 'பண்டைத் தமிழ் மன்னரும் புலவரும்' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை வரைக,

# எங்கள் தமிழ்க் கோவை

(முதற் புத்தகம்)

சிறப்புப் பகுதி

தொகுப்பு ஆசிரியர் :

**உயர்திரு. T. S. அருணாசலம் பிள்ளை, B.A., L.T.**

தலைமை ஆசிரியர், போர்டு ஹைஸ்கூல், நாச்சியார் கோயில், தஞ்சை ஜில்லா.

**உயர்திரு. N. நஞ்சப்பா M.A., B.O.L., L.T**

தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல், பாப்பிரெட்டிபட்டி, சேலம் ஜில்லா

**உயர்திரு. வித்துவான் G. சந்திரமௌலீஸ்வரன்**

தமிழ் ஆசிரியர்,

லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.

**விந்தியா வெளியீடு**

**1/1, பெரியண்ண மேஸ்திரி தெரு.**

**சென்னை—1.**



[விலை 12 அணா

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

# முன்னுரை

**'எங்கள் தமிழ்க் கோவை'** என்னும் பெயரோடு வெளிவரும் இக்கோவை நூல்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நான்கு - ஐந்தாம் படிவங்களில் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்களாக அமைவதற்குரியனவாகும். மண்டலமொழி முதன்மொழியாக்கப் பட்ட பின்னர், அந்நிலைக் கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாடவியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கியும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப்புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங் களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக்கெனப் பாடவியலில் குறிக்கபட்டுள்ள அளவினும் சிறிது மிகுதியாகவே செய்யுட்களும் உரை நடைப் பாடல்களும் சேர்க்கப் பட்டுள்ளன. ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும் மாணவர் களின் தகுதிக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துவதற்கு இடமிருக்கவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும் உரைநடைப் பாடங்கட்குப் பயிற்சி வினாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சியும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவதாக வெளிவரும் இக் 'கோவை' நூல் வரிசையை ஆசிரியர் களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான், ம. வி. இராகவன், வித்துவான் எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகங்கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட் களையும் கட்டுரைகளையும் இக்'கோவை' வரிசையில் கோத்துக் கொள்ள இசைவு தந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# உள்ளுறை

## செய்யுள்



## உரை நடை

# எங்கள் தமிழ்க் கோவை

## முதற் புத்தகம்

## சிறப்புப் பகுதி

---

## செய்யுள்

### I. கடவுள் வாழ்த்து

#### 1. நற்றிணை

மாநிலஞ் சேவடி யாகத், தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கையாக,
விசும்புமெய் யாகத், திசைகை யாகப்,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக,
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப,
தீதற விளங்கிய திகிரி யோனே. 1

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

#### 2. குறுந்தொகை

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித், திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக், குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்,
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்று லுலகவே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

### குறிப்புரை

குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலத்திற்கும் உரிய சிறந்த ஒழுக்க முறையை விளக்கிக் கூறுவதால் இந் நூல் நற்றிணை எனப் பெற்றது. சங்கப் புலவர்கள் பாடிய தொகை நூல்கள் அடங்கிய எட்டுத் தொகையில் இது முதலாவது. எட்டுத் தொகையில் அடங்கிய நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு. புறநானூறு என்பன.

நற்றிணையில் திருமால் வாழ்த்தாக அமைந்த இச் செய்யுளை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர்.

### அருஞ்சொற்கள்

சேவடி —(செம்மை + அடி.) சிவந்த அடிகள், தூநீர் வளைநரல் பௌவம் — தூயநீரையுடைய சங்குகள் ஒலிக்கின்ற கடல், உடுக்கை — ஆடை, விசும்பு — ஆகாயம், சுடர் — சூரியன், இயன்ற எல்லாம் — அமைந்த எல்லா உயிர்களிடமும், பயின்று — பொருந்தி, திகிரி — சக்கராயுதம்.

### குறிப்புரை

குறுந்தொகை — இது எட்டுத் தொகையைச் சேர்ந்த நூல்களுள் ஒன்று. குறுகிய அடிகளையுடைய பாக்களைக் கொண்டு தொகுக்கப்பட்டதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

குறுந்தொகையில் முருகக் கடவுள் வாழ்த்தாக அமைந்த இச் செய்யுள் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் இயற்றப்பட்டது.

### அருஞ்சொற்கள்

தாமரைபுரையும் — செந்தாமரை மலரைப்போன்ற, காமர் — அழகிய, திகழ் ஒளி — விளங்குகின்ற ஒளி, குன்றி ஏய்க்கும் உடுக்கை — குன்றி மணியைப்போன்ற சிவந்த ஆடை, குன்றின் — கிரௌஞ்சம் என்ற பெயருள்ள மலையின், நெஞ்சு — நடுவிடம், பக — பிளவுபட, ஏமம் வைகல் — இன்பமுடைய நாட்களை, எய்தின்று - அடைந்துள்ளது.

### பயிற்சி

I விடை எழுதுக :—

(1) எட்டுத் தொகையைச் சேர்ந்த நூல்கள் எவை ?

(2) அவை எப்பொழுது இயற்றப்பட்டன ?

(3) வேத முதல்வன் யார்?

(4) கடவுளுக்கு அடியாகவும், உடுக்கையாகவும், கண்ணாகவும் அமைந்தவை எவை?

(5) முருகன் எத்தகைய திருவடிகளை உடையவன்?

(6) அவன் மேனியின் நிறம் யாது?

(7) அவன் வேலின் சிறப்பு யாது?

(8) குன்றிமணி எதற்கு உவமையாக வந்தது?

(9) முருகன் கொடி யாது?

(10) சேவலங் கொடியோன் காப்பதால் உண்டாகும் நன்மை யாது?

II (1) சேவடி, பசுங்கதிர், பயின்றகத் தடக்கிய, குன்றியேய்க்கும், சேவலங்கொடியோன்—இத்தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(2) I தாமரை புரையும் காமர் சேவடி,

II பவழத் தன்ன மேனி,

III குன்றியேய்க்கும் உடுக்கை—இவ்வடிகளில் உள்ள உவம உருபுகளைக் காட்டுக.

## 2. அறவுரை

### 1. அறநெறிச் சாரம்

#### நடு நிலைமை

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே ;-காய்வதன்கண்
உற்ற குணந்தோன்று தாகும் ; உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றுக் கெடும். 1

#### தற்புகழ்தல் தகாது

'பலகற்றேம் யாம்!'என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம், பலகற்றார்க்(கு)
அச்சாணி அன்னதோர் சொல். 2

### புறம் பழித்தல் இழிவு

முன்னின் ஞெருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப் - பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. 3

### இளமையில் அறஞ்செய்தல்

இன்சொல் விளைநிலனு, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 4

### உண்மைச் சுற்றத்தார்

நல்லறம் எந்தை ; நிறைஎம்மை ; நன்குணரும்
கல்வியென் தோழன் ; துணிவெம்பி ;—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரில் எனக்கு ?

—முனைப்பாடியார்.

### குறிப்புரை

**அறநெறிச் சாரம்** என்ற தொடர் தருமவழிகளுட் சாரமானவற்றைக் கூறும் நூல் எனப் பொருள்படும். திருக்குறள் முதலிய நீதி நூல்களின் சாரங்களும், ஜைநசமய நூல்களில் கூறிய சன்மார்க்கங்களின் சாரங்களும் இதில் அடங்கியுள்ளன. இதில் 226 வெண்பாக்கள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் **முனைப்பாடியார்**. இவர் திருமுனைப்பாடி நாட்டினர் என்பர். இவர் ஜைந மதத்தினர். சுமார் 500 ஆண்டுகட்கு முன்னர்த் திரட்டப்பட்ட **புறத்திரட்டு** என்னும் நூலில் இவருடைய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆதலால் இவர் காலம் இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முந்தியதென்று தெரிகிறது.

### அருஞ்சொற்கள்

1. காய்தல் - வெறுத்தல், உவத்தல் - மகிழ்தல், ஆய்தல் - ஆராய்தல், உற்ற - பொருந்திய.

2. தன் + புகழ = தற்புகழ, அலர் கதிர் ஞாயிற்றை - பரந்த கிரணத்தையுடைய சூரியன், அச்சு ஆணி - (தேர் முதலியவற்றின்) கடையாணி.

3. கல் நின்று உருக - நின்ற கல்லும் உருகும்படி, கலந்து - மனங்கலந்து, இழித்து உரைக்கும் - இகழ்ந்து பேசும், சான்றோரை - குறிப்பு மொழி (புறங் கூறுவோராகிய கயவரைக் குறித்தது), இமையார் - கண்களை மூடித் திறவாதவராய் (தேவர்கள் கண்கள் இமைப்பதில்லை என்பது ஈண்டறியத்தக்கது), இது **தற்குறிப்பேற்றம்**.

4. கட்டு - பறித்து, அட்டி - சொரிந்து, கதிர் - நெற்கதிர், பைங்கூழ் - பசுமையான பயிர், சிறுகாலை - இளவயதிலே.

5. எந்தை - எம் தந்தை (மரூஉ), எம்மை - எம் தாய், எம்பி - எம் தம்பி.

**பயிற்சி**

1. பொருள் கூறுக :—

காய்தல், அச்சாணி, பைங்கூழ், சிறுகாலை, நிறைய.

2. விடைதருக :—

1. நடுநிலையாளர் குணம் யாது?
2. ஒருபொருளை, காய்தல் உவத்தல் அகற்றி ஆயவேண்டுவது ஏன்?
3. தற்புகழ்ச்சி ஆகாது என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. தேவர் கண்ணிமையாமைக்கு கூறப்பட்டுள்ள காரணம் யாது? அங்ஙனம் கூறியதன் கருத்து யாது?
5. சிறுகாலையில் செய்யவேண்டிய பயிர் யாது?
6. மெய்ச்சுற்றத்தார் யாவர்?

## 2. திருக்குறள்

### இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 2

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம்
இன்சொ லினதே யறம். 3

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு. 4

பணிவுடைய னின்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின். 6

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும். 8

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 9

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

—திருவள்ளுவர்.

## 3. நான்மணிக்கடிகை

கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும் : மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் : பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் : அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி ? 1

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை ; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ; ஈன்றாளோ
டெண்ணக் கடவுளு மில். 2

—விளம்பி நாகனார்

### குறிப்புரை

*இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர். இக்குடியினர் படையெழுச்சி, திருவிழா, திரு*

மணம் என்னும் விசேட காலங்களில் முரசினை யானை மேல் ஏற்றி, அறைந்து, அரசனது ஆணையைத் தெரிவிப்பர். இந் நூலிற்குப் பரிமேலழகர் எழுதிய உரையே யாவராலும் சிறப்புடைய தாகக் கருதப்பட்டு வருகிறது.

## அருஞ் சொற்கள்

இனியவை கூறல்: மனத்தில் உள்ள உவகையை வெளியே புலப் படுத்தும் இனிய சொற்களைச் சொல்லுதல்.

1. ஈரம் அளைஇ — அன்பொடு கலந்து, படிறு-வஞ்சனை, செம்பொருள் - அறம்.

2. அமர்ந்து - உவந்து.

4. துவ்வாமை - நல்குரவு, வறுமை.

5. பிற - உடம்பிற் கணிந்துகொள்ளும் பிற அணிகள்.

6. அல்லவை - பாவங்கள்.

7. நீதி - உலகத்தோடு பொருந்துதல். பண்பு - இனிமைப் பண்பு.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளால் பிறருக்கு நோய் செய்யாத இனிய சொல்.

9. கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாது.

10. கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக் கனி போல அமிழ்தானவற்றை, இன்னாத காய்களென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை.

## குறிப்புரை

இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு நான்கு இரத்தினத்துண்டு (கடிகை - துண்டு) போன்ற நான்கு உயர்ந்த பொருள்கள் ஒவ்வொரு பாடலிலும் சொல்லப்பட்டிருப் பதால் இந் நூல் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார்.

## அருஞ்சொற்கள்

1. கள்ளி வயிற்றில் - கள்ளி மரத்தினுள், அகில் - அகிற் கட்டை, அரிதாரம் - கஸ்தூரி, பல் விலைய - மிக்க விலையுள்ள, நல் ஆள் - நற்குண நற்செயல்களை உடையவன்.

2. கொண்டான் - கணவன். கேளிர் - உறவினர். ஈன்றாள் - தாய்.

விடை கூறுக :—

1. இனியவை கூறலைப் பற்றி ஆசிரியர் கருத்துக்களைத் தொகுத்து வரைக.

2. நல்லாள் பிறக்கும் குடியை ஏன் அறிய முடியாது ?

3. சிறந்த உறுப்பு, துன்னியகேளிர், சிறந்த பொருள், கடவுள் — இவை யாவை ?

## 4. புறநானூறு

உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.

—பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்

### குறிப்புரை

சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூல்களுள் 'புறநானூறு' என்பது ஒன்று. இது புறப்பொருளைப் பற்றிக் கூறும் 400 செய்யுட்களை உடைய நூலாதலால் இப்பெயர் பெற்றது. இது பழந் தமிழர் நாகரிகத்தினைப் பற்றிக் கூறும்.

### அருஞ் சொற்கள்

உற்றுழி - (தம் ஆசிரியருக்கு) ஓர் இடையூறு வந்த சமயத்தில். உறுபொருள் - மிக்க பொருள். பிற்றை நிலை - வழிபாட்டு நிலைமை. முனியாது - வெறுக்காது, ஆறு - வழி.

**பயிற்சி**

விடை கூறு.—

1. *பண்டைக்காலத்தில் கல்வியை எவ்வாறு கற்றனர்*
2. *மக்கள் ஏன் கற்க வேண்டும் ?*

# III. காதை

## 1. குசேலோபாக்கியானம்

**அவந்தி என்னும் அழகிய நகரில், சுதாமா என்னும் பெயர் பூண்ட குசேலமுனிவர் என்பார் ஒருவர் இருந்தனர். அம்முனிவர் பெருமான்,**

அடக்கமும் பொறையும் கருணையும் நண்பும்
அழுக்கறுத் திலாமையும் என்றும்
விடற்கருந் தவத்தோ டொருங்குற வளர்ப்போன் ;
வெகுளியும் காமமும் மயக்கும்
கடக்கரும் தீமை நாடொறும் விளைக்கும்
கயவர்கள் தொடர்ச்சியும் நன்னைத்
தொடற்கரி தாக வடியறக் காய்ந்தோன் ;
தூயர்க்கும் தூயவன் மாதோ.

**கிழிந்த கந்தையை நல்லுடையாகப் புனைந்திருந்தனராதலின் அவரைக் குசேலர் என்று பெயரிட்டழைத்தனர். அம்முனிவர் மனைவி,**

மாசிலாக் குலத்து வந்தாள் ;
வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள் ; கொண்கன்
நினைப்பறிந் தொழுகு நீராள் ;
தேசுறு வாய்மை யுள்ளாள் ;
சினந்திடல் என்று மில்லாள் ;
பேசுதிண் கற்பு வாய்த்தாள்.
பெற்றதே கொண்டு வப்பாள். 2

**இவர்கட்கு இருபத்தேழு குழந்தைகள் பிறந்திருந்தன. முனிவரர் என்செய்வார்! சிறுவர்கட்கு உணவு வேண்டும்.**

**இரந்து பொருள்தேடி இளைஞர்களை ஊட்டி வளர்க்க அவர் மனம் இசையவில்லை. அவர்,**

பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல்—அந்தோ!—
இழிவிழி வெந்த ஞான்றும். 3

**என்ற சிறந்த கொள்கையை உடையவர். ஆனால், குழந்தைகளுக்கென்ன தெரியும்! பாவம்! தாயைப் படாத பாடும் படுத்தின. அவள், உணவெடுத்து,**

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும்; உந்தி மேல்வீழ்ந்
திருமகவும் கைநீட்டும்; மும்மகவும்
கைநீட்டும்; என்செய் வாளால்!
பொருமியொரு மகவழும்; கண் பிசைந்தழுமற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங்
ஙனஞ்சகிப்பாள்! பெரிதும் பாவம்! 4

'குண்டலமோ திரம்கடகம் சுட்டி, அயன்
மனையார்தம் குழவிக்கிட்டார்;
புண்டரீ கக்கண் அன்னாய்! எனக்குநீ
இடாதிருக்கும் பொருமை என்னே!
கண்டெடுத்திப் போதி' டெனக் கரைமதலைக்
கில்லாதான் கடன்தந் தானுக்
கெண்டபச்சொல் வார்த்தையென 'நாளைக்கு
நாளைக்'கென் றியம்பிச் சோர்வாள். 5

**ஒரு நாள் அக்கற்பரசி முனிவரின் பாதங்களைத் தொழுது மிகவும் பணிவுடன்,**

'தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்;

தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்;
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்;
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பரும் கலாம்பல விளைக்கும்;
'தரித்திரம் அவமா னம்பொய்பே ராசை
தரும்; இதிற் கொடியதொன் றிலையே. 6

'யாதவர் குலத்திற் றேன்றிய அரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்.
ஆதலின் அப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெரும் செல்வம்
நீதறக் கொண்டு கொடுத்துநம் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும்'. 7

**என்று வேண்டினாள். குசேலர்,**

'சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்!
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்;
குறிபெறு கண்ணு ளாரும் குருடராய் முடிவ ரன்றே! 8

'பல்கதிர் விரித்துத் தோன்றிப் பாடுசெய் கதிரே போல
மல்லனீர் உலகிற் றேன்றி மறைந்திடும் நும்மை விட்டுச்
செல்வமென் றுறுவ தற்குச் செல்வமென் றுரைக்கும் பேர்நன்
றல்லலை விளைப்ப தாகா தரும்பெறற் செல்வம்; பாவாய்! 9

'முன்னமெத் தனைபேர் மைந்தர்
முறைமைபா ராட்டி னரோ?
இன்னமெத் தனைபேர் மைந்தர்
முறைகொள இருக்கின் றரோ?
அன்னமைந் தரைத்தம் மைந்தர்
எனல்அறி யாமை யாகும்.
மென்னடைக் கரிய வாட்கண்
விரைக்கருந் தாழ்கு ழாலே? 10

**அன்றியும்,**

'மதலையைப் பெறுநாள் துன்பம் ;
வளர்த்திடு நாளும் துன்பம் ;
விதலைநோய் அடையில் துன்பம் ;
வியன்பரு வத்தும் துன்பம் ;
கதமுறு காலர் வந்து
கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால் ?
எற்றைக்கும் துன்ப மானல்! 11

" அத்தகு மைந்தர் ஆர்?" நீ
யார்? இஃது துரைக்கும் நானுர்?
இத்தரை யிடைக்காப் பாற்றற்
கியான்திரு நெடுமா லல்லன் ;
கொத்துறு மைந்த ராசைக்
கோட்பட்டு வருந்து கின்றுய் ;
பித்துளார் செய்கை யீது,
பெரியார்இம் மயக்கம் பூணுர். 12

'பாற்கட லடுத்த மீன்அப் பால்விரும் பாது மற்று
ஏற்குமா விரும்பி னுற்போல் எம்பிரரன் திருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கும் இன்பச் செல்வத்தை நண்ணி டாமல்
சேற்கருங் கண்ணுய்! துன்பச் செல்வமோ நண்ணு வேன்யான்?

'நன்றியில் உடலைப் போற்றல் நன்றுளார் செய்கை யன்று ;
வன்றிகள் மலத்த மூந்தி மாசுகம் என்றுற் போல, [யான்'
ஒன்றும்இக் குடும்பச் சேற்றில் உழன்றிடேன் உழன்றி டேன்
என்றுரைத் திறுத்தான் பற்றில் இருந்தவ ரேறு போல்வான். 14

**அப்பொழுது அவர் மனையாள்,**

'செயத்தகு முயற்சி செய்திடில், செயிர்தீர்
செய்யவள் மணுளனும் இரங்கி
வியத்தக வேண்டும் யாவையும் அளிப்பன் ;
விளம்புறு முயற்சிசெய் யானேல்,
நயத்தகு போகம் அளித்திடான் என்று
நானிலத் தறிஞர்நன் குரைப்பர் ;
உயத்தகு நெறிமா லடிஉன லொன்றே
ஓர்ந்தமா தவப்பெருங் கடலே! 15

'மடமையேன் தனக்குக் கடவுளும் நீயே;
வகுக்கரும் இறைவனும் நீயே;
அடலுறு தானம் தவமுதல் யாவும்
ஆற்றுநின் பணிவிடை யன்றோ?
'மடலவிழ் துளப மாலிகை புனைந்து
வாசுதே வன்பத மலரைத்
திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச்
சிதர்தரச் செகுத்தமா மறையோய்? 16

என்றாள்.

'தெய்வம், குரவன், அரசன் திருமுன்னர்ச் செல்வோர்
மெய்வந்த அன்னோர் அருள்வேண்டி விரும்பி தேனும்
கைவந்த பெற்றுச் செலீஇக் காண்குவர். கண்ணன்முன்பு
மைவந்த கண்ணாய்! இனிதென்கொடு; வல்லை செல்வல்.' 17

**என்றனர். அதுகேட்ட அவர் மனைவி, அன்று முதல் உபவாச மிருந்து நாள்தோறும் தன் பங்கு நெல்லைச் சேர்த்து, போது மான அளவு சேர்ந்தபின், அதனை நீரில் நனைத்து வறுத் தெடுத்து,**

கறையிட்டு நலிகாண உலக்கைகொடு
மிக்கிடித் துக் கரிசு போக்கி
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி யோர்பான்
மறையிட்ட ஒழுங்குடையாள் முடிந்துகொடுத்
தினிதுபோய் வருக' என்றாள்.
சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்ல லுற்றான். 18

—வல்லூர்த் தேவராசப் பிள்ளை.

### அருஞ் சொற்கள்.

*1. அழுக்கறுத்தல் இலாமை-பொறாமை இல்லாதிருத்தல்; விடற்கு அரும் - விடுவதற்கு அருமையான (விடக்கூடாத); ஒருங்கு உற - ஒன்றாய்ப் பொருந்த; கடக்க அரும் - கடப்பதற்கு அரிதான; அடி அற - முற்றும் நீங்க; காய்ந்தோன் - வெறுத் தொழித்தவன்.*

2. உவப்ப - சந்தோஷிக்க; கொண்கன் - கணவன்; ஒழுகும் - நடந்துகொள்ளும்; நீராள் - தன்மையுடையவள்; தேசு உறு - அழகு பெருந்திய; திண் - உறுதியுடைய.

3. பருவரல் - துன்பம்; துணை கரம் - இரண்டு கைகளையும்; மல் - வலிமை; வீட்டி - அழித்து.

4. உந்தி - தாவி.

5. புண்டரீகம் - தாமரை; இடு எனா - அணி என்று; கரை - சொல்லும்; எண் தப - (நாள்) எண்ணிக்கை கடந்த.

6. வனப்பினை - அழகை; உலர்தர - காய; அளவா - அளவில்லாத; சாற்ற அரும் - சொல்ல முடியாத; தடுப்ப அரும் - தடுக்க முடியாத; கலாம் - கலகம்.

7. வாய்மடுத்தனை - குடித்தாய்; வகுப்பார் - சொல்லுவார்; பீதாம்பரம் - பொன்னுடை; செல்லல் நோய் - துன்பப்பிணி.

8. உற்ற ஞான்றே - அடைந்தபொழுதே; வறிய புன் செருக்கு - வீணான அற்ப கருவம்; மூகர் - ஊமையர்; பறி - பொன் (ஆபரணம்); பயில்தரு - பழக்கப்பட்ட; குறிபெறு - குறித்துப் பார்க்கும் (சக்தியைப்) பெற்ற.

9. பாடு - பெருமை; கதிர் - சூரியன்; மல்லல்நீர் - வளப்பத் தன்மையுடைய; அல்லல் - துன்பம்.

10. மெல் நடை - மென்மையான நடை; வாள் கண் - வாள் போன்று பிரகாசிக்கும் கண்கள்; விரை கரும் தாழ் குழலே - வாசனையுடைய கரிய தாழ்ந்த கூந்தலையுடையவளே.

11. விதலை - நடுக்கம்; கதம் - கோபம்; காலர் - யமனர்; எற்றைக்கும் - என்றைக்கும்.

12. அத்தகு - அப்படிப்பட்ட; கொத்தறு - கொத்திப் (பிடுங்குகின்ற); கோட்பட்டு - கொள்ளப்பட்டு.

13. ஏற்குமா - (தமக்கு) ஏற்றபடி; நண்ணிடாமல் - அடையாமல்.

14. நன்றி இல் - நன்மை யில்லாத; நன்று உளார் - நன்மை உள்ளவர்கள்; வன்றி - பன்றி; மாசுகம் - மிகவும் சுகமாயிருக்கிறது; ஒன்றும்-பொருந்திய; இறுத்தான்-பதில் கூறினான்; பற்று இல் பற்றில்லாத; இரும் தவர் ஏறு - பெரிய தவத்தினருள் சிங்கம் (போன்றவன்).

*15,* செயிர்தீர் - குற்றமற்ற; செய்யவள் - இலக்ஷ்மி; வியத்தக - ஆச்சரியப்படும்படியாக; நயத்தகு - விரும்பத்தகுந்த; உயத்தகு - உய்யத்தகுந்த; உனல் - கருதுதல், ஓர்ந்த - அறிந்த.

*16.* வகுக்க அரும் - சொல்லுவதற்கு அரிய; இறைவன் - தலைவன்; அடல் உறு - பெருமை பொருந்திய; ஆற்றும் - செய்யும்; மடல் அவிழ் - இதழ்கள் மலர்ந்த; மாலிகை - மாலை; சிதர்தர - சிதரும்படியாக; செகுத்த - வெட்டிய.

*17.* திருமுன்னர் - திருச்சமுகம்; அன்னூர் - அப்படிப்பட்டவர்கள்; கைவந்த-கைக்கு எட்டிய அளவு; செலீஇ-சென்று; இனிது என் - இனிய கையுறைப் பொருள் என்ன இருக்கிறது. கொடு - கொடுப்பாயாக. வல்லே - சீக்கிரம்; செல்வல் - செல்வேன்.

*18.* கறை—உரல்; நனி காண—அதிகம் காணும்படி; கரிசு—(உமி முதலிய) குற்றம்; நிறையிட்ட — உறுதியான; நேடி — தேடி; மறையிட்ட—வேதத்தில் கூறப்பட்ட.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. குசேலோ பாக்கியானம் யாரால் பாடப்பட்டது?
2. குசேலரின் இயற்பெயர் யாது ?
3. குசேலரின் நல்லியல்புகள் யாவை ?
4. குசேலருக்கு அப்பெயர் வரக் காரணம் யாது ?
5. அவர் மனைவியின் நல்லியல்புகள் யாவை ?
6. குசேலர் இரத்தல் இழிவு என்பதனை எவ்வாறு புலப்படுத்துகிறார் ?
7. குசேலர் மனைவி குழந்தைகளுக்குக் கஞ்சிவார்க்கும்பொழுது குழந்தைகள் என்ன செய்யும் ?
8. குழந்தைகள் தாயை என்னென்ன நகைகள் வேண்டுமெனக் கேட்கும் ?
9. தரித்திரம் ஏன் கொடியதாகும் ?
10. குசேலர் மனைவி அவரை யாரிடம் பொருள் பெற்று வருமாறு கூறினாள் ?
11. செல்வம் கொடியது என்று குசேலர் கூறக் காரணம் யாது ?

12. குழந்தைகளால் என்றைக்கும் துன்பம் என்பதைக் குசேலர் எவ்வாறு விளக்குகின்றார் ?

13. பித்துளார் செய்கை யீது — ஈண்டுக் குறிக்கப்பட்ட செயகை எது ?

14. குசேலர் கண்ணனிடம் செல்வத்தைப்பெற முதலில் ஏன் விரும்பவில்லை ?

15. குசேலர் கண்ணனிடம் செல்வத்தைப்பெறப் பின்னர் இசைந்தது ஏன் ?

16. யார் யாரைக் காணும் பொழுது கையுறையுடன் செல்ல வேண்டும்?

17. குசேலர் எடுத்துச் சென்ற கையுறை யாது ?

## 2. மனோன்மணீயம்

**[சகடர் தம் மகளான வாணியைப் பலதேவனுக்கு மண முடித்துக் கொடுக்க விரும்பினார். பலதேவனை மணக்க வாணி விரும்பவில்லை. அவள் நடராஜனை விரும்பினாள். சகடர், தம் மகளுக்கு அறிவுரை கூறுமாறு பாண்டியனை வேண்டினார்.]**

### அங்கம் 1. களம் 3.

*ஜீவகனும் சகடரும்*

**ஜீவ :**

**(சகடரை நோக்கி)**
சுகமோ யாவரும் முதிய சகடரே !
மகிழ்வுற வும்மை நோக்கி வெகுநாள்
ஆயின தன்றே ?

**சகடர் :**

ஆம் ! ஆம் ! அடியேன்

**ஜீவ :**

மேயின விசேடமென் ? விளம்புதிர். என்குறை ?

**சகட :**

அறத்தா றகலா தகலிடங் காத்துப்
பொறுத்ததோட் புரவல! உன்குடை நீழற்

பொருந்து மெங்கட் கரந்தையு முளதோ ?
சுகமீது காறும். அகமகிழ் வுற்றுன்
மந்திரத் தலைவன் குடிலன் மகற்கே
எந்தன் புதல்வி வாணியை வதுவையிற்
கொடுக்கவோ ராசை கொற்றவ ! மற்றது
முடிக்கநின் கருணையே முற்றும்வேண் டுவனே.

**ஜீவ :**

சிலஞ் சிந்தை கோல மனைத்துஞ்
சாலவும் பொருந்தும். சகடரே ! அதனல்
களித்தோம் மெத்த. ஏ ! ஏ ! குடில !
ஒளித்த தென்நீ யுரையா தெமக்கே?

**குடில :**

ஆவ தாயி னறிவியா தொழிவனே !

**ஜீவ :**

இடையூ றென்கொல்? இடியே றன்ன
படையடு பலதே வன்று னேதோ
விரும்பினன் போலும் வேறோர் கரும்பே !

**குடில :**

இல்லையெம் மிறைவ ! எங்ஙன முரைக்கேன் !
சொல்லிற் பழிப்பாம். சகடரே சொல்லுக.

**ஜீவ :**

என்னே ? சகடரே ! இடையூ றென்னே?

**சகட :**

பரம்பரை யாயுன் றொழும்புபூண் டொழுகும்
அடியனேன் சொல்பழு தாயின தில்லை.
முடிவிலாப் பரிவுடன் வளர்த்தவென் மொய்குழல்
ஒருத்தியே யென்சொல் வியர்த்த மாக்குவள்.
ஒருதலை யாயிம் மணத்திற் குடன்படாள்.
விரிதலைப் பேய்போல், வேண்டிய விளம்பியும்
ஓரா ளொன்றும்; உணரா டன்னையும்;
நேரா ளொருவழி; பாராள் நெறிமுறை;

என்னயான் செய்கேன்? இதன்மே லெனக்கும்
இன்னல் தருவதொன் றில்லை. தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவர்
எனுமொழி யெனக்கே யனுபவ மிறைவ!
உரைத்தவென் கட்டுரை பிழைத்திடப் பின்னுயிர்
தரித்திருந் தென்பயன்? சாவோ சமீபம்.
நரைத்த தென்சிரம்; திரைத்த தென்னுடல்;
தள்ளருங் காலம்; பின்னையும் வேறிலை.
என்னுரை காத்துநீ யிம்மண முடிக்க
மன்னவ! கிருபையேல் வாழ்து மிவ்வயின்.
இல்லையேல் முதியவென் னில்லா ளுடனினிச்
செல்ல விடையளி. செல்லுதுங் காசி.

**(கண்ணீர் துளிக்க)**

**ஜீவ:**

ஏனிது சகடரே! என்கா ரியமிது!
தேன்மொழி வாணி செவ்விய குணத்தாள்.
காணி லுரைப்பாம். வீணில் வழுகை.
அறிவிர்கொல் லவளுளம்?

**சகட:** சிறிதியா னறிவன்

திருநட ராஜனென் றொருவனிங் குள்ளான்;
பொருவரும் புருடன்மற் றவனே யென்றவள்
சொல்வது கேட்டுளர் சிற்சில தோழியர்.

**குடில:**

(அரசனை நோக்கி) நல்லதப் படியே நடக்கிலென்?
இவர்க்கும் பொல்லா முரண்டேன்?

**சகட:** (குடிலனை நோக்கி) போம்! போம்! உமது
குழந்தையே லிங்ஙனங் கூறீர்! முற்றும்,
இழந்திட வோவெனக் கித்தனை பாடு?
பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ?
(அரசனை நோக்கி)
காவலா! அவனைப் போலயான் கண்டிலன்
சுத்தமே பித்தன்; சொல்லுக் கடங்கான்;
தனியே யுரைப்பன்; தனியே சிரிப்பன்,

எங்கெனு மொருபூ இலைகனி யகப்படில்
அங்கங் கதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியிற் றலைதடு மாறுவன் ;
பரற்கலு மவனுக் ககப்படாத் திரவியம் ;
ஆயிரந் தடவை யாயினு நோக்குவன் ;
பேயனுக் களிக்கவோ பெற்றனம் பெண்ணை ?

**ஜீவ :**

ஆமாம் ! யாமுங் கண்டுளேஞ் சிலகால்
நின்றால் நின்ற படியே ; அன்றி
இருக்கினு மிருப்பன் எண்ணிலாக் காலம் !
சிரிக்கினும் விழிக்கினும் நலமிலை தீயதே.
அவனன் றேமுன் அந்சைக் களத்தில்....

**குடில :**

அவன்றான் ! அவன்றான் ! அழகன் ! ஆனந்தன்.

**ஜீவ :**

அழகிருந் தென்பயன் ? தொழிலெலா மழிவே ;
எங்கவ னிப்போது !

**குடில :** இங்குள னென்றனர்,

சிதம்பரத் தனுப்பினேன் ; சென்றிலன் நின்றான் ;
இதந்தரு நின்கட் டளையெப் படியோ ?

**ஜீவ ;**

மெத்தவும் நன்மை ; அப்படியே செய்.

**குடில :**

சித்தம் ; ஆயினுஞ் செல்கிலன் ; முனிவர்
பிரியனு தலினுற் பெயர்ந்திலன் போலும்.

**ஜீவ :**

சரியல ; இராச்சிய தந்திரத் தவர்க்கென்!
(சகடரை நோக்கி)
நல்லது சகடரே! சொல்லிய படியே
மொழிவேம் வாணிபால் ; மொய்குழற் சிறுமி

அழகினில் மயங்கினள்; அதற்கென்? நும்மனப்
படியிது நடத்துவம் விடுமினித் துயரம்.

**சகட :**

இவ்வுரை யொன்றுமே யென்னுயிர்க் குறுதி;
திவ்விய திருவடி வாழுக சிறந்தே!

(சகடர் போதல்)

### குறிப்புரை

*விளம்புதிர் -சொல்லுங்கள். அறத்தாறு - அறநெறி. புரவல-அரச. அரந்தை - துன்பம். கொற்றவ - மன்னு. சிலம்-நல்லொழுக்கம். கோலம் - அழகு. இடையூறு - துன்பம். - இடியேறு - பேரிடி. தொழும்பு - அடிமை - இன்னல் - துன்பம். ஓராள் - ஆராய்ந் தறியாள். பொருவரும் - ஒப்பில்லாத.*

**விடைதருக :—**

*1. சகடர் யார்?*

*2. வாணி யார்? 3. வாணி யாரை மணக்க விரும்பினுள்?*

*4. வாணி யாரை மணக்க விரும்பவில்லை? 5. சகடரது ஆசை யாது?*

*6. விரிதலைப் பேய்—இது யாரைக் குறிக்கின்றது?*

*7. சகடருக்கு முதுமை தோன்றியதைக் குறிக்கும் தொடர்களைக் கூறுக.*

*8. சகடர் பாண்டியனிடம் முறையிட்டது யாது?*

*9. பாண்டியன் கூறிய ஆறுதல் மொழி யாது?*

*10. 'இவ்வுரை யொன்றுமே யென்னுயிர்க் குறுதி' — உரை யாது?*

## 3. வில்லிபாரதம்

### கன்னபருவம்

### கண்ணன் கன்னனிடம் வருதல்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போ
யாதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்

சித்திரச் சிலைக்கை விசயனைச் "செருநி
மொழி"கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய ளுகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான். 1

## இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

"தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி லிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல்!" 2

## கன்னன்பாற் கண்ணன் விரும்பிய பொருள்

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்"கென நான்மறை யவனும்
"ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவு"கென் றலுமுள மகிழ்ந்தான். 3

## கன்னன் கூறுதல்

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றாற்
புண்ணியம் இதனினும் பெரிதோ!" 4

### கன்னன் தன்னிதய இரத்தங்கொண்டு தானம் அளித்தல்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
விறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினல் நோக்கிக்
"கைப்புன லுடன்றரு" கென்ன
அன்னவன் இதயத் தும்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்.

### வரங்கேட்குமாறு கண்ணன் கன்னனுக்குக் கூறுதலும் கன்னன் கேட்டலும்

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து "நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதும்" என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
"அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழேழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ யளித்தருள்" என்றான்.

### கண்ணன் வரம் அளித்தல்

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
"எத்தனைப் பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில்" என் றுரைத்தான்
மூவரும் ஒருவ னும் மூர்த்தி.

### கண்ணன் அளித்த தரிசனம்

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை

மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதவைந் துளவோன்.

## கண்ணன் அடைந்த மகிழ்ச்சி

அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார்
சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் விடவுஞ் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான்.

## வேறு

## கன்னன் கூறுதல்

'தருமன்மகன் முதலான அரிய காதற்
றம்பியரோ டமர்மலைந்து தறுக ணண்மைச்
செருவிலெனை துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர் கோவுக்(கு)
உரைபெறுநற் கவசகுண் டலமும் ஈந்தேன்
உற்றபெறு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே,
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே."

## குறிப்புரை

*வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் அந்தணர் குலத்திற் பிறந்தார். இவர் வடமொழி தென்மொழிகளை நன்கு*

கற்றவர்; சந்த இன்பந் தோன்றக் கவி பாடுவதில் வல்லவர். வக்க பாகை என்னும் நகர்க்கு அரசனை வரபதியாட்கொண்டான் வேண்டுகோளுக்கு இணங்கி இவர் இந்நூலை இயற்றி இதனை அவனது அவைக்களத்தில் அரங்கேற்றினர். கம்பரைப்போல இவரும் தம்மை ஆதரித்த வள்ளலைத் தாம் பாடிய நூலில் புகழ்ந்துள்ளார்.

பாரதம்—பரதனது வம்சத்தில் பிறந்தோரது வரலாற்றைக் கூறும் நூல். இது வடமொழித் தத்திதாந்தநாமம். இப்பாடப் பகுதி பதினோராம் போர்ச் சருக்கத்தில் உள்ளது.

கன்னன் என்றும் இல்லையென்னாமல் ஈயும் வண்மை உடைய நல்லோனாதலால், அப்புண்ணியம் அவனைப் போர்க்களத்திற் பாதுகாத்து வருகின்றது. எதிர்ப்பக்கத்தில் கண்ணன் இவ்வுண்மை தெரிந்து, புண்ணியத்தை அவனிடமிருந்து தான்பெற்று அவனைப் போரில் வீழ்த்தக் கருதி அவன்பால் வந்து அதனை இரக்கும் பகுதி இங்கே கூறப்படும்.

## அருஞ் சொற்கள்

1. அத்தவெற்பு - சூரியன் மறையும் மேற்கு மலை; அஸ்தகிரி. வில்கிடை - வில் கிடக்கு மளவு தூரம். ஆதவன் - சூரியன். முத்தர் - முத்தி யுலகத்தை அடைந்தவர். முதல்வன் - கடவுள்; கண்ணன். சித்திரம் - அழகிய. சிலை - வில். விசயன் - அருச்சுனன். செரு - போர். தவப்படிவம் - தவக்கோலம். வெயிலவன் புதல்வன் - சூரியன் மகனான கர்ணன்.

2. தாண்டிய - மோதுகிற. தரங்கம் - அலை. வேண்டிய - வேண்டியவற்றை. தருதி - கொடுக்கின்றனை. ஈண்டிய - மிக்க. உழந்தேன் - அனுபவித்தேன். இயைந்தது ஒன்று - (உன்னால்) கொடுக்கக் கூடியதொரு பொருளை. இக்கணத்து - இப்பொழுதே, கவனம் - நடை. துரகதம் - குதிரைகள். சுடர் - சூரியன். தோன்றல் - கன்னனே! தோன்றல்: தோன்றல் என்பதன் விளி.

3. வென்றி - வெற்றி. விசயன் - அருச்சுனன். விசய வெங்கணை - வெற்றிபொருந்திய கொடிய அம்புகளால். விழுவோன் விழும் நிலையிலுள்ள கர்ணன். நவில்க - சொல்லுக. ஒன்றிய (இதுவரையில்) சேர்ந்திருக்கும்.

4. வேண்டும் பொருள் எல்லாம் - (வேண்டுவார்) வேண்டும் பொருள்களை யெல்லாம். நயக்கும் - விரும்பிக்கொடுக்கும். பக்கு

வம் - சமயம். ஆல் - அசை. ஓவு இலாது - ஒழிதல் இல்லாமல்; பூவில்வாழ் அயனும் - தாமரையில் வாழும் பிரமனும், அயன் அந்தணனாகலின், இவ்வந்தணனுக்கு அவனும் நிகரலன் என்றார். இதனினும் - உனக்குக் கொடுக்கும் இச்செயலினும். பெரிதோ: ஓகாரம் எதிர்மறை. ஆவியோ : ஓகாரம் உயர்வுசிறப்பு.

5. கரம் - கைகளை. இறைஞ்ச - வணங்க. இறைஞ்சலர்க்கு - தன்னை வணங்காத பகைவர்களுக்கு. எழிலி ஏறு அனையான் - மேகத்தில் தோன்றும் இடியை ஒப்பவனான கன்னன். கைப்புனல் - கையினால் தாரை வார்க்கும் நீர். அன்னவன் - கர்ணன். இதயத்து அம்பின்வாய் - (தன்) நெஞ்சில் தைத்த அம்பின வழியே வெளி வரும். அம்பால் - நீரினால்; செந்நீரினால்; இரத்தத்தால். முன் - முன்பு (வாமனாவதாரத்தில்). அவுணன் - மாவலிச் சக்கரவர்த்தி.

6. மல்லல் அம் தொடையல் - வளப்பத்தையுடைய அழகிய மாலையைச் (சூடிய). நிருபன் - அரசன் ; கர்ணன். முனிவன் - அந்தணன். சூரன் மாமதலை-சூரியனது சிறந்த மகனான கர்ணன். அல்லல் - பிறவித் துன்பங்களுக்குக் காரணமான. உற்பவம் - பிறப்பு.

7. மைத்துனன் - கர்ணன். குந்திதேவி கண்ணனுக்கு அத்தையாதலின் அவள் மகனான கர்ணன் அவனுக்கு மைத்துனனாவான். உகந்துஉகந்து- மிகமகிழ்ந்து. கைத்தலமலரால்-மலர்போன்ற கையால். மூவர்-அயன், அரி, அரன்.

8. புணரி - கடல்நீரை. கார்முகில்-கரியமேகத்தை. மாற்றிய - (கருநிறத்தில் தனக்கு ஒப்பாகாதென்று) நீக்கிய. பஞ்சாயுதம் - ஐந்து படைகள்; சங்கு, சக்கரம், கதை, வாள், வில், வயங்கு - விளங்கும். கூற்று உறழ் கராவின் - எமனை ஒத்த முதலையின். குஞ்சரராசன் - கஜேந்திரன், பைந்துளவோன் - பசுமையான துளசி மாலை அணிந்த கண்ணன்,

9, அமரயோனிகளும் - ஏனைத் தேவசாதிகளும், அமரருக்கு அதிபனாவான் - இந்திரன். கனகம் - பொன்மயமான. நாள்மலர் - அன்று பூத்த மலர், மா சமர முனையில் - பெரிய போர்க்களத்தில். தனஞ்சயன் - அருச்சுனன். அமலன - குற்றமற்றவன.

10. தருமன் மகன் - தருமபுத்திரன். அமர்மலைந்து - போர் செய்து, தறுகண் ஆண்மை செருவில் - அஞ்சாமையோடு கூடிய வீரப்போரில். தோழன் - துரியோதனன். தேவர் கோ - தேவேந்திரன். உரைபெறு - புகழ்பெற்ற, முன் - முன்பு (கிருஷ்ணவதாரத்தில்), மருது இடை - இரட்டை மருத மரங்களினிடையிலே. வாழ்ந்த

ஆறு ஏ - பெருவாழ்வை அடைந்த விதம் என்னே! என்று வியந்து கூறியபடி.

### பயிற்சி

I. விடை எழுதுக :—

1. வில்லிபுத்தூரார் பாரதம் பாடக் காரணம் என்ன ?
2. போர் எப்பொழுது நிறுத்தப்பட்டது ?
3. வெயிலவன் புதல்வன் யார் ?
4. அவனை அடைந்தது யார்? என்ன வேடம் கொண்டார்?
5. கண்ணன் கன்னனிடம் யாது கூறினன் ? யாது கேட்டனன் ?
6. கண்ணன் விரும்பிய பொருள் யாது ?
7. புண்ணியத்தை விரும்பிய கண்ணனிடம் கன்னன் யாது கூறினன் ?
8. கன்னன் புண்ணியத்தை எவ்வாறு அளித்தான் ? அதனைக் கண்ணன் எவ்வாறு ஏற்றான் ?
9. கன்னன் கண்ணனிடம் கேட்ட வரம் யாது ?
10. கண்ணன் அளித்த காட்சியைக் கவி எவ்வாறு வருணித்தார் ?
11. "மாதவத்தால் ஒரு தமியன் வாழ்ந்தவாறே" —— இது யார் கூற்று ? இங்ஙனம் கூறக் காரணம் யாது ?

II. கீழேயுள்ள அடிகளில் குறிப்பிட்டுள்ள கதைகளைச் சுருக்கி வரைக.

1. "முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்"
2. "கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன் முன்............ துளவோன்"
3. "மருதிடை முன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மால்"

III. "கன்னன் கடை நாள்" என்ற பொருள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

## IV சிறு நூல்கள்

## தமிழன் இதயம்

### இளந் தமிழனுக்கு

1 தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கும் இணையிலாஉன்
சரிதைகொண்டு சொல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை
அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண்
டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு
நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை
செய்துவாழ்க நீண்டநாள்.

—ஆஸ்தான கவிஞர். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை.

## அழகின் சிரிப்பு

### கிளி

2 தென்னை தான் ஊஞ்சல்! விண்தான்
திருவுலா வீதி! வாரித்
தின்னத்தான் பழம், கொட்டைகள்!
திருநாடு வையம் போலும்!
புன்னைக்காய்த் தலையில் செம்மை!
புதுமுடி புனைந்திருப்பாய்!
உன்னைத்தான் காணு கின்றேன்
கிள்ளாய் நீ ஆட்சி உள்ளாய்!

3 கொஞ்சுவாய் அழகு தன்னைக்
கொழிப்பாய் நீ, அரசர் விட்டு
வஞ்சியர் தமையும், மற்ற
வறியவர் தமையும், ஒக்க
நெஞ்சினில் மகிழ்ச்சி வெள்ளம்
நிரப்புவாய். அவர் அளிக்கும்
நைஞ்சநற் பழத்தை உண்பாய்
கூடழேனும் நன்றே என்பாய்!

—பாரதிதாசன்

## நாரை விடுதூது

4 நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவி ராயின் எம்மூர்ச்
சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

—சத்தி முற்றப் புலவர்

## மீனாட்சியம்மை குறம்.

5 கொழுங் கொடியின் விழுந்த வள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்

தேறலும் வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள் குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகா ணம்மே.

—குமர குருபரர்

## குறிப்புரை

*1. இது 'தமிழன் இதயத்தில்' உள்ள பகுதி. கவிஞர் இராம லிங்கம் பிள்ளையவர்கள் நாட்டிற்கும் மொழிக்கும் பல தொண்டு களைச் செய்துள்ளார். இவரது நூல்கள் தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும் முதலியவை.*

*2. பாரதி தாசன் இக் காலத் தமிழ் மறு மலர்ச்சியில் தனி யிடம் பெற்றவர். இப் பாடல்கள் அழகின் சிரிப்பிலிருந்து எடுக்கப் பட்டவை. இவர் அழகின் சிரிப்பு, எதிர்பாரா முத்தம், இருண்ட வீடு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு முதலிய பல கவிதை களை இயற்றியுள்ளார்.*

## அருஞ் சொற்கள்

*3. வஞ்சியர் - வஞ்சிக் கொடி போன்ற பெண்கள். வறியர் - ஏழைகள்.*

*4. வாவி - குளம். பேழை - பெட்டி.*

*5. கல்லி - தோண்டி. தேறல் - தேன். மரவுரி - மரத்தின் பட்டையாலாகிய ஆடை. சினம் - கோபம். கயல் - மீன்.*

## பயிற்சி

*1. நாமக்கல் கவிஞர் தமிழனுக்குக் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுக.*

*2. கிளிக்கு ஊஞ்சல் எது? வீதி எது?*

3. *கிளி யாருக்கு மகிழ்ச்சியளிக்கும் ?*
4. *புலவர் எங்கு இருந்தார் ? எந்நிலையில் இருந்தார் ?*
5. *அவர் எத்தகைய நாரையைக் கண்டார் ?*
6. *அது எங்கிருந்து எங்குச் சென்றது ?*
7. *புலவர் நாரையை எங்குத் தங்கச் சொன்னார் ?*
8. *புலவர் நாரையிடம் யாரைக் காணுமாறு கூறினார் ?*
9. *புலவர் நாரையிடம் தன் மனைவி யாது செய்து கொண் டிருப்பாள் எனக் கூறினார் ?*
10. *பேழையுள் இருக்கும் பாம்பு—இது எதனை விளக்க வந் தது ?*
11. *குறவர் செயல்கள் எவை ?*

## V. தனிப் பாடல்கள்

ஆவின ; மழை பொழிய; இல்லம் விழ ;
அகத்தடியாள் மெய்ந்நோவ ; அடிமை சாவ ;
மாவிரம் போகுதென்று விதைகொண் டோட ;
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச் ;
சாவோலை கொண்டொருவர் எதிரே செல்லத் ;
தள்ளொணா விருந்துவரச் ; சர்ப்பந்தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக் ;
குருக்களோ தக்கணைகள் கொடுவென் றாரே. 1

'இரவலனே ! உனக்கில்லாத
தென்ன ? இதயமென்ன ?
பரவுண வேது ? சுவையற்ற
தென்ன ? சொற் பான்மை யென்ன ?
தரவுரை செய்திட' வென்றான்.
அதற் கொன்றுஞ் சாற்றிலன் யான்
'வரதிரு வேங்கட நாதா' வென்
றேன் பொன் வழங்கினனே. 2

### குறிப்புரை

1. *இச் செய்யுளைப் பாடியவர் இராமச்சந்திர கவிராயர். சர்ப்பம் - பாம்பு. கடமை - வரி.*
2. *இல்லாததென்ன ? — திரு ; இதயம் என்ன — வேம். உணவு ஏது ? —கடன் ; சுவையற்றது என்ன ? நா; சொற்பான்மை என்ன ? —தா.*

*திரு + வேம் + கடன் + நா + தா—திருவேங்கட நாதா.*

### பயிற்சி

I. விடை எழுதுக:—

1. ஆசிரியர் குறிப்பிட்ட துன்பங்கள் எவை?
2. திருவேங்கட நாதன் இரவலனைக் கேட்ட வினாக்கள் எவை? அவற்றிற்குரிய விடைகள் அவன் பெயரிலேயே எங்ஙனம் அமைந்துள்ளன? விளக்குக.
3. இத்தகைய செய்யுளுக்கு என்ன பெயர் கொடுக்கலாம்? (வினாவுத்தரம்).

## VI. வருணனை

### சூரியாஸ்தமன வருணனை

மானி னோக்கியர் மைந்தரொ டாடிய
வான நீர்விளை யாடலை நோக்கினான்
றானு மன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவ னெய்தினான் 2

### சந்திரோதய வருணனை

ஆற்ற லின்மையி னுலழிந் தேயுந்தம்
வேற்று மன்னர்த மேல்வரும் வேந்தர்போ
லேற்று மாதர் முகங்களொ டெங்கணுந்
தோற்ற சந்திரன் மீளவுந் தோற்றினான் 2

—கம்பர்.

### குறிப்புரை

### அருஞ் சொற்கள்.

1. *மானின் நோக்கியர் - மான் போன்ற பார்வையையுடைய மகளிர். மைந்தர் - ஆடவர். வெய்யவன் - கதிரவன். வேலை - சமுத்திரம்.*
2. *ஆற்றல் - வலிமை, வேற்று மன்னர் - பகை வேந்தர்.*

### பயிற்சி

I. 1. மானின் நோக்கியர் யார்?
2. அவர்கள் யாருடன் நீர் விளையாடலை மேற்கொண்டனர்?
3. வெய்யவன் நீர் விளையாடலைக் கருதி யாது செய்தான்?
4. வேலை—இரு பொருள் கூறு.
5. வெய்யவன் யார்? அவனைக் குறிக்கும் வேறிரு பெயர்களைக் கூறு.

II. 1. சந்திரன் முன்னாள் மறைந்ததற்குக் காரணம் யாது?
2. மீண்டும் உதித்ததற்குக் காரணம் யாது?
3. சந்திரன் முன்னாளில் மறைந்து பின் உதித்ததற்கு ஆசிரியர் கூறும் உவமை யாது?

# உரை நடை

## 1. சங்க இலக்கியங்கள்

**திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.,**

இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ச் செய்யுட்களிற் சில கிறிஸ்து அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை. ஆதலால், தமிழிலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி. பி. பதினாலாம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் கி. பி. பதினோராம் நூற்றாண்டிலும், கன்னட மொழியில் 'கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆதி இலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பல தேசங்களிற் பயிலப்பட்டுப் பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழியிற் கூட இலக்கியம் முதன் முதலில் தோன்றியது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தான். **ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு, எபிரேயம்** முதலிய ஒரு சில மொழிகளிலுள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழமை வாய்ந்தவை.

மிகப் பழமையான காலந் தொட்டே தமிழ் சிறப்புற்று வாழ்ந்து வந்த இடம் பாண்டிய நாடு என்று கூறுவர். வில்லிபுத்தூரார் என்ற கவிஞர்,

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை"

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப் பாண்டிய நாட்டிலே தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததென்பது கர்ண பரம்பரைச் செய்தி. கிறிஸ்து அப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச்சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்து வந்த பணியென்று கூறப்படுகின்றது. நாற்பத்தொன்பது புலவர்கள் இச் சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய

வரலாறு **இறையனார் களவியலுரை** என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச் சங்கம் என்றும், இதற்கு முன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும் களவியலுரை கூறும். தலைச் சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச் சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்க காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் **'சங்க இலக்கியங்கள்'** என வழங்குகிறோம். 'தொல்காப்பியம்' என்ற பேரிலக்கண நூல் இடைச்சங்க காலத்து இறுதியில், அதாவது சுமார் கி. மு. 5000-ல் தோன்றியதென்றும், தலை, இடைச்சங்கங்களிற் பிறந்த ஏனைய நூல்கள் கடல்கோட்பட்டு அழிந்துவிட்டன என்றும் பரம்பரை வரலாறு கூறுகின்றது.

சங்க இலக்கியங்களை இரு பெருங் கூறுகப் பகுக்கலாம்: பத்துப் பாட்டு எட்டுத் தொகையென. பத்துப் பாட்டுக்களாவன: முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை,

> "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து"

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப் படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக் கொடையாளியின் பெருமையைக் கூறி, அவனிடம் சென்று தாம் பெற்றதுபோல் பெருஞ்செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்நூல் வகையின் கருத்து. ஆறு-வழி; படை-படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக் காஞ்சி, நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை உயர்ந்த லட்சியங்களை மேற்

கொண்டு இனிதாகக் கழித்தல் வேண்டுமென வற்புறுத்துகிறது. குறிஞ்சிப் பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டதென்று சரித்திரம் வழங்குகிறது. இப் பாட்டுகளுட் சில அகப்பொருளையும் சில புறப்பொருளையும் பற்றியவை. **அகம்** என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி. **புறம்** என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப் பாட்டிற் புகழப்பட்டிருக்கின்றனர்.

எட்டுத் தொகையாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றை,

> "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
> ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புறமென்(று)
> இத்திறத்த எட்டுத் தொகை"

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும், பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும், பரிபாடலில் எழுபது செய்யுட்களும், கலித்தொகையில் நூற்றைம்பது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள்ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டாலும் இயன்றன. மற்றை ஆறு தொகை நூல்களும் ஆசிரியப்பாவால் இயன்றன. அகம்பற்றியவற்றுள்—ஐங்குறுநூறு—திணை ஒவ்வொன்றுக்கும் நூறு விதம்—குறிஞ்சி, பாலை, மருதம் முல்லை, நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம் பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச்செய்யுள் விதம், பத்துச் சேர அரசர்களுக்குரிய நூறு செய்யுட்கள் கொண்டது, பதிற்றுப்பத்து. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண்முறையால் தொகுக்கப்பெற்று

உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை. கலித்தொகையிலுள்ள தமிழிசைகள் இசையோடு பாடுதற்கு ஒத்தனவாயுள்ளன.

தொகைநூல் ஒவ்வொன்றிலுமுள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப் பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவரல்லர்; ஓரினத்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர்; ஒரு சமயத்தைச் சார்ந்தவருமல்லர். அவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்று களவியலுரை கூறும்.

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒருவருக்குக் 'கல்பொரு சிறு நுரையார்' என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

"கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே"

என்று வந்துள்ளது. இங்கே காணப்படும் உவமானத்தினின்றும் அவருக்குப் பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவருக்கு வழங்கிய இப் புனைபெயர் பிற்காலத்தும் வழங்கி, அதுவே பெயராக முடிந்திருக்கலாம்; அல்லது அவர் பெயர் மறைந்துபோன பிற்பாடு, செய்யுளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக்கப்பட்டும் இருக்கலாம். சில பெயர் முற்கூறியபடியும், சில பெயர் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இதுவென்று இப்போது தெரியக்கூடவில்லை. இங்ஙனம் புனைபெயருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக்கிட்டது.

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண்பாற் புலவர்கள் காணப்படுகின்றார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொது மக்களிடையே கல்வி பரவாத முற்காலத்து இவ்வளவாகப் பெண்பாற் புலவர் இருந்தமை பாராட்டுதற்கு உரியது. இவருள்ளே ஔவையார், வெள்ளி விதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரிமகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

தமிழிலே தொகைநூல்கள் மிகப்புராதன காலத்துத்தானே தொகுக்கப்பட்டமைபோல, கிரேக்க மொழியிலும் மிகப்பழைய காலத்தில் **'அந்தாலஜி'** என்று கூறப்படும் தொகை நூல் தொகுக்

கப் பட்டுள்ளதென அறிகின்றேம், கிரேக்கத் தொகை நூலின் வரலாற்றைக் குறித்து **ரிச்செர்ட் கார்நெட்** என்ற ஆசிரியர் விளக்க மாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி. பி. 90-ல் **மிலீகர்** என்பவரால் இத்தொகை நூல் தொகுக்கப்பெற்றதாம். இத்தொகைநூற் செய்யுட்கள் தெய்வங் களையும், புகழ்பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெருநிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங் கச் சொல்லல், பொருளாழமுடைமை, நவின்றோர்க்கினிய நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை யென்ற குணங்கள் இவற்றிலே நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது. இவ் வியல்புகளோடு பொருந் திய கிரேக்கத் தொகை நூல் புறநானூறு என்னும் தமிழ்த் தொகை நூலோடு பெரிதும் ஒப்பிடற்பாலதாயுள்ளது. மிலீகரது தொகை நூலுக்குப்பின் நான்கு தொகை நூல்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது **ஜஷ்டினியன்** என்னும் அரசன் (கி. பி. 483—565) காலத்திலாகும். இந்தத் தொகைநூலில் காதற் செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப் பெற்றுள்ளன என்று அறிகிறேம். இதனேடு தமிழ்த்தொகை நூல் களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை அகநானூறு என்ற ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

பழமையிலும், பொருளமைதியிலும், செய்யுள் நயத்திலும் மாத்திர மேயன்றி வேறு சில அம்சங்களிலும் இவ்விரு மொழிகளிலுமுள்ள தொகைநூல்கள் ஒப்பிடற்குரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறிவந்திருக்கின்றது. இம்மாறு பாடுகளுக்கு இடையேயும் கிரேக்கத் தொகைநூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவிய அமிர்த சஞ்சீவினியாய் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவேபோன்றுள்ளன தமிழ்த்தொகை நூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும், பழக்க வொழுக்கங்களும் பிரதி பலித்துக் காண்கின்றன. பிற்காலத்தெழுந்த இலக்கியங்களின் நெறியை வரம்புகட்டுதற்கும் இத்தொகை நூல்கள் உதவின. இவ்வா ருகப் பலபடியாலும் இருதேசத்துத் தொகை நூல்களும் ஒன்றோ டொன்று உவமிக்கக்கூடியனவாயுள்ளன.

தொகைநூற் செய்யுட்களிலே சிறந்து விளங்குகிற சில பொது வியல்புகளை இனிக் கவனிப்போம். பின் வருவது புறநானூற்றுச் செய்யுள்:

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடைச் சேய வாயினும், தொடைபுணர்ந்(து)
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்(கு) என்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப;
சாலார் சாலார் பாலரா குபவே.

இது பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக்கண்டு கண்ணகனார் என்ற புலவர் பாடியது. 'இனம் இனத்தோடு' என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது. சான்றோர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்தபோதிலும் ஒருவரோடொருவர் நெருங்கிய கேண்மைகொள்வார் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உபமானம் தரப்படுகிறது. பொன்னும், பவளமும் முத்தும், இரத்தினமும் ஒன்றனின்றொன்று வெகு தூரத்தில் தோன்றிய போதிலும், விலைமிக்க நல்ல அணிகலமொன்று அமைக்குங்காலத்து அவை ஓரிடம் வந்து கோவை பொருந்திச்சேருகின்றன என்பது உபமானம். இதன் அழகும், நயமும் அறிந்து இன்புறத்தக்கன. 'சாலார் சாலார் பால'ராகுபவே, என்பது சொல்லியொழிக்க வேண்டியதாதலாலே அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டுவிடுதல்வேண்டும். உபமானம் செல்லும் வரையும் எதுகைமோனை நயங்களால் செய்யுளடிகள் சிறந்து விளங்குவதும், அது முற்றியபின், கருத்தின் தனி யாற்றலே துணையாக மோனை முதலிய நயமின்றியும் அழகு படக் கடைசி யிரண்டடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்வசக்தியை அறிவுறுத்துகின்றன. கருத்துக்கேற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற்செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசை நயம், பொருள் செல்லும் கதியும், செய்யுளின் கதியும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் அமைதி—இவையனைத்தும் இச்செய்யுளில் விளங்குகின்றன. இவ்வியல்புகள் சங்கச் செய்யுட்களுட் பெரும்பாலனவற்றிற் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற்குரியது.

## பயிற்சி

பொருள் கூறுக :—

அப்தம், பொருப்பு, பேதை.

I. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

பழமை வாய்ந்தவை, கர்ணபரம்பரை, வழிப்படுத்தல், வற்புறுத்துகிறது.

III. விடை தருக:—

1. தமிழ்மொழியில் ஆதி இலக்கியங்கள் எப்பொழுது தோன்றியவை?
2. வில்லிபுத்தூரார் தமிழைப் பற்றிக் கூறுவது யாது?
3. தமிழ்ச் சங்கத்தைப் பற்றி விரிவாகக் கூறும் நூல் எது?
4. தொல்காப்பியம் எப்பொழுது இயற்றப்பட்டது?
5. ஆற்றுப்படை என்பது யாது?
6. குறிஞ்சிப் பாட்டு பாடக் காரணம் யாது?
7. அகம் என்பது யாது?
8. புறம் என்பது யாது?
9. பத்துப் பாட்டில் புகழப்பட்ட மன்னர்கள் யாவர்?
10. எட்டுத் தொகையில் அடங்கிய நூல்கள் எவை?
11. எட்டுத் தெகையில் புறப்பொருள் பற்றிய நூல்கள் எவை?
12. பரி பாடலின் சிறப்பு யாது?
13. பண்டைக்காலத்தில் பெண்கல்வி சிறந்த நிலையில் இருந்தது என்பது எவ்வாறு விளங்கும்?
14. அந்தாலஜி என்ற சொல்லின் பொருள் யாது?
15. தமிழ் நூல்களை எவ்வாறு கிரேக்க நூல்களுடன் ஒப்பிடலாம்?
16. ‘இனம் இனத்தோடு சேரும்’ என்ற பழமொழியைக் கண்ணகனார் எவ்வாறு விளக்குகின்றார்?

# 2. பண்டைத் தமிழர் வாணிகம்

[வித்துவான். வே. வேங்கடராசுலு ரெட்டியார்]

நந்தம் தமிழ் நாட்டிற்குப் பண்டைக்காலத்தில் தமிழகம் என்னும் பெயர் வழங்கி வந்தது. தமிழகம் நெடுங்காலத்திற்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்து, உயர்நிலையில் ஒளிர்வுற்றிருந்தது. அக்காலத்துத் தமிழ் மக்கள் கல்வி, கைத்தொழில், வாணிகம், அரசியல், இல்வாழ்க்கை முதலிய பல துறைகளிலும் மேம்பாடு எய்தியிருந்தனர் என்பது ஒருதலை. ஈண்டு, அவர்களது வாணிகச் சிறப்பினைச் சிறிது கூறுவோம்:

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் பிறநாட்டவரோடு வாணிகம் நடத்தி வந்தவர். கிரீஸ், ரோமாபுரி முதலிய ஐரோப்பிய நாட்டினர், அக்காலத்தில் நம் நாட்டின் விளைபொருள்களை யறிந்து விரும்பி வந்து, அவற்றைக் கொள்வா ராயினர். வாணிகத்தின் பொருட்டு நமது நாட்டினின்று ரோம் தேசத் திற்குத் தூதுசென்ற செய்தி, வரலாற்று நூல்களான் அறியப்படுகின்றது. கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய **ப்ளினி** என்னும் யவன ஆசிரியர் எழுதியுள்ள வரலாறுகளால், நம் நாட்டு வாணிகச் செய்திகள் சில அறியவருகின்றன. அவையாவன, ஐரோப்பாவினின்று நமது நாட்டிற்குக் கப்பல்கள் வரும் வழியும், நமது நாட்டினின்று ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லும் பலவகைப் பொருள்களின் விலையும், நமது நாட்டிலுள்ள முக்கியமான துறைமுகங்களின் நிலையும் பிறவுமாம்.

அக் காலத்தை யடுத்து எழுதப்பட்ட **பெரிப்ளூஸ்** என்னும் நூலினும், மேலைக் கடற்கரையிலுள்ள **முசிறி** என்னும் துறைமுகப் பட்டினத்தில், ஐரோப்பிய நாட்டினின்று மரக்கலங்கள் வந்து தங்கி யிருக்கும் என்றும், ஆண்டுக் கலங்கள் தங்குதற்கு ஏற்ற அமைதி யுண்டு என்றும், ஈயம் தகரம் கண்ணாடி மது முதலிய பொருள்களை விற்றுவிட்டு, மிளகு யானைமருப்பு வயிரம் பவழம் வெற்றிலை பட்டாடை முதலியவற்றை இங்குநின்றும் கொண்டு செல்வர் என்றும் எழுதப் பட்டுள்ளன. இவையே யல்லாமல் நெய் தோகைமயிர் முதலிய பொருள்களையும், குரங்கு கடுவாய் யானை முதலிய விலங்குகளையும்,

மயில் கிளி முதலிய பறவைகளையும் இங்கிருந்து கொண்டுபோயின எனவும் அறியவருகின்றது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த யவன ஆசிரியராகிய தாலமி என்பவரும் நம் நாட்டு வாணிகத்தைக் குறித்துத் தம் நூலில் எழுதியுள்ளார். சிறந்த துறையாகிய முசிறியையும், கருவூர் கன்னியாகுமரி முதலிய ஊர்களையும், பெரியாறு தாமிரவருணி முதலிய யாறுகளையும் பற்றிய செய்திகள் அவர் நூலிற் காண்கின்றன. அன்றியும், முசிறியில் ரோம் தேசத்தவர்களின் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது என்னுஞ் செய்தியும் அறியப்படுகின்றது. இது நிற்க.

தமிழ் நாட்டில், வேலூர் மதுரை முதலிய இடங்களில் வெட்டியெடுக்கப்பட்டுள்ள நாணயங்களாலும் வாணிகச் செய்தி வலியுறுகின்றது. அவை கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த **க்ளாடியஸ்** என்னும் அரசன் முதலியோர் காலத்தவை என்று அறியப்படுதலின், அக்காலத்திலேயே ரோம் தேயத்தோடு நம் நாட்டவர் வாணிகஞ் செய்து வந்தனர் என்பது திண்ணம். இவையேயன்றி, பிறநாட்டு வாணிகத்தைக் குறித்துப் பண்டைத் தமிழ் நூல்களிலும் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை இனி நோக்குவோம்.

பண்டைத் தமிழ் நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில், 'சேரர்களுக்கு உரிய முசிறி என்னுந் துறைமுகப் பட்டினத்தில், யவனருடைய கப்பல்கள் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து மிளகு வாங்கிக் கொண்டு மீளும்' என்று கூறப்பட்டுள்ளது. அன்றியும், அக்கப்பல்கள் முசிறியை யடுத்துப் பாயும் பேராற்றில் வந்து தங்கும் என்பதும் குறிக்கப்பட்டுளது. புறநானூறு என்னும் தொகைநூலில், 'முசிறித் துறைக்கண், கப்பலில் வந்த பொன்னை மிளகின் விலைக்குப் பெற்று, அதனைத் தோணியில் வைத்துக் கரைக்குக் கொண்டுவருவர்' எனக் கூறப்பட்டுளது. அக்காலத்தில், மேல்நாடுகளிலிருந்து சிறந்த தேன் வகைகள் நம்நாட்டிற்கு வருதல் உண்டு. அரசர்கள் அவற்றை விரும்பிப் பெற்று அருந்தி இன்புறுவர். மேற்கூறியவற்றால், முசிறித்துறை கப்பல் வந்து தங்குதற்கு ஏற்ற வசதியுடையதாயிருந்தது என்பது புலனாகும், இவ்வுண்மை, 'சேரவேந்தருடைய முசிறிப்பட்டினத்தில், எகிப்துதேசத்துக் கப்பல்களும் பிறவும் வந்து தங்குகின்றன. அது, மிக்க வளமுள்ள நகரமாய் இலகுகின்றது'' என்று **பெரிப்ளூஸ்** என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளதனாலும் வலியுறும்.

பண்டைத் தமிழ்நூல்களில் யவனருடைய பெயர் பலவிடங்களில் காண்கின்றது. அவற்றில் அப்பெயர், கிரீஸ்தேசத்தவரையும் ரோம் தேசத்தவரையும் குறிப்பதாகும். அரேபியா தேசத்தவரைக் குறிக்கும் இடனும் உண்டு. இதனை ஆராய்கையில், யவனர் என்னும் பெயர், முதன் முதலில் கிரேக்கரைக் குறித்து வழங்கியது எனவும், பின்னர் அஃது உரோமர் முதலியோரைக் குறிக்கலாயிற்று எனவும் தோன்றுகின்றது. முதற்கண் வரும் புறநாட்டவர்க்கு வழங்கும் பெயர், பின்னர் வரும் புறநாட்டவர்க்கும் வழங்குதல் உண்டு. மலையாளிகள், புறநாட்டவராகிய முஸ்லீம்களை வழங்கிய 'ஸாயபு' என்னும் பெயரையே ஐரோப்பியருக்கும் வழங்குதல் ஈண்டைக்கு அறியத்தக்கதாகும். இவ்வாறே கன்னடரும் முஸ்லீம்களுக்கு வழங்கிய 'ஸாஹேபர்' என்னுஞ் சொல்லை ஆங்கிலேயருக்கும் வழங்குதல் இவ்வழக்கினை வலியுறுத்தும்

பண்டைக்காலத்தில், மேலைக்கடல் சேரவேந்தருக்கு உரிமையுடையதா யிருந்தது. அக்கடலில், அவருடைய கலங்களே செல்லலாகும்; அவரது ஆணையின்றிப் பிறர்கலங்கள் அங்குச் செல்லுதல் கூடாது. சேரர், பெருங் கடலில் கருங்கலங்களைச் செலுத்துதலில் தேர்ந்தவராய்த் திகழ்ந்திருந்தனர்.

நம் நாட்டில் துறைமுக நகரங்கள் பலவற்றிலும் பல்வேறு நாட்டினர் தங்கியிருப்பர். சோழருக் குரிய புகார்நகரத்தைக் கூறுமிடத்து இளங்கோவடிகள்,

'பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்'

உள்ளன என்று உரைத்திருப்பது அறியத் தக்கது. அந்நகரில் உயர்ந்தோங்கிய கலங்கரை விளக்கம் இலங்கியிருந்தது. சாவக நாட்டினருக்கும் நம் நாட்டினருக்கும் வாணிகம் நடந்துவந்த செய்தி, மணிமேகலை என்னுங் காப்பியத்தானும் நன்கு அறியப்படும். கடாரத்திலிருந்து இரும்பும், ஈழத்திலிருந்து செம்பும், யவனத்திலிருந்து பொற்பணிகளும் இந்தத் தேயத்திற்கு வந்தன என்று பெருங்கதை என்னும் பழங்காப்பியம் பகரும். சேய்நாட்டினின்று பெரிய மரக்கலங்கள், கடும்பரிகளைக் கொண்டு ஒருங்கு கூடிவந்து, பாண்டியநாட்டில் பகர்ந்து செல்லும் என்பது மதுரைக்காஞ்சியால் அறியவருகின்றது.

6

இனி, புகார்நகரத்தின் துறைநிலையைக் குறித்துப் பண்டை நூலிற் கூறி யிருப்பனவற்றை ஈண்டு நோக்குவோம்:

புகார்த்துறைக்கண், ஈழத்திலின்று வந்த உணவுப்பொருள்களும், கடாரத்தினின்று வந்த விளைபொருள்களும், கங்கையாற்றினின்று வந்த மணியும் பொன்னும் களிறும், இமயமலையினின்று வந்த மணியும் பொன் னும், பொதியமலையினின்று வந்த ஆரமும் அகிலும், தென்கடலிற் பிறந்த தரளமும், கீழ்க்கடலிற் பிறந்த பவளமும், மேல்மலையில் விளைந்த கறியும், கலங்களில் வந்த சிறந்த புரவிகளும், கருப்பூரம் முதலிய சிறப்புடைப் பொருள்களும், பிறவும் எந்நாளும் ஒழிவின்றி இலங் கும். ஆங்கு, நீரில்வந்த பொருள்களை நிலத்திற் பரப்புவர்; நிலத்தில் வந்த பொருள்களைப் புலிப்பொறி பொறித்து, கலத்தில் ஏற்றுவர்; பொதிகளைப் போராக அடுக்குவர். துறையாளர் பொருள்களை நிறுத்து வரி விதிப்பர். காவலர், கடற்கரையில் நொடியளவும் மடிவின்றி ஆங் காங்கே பொருள்களை நோக்கிக் கொண்டு சூழ்ந்து திரிவர். ஆதலின், அப்பொருள்களைக் களவுகோடற்குப் பிறர் உளம் நடுங்குவர்.

அத்துறையின் சார்பில், பல்வேறு தேயத்தினின்றும் வந்து தங்கி யிருக்கும் பல்வேறு மொழியாளரும் தம்முட் கலந்து மகிழ்ந்து இன்புறு வர். ஆதலின், அந்நகர் வாணிகத்தொழிலிற் சாலச் சிறந்து விளங் கிற்று என்பது யாவர்க்கும் உடன்பாடேயாகும். அக்காலத்திலேயே தமிழ்மக்கள் கருங்கடலிற் பெருங்கலங்களைச் செலுத்துதலில் பயிற்சி மிக்கிருந்தனர் என்பது சிறப்புடையதேயாம். இது நிற்க, இனி உள் நாட்டு வாணிகத்தை ஒருசிறிது நோக்குதும் :

பண்டைக்காலத்தில் நந்தம் தமிழ் நாட்டில் பலவகைத் தொழில் களும் நிகழ்ந்துவந்தன. பட்டினுலும் பருத்தியினுலும் எலிமயிர் முதலிய மயிரினுலும் பலவகை ஆடைகள் நெய்தனர்; கிழியானும் கிடையானும் தொழில்பல பெருக்கினர். ஐவகைத் தொழிலாளரும் தத்தம் வினைத் திறத்தில் மேம்பாடுற்றிருந்தனர். ஆதலின், பலவகைப் பொருள்களை மறுகிடைப் பகருவர். அக்காலத்தில், மதுரைநகரில் நிகழ்ந்த வாணிகத் தைக்குறித்துக் கூறியிருப்பனவற்றை ஈண்டுச் சிறிது கூறுவோம்:

அந்நகரில் ஒருபால், பலவகையான பண்டிகளும் கவசங்களும் கிடுகுகளும் குத்துக்கோல்களும் ஈர்வாள் முதலியவும் விற்கப்படும். ஒருபால் செம்பு வெண்கலம் முதலியவற்ருல் சமைத்தனவும், யானை

யின் மருப்பினால் இழைத்தனவும், கயிற்றினால் முடித்தனவும் பரப்பி வைத்திருப்பர். ஒரு சார், வயிரம் மரகதம் மாணிக்கம் புருடராகம் வயிடூரியம் நீலம் கோமேதகம் முத்து பவளம் என்னும் நவமணிக் கடைகளும், சாதரூபம கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொற்கடைகளும் பொலிவுறும்.

ஒரு சார், பட்டினாலும் பருத்தியினாலும் எலிமயிராலும் செய்யப் பட்ட பலவகை அறுவைகளும், ஒரு சார், நெல் புல் வரகு தினை சாமை இறுங்கு தோரை வெதிர்நெல் என்னும் எண்வகைத் தானியமும், எள் கொள் உழுந்து பயறு துவரை கடலை அவரை மொச்சை என்னும் எண்வகைத் தவசமும் என்றும் விலையாகும்; வேறு பல் பொருள்களும் விற்கப்படும்.

மேற்கூறியவற்றால் நம் நாட்டின் இருவகைப்பட்ட வாணிகத்தின் பெருஞ்சிறப்பும் இனிது விளங்கும்.

பண்டைத் தமிழ்மக்கள் வாணிகத்தில் தேர்ந்திருந்தனராதலின், அவர்கள் எண்ணும் எழுத்தும் நன்கு பயின்றிருத்தல் வேண்டும் என்பது தானே போதரும். ஆயிரம் வரைக்கும் உள்ள எண்ணின் பெயர்களும், வெள்ளம் ஆம்பல் என்னும் பேரெண்களும், ஒன்றற்குக் கீழ்ப்பட்ட சிற்றெண்களும், ஆழாக்கு உழக்கு உரி கலம் முதலிய அள வுப்பெயர்களும், மஞ்சாடி கழஞ்சு தொடி முதலிய நிறைப் பெயர் களும், பிறவும் தனித் தமிழ்ப்பெயர்களாகக் காணுதலே பண்டைத் தமிழ்மக்களின் கணிதநூற் புலமையைத் தெளிவுறக் காட்டும். இற் றைக்கு இரண்டாயிரம் யாண்டிற்கு முற்பட்ட தொல்காப்பியம் என் னும் இலக்கணநூலில், நிறைப்பெயர், அளவுப்பெயர், எண்ணுப் பெயர்களைக் கூறியிருப்பதே பண்டைத் தமிழ் மக்களின் எண்ணுப் பயிற்சிக்கு இயைபுடைச் சான்றாகும். அன்றியும்,

> 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்னும் முதுமறை, பழைய தமிழ்மக்கள் எண்ணிலும் எழுத்திலும் கண்ணிய ஊற்றத்தைத் தெள்ளிதின் தெரிவிக்கும். அக்காலத்தில் வாணிகர், கொள்வதூஉம் மிகை கொள்ளாது கொடுப்பதூஉம் குறை கொடாது' வாணிகம் நடத்தி வந்தனர் என்பதை உளங்கொள் வோர்க்கு, அவரது வாணிக முறைமை தானே நன்கு விளங்கும்.

பொருள் தருக:—

ஒளிர்வுற்று, யானை மருப்பு, கடுவாய், கருங்கலங்கள், இருக்கை, திரு, புலம்பெயர் மாக்கள், ஓசுநர், ஊன்மலி, பொற்பணி, கடும்பரி, மறுகு, கிடுகு, அறுவை.

II. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—

நொடியளவும் மடிவின்றி, உளம் நடுங்குவர், சாலச்சிறந்து, ஈண்டு, பொலிவுறும், போதரும், உளங்கொள்வோர்க்கு.

III. விடை கூறுக:—

1. ப்ளினி என்பவர் யார்?

2. அவர் காலம் எது?

3. பெரிப்ளூஸ் என்பது யாது? அதனால் நாம் அறிவன யாவை?

4. தாலமி காலத்தில் விளங்கிய துறைகள் எவை?

5. தமிழர் ரோம் நாட்டாரோடு வியாபாரம் செய்தனர் என்று கூறக் காரணமென்ன?

6. பண்டைக் காலத்தில் முசிறித்துறை சிறந்து விளங்கிய தென்பதை எவ்வாறு அறியலாம்?

7. தமிழர் வாணிகத்தைப் பற்றிப் பெருங்கதை கூறும் கருத்துக்கள் யாவை?

8. புகார்த் துறைக்கண் வந்து இறங்கும் பொருள்கள் யாவை?

9. பண்டைக் காலத்தில் மதுரையில் நடந்த வாணிகத்தைக் குறித்து உனக்கு என்ன தெரியும்?

10. பண்டைத் தமிழர் எண்ணுப் பயிற்சி மிக்குடையவர் என்பது எதனால் விளங்கும்?

11. ஆம்பல், மஞ்சாடி, உரி - பொருளை விளக்குக.

# 3. இரட்டைப் புலவர்

**மணி. திருநாவுக்கரசு முதலியார்**

இற்றைக்குச் சற்றேறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழவள நாட்டின்கண் ஆமிலந்துறை என்னும் ஊரிலே செங்குந்தர் மரபிலே இருவர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரையொருவர் எவ்வாற்றானும் ஒத்திருந்தமையானும், ஒருங்குசேர்ந்து செய்யுள் பாடி வந்தமையானும் இரட்டையர் என வழங்கப்பட்டனர். இவர் தம்முள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். முன்னை வினைப்பயனாலே கால் முடம் பட்டாரேனும் அறிவான் முடம்பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார் குருடர். இவ்விருவருக்கும் முதுசூரியர் என்றும் இளஞ்சூரியர் என்றும் முறையே பெயர் வழங்கலாயின. முடவர், குருடர் தோள்மீது இவர்ந்து அவருக்கு வழி காட்டுவர்; குருடர் முடவரைச் சுமந்து செல்வர். இவ்விருவரும் உறவின் முறையால் ஒருவருக்கொருவர் அம்மான் சேயாகவும், அத்தைமகனாகவும் அமைந்தனர். இவர், திருவருட் செல்வம் பெற்றவராய்க் கல்வி வளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் உழைப்புமின்றி எளிதாகப் பாடிய காரணத்தாலே தெய்வப் புலவர் எனவும் சிறப்பித்தோதப் பெறுவர்.

இப்புலவர் தமது சமயமாகிய சைவ சமயத்திலே பெரும்பற்றும் அன்பும் உடையராய்த் திகழ்ந்தனர். தமது வாழ்நாள் முழுவதும் சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று, ஆங்காங்குக் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள அருட்பெருங்கடவுளைப் பலவாறு கனிவு தோன்றப் பழிச்சுதலும், தணிவு தோன்ற உள்ளமுருகிச் சிந்தித்தலும், பணிவு தோன்றத் தலையாரக் கும்பிட்டு வணங்குதலும் ஆகிய இவற்றையே அரும்பெருந் திருப்பணியாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்; அக்காலத்துச் செந்தமிழ் நாட்டிலே வதிந்த செல்வரை யணுகி, அவர்மீது அரிய பெரிய தமிழ்ச் செய்யுட்களைப் பாடிப் பரிசு பெற்று அதனால் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு பாட்டையும் இருவரும் கலந்தே பாடுதல் இவருக்கு இயல்பு. ஒவ்வொரு நூலையும் இருவரும் சேர்ந்தே பாடி முடிப்பர். ஒரு பாட்டில் அரைப்பகுதியை ஒருவர் பாடி முடிக்க மற்றப் பகுதியைக் கருத்துப் பிறழாது சொல்வகையும் ஒப்ப, ஒருவரே பாடியதுபோலத் தோன்றுமாறு மற்றவர் பாடி முடிப்பர். இப்பரிசு

எவரானும் பாராட்டப்படு மென்பதில் ஐயமுண்டோ ? உறுப்பானும் புலத்தானுங் குறைபாடுடைய இவ்விருவரும் கல்வி கற்றலே அருமை ! அதனினுங் கவி பாடுவதென்றால் அ..து அருமையினும் அருமை யன்றோ ! அங்ஙனம் பாடுங் கவிகளும் சொற்சுவை பொருட்சுவை செறிந்திருத்தல் எல்லாவற்றினும் அருமையாதலை மறுப்பார் யாவர் ? இதனால் இவர் கற்றார் கல்லாதார் ஆகிய எல்லாரானும் நன்கு மதிக்கப் பட்டுத் தெய்வப் பாவலர் என்னும் புகழுரையும் பெற்று இனிதுறைவா ராயினர்.

இவ்விருவரும் சிவஸ்தல யாத்திரை செய்து போதருங்கால், ஒரு நாள் பூலோக கைலாயம் எனப் புகழ் பெற்ற சிதம்பரத்துக்குச் சென்று, ஆண்டு, பொன்னம்பலத்தே வீற்றிருக்கும் இன்னமுதை இரு கண்களாலும் பருக விழைந்து, கோயிலுக்கு வழிக்கொண்டனர். அப் போது இடைவழியில் செல்வ மிக்குடைய ஒருவன், ஆடை அணிகள் மட்டுமிதமின்றி அணிந்து போதலை முடவர் கண்ணுற்றுப் பரிசிலைக் கருதி, அவனைப் புகழ்ந்து முதலிரண்டடி தொடுத்துப் பாட, குருடர் பின்னிரண்டடி பாடி முடித்து நின்றனர். அவிழ்ச்சுவையே யன்றித் தமிழ்ச்சுவை யறியாத அச்சீமான் செல்வச் செருக்கால் நிமிர்ந்து நெடு மரம்போல் நின்றான். அத்தகைமையைக் கண்ட முடவர்,

மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—

என்று துவங்கிப் பாடினார். அக்குறிப்பினை அறிந்த குருடர் கவிப் பொலிவைக் காணற்குரிய கண் அச்செல்வற்கில்லை என்பதை உணர்ந்து,

—ஆடகப்பொற்

செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயக னானால்.

எனக் கூறி முடித்தனர். அப்பாட்டைக் கேட்டார் பலர் அதன் பொருளை வியந்து, அச்செல்வனுக்கு இவர்தம் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். அதன் பின்னர், அவனும் தனது குற்றத்தை யுணர்ந்து அவரை உபசரித்து, வேண்டும் பரிசிலளித்துக் கொண்டாடி னன்.

பின்னொருகால் இரட்டையர் சிவராசதானியாகிய மதுரைமாநகரஞ் சென்று, ஆலவாயின் அவிர்சடைக் கடவுளைத் தரிசிக்க விழைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடப் புக்கனர். அப்போது முடவர் கரையின் மேல் அமர்ந்திருந்தனர். குருடர் படித்துறையில் இறங்கித் தமது ஆடையைத் துவைத்து அலசும் பொழுது, அது கையினின்று நழுவி விட்டது. நழுவிய ஆடையைத் தேடித் தண்ணீரைத் தடவித் தடவி நண்பர் தவித்தலைக் கண்ணுற்ற முடவர்,

அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ?

எனக் கூறி மைத்துனக் கேண்மையான் எள்ளி நகையாடினர். அது கேட்ட குருடர் நாணி,

—அப்படியே

ஆனாலும் கந்தை, அதிலுமோர் ஆயிரங்கண்;
போனால் துயர்போச்சுப் போ.

என்று இயம்பினர். அதுகேட்ட முடவர்,

கண்ணாயிரமுடைய கந்தையே ஆனாலும்
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ?

என்று மீண்டுஞ் செப்பக் குருடர்,

—எண்ணாதீர்

இக்கலிங்கம் போனாலென்? ஏகலிங்க மாம்மதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை.

என்று விடையிறுத்தனர். உடனே அவ்வாடை காற்றால் உந்தப்பட்டுக் கரை சேர்ந்தது. பின் இருவரும் சொக்கலிங்கப் பெருமானையும் அங் கயற் கண்ணியையும் தொழுது மீண்டு, அத்தலத்தின்கண் சின்னாள் வதிவாராயினர்.

இரட்டையர் ஒருகால் ஆசுகவி பாடுவதில் தமக்கிணை தாமே யாகிய காளமேகப் புலவரைச் சந்தித்து அவருடன் கமலாலயம் எனச் சீர்த்திபெற்ற திருவாரூரை அடைந்து, தியாகராயப் பெருமானை முருகி வளர்ந்த அன்போடு வணங்கினர். அப்போது குருடர் சிவபெரு மானைப் பாவால் பரவ நினைந்து,

நாணென்றால் நஞ்சிருக்கும், நற்சாபங் கற்சாபம்
பாணந்தான்...

என்ற அளவில் அவருக்கு நாத்தடைப்பட்டது. முடவருக்கும் அதனை முடிக்கச் சீர் வரவில்லை. இருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்பட்ட அளவில், அவ்வேளை அருகே யிருந்த காளமேகப்புலவர் உடனே 'மண்தின்ற பாணமே' என்றனர். இச்சீர் எழுந்த மாத்திரையானே முடவர்,

— தாணுவே

சீராரூர் வாழுஞ் சிவனே சிரிப்பன்றே
நேராரூர் செற்ற நிலை.

என்று கூறி, வெண்பாவை நிரப்பினர். பின்னர், இரட்டையரும் காளமேகப் புலவரும் ஒருவரோ டொருவர் அளவளாவி,

'உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்னுந் தமிழ்மறையின்படி, மிக வருத்தத்துடன் பிரிவாராயினர்.

சில்லாண்டுகள் சென்ற பின்பு இரட்டையர் திருவானைக்காவிற்குச் சென்று திருக்கோயில் வழிபாடு புரிந்து, காளமேகப் புலவரைக் காண விழைந்து அவரகத்துக்குச் சென்றனர்; அப்போது அங்குள்ளார் அன்றுதான் அவர் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தாரெனவும், அப்போதுதான் அவரது யாக்கை சுடலைக்குக் கொண்டு போகப்பட்ட தெனவும் இயம்பக் கேட்டு, நடுக் கடலிற் கவிழ்ந்த கலம்போல் வருந் திச் சுடலைக்கு விரைந்து சென்றனர். ஆண்டுப் பிணம் வேதலைக் கண்டு மீளாத் துயருற்று,

ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்காள மேகமே! — பூசுரா!
விண்தின்ற செந்தழலில் வேகுதே, ஐயையோ!
மண்தின்ற பாணமென்ற வாய்.

என்று பாடிப் புலம்பினர்.

இளமையிலே கவி பாடுந்திறன் வாய்க்கப் பெற்று, கலம்பகம், உலா முதலிய சிறந்த பிரபந்தங்களைப் பாடி முடித்த செந்தமிழ்ப் புலவ ராகிய இரட்டையர் இருவரும் சிறிது காலஞ் சென்றபின் ஒருங்கே செம்பொருளின் அம்புயத்தாள் சேர்ந்தனர்.

I. பொருள் கூறுக:—

*சமயம், பழிச்சுதல், பரிசு, புலம்.*

II. வாக்கியங்களில் அமைக்க:—

*திருவருட் செல்வம், வினைப்பயன், உள்ள முருகி,*

III. விடை தருக:—

1. *இரட்டையர்——ஊரும், மரபும் கூறுக.*
2. *இரட்டையர் எக்காரணம் பற்றித் தெய்வப் புலவர் எனப் பட்டனர்?*
3. *இரட்டையர் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்?*
4. *கற்றாரும், கல்லாதாரும் இரட்டையரை நன்கு மதிக்கக் காரணம் யாது?*
5. *பூலோக கைலாயம் எனப்படுவது எது?*
6. *நெடுமரம் போல் நின்றவன் யார்?*
7. *செல்வனைக் கண்டு முடவர் யாது பாடினர்? குருடர் யாது பாடினர்?*
8. *ஆடை நழுவிச் சென்றதும், குருடருக்கும் முடவருக்கும் நடந்த உரையாடலைச் சுருக்கிக் கூறுக?*
9. *புலவர் தொழில் யாது?*
10. *மண்தின்ற பாணமே—என்ற தொடர் யாரால் முதலில் பாடப்பட்டது? எப்பொழுது?*

# 4. பழந்தமிழ் உரை நடை

## 1. இறையனார் அகப்பொருள் உரை

1. அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசிகடுகலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின

ஞான்று என்னை உள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லோரும் போயினர். பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன், "இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க" என்று எல்லாப் பக்கமும் ஆட் போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, "பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்" என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அது நானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதி, பீடத்தின் கீழிட்டான்.

## 2. இளம்பூரணர் உரை நடை

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கவென்பது மரபு. என்னை? "ஆயிர முகத்தா னகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின், கற்று வல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்க மான் போல மாணுக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப் பாயிரம் பொதுவும் சிறப்பும் என இரு வகைத்து. எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப்படுதலிற் பொதுவெனப் பட்டது. "ஈவோன்றன்மை" முதலிய நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப்பாயிரம் போலாது நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய உணர்த்தலின் அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்தலால் சிறப்பெனப்பட்டது. [தொல்காப்பியம், எழுத்ததிகாரம்.]

## 3. பரிமேலழகர் உரைநடை

கடவுள் வாழ்த்தாவது, கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். வான்சிறப்பாவது அக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். இல்வாழ்க்கையாவது இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. வாழ்க்கைத் துணை நலமென்பது அவ்வில் வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை. அன்புடைமையாவது வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல். இல்லறம் இனிது நடத்தலும், பிற வுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. இனியவை கூறலாவது மனத்தின் கண் உவகையை வெளிப்படுப்பன வாகிய இனிய சொற்களைச் சொல்லுதல், நடுநிலைமையாவது, பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது நன்றி செய்தார்மாட்டு அந் நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே, அவ்விடத்தும் சிதையலாகா தென்றற்கு செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது. அடக்கமுடைமையாவது மெய் மொழி மனங்கள் தீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனாதல். அஃது ஏதிலார் குற்றம்போற் றங்குற்றமும் காணும் நடுவு நிலைமையின் பின் வைக்கப்பட்டது.

## 4. நச்சினார்க்கினியர் உரைநடை

எழுத்தென்றது யாதனை யெனின், கட்புலனாகா உருவுங் கட்புலனாகிய வடிவு முடைத்தாக வேறு வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம். கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருளுணர்த்தாமையானும், முற்கு, வீளை, இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினர். ஈண்டு உருவென்றது மனனுணர்வாய் நிற்கும் கருத்துப் பொருளை. அது செறிப்பச் சேறலானுஞ் செறிப்ப வருதலானும் இடை யெறியப்படுதலானும் இன்ப துன்பத்தை யாக்கலானும் உருவு முருவுங் கூடிப் பிறத்தலானும் உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து கட்புலனாந் தன்மையின்றிச் செவிக்கட் சென்று உறும் ஊறுடைமையானும் விசும்பிற்

பிறந்து இயங்குவதோர் தன்மை யுடைமையானுங் காற்றின் குணமாவ தோர் உருவாம். வன்மை, மென்மை, இடைமை கோடலானும் உருவேயாயிற்று. இதனைக் காற்றின் குணமே யென்றல் இவ்வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குணமென்பாரும் உளர்.

I. பொருள் கூறுக:—

1. *வற்கடம், புரந்தரகில்லேன், தேயம், ஞான்று, வம்மின். புடைபடக் கவன்று, அழல்*
2. *பாயிரம், பனுவல், வாயின் மாடம், குறிச்சி,*
3. *ஏற்புடை, நொதுமல், வழூவாது.*
4. *கட்புலனாகா, வினை, இலதை,*

II. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

*வற்கடகம், அணியிழை மகளிர், இன்றியமையாச் சிறப்பு, இனியவை கூறல், உந்தி.*

III. விடை எழுதுக:—

1. *வற்கடம் எவ்வளவு காலம் நீடித்தது?*
2. *புலவர்கள் பாண்டிய நாட்டை விட்டு நீங்கக் காரணம் யாது?*
3. *அரசன் வருந்தக் காரணம் யாது ?*
4. *அவன் யாரை வேண்டினன்?*
5. *கடவுள் எவ்வாறு உதவி செய்தார்?*
6. *பாயிரம் என்பது யாது ?*
7. *பாயிரம் கேட்பதால் பயன் யாது?*
8. *பாயிரம் எத்தனை வகைப்படும் ?*
9. *பொதுப் பாயிரத்தின் இயல்பு யாது ?*
10. *சிறப்புப் பாயிரத்தின் இயல்பு யாது?*
11. *இல்வாழ்க்கை யாவது யாது ?*
12. *நடுவு நிலைமை யாவது யாது ?*
13. *எழுத்து எனப்படுவது யாது ?*
14. *எண் வகை நிலம்—எவை ?*

# 5. சேரன் செங்குட்டுவன்

வித்துவான். ம. வி. இராகவன்

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி வழங்கும் நாடு **தமிழ் நாடு** எனவும் **தமிழகம்** எனவும் பெயர் பெறும். இத் தமிழ் நாடு முற்காலத்துச் **சேரநாடு, சோழ நாடு, பாண்டி நாடு** என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து, முறையே **சேர சோழ பாண்டி** மன்னர்களால் புரக்கப்பட்டு வந்தது. இம் முப்பிரிவுகளுள் சேர நாடு என்பது கருவூர்ப் பிரதேசமும், கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்களும், கொச்சி திருவாங்கூர்ச் சமஸ்தானங்களும், மைசூர் நாட்டின் தென் பகுதியும், மேலைக் கடற்கரைப் பிரதேசமும் அடங்கிய நிலப்பரப்பாகும். **வஞ்சி** என்னும் மாநகர் அந்நாட்டின் கோநகராக விளங்கியது. சேர மன்னர் அப்பெருநகரில் இருந்து கொண்டு சேர நாட்டைப் பன்னெடுங்காலம் சிறப்புறப் புரந்து வந்தனர்.

அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கு எய்தி, அவற்றிற்கு ஏற்பப் பேரறிவும் பெருங்கொடையும் உடையராய், ஓங்கிய தனிக்கோல் ஓச்சி நீங்காத நல்லிசையினை நிறுத்தின முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும் சேரரே வீரம்பற்றி ஏனை இருவரினும் சிறப்பித்துப் போற்றப்படுவோர் ஆவர். சேர மன்னர் மற்றைச் சோழ பாண்டிய மன்னர்களைப் போலவே படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வரும் தமிழ்ப் பழங்குடியினர்; முடியும் குடையும் பிறவும் உடைய பேரரசர். இவர்கள் நெடுங்காலம் வரை பிற நாட்டு மன்னர்கட்கு அடங்காது தனியரசு செலுத்தி வந்துள்ளனர். இவர்களுட் பலர் பல காலங்களில் ஏனைச் சோழ பாண்டியர்களையும் வென்று தமிழகம் முழுவதையும் தம் கீழ்ப்படுத்தி யுள்ளனர்; சிலர் சில சமயங்களில் வடநாடுகளின் மீதும் படைகொண்டு சென்று வடவரசர் பலரையும் வென்று அடக்கி அரும் புகழ் பெற்றுள்ளனர்.

இங்ஙனம் வெற்றிச் சிறப்புடைய செல்வச் சேரர்களுள் சற்றேறக் குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் **நெடுஞ்சேரலாதன்** என்னும் பெயரிய பேரரசன் ஒருவன் வீரம் சிறந்து விளங்கினன். அவன் தன் தோள்வலியாலும், வாள்வலியாலும், படைவலியாலும் பிற மன்னரை நடுங்கச் செய்து வந்தனன்; வட நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, இமயமலை வரையில் உள்ள அரசர்களை அடக்கி,

தன் வெற்றிக் குறியாக இமயமலையில் தன் குடிக்குரிய இலச்சினையாகிய வில்லைப் பொறித்துவிட்டு மீண்டனன். அதுமுதல் அவன் அச் சிறப்புப் பற்றி **இமய வரம்பன்** என்னும் அடைமொழியோடு **இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்** என அழைக்கப்பட்டனன். அவனுக்கு இரண்டாவது மனைவியின் வயிற்றில் **செங்குட்டுவன், இளங்கோ** என்னும் வரம்மிகு மைந்தர் இருவர் தோன்றி வளமுற வளர்ந்து வந்தனர். அழகும் ஆண்மையும் ஆற்றலும் சிறந்த அம் மைந்தர் இருவரும் மொழிக்கல்வியும் படைக்கல்வியும் பாங்குறப் பயின்று அவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

ஒரு நாள் அவ்விளைஞர் இருவரும் தம் தந்தையாரோடு அரசவை யில் ஒருங்கு அமர்ந்திருந்தனர். அவ்வமயம் அங்குப் போந்த நிமித்தி கன் ஒருவன் அவ்விருவரையும் மாறிமாறி உற்று நோக்கி, அரசனை விளித்து, 'இவ்விருவருள் இளைஞனான இளங்கோவே அரசனாதற்கு உரியவன்' என்று மொழிந்தனன். அவ்வுரை கேட்ட இளங்கோ, அவனைச் சினந்து, 'மூத்தவன் இருக்க இளையவன் அரசனாதல் முறையன்று' எனக் கூறி, அவ்வவைக்கண் இருந்தோர் அனைவரும் அறியத் துறவறம் ஏற்றுக் கோமனை நீத்துக் குணவாயிற் கோட்டத்து இருந்து தவவாழ்க்கை மேற்கொண்டு **இளங்கோ அடிகள்** எனப் பட்டார்.

நெடுஞ்சேரலாதனுக்குப் பின்னர்ச் செங்குட்டுவன் சேரநாட்டுப் பேரரசனாயினன். இவன் தன் தந்தையோடு உடனிறந்த தாயின் உருவத்தைச் சிலையில் அமைத்து வழிபட விழைந்தான்; அதன் பொருட்டுக் கல் கொண்டுவர இமயம் சென்றான்; இடையில் எதிர்ப் பட்ட வேந்தரை வீரமொடு தாக்கி வாகை சூடினான்; இமயத்தினின்றும் இருங்கல் கொண்டு மீண்டு தன் நகரடைந்து அதில் தன் தாயின் உருவத்தைச் செதுக்கி வைத்து, அதனை வணங்கி வந்தான். என்னே இவன் தன் தாய் அன்பு!

செங்குட்டுவன் சேரர் மரபிற்குச் சிறப்பாக உரிய வீரத்தில் தன் முன்னோர் யாவரினும் விஞ்சி, அருஞ் செயல் பல புரிந்து வீறுபெற்று விளங்கினான். இவன் ஆக்கம் கண்ட சோழ பாண்டியர்கள் இவன் பால் அழுக்காறு கொண்டு, இவனைப் பொருது அடக்க எண்ணினர். அழுக்காற்றினால் அறிவிழந்த அவர்கள் பெரும்படையோடு சென்று **கொங்கர் செங்களம்** என்னும் இடத்தில் செங்குட்டுவனோடு கடும்

போர் தொடங்கினர். எலிப்பகை நாகத்தை என் செய்யும்! அப்போரில் செங்குட்டுவனே எளிதில் வெற்றிபெற்றான். பகைவர் சிறப்பிழந்து சிதறி ஓடினர். பின்னர் இவன், கடலை அரணாகக் கொண்டு அதனிடை இருந்து துன்பிழைத்துவந்த தெவ்வரை, கடலில் நாவாயைச் செலுத்தி ஆண்மையோடு பொருது அழித்து அழியாப் புகழ் பெற்றான்; தனக்கும் தன் நண்பனான மோரிய மன்னனுக்கும் பகைவனான **பழையன்** என்னும் குறுநில மன்னனை வெருவரப்பொருது வெற்றி மாலை சூடினான்; தன் மாமனாகிய சோழ மன்னன் இறந்தானாக, அவன் மகன் அரசு நிலை எய்தியதனை ஏற்றுக் கொள்ளாமல் இடர் விளைத்த சோழ மரபினர் ஒன்பதின்மரை **நேரிவாயில்** என்னும் இடத்தில் சேர எதிர்த்து ஒரு பகற்பொழுதில் வென்று, தன் மைத்துனனுக்கு மணிமுடி சூட்டி மகிழ்ந்தான். இங்ஙனம் இச் சேர மன்னன் செய்த பேரமர்கள் கணக்கிலவாகும். இவன் சென்ற போர் தோறும் வெற்றியே பெற்று விறல் மிகு வீரனாக விளங்கினான்.

இவன் காலத்தில் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகி என்பாள், தன் காதற் கணவனாகிய கோவலனைக் கள்வனெனக்கூறிக் கொல்வித்த பாண்டியனைப் பழி வாங்கி, மதுரை மாநகரை மண்டெரியூட்டி, அந் நகரினின்றும் நீங்கி, எங்கும் நில்லாது நிலையாது நெடிது சென்று, சேர நாடு அடைந்து **திருச்செங்குன்றம்** என்னும் மலைமீதேறி, ஒரு வேங்கை மரத்தின் நிழலில் தங்கி, ஆண்டு இருந்தோர் காண, விண்ணினின்றும் இறங்கிய வண்ண விமானத்தில் தெய்வ வடிவில் தோன்றிய கோவலனோடு வானுலகு எய்தினள். தன் காதல் மனைவியாகிய **இளங்கோ வேண்மாளோடும்,** இளவலாகிய இளங்கோவடிகளோடும் மலைவளங் காணச் சென்ற செங்குட்டுவன் அவ் வியத்தகு செய்தியை அம்மலையில் வாழும் வேடுவர் கூறக்கேட்டு இறும்பூது எய்தி, தன் நாடு நோக்கி வந்த பத்தினிக் கடவுளை ஆலயம் எடுத்து வழிபடுதல் வேண்டும் எனத் தன் மனைவி கூற, அவ்வாறே அப்பத்தினியின் படிவம் சமைக்க ஏற்ற சிலையை இமயமலையினின்றும் கொண்டுவரத் துணிந்தான்.

செங்குட்டுவன் குறித்த வேளையில் நால்வகைப்படையும் சூழ்ந்து வர வடதிசை நோக்கிச் சென்றான்; அங்கு இவனது வலியும் வீரமும் அறியாது இவனை எதிர்த்த வடவரசருள் பலரைப் பொருது புறந்தரச் செய்தான்; சிலரைச் சிறுமையுறச் செய்தான். பின்னர் இவன்

இமயம் சென்று தக்க சிலையைத் தேர்ந்து எடுத்து, அதனைத்தான் சிறை செய்த பகையரசர் முடிமீது ஏற்றி வந்து கங்கையில் நீராட்டித் தூய்மை செய்வித்து, மீண்டு தன் நாட்டை அடைந்தான். அங்கு இவன் பெருங் கோயில் ஒன்று கட்டுவித்து, அதில் வீரபத்தினியின் படிமத்தை நிறுத்தி, அதற்கு முறைப்படி சிறப்புறப் பெருவிழாச் செய்வித்தான். அதனை ஏற்று மகிழ்ந்த அக்கற்புக் கடவுள் யாவரும் காண விண்ணில் தோன்றிக் காட்சி வழங்கி, இவனை வாழ்த்தி மறைந்தனள். அனை வரும் அப் பத்தினியின் பெருமையை வியந்து சேரனைப் புகழ்ந்தனர்.

சேரன் செங்குட்டுவன் வைதிக மதத்தினன்; சைவ சமயத் தைத் தழுவிச் சிவபெருமானை வழிபட்டு வந்தவன். எனினும், இவன் பிற மதங்கள் பலவற்றையும் ஒப்ப மதித்து ஓம்பி, வந்தனன். இவன் ஆட்சிக் காலத்தில் சேர நாட்டின்கண் சமரச சன்மார்க்க நெறி தழைத்து ஓங்கியது. பல்வேறு மதங்களைத் தழுவிய மக்களும் தம் முள் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைகொண்டு உயர்வாக வாழ்ந் தனர். இவன்பால் அடற்கரிய கடற்படையும் நிகரற்ற நால்வகை நிலப்படையும் நன்கு அமைந்திருந்தன. **ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தின**ரும் அரசியலில் தலைமை பூண்டு ஆட்சியைத் திறமையாக நடத்தி வந்தனர். இவன் தனது மரபுக்கு உரிய வில்லோடு, முறையே சோழபாண்டியர்கட்கு உரிய இலச்சினைகளாகிய புலியையும் மீனையும் ஒருங்கு சேர்த்து அமைக்கப்பெற்ற அரசியல் முத்திரையை உடையவனாக இருந்தான். இதனால் இவன் அக்காலத்துத் தமிழரசர் மூவருள்ளும் தலைமை பெற்று விளங்கினான் என்பது தோன்றுகின்றது.

வரையாது வழங்கும் வண்மைசான்ற செங்குட்டுவன் தமிழ் மொழியின்பால் பற்றுமிக உடையனாய் அம்மொழியிற் புலமை சிறந்த புலவர் பலரைப் பரிவோடு ஆதரித்து வந்தான். அங்ஙனம் இவனால் ஆதரிக்கப்பெற்ற நல்லிசைப் புலவருள் சிறந்தோர் **பரண**ரும் **சாத்தனா**ரும் ஆவர். சாத்தனார் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய **மணிமேகலை**யை இயற்றித் தந்து இரும்புகழ் கொண்டவர். பரணர் **பதிற்றுபத்து** என்னும் பழைய சங்க நூலிற் செங்குட்டுவனது வீரச் செயல்களையும், வெற்றிப் பெருமையையும், வள்ளற்றன்மையையும் உள்ளவாறே உவந்து புகழ்ந்து பாடியுள்ளார்.

இங்ஙனம் அரசர் நடுங்கும் ஆண்மையும், புலவர் பாடும் புகழும் உடையோனாகிய சேர மன்னன் ஐம்பது ஆண்டுகள் கண்ணை இமை

கள் காப்பதுபோன்று குடிமக்களைக்காத்து வந்தான். இவன் ஆட்சியில் மக்கள் இன்பமே நுகர்ந்து இனிது வாழ்ந்தனர். தமிழ் மொழியும் தமிழ் நாடுமே தலைமை பெற்றுச் சிறந்து விளங்கின.

### அருஞ் சொற்கள்

*தனிக்கோல், இலச்சினை, விளித்து, கோநகர், கோட்டம், கற்புக் கடம், படிவம், தெவ்வர், ஐம்பெருங்குழு, எண்பேராயம்.*

### பயிற்சி

விடை கூறுக ;—

1. *சேர நாடு யாது ? அதன் தலைநகரம் எது ?*
2. *தமிழ்வேந்தர் மூவருள்ளும் சேரர்க்குள்ள தனிச் சிறப்பு யாது ?*
3. *சேரர் சிறப்பியல்புகள் யாவை ?*
4. *இளங்கோ துறவறம் மேற்கொண்டது ஏன் ?*
5. *செங்குட்டுவன் தாய் அன்பு எவ்வாறு விளங்குகிறது ?*
6. *தமிழ் நாட்டில் செங்குட்டுவன் செய்த போர்கள் எவை ?*
7. *கொங்கர் செங்களப் போர், நேரிவாயிற் போர் இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.*
8. *கண்ணகி செய்தியைச் செங்குட்டுவன் அறிந்தது எவ்வாறு ?*
9. *இருங்கோ வேண்மாள் பத்தினிக் கடவுளை எவ்வாறு சிறப்பிக்க வேண்டுமென்று கூறினாள் ?*
10. *செங்குட்டுவன் பத்தினிப் படிமம் சமைக்கக் கல் கொண்டு வந்த செய்தியை எழுதுக.*
11. *செங்குட்டுவன் மதம், ஆட்சி—இவை பற்றிக் குறிப்பு எழுதுக.*
12. *செங்குட்டுவன் அக்காலத்துத் தமிழரசர் மூவருள்ளும் தலைமை பெற்று விளங்கினான் என்பது எவ்வாறு அறியப் படுகிறது ?*

# 6. குடும்பக் கலை

**வித்துவான். து. கண்ணம்மாள்**

ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தக்க வயதடைந்தவுடன் குடும்பப் பொறுப்பு ஏற்று நடத்துவது இயல்பு. குடும்பம் நடத்துவது என்பது ஒரு கலை. ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை, கூத்து முதலியவை எங்ஙனம் கலைகள் எனக் கருதப் படுகின்றனவோ, அங்ஙனமே குடும்பம் நடத்திச் செல்வதும் ஒரு தனிக் கலையே யாகும்.

குடும்பத்தை வெற்றியுடன் நடத்திச் செல்பவர், வாழ்க்கையைக் கவலையற்று இன்பமாகக் கழிப்பர். குடும்பக்கலை யறியாமல், குடும்பத்தை நடத்துபவர், பல அல்லல்களுக்கு ஆளாகிச் "சம்சார சாகரம் துக்கம்" என்று கூறிக் கொண்டு, 'இக்குடும்பத் தொல்லை என்று நீங்குமோ' என்று காலமெல்லாம் துன்புற்று, வாழ்க்கையை வெறுத்து என்றும் முணுமுணுத்துக் கொண்டிருப்பர்.

> "ஆன முதலில் அதிகம் செலவானல்,
> மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
> எல்லார்க்கும் கள்ளனய், ஏழ்பிறப்பும் தீயனய்
> நல்லார்க்கும் பொல்லனம் நாடு"

என்று கூறப்பட்டிருக்கும் தமிழ்ச்செய்யுள், குடும்பத்தை நடத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்பவனுக்கு முதற் பாடமாயிருக்கிறது. இஃதேபோன்று வள்ளுவப்பெரியார்,

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்று கூறியிருப்பதன் மூலம் மகளிர் தம் கணவருடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்தல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

'வருவாய்க்கு ஏற்ற செலவு' என்னும் முதற்பாடமே, குடும்பக் கலையை வெற்றியடையச் செய்யும் முக்கிய பாடமாகும். இதனைக் கருத்திற் கொண்டே குடும்பத்தின் தேவைகளைக் கவனித்தல் வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை இரு வகையாகப் பிரிக்கலாம், ஒன்று வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுபவை. மற்றொன்று ஆடம்பரமானவை,

சத்து மிகுந்த எளிய உணவு, தூய எளிய உடை, சுகாதாரத்திற் கேற்ற தேவைக்குரிய அளவு வீடு, கல்வி, மருத்துவ வசதி முதலியவை முதலினத்தில் சேரத்தக்கவை.

ஆடம்பர உணவு, தேவைக்கு மேற்பட்ட அகன்ற இடமுடைய வீடு, பட்டாடைகள், பகட்டான உடைகள், அணிகலன்கள். விலை உயர்ந்த பாத்திரங்கள், பிற சாமான்கள், அடிக்கடி படக்காட்சி பார்த்தல், விருந்துகள் நடத்துதல், பிரயாணங்கள் செய்தல், வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளுதல் முதலியவை இரண்டாவதினத்தில் சேர்க்கத் தக்கவை.

தேவைக்கு மேற்பட்ட சாமான்களை வாங்கிச் சேர்க்கும் வேலை, தேவையற்ற செயல்களில் ஈடுபடுதல் முதலியவை நாகரிகத்தின் பெயரால் பல குடும்பங்களில் நடைபெறுகின்றன. இதனால் பொருட் செலவு மிகுந்து, இன்றியமையாத செலவுக்குப் பொருள் முட்டேற்படுகின்றது; குடும்ப வாழ்வு தொல்லையாக மாறுகிறது.

நம் நாட்டில் செல்வந்தர் மிகச் சிலர். ஏழைகளே பெரும்பாலோர். இவர்கள் போதிய வருமானம் அற்றிருக்கையில், எது வாழ்வுக்குத் தேவை, எது தேவையில்லை என்பதைப் பகுத்தறிந்து வாழ்க்கை நடத்துவாராயின் வாழ்க்கையில் உள்ள பல தொல்லைகள் அகன்று, வாழ்க்கைத் துன்பம் இன்பமாக மாறும்.

இறைச்சி, மீன், முட்டை, நெய், பால் முதலியவற்றை நிறைய உண்டு வந்தாலன்றி உடல் உரத்துடன் இருக்க முடியாதென்று சிலர் கருதுகின்றனர். இதன் பயனாக வருமானக் குறைவுள்ளோர், இவற்றை வாங்கியுண்பதற்காகத் தங்கள் வருவாய்க்கு மீறிய செலவு செய்கின்றனர்.

பட்டாடைகள் போன்ற பகட்டான உடைகளை உடுத்திச் செல்வதுதான் மதிப்புக்குரியது என்று கருதிச் சிலர், அவற்றை வாங்குவதில் பெரும் பொருள் செலவிட்டுக் கடன் படுகின்றனர்.

இவ்வண்ணமே, வீட்டை அமைத்தல், வீட்டுக்குரிய தட்டு முட்டுச் சாமான்களை வாங்குதல் முதலியவற்றிலும் சிலர் பெரும் பொருளைச் செலவழித்துக் கடன்பட்டு அல்லலுறுகின்றனர்.

உடலை உரமுடையதாக வைத்திருக்கக் கூடிய வன்மை காய்கறி கீரை பருப்பு முதலியவைகளுக்குமுண்டு என்பதை இவர்கள் உணர வேண்டும். எவ்வுடையாயினும் தூய உடைக்கே மதிப்புண்டு என்பதையும், சிறு குடிலாயினும் துப்புரவாக இருத்தலே சிறந்தது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். பணத்தைச் செட்டாகவும், செம்மையாகவும், பயனுடையதாகவும் செலவிடவேண்டும். இவ் வண்ண மொழுகின் வாழ்க்கை வளமுடையதாகும்.

எனவே, குடும்பப் பொறுப்பேற்கு முன் **வருவாய்க்குத் தக்க செலவு** செய்வது என்று முதலில் திட்டப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வண்ணம் செலவுத் திட்டம் வகுக்கையில், உணவுக்கு, முதலிடமும், உடைகளுக்கும் உறைவிடத்திற்கும் இரண்டாவ திடமும் கொடுத்துச் செலவைத் திட்டம் செய்துகொள்ளுதல் வேண்டும். இதனை ஒழுங்காக முடிக்கக் குடும்பப் பொறுப்பேற்பவர் தத்தம் வீட்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை ஆயத்தம் செய்துகொள்ளுதல் வேண்டும். பெரும்பாலான குடும்பத்தவர்களுக்கு மாத வருவாயே கிடைக்கிறபடியால், ஒரு மாதத்திற்குரிய வரவு செலவுத் திட்டத்தை வகுத்துக்கொள்வது நலம்.

இதனை எவ்வாறு வகுப்பது? மாத வருமானத்தையும் வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கையையும் கணக்கில் வைத்துக் கொள்ள வேண்டும். உண்ண உள்ளோர் தொகை அதிகமாயும் வருமானம் குறைவாயுமிருந்தால், முதலில் உணவுக்காக வருவாயில் பெரும் பங்கை ஒதுக்கிவிட வேண்டும். உணவையும் கூடிய வரையில் காய்கறி உணவாக ஆக்கிக் கொள்ள வேண்டும், திரைப்படக் காட்சி, பிரயாணம், விருந்துசெய்தல் முதலியவற்றை அடியோடு நீக்குதல் வேண்டும். ஒரு சிறு பகுதியை உடைக்கென மிச்சம் பிடித்தல் வேண்டும். வீட்டு வாடகை, கல்வி போன்றவற்றை முதலில் கவனித்தல் வேண்டும். எஞ்சிய தேவைகளை வருமானம் உயர்கையில் பார்த்துக் கொள்ளலாம் என விடுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் செலவிடும் பணத்தைத் தவறாமல் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டில் அன்றாடம் நடைபெறும் செலவின் கணக்கு வைத்திராத குடும்பம் சீர்குலையுமாகையால், கணக்கு ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டும். நாள்தோறும் படுக்கைக்குப் போகுமுன் அன்று ஏற்பட்ட செலவை எழுதிக் கையிருப்புத்

தொகையை மீதி இருப்பாகக் கட்டவேண்டும். மாத முடிவில் செலவு செய்த தொகைகளைக் கூட்டி, வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நம் செலவு வருவாய்க்குள் அடங்குகிறதா ? கடன்வாங்கிச் செலவு செய்ய நேரிட்டுள்ளதா ? கடன் வாங்கிச் செலவு செய்யவேண்டிய தேவை என்ன ஏற்பட்டது? கடன் வாங்காமல் அதைச் சரிப்படுத்தியிருக்க முடியாதா ? என்பன போன்ற யோசனைகளுக்கு இடமேற்பட்டு, அடுத்த மாதச் செலவுத் திட்டத்தைக் கருத்தோடு செய்ய இடமளிக்கும். 'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு' என்னும் பழமொழியை எண்ணிக் குடும்பக் கணக்கு வைக்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

குடும்பச் செலவு வருமானத்திற்கு மேல் போகாமலிருக்க வேண்டுமானால், எப்பொருளையும் இன்றியமையாது தேவையானதுதானா என்று கவனித்துக் கையிற் காசு கொடுத்து வாங்கும் வழக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனால், அப்போது மாறுதலுக்குள்ளாகும் விலைகளின் விவரம் தெரிந்து, விலைக் கேற்ப, சில பொருள்களைக் குறைத்தும் கூட்டியும் வாங்கிக் கொள்ளலாம், விலை மலிவாக உள்ள காலங்களில், பருப்பு வகைகள், புளி, விறகு, பயறு வகைகள், மிளகாய், மிளகு, கடுகு போன்ற பொருள்களை மிகுந்த அளவில் வாங்கி வைத்துக் கொள்ளலாம்,

கையிற் காசு கொடுத்து வாங்காமல் கடன் வாங்கும் வழக்கத்தை மேற்கொண்டால், நாளடைவில் குடும்பம், கடனுக்குள்ளாகி அல்லலுறும் என்பதில் ஐயமில்லை.

குடும்பப் பொறுப்பேற்போர் வீட்டினுள் வேண்டாத சாமான்களைப் போட்டு நிரப்பி இடத்தை அடைத்து விடுதல் கூடாது; அசுத்தங்களும், மூலைகளில் குப்பை கூளங்களும், உத்தரத்தில் ஒட்டடை பூச்சி புழுக்கள் முதலியவைளும் சேராவண்ணம், அடிக்கடி கவனித்துத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஈ, கரப்பான், வண்டு, எலி முதலியவை சேருவதற்கிடமில்லாமல் மூலை முடுக்குகளில் சாமான் அடைப்பின்றி வைத்திருத்தல் வேண்டும். கழிநீர்ப் பாதை எப்போதும் தூய்மையாக இருத்தல் வேண்டும். வீட்டுப் பாத்திரங்கள், துணிகள் முதலியவற்றை அன்றாடம் துப்புரவு செய்து அவற்றிற்குரிய இடங்களில் வைத்திருத்தல் வேண்டும். பிள்ளைகள் புழுதியிற் புரளாதவாறு கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் சுகாதார விதிகளைக், கைக்கொண்டு நடந்தால், நோயினின்று குடும்பத்தைக் காப்பாற்றி விடலாம். இதனால் மருந்துச் செலவு ஏற்படாமலிருக்கும்.

இங்ஙனம், உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றில் துப்புரவாக இருக்குமாறு கவனித்து, இன்றியமையாது தேவைப்படுபவைகளை மட்டும் வாங்கி, வருவாய்க் கேற்பச் செலவிட்டு, வீட்டுக்கணக்கு வைத்து, செட்டாக நடத்தப்படும் குடும்பம் நாளடைவில் நன்னிலை எய்துதல் இயலும். இவ்வாறு குடும்பத்தை நன்னிலையில் நடத்தும் வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாகும்.

"இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை"

என்னும் திருவள்ளுவர் திருவாக்கு மனத்திற் பதிக்கத் தக்கதாகும்.

I. பொருள் கூறுக :--

*ஓவியம், சிற்பம், அல்லல், சாகரம், வளம், தன்கொண்டான், வாழ்க்கைத்துணை, உரம், துப்புரவு.*

**பயிற்சி**

II. விடை கூறுக:—

1. கலைகள் எனக் கருதப்படுவன எவை ?
2. வருவாய்க்கு மேல் செலவு செய்தால் வரும் தீமைகள் யாவை ?
3. இல்வாழ்க்கையில் கடன் ஏற்படாதிருக்க யாது செய்தல் வேண்டும் ?
5. ஆடம்பர வாழ்க்கை என்று எதனைக் கூறுதல் வேண்டும்?
4. நாள் தோறும் வீட்டுச் செலவுக் கணக்கை ஏன் எழுத வேண்டும் ?
6. குடும்ப வாழ்க்கையில் இருப்பவர் கடன்காரராவதற்குக் காரணம் என்ன ?
7. வீட்டை எவ்வாறு ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளுதல் வேண்டும் ?

III. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

குடும்பப் பொறுப்பு, கவலை யற்று, தேவைக்குரிய, துப்புரவு, நாளடைவில்.

# 7. செஞ்சிக்கோட்டை

T. S. உமாபதி M.A., L.T. Dip. in Geog.

**அமைப்பு :**

**செஞ்சிக்கோட்டை** தமிழகத்திற் காணப்படும் பண்டைக் கோட்டைகளுள் ஒன்று. இது தென்னார்க்காட்டு ஜில்லாவில் **செஞ்சியாறு** என வழங்கும் **வராக** நதியின் மேற்குக் கரையில் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. இதன் அமைப்பு வியக்கத்தக்கது.

இக் கோட்டை முக்கோணமாக அமைந்துள்ள மூன்று குன்றுகளை வன்மை மிக்க கருங்கற் சுவர்களால் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. இச் சுவர்கள் 60 அடி அகலமும், 20 முதல் 25 அடிவரை உயரமும் உள்ளவை. இவற்றின் புறத்தே 80 அடி அகலம் உள்ள அகழி இருக்கின்றது. இச் சுவர்களும் குன்றுகளும் இவற்றின் இடையில் சுமார் மூன்றுமைல் சுற்றளவுள்ள நிலப்பரப்பும் **கீழ்க்கோட்டை** எனப்படும். இதற்கு வடக்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றுமாக இரண்டு வாயில்கள் இருக்கின்றன. வடக்கே உள்ளதற்கு **ஆர்க்காட்டு வாயில்** என்பது பெயர். கிழக்கில் உள்ளதற்குப் **புதுச்சேரி வாயில்** என்பது பெயர்.

மேற்குறித்த மூன்று குன்றுகளுள் ஒவ்வொன்றும் பலமான சுவர்களால் தனித்தனி அரண் செய்யப் பெற்றுள்ளது. இவற்றுள் வடக்கே இருப்பதற்குக் **கிருஷ்ணகிரி** என்பது பெயர். அதன் உச்சியை அடையக் கீழ்க்கோட்டையிலிருந்து படிகள் அமைக்கப்பெற்றுள்ளன. தெற்கே இருக்கும் குன்றுக்குச் **சந்திராயன் துர்க்கம்** என்பது பெயர், மேற்கே உள்ளதற்கு **இராசகிரி** என்பது பெயர். இதுவே மூன்று குன்றுகளிலும் உயர்ந்ததும் முக்கியமானதும் ஆகும். இது கடல் மட்டத்திற்குமேல் 968 அடியும், அடித்தலத்திலிருந்து 800 அடியும் உயரமுள்ளது.

மேற்குறித்த முக்கோண வடிவமான கீழ்க்கோட்டையினுள்ளே இராசகிரியின் அடிவாரத்தையொட்டி அரைவட்ட வடிவமாகச் சுமார் முக்கால் மைல் சுற்றளவுள்ள மற்றொரு கோட்டை அமைந்துள்ளது. இதுவும் வன்மை மிக்க மதிற்சுவர்களாலும், ஆழ்ந்தகன்ற அகழிகளா

லும் அரண் செய்யப்பட்டுள்ளது. இது கீழ்க்கோட்டையின் உள்ளே அமைந்திருப்பதால் **உட்கோட்டை** என வழங்குகின்றது. இராசகிரிக் கோட்டைவாயிலை இந்த உட்கோட்டையின் மூலமாகத்தான் அடையக் கூடும்.

இராசகிரியின் அமைப்பு மற்றெல்லாவற்றினும் சிறந்தது. இதன் வாயில் உட்கோட்டையின் கிழக்கு நோக்கி இருக்கிறது. அங்கிருந்து ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ள சுவர்களினூடே மேலே செல்வதற்குப் படிகள் இருக்கின்றன. இப்படிகளின் வழியாக 400 அடி உயரம் சென்றால், அங்கு இராசகிரியின் தென் பாகத்தின் பிதுக்கமாகிய சமநிலத்தை அடையலாம், புளியமரங்களும், புற்றரையுமுள்ள இச் சமநிலம் சுமார் 100 கஜ நீளமும், 30 அல்லது 40 கஜ அகலமும் இருக்கும். இங்கிருந்து இராசகிரி மிகவும் செங்குத்தாய் இருப்பதால், அதன்மீது ஏறுவது எளிதன்று. தென்மேற்குப் பக்கமாக உள்ள மிகக் குறுகிய சரிவின் மூலமாகத்தான் ஏறவேண்டும். இச்சரிவும் சிறிது செங்குத்தாகவே இருக்கிறது. அன்றியும், இதன் குறுக்கே ஒவ்வொன்றும் சுமார் 25 அடி உயரமுள்ள பலமான சுவர்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டப்பட்டு, ஒவ்வொன்றிலும் ஒரு வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வாயில்களின் மூலம் செல்லும் இவ்வழி இராசகிரியின் உன்னத பாகத்திற்குச் சம உயரத்தில் உள்ள ஒரு பாறையின்மீது முடிவடைகிறது. இப்பாறைக்கும் இராசகிரியின் உச்சிக்கும் இடையில் 24 அடி அகலம் உள்ள பிளவு இருக்கிறது. இந்த இடைவெளியைக் கடக்கக் குறுகிய ஒரு மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பாலத்தைக் கடந்தால், இராசகிரியின் உச்சியில் உள்ள கோட்டையின் வாயிலை அடையலாம். இவ்வாயிலையும் கடந்தால், ஏறத்தாழச் சமமாக உள்ள இராசகிரியின் சிகரத்தை அடையக்கூடும்.

**இக்காலத்தில் காணப்படுஞ் சின்னங்கள் :**

கிருஷ்ணகிரிக் கோட்டையின் உச்சியில் கருங்கற்களால் கட்டப்பட்ட இரண்டு தானியக்களஞ்சியங்களும், ஒரு மண்டபமும், விக்கிரகம் இல்லாத அரங்கநாதர் ஆலயமும், செங்கற்களாலான ஒரு கொலு மண்டபமும் இருக்கின்றன. இவையெல்லாம் சிதைவுற்றுப் பாழ்நிலையில் உள்ளன. ஆயினும், கொலுமண்டபம் கண்டு களிக்கத்தக்கது. கிருஷ்ணகிரியின்மீது ஒரு சுனை இருக்கிறது, அதன் தண்ணீர் பருகுதற்கு எளிதாயிருக்கிறது.

சந்திராயன் துர்க்கத்தின்மீது ஒரு மண்டபம் மட்டுமே இருக்கிறது. அதன் அமைப்பைக் கீழிருந்தே காணக்கூடும்.

இராசகிரியின் உச்சியில் இக்கோட்டையின் பெருமையை விளக்கக்கூடிய சின்னங்கள் பல இருக்கின்றன. இங்கும் விக்கிரகமில்லாத அரங்கநாதர் ஆலயம் ஒன்றுண்டு. அது நல்ல வேலைப்பாடு உடையது. இரண்டு பெரிய தானியக் களஞ்சியங்களும், ஒரு மருந்துக்கிடங்கும், நிலவறை அமைக்கப்பட்ட நிதிச்சாலை ஒன்றும், இக்காலத்தில் மணிக்கூண்டு என வழங்கும் — அக்காலத்திற் கொடித்தம்பம் அமைந்திருந்த —ஒரு கட்டடமும் இராசகிரியின் பண்டைப் பெருமையை விளக்குகின்றன. இவையன்றி, இக்கோட்டையின் தென்பகுதியில் சிறிது தாழ்ந்த சமநிலப்பகுதியில் ஒரு சிறிய மண்டபத்தில் பதினோரடி நீளமும் ஏழடி சுற்றளவுமுள்ள வாய் கொண்ட ஒரு பீரங்கி வைக்கப்பட்டுள்ளது. இராசகிரியின்மீது பாறைகளின் இடையில் இரண்டு நீர்ச்சுனைகள் இருக்கின்றன. இவற்றில் எக்காலத்திலும் நீர் வற்றுவதில்லையெனக் கூறப்படுகின்றது.

இராசகிரிக்குச் செல்லும் வழியில் உள்ள பீடபூமிப் பகுதியில் புளியமரங்களும், அடர்ந்த புதர்களும் இருக்கின்றன என்றோம். இங்கு இரண்டு சிறு கோவில்களுண்டு. அவற்றுள் ஒன்று விக்கிரகமில்லாத அரங்கநாதர் கோவில். மற்றொன்றில் மட்டும் விக்கிரகம் இருக்கின்றது. அது **கமலக்கண்ணி கோவில்** எனப்படும். முற்காலத்திலும் இக்காலத்திலும் கிராமதேவதை கோவிலாய் இருந்ததும், இருப்பதும் அதுவே. அக்கோவிலின் எதிரில் பாழ்நிலையில் உள்ள ஒரு திருக்குளமும், அதற்கு மேற்கே அதே நிலையிலுள்ளதொரு மண்டபமும் இருக்கின்றன. அக்கோவிலும், குளமும், மலையும், மரங்களும், பாழடைந்த மண்டபங்களும், இரண்டு பாறைகளின் இடையிலுள்ள நீர்ச்சுனையும் அந்த இடத்திற் செல்வார்க்கு அச்சத்தை யூட்டுகின்றன.

இராசகிரியின் அடிவாரத்தில் அமைந்துள்ள உட்கோட்டையிலும் பல சின்னங்கள் உள. செஞ்சிக்கோட்டையின் பல பகுதிகளிலும் உள்ள தானியக் களஞ்சியங்களுள் மிகப் பெரியது அங்குத் தானிருக்கிறது. அது மூன்று அறைகளை உடையது. ஒவ்வோர் அறையும் 81 அடி நீளமும், 28 அடி அகலமும், 39 அடி உயரமும் உடையது. அக் களஞ்சியத்தின் சுவர்கள் 5½ அடி கனம் உள்ளவை.

அக் களஞ்சியத்தின் அருகில் அதைவிடப் பெரியதொரு சிலம்ப மண்டபம் இருக்கிறது. அவற்றிற்குக் கிழக்கே அரசரும் அரசியரும் குளிக்கும் மண்டபங்கள் இருந்தன வென்று தெரிகிறது. ஆனால், இப்போது அவற்றின் அடித்தலங்களாக இருந்த பாறைகள் மட்டும் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரே பாறையிற் செதுக்கப்பட்டதும் மிகப் பெரியதும் வழுவழுப்பானதுமான அவ்விரண்டு பாறைகளும் மிகவும் நேர்த்தியாய் விளங்குகின்றன. அவற்றிற்கு வடக்கே போர்வீரர் விடுதிகளின் சின்னங்கள் காணப்படுகின்றன. அவ் விடுதிகளுக்குக் கிழக்கில் 80 அடி உயரமும், எட்டு அடுக்குகளும் கொண்ட **கலியாண மகால்** என்னும் நாற்கோண வடிவமுள்ள கட்டடம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் சிறிது இடைவெளி விட்டு நாற்புறங்களிலும் விசாலமான அறைகளை உடைய கட்டடங்கள் இருக்கின்றன. அவையே அரசியரும், அவர் தோழியரும் வசித்த விடுதிகள் எனப்படுகின்றன. அவற்றிற்கு உட்கோட்டையின் தென்பாகத்தில் உள்ள சக்கரக்குளத்திலிருந்து தண்ணீர் வருவதற்கு மட்குழாய்கள் அமைக்கப்பெற்றுள்ளன. சக்கரக்குளத்திற்கும், அதை யடுத்த செட்டிகுளத்திற்கும், இடையில் உள்ள பெரிய அநுமார் விக்கிரகம் காணத் தகுந்தது. செட்டிகுளத்தின் வடகரையிற் காணப்படும் ஒரு மேடைதான் தேஜ் சிங்கின் உடல் கொளுத்தப்பட்ட இடமென்று கூறப்படுகின்றது.

உட்கோட்டையின் வாயிலுக்கும் புதுச்சேரி வாயிலுக்கும் இடைப்பட்ட கீழ்க்கோட்டைப்பகுதியின் தென்பாரிசத்தில், சந்திராயன் துர்க்கத்தின் அருகில், விக்கிரகமில்லாத மிகப் பெரிய கோவில் ஒன்று இருக்கிறது. அது **வேங்கடரமண சுவாமி கோவில்** எனப்படும். அது இப்போது, பாழடைந்த நிலையில் இருக்கிறது. அக் கோவிலிலிருந்துதான் புதுச்சேரியில் கடற்கரையோரத்தில் உள்ள டூப்ளே சிலையின்முன் நாட்டப்பட்டுள்ள ஒற்றைக்கால் ஸ்தம்பங்கள் கொண்டு செல்லப்பட்டன. அவை மிக்க வேலைப்பாடு உடையவை. கீழ்க்கோட்டைக்கு வெளியில் தெற்கே ஒருமைல் தூரத்தில் பாழடைந்து கிடக்கும் **பட்டாபிராமசுவாமி** கோவிலும் வேங்கடரமணசுவாமி கோவிலைப் போன்ற வேலைப்பாடுகள் உடையதே.

இவற்றைத் தவிரக் கீழ்க்கோட்டையின் பெரும்பகுதி இப்போது விளைநிலமாக இருக்கிறது. அந்நிலங்களுக்குக் கோட்டை அகழிகளிலிருந்தும் செட்டிகுளத்திலிருந்தும் நீர் பாய்ச்சப்படுகிறது.

செஞ்சிக்கோட்டையைப்பற்றிக் கி. பி. 15-ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்ட வரலாறு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இங்கிலாந்தில் உள்ள இந்தியக் காரியாலயத்திலிருக்கும் **மெக்கென்ஸீ துரை** இந்தியாவைப்பற்றிச் சேகரித்து வைத்த **வரலாற்றுக் குறிப்புக்**களில் இதன் தோற்றம் முதலிய பண்டைய வரலாறுகள் கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

**கோட்டையின் சரித்திரம்** :

கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் விஜயநகர மன்னர்கள் தமிழகத்தில் தங்கள் அதிகாரத்தைப் பரப்பிய காலத்தில் செஞ்சிக்கோட்டை அவர்களுடைய பிரதிநிதிகளின் ஆட்சியில் இருந்தது. தலைக்கோட்டைச் சண்டைக்கும் பிறகு விஜயநகர ஆட்சி வீழ்ந்தபோது, இதை முதலில் கோல்கொண்டாச் சுல்தானும், பிறகு பீஜப்பூர் சுல்தானும் கைப்பற்றினர்கள்.

சிறிது காலத்தில் இக்கோட்டை மராட்டிய மன்னரான சிவாஜியின் ஆட்சிக்குட்பட்டது. அவரே இக்கோட்டையை மிக்க பலம் பொருந்தியதாக்கினர் எனப்படுகிறது. அவருக்குப் பிறகு அவுரங்கசீபு மன்னரிடம் தோல்வியுற்ற மராட்டிய மன்னரான இராமராஜா இக்கோட்டையை ஆண்டுவந்தார். ஆயினும் கி. பி. 1698-இல் அவுரங்கசீபு அனுப்பிய சேனைத்தலைவர் செஞ்சியை மராட்டிய மன்னரிடமிருந்து கைப்பற்றினுரெனினும், அவர் அங்கு வசிக்காமல், ஆர்க்காட்டில் தங்கியிருக்க விரும்பினர். ஆதலால், அவர் செஞ்சியில் **சாரூப் சிங்கு** என்ற இராசபுத்திரரைத் தம் பிரதிநிதியாய் இருந்து ஆட்சிபுரிய அனுமதித்தார். தென்னடு புகழும் தேஜ் சிங்கு இச் சாரூப் சிங் புதல்வரே.

தேஜ் சிங்கு ஆர்க்காட்டு நவாபான சாதுல்லாகானுக்குக் கப்பம் கட்ட மறுத்து, அவருடன் போர்புரிந்து உயிரிழந்த வரலாறே இக்காலத்தில் 'தேசிங்கு ராஜன் கதை' என வழங்குவது.

கி. பி. 1750-இல் பிரெஞ்சியர் செஞ்சிக்கோட்டையை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றினர். முப்பதாண்டுகள் கழித்து இதைப் பிரெஞ்சியரிடமிருந்து ஆங்கிலேயர் கைப்பற்றினர். பின்னர், மைசூரை ஆண்ட ஹைதர் அலி செஞ்சியைக் கைப்பற்றினர். ஆனல், இது மீண்டும் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டு, அதுமுதல் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. இது இன்று இந்தியப் பண்டைச் சின்னங்களின் பாதுகாப்பு இலாக்காவின் கண்காணிப்பில் இருக்கிறது.

**முடிவுரை :**

சீரழிந்த நிலையில் உள்ள செஞ்சிக்கோட்டையைக் காணும் எவரும் பாரதநாட்டின் பண்டைப் பெருமையை உணராமலிருக்க முடியாது. கோட்டைகளின் அமைப்பைப்பற்றிப் பண்டைத் தமிழ்நூல்களில் படிக்கும்போது அதை அகக்கண்ணால் ஒருவாறு காண்கிறோம். ஆனால், செஞ்சிக்கோட்டையை நேரிற் காணும்போது, அகக்கண்ணாற் கண்ட பொருள் நம் புறக்கண் முன் தோற்றமளிப்பதை அறிகிறோம். இக் கோட்டை இன்றும் நம் பண்டைப்பெருமையை ஒருவாறு விளக்கிக் கொண்டு நிற்கின்றது.

I. பொருள் கூறுக :—

*அரண், பிதுக்கம், மணிக்கூண்டு.*

II. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—

*ஏறத்தாழ, விளை நிலம், பண்டைப் பெருமை.*

III. விடை எழுதுக :—

1. *செஞ்சிக் கோட்டை எங்கு உளது ?*
2. *கீழ்க்கோட்டை எனப்படுவது எது ?*
3. *செஞ்சிக் கோட்டையில் அடங்கிய மூன்று குன்றுகள் எவை ?*
4. *உட்கோட்டை எனப்படுவது எது ?*
5. *இராசகிரியின் அமைப்பைப் பற்றிக் கூறுக.*
6. *இராசகிரியின் உச்சியில் காணப்படும் சின்னங்கள் எவை?*
7. *கமலக் கண்ணி கோயில் எங்குள்ளது ?*
8. *தேஜ்சிங்கின் உடல் எங்குக் கொளுத்தப்பட்டது ?*
9. *நெப்ளே சிலையின் முன் நாட்டப்பட்டுள்ள ஒற்றைக்கால் ஸ்தம்பங்கள் எங்கிருந்து வந்தவை ?*
10. *செஞ்சிக் கோட்டையின் சரித்திரத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.*

# 8. நம்பிக்கை சோதிக்கப்படல்

## மகாத்மா காந்தியின் சுய சரிதம்

### ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

கோட்டையில் காரியாலய அறைகளும், கர்க்காமில் வீடும் அமர்த் திக்கொண்டேனாயினும், நான் அமைதியான வாழ்க்கை தொடங்க ஆண்டவன் சம்மதமில்லை. புதிய வீட்டிற்கு வந்து சில தினங்களாவ தற்குள் எனது இரண்டாவது புதல்வன் மணிலாலுக்குக் கடுமையான அஸ்திசுரம் (டைபாய்டு) கண்டது. அவன் ஏற்கெனவே சில ஆண்டு களுக்கு முன்பு கடும் வைசூரியால் துன்புற்றவன். அஸ்தி சுரத்துடன் கபவாத சுரம் (நிமோனியா) கலந்திருந்தது. சுர வேகத்தில் இரவு நேரங்களில் பிதற்றல் முதலிய குறிகளும் இருந்தன.

டாக்டரை யழைத்து வந்தேன். மருந்து அதிகப்பயன் தராதென் றும், கோழிமுட்டையும், கோழிக்குஞ்சு மாமிச ரசமும் உணவாகக் கொடுத்து வந்தால் நலமென்றும் அவர் சொன்னார்.

மணிலாலுக்கு அப்போது பத்து வயது. எனவே அவனுடைய விருப்பத்தைக் கேட்டு எதுவும் செய்வதிற்கில்லை. அவனுக்காக நானே முடிவு செய்தாக வேண்டும். டாக்டர் பார்சி வகுப்பைச் சேர்ந்தவர்; மிகவும் நல்லவர். நாங்கள் சாகபட்சிணிகளாதலின், அவர் கூறிய இரண்டில் எதையும் என் புதல்வனுக்குத் தர முடியாதென்றும், வேறு கொடுக்கக் கூடியது ஏதேனும் சொல்லக்கூடுமா என்றும் கேட்டேன்.

"தங்கள் புதல்வனின் உயிருக்கே அபாயம் ஏற்படக்கூடிய நிலைமை. பாலும் நீரும் கலந்து கொடுக்கலாமாயினும் அது அவ்வளவு போஷணை தராது. தங்களுக்குத்தான் தெரியுமே. எத்தனையோ ஹிந்து குடும்பங்களில் என்னைக் கூப்பிடுகிறார்கள். நான் கூறுவ தெதையும் கொடுப்பதற்கு ஆட்சேபிப்பதில்லை. தாங்களும் தங்கள் புதல்வன் விஷயத்தில் அவ்வளவு கடின சித்தங் காட்டாமலிருத்தல் நலம்;" என்று டாக்டர் கூறினார்.

அப்போது நான் உரைத்ததாவது:—"தாங்கள் கூறுவது முற்றும் சரியே. டாக்டராகிய தாங்கள் தங்கள் நிலையிலிருந்து வேறெதுவும் சொல்ல முடியாது. ஆனால் என்னுடைய பொறுப்பு மிகவும் அதிகம்.

பையன் வயது வந்தவனுயிருந்தால் நிச்சயமாக அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு அதற்கிணங்க நடக்க முயன்றிருப்பேன்; இப்போது அவனுக்காக நானே சிந்தித்து முடிவுசெய்ய வேண்டியவனுயிருக்கிறேன். இத்தகைய சந்தர்ப்பங்களிலேயே ஒருவனுடைய நம்பிக்கை சோதிக்கப்படுகிறது என்பது என் கருத்து. மாமிசம் முட்டை முதலியவற்றை மனிதன் தின்னலாகாதென்பது என்னுடைய சமயக் கொள்கையில் ஒரு பகுதியாகும். இக் கொள்கை சரியாகவோ, தவருகவோ இருக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. உயிர் வாழ்வதற்காக நாம் கைக்கொள்ளும் சாதனங்களுக்கும் ஓர் எல்லை யிருக்க வேண்டும் என்பது என் நம்பிக்கை. உயிர் வைத்திருப்பதற்காகவும் நாம் சில காரியங்களைச் செய்யக்கூடாது. இத்தகைய சமயங்களில் கூட எனக்கோ, என்னைச் சேர்ந்தவர்களுக்கோ மாமிசம் அல்லது முட்டை உபயோகிப்பதை என் மதம் அநுமதிக்கவில்லை. எனவே தாங்கள் கூறுவதுண்மையே ஆகக்கூடுமாயினும் அவ்வபாயத்துக்குத் துணிந்தே காரியஞ்செய்தாக வேண்டும். ஆனால் தங்களை ஒன்று மன்ருடிக் கேட்டுக்கொள்கின்றேன். தங்களுடைய சிகிச்சையை ஏற்றுக்கொள்ள முடியாதபடியால் எனக்குத் தெரிந்துள்ள ஜல சிகிச்சை முறைகளைக் கையாண்டு பார்க்கப் போகிறேன். ஆனல் தாது பார்க்கவும், ஹிருதயம் நுரையீரல் முதலியவற்றைப் பரிசோதிக்கவும் எனக்குத்தெரியா. அவ்வப்போது தாங்கள் வந்து, பரிசோதித்துக் குழந்தையினுடைய நிலைமையை எனக்கறிவித்துச் சென்ருல் மிகவும் நன்றியுள்ளவனுயிருப்பேன்,'

உத்தமரான அந்த டாக்டர் எனது கஷ்டங்களை யுணர்ந்ததுடன் என் வேண்டுகோளுக்கும் இசைந்தார். மணிலாலுக்கு இது சம்பந்தமான முடிவு செய்யும் பிராயம் வரவில்லையாயினும் எனக்கும் டாக்டருக்கும் நடந்த சம்பாஷணையின் விவரத்தை அவனிடம் கூறி அவன் அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"தங்களுடைய ஜல சிகிச்சையே செய்யுங்கள். எனக்கு முட்டையும் மாமிசமும் வேண்டாம்" என்று மணிலால் கூறினன்.

நான் முட்டை அல்லது இறைச்சி ரசம் கொடுத்திருந்தால் அவன் அருந்தியிருப்பான் என்று எனக்குத் தெரிந்தே யிருந்ததாயினும், அவனுடைய பதில் எனக்கு மகிழ்ச்சி தந்தது.

கூன் என்பவரின் சிகிச்சை முறையை நான் அறிந்திருந்தேன். அதைக் கையாண்டு சிறிது அநுபவமும் பெற்றிருந்தேன். உப வாசத்தினால் பயன் விளையும் என்பதும் எனக்குத் தெரியும். எனவே கூன் முறைப்படி மணிலாலுக்கு ஆசன ஸ்நானங்கள் (hip baths) செய்வித்தேன் தொட்டியில் மூன்று நிமிஷத்துக்குமேல் வைத்திராமல் ஜாக்கிரதையா யிருந்தேன். மூன்று தினங்களுக்கு ஆரஞ்சுப்பழ ரசமும் தண்ணீரும் கலந்து அதையே உணவாகக் கொடுத்துவந்தேன்.

ஆனால் உஷ்ணம் குறையவேயில்லை. சில சமயம் 104 டிக்ரி வரையில் ஏறிற்று. இரவில் பிதற்ற லதிகமாயிருந்தது. நான் கவலை கொள்ளலானேன். ஊர் ஜனங்கள் என்ன சொல்வார்கள்? என் தமையனர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்? வேறொரு டாக்டரைக் கூப்பிட்டாலென்ன? இல்லாவிடில் ஆயுர்வேத வைத்தியரை அழைக்கலாமா? என் செய்வது? பெற்றோர்களுக்குத் தங்களுடைய கொள்கைப் பித்துக்களைத் தங்கள் குழந்தைகள்மீது சுமத்துவதற்கு என்ன உரிமை?

இத்தகைய எண்ணங்கள் இடைவிடாது தோன்றிக் கொண்டிருந்தன. பின் இவற்றிற்கு நேர்மாருன எண்ணங்களும் உதயமாகும். நான் எனக்கு எவ்வித சிகிச்சை செய்து கொள்வேனே அதே சிகிச்சை என் புதல்வனுக்கும் செய்வது குறித்து ஆண்டவன் நிச்சயமாய் மகிழ்ச்சியே யடைவாரன்றே? எனக்கு ஜல வைத்தியத்தில் நம்பிக்கையுண்டு. வேறு வைத்தியத்தில் நம்பிக்கை யில்லை. டாக்டர்களேனும் குணப்படுத்தி விடுவதாக உறுதி கூறுகிறார்களா? இல்லை. அவர்களும் சோதனையே செய்கிறார்கள். உயிர் இருப்பதும் போவதும் ஆண்டவன் சித்தத்தைப் பொறுத்தவை. அவனை நம்பி, அவன் பெயரைச் சொல்லி எனக்குச் சரியான சிகிச்சை என்று தோன்றுவதை ஏன் கையாளக்கூடாது?

இவ்வாறு இருவகைப்பட்ட எண்ணங்களால் என் உள்ளம் அலைப்புற்றது. இரவு வேளை மணிலாலின் படுக்கையில் அவனுக்கருகில் படுத்துக் கொண்டிருந்தேன். ஒரு யோசனை தோன்றிற்று. எழுந்திருந்து ஒரு நீளமான துணியை நீரில் நனைத்துப் பிழிந்தேன், அதை அவன் உடல்மீது தலையைமட்டும் விட்டு விட்டுச் சுற்றினேன். தலையில் ஓர் ஈரத் துண்டைக் கட்டினேன். பின்னர் இரண்டு கம்பளிகளைப் போட்டுப் போர்த்தினேன் பழுக்கக் காய்ந்த இரும்புபோல்

உடம்பு கொதித்தது. ஒரே வறட்சியாயிருந்தது. வியர்வை கொஞ்சங்கூட இல்லை.

நிரம்பக் களைப்படைந்து போனேன். மணிலாலை, அவன் தாயாரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே சிறிது உலாவி விட்டு வரப் புறப்பட்டேன். சௌபாதி கடற்கரைக்குச் சென்றேன். மணி பத்தாயிற்று. இரண்டொருவரே அங்கு உலாவிக் கொண்டிருந்தனர். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தபடியால் அவர்களை நான் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. 'ஆண்டவனே! இந்தச் சோதனை நேரத்தில் என் மானங்காத்தல் நினது பொறுப்பு" என்று பிரார்த்தித்தேன். என் உதடுகள் இராம நாமத்தை ஜபித்தவண்ண மிருந்தன. சிறிது நேரம் உலாவிய பிறகு வீடு திரும்பினேன். ஹிருதயம் "பட் பட்", என்று அடித்துக் கொண்டிருந்தது.

அறையில் நுழைந்ததும் மணிலாலின் குரல் கேட்டது. "பாபு வந்துவிட்டீர்களா?" என்றான்.

"ஆம் கண்மணி!"

"தயவுசெய்து என்னை எடுத்துவிடுங்கள். உடம்பு எரிகிறது."

"குழந்தாய், வியர்வை வியர்த்திருக்கிறதா?"

"வியர்வையில் முழ்கியிருக்கிறேன். தயவு செய்து உடனே எடுத்து விடுங்கள்."

நெற்றியைத் தொட்டேன். வியர்வை முத்து முத்தாய்த் துளித்திருந்தது. உஷ்ணம் குறைந்து கொண்டிருந்தது. ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன்.

"மணிலால்! இனி, சுரம் நிச்சயமாகக் குணமாய்விடும். இன்னும் சிறிது வியர்க்கட்டும். எடுத்து விடுகிறேன்" என்றேன்.

'அப்பா! வேண்டாம். தயவுசெய்து இந்த உலைக்களத்திலிருந்து இப்போது என்னை எடுத்து விடுங்கள். வேண்டுமானால் அப்புறம் ஒரு முறை ஈரத்துணி சுற்றலாம்."

வேறு விஷயங்களைப் பற்றிப் பேச்சுக் கொடுத்துக்கொண்டே இன்னும் சில நிமிஷங்கள் அப்படியே வைத்திருந்தேன். நெற்றியி

லிருந்து வியர்வை அருவியாக ஓடிற்று. பின்னர் போர்வைகளையும் ஈரத் துணியையும் எடுத்துவிட்டு உடம்பைத் துடைத்தேன். அப்படியே தந்தையும் மகனும் ஒரே படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டோம்.

கட்டையைப்போல் இருவரும் தூங்கினோம். மறுநாள் காலையில் சுரம் நிரம்பவும் குறைந்துவிட்டது. இவ்வாறே பாலும் பழச்சாறும் மட்டும் அருந்தி 40 நாள் காலம் கழித்தான். ஆனால் அன்றைக்குப்பின் எனக்குப் பயம் போய்விட்டது. அது பெரும் பிடிவாதமான சுரமாயினும், அதைக் கட்டுக்குள் கொண்டு வந்தாய் விட்டது. இன்று என் புதல்வர்களுக்குள் மணிலாலே தேக சுகத்தில் சிறந்தவனாயிருக்கிறான். அவன் குணமடைந்ததற்குக் காரணம் ஆண்டவன் கருணையா, ஜல சிகிச்சை முறையா, கவலையுடன் உணவு கொடுத்துப் பணிவிடை செய்து வந்ததா என்று யாரால் சொல்லமுடியும்? ஒவ்வொருவரும் தத்தம் நம்பிக்கைக்கேற்ப முடிவு செய்வார்களாக. என் வரையில், ஆண்டவன் என்மானத்தைக் காப்பாற்றினார் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. அந்நம்பிக்கை இன்றளவும் மாறாமலே இருந்து வருகிறது.

I. பொருள் கூறுக:—

*வைசூரி, அபிப்பிராயம், இறைச்சி,*

II. வாக்கியங்களில் அமைக்க:—

*முறைகளைக் கையாண்டு, பரிசோதித்து, வேண்டுகோள், அபிப்பிராயத்தை.*

III. விடை எழுதுக:—

1. *மகாத்மா காந்தி ஏன் அமைதியான வாழ்க்கையை நடத்த முடியவில்லை?*
2. *மணிலால் யார்?*
3. *டாக்டர் மணிலாலுக்கு எவற்றைக் கொடுக்க வேண்டுமென்றார்?*
4. *மகாத்மா காந்தி டாக்டர் கூறியவற்றை ஏன் கொடுக்கவில்லை?*
5. *மகாத்மா காந்தி எவற்றைப் பரிசோதிக்க டாக்டர் உதவியை நாடினார்?*

6. காந்தியின் உள்ளத்தில் தோன்றிய இருவகைப்பட்ட எண்ணங்கள் யாவை ?

7. காந்திக்குத் தோன்றிய யோசனை யாது ?

8. இப்பாடத்தினுல் அறியும் உண்மை யாது ?

# 9. இந்திய விவசாயிகள்

இந்தியா ஒரு விவசாய நாடு. அதில் நகரங்கள் சில; கிராமங்கள் பல. மக்களில் பெரும் பகுதியினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். கைத்தொழில் செய்வோரும், வர்த்தகம் நடத்துவோரும், உத்தியோகத்தில் அமர்ந்திருப்போரும் உழுது பயிர்செய்யும் உழவரையே நாடுகின்றனர். இதனுல்தான், பொய்யாமொழியாரும்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
> தொழுதுண்டு பின்செல் பவர்,,

என்று உழவரைச் சிறப்பித்துள்ளார். எனவே, இந்திய நாட்டின் செல்வ நிலை கிராமங்களின் செல்வ நிலையைச் சார்ந்துள்ளது என்பது வெள்ளிடை மலை.

விவசாயிகள் வறுமை நிலைக்குக் காரணங்கள் எவை ? விவசாயிகள் துண்டு துண்டான நிலங்களை வைத்துள்ளனர். சகோதரர் பாகப் பிரிவினை காரணமாக நிலம் பங்கிடப்படுவதால் சில ஆண்டுகளுக்குப் பின் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கு குறைந்து கொண்டே போகிறது. பம்பாய் மாகாணத்தில் 1916-ஆம் ஆண்டில் அரை ஏகருக்கும் குறைந்த பரப்புள்ள நிலம் இருபது பங்குகளுக்குமேல் பிரிக்கவேண்டியிருந்ததாக அம்மாகாண விவசாய இலாகா டைரக்டர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்குமென நினைத்துப் பாருங்கள்! மேலும் ஒருவனுக்குச் சொந்தமான துண்டு துண்டான நிலங்கள் தொலைவில் இருப்பதாலும், நீர்ப்பாசன வசதியற்றிருப்பதாலும் கரம்பாய் விடப்படுகின்றன. சிறிய நிலத்தை உடையவர்கள் எங்ஙனம் புதிய விவசாயக் கருவிகளை வாங்கக் கூடும் ? நல்ல எருக்களை எவ்வாறு பெறுவர் ? அவர்களுக்கு வேளாண்மையால் வயிறு வளர்க்கப் போதிய வருமானம் கிடைப்பதில்லை.

இக் குறையைப் போக்க மூன்று உபாயங்கள் உண்டு. அவை சிறு நிலங்களை ஒன்று சேர்த்தலும், குறித்த பரப்பிற்குக் குறைவாயுள்ள நிலத்தைப் பங்கிடக் கூடாதென விதித்தலும், பாகப் பிரிவினை பற்றிய சட்டங்களைத் திருத்தி யமைத்தலும் ஆகும். பஞ்சாப் மாகாணத்தில் துண்டு நிலங்களை ஒன்று சேர்ப்பதற்கெனப் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இம்முறையில் ஜலந்தர் என்ற கிராமத்தில் ஒரு முதலாளிக்குரிய இருநூறு துண்டு நிலங்கள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டன வென்று சர். எம். டார்லிங் என்பார் தமது "பஞ்சாப் வேளாளன்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இதனால் விவசாயிகள் புதிய முறைகளைக் கையாண்டனர்; கரம்பான நிலம் பயிரிடப்பட்டது. பிற மாகாணங்களில் இம்முறை திருப்திகரமான பலனை அளிக்க வில்லை.

கிராமவாசிகளின் எளிய நிலைக்கு அவர்களது கடன் சுமையும் காரணமாகும். நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் அதை நம்பி யிருப்போருக்குப் போதுமானதாயில்லை. கிராமவாசிகளுக்கு ஆண்டு முழுவதும் நிலத்தில் வேலை இல்லை. வேலையில்லாக் காலத்தை அவர்கள் வறிதே கழிக்கின்றனர். கைத்தொழிலைச் செய்து பிழைக்கவும் வகையறியாது வருந்துவர். மேலும் அவர்கள் மலேரியா, வைசூரி முதலிய நோய்களுக்கு இரையாகின்றனர். மழை தவறிய காலத்தில் மாடுகளும் உணவின்றி நோய்வாய்ப்பட்டு மடிகின்றன. கிராம மக்கள் தங்கள் வறுமை நிலையைப் பொருட்படுத்தாது கடன் வாங்கியேனும் திருமணம், இழவு முதலிய சடங்குகளைச் செய்வதில் பெருந்தொகையைச் செலவிடுகின்றனர். மார்வாரிகளும், சவகாரிகளும், லேவா தேவிக்காரர்களும் அதிகவட்டிக்குக் கடன் கொடுத்தனர். கிராமவாசிகளும் எளிதில் கடனைப் பெற்றனர். பரம்பரையாகத் தகப்பனார் கடன் பிள்ளைக்கும் வந்தது.

இந்திய சர்க்கார் கிராம மக்களின் கடனைக் குறைக்கப் பல முறைகளைக் கையாண்டு வந்தனர். வறகடம் நேர்ந்த காலத்தில் நில வரியைத் தள்ளிவிட்டனர். மக்கள் பொருளைச் சேமிப்பதற்கெனச் சேமிப்பு நிலையங்கள் தோன்றின. லேவாதேவிக்காரர் விவசாயிகளின் கருவிகளையும், மாடுகளையும் அபகரிக்கக் கூடாதெனப் புதிய சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. கடனைப் பலதவணைகளில் கட்ட ஏற்பாடு

கள் செய்யப்பட்டன. நாடெங்கும் ஐக்யநாணயச் சங்கங்களும், நில அடமான நிதிகளும் நிறுவப்பட்டன.

சென்னை சர்க்கார் கிராம மக்களின் கடனைக் குறைக்கச் சில முறைகளைக் கையாண்டனர். முதற்கண் முதலையே குறைப்பதற்காக 1935-ஆம் ஆண்டில் சென்னைக் கடனாளிகளின் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது. அது ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவாய்க் கடன் வாங்கியவர்களுக்கு நன்மை செய்தது; கடன்காரர் வாங்கவேண்டிய வட்டி விகிதத்தை நிர்ணயித்தது; அவர்கள் கணக்குகளையும் தகுந்த முறையில் வைக்க வேண்டுமென வற்புறுத்தியது. மேலும் பழங்கடன்களைத் தீர்க்க 25 லட்சம் ரூபாய் கொடுத்து உதவி செய்தது. 1936-ஆம் ஆண்டில் சென்னைக் கடன் சமரசச் சட்டத்தின் படி "கடன் சமரசக் குழுக்களை" நாட்டில் பல விடங்களில் அமைத்தனர். அவை விவசாயிகளின் கடன்களை வலியச் சென்று தீர்த்துவைத்தன. 1932-அக்டோபர் மாதம்வரை கொடுக்கவேண்டிய வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. வாங்கிய கடன் தொகையைப் போல் இருமடங்கு தொகையை வட்டியாகவோ அசலாகவோ செலுத்தியிருந்தவர்கள், கடன் தொகையை முற்றிலும் கொடுத்தவராகக் கருதப்பட்டனர்.

லேவாதேவிக்காரர்கள் சர்க்கார் கொடுக்கும் உரிமைச் சீட்டைப் பெற்றே தங்கள் தொழிலைச் செய்ய வேண்டுமென்றும், குறித்தபடி கணக்குகளை வைக்கவேண்டுமென்றும், குறிப்பிட்ட விகிதம் தான் வட்டி வாங்க வேண்டுமென்றும் சட்டங்கள் தோன்றின.

சுருங்கக்கூறின், கிராம மக்கள் நன்னிலையடைய வேண்டும். அவர்கள் அதிகப் பரப்புள்ள நிலத்தைப் பெற்று, நவீன முறைப்படி பயிர்த்தொழில் செய்து, ஊதியம் பெறவேண்டும். அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியால் பொருளை விற்று லாபம் சம்பாதிக்க வேண்டும். அவர்கள் காலத்தை வீணாக்காமல் ஏதேனும் தொழில் செய்ய வேண்டும். கிராம மக்கள் பொருளாதார நிலை உயர்ந்தால், இந்திய நாடு சீரும் சிறப்பும் பெற்று விளங்கும்.

## பயிற்சி

I. பொருள் கூறுக :—

*வறுமை, வைசூரி, வற்கடம்*

II. வாக்கியங்களில் அமைக்க :—

*நிறுவு; முதற்கண், சமரசம்; பொருளாதாரம்.*

III. விடை எழுதுக :—

(அ) *இந்தியாவின் செல்வ நிலை கிராமங்களின் செல்வ நிலையைச் சார்ந்தது ஏன்?*

(ஆ) *நிலத்தைப் பங்குபோடுதல் — இதனைக் குறைப்பதற்குரிய வழிகள் யாவை?*

(இ) *விவசாயிகள் கடன்படக் காரணமென்ன?*

(ஈ) *சென்னைச் சர்க்கார் விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க என்ன ஏற்பாடுகள் செய்தனர்?*

# 10. ஐக்கிய நாட்டுச்சங்கம்

போர் என்றாலே பயமாயிருக்கிறது. அரை வயிற்றுக்குக்கூட உணவு இல்லை; குடியிருக்கவும் வீடு கிடைப்பதில்லை; உடுக்கும் உடையும் விலையும் ஏறி விடுகிறது. மக்கள் யாது செய்வர்? போரில் தொண்டாற்றத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிகின்றான். வீட்டில் இருந்தாலும் பயம்; வெளியே சென்றாலும் பயம்; பகலிலும் பயம்; இரவிலும் பயம். விமானத் தாக்குதலைத் தெரிவிக்கும் எச்சரிக்கைச் சங்கு எப்பொழுது வேண்டுமாயினும் கேட்கும். பகைவர் குண்டுமாரி பொழிவதற்குக் காலம் பார்ப்பதில்லை. என்று தணியும் இந்தப் போர் என ஏங்கியிருப்பர் மாந்தர்.

உலகத்தில் இரண்டு யுத்தங்கள் நடந்தன. அவை மக்களின் சுக வாழ்க்கையைக் கெடுத்தன. ஆடவரும் பெண்டிரும் போரை ஒழிக்க முயன்றனர். இந்திய சரித்திரத்தைப் பார்த்தால் யுத்தங்களின் குறிப்பாகக் காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் பானிபட் சண்டை; மற்றொரு பக்கத்தில் பிளாசி சண்டை; ஒரு நாட்டில் மத சம்பந்தமான போர்; மற்றொரு நாட்டில் பொறாமை, பேராசை காரணமாகப் போர்.

போரை ஒழிக்க, 1945-ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் ஸன் பிரான்ஸிஸ்கோ நகரில் ஐக்கிய நாடுகளின் மா நாடொன்று கூடிற்று. ஐம்பது நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். இம் மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் சாஸனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்வரும் சந்ததியாரைப் போர் தொடராவண்ணம் அதனை அறவே ஒழிப்பதையும், நாடுகளும் மக்களும் தமக்குள் ஏற்படும் சிக்கல்களைச் சமாதான வாயிலாகத் தீர்த்துக் கொள்வதையும், சிறு நாடுகளுக்கும் பெரிய நாடுகளுக்கும் சம உரிமை வழங்குதலையும், ஜாதி நிறம் பால் வேற்றுமைகள் கருதாது மக்கள் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதையும் சீரிய நோக்கங்களாகக் கொண்டு இந்த ஐக்கிய நாடுகளின் சங்கம் அமைக்கப்பட்டது.

இது பொதுக் கழகம், பாதுகாப்புக் கழகம், பொருளாதார, சமூகக் கழகம், தர்மகர்த்தா கழகம், சர்வதேச நீதிமன்றம், காரியாலயம் என்ற ஆறு கிளைக் கழகங்களையுடையது. போரும் இரத்தப் பெருக்க

மும் இன்றி அமைதியாகவே எல்லாவித சிக்கல்களையும் தீர்ப்பதே இவைகளின் அலுவலாகும். பாலஸ்தீனத்தைப்பற்றி யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் ஏற்பட்ட வழக்கையும், டச்சுக்காரர்களுக்கும் இந்தோனேஷியாவில் உள்ளவர்களுக்கும் ஏற்பட்ட சிக்கலையும் இது தீர்த்து வைத்தது. இது இந்தியாவிற்கும் பாகிஸ்தானத்திற்கும் ஏற்பட்டிருக்கும் தகராறுகளையும் தீர்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஐக்கிய நாட்டுச் சங்கம் உலக மக்களின் பெரும்பேருக அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் அக்டோபர் மாதம் 24-ம் தேதி ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் நாளாக உலகமெங்கும் கொண்டாடப் படுகிறது. இச்சங்கம் நீடுழி வாழ்க! இதன் சீரிய நோக்கங்கள் எங்கும் பரவுக!

யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

**பயிற்சி**

1. *போரினல் ஏற்படும் தீமைகள் யாவை ?*
2. *ஐக்ய நாட்டுச் சங்கத்தின் நோக்க மென்ன ?*
3. *அதன் கிளைக் கழகங்கள் யாவை ?*
4. *அது செய்த நன்மைகள் யாவை ?*

# எங்கள் தமிழ்க் கோவை

(இரண்டாம் புத்தகம்)

பொதுப் பகுதி

தொகுப்பு ஆசிரியர் :

**உயர்திரு. T. S. அருணாசலம் பிள்ளை, B.A., L.T.**
தலைமை ஆசிரியர், போர்டு ஹைஸ்கூல், நாச்சியார் கோயில், தஞ்சை ஜில்லா.

**உயர்திரு. N. நஞ்சப்பா M.A., B.O.L., L.T**
தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல், பாப்பிரெட்டிபட்டி, சேலம் ஜில்லா

**உயர்திரு. வித்துவான் G. சந்திரமௌலீஸ்வரன்**
தமிழ் ஆசிரியர்,
லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.

**விந்தியா வெளியீடு**

**1/1, பெரியண்ண மேஸ்திரி தெரு.**
**சென்னை—1.**



[ விலை ரூ. 1.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

# முன்னுரை

**'எங்கள் தமிழ்க் கோவை'** என்னும் பெயரோடு வெளிவரும் இக்கோவை நூல்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நான்கு - ஐந்தாம் படிவங்களில் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்களாக அமைவதற்குரியனவாகும். மண்டலமொழி முதன்மொழியாக்கப் பட்ட பின்னர், அந்நிலைக் கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாடவியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கியும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப்புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங் களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக்கெனப் பாடவியலில் குறிக்கபட்டுள்ள அளவினும் சிறிது மிகுதியாகவே செய்யுட்களும் உரை நடைப் பாடல்களும் சேர்க்கப் பட்டுள்ளன ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும் மாணவர் களின் தகுதிக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துவதற்கு இடமிருக்கவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும் உரைநடைப் பாடங்கட்குப் பயிற்சி வினாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சியும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவதாக வெளிவரும் இக் 'கோவை' நூல் வரிசையை ஆசிரியர் களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான், ம. வி. இராகவன், வித்துவான் எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகங்கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட் களையும் கட்டுரைகளையும் இக்'கோவை' வரிசையில் கோத்துக் கொள்ள இசைவு தந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# பொருளடக்கம்

## செய்யுள்



### உரை நடை

# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## பொதுப் பகுதி

---

## செய்யுள்

### I. கடவுள் வாழ்த்து

#### தாயுமானவர் பாடல்

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகளெல்லாம்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெது? மேற்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது? அது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாம்மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

நித்தியமாய், நிர்மலமாய், நிட்களமாய், நிராமயமாய்,
நிறைவாய், நீங்காச்
சுத்தமுமாய்த், தூரமுமாய்ச், சமீபமுமாய்த், துரியநிறை
சுடராய், எல்லாம்
வைத்திருந்த தாரகமாய், ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச், சுகாரம்பப்பெருவெளியைச்
சிந்தை செய்வாம். 2

—தாயுமானவர்.

### குறிப்புரை

தாயுமானவர் சோழநாட்டில் திருமறைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். தந்தை கேடிலியப்பப் பிள்ளை. தாயுமானவர் திரிசிரபுரத்தில் வாழ்ந்து வந்தார்; விசய ரகுநாத சொக்கலிங்க நாயக மன்னரிடம் வேலையில் இருந்தார்; பிறகு துறவியானார். இவரது காலம் கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதி.

### அருஞ் சொற்கள்

1. கங்குல் - இரவு. அஞ்சலி செய்தல் - கும்பிடுதல்.

2. நிட்களம் - உருவில்லாமை. நிர் ஆமயம் - நோயில்லாமை. துரியம் - சுத்தநிலை (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைகளுள் நான்காவது). தாரகம் - ஆதாரம். சித்உரு - அறிவுருவம்.

## II. நீதி

### 1. புறநானூறு

திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி.

யாண்டுபல வாக நரையில ஆகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. 1

—பிசிராந்தையார்.

திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி.

பல்சான் றீரே பல்சான் றீரே,
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே,
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ.
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியு மாரதுவே. 2

—நரிவெரூஉத்தலையார்.

### குறிப்புரை

இந்நூல், சங்க நூற்களின் தொகுதியாகிய எட்டுத்தொகை நூற்களுள் ஒன்றாகும். எட்டுத்தொகை நூல்கள் :—நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். புறநானூறு, புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கப்படும். புறத்திணைகளுக்குரிய **400** அகவற்பாக்களை யுடைமையின் இந்நூல் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இது புறப்பொருளால் தொகுக்கப்பட்டது. இதனைப் பாடிய புலவர்கள் பலர். இந்நூலால் பண்டைத் தமிழ் அரசர், குறுநில மன்னர் முதலியோர் வரலாறுகளை அறியலாம்.

### அருஞ் சொற்கள்

**1.** யாண்டு - வருடம். யாங்கு ஆகியர்?—எப்படி ஆகுவது? மாண்ட - மாட்சிமைப்பட்ட, நிரம்பினர் - அறிவு நிரம்பினர், இளைஞர் - ஏவல் செய்வோர். அல்லவை - முறையல்லாதவற்றை. ஆன்று - (நற்குணங்களால்) அமைந்து, அவிந்து - (அறவோர் முதலியவரிடத்து) வணங்கியிருந்து, அடங்கிய - ஐம்புல னும் அடங்கிய, கொள்கை - கோட்பாட்டினையுடைய, சான்றோர் - பெரியோர்.

**2.** நரை - நரைமயிர், திரைகவுள்-தோல் சுருங்கிய தாடை. கணிச்சி-மழு. ஒருவன் - யமன். ஓம்புமின் - விலக்குங்கள்.

## 2. திருக்குறள்

### கல்வியின் சிறப்பு

தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக் 1
கற்றனைத் தூறு மறிவு.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் 2
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற் 3
கெழுமையு மேமாப் புடைத்து.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு 4
காமுறுவர் கற்றறிந் தார்.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு 5
மாடல்ல மற்றை யவை.

## கேள்வி

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ் 6
செல்வத்து ளெல்லாந் தலை.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது 7
வயிற்றுக்கு மீயப் படும்.

கற்றில னாயினுங் கேட்க; வஃதொருவற் 8
கொற்கத்தி னூற்றாந் துணை.

எனைத்தானு நல்லவை கேட்க; வனைத்தானும் 9
ஆன்ற பெருமை தரும்.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் 10
அவியினும் வாழினு மென்?

## குறிப்புரை

திருக்குறளின் ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இவர் வள்ளுவர் குடியில் பிறந்தவர். இக்குடியினர் அரசனது பட்டத்து யானையின்மேல் முரசினை ஏற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து திருவிழா, திருமணம், படையெழுச்சி முதலிய நற்செய்திகளை நகரமாந்தருக்கு அறிவிப்பது மரபாகும். இவரது காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும். திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதி யுள்ளனர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்ததாகும்.

## அருஞ்சொற்கள்

கல்வி — கற்றற்குரிய நூல்களைக் கற்றல்

1. கேணி - குளத்தில் உள்ள நீர்.
2. சாந்துணையும் - இறக்குமளவும்.

3. ஒருமை - ஒரு பிறப்பு; எழுமை - ஏழுபிறப்புகள், ஏமாப்பு - சென்று உதவுதல்.

4. காமுறுவர் - விரும்புவர்.

5. கேடுஇல் - அழிவில்லாத. விழு - சீரிய. மாடு - செல்வம்.

கேள்வி — கேட்கப்படும் நூற் பொருள்களைக் கற்றறிந்தார் கூற கேட்டல்

6. செவிச் செல்வம் — செவியால் வரும் செல்வம்.

8. ஒற்கத்தின் - தளர்ச்சிவந்த இடத்து. ஊற்று ஆம் - பற்றுக் கோடாகும்.

9. எனைத்தானும் - சிறியதாயினும். ஆன்ற - நிறைந்த.

## 3. நாலடியார்

### கல்வியே உயர்ச்சிக்குக் காரணம்

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 1

### குடிப்பிறந்தார் தன்மை

ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 2

### சிற்றறிவுடையார் தன்மை

தாமேயும் இன்புறார்; தக்கார்க்கும் நன்றாற்றார்;
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார். 3

### தானே தன் உயர்வுக்குக் காரணம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். 4

### நல்லினஞ்சேர்தல்

அறிமின் அறநெறி; யஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; யெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

### குறிப்புரை

நாலடியார் என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூல் ஆதலின் இது நாலடியார் என்னும் பெயர் பெற்றது. நான்கு + அடி + ஆர்—நாலடியார். 'ஆர்' சிறப்புப் பற்றிய விகுதி. இதன் வேறு பெயர் நாலடி நானூறு. "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்னும் பழமொழியால் இது திருக்குறளோடு வைத்து எண்ணப்படும் தகுதியுடையது என்பது விளங்கும். இப்பாடல்கள் சமண முனிவர்களால் பாடப்பட்டவை. பிற்காலத்தவரான பதுமனார் என்னும் புலவர் இந்நூலுக்குப் பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடு செய்தார்.

### அருஞ்சொற்கள்

1. களர் - உவர் நிலம். கடை நிலத்தோர் - இழிவான வகுப்பில் பிறந்தவர். தலை நிலம் - மேன்மையான இடம். பிறப்புப் பற்றி உயர்வு, தாழ்வு பாராட்டாமல் கல்விச் சிறப்பால் நன்கு மதிக்கவேண்டும்.

2. ஒரு புடை - ஒரு பகுதி. ஞாலம் - பூமி. செல்லாமை - வறுமை, செவ்வன் - நன்றாக. ஒப்புரவு - உபகாரம்.

3. நன்று ஆற்றார் - தானம் செய்ய மாட்டார், ஏமம் சார் - உயிர்க்குப் பாதுகாப்பாகப் பொருந்திய, ஆக்கம் - செல்வம், அவத்தம் - வீண்.

4. நிறுப்பானும் - வைப்பவனும்.

5. அறநெறி - தருமவழி, கூற்றம் - எமன், போற்றுமின் - (உம்மிடம் வராதபடி தடுத்துப்) பாதுகாத்துக் கொள்ளுங்கள், கேண்மை-நட்பு.

## 4. ஆசாரக் கோவை

### அற்றைக் கடன்

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

## சிந்திக்கத் தகாதவை

பொய்குறளை வெளவல் அழுக்கா(று) இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்
ஐயம் புகுவித்(து) அருநிரயத்(து) உய்த்துவிடும்;
தெய்வமும் செற்று விடும். 2

## பிறரிடம் ஒன்றுரைக்கும் முறை

விரைந்துரையார்; மேன்மேல் உரையார்; பொய்யாய
பரந்துரையார்; பாரித்(து) உரையார்; ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. 3

## பொன்போல் போற்றத் தக்கவை

தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்(று)
உன்னித்து வைத்த பொருளோ(டு)—இவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க; உய்யாக்கால்
மன்னிய ஏதம் தரும். 4

## இல்வாழ்க்கையின் சிறப்பு

நஞ்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்(கு) ஆசாரம்
எப்பெற்றி யானும் படும். 5

—பெருவாயின் முள்ளியார்.

### குறிப்புரை

1. வைகறையாமம்-விடியற் காலமாகிய (இரவின்) பின்யாமம், துயில்-தூக்கம். அறம்-தருமம், ஒண்பொருளும்-சிறந்த பொருளையும், வாய் வதில்-உண்மையாக, முந்தையோர்-முன்னோர்.

2. குறளை - கோள் சொல்லுதல், வெளவல் - (பிறர்பொருளைக்) கவர்ந்து கொள்ளுதல். அழுக்காறு-பொறாமை, ஐயம் தீர்-சந்தேகம் அற்ற, தெளிவான. காட்சியர்-அறிவுடையார், ஐயம்-பிச்சை. நிரயத்து - நரகத்தில், செற்றுவிடும்-கெடுத்துவிடும்.

**3.** பரந்து-பரபரப்புக்கொண்டு, பாரித்து - பரப்பி, செவ்வி - தக்கசமயம்.

**4.** தாரம் - மனைவி, உன்னித்து வைத்த - எண்ணி (ச்சேர்த்து) வைத்த, ஏதம் - துன்பம்.

**5.** நந்து எறும்பு - ஆக்கமுள்ள எறும்பு, கடைப்பிடித்து - சோராமல் கொண்டு, ஆசாரம் - நல்லொழுக்கம், படும் - சிறப்புறும்.

# III. கதை

## 1. பெரிய புராணம்

### அப்பூதியடிகள் புராணம்

**அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் பல அறங்கள் செய்தல்**

தாண்டவம் புரிய வல்ல
தம்பிரா னுருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா
ரெல்லையி றவத்தின் மிக்கார்
ஆண்டசீ ரரசின் பாத
மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக்
கலந்தவன் பினரா யுள்ளார். 1

களவுபொய் காமங் கோபம்
முதலிய குற்றங் காய்ந்தார்;
வளமிகு மனையின் வாழ்க்கை
நிலையினர் மனைப்பா லுள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உளவெலா மரசின் நாமஞ்
சாற்றுமவ் வொழுக்க லாற்றார். 2

வடிவுதாங் காணு ராயும்
மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானா
ரருளுங்கேட் டவர்நா மத்தாற்

படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து
முறைமையால் வாழு நாளில். 3

### அப்பர் எங்கும் தம் பெயரையே காணுதல்

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார். 4

### திருநாவுக்கரசர் வினவும், அப்பூதியடிகள் விடையும்

"ஆறணியுஞ் சடை முடியா
ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந்
தரில்நும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத
வேண்டியகா ரணமென்கொல்?
கூறு" மென வெதிர்மொழிந்தார்
கோதில்மொழிக் கொற்றவனார். 5

நின்றமறை யோர்கேளா
நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்
நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி
திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ
வேறொருபேர்?" எனவெகுள்வார். 6

"நம்மையுடை யவர்கழற்கீழ்
நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென
வென்போல்வா ருந்தெளியச்

செம்மைபுரி திருநாவுக்
கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க
விளம்பினீ" ரெனவிளம்பி. 7

"பொங்குகடற் கன்மிதப்பிற்
போந்தேறு மவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தி
லறியாதார் யாருளரே ?
மங்கலமாந் திருவேடத்
துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் ? நீர்தாம்யார்?
இயம்பு "மென வியம்பினர். 8

## திருநாவுக்கரசர் தம்மை வெளிப்படுத்துதல்

திருமறையோ ரதுமொழியத்
திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார்
"பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினு
லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத
சிறுமையேன் யா"னென்றார். 9

## அப்பூதியடிகளின் செயல்

அரசறிய வுரைசெய்ய வப்பூதி யடிகள்தாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். 10

மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
அற்றவர்க ளருநிதியம் பெற்றார்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ வோடினர் பாடினர். 11

**[அப்பூதியடிகள் திருநாவுக்கரசருக்குத் திருவமுது படைக்கக் கருதி வாழைக் குருத்தொன்று கொண்டு வருமாறு தமது மூத்த புதல்வரை அனுப்பினர்]**

**அரவு தீண்டுதல்**

"நல்லதாய் தந்தை யேவ
நானிது செயப்பெற் றே"னென்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத்
துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும்
பொழுதினில் வாளராவொன்(று)
அல்லலுற் றழுங்கிச் சோர
வங்கையிற் றீண்டிற் றன்றே. 12

கையினிற் கவர்ந்து சுற்றிக்
கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப்
பதைப்புதடன் " பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா
முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று
கொடுப்ப'னென் றோடி வந்தான். 13

பொருந்திய விடவே கத்திற்
போதுவான் வேகம் முந்த
வருந்தியே யணையும் போழ்து
"மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத்
தாழ்க்கையா னறையே" னென்று
திருந்திய கருத்தி னேடுஞ்
செழுமனை சென்று புக்கான். 14

எரிவிடம் முறையே யேறித்
தலைக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு
மேனியுங் கருகித் தீய்ந்து

விரிவுரை குழறி யாவி
விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயர்
பால்வைத்துப் படிமேல் விழ்ந்தான். 15

**அப்பூதியடிகள் இறந்த மகனை மறைத்துத் திருநாவுக்கரசரை அமுது செய்ய அழைத்தல்**

தளர்ந்துவிழ் மகனைக் கண்டு
தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி
யுதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியுங் கண்டு
"விடத்தினால் வீந்தா" னென்று
துளங்குத லின்றித் தொண்ட
ரமுதுசெய் வதற்குச் சூழ்வார். 16

பெறலரும் புதல்வன் தன்னைப்
பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
"அறவிது தெரியா வண்ண
மமுதுசெய் விப்போ" மென்று
விறலுடைத் தொண்ட னார்பால்
விருப்பொடு விரைந்து வந்தார். 17

**திருநாவுக்கரசர் பிள்ளையை உயிர்ப்பித்தல்**

நாவினுக் கரசர் கேளா
"நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வா"
ரென்றுமுன் னெழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி
யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப்
பணிவிடம் பாற்று வித்தார். 18

தீவிடம் நீங்க வுய்ந்த
திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய வுறக்கம் நீங்கி
விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட
திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு
புனிதநீ றளித்தா ரன்றே. 19

புகழ்ந்தகோ மயத்து நீரால்
பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்
சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட
குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய்
வலம்பெற மரபின் வைத்தார். 20

### திருநாவுக்கரசர் அமுது செய்தல்

மைந்தரும் மறையோர் தாமும்
மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர்
திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக்
கூத்தனு ரடியா ரோடும்
அந்தமி ழாளி யாரங்
கமுதுசெய் தருளினரே. 21

### திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் தொண்டைச் சிறப்பித்துப் பாடுதல்

மாதவ மறையோர் செல்வ
மனையிடை அமுது செய்து
காதனண் பளித்துப் பன்னாள்
கலந்துட னிருந்த பின்றை

மேதகு நாவின் மன்னர்
விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து
நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். 22

அப்பூதி யடிக ளார்த
மடிமையைச் சிறப்பித் தான்று
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை
விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ
ரெல்லையி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார்
திருநாவுக் கரசர் பாதம். 23

## குறிப்புரை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அதில் கடைசியாகச் சேர்க்கப்பட்ட நூல் பெரியபுராணம். இது சிவனடியார்களின் வரலாற்றை உணர்த்தும் நூல். செயற்கரிய செயல்களைச் செய்து பெருமைபெற்ற சிவனடியாரது பெருமையைக் குறிக்கும் நூலாதலால் இது பெரியபுராணம் என்ற பெயரைப் பெற்றது. இது திருத்தொண்டர் புராணம் என்றும் கூறப்படும்.

இந்நூலாசிரியர் சேக்கிழார். அவர் தொண்டை நாட்டில் உள்ள குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவர் இரண்டாம் குலோத்துங்கனுக்கு அமைச்சராக விளங்கியவர். இவரது காலம் 12-ம் நூற்றாண்டின் முற்பகுதி.

## அருஞ்சொற்கள்

1. தம்பிரான் - தலைவர்.

2. காய்ந்தார் - முனிந்தவர், நிறைகோல் - துலாக்கோல்.

3. படிநிகழ் - உலகத்தில் நிகழ்கின்ற.

4. மந்தமாருதம் - இளந்தென்றற்காற்று, சந்தம் - அழகு, எம்மருங்கும் எல்லாப் பக்கங்களிலும்.

5. ஈறுஇல் - முடிவு இல்லாத, கோது - குற்றம்.

6. கேளா - கேட்டு, உறைப்பால் - வலிமையால், வெகுள்வார் கோபிப்பார்.

7. வெம்மை - கொடிய.

8. மிதப்பு - மிதப்பது, தெப்பம். அரசன் திருநாவுககரசரைக் கல்லிற் கட்டிக் கடலிலிட அவர் அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய வரலாறு இங்கறியத்தக்கது. இவ்வரசன் மகேந்திரவர்ம பல்லவன் (கி பி. 600-630) என்ப.

9. பிற துறை-சைவ சமயமல்லாத பிற சமயத் துறை;இங்குச் சமண சமயத்தைக் குறிக்கும், தெருளும்-தெளிவுள்ள.

10 கர கமலம் மிசை குவிய-கைகளாகிய தாமரைகள்(தலைக்கு) மேலே தாமாகவே சென்று குவிய, சரண கமலம்-அடித்தாமரை.

11. வாகீசர் - நாவுக்கரசர் அற்றவர்கள் - பொருளற்றவர்கள், உற்ற - பொருந்திய.

12. ஒல்லை-விரைவு, மல்லல் அம் குருத்து-வளப்பம் பொருந்திய அழகிய குருத்து, ஈரும்-அறுக்கும், வாள் அரா-ஒளியுள்ள பாம்பு.

13. கண் எரி காந்துகின்ற-கண்ணில் நெருப்புப் பொறி வீசுகின்ற, பை அரா-படத்தையுடைய பாம்பு, பாந்தள்-பாம்பு.

14. மாசுணம்-பாம்பு, தாழ்க்க-தாமதமாகும்படி, அறைந்தேன்-கூறேன், தன்மை யொருமை வினைமுற்று.

15. ஏழாம் வேகம்-பாம்பினது ஏழாவது வேகமும், முழு வேகமும், எயிறு-பற்கள், பரிகலம்-உண்பதற்கிடும் கலமாகிய குருத்து, படி-பூமி.

16. உதிரம்-இரத்தம், வீழ்ந்தான்-இறந்தான்.

17. பாங்கு-பக்கம், ஓர்புடை-ஓர் இடத்தில்.

18. பாற்றுவித்தார்-மாற்றியருளினர்.

19. சே உகைத்தவர்-எருதை (வாகனமாக) ஏறிச் செலுத்தும் சிவபெருமான், புனித - தூய்மையான.

20. நீவி - மெழுகி, திகழ்ந்த வான் சுதையும் போக்கி - விளங்குகின்ற வெள்ளிய கோலமிட்டு, ஈர் வாய் - அறுத்த பக்கத்தை.

21. மருங்கு - பக்கத்தில் (இருந்து), கொந்து அவிழ் கொன்றைவேணி - கொத்துக்களாக விரிந்து மலர்கின்ற கொன்றைப் பூக்களை அணிந்துள்ள சடைமுடி.

22. மாதவ மறையோர் - அப்பூதியடிகள், காதனண்பு : காதல்+நண்பு, பன்னாள் : பல்+நாள், பலநாள், மேதகு - மேன்மை+தகு, மூதூர் : முதுமை+ஊர்.

23. ஆன்ற - பெருமை சான்ற, சொல் மாலை - சொற்களாலாகிய பா மாலை.

# 2. கம்ப ராமாயணம்

## பால காண்டம்

### கையடைப் படலம்

#### தசரதன் கொலு மண்டபம்

நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அனைதா அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தியே. 1

தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
நாயகன் இவன் கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிரம் இல்லைஎன் றையம் நீங்கினர். 2

#### தசரதனிடம் விசுவாமித்திர முனிவர் வருதல்

மடங்கல் போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோ(டு)
இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்டெ'னாத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினன். 3

#### தசரதன் உபசாரம்

வந்துமுனி எய்துதலும் மார்பிலணி ஆரம்
அந்தரநி லத்திரவி அஞ்ச ஒளி விஞ்ச
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடி தெழுந்தடி பணிந்தான். 4

பணிந்துமணி செற்றுபுகு யிற்றி அவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டினித ருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண்அ ருச்சனை செய்' தின்றே
துணிந்ததெம்வி னைத்தொடர்பெ' னத்தொழுது சொல்லும் 5

#### தசரதன் முகமன் கூறல்

நிலம்செய்தவம் என்றுணரின் அன்றுநெடி யோய் !என்
நலம் செய்வினை உண்டெனினும் அன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கஎளி வந்த இதுமுந்தெம்
குலஞ்செய்தவம்' என்றினிது கூறமுனி கூறும். 6

### விசுவாமித்திரர் தசரதனைப் புகழ்தல்

'என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூருென் றுடையர் ஆனல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன் நகரும் கற்பகநாட் டணிநகரும்
அணிமாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகலுண்டோ?
இகல்கடந்த புலவு வேலோய்!' 7

இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குருமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்(டு)
அன்றளித்த அரசன்றே புரந்தரனின்(று)
ஆள்கின்ற தரச!' வென்ருன். 8

### தசரதன், விசுவாமித்திரரை நோக்கி யான்செய்ய வேண்டிய பணி யாது எனக் கேட்டல்.

உரைசெய்யு மளவினவன் முகநோக்கி
யுள்ளத்தி னெருவ் ராலுங்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி,
அரசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னுங்கே 9

### கோசிகன் விருப்பம்

தருவனத்துள் யானியற்றும் தகைவேள்விக்(கு)
இடையூருய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்

செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி' என உயிர்இரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான். 10

**தசரதன் துன்ப நிலை**

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 11

**தசரதன் விண்ணப்பம்**

தொடையூற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கிப்
படையூற்றம் இலன்சிறியன் இவன்பெரியோய்
பணிஇதுவேல் பனிநீர்க் கங்கை
புடையூற்றும் சடையானும் புரந்தரனும்
வெகுண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறாய் யான் காப்பன்
பெருவேள்விக் கெழுக' என்றான். 12

**கோசிகன் கடுங்கோப முறுதல்**

என்றனன்என் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி; இறுதிக் காலம்
அன்றெனஆம் என இமையோர் அயிர்த்தனர்; மேல்
வெயில் கரந்த(து); அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன; மீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன; வந் ததுநகையும்; சிவந்தனகண்;
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம் 13

### வசிட்டன் கூற்று

கறுத்த மாமுனி கருத்தை உன்னி' நீ
பொறுத்தி' என்றவர் புகழ்ந்து 'நின்மகற்கு(கு)
உறுத்தல் ஆகலா உறுதி எய்துநாள்
மறுத்தியோ ?'எனா வசிட்டன் கூறினான். 14

பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய! நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே. 15

### இராமன் வருகை

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
'திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்'றெனா
'வருக என்றனன்' என்ன லோடும்வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 16

### கையடை

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி "நல்
தந்தை நீதனித் தாயும் நீ இவர்க்(கு)
எந்தை! தந்தனன் இயைந்த செய்கெ"ன்றான். 17

### கோசிகன்பின் குமாரர் போதல்

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்(து)
எடுத்த சீற்றம்விட் டினிதுவாழ்த்தி "மேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்"எனா
நடத்தல் மேயினான் நவைக்கண் நீங்கினான். 18

### இராமன் படைக்கலங்களை எடுத்துக் கொள்ளுதல்

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோ
லென்றுந் தேய்வுறாத் தூணி யாத்திரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவி
லொன்று தாங்கினா னுலகந் தாங்கினான். 19

அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவன் தொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன். 20

### மூவரும் சரயு நதியைச் சார்தல்

வரங்கண் மாசறத் தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்க ணேரிலா நகர நீங்கிப்போய்
அரங்கி னுடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினர். 21

### நதியைக் கடத்தல்

தாழு மாமழை தழுவு நெற்றியாற்
சூழி யானைபோற் றேன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா
வேழு மேறப்போ யாறு மேறினர். 22

### குறிப்புரை

சொற்சுவை, பொருட்சுவை செறிந்து விளங்குஞ் சிறந்த காவியங்களுள் கம்பராமாயணம் ஒன்று.

கம்பருடைய பிறப்பு வளர்ப்புக்களைப் பற்றிய வரலாறு இருளிற் புதைபட்டுக் கிடக்கின்றது. இவர் சோழவள நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் என்பவருக்குப் பிள்ளையாகத் தோன்றினர் என்பர். கம்பர் இளம் பருவத்திலேயே திருவெண்ணெய் நல்லூரில் பெருஞ் செல்வராயும், சிறந்த வள்ளலாயும் விளங்கிய சடையப்ப முதலியாரை அடைந்து, அவரால் ஆதரிக்கப்பட்டு, பெரும் புலமையுற்று விளங்கினர். கம்பர், தம்மை ஆதரித்த அவ்வள்ளலை, நன்றியறிதற் காரணமாகப் பத்து இடங்களில் புகழ்ந்துள்ளார். "கல்வியிற் பெரியவன் கம்பன்" என்று வருவதும், "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியுங் கவிபாடும்" என்னும் முதுமொழியும், "கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயங் களியாதே," என்ற கூற்றும், பிறவும் கம்பருடைய புலமை மாட்சியை விளக்குகின்றன. இவர் பாடிய வேறு நூல்கள் ஏரெழுபது, சடகோபரந்தாதி முதலியன.

கம்பருடைய காலம் கி. பி. **9**-ம் நூற்றண்டு என்று ஒரு சாராரும், **12**-ம் நூற்றண்டின் பிற்பகுதி என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர்.

கம்பராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் என விரியும். ஆறும் வேற்றுமைத் தொகை. இராமாயணம் = இராம + அயநம் = இராமனது நெறி. இந்நூல் 'இராமாவதாரம்' என்றும் பெயர் பெறும்.

கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் உள்ளன. அவை பால காண்டம் அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன.

கையடைப் படலம் பால காண்டத்தில் உள்ளது. இது, தசரதன் இராம லக்ஷ்மணரைக் கோசிகன் கையில் அடைக்கலமாகக் கொடுத்ததைக் கூறும்.

1. நனை - அரும்புகள், வரு-அரும்புகின்ற, கற்பகநாட்டு நல் நகர் - அமராவதி நகரம், புனை மணி மண்டபம் - அலங்கரிக்கப்பட்ட அழகிய மண்டபம், எய்தி - (தசரதன்) போய்,

2. சேய் இரு விசும்பிடை திரியும் சாரணர் - உயர்ந்த பெரிய ஆகாய மார்க்கத்திலே சஞ்சரிக்கும் தேவ சாதியார், நாயகன் இவன் கொல் என்று அயிர்த்து - தேவேந்திரன் இவனே என்று (முதலில்) சந்தேகித்து, நாட்டம் - கண்கள்.

3. மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர் - சிங்கம்போன்ற வலிமை உடையவனாகிய தசரதன் முன். கோசிக முனிவன் - விசுவாமித்திரன்.

4. அந்தர நிலம் - ஆகாயம், இரவி - சூரியன், விஞ்ச - மிகுதியாக, கந்த மலரிற் கடவுள் - பிரம்மதேவன், கந்தமலர் - தாமரை.

5. மணி செற்றுபு குயிற்றி-இரத்தினங்களை நெருக்கமாகப் பதித்ததினால், அவிர் பைம்பொன் அணிந்த தவிசு - விளங்குகின்ற பசும் பொன்னினால் அழகாகச் செய்யப்பட்ட ஆசனத்தை, அருத்தி - அன்பு, இருத்தி - இருக்கச்செய்து.

6. நெடியோய் - தவத்தாற் பெரியோய்!, நிலம் - நிலத்தினர், இடவாகு பெயர்.

7. இகல் கடந்த - பகைவரை வென்ற, புலவு - மாமிச நாற்றம், வேலோய் - வேலாயுதத்தையுடைய தசரதனே! பல் நகமும் - பல மலைகளும், நகு - சிரிக்கின்ற, வெள்ளிப்பனிவரை - கயிலாயமலை, பதும பீடத்தன் நகரும் - சத்தியலோகமும், நகு வெள்ளி: வினைத்தொகை, புகல் - அடைக்கலம்.

8. இன் தளிர் - இனிமையான தளிர்களை உடைய, குன்று அளிக்கும் - மலையை ஒத்த, குருமணி தோள் சம்பரனை - சிறந்த மணிகள் அழுத்திச் செய்யப்பட்ட அணியைப் பூண்ட புஜங்களை உடைய சம்பரன் என்னும் அசுரனை, புரந்தரன் - இந்திரன்.

9. அரைசு - அரசு, முரைசு - முரசு, பேரிகை; இரண்டும் இடைப்போலி.

10. தருவனம் - மரங்கள் அடர்ந்த காடு, இயற்றும் - செய்யவும், தகை - சிறப்பு, வெருவரல் - அஞ்சுதல், வேள்வி - யாகம், நிருதர் - அரக்கர், செருமுகத்து - போரில், உலைய - வருந்த.

11. எண்ணிலா: எண் + இலா—கணக்கற்ற, மருமம் - மார்பு, உண்ணிலாவிய: உள் + நிலாவிய, உந்த - தள்ள, கால வேலான் - யமனை ஒத்த வேலாயுதத்தை உடையனாகிய,

**12.** தொடை ஊற்றில் - (துளிகள்) தொடுத்து வருதலோடு கூடிய ஒழுக்கைப்போல, படை ஊற்றம் - படைக்கலப் பயிற்சி, புடை - ஒரு பக்கத்திலே, ஊற்றும் - ஒழுகவிட்ட, பெரு வேள்வி: பண்புத் தொகை.

**13.** மண்படைத்த முனி-விசுவாமித்திரன், வேறு ஓர் உலகம் உண்டாக்கியதைக் குறிக்கிறது.

**14.** கறுத்த - கோபங்கொண்ட, உறுத்தல் ஆகலா உறுதி - அடைவிக்க முடியாத நன்மை.

**15.** மொய் - வலிமை, வேலை - கடல், விஞ்சை - வித்தை, எதிர்ந்தது - நேர்ந்துளது, எய்து காலம்: வினைத் தொகை.

**16.** திருவின் கேள்வன் - இலக்குமியின் கணவனான இராமன்.

**17.** நம்பி - ஆடவரில் சிறந்தவனான இராமன், முந்தை நான்மறை - முந்தினவாய நான்கு வேதங்கள், எந்தை - எம் தந்தை: (மரூஉ).

**18.** சீற்றம் - கோபம், நவைக்கண் நீங்கினான் - குற்றத்திலிருந்து நீங்கினவனாகிய விசுவாமித்திரன்.

**19.** வென்றி - வெற்றி, புடை வீசித்து - பக்கத்தில் கட்டி, தூணி - அம்பறுத்தூணி, கொற்றம் - வெற்றி, உலகம் தாங்கினான் - எல்லா உலகங்களையும் காப்பவனான இராமன்.

**20.** ஐயனும் மன்னன் - தலைவனாகிய தசரதனுடைய, சொன்ன மாதவன் - விசுவாமித்திரன், சாயை - நிழல், புரிசை - மதில்,

**21.** மாசு - குற்றம், நவம் செய்தோர்கள் வாழ்புரங்கள் - அமராவதி முதலிய நகரங்கள், அரங்கு - நாடகமேடை, இரங்கும் - ஒலிக்கும், வார்புனல் சரயு- பெரிய வெள்ளத்தையுடைய சரயுநதி.

**22.** தாழு - தங்குகின்ற, மா - பெரிய, மழை - மேகங்கள், தழுவு நெற்றியால் - தங்கும் மேலிடத்தை உடைமையால், சூழி - முகபடாம், மால் - பெரிய, வரை - உதயகிரியினது, பாழி - வலிமை, மா முகடு உச்சி - பெரிய சிகரத்தின் நுனியிலே, பச்சை மா ஏழும் ஏற - (சூரியனுடைய) பசுமை நிறமுடைய குதிரைகள் ஏழும் ஏற (சூரியன் உதிக்குங்காலத்தில்), போய் ஆறும் ஏறினான் - இராமன் நதியைக் கடந்து ஏறினான்.

## 3. சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதை

### புறஞ்சேரியில் நின்றும் நீங்கி மதுரை நகருக்குள் போயிருக்கும்படி மாடலனும் கவுந்தியடிகளும் கோவலனை வேண்டல்

அறத்துறை மாக்கட் கல்ல திந்தப்
புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்
அரைசர் பின்னோ ரகநகர் மருங்கினின்

உரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன்
மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
**கோவலன்** றனக்குக் கூறுங் காலை

### மாதரி ஆங்கு வரல்

அறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் **மாதரி** யென்போள்
**காவுந்தி** யையையைக் கண்டடி தொழலும்
ஆகாத் தோம்பி யாப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும் பாடில்லை
தீதிலண் முதுமகள் செவ்விய ளளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி

### மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகத் தந்து, காவுந்தி அடிகள் அடைக்கலப் பொருளாகிய கண்ணகியின் கற்பு மேம்பாட்டுச் சிறப்பைத் தெரிவித்தல்

மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கிங்

கென்ஞெடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்

**கற்புடைப் பெண்டிர் வசிக்கும் நாட்டின் சிறப்பை அடிகள் கூறல்**

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடென்னும்
அத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய் (என்று)
கவுந்தி கூற உவந்தனள் ஏத்தி

**அதைக்கேட்ட மாதரி உவந்து அவர்களை அழைத்துக்கொண்டு மதுரை புகல்**

முளையிள வெண்பன் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுரலியம்ப
மறித்தோ ளவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ

**மாதரி மதுரை நகரும், காவற்காடும், கிடங்கும், மதிலும் கழிந்து தன் மனைபுகல்**

மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்,
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்

எழுவும் சீப்பும் உழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிறுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

## குறிப்புரை

'நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம்' என்று போற்றப் பெறுவதும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றும் ஆகிய இந்நூல், இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது. கோவலன், கண்ணகி இவர்களின் வரலாறு இதன்கண் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்னும் உண்மைகளைக் கண்ணகியின் சிலம்பு காரணமாக இவர் பாடுதலின், இந்நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இதன்கண், இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் கலந்து வருதலின் இது, இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகும்.

இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் தம்பியாவர். இளமையிலே அரசு துறந்திருந்தமையின் இவர் அடிகள் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண் டென்பர்.

இந்நூலுக்கு அரும்பத உரை யொன்றும், அடியார்க்கு நல்லார் உரை யொன்றும் உள்ளன. அரும்பத உரை எழுதியவர் பெயர் தெரியவில்லை.

இந்நூல், புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது.

கவுந்தி அடிகளோடு மதுரைவந்து புறஞ்சேரியில் தங்கினர் கோவலனும் கண்ணகியும். புறஞ்சேரியில் இருப்பது தகாது; ஊருக்குள் போதலே நன்று என்று அடிகள் கூறுங்காலை, ஆண்டுவந்த மாதரி நல்லாளிடம் கண்ணகியை அடைக்கலமாக அடிகள் ஒப்புவித்த செய்தியைத் தெரிவிக்கும்.

## குறிப்புரை

**1.** புறத்துறை - புறம்பின் கண் பள்ளி. அரைசர் பின்னோர் - வாணிகர். உரையில் - (மாசாத்து மகன் என்னும்) புகழால். **13.** ஐயனுக்குப் பெண்பால் ஐயை. **14.** ஆப்பயன் - பால் முதலியன. **15.** கொடும்பாடு - கொடுமை. **16.** தீதிலள் - மனத்தில் அழுக்காறு இல்லாதவள். செவ்வியள் - மனக்கோட்டமில்லாதவள். **21.** பெறுநரின் - பெற்றார் போல. **28.** உடீஇ - உடுத்து. தொல்லோர் சிறப்பின் - பழையோராகச் சிறப்பித்துக் கூறப்பட்ட ஆயம். **32.** வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள் - அழகிய சிறிய அடியை முன் மண்

மகளும் கண்டறியாள். அதாவது அகம்விட்டுப் புறப்பட்டறியாள். இவள் கால் கொப்புளங்கண்டு நிலத்திற் பாவவில்லை, என்றுமாம். **35.** தன்றுயர் காணு - தனது துயரென வேறாகத் தனிந்துக் காணுது. (கணவனது துயரைத் தன் துயராகவே கருதி என்க.)

**46.** முளையிள - இளமுளை என மாற்றுக. இளைய முளைபோன்ற. முதுக் குறை - சிறிய பருவத்தே பெரிய அறிவினையுடைய. **47.** செல்சுடர் - சுருங்கின சுடரையுடைய. **49.** பறித்தோள் நவியம் - ஆட்டு பறியையும் கோடரியையு முடைய தோளிலே. **51.** மிளை - காவற்காடு. கிடங்கு - அகழி. வளைவிற் பொறி - வளைந்து தானே எய்யும் எந்திரவில். **52.** கரு விரல் ஊகம் - கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி. **53.** பரிவுறு வெந்நெயும் - காய்ந் திறைத்தலாற் சேர்ந்தாரை வருத்தும் நெய்யும், பாகடு குழி சியும் - செம்புருக்கும் மிடாவும் (அல்லது) அங்ஙனம் இறைத்தற்குப் பாகு காயும் குழிசிகளுமாம். **55.** தொடக்கு = கழுக்கோல்போலக் கழுத்திற் பூட்டி முறுக் கும் சங்கிலியும். (கயிற்றுத் தொடக்கும் ஆகும்.)

**56.** கழு - கழுக்கோல். புதை - அம்புக்கட்டு. புழை - (அம்புவைக் கும்) அறைகளும். **61.** ஞாயில் - குருவித் தலைகள். நாட்கொடி - நாள்தோறும் வென்று வென்று எடுத்த கொடி. நுடங்கும் - அசையும். கோவலர் மடந்தை - மாதரி. (இடைக்குலப் பெண்.)

## தேம்பாவணி

**அகஸ்டஸ் ராயன் (Caesar Augustus) ஆணைப்படி பெயரும் வரியும் கொடுக்கப் பெத்லேம் நகரம் வந்தசூசைக் கும் இயேசு நாதரைக் கர்ப்பத்தில் தாங்கியிருந்த மரி அம் மைக்கும் அந்நகரத்தார் இடங்கொடாமையால் அவர்கள் வருந்தி ஒரு கற்குகையை அடைந்தார்கள். அவ்விடத்தில்**

### இயேசுநாதர் பிறத்தல்

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய
இலயை மூன்றினும் இழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள். 1

மாத மார்கழி வைகல் ஐயைந்தாய்
ஏதி லாநிசிக் கிருத்தை மூவைந்தாய்
ஆதி நாளென ஆதி நாதனைக்
காதல் நாயகி களிப்பின் நல்கினள். 2

## தேவதூதர் குழந்தையை ஏந்தல்

சொக்க ளாவுருந் தோன்றிய தோன்றலை
மிக்க யேலொடு காபிரி யேல்விழைந்
தொக்க வேந்தினர் ஒக்கவும் தாய்முனர்
மக்கள் நாதனை மாண்பெழக் காட்டினார். 3

## தாய்மகிழ்தல்

பொதிர்கொள் பூமணம் போன்மக வின்றவள்
கதிர்கொள் சேயொடு கண்கள் கலந்தகால்
எதிர்கொள் வெஞ்சுடர் காண்முழு இந்தெழு
முதிர்கொள் இன்ப முகத்து விளங்கினாள். 4

**திருக்குமாரன் தாயை நோக்கி, 'என்னைப்பெற்ற தாயே, நீயும் என்னைப்போலிரு' வென்றான். தாயும் தேவகுமாரனை வணங் கினாள். முன் சொன்ன வானவரிருவரும் திருக்குமாரனைத் தாயின் கரத்தில் தந்து முன்னே விழுந்து வணங்கினார்.**

காந்தணேரிய செங்கரத் தேந்தினள்
ஏந்தமார்பி லிறுகவுஞ் சேர்த்தனள்
வாய்ந்த பூம்பதம் நீவி வணங்கினள்
ஆய்ந்த நூற்கடந் தாருணர் வெய்தினாள். 5

**பின்னர்த் தேவகுமாரனைப் பலவாறு துதித்துப் புகழ்ந்தனள்; பின்பு**

தெருள் சுரந்த திரைப்புவி யார்க்குணப்
பொருள்சு ரந்துயிர்க்(கு) உண்டி பொழிந்தனன்
மருள் சுரந்த வடுக்கெட மைந்தனாய்
அருள் சுரந்தமு தாய்தர நுங்கினான். 6

**மரியாள் சூசையைத் தேவகுமாரன் வடிவினைக்கண்டு மகிழ அழைத்தனள்.**

## சூசை குமாரனைக்காணுதல்

இந்து நேர்நுதல் மீன்கள் நேர்விழி
இண்டை நேர்முக நீர்மையாற்

கந்த நேர்நளிர் தாது நேருடல்
காட்டு நாதனை அம்புயச்
சந்தம் நேரிய கன்னி நேர்கையில்
தாம நேரிய முத்தெனச்
சிந்து நேர்நயம் மூழ்கு சீர்மையில்
தேற நோக்கினன் சூசையே; 7

**வியப்புற்று நின்ற சூசையை நோக்கிக் கன்னிமரி 'நம் நாதனை உன் கையில் ஏந்திக்கொள் என்று மலர்க்கையை நீட்டினாள்; அவனும்,**

கைத்த லத்தி லெடுத்து மார்பொடு
காத லோங்க அணைத்தலும்
முத்த மிட்டலும் நோக்கில் தீட்டலும்
முற்ற நீரில் நனைத்தலும்
சித்த முற்றலும் நாண் மலர்க்கழல்
சென்னி யின்மிசை வைத்தலும்
இத்தி றத்திலும் உண்ம கிழ்ந்துறும்
இன்ப மெல்லையு மில்லையே. 8

**இன்பக்கடலில் மூழ்கிய சூசை குமாரனைத் தாய்கைக் கொடுக்கத் தேவகுமாரன் விரிந்த செந்தாமரை மெத்தையின் மேல் அன்னக்குஞ்சு போலக் கன்னித்தாயின் கையிலே தூங்கினான்; சூசை யிவ்வாறு பாராட்டிச் சீராட்டித் துதித்தனன்.**

களித்த நாளில் அரும்புந்தென்
காலே ! இனிதிங் கரும்புதியே
துளித்த நானத் தேனரும்பத்
துணர்நாண் மலர்காள் ! அரும்புதிரே
விளித்த நாகு மாங்குயில்காள் !
விளைதேன் பாவை அரும்புதிரே
அளித்த நாதன் நான்கனிய
அன்பு துயிலாத் துயில்கின்றான். 9

கண்பட் டுறங்கக் கண்டேனே
கருணா கரனே ! களிக்கடலே !

புண்பட் டுளையும் நெஞ்சிற்கோர்
பொருவா மருந்தே ! அருளன்பே !
மண்பட் டலையும் கடலன்ன
மருளென் னெஞ்சிற் குயிர்நிலையே !
எண்பட் டுயர்ந்த செல்வரசே !
எம்மே லிரங்குந் தயையிதுவோ ? 10

என்றான் அழுதான் உள்ளுருகி
யின்பக் கடலாழ்ந் தன்றாழ்ந்தான்
குன்றா விறையோன் தயைக்கடலுட்
குளித்தான் நீந்திக் கரைகாணான்
சென்றோ னென்ன மெய்ம்மறந்தே
சிறிதோர் கால்நின் றுணர்ந்தவைவான்
நின்றார் கண்டுள் ளதிசயிப்ப
நிகரில் அன்பால் மீண்டுரைப்பான். 11

அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தா யுலகிற் குயிரன்றாய்
பிறந்தெம் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தா யிவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ. 12

**என்று பலவாறு தொழுதான். அவ்வளவில்,**

துஞ்சுந் தன்மைத் தெவ்வுலகும்
துணையற் றுள்வோ ளிவைகேட்டு
விஞ்சுந் தன்மைத் தோங்கவளன்
விளைவே விளக்கும் விழிவிழித்தான்
எஞ்சுந் தன்மை யுதவியதா
னியைந்த தன்மை யுலகுணர்த்த
அஞ்சுந் தன்மைத் தெதிரிறைஞ்சும்
அமரர்க் குரையா தேவலிட்டான். 13

## குறிப்புரை

இதனை இயற்றிய ஆசிரியர் பெஸ்கி (**constantius Pschi**) என்னும் **வீர மா முனிவர்.** இவர் ஐரோப்பியர்; வட இத்தாலி தேசத்தில் வெனிஸ் நகருக்கு மேற்கேயுள்ள காஷ்டிக் கிளியானி (**castiglione**) என்னுமூரில் கி. பி. **1680**-ஆம் ஆண்டில் பிறந்தவர்; **2709**-ம் ஆண்டில் இந்தியாவிற்குக் கிறிஸ்தவ மத போதகராக வந்தவர். இவர் தமிழ் நாட்டில் மதுரை முதலிய நகரங்களில் தங்கித் தமிழ்ப்புலவர்களை யடுத்துத் தமிழ் மொழியைக் கற்றுச் சிறந்த புலவராகத் திகழ்ந்தார். தமிழ் மொழியில் அகராதி, சில இலக்கணங்கள், பிரபந்தங்கள், வசன நூல்கள் முதலிய பல நூல்களை யியற்றியுள்ளார். கீழ்வரும் பாடம். தேம்பவாணி முதற்காண்டம் 10-வது மகவருள் படலத்தைச் சேர்ந்தவை, இதில் ஏசுநாதர் அவதாரம் கூறப்பட்டுள்ளது. தேம்பவாணியில் காவியச் சுவைகள் மலிந்துள்ளன.

**1.** இலயை மூன்றினும் - பிள்ளையைப் பெறுமுன்னும் பெறும்போதும், பெற்றபின்னும் (முக்காலத்தும்.) இழிவில் கன்னி - அழியாத கன்னி; அலகுஇல்- அளவில்லாத. மூன்றினுள் - கர்த்தாவாகிய மூன்றுருட்களில்; அவர்கள் பிதா - மகன் - பரிசுத்த ஆவி (**The Holy Ghost**) எனப்படுவர்.

**2.** வைகல் - நாள்; (தேதி) ஐ+ஐந்து - இருபத்தைந்து. ஆதிநாள் - ஞாயிற்றுக் கிழமை. ஆதிநாதன் - இயேசுவை. நல்கினள் - பெற்றாள்.

**3.** சொக்கு - அழகு; வடிவு. அளா உரு-(அளாவு) கலந்த உருவம், (விகாரம்). மிக்கயேல் ஒடு காபிரியேல்-(**michael and Gabriel**) தேவ தூதர்.

**4.** பொதிர்....மணம்போல் - தான் குறை படாமல் பூ முகை வாசனை விட்டது போல். மகவு. பிள்ளை; (உரிச்சொல்) ஈன்றனள் - (கன்னியழியாமல்) பெற்றனள். சேயோடு - குமரன் கண்களோடு. கண்கள் கலந்த கால் - தனது கண்கள் கலந்து பார்த்த போது.
வெம்சுடர்காண் - சூரியனைக்கண்ட. முழு இந்து என - பூரண சந்திரன் போல; இன்ப முகத்தோடு விளங்கினன் என்க.

**5.** காந்தள் - கார்த்திகைப் பூ; செங்காந்தள். ஏந்த - ஏந்திய; உயர்ந்த. நிவி-தடவி. ஆய்ந்த நூல்கடந்த ஆர் உணர்வு-ஆராய்ந் தடைந்த கல்விகளைக் கடந்த ஞானம். கடந்த+ஆர்+உணர்வு-கடந்தார்; உணர்வு, தொகுத்தல்.

**6.** தெருள் - தெளிவு. திரை-கடல், (ஆகுபெயர்) உண்டி - உண்டிகளை. பொழிந்தனன் - தருகின்ற நாதன், மருள் சுரந்த வடுக்கெட - மயக்கத்தால் வந்த பாவங்களை நீக்குதற்கு, அருள் சுரந்தமுது - அன்பு நிறைந்த பால், தாய்தர நுங்கினன் - (தாய்கொடுக்க) உண்டான்.

**7.** இந்துநேர் - பிறையை ஒத்த, மீன்கண் - விண்மீன் போன்றகண், இண்டை நேர்முகம் -தாமரை மலரை ஒத்த முகம். நீர்மையால் - தன்மையால், கந்தம் நேர் தளிர் தாது நேர் உடல்- வாசனை பொருந்திய குளிர்ந்த மகரந்தத்தை யுடைய (மலரை) ஒத்த உடம்பு, நாதன் - தேவகுமாரன், கன்னி - கன்னித்தாயின், அம்புயச் சந்த நேரிய கையால் - சிறந்த கைத்தாமரையின் மேல், தாம

நேரிய முத்து என - ஒளிவிட்ட முத்தின் சாயலாக, சூசைதேர நோக்கினன் என்க, சிந்து - இன்பக்கடல், மூழ்கு - மூழ்கி, தேற-உண்மை தெளிய, (தாமரை முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்று.)

**8.** நோக்கில் நீட்டலும் -கண்ணில் ஒற்றி, நீர் - கண்ணீர், நாண் மலர் - புதிய மலர் போன்ற, கழல்- திருவடி, (ஆகுபெயர்). சென்னி- சிரசு, சித்தம் முற்றிலும். - மனம் ஓங்கி

**9.** அரும்பும் தென்காலே-வீசுகின்ற தென்றல் காற்றே! துளித்த-துளியாய், நானத்தேன் - வாசனைத் தேன், அரும்பு - வீசு, விளித்த - அழைத்த, நாகு மாங்குயில்காள் - இளங் குயில்காள் (நாகு இளமைப் பெயர்) தேன்பாவை - தேன்போன்ற இசைப்பாட்டை, நான்களிய - நான்களிகூர, அன்பு துயிலா - அன்பு குறையாமல்.

**10.** கண்பட்டு - கண்மூடி, கருணைகரன் - கிருபைக்கு இடமானவன். உளையும் - வருந்தும், பொருவா - பிறங்காத, மண்பட்டு - பூவுலகத்தைச் சூழ்ந்து, மருள் - மயங்குகின்ற, எண்பட்டு - எண்ண முடியாது மேம்பட்டு.

**11.** ஆழ்ந்தன்று ஆழ்ந்தான் - அமிழ்ந்து முழுகினன். இறையோன் - கர்த்தர், குன்றுத் தயைக் கடல் - குறையாத கிருபாசாகரம், சிறிது ஓர்க்கால் - சிறிது நேரம்.

**12.** துறந்தாய் - அகற்றினாய், துகள் பூட்டிய - (நாங்கள் செய்த) பாவமானது அடைத்த, விட்டு உயர் வாயில் - மோட்ச வாசலை, திறன் செய்து - வல்லமையும் தயையுங்கொண்டு; இவற்றை யாவரும் அறிய இரங்கிச் செய்யாயோ என்க.

**13.** துஞ்சும் தன்மைத்து - தூங்கின தன்மையைக் காட்டி; விஞ்சும் தன்மைத்து வளன் ஓங்க - மிகவும் [சூசை] மனதிலோங்க, விழிவிழித்தான் - தன் திருவிழியை விழித்தான், ஒருவன் சிறுமையைக் கொண்ட தன்மைக்கு உதவியைச் செய்யும் கர்த்தா, இங்கே பிறந்தமைந்த செய்தியை உலகத்தார்க்கு உணர்த்த அஞ்சி எதிரே வணங்கி நின்றவராகிய வானவர்க்கு வாக்கினல் உரையாமல் அதனை உணர்த்த மனத்துள் நின்று ஏவினன் என்பது பின்னிரண்டடியின் பொருள்.

# IV. சிறுநூல்கள்

## 1. திருவேங்கடத்தந்தாதி

திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன உற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றேடின மால்கழலே. 1

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றனிநெஞ்சமே
வடமா மலையுந் திருப்பாற் கடலும்மை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. 2

## 2. திருவெங்கைக் கலம்பகம்.

### மறம்

விற்றதார் ? கலை பாதியோடு
வனத்திலே யழவிட்டதார் ?
வெஞ்சிறைப் புகவிட்டதார் ?
துகிலுரிய விட்டு விழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டுமென்றினி
மன்னர் பெண்கொள வொண்ணுமோ ?
உமியடா மணமென்ற வாய்கிழித்
தோலை காற்றி லுருட்டடா
வெற்றியாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம் !
விமலரானவர் எமை யடுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்;
பெற்ற பிள்ளை கொடுப்பரோ விதென்
பேய் பிடித்திடு தூதரே ! 1

## 3. கலைசைச் சிலேடை வெண்பா

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே—மேவும்
அரிவையம்(பு) ஆகத்தான் அரண்ஒருமூன்(று) எய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம். 1

ஆயச் சிருர்படமும் ஆர்க்குங் கடாசலமுங்
காயத் திரியுங் கலைசையே—நேயமுடன்
பைத்த பதஞ்சலியார் பார்த்(து)உருகப் பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு. 2

—தொட்டிக்கலை, சுப்பிரமணிய முனிவர்.

## 4. சோணசைல மாலை

தோற்றிடும் பிறவி எனுங்கடல் வீழ்ந்து
துயர்ப்பிணி எனும்அலை அலைப்பக்
கூற்(று)எனும் முதலை விழுங்குமுன் நினது
குரைகழற் கரைபுக விடுப்பாய்;
ஏற்றிடும் விளக்கின் வேறுபட்(டு)அகத்தின்
இருளெலாந் தன்பெயர் ஒருகால்
சாற்றினும் ஒழிக்கும் விளக்(கு)எனும் சோண
சைலனே! கைலைநா யகனே!

—சிவப்பிரகாச சுவாமிகள்.

## 5. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

### வருகைப் பருவம்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!

—குமரகுருபர சுவாமிகள்.

## குறிப்புரை

1. **திருவேங்கடத் தந்தாதி:-** திருவேங்கடம் என்னும் திருப்பதி பற்றிய அந்தாதி. திருவேங்கடம்: மலை நாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று; சித்தூர்ச் சில்லாவில் உள்ளது. திரு, அடைமொழி. வேங்கடம் - திருப்பதி. அந்தாதி:- முன்செய்யுளின் இறுதியைப் பின் செய்யுள் முதலாகப் பெற்று வருமாறு பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம்.

இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார் என்பவர். இவருக்கு அழகிய மணவாள தாசர் என்னும் பெயரும் உண்டு. இவர் வைணவ சமயத்தினர்: கவிபாடுவதில் வல்லவர்; முதுமையில் திருவரங்கப் பெருமானுக்குத் தொண்டு செய்து கொண்டு திருவரங்கத்தில் வாழ்ந்தவர். இவர் காலம் 700- ஆண்டுகட்கு முன் என்பர்.

(1) சிற்றன்னை - சிறிய தாய்; கைகேயி. தரு - மரம். வேம் - தீயப்பெற்ற. கடம் - பாலைவனம். தத்து - ஆபத்து. கடம் - மதம். தும்பி - யானை.

(2) கடமா - யானை. மருப்பு - கொம்பு, தந்தம். ஒசித்தல் - ஒடித்தல். கவி - வானர சேனை. தடம் ஆம் அலை-பெரிய கடல். வட மாமலை - திருவேங் கட மலை. அலைவற்று - அசைவில்லாமல்.

2. **திருவெங்கைக் கலம்பகம்:-** வெங்கணூர் என்னும் திருப்பதி பற்றிய கலம்பகம் என்னும் பிரபந்தம், வெங்கை -வெங்கணூர் என்பதன் மரூஉ. வெங் கணூர் என்பது விருத்தாசலத்திற்கு அருகில் உள்ளதொரு சிவத்தலம். கலம் பகம் - புயவகுப்பு. தவம், மறம், குறம் முதலிய பதினெட்டு உறுப்புக்களை யுடையதாகப் பலவகைப் பாக்களால் அந்தாதியாகப் பாடப்படுவதொரு பிரபந் தம்.

இதனைப் பாடியவர் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் பிறந்தது **காஞ்சிபுரம்**; வாழ்ந்திருந்தது **துறை மங்கலம்**. இவர் 'கற்பனைக்களஞ்சியம்' என்று கற்றுவல்ல புலவர்களால் போற்றப் படுகிறார். இவரது காலம் ஏறக்குறைய 200—ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகிறது.

மறம் - மறம் என்பது மறச்சாதி மகள் ஒருத்தியை ஒரு மன்னன் மணம் பேசி விடுப்ப, அச்செய்தியை அறிவிக்கும் திருமுகத்தைக் கொண்டு வரும் தூதனை நோக்கி, மறக்குடித் தலைவன் சினந்து கூறுவது.

கலை - ஆடை. தாரம் - மனைவி. விமலர் - சிவபெருமான். மிச்சில் - எச்சில். வேலர் - முருகப்பெருமான். பெண் - வள்ளி.

### 3. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை யென்னும் ஊரைப் பற்றிச் சிலேடை வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறும் நூல், கலைசைச் சிலேடை வெண்பா. கலைசை - **தொட்டிக்கலை** யென்பதன் மரூஉ. சிலேடை - பல பொருள்படுவது.

இதனை இயற்றியவர் **தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்** என்பவர். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள தொட்டிக்கலை என்னும் ஊரில் பிறந்தவர்; சைவ சமயத்தவர்; கவிபாடுவதில் வல்லமையுள்ளவர். இவரது காலம் ஏறக்குறைய 140-ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகிறது.

4. பாவலர் - புலவர். காவலர் - அரசர்; கா அலர் - சோலையிலுள்ள பூக்கள். அரி - திருமால். வை - கூர்மை. அம்பு - பாணம்.

## 4. சோணசைல மாலை

சோணசைலத்தைப் பற்றிய மாலையாகிய நூல், சோணசைல மாலை; சோணசைலம் - திருவண்ணாமலை. சோணம் - சிவப்பு. சைலம் - மலை. **மாலை** என்பது, மலர்களால் தொடுக்கப்பெற்ற பூமாலை போலச் சொற்களால் தொடுக்கப்பெற்ற பாமாலைப் பிரபந்தம் என்று பொருள் படும்; மாலை: உவமையாகு பெயர்.

இதனை இயற்றியவர் **சிவப்பிரகாச சுவாமிகள்.**

8. குரை - ஒலிக்கிறது. கழல் - திருவடி; தானியாகுபெயர். குரை கழல்: வினைத்தொகை. பிறவி எனும் கடல், பிணி எனும் அலை, கூற்றெனும் முதலை - உருவகங்கள். அகத்தின் இருள் -மனத்தினை மறைக்கும் ஆணவ முதலிய இருட்கூட்டம். சோணசைலம் - திருவண்ணாமலை.

## 5. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் பாடியவர் குமரகுருபர சுவாமிகள்.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகும். இதுஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். ஒருபுலவன் தான் பாடக்கருதிய தெய்வத்தையோ தலைவரையோ குழந்தையாகக் கருதிப்பாடுங்கால், குழந்தையின் வளர்ச்சி முறைக்கேற்பப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப்பாடுவர். அவை: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன. இவை ஆண் பாலுக்குரியவை. பெண் பாலுக்கு ஈற்றிலுள்ள மூன்று பருவங்களும் அம்மானை, நீராடல், ஊசல் என்று வரும்.

குமரகுருபரர் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் ஸ்ரீவைகுண்டம் என்று வழங்கும் கைலாச புரத்தில் சைவ வேளாள மரபில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமியம்மைக்கும் பிள்ளையாய்த் தோன்றினார். திருச்செந்தூர் முருகக் கடவுளின் அருள் பெற்றவர். மாசிலாமணி தேசிகரால் ஞான உபதேசம் பெற்றார். இவர் காசியில் ஒரு மடம் கட்டியிருக்கிறார். இவர் இயற்றிய வேறு நூல்கள்: மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை, மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம், சிதம்பரச் செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம் முதலியன.

## அருஞ் சொற்கள்

அகந்தை - நான் என்னும் ஆணவம். தொழும்பர் - தொண்டர். பொருப்பு மலை. எறிதரங்கம்—மோதுகின்ற அலை(கடல்). மதுகரம் - வண்டு. குழற்காடு - கூந்தல் தொகுதி..

# V. வருணனை

## சூரியன் தோற்றம்

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையின்
பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகலுங் கற்பி ஞர்போல்
புண்டரிகம் முகமலர அகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம். 1

## சூரியன் மறைவு

வரவு நோர்ந்தழைப் பவரென ஆம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிர்த் துணைவர்
பிரிவு நோக்கினர் எனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகடல் நீந்த. 2

## சந்திரன் தோற்றம்

பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை உதிர்ந்தமணி
விசும்பின் மீனின் மேல்விளங்க
வருந்த அமரர் கலக்கியநா
ளமுது நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென
எழுந்த தாழி வெண்டிங்கள். 3

## நிலாக்கற்றை

வண்ண மாலைக் கைபரப்பி
யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை

விண்ணு மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால். 4

## பொருநையாறு

கல்லெனக் கரைந்து வீழும்
கடும்புனற் குழவி கானத்
தொல்லெனத் தவழ்ந்து தீம்பா
லூண்டொரீஇத் திண்டோள் மள்ளர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத்
திங்குரல் செவிவாய்த் தேக்கி
மெல்லெனக் காலிற் போகிப்
பணைதொறும் விளையாட் டெய்தி. 5

பன்மலர் மாலை வேய்ந்து
பானுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைத் தேய்ந்த சாந்த
மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப்
பொருநையாங் கன்னி முந்நீர்த்
தன்மகிழ் கிழவ னுகந்
தழிஇக்கொடு கலந்த தன்றே. 6

## மருதநிலம்

ஆறுபாய் அரவம் மள்ளர்
ஆலைபாய் அமலை ஆலைச்
சாறுபாய் ஓசை வேலை
சங்குவாய் பொங்கும் ஓதை
ஏறுபாய் தமரம் நீரில்
எருமைபாய் துழனி இன்ன
மாறுமா றாகித் தம்மில்
மயங்குமா மருத வேலி. 7

**யானைப் படை**

கடல்க ளைச்சொரி மலையுள வெனஇரு
கடத டத்திடை பொழிமத முடையன,
கனல்வி ளைப்பன முகிலுள வெனவிழி
கனல்சி னத்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில உளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமி டிப்பன வடஅனல் உளஎன
ஒலிமு ழக்கின கடகரி மிடையவே. 8

**குதிரைப்படை**

முனைக ளொட்டுநர் முனைகளை இடறுவ
முடியின் முத்தினை விளைபுகழ் எனநிலம்
முதுகில் வித்துவ நிலமுறு துகளற
முகில்மி திப்பன முகில்விடு துளியொடு
கனைக டல்திரை நிரையென விரைவொடு
கடலி டத்தினை வலமிடம் வருவன
கடலி டத்(து)இறும் இடியென அடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடுகவே. 9

**தேர்ப் படை**

இருநி லத்திடர் உடைபடும் உருளன
இருபு டைச்சிற(கு) உடையன முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி(து)
இவுளி முற்படின் இதுபரி பவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன வினையன
உயர்செய் மொட்டொடு நறுமலர் என அவிழ்(வு)
ஒழித ரச்செரு உறுபுனல் உமிழ்வன
உலக ளப்பன இரதமும் விரவவே. 10

**காலாட்படை**

அலகில் வெற்றியும் உரிமையும் இவையென
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவர்
அடிபி றக்கிடில் அமரர்தம் உலகொ(டு)இவ்

உலகு கைப்படும் எனினும(து) ஒழிபவர்
உடலெ மக்(கு)ஒரு சுமையென முனிபவர்
உயிரை விற்(று)உறு புகழ்கொள உழல்பவர்
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே. 11

## அருஞ்சொற்பொருள்

**1.** இது கம்பராமாயணச் செய்யுள். வருங்குறி - வருங்காலத்தின் அடையாளம். தெரியல் - மலை. கொழுநர் - கணவர். மெலிவு - வருத்தம். புண்டரிகம் - தாமரை. பொய்கை - தடாகம்.

**2.** இச்செய்யுள் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. வரவு - வருகை. நேர்ந்து - விரும்பி. ஆம்பல் - அல்லிமலர். கான்று - தோற்றுவித்து. நகைத்து - புன்முறுவல் செய்து. கள்நீர் பில்கு - தேனாகிய நீர் பெருகும். நிரை - வரிசை.

**3.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கம்பராமாயணம் பாலகாண்டத்தில் உள்ளவை. பெருந்திண் நெடுமால் வரை - சிறந்த வலிய உயர்ந்த பெரிய மந்தரமலை. பாம்பு - வாசுகி என்னும் பாம்பு. மணித்தாம்பு - முறுக்கேறிய கயிறு. திவலை - நீர்த்துளி. உதிர்ந்த மணி - சிதறிய இரத்தினங்கள். கலக்கிய நாள் - கடைந்த காலத்து. இச்செய்யுளில் தற்குறிப்பேற்றவணி வந்துள்ளது.

**4.** வண்ணமாலை கைபரப்பி - செந்நிறமுள்ள மாலைப் பொழுதாகிய தனது செங்கையை விரித்து நீட்டி. பண்ணை - வயல்.

**5.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்து உள்ளவை. கல் என - கல் என்று ஒலித்து. கடும்புனல் குழவி - கடிய வேகத்தினையுடைய பொருநை நீராகிய குழந்தை. கானத்து - முல்லை நிலத்தில். செல் எனத் தெழிக்கும் - மேகம் போல் உரப்புகின்ற. செவிவாய்த் தேக்கி - என்பது உபசாரம். பண்ணை - மகளிர் விளையாட்டிடம். 'பணை' என இடைக்குறைந்து நின்றது.

**6.** சாந்தம் மான்மதச்சேறு பூசி - சந்தனத்தோடு கலந்த கஸ்தூரிக் குழம்பை அணிந்து. தன் கிழவன் எனக் கூட்டுக. ஆகம் - மார்பு.

**7.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கம்பராமாயணம் பாலகாண்டத்தில் உள்ளவை. அரவம், அமலை, ஓசை, ஓதை, தமரம், துழனி என்ற சொற்கள் வந்தது **பொருட் பின்வரு நிலையணியாம்.** மருதம் வேலி - மருத நிலத்து எல்லை. ஆலை - கரும்பாலை. சாறு - கரும்புச்சாறு. ஏறுபாய் தமரம் - எருதுகள் ஒன்றோடொன்று பொருது தாக்குதலால் உண்டாகும் ஓசை. மயங்கும் - கலந்திருக்கும்.

**8, 9, 10, 11** ஆகிய நான்கு செய்யுட்களும் சயங்கொண்டாரால் இயற்றப்பட்ட கலிங்கத்துப் பரணியிலிருந்து எடுக்கப்பட்டன.

**8.** தடகடம் - பெரிய கன்னம். உரும் - இடி, வட அனல் - வடவா முகாக்கினி, மிடைய - நெருங்க.

**9.** முனைகள் ஒட்டினர் - யுத்தகளத்திற்குச் சபதம் செய்து கொண்டு வந்த வீரர்கள், நிரை - வரிசை, கவனம் - வேகம், கதழ் - கோபம், பரி - குதிரை.

**10.** உருள் - சக்கரம், இவுளி - குதிரை, பரிபவம் - அவமானம், மொட்டு கொடிஞ்சி, திடர் - மேடு.

**11.** அறிகுறி - அடையாளம், அமரர் - தேவர்.

# VI தனிப்பாடல்கள்

## காளமேகப் புலவர்

### கங்கை குடத்திலே அடங்கும்

விண்ணுக் கடங்காமல், வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கைஅடங் கும். 1

## சிலேடை

### ஆமணக்குக்கும் யானைக்கும்

முத்திருக்கும்; கொம்பசைக்கும்; மூரித்தண் டேந்திவரும்;
கொத்திருக்கும்; நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கும் மால்யானை யாம். 2

கம்பமத கடகளிற்றான் தில்லை வாழுங்
　　கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தார்; அயில்வேல் செங்கை
　　உடையஅறு முகவனுங்கண் ணீரா னான்;
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்; மால்
　　பயமடைந்தான்; உமையும் உடல் பாதி யானாள்;
அம்புவியைப் படைத்திடுவ தவமதே யென்று
　　அயனும் அன்னம் இறங்காமல் அலைகின் றானே. 3

## இராமச்சந்திர கவிராயர்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்,
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் 'அப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்,
பார்' என்றே காட்டிநின்றான் பரமன் தானே. 4

### குறிப்புரை

காளமேகப் புலவர் 'வசைபாடக் காளமேகம்' எனச் சிறப்பிக்கப்பட்டவர். இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நாதன் கோயில் எனப்படும் நந்தி புரத்தின் கண் வேதியர் குலத்தில் 450 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். இவர் இயற்பெயர் வரதர். சமயம் சைவம்.

### அருஞ் சொற்கள்

1. மகுடம் என்றதைப் பிரித்துக் குடத்திலே என்று ,

2. முத்து - ஆமணக்கின் முத்து; தந்தத்தினின் முத்து. தண்டு - தாள், சேனை. தேம் - மணம். மால் - பெருமை.

3. கம்பம் - கட்டுத்தறி. களிறு - ஆண்யானை. தில்லை - சிதம்பரம். கணபதி - கணங்களுக்குத்தலைவர், விழித்திருந்தார் - இமையாத கண்ணை யுடையவராதலின், அயில் - கூர்மை.

கண்ணீராறுனன்—கண் + நீர் + ஆறு + ஆனன்;

கண் + ஈர் + ஆறு + ஆனன் என்றும் பிரித்துக் கொள்க.

பம்பல் - பொலிதல். சுடர்க் கண்ணன் - சிவன். பால் - பாற்கடல். உமை உடல் பாதியாயது - அம்மை அப்பன் வடிவம்.

4. இராமச்சந்திர கவிராயர் தொண்டை மண்டலத்துள்ள இராச நல்லூரிற் பிறந்தவர். இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.

சங்கரன் - உயிர்கட்கு இன்பத்தைச் செய்பவன்.

## புதுமைப் பாமலர்

### செல்வச் சிறுமியர் களிப்பு

பாகமாகச் செய்த பண்டமுண்போம்—நன்றாய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்
தாகமா றல்பல பானகமும்—தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம். 1

காலத்துக் கேற்ற உடையணிவோம்—வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
கூந்தலிற் சூட்டி அழகு செய்வோம். 2

பந்துகள் ஆடிப் பழகிடுவோம்—கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம்—சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம். 3

### ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆற வழியின்றி வாடிடுவோம். 4

அன்னப்பால் காணாத ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்குமம்மா
என்னப்பா யாம்படும் பாட்டையெல்லாம்—சென்று
யாரிடம் சொல்லி அழுவோமம்மா. 5

இட்டெலி ஐந்தாறு தின்றேமென்பீர்—நீங்கள்
ஏதும் கருணை யிலீரோ அம்மா
பட்டினி யாக இறந்திடினும்---நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோமம்மா. 6

### குறிப்புரை

இதனைப் பாடியவர் புலவர், கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். இவர் திருவிதாங்கூர் நாட்டில் உள்ள சுசீந்திரத்தை அடுத்த தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. **1876**-ம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் சிவதாணுப் பிள்ளை, ஆதிலக்ஷ்மியம்மாள்.

# உரை நடை

## 1. வஞ்சினங் கூறல்

(வித்துவான் டாக்டர். மு. வரதராசன் அவர்கள், M.O.L., Ph.D.)

தன்னைத் தான் காத்துக்கொள்ள உதவுவது அறிவு. திண்ணிய கால்களும் வாலும் கூரிய நகங்களும் பற்களும் வலிய அலகும் சிறகும் கொண்டு விலங்குகளும் பறவைகளும் தற்காப்புத் தேடி வாழ்கின்றன. மனிதனுக்கு அத்துணைக் கருவிகள் இன்றியே அஞ்சாது வாழும் வாழ்வு வாய்த்துள்ளது எனின், அஃது அவன் பெற்றுள்ள அறிவின் சிறப்பே ஆகும். தற்காப்புக் கருவியாக அறிவு பயன்படுமளவு கால் வால் முதலியவற்றின் திண்மையும் நகம் பல் முதலியவற்றின் கூர்மையும் பயன்படுதல் இல்லை. அறிவு என்ற ஒரு சிறந்த கருவி வாய்ப்பின், ஏனையவை வேண்டா; வேண்டிய பிற கருவிகளைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் அறிவிற்கு உண்டு. ஆதலின் அறிவே சிறந்த தற்காப்புக் கருவி.

" அறி(வு) அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண் "

" அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர் "

என்னும் திருக்குறள் மொழிகளைக் காண்க.

தற்காப்புக் கருவியாக உள்ள அறிவிற்கும் பகையாக ஒன்று உள்ளது. அதுதான் சினம் என்பது. தன்னைத் தான் காப்பது வேண்டுமேல் அறிவு வேண்டும். சினம் ஆகாது. தன்னைத்தான் அழிக்க வல்லது—கொல்ல வல்லது சினம்.

" தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக் கால்
தன்னையே கொல்லும் சினம். "

அறிவை அழிக்கவல்ல நஞ்சும் பித்தும் நெடிது நிலைப்பன; கள்ளும் சினமும் தோன்றி அழிவன. நிற்கும் நேரத்தால் வேறுபாடே அன்றிப் பிறிது இல்லை. ஆயினும் பித்து, நஞ்சு, கள் இவற்றிலும் கொடுமை

மிக்கது—விரைந்து கெடுக்கும் ஆற்றல் மிக்கது சினம், ஆதலின் "தன்னைத்தான் காக்கின் சினம் காக்க' என ஒன்றையே எடுத்தோது வாராயினர் சான்றோர்.

நன்னலத்தால் சினம் எழுவதே பெரும்பான்மை. பொது நலம் கருதியும் சிறுபான்மை சினம் எழுதல் உண்டு. தீமையே விளைக்கும் இயல்பினதாகிய சினம் பொதுநலம் கருதியபோது நன்மையும் விளைத்தல் உண்டு. கொள்ளைக்கூட்டத்தார் ஓர் ஊரிற் புகுந்து கொள்ளையடித்து மக்களை வருத்தியது கேட்ட அவ்வூர்த் தலைவன் ஒருவன், வருந்தி நெட்டுயிர்த்துச் சோர்வுற்று நிற்பானே? உள்ளங் கொதித்துப் பதைப்பான்; அவன் சினம் பொதுநலம் கருதியதே அன்றோ? "அக்கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்து என் கையால் பிணித்துக் கொணர்ந்து தலை தறித்திடும் வரையில் உண்ணேன்; உறங்கேன் அவ்வாறு செய்யேனாயின், என் தலைமை இழப்பேனாக; இழந்து யானும் கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவனாகுக" எனச் சினந்து கூறுவான். அச் சினம் அவனுடைய பொதுநல நோக்கிற்கு ஆற்றல் அளித்து அவனைக் கடமை செய்யத் தூண்டும்; இத்தகைய சினங்கொண்டு கூறும் கூற்று வஞ்சினம் எனப்படும்.

தமிழ்நாட்டு வேந்தர் பொதுநலம் மிக்க தலைவர்; நாடாளும் கடமையில் ஆர்வம் மிக்கவர்; அவரது ஆட்சிக்கு எவரேனும் இடையூறு செய்ய முயன்றாலும் அல்லது முயல்வதாகக் கேள்வி யுற்றாலும் கொதித்தெழுந்து வஞ்சினம் மொழிந்துள்ளனர். அவ்வாறு மொழிந்த வஞ்சினக் கூற்றுக்கள் சில பாட்டு வடிவுபெற்று வாழ்கின்றன. பாடியவர் வேந்தரே. மூவேந்தரும் பாவேந்தராக விளங்கிய காலம் அது. அப் பாடல்களுள் சிறந்து நின்றுள்ளன மூன்று. ஒன்று, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் பாட்டு; மற்றொன்று, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடியது; இன்னொன்று, சோழன் நலங்கிள்ளி பாடியது.

இப் பெருவேந்தர் பாடிய பாடல்களில் அவர்கொண்ட பேருணர்வு விளங்குகின்றது. இவ் வஞ்சினப் பாடல்கள் உள்ளத்து உணர்வு மிகுதியைப் புலப்படுத்தும் பாடல்களாக இருத்தலால், பழங் காலத் தலைவரது உணர்வின் பெற்றியை அறிந்து அவர் தம் நாகரிகச் சிறப்பினைத் தெளிதற்கு மிக உதவுகின்றன. அவற்றை இங்கு ஆராய்வாம்.

மூன்று பாடல்களிலும் பகையரசர் செய்த சூழ்ச்சியும், இகழ்ந்து கூறிய சிறு சொல்லும் குறித்து நாடாளும் தலைவர் சினம் கொண்டமை அறியப்படுகின்றது. அவ்வாறு வெல்லச் சூழ்ந்து இகழ்ந்து சிறுசொல் சொல்லிய அரசரைப் புறங்காணல் வேண்டும்; போர்க்களத்தே சிறையத் தாக்கி முரசும் குடையும் கைப்பற்றல் வேண்டும்; அவர் வருந்தப் பொருதல் வேண்டும் என்று உள்ளக் கொதிப்புடன் மொழிந்துள்ளனர். இப் பகுதிகள் அவர்தம் ஊக்க மிகுதியைப் புலப்படுத்துகின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ந்து, "இவ்வாறு செய்யாவிடின் இன்ன இன்ன நிலைமை எய்துவேனாக" எனக் கூறும் பகுதிகளே அவர்தம் உணர்வின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

ஒருவன் தன் நண்பனுக்கு ஓர் உதவி செய்யக் கருதி, "உனக்கு நான் இந்த உதவி செய்யத் தவறினால், பெற்ற தாய்க்கு உதவாத பேதை என்று என்னை நினைத்துக்கொள்" என்று கூறுவானாயின், அவன் அதனினும் மிகுதியாக, அவன் தன்னை ஈன்ற அன்னையிடம் கொண்டுள்ள உணர்வு நன்கு விளங்கும். அன்றியும், வஞ்சினங் கூறுங்கால், மேற்கொண்ட கடமையிலும் பெரியதும் சிறந்ததுமாகிய தன் உள்ளக் கோட்பாட்டினைக் கூறுதலே வழக்கம். நண்பனுக்கு உதவி செய்யும் கடப்பாடு சிறந்ததாயினும் ஈன்ற தாயைப் போற்றுதல் மிகச் சிறந்தது என்று கருதியே அவன் இவ்வாறு கூறுவான். இது போன்றே வஞ்சினம் கூறிய வேந்தர்கள் பகைவரோடு பொருது அவரைப் புறங்கண்டு வெல்லுதல் சிறந்த கடமையாகக் கொண்டனர்; ஆயினும் அதனைக் கூறுமிடத்து அவர் உடன் மொழிந்த கடமைகள் அதனினும் உயர்ந்தவை, மிகச் சிறந்தவை, உள்ளத்தே நெடுங்காலம் உணர்வாய்க் கிடந்தவை என்பது அறிதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் மொழிந்த கோட்பாடுகளாவன,

> ................ சிறந்த
> பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
> அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
> வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்
> பொய்யா யாணர் மையல் கோமான்
> மாவனும் மன்எயில் ஆந்தையும் உரைசால்
> அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்

வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(புறம். 71)

இது பூதப் பாண்டியன் உயர்ந்த கோட்பாடுகளாக உணர்ந்து கூறிய வற்றைத் தெரிவிக்கும் பகுதி.

....................பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்(கு) ஈயா இன்மையான் உறவே.

(புறம். 72)

இது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னது உள்ளத்தே மிக்கிருந்த உணர்வுகள் இன்ன இன்ன எனக் காட்டும் பகுதி.

.....................பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே.

(புறம். 73)

இது சோழன் நலங்கிள்ளி தன் உயிரினும் சிறந்ததாய் உள்ளத்தே வைத்துப் போற்றிய கொள்கையினை விளக்கும் பகுதி யாகும்.

தன் வாழ்க்கைத் துணையாய் விளங்கிய அரசியைப் பிரியாது வாழும் வாழ்வைப் பூதப் பாண்டியன் விழுமிதாகப் போற்றினன். வஞ்சினங் கூறியபோது, துணைவியின் அருகே இருந்து கூறியதாகத் தெரிகின்றது. "சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக" என்ற

தொடரில் இவள் எனச் சுட்டியுள்ளான். அவளைப் பிரிந்து பிற ரொடுங் கூடி வாழுங் கற்பில்லா வாழ்வு, பகைவர்க்குத் தோற்றிடும் தோல்வியினும் கொடியது என்று உணர்த்தியுள்ளான்.

செங்கோல் செலுத்தும் அரசன் பொறுப்பு மிகப் பெரிது தன் கையில் செவ்விய கோலை ஏந்துவதால் அது தீர்வதில்லை; தன்னிடம் நேரில் வந்த வழக்குகளை நேர்மையாத் தீர்க்கு மளவில் பொறுப்பு நிற்பதில்லை; முறை செய்யும் அவையோர் அறம் திரியாதவராக விளங்கு மாறு காத்தல் வேண்டும்; திறனில்லாதவன் ஒருவனை அங்கே அமைத்து அவனால் முறையும் நேர்மையும் கெடாதவாறு அரசன் காத்திடல் வேண்டும். சுருங்கக் கூறின், தன் நாட்டின்கண் அவைக் களந்தோறும் அறமும் திறமும் மிக்கோரை நிலைநாட்டிச் செங்கோல் செலுத்தல்வேண்டும். இதுவே இரண்டாவதாக வேந்தன் உணர்ந்து கூறியது.

புலமை மிக்கவரும் ஆண்மை மிக்கவருமாகிய தக்கோரைப் பூதப் பாண்டியன் கண்போன்ற நண்புடைய கேளிராகக் கொண்டு அவரோடு கூடி இனிது களித்து மகிழ்ந்து நகைமிக்கு வாழும் வாழ்வை உடையவன். அத்தகைய தக்கோருடைய கூட்டுறவு பெறு தற்கரியது என்று உணர்ந்த வேந்தன் அதனை இழக்குமாறு இழைத் திடும் தவறு மிக்க கொடியது எனவும் உணர்ந்தான்; பகைவர்க்குத் தோற்றலினும் கொடியது என உணர்ந்தே அதனையும் உரைத்தான், அவ்வுறவைப் பாராட்ட முயன்ற வேந்தன் பூதப் பாண்டியன்—புலவர் பூதப்பாண்டியனார்—பாவேந்தனாயிருந்து தொடுத்த சொற்களைக் கருதுக. தான் பெற்ற இன்பப் பேற்றை இனிமை, களிப்பு, மகிழ்ச்சி, நகை என்னும் பல சொற்களாலும் கூறல் அமையாது என உணர்ந்து, "இன்களிமகிழ்நகை" என ஒரு தொடராய்க் கூறிப் போற்றினன்.

அரசன் நினைவில் தன் குடிப்பிறப்பும் வந்துற்றது. பாண்டியர் குடி உலகங் காத்தலில் பெரும் புகழ்பெற்ற நற்குடி. அக்குடியில் பிறந்ததே பெறற்கரிய பேறு என எண்ணிவந்த பூதப் பாண்டியன், வஞ்சினங் கூறியபோது அதனை நினைந்து. "பகைவர்க்குத் தோற்பின் அக் குடிப்பிறப்பை இழந்தவனாய், பிறநாட்டுக் கொடுங்கோல் மன்னர் குடியில் பிறப்பேனாக" எனக் கொதித்தான். எனவே, அவன் உள் ளத்தே ஓங்கியிருந்த இவ்வுணர்வின் உண்மைநிலை தெளிவாகின்றது.

பாண்டியர் குடியில் என் முன்னோர் எல்லோரும் மக்களைச் செவ்விய முறையில் ஓம்பிக்காத்து ஒப்பற்ற புகழ் படைத்தனர். அவர் மரபில் பிறந்த யானும் அவர்போல் மன்பதை காத்து மாண்புற வேண்டும். அதுவே இக்குடியில் பிறந்ததன் பயன். காக்கும் காவலே என் கடமை அதனை நிறைவேற்றவே யான் பாண்டியனாய்ப் பிறந்தேன்'' என்னும் இச் சீரிய உணர்வு விளங்குகின்றது.

துணைவியோடு அன்பு கலந்து வாழும் கற்பு வாழ்க்கை, தக்கோரை நாட்டி அறம் காக்கும் அறிவு உடைமை, நல்லோருடன் கூடி இனிது மகிழும் உறவு உடைமை, காக்கும் மாண்பு உடைமை இந் நான்கையும் பூதப் பாண்டியன் சிறந்தனவாக உணர்ந்து தன் வாழ்க்கையில் போற்றியது தெளிவாகின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே, பூதப்பாண்டியன் ஈற்றில் குறித்ததையே முதலில் கூறினான். "என் காவலில் உள்ள குடிகள் கலங்கிக் கண்ணீர் சொரிந்து வாடி என்னைக் கொடியவன் என்று பழி தூற்றும் நிலைமை உறுக'' எனச் சீறினான். இவ் வஞ்சினக் கூற்றில், பகைவர்க்கு அஞ்சாத பெருமகன்—பாண்டியவேந்தன்—குடிகளின் கண்ணீருக்கு அஞ்சும் அச்சம் புலனாகின்றது. வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது நின்ற நெஞ்சம் கண்ணீர்ப் படைக்கு அஞ்சும் பெருந்தகைமை பெற்றிருந்தது. இளமையிலேயே தான் ஒருவனாய்ப் பெரும்பகைவர் எழுவரை வென்ற வீரன்—"புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க, ஒரு தான் ஆகிப் பொருதுகளத் தடலே . . . . . இன்றி னூங்கோ கேளலம்'' எனப் புலவர் வியந்து போற்ற இளமையிலேயே பெரும்போர் கண்டு வென்ற வீரன்—கண்ணீர்ப் படைக்கு இவ்வாறு அஞ்சிய நிலையே நாகரிகம். "என்னை எள்ளிச் சிறுசொல் சொல்லிய வேந்தரைத் தாக்கி வெல்லேனாயின், என் குடிகள் கண்ணீர் பரப்புங் கொடுங்கோலன் ஆவேனாக'' என்னும் கருத்தில், அவன் ஆட்சி முறையைப் பற்றிக் கொண்டிருந்த உயர்ந்த கொள்கை தெளிவாகின்றது.

இரண்டாவதாக, நெடுஞ்செழியன் போற்றியது புலவரால் எய்தும் புகழ் நிலையே. தன் நாடு வாழவேண்டுமானால்—சிறக்கவேண்டுமானால், புலவர் அதனைப் பாடவேண்டும் என்று விழைந்த வேந்தன் ஆதலின் இவ்வாறு குறித்தான். இது மூட நம்பிக்கையின்பாற்பட்டதன்று. புலவர் பொருள் பெறக்கருதிக் கண்ட நாட்டையெல்லாம்

புகழ்ந்து பாடுவார் அல்லர். அவ்வாறு புகழ்ந்து பாடும் புலவர் அக் காலத்தில் இருந்திருப்பின், "புலவர் பாடவேண்டுமே" என்று நெடுஞ் செழியன் இத்துணைக் கவலையோடு வருந்த வேண்டியதில்லை. ஆதலின் அரசன் விழைந்தது மூட நம்பிக்கை அன்று. புலவர் பாடவேண்டு மாயின், அன்பும் அறமும் செறிந்த நாடாக அது விளங்க வேண்டும்; வெறு மாடமாளிகைகள் கண்டோ, பொன்னும் மணியும் கண்டோ, புலவர் ஒரு நாட்டைப் புகழ்ந்து பாடார் என்பதை நன்கு உணர்ந்தே நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினன். "புலவர் பாடல் நிரம்புமாறு, அன்பும் அறமும் விளங்க வல்ல நாடாக இதனை நான் ஓம்பி அப் பெருமக்களை வரவேற்கவேண்டும்" என்பதே அரசன் உள்ளத்தே ததும்பிய உணர்வு. அதனை உணர்த்தியபோது, தான் அறிந்த புலவர் பலரையும் நினைந்து அவருள் தலைவராய் விளங்கிய மாங்குடி மருத னைக் குறித்துப் போற்றுவானாயினன். ஓங்கிய சிறப்பு, உயர்ந்த கேள்வி, உலகமொடு நிலைஇய புகழ் இவற்றைப் புலவரிடம் காணும் பேறு பெற்றவன் இவ்வரசன்.

அரசனைச் சார்ந்துவாழும் மாந்தர் பலர் உண்டு. அவர் அனை வரையும் புரத்தல் அரசன் கடமை. அரசனுக்கு அவர் பல்லாற்றானும் உதவி செய்து அரணாக அமைந்திருப்பர். அரசன் கைம்மாறாக அவர்க்குச் செய்யவேண்டுவது ஒன்றே; அஃதாவது அவர்க்குத் துன்பம் தோன்றாவாறு பொருள் உதவிப் புரத்தல் ஆகும். வெளி நாட்டிலிருந்தோ தன்னாட்டில் பல ஊர்களிலிருந்தோ அவனிடம் வந்து பொருள் இரப்போரும் உண்டு. அவரால் அரசர்க்கு உதவி யாதும் இல்லை எனினும் வயிறு படைத்த இனம் என்ற ஒரே எண்ணங்கொண்டு அவரையுங் காத்தல் அரசனுக்குக் கடமை. புரக்கப்படுவோரும் இரப் போருமாகிய அவ்விரு திறத்தாரும் அரசனை நம்பி வாழ்ந்திடுவோர். அரசன்பால் அன்பும் அருளும் இல்லையானால், புரக்கப்படுவோர் வாழ்வும் இரப்போர் வாழ்வும் முடிந்திடும்; அழியும். ஆதலின், அரசன் அவரைக் காத்தலைக் கடமையாகக் கொள்வான். நெடுஞ்செழியன் அவ்விரு சாராரும் துன்பம் உறாதவாறு காத்தவன். "பகைவரை வெல்லவில்லை யானால், என்னால் புரக்கப்படுவோர் துன்பப்படுமாறும், இரப்போருக்கு இல்லை என்னுமாறும் என்கடமையினின்றும் தவறு வேனாக" எனக் குறித்தான். இரப்பவர்க்கு ஈயவொட்டாத நிலை யினையே வறுமை என்றும் கருதியுரைத்தான். அரச வாழ்வே ஆயினும் ஈகை இல்லையேல் நல்குரவே—இன்மையே; என்னும் கருத்து விழு

மிது. நெடுஞ்செழியன் நயனுடையான் என்பது இதனுல் தெளிவாகின்றது.

''நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.''

குடிகள் கண்ணீர்விட்டு வருந்தாதவாறு இனிது காத்தல், புலவர் பாடுமாறு நாட்டைச் சிறப்புறச் செய்தல், தன்னைச் சார்ந்தவர் வறுமையைக் களைந்து வாழ்வித்தல்—இம் மூன்றும் நெடுஞ் செழியன் நெஞ்சத்தே மிக்கிருந்த கோட்பாடுகள்.

சோழன் நலங்கிள்ளி, தன் காதல் துணைவியாகிய அரசியோடு வாழும் கற்பு நெறி தவருதவன். ''என் உள்ளம் எள்ளிய மடவோன் வருந்துமாறு பொருது வெல்லேனுயின், என் வாழ்வு பரத்தையர்பால் உறுவதாக ; உள்ளத்துக் காதல் கொள்ளாத அப் பொதுமகளிரின் பொருந்தாக் கூட்டத்தினுல் கெடுவேனுக'' என்று அவன் மொழிந்த வஞ்சினக் கூற்று, அவனுடைய திண்ணிய கற்பைத் தெளிவாக்குகின்றது. நாட்டை ஆளும் தலைவன் ஒருவன் எத்துணைக் கருத்தாய்த் தன் ஒழுக்கங் காக்க முயன்று வந்தான் என்பதையும், செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்க்கு ஒழுக்க வரையறை வேண்டா என்று தடுமாறிக் கெடுவார் போக்கையும் ஒப்பிட வல்லார்க்கு நாகரிகத்தின் உண்மைத் தோற்றம் புலனுகும். ஒழுக்கம் ஒன்றே விழுப்பம் தருவது ; அதுவே இனிய உயிரினும் சிறந்ததாய் ஓம்பப்படுவது. அரசனுயினும் பிறன் எவனுயினும் இவ்வரம்பு கடந்தானுயின், தானும் கெடுவான் ; உலகமும் கெடுப்பான்.

எளியவன் ஒழுக்கக் கேடு, அவனுக்கும் அவனைச் சார்ந்த சிலர்க்கும் மட்டும் கேடு விளைக்கலாம். ஆயின், அரிய தலைவன் ஒழுக்கம் கெடுவானுயின், அதனுல் அவன் கேடுறுதல் போல அவன் தலைமையின்கீழ் வாழும் உலகமும் கேடுறும். ஆதலின் உலகை ஓம்பும் தலைமக்களே ஒழுக்கந் தவருது வாழும் கடப்பாடு மிக்கவர். அவர் கெடின், உலகம் கெடும். அவர் நல்வழி ஒழுகின், அவரைப் பின்பற்றி உலகம் திருந்தும். அன்றியும், தன் நெஞ்சத்தை நல்வழி விடுத்து அல்வழித் தடுத்துக் காக்க இயலாத ஒருவன் தலைவனுயின், அவன் தலைமையால் பயன் இல்லை. தன் நெஞ்சத்தைக் காக்கும் வலியற்றவன் உலகைக் காக்க முன் வருதல் நன்மை கருதியது

ஆகுமோ ? அன்பைப் பெருக்கி அருளை விளக்கும் காதல் வாழ்வில் பண்பட்டுச் சான்றோனாக வாழாது நவறியவன் தலைமை உலகைக் கெடுக்குமே அன்றிக் காக்குமோ ?

சோழன் நலங்கிள்ளி தான் தக்க நல்லவனாய் விளங்கி உலகைக் காக்க விரும்பிய பேருணர்விற்கு அடிப்படையாய் விளங்கியது அவன் ஒழுக்கத்தைப் போற்றிய விழுப்பமே. அதனாலேயே பண்பட்ட காதல் வாழ்வைப் போற்றுவானாகி "யான் சோர்ந்து தோற்பேனாயின் ஒழுக்கங் கெட்டுப் பொதுமகளிர்பால் வாழ்ந்து இழிவு உறுவேனாக," என்று தன் உறுதியை விளக்கினான்.

ஆனால், இந் நாகரிக வாழ்வினைப் போற்றவும் அறியாத நிலை பிற் காலத்தே வந்துற்றது. அரசன் எனின் மகளிர் பலருடன் கூடி வாழும் செல்வம் பெற்றவன் என்னும் கருத்துப் படுமாறு பாடல்கள் பல்கின ; நாடகங்களும் பரவின. அவ்வளவிலும் நின்றிடாமல், அரசன் தேர் முதலியவற்றின் மீது ஊர்ந்து உலா வருங்கால், அவனைக் கண்டு பொதுமகளிர் பற்பலர் காமுறுவதாகவும் தூது விடுப்பதாகவும் நூல் களும் எழுதப்பட்டுத் தனிப் பெயரும் அமைப்பு முறையும் பெறலா யின. உலா என்னும் நூல்வகை இவ்வாறு அமைந்ததே யாகும். தம்மை நாடாத ஒருவனை—நாடக் கூசும் நெஞ்சினனாய ஒரு தலைவனைப் பரத் தையர் கண்டு காமுறுதல் ஒல்லுமோ ? அவ்வாறு கற்பனையாக நூல் எழுதினும் அத்தலைவன் அதனைக் கேட்கவும் இணங்குவனோ ? ஆயின், அத்தகைய நூல்களைப் புலவர் பாடவும் புரவலர் பரிசில் வழங்கவும் காலம் மாறியது என்னென்பது ! சோழன் நலங்கிள்ளி பாடிய இப் பொன்மொழியை அந் நூல்களின் முகப்பில் அமைத்திடின், அவற்றைக் கற்பவர் தலைமை சான்ற நலங்கிள்ளியின் உள்ளத்து உயர்வையும் அஃது இல்லாது (நூலுலகில்) உலா வந்து மயங்கிய அரசர் பெருமை யையும் ஒப்பிட்டு நோக்குவர் ; அந்நோக்கங் கொண்டு சிறந்தது இன்னது என நன்கு அறியும் வாய்ப்பும் வாய்க்கப் பெறுவர்.

தமிழ் நாட்டை ஆண்ட பெருவேந்தர் பாடிய பாடல்களுள் தம் உள்ளத்து உணர்வுமிக்கு வஞ்சினம் கூறிய கூற்றுக்களாக உள்ளவை இம் மூன்றுமாம். அவை சினம் பொங்கக் கூறியவை ஆயினும் உண்மைக் கொள்கைகளை உணர்வு ததும்ப விளக்குவன. அவ்வாறு வஞ்சினம் மொழிதலாக அமைந்த பாடல்களில் நாகரிக நெஞ்சினராகிய அவ்வேந்தர், காதல் மிக்க கற்பு வாழ்வினையும், அறம் திறம்பாச் செங்

கோல் முறையினையும், குடிகளின் கண்ணீர் காணுக் காவல் நெறியினையும், புலவர் விரும்ப வாழும் பெரு நிலையினையும், வறுமையைத் துரத்தி வெல்லும் வண்மையினையும் சிறந்தனவாகக் கொண்டு போற்றிய சிறப்பெல்லாம் தெளிவாகின்றது.

### பயிற்சி

I பொருள் எழுதுக:--

திண்மை, அற்றம், நெட்டுயிர்த்து, பெற்றி, கடப்பாடு, புலமை, புரத்தல்,

II வாக்கியங்களில் அமைக்க:-

அத்துணை, உள்ளத்து உணர்வு, சிறுசொல் சொல்லுதல், புறங்கண்டு வெல்லுதல், கற்பில்லா வாழ்வு, பெறற்கரிய பேறு, கைம்மாறுக ..

III விடை எழுதுக:-

1. அறிவு எவ்வாறு சிறந்த தற்காப்புக் கருவியாகும்?

2. "தன்னைத்தான் காக்கின் சினம் காக்க" எனச் சான்றோர் கூறக் காரணம் யாது?

3. வஞ்சினம் என்பது யாது?

4. வஞ்சினம் கூறுங்கால் தன் உள்ளக் கோட்பாட்டினைக் கூறுதலே வழக்கம் என்பதற்கு ஒரு சான்று கூறு.

5. பூதப்பாண்டியனுடைய உயர்ந்த கோட்பாடுகள் எவை?

6. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது கோட்பாடுகள் எவை?

7. வஞ்சினம் கூறும் பாடல்களால் நாம் அறிவன யாவை?

# 2. இசையின் பெருமை

(மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்)

## இசையின் பெருமை

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்திருக்கிறார்கள். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப்பட வேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாததென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி, ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலியன உடையாரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனால் இசையோ கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை யுயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றனவென்று பல இடங்களிற் கூறப் பட்டுள்ளன.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு 'போது' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவர்களும் பிறரும் சிலசில போதுகள் மலர்வதால் காலத்தை யறிந்து வந்தனர். மலர்தலாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின் போதெனப் பெயர் பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட அவை மலரும்; 'முல்லை, வரி வண்டுதே வாய் நெகிழ்ந்தனவே' என்பது குறுந்தொகை. பாம்பு இசைக்கு அடங்குமென்றும் கூறப்படுகிறது. மதம் பிடித்து அலையும் யானைகளும் இசையினால் அடங்கிவிடும். பரிக்கோல் குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்க முடியாத ஒரு யானை வீணையிசைக்கு அடங்கிவிடுவது உவமானமாகக் 'காழ் வரை நில்லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு' எனக் கலித்தொகை யென்ற சங்கநூலிற் கூறப்பட்டிருககிறது. இன்னும் 'அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணியொலி வீணையும்' என்று பெருங்கதையிலும், 'மகரயாழ் வல்லமைந்த னொருவனைக் கண்ட மத்தப், புகர்முகக் களிற்றின்' என்று மேருமந்தர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அகநானூற்றில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்

கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரணின் மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந் நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில் தினைக் கதிரை யுண்பதற்காக அங்கே வந்த யானையொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரையுண்ணுமல் தான் கொண்ட பெரும் பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படு கின்றது. இந்தக் காட்சியையே,

> "ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற் றெய்யென
> மறம்புகன் மழகளி றுறங்கும் நாடன்"

என் அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி யென்ற மதம்பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி அதன்மேல் ஏறி ஆயுதங்களை அதையே எடுத்துத்தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகிறது. இசையினுல் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில் 'குருவினி டத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன் போல யானை படிந்தது என்னும் பொருள்பட "வீணை கெழீஇ விதியி னடப்ப, ஆணையாசாற் கடியுறை செய்யு, மாணிபோல மதக்களிறு படிய', என்று பாடியுள் ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் உதயண குமார காவியம் செய்த வர், இங்கே, தந்தையைக்கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிருர்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளை யாடிக்கொண்டிருந்த கண்ணபிரான் மாலைக்காலத்திற் பசுக்களை ஆயர் பாடிக்கு ஓட்டிச்செல்ல வேறு ஏதும் செய்வதில்லை. குழலையெடுத்து ஊதுவார். உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு கண்ணன்பால் வந்து சேரும், இதனையே "ஆக்கு வித்தார்குழ லாலரங் கேசர்,' என்று திவ்ய கவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்ருர். பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுள் ஆனுய நாயனுருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படு கின்றன.

அசுணமா வென்பதொரு விலங்குண்டு. அதைப் பறவை யென் பாருமுளர். அது இசையையறிவதிற் சிறந்தது. இனிய இசையைக் கேட்டுக் களிக்கும்; இன்னா விசையைக் கேட்பின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ் செத்து, இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என்ற அகநா னூற்றடிகளாலும், "இன்னளிக்குரல் கேட்ட வசுணமா, வன்ன ளாய் மகிழ் வெய்துவித்தாள்" என்ற சிந்தாமணிப் பாட்டாலும், "யாழ், நறை யடுத்த வசுணநன் மாச்செவிப், பறையடித்தது போலும்" என்ற கம் பர் வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க வெண்ணினவர்கள் செடி மறைவிலிருந்து யாழ் வாசிப்பார்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்கு மென்றும், அப்பொழுது அதனைப் பிடித் துக் கொள்வார்களென்றும் தெரிகிறது. அவர்கள் கை, முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத் தாள்கையில் "அசுணம் கொல்பவர் கைபோனன்றும், இன்பமுந் துன் பமு முடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டி மாடு, ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்பொழுது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவைகளைக் கேட்டு அவ் விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன் றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன்பாங்கு போலும். குழந் தைகள் அன்னையின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை யோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ் செயலை மறந்து இசை வயத்த ராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப்படுகிறது. பாலை நிலத்தில் ஆறலை கள்வர் வழி வருவோர் பொருளையும் உயிரையும் கவர்வார்; பொருளில்லை யெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர்முன் பொருநர்கள் பாலைப்பண்ணைப் பாடினால் அக் கள்வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தங்கள் வன்றொழிலை மறந்து அன்புற்று இசைக்கு உருகுவார்களாம். இதனையே "ஆறலை கள்வர் படைவிட வருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதா நாயகனை சீவகன் ஆண்களைப் பார்ப்பது மில்லை என்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின் பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசைபாடி அவளை வசப்படுத்தினன்; அவன் இசையைக் கேட்ட பெண்கள் யாவரும் வேடன், பறவைபோற் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப்போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத்தில் வர்ணிக்கிறார்.

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத விதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழை மலர்த் நடங்கணு
புள்ளு வர்ம திர்மகன் புணர்ந்த வோசை பெற்றுகன்
றுள்ளம் வைத்த மாமயிற் றுழாத்தி னோடி யெய்தினர்"

என்பது அந்தப் பாட்டு.

இசை, பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்வதுண்டு. சிறந்த சங்கீத வித்வானும் மிக்க சிவ பக்தரும் ஆகிய கோபாலகிருஷ்ண பாரதியவர்கள் தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினார்கள். அதிற் பிழைகள் காணப்பட்டமையாற் சிறப்புப்பாயிரம் தரமாட்டேனென்று பிள்ளையவர்கள் மறுத்து விட்டார்கள். மறுத்தும் பாரதியார் முயன்றே வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியவர்கள் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறார்களென்பதையறிந்து எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தேயிருந்து தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கலிதீரும்" என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக் கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டு மனமுருகி "இதற்குச் சிறப்புப்பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று" என்று உடனே வந்து சிறப்புப்பாயிரமொன்றை வழங்கினார்கள்.

ஈசுவரனே இசையின் வடிவமாயிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏழிசையா யிசைப்பயனாய்," "இயலவன் இசையவன்," "இயலிசைப்

பொருள்களாகி," "ஏழிசையை" எனவரும் தேவாரப் பகுதிகள் பரம சிவன் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டுக் கம்பளர், அசுவதரர் என்ற இசையில் வல்ல இரண்டு கந் தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளி யிருக்கின் றனரென்று நூல்கள் கூறும். "இசை விரும்பும் கூத்தனார்" என்ப தும் இறைவனுடைய இசை விருப்பத்தை வெளியிடும். ஈசுவரன் கையில் வீணையை வைத்து வாசித்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். "எம் மிறை வீணைவாசிக்குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி "வீணாதட்சிணா மூர்த்தி" என்று வழங்கப்படுவார். கண்ணன் வேய்ங் குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? கடவுளா லேயே விரும்பப்படுவது இசை யென்பதை இன்னும் விரிக்கிற் பெரு கும்.

இசை, கடவுளுக்கு விருப்பமாவதறிந்து பல தொண்டர்கள் இசை யாலேயே இறைவனை வழிபட்டிருக்கின்றார்கள். நாயன்மார்களுள் ஆனாய நாயனார், திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பரமனையே பாடுவார் முதலியவர்கள் இசையால் வழிபட்டுப் பேறு பெற்றோர்கள். ஆனாய நாயனார், ஸ்ரீ பஞ்சாட்சரத்தைக் குழலில் இசைத்து ஊதி வழிபட்டார். மதுரையில் பாணபத்திரரென்னும் அடியார் யாழ் வாசித்துச் சிவபெருமானை வணங்கி வந்தார். அவருக் காகச் சோமசுந்தரக் கடவுள் விறகு சுமந்து இசை பாடி அவருடைய எதிரியைப் பயந்தோடச் செய்தார். திருமாலடியார்களுள்ளும் திருப் பாணாழ்வார், நம்பாடுவான் முதலியோர் இசை பாடித் திருமாலை வழி பட்டவர்கள். இன்ன வகையார் இன்னும் பலருளர். கடவுளைத் துதிக்கும் தோத்திரங்களெல்லாம் இசைப் பாட்டாக அமைந்து விளங் குதல் கடவுளுக்கு இசையிலுள்ள விருப்பத்தை விளக்குமன்றோ? தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்யப் பிரபந்தமும், திருப்புகழும், தத்துவராயர் பாடுதுறை முதலியனவும் இசைப் பாட்டு களாலாகிய நூல்களே. தேவாரங்களின் பண்கள், முன் கூறப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் வந்த ஒருவரால் அமைக்கப் பட்டன. அது போலவே திவ்யப் பிரபந்தத்திற்கும் பண்கள் அமைக்கப் பட்டிருக்க வேண்டும். இவற்றைத் தெரிவிக்கும் நூல் தேவகான மென்பர். எல்லாரும் அனுசந்திக்க இயலுமாறு ஒருவித இசையுடன் இப்பொழுது பயிலப்பட்டு வரினும் திவ்யப் பிரபந்தத்தில் ஒவ்வொரு

பதிகத்திற்குமுரிய பண்கள் முன்பு அமைந்திருந்திருக்க வேண்டும். இப்பொழுது பதிக்கப்பட்டுள்ள திவ்யப் பிரபந்தப் புத்தகங்களிற் பல வித ராகங்களைப் பொருத்தமின்றிப் பிணைத்திருக்கின்றார்கள். ஒரே பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிற்கும் தனித்தனி இராகங்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. அவ்வாறு இருப்பது முறையன்று.

**பயிற்சி**

I. பொருள் எழுதுக:—

ஓர்ந்தே, பரிக்கோல், ஒருத்தல், மகரயாழ், வார்மயிர், கொடிச்சி, குரல், மாணி, அளை.

II. வாக்கியங்களில் அமைக்க:—

மேன்மேலும், இன்றியமையாது, இசையின் வயப்பட்டு.

III. விடை எழுதுக:—

1. இசை எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும் என்பதனை விளக்குக.
2. 'போது' எனப்படுவது எது? ஏன் அதற்கு அப்பெயர் வந்தது?
3. யானையை அடக்குவதற்குரிய ஆயுதங்கள் எவை?
4. இசைக்கு யானையும் வசப்படும் என்பதனைப் புலப்படுத்த அகநானூற்றில் கூறப்பட்ட செய்தி யாது?
5. ஆக்குவித்தார்குழ லாலரங் கேசர்,—இதனை விளக்குக.
6. அசுணமா எவ்வாறு பிடிக்கப்பட்டது?
7. தெம்மாங்கு பாடக் காரணம் யாது?
8. வன்மனக் கள்வரும் இசை வயத்தராவர் என்பதனை விளக்குக.
9. சுரமஞ்சரியின் விரதம் யாது?
10. நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் எவ்வாறு கிடைத்தது?
11. கடவுளாலேயே விரும்பப்படுவது இசை என்று சொல்லக் காரணம் யாது?
12. இசையால் வழிபட்டுப் பேறு பெற்ற நாயன்மார்கள் யாவர்?

# 3. கலைகள்

(திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள்)

பழைய இந்தியாவில் வாழ்வுக்குரிய கலைகள் படிப்படியே பிறந்தன; வளர்ந்தன, அவை தொகையில் ஆறு; வகையில் அறுபத்து நான்கு. அவைகளிற் சிறந்து விளங்குவன சிலவே. அறம் மலிந்த அரசாட்சியில்–வறுமையற்ற ஆட்சிமுறையில் – நல்ல கலைகள் அறிஞர் வாயிலாகப் பிறத்தல் இயல்பு. முற்கால இந்தியாவிலேயே சிறந்த கலைகள் தோன்றின எனில், நம் நாட்டின் தொன்மையை என்னென்று புகழ்வது ?

காவியக்கலையில் இந்தியா பேர் பெற்றது. இந்தியக் காவியங்கள் மலையெனக் குவிந்துகிடக்கின்றன; கடலெனப் பரந்து கிடக்கின்றன. பழைய இந்தியக் கவிகள் இயற்கைச் சூழலிடை வாழ்ந்தவர்கள். அவர், தம் புலன்களும் மனமும் இயற்கையில் ஒன்றி இயற்கை வண்ணமானவை. இயற்கை மனத்தினின்றுஞ் சுரக்கும் எண்ணங்கள் இயற்கைப் பாக்களாகுமல்லவோ ? இயற்கைப் படங்களே இயற்கைப் பாக்கள் என்பன.

இந்திய காவியத்துக்குக் கால்கொண்டவர் எவர்? வால்மீகி என்று இந்தியக் காவிய உலகங் கூறும். வால்மீகி இயற்கைப் பசுமையிடை–பறவைப் பாட்டிடை–வாழ்ந்தவர்; வளர்ந்தவர். அவரே பழைய இந்தியக் காவியத் தந்தை, அவர் வாயினின்றும் பிறந்த இராமாயணம், காவிய உலகுக்கோர் இலக்கியம்; வாழ்வுக்கோர் எடுத்துக்காட்டு; பழம் பாரதத்தின் உயிரோவியம்; இயற்கை நிலையம்; அறத்தின் உறையுள்; சரித்திரக் கூடம்; காதலின் காதல்; வீரத்தின் வீரம்; வால்மீகியின் வழிவழித் தோன்றிய சேய்கள் பல.

கி. மு. ஆறும் நூற்றாண்டிலேயே பதினைந்து வித இலக்கணங்கள் தோன்றின என்று சரித்திர ஆசிரியன்மார் கூறுகின்றனர். அந் நூற்றாண்டுக்கு முன்னரே பல நற்காவியங்கள் நாட்டிடை மலிந்திருத்தல் வேண்டும். இந்தியக் காவிய உலகின் தொன்மையை என்னென்று கூறுவது !

ஓவியம் காவியம் போன்றதே. காவியமும் இயற்கைப் படம் ஓவியமும் இயற்கைப் படம்; இயற்கைக் கூறுகள் காவியத்தில் ஒரு விதமாகவும் ஓவியத்தில் வேறு விதமாகவும் இறக்கப்படும். இறக்கப் படும் விதத்தில் இரண்டுக்கும் வேற்றுமையுண்டு. பொருட் பயனில் இரண்டுக்கும் வேற்றுமை இல்லை. ஓவியம் காவியமே; காவியம் ஓவியமே.

பாரதமாதாவே ஓர் ஓவியம். மலைமுடியும், ஆற்றணிகளும், பசும் போர்வையும், நீலக்கடலுடையும் கொண்ட ஓரழகிய வடிவம் ஓவிய மன்றோ? தாயின் ஓவிய இயல் அவள் கருவிடைத் தோன்றும் சேய்களி டத்திலும் அமைதல் இயல்பன்றோ ?

இந்தியா ஓர் ஓவியக் கூடம். எவ்வோவியத்தை ஈண்டு எடுத்துக் காட்டுவது? பல தோன்றித் தோன்றி மறைகின்றன. ஒன்று நினை வில் உறுத்து நிற்கிறது. அஃது எது? அஃது **எல்லோரா**.

எல்லோரா, இமயக் கொடியில் பொலியும் ஒரு வெள்ளிய மல ரின் ஓவியம். அவ்வோவியத்தைக் காண்போர், இது 'மனிதனால் செய்யப்பட்டதா ? தெய்வத்தால் செய்யப்பட்டதா ? என்று ஐயுறுவர். ஒரு பெரும்பாறை, எல்லோரா ஓவியமாக அமைந்துள்ளது; அதை வடித்த ஓவியரே, அதைப் பார்த்துப் பார்த்து, 'இஃது என்னிடத் தினின்று முகிழ்த்ததா' என்று ஐயுறுவாராம். இதையொட்டி ஓர் அற்புதக் கதையும் வழங்கப்படுகிறது. 'ஓவியத் தெய்வமே ஒரு சிற்பனுருக்கொண்டு எல்லோராவை அமைத்தது போலும்' என்று பேசுவோருமுளர்.

எல்லோராவை யொத்த ஓவியங்கள் பலப்பல பாரதத்தை அழகு செய்கின்றன. பழைய இந்தியர் கோயில்களில் உயிரோவியங்கள் பல இன்னுங் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

பழைய இந்திய ஓவியங்களை எடுத்த அறிஞர், பள்ளிகளில் பணந் தந்து படித்துப் பட்டம் பெற்றவரல்லர்; பிறநாடு சென்று தேர்ச்சி பெற்று வந்தவரல்லர். ஏட்டுப்படிப்பில் அவர் நாட்டஞ் செலுத்திய தில்லை. முன்னாளில் ஓவியக்கலை எப்படி வளர்ந்தது ? அது வழிவழியே வளர்ந்து வந்தது. பழைய இந்திய ஓவியர் எவ்வழியில் காவியப் புலவோர்க்குக் குறைந்தவராவர் ? முன்னாக. தொழிற் கல்வியின் மாண்பு என்னே ! என்னே ! மற்றுமுள்ள தொழிற் கல்வித் துறைகள் பலவும் வழி வழிப் பிறந்து வளர்ந்தனவே.

இந்திய இசைக்கு ஒப்பாகவோ உயர்வாகவோ வேறு ஒரு நாட்டு இசை இன்னும் தோன்றவில்லை; இனியும் தோன்றா தென்றே கூறலாம். இந்தியாவின் தட்ப வெப்ப இயற்கை நிலை இசை வளர்ச்சிக்குத் துணை செய்யும் நீர்மையது. அதனால் இந்திய மக்கள், சரித்திரக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இசையின் எல்லையைக் காணும் பேறுபெற்றார்கள்.

நம் முன்னோர் நாதத்தின் இசைநுட்பம் கண்டவராதலின் அவரிடத்திலிருந்து ஏழிசையும், யாழ் குழல் என்ற இசைக்கருவிகளும் பிறந்தன. யாழுங் குழலும் விலங்குகளையும் வயப்படுத்தும் நீர்மையன; மனிதரிடத்திலுள்ள விலங்கியல்புகளைக் கல்லியொழிக்குந் தன்மையன. கண்ணபிரானும் ஆயரும் இசை முழக்கிய போது பலவித விலங்குகளெல்லாம் தங்களை மறந்து - பகைமை மறந்து - ஒன்றாகி, இன்பம் நுகர்ந்ததை நமது நாட்டு நூல்களிற் காண்க. **தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்** இயற்றிய **கருணாமிர்த சாகரம்** என்னும் நூலில் முற்கால இந்தியரின் இசை நுட்பங்கள் பேசப்பட்டுள்ளன.

நமது நாட்டு இசை, நாத தத்துவத்தினின்றும் தோன்றிய ஒன்றாதலானும், அத் தத்துவத்துக்கு மேல் வேறு தத்துவம் இன்மையானும், அதைக் கடந்து சாந்தத் தெய்வம் விளங்குதலானும், அது தன்னை முழக்குவோரையும் கேட்போரையும் சாந்தத்தில் திளைக்கச் செய்யும். எத்தனையோ யோகியர் எத்துணையோ யாண்டு, தவங்கிடந்தும் அடைய இயலாத சாந்த நிலையை, நமதுநாட்டு நல்லிசை எளிதில் கூட்ட வல்லதெனில், அதன் மாண்பை விரித்துக் கூறுதல் வேண்டுங்கொல்?

கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுக்கு முன்னரே முற்கால இந்தியர் நாதம் காற்றலையில் தோன்றுகிறதா ஆகாய அலையில் தோன்றுகிறதா என்ற ஆராய்ச்சியில் தலைப்பட்டனரென்று சரித்திரஞ் சொல்லுகிறது.

நாட்டியம் இசையுடன் தொடர்பு கொண்டது. இசையின் உணர்ச்சியை வெளிப்படுத்துவது நாட்டியம். நமது நாட்டுப் பரத நாட்டியத்தால் ஒவ்வொரு நாடிநரம்பும் ஒவ்வோர் உறுப்பும் பயிற்சி பெறும். அந் நாட்டியம் தன்னைப் பயில்வோரிடம் பிணி அணுகாதவாறு காத்துவரும்; உடலில் அழகொழுகச் செய்யும். இந்திய நாட்டியக் கலை கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே பண்பட்டு வளம் பெற்றிருந்

தது. இன்னும் அஃது ஆட்சியிலிருந்து வருதல் அதன் மாண்பை உணர்த்துவதாகும்.

இந்தியச் சோதிடக்கலை தொன்மை வாய்ந்தது. சோதிடக் கலை இந்தியாவினின்றும் கிரீஸ் சென்றதென்றும், கிரீஸினின்றும் இந்தியா வந்ததென்றும் சொல்லப்படுகின்றன. இதுபற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. இதுவரை எழுந்துள்ள ஆராய்ச்சிகளையும், கண்டுள்ள முடிபுகளையும் சிந்தனை செய்தால் சில நுட்பங்கள் இந்தியாவினின்றும் கிரீசுக்குச் சென்றிருக்கலாமென்றும், சில நுட்பங்கள் கிரீஸினின்றும் இந்தியாவுக்கு வந்திருக்கலாமென்றும் விளங்குதல் பெறலாம்.

சோதிடக்கலை இந்நாளில் மேல்நாட்டில் நன்கு பெருகி வளர்ந்து வருகிறது. கோள்களின் நிலைகள் செவ்வனே கணிக்கப் படுகின்றன. ஆனால் பலன் சொல்வதில் இன்னும் மேல்நாட்டார் பண்படவில்லை. இக்காலக் கணித ஞான மில்லாத கிராமச் சோதிடன் சொல்லும் பலனில் பெரிதும் தவறுதல் நேராதிருப்பது கருதற்பாலது.

கிறிஸ்து பிறப்பதற்கு எத்துணையோ ஆண்டுகட்கு முன்னரே இந்தியாவில் மருத்துவக்கலை மருவலாயிற்று. இந்திய மருத்துவத்தில் சத்திரமும் உண்டு; மருந்தும் உண்டு.

சத்திரவித்தை இந்தியாவினின்றும் மேல் நாட்டுக்குச் சென்றது. இதனை ஜெர்மன் மருத்துவ அறிஞர் சிலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டாக இந்தியச் சத்திரவித்தை மேலும் மேலும் ஓங்கா தொழிந்தது. பழைய வழியில் சத்திரஞ் செய்வோர் இன்னும் ஈங்கொருவராக ஆங்கொருவராக இருக்கின்றனர். சுதந்திர மேல் நாட்டில் அவ்வித்தை மேலும் மேலும் வளர்ந்தே செல்கிறது.

மருந்தில் இன்னும் மேல்நாடு இந்தியாவுக்கு ஒப்பாகவும் வர வில்லை என்று கூறலாம். தொழுநோய் (குஷ்டம்), என் புருக்கி (க்ஷயம்), நீரிழிவு (மதுமேகம்) முதலிய பெருநோய்களை முற்றும்—அறவே—போக்கவல்ல மருந்து இன்னும் மேல் நாட்டு மருத்துவத்தில் கருக்கொள்ளவில்லை. அப் பெருநோய்களை அறவே போக்கவல்ல இந்திய மருந்துகள் இந்நாளிலும் கிடைக்கக் கூடியனவாயிருக்கின்றன.

அம்மருந்துகளைச் செய்யும் மருத்துவர் தொகை நாளுக்கு நாள் சுருங்கி வருவது வருந்தத் தக்கது.

முற்கால இந்திய மருத்துவம் இரு கிளையாகப் பிரிந்து நின்றது. ஒன்று சித்தமுறை; இன்னொன்று ஆயுள்வேத முறை. முன்னையது பெரிதும் முறிந்து பண்பட்ட ரசகந்த பாஷாணங்களால் ஆவது; பின்னையது பெரிதும் மூலிகைகளால் ஆவது. இரண்டும் இன்றியமையாதன.

பழங்கால இந்திய மருத்துவத்தில் ஒரு தனிச் சிறப்பிருக்கிறது. அது நாடிபார்த்து நோய்களின் தன்மையை அளந்து கூறுவது.

இந்திய மருத்துவம் இன்று உண்டானதன்று, நேற்று உண்டானதன்று. அஃது அதர்வ வேதத்தில் விளங்குஞ் சிறப்புப் பெற்றுள்ளது. அதர்வ வேத காலம் 800 கி. மு. என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். முற்கால இந்திய மருத்துவத்தின் தொன்மை, சிறப்பு முதலியன பி. ஸி. ரே. எழுதிய ஹிந்து மருத்துவ நூலில் விளக்கப்பட்டுள்ளன.

கி. மு. நாலாம் நூற்றுண்டிலேயே இந்திய அரசியற் கலைகளும் பொருளாதாரக் கலைகளும் யாக்கப்பட்டன.

பழங்கால இந்தியரால் சமயக்கலை மிக ஊக்கமுடன் வளர்க்கப்பட்டது. அவர் இயற்கை இயலை-உயிர் இயலை-இறை இயலை-ஆராய்ந்தனர்; அவைகளின் உண்மையையும் படிப்படியே கண்டனர். இயற்கை-உயிர்–இறை ஆகியவற்றின் ஆராய்ச்சியும் தெளிவும் பண்டை இந்தியரிடைச் சமய வொழுக்கத்தைப் புகச் செய்தன.

பழைய இந்தியர் சமயம் எது? அதன் நிலை எப்படியிருந்தது? இவை சிக்கலான கேள்விகள். இவைகட்குப் பலர் பலவாறு விடை இறுப்பர்.

சமயம் இந்தியாவின் உயிர்; மற்றவை உடல்-உறுப்புக்கள். இந்தியாவின் கல், மண், புல், புழு முதலிய எல்லாஞ் சமயக்காட்சி வழங்கிய காலமுண்டு. இந்தியச் சமயம் உலககுக்கு இமயமாயிற்று; கங்கையாயிற்று. இமயமும் கங்கையும் சமயக் குறிகள்.

முற்கால இந்தியரின் சமயக் கலைகள் எவை? சித்த நூல்களும், ருக்வேதமும், பிறவு மென்க. பழஞ்சித்த நூல்களில் பல மறைந்தன,

## I பொருள் கூறுக :—

இயற்கைச் சூடில். கால் கொண்டவர், தொன்மை, கூறுகள், நிர்மையாது, பாஷாணம், தொழுநோய், புலன்கள்.

## II வாக்கியங்களில் வைத்து எழுதுக :—

வாயிலாக, வழிவழி, காட்சி, பல்லாயிரம், ஆராய்ச்சி, ஏறக் குறைய, நாளுக்கு நாள், பண்பட்ட.

## III விடை தருக :—

1. நல்ல கலைகள் எங்கு எவ்வாறு பிறக்கும் ?
2. இந்தியக் காவியத்திற்குக் கால் கொண்டவர் யார் ? அவர் இயற்றிய காவியம் யாது ? அது எத்தகையது ?
3. ஓவியத்துக்கும் காவியத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?
4. எல்லோரா ஓவியத்தின் சிறப்பை விளக்குக?
5. நம் நாட்டு இசை மாண்பு யாது?
6. பரத நாட்டியத்தால் உண்டாகும் பயன் என்ன ?
7. இந்திய சோதிடக் கலையின் தொன்மையை விளக்குக.
8. இந்திய மருத்துவம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது ?
9. இந்திய மருத்துவத்தின் இரு கிளைகள் யாவை ?
10. பழங்கால இந்தியர் சமயக் கலையை எவ்வாறு வளர்த்தனர் ?
11. சரித்திரம், மருத்துவம், ஆயுள் வேதம், சித்த முறை இவற்றை விளக்குக.

# 4. ஆதிரை பிச்சையிட்ட காதை

(டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், M.A., L.T. M.O.L. PHD.)

## ஆதிரையின் கற்பின் சிறப்பு

" ஆதிரையின் கணவன் சாதுவன் என்பவன் ; ஒழுக்கம் கெட்டவன் ; கணிகை ஒருத்தியிடம் வாழ்ந்து, அவள் கொடுத்த உணவையே உண்டுவந்தான் ; தன் செல்வம் அனைத்தையும் கணிகையர்க்கும் சூதாட்டத்திற்கும் தொலைத்தான். கணிகையும் அவனைத் துறந்தாள். பிறகு அவன் பொருள் ஈட்டிவரக் கருதி வங்கத்தில் ஏறிச் சென்ற வணிகரோடு கூடிச்சென்றான். கப்பல் காற்றினால் அலைக்கப்பட்டுக் கடலிற் கவிழ்ந்தது. சாதுவன், ஒடிந்த பாய்மரத்துண்டைப் பற்றி நீந்தி, ஆடையற்ற நாகர் வாழும் மலைப்பக்கத்தை அடைந்தான்.

'கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்துப் பூம்புகாரை அடைந்தோர், 'உன் கணவன் இறந்தனன்' என்று ஆதிரையிடம் அறிவித்தனர். அவள் வருந்திப் புலம்பிச் சுடுகாடடைந்து, குழிவெட்டித் தீயை மூட்டி, " என் கணவன் போன வழியே யானும் போவேன்," என்று அதனில் வீழ்ந்தாள். ஆனால் அந் நெருப்பு அவளுடைய படுக்கையையும் புடவையையும் பூசிய சாந்தையும் சூடிய மாலையையும் சிறிதும் சிதைக்காமலும் அவளை எரிக்காமலும் குளிர்ந்த நீர் போல் இருந்தது. அவள்,

'விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருந்தாள்.'

அவள், 'ஐயோ! தீயும் கொள்ளாத் தீவினையாட்டியேன்! என்செய்வேன்!' என்று ஏங்கினாள். அப்பொழுது வானத்தில் அசரீரி தோன்றி, 'ஆதிரையே, உன் கணவன் நாகர் வாழும் மலைப்பக்கத்தில் இருக்கிறான். விரைவில் 'சந்திர தத்தன்' என்னும் வணிகனது கப்பலில் ஏறி இவண் வருவான். நீ துயர் ஒழிக'! என்னும் நற்செய்தியை அறிவித்தது. ஆதிரை ஆனந்தக் கடலில் ஆழ்ந்தவளாய்த் தன் மனையை அடைந்து, கணவன் வருகையை எதிர் நோக்கி, அறங்கள் பலவற்றைச் செய்து கொண்டிருந்தாள். நிற்க,

**சாதுவனும் நாகரும்**

"சாதுவன் நாகர் நாட்டில், களைப்புற்று ஒரு மரநிழலில் உறங்கிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அந்நாட்டு வாழ் ஆடையற்ற நாகர் சிலர் அங்கு வந்தனர்; சாதுவனைக் கண்டு, 'இவன் கடலிலிருந்து துன்பப்பட்டு வந்துள்ளான். ஊன் நிறைந்த இவனது உடல் நமக்கு இனிய உணவாகும்' என்று கருதி, அவனை எழுப்பினர். சாதுவன் எழுந்து அவர்கள் மொழியிலேயே பேச, அவர்கள் வியப்புற்று மரியாதையுடன் நின்று, நீர் எங்கள் தலைவன்பால் வரவேண்டும்' எனக் கூறி அவனை அழைத்துச் சென்றனர்.

"நாகர் குரு கட்குடங்களும் மிகுந்த முடை நாற்றமும் சூழக்காய்ந்த வெண்மையான என்புக் குவியலாகிய ஆசனத்தில், கரடி தன் பிணவொடு இருந்தது போல ஒரு பெண்ணுடன் அமர்ந்திருந்தான். சாதுவன் அவனைக்கண்டு நாகர் மொழியில் பேசி அவனைத் தன் வயமாக்கிக் கொண்டான். அக்குருமகன், 'நீ வந்த காரணம் யாது?' எனச், சாதுவன் கடற் பயணத்தில் தான் அடைந்த இன்னலை விளக்கினன். உடனே குருமகன் தன் ஏவலரை அழைத்து, 'உணவின்றிக் கடலில் உழன்று வந்த இவற்கு ஓர் இளநங்கையையும் கள்ளையும் ஊனையும் வேண்டிய அளவு கொடுங்கள்' என்றான். அக்கொடு மொழி கேட்ட சாதுவன் அயர்ந்து, 'வெவ்வுரை கேட்டேன், வேண்டேன்' என்றான். குருமகன், 'பெண்டிரும் உண்டியும் இன்றெனில், மாக்கட்கு ஞாலத்து உறுபயன் உண்டோ? உண்டெனிற் காட்டு,' என்றான்.

உடனே சாதுவன்,

> "மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
> கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
> பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
> உறங்கலும் விழித்தலும் போன்ற(து) உண்மையின்,
> நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
> அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
> உண்டென வுணர்தலின் உரவோர் களைந்தனர்"

என்று பதில் கூறினன்.

"உடனே குருமகன் நகைத்து, 'நீ, உடம்பை விட்டு உயிர் வேறு இடம் புகும் என்னும் கருத்துப்படக் கூறுகின்றனை. அவ்வுயிர்

எப்படி வேறிடம் செல்லும்? அதனை விளங்க வுரை' என்றான். சாதுவன், 'நமது உடலில் உயிர் இருக்கையில் ஏதேனும் ஒரு துன்பம் வரின், அதை உணர்ந்து உடல் வருந்துகின்றது. உயிர் நீங்கிய பின் உடலை நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் உணர்வதில்லை அன்றோ? ஆதலால் உடம்பைவிட்டு ஏதோ ஒன்று போய்விட்டது என்பதை நாம் உணர்கிறோம் அல்லவா? அந்த ஒன்றே உயிர் என்பது. அது வேறொரு புகுமிடம் உடைய தென்பதை யாவரு மறிவர். நாம் கனாக் காண்கையில், நமது உடல் இருந்த இடத்தில் இருப்ப, உயிர் வேறோர் உடலின் வழியே மற்றோர் இடத்தை அடைகின்றது என்பதை உணர்கிறோம் அல்லவா?' என்றான்.

"நாகன் நல்லுணர்வடைந்தான்; சாதுவன் அடிகளிற் பணிந்து, 'நான் கள்ளையும் ஊனையும் கைவிடின் உயிர் வாழேன். ஆதலின் எனக்குத் தக்க நல்லற வழியைக் காட்டுக,' என்று வேண்டினான். சாதுவன் இசைந்து, 'கவிழ்ந்த கப்பலிலிருந்து எவரேனும் இவ்விடத்தை அடையின், அவர்களை வதையாது காத்தல் வேண்டும்; தானே இறக்கின்ற உயிரின் ஊனைத் தவிர வேறு எதனையும் கொன்று தின்னலாகாது,' என்றான். குரு, 'இஃது என்னால் பின்பற்றத் தக்கதே. நாங்கள் பன்முறை கப்பல் கவிழ்ந்து அல்லலுற்ற மக்களின் பொருள்களைக் கவர்ந்துள்ளோம்; இங்கு வருபவரைக் கொன்று தின்றுள்ளோம். அவரது செல்வம் இதோ இருக்கின்றது. நீ எடுத்துச்செல்' என்றான்.

"சாதுவன் அச்செல்வத்தை எடுத்துக் கொண்டு சந்திர தத்தன் என்பானது கப்பலில் ஏறிக் கடல் கடந்து பூம்புகாரை அடைந்தான்; தன்னை எதிர்நோக்கி இருந்த மனைவியின் அகமும் முகமும் மலர வீடடைந்தான்; அவளோடு இன்புற்று நல்லறம் புரிந்துகொண்டு பெரியோர் போற்ற வாழ்கின்றான்.

## ஆதிரை பிச்சை இட்டமை

"இத்தகைய பெருமை பொருந்திய பத்தினிப் பெண்மணியான ஆதிரையினிடம் பிச்சை பெறுக," என்று காய சண்டிகை மணிமேகலையிடம் கழறினாள். உடனே மணிமேகலை ஆதிரையின் இல்லத்தின் வாயிலில் புனையா ஓவியம் போல நின்றாள். ஆதிரை வெளிப்போந்து,

மணிமேகலையைத் தொழுது வலங்கொண்டு, 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனக் கூறி, அமுத சுரபி நிறையுமாறு அன்ன மிட்டாள்.

I பொருள் கூறுக:-

கணிகை, வங்கம், விரைமலர், அசரீரி, இவண், ஊன், வியப்புற்று, என்பு, ஞாலம், கழறுதல், பாரகம், கோறல், உரவோர்.

II வாக்கியங்களில் அமைக்க:-

ஒழுக்கம் கெட்டவன், ஆனந்தக் கடலில் ஆழ்ந்து, புனையா ஓவியம்போல, உரவோர்.

III விடை எழுதுக:-

1. சாதுவன் யார் ?
2. அவன் வணிகரோடு செல்லக் காரணம் யாது ?
3. கப்பல் கவிழ்ந்ததும், சாதுவன் எங்குத் தங்கினன்?
4. ஆதிரை யார் ? அவள் தீயும் கொள்ளத் தீவினை யாட்டியேன் என்று ஏன் வருந்தினள் ?
5. ஆதிரைக்கு அசரீரி அறிவித்தது யாது ?
6. நாகர் சாதுவனை எழுப்பக் காரணம் யாது?
7. குருமகன் சாதுவனை எவ்வாறு வரவேற்றான் ?
8. உரவோர் உணர்ந்தவை எவை ? அவர் எதைக் களைந்தனர் ?
9. சாதுவன் அறவுரை யாது ?
10. காயசண்டிகை யார்?

# 5. மலேயா நாட்டுக் கப்பற் பிரயாணம்

(T. பதுமாவதி யம்மையார் அவர்கள்)

யான் பிரயாணம் செய்தது கோடைகாலமாதலால், ஆதித்தன் விடியற் காலையிலேயே கீழ்த்திசையில் அடிவானத்திலிருந்து சிறிது சிறுகாக மேற்கிளம்புவான். அவ்வமயம் யானையைக் காண்பதற்குமுன் அதன் மணியொலி செவிப்படுதல் போன்றும், மன்னனைப் பார்ப்பதற்குமுன் அரசசின்னங்கள் சில காட்சியளித்தல் போன்றும், ஞாயிறு எழுதற்கு முன்பே சில அழகிய இயற்கைத்தோற்றங்கள் ஆகாயத்தில் தோன்றும். குளிர்ந்த காற்றுடன் இவ்வழகின் பொலிவும் நமக்கு மிகுந்த இன்பத்தை ஊட்டுவதாகும். கடலைத் தொட்டுக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும் தொடுவானத்தில், ஆங்காங்கே செந்நிறமலர்களைத் தூவியதுபோன்று செந்நிறம் விட்டுவிட்டுத் தோன்றும். சில விநாடிகளுக்குள் வானத்தில் செம்பஞ்சுக்குழம்பை ஊற்றியதுபோன்று ஒரே செந்நிறம் பரந்துவிடும். ஞானியின் ஞானஒளி வெகுதூரம் பரவுதல் போன்று, ஆதித்தன் செம்மைஒளி கீழ்வானம் முற்றும் ஒளிராநிற்கும்; சிறிதுபோது கழிந்ததும், கற்றூணை இருபிளவாகப் பிளந்து வெளித் தோன்றிய மானுடமடங்கல் போன்று, வானத்தையும் கடலையும் பிளந்துகொண்டு ஒரு நெருப்புப்பிழம்பெனச் சிவந்த ஞாயிறு சிறிது சிறிதாக மேற்கிளம்பும். அவ்வமயம் கடல் நீரிலும் செந்நிறம் காணலாம். உயரிய பொருள்கள் விரைவில் மறைதல்போன்று இவ்வழகுத்தோற்றம் சில விநாடிகளில் ஓடி ஒளியும். உடனே பகலவன் பல வெள்ளிய கதிர்களை வீசிக்கொண்டு மேல்வானத்தில் வந்துறுவான். அவ்வழகைச் சில விநாடிகளே கண்கூசாமல் காண இயலும். அங்குக் கடலின் பரப்பை நோக்கவேண்டும். என்ன அழகு! என்ன அழகு! கடல் முற்றும் வெள்ளியை உருக்கிவிட்டது போன்று தளதளத்துக் கொண்டிருக்கும். வேறெங்கிருப்பினும் இத்தகைய பரந்த வெள்ளித் தடத்தைக் காண இயலுமோ! இவ்வளவு பெரிய நீர்ப்பாகத்தை ஒரே காலத்தில் பார்த்தற்கு மரக்கலம் தவிர வேறு இடம் உண்டோ? இக்காட்சியைப் பொற்கொல்லன் மூசையில் கொதிக்கும் வெள்ளியுருக்கிற்கு யாங்ஙனம் ஒப்பிடுவது! அளவில் அஃதெங்கே, இக்கடலெங்கே! 'இது மந்தரம் நாட்டிக் கடைந்த பாற்கடலோ!' என்னும் எண்ணமும் தோன்றும்! அடுப்பிலேற்றிய பால்போன்று கொதிக்குங்கால் இஃது உப்பு நீர் என்னும், நினைவு ஏது!

அவ்வாதித்தன் சாயும்போது வானத்தில் அமையும் நிறங்கள் பலவாகும். இவற்றினும் சந்திரன் தோற்றமே மிக்க அழகுடையது. அது மேலெழுங்கால் பொற்கலசமென ஒளிரும். அப் பரந்த மேல்தட்டில் பாலன்ன நிலவின் ஒளி உள்ளத்திற்கு மிக்க உவகையை ஊட்டாநிற்கும். அவண் விட்டு நீங்குதற்குச் சிறிதும் மனமெழுதல் இல்லை. இச் சூரியசந்திரர்களின் வனப்பு மற்ற இடங்களைக்காட்டிலும் பரந்து ஆகாயத்தின் பெரும்பிரிவு நம் கண்ணிற்படக்கூடிய இக் கடற்செலவில் மிகுதியும் நம்மைக் கவராநிற்கின்றது. இவற்றின் சாயல்களினால் கடல் நீர் அப்போதைக்கப்போது நிறவேறுபாட்டைப் பெறுகிறது. தற்சமயம் மின்சார விளக்குக்களின் தொடர்பால் நீர்ஊற்றைப் பல நிறமாய்ப் பரவச் செய்யும் செயற்கைமுறை இவ்வியற்கையை நோக்கித்தான் அமைக்கப்பட்டதோ எனக் கருதவும் இடமுள்ளது.

மீன்களின் துள்ளல் எப்போதும் ஓய்தலில்லை. அவற்றின் துள்ளலால் மேற்கிளம்பும் கடல்நீர் ஒரோவொருசமயம் கப்பலின் மேல் தட்டிலும் வந்து தெறிக்கும். மீன்கள் நீந்தும் அழகும் அவற்றின் விளையாட்டும், பரபரப்பும் காண்பாருக்கு வியப்பையும் மகிழ்வையும் நல்காதிருத்தல் யாங்ஙனம்! மீன் காட்சிச்சாலையில் சிறு கண்ணாடிப் பெட்டிகளில் அடைபட்டிருக்கும் மீன்களின் ஊக்கவிளையாட்டு மக்களுக்கு ஆனந்தத்தை அளிக்கிறதன்றோ! ஆயினும், கடலில் அம் மீன்களின் உல்லாசக் குதியாட்டத்தைப் பார்ப்பவர், அவ்விடம் அவற்றிற்கு ஒரு சிறைச்சாலை என்பதையும். தம் நலமும் இடமும் இழந்தார் படுந் துன்பம் இஃதே என்பதையும் உணர்வர். பிற பொருள்கள் கடலை அலைக்குங்கால் அதிலிருந்து எழும் நீர்த்திவலைகள் வானத்திற் சென்று நட்சத்திரங்களைப் போல ஒளிரும் எனக் கவிகள் இயம்பும் உவமை நினைவிற்கு வரும். அவ்வமயம் புலவருக்கு இயற்கையில் இருந்த உயரிய அறிவைக் கொண்டாடாமலிருத்தல் இயலாது. பெரிய மீன்கள் நீரில் நீந்துங்கால் தள்ளப்படும் தண்ணீரின் திரட்சி, பெரிய அலைகள் போன்று கப்பலின்மீது மோதாநிற்கும்.

மரக்கலம் துறைமுகத்திற்கு அருகில் அணையும்போது நிறத்திலும் உருவத்திலும் அமைப்பிலும் மாறுபட்ட பறவைகள் பல காணப்படும். அவைகள் கப்பலைச் சுற்றிச்சுற்றிப் பறந்து ஒலித்துக்கொண்டிருக்கும். சிறுஒலியும் செவிப்படாது இருந்த பிரயாணிகளுக்குத் திடீரென உண்டாகும் இப்பேரோதை வெறுப்புத் தரக்கூடும். அன்றியும், நடுக்

கடலிலும் ஒவ்வொரு வகைப் பறவைகள் தனித்தனிக் கூட்டமாய் உரத்த ஒலியின்றிப் பறந்துகொண்டிருக்கும். அவை எங்கு வதிகின்றன, எவற்றை உண்கின்றன என்பனவற்றை அறிதல் அருமை. அருகிலுள்ள கரைகளைச் சார்ந்த ஊர்களிலும் சோலைகளிலும் அவை வதியும்போலும் என ஒருவாறு யூகிக்கலாம். அவற்றின் தீவிரப் பறப்பும் இனிய ஓசையும், அவை யாதொரு பொறுப்பும் கவலையும் இன்றிச் சுயேச்சையாய் இன்பத்திலேயே மூழ்கியிருத்தல் போன்று காணப்படும். காலையில் எழவும் சுறுசுறுப்புடன் செல்லவும் மக்கள் பறவைகளிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அவை கூட்டமாய்ப் பறக்கும்போது அவைகளின் சிறகுகள் ஒரே நிலையில் ஒழுங்குடன் அசைதல் மிக்க அழகு வாய்ந்தது. அங்ஙனம் அசைதல், 'இவ்வொழுங்கைக் கண்டுதான் போர்வீரர்கள் (Soldiers) ஒரே அளவாகக் காலடி வைத்து நடக்கக் கற்றுக்கொண்டார்களோ!' என நினைக்கவும் இடந்தரும். பறவைகள் அமர்ந்திருக்கும்போதும் பறக்கும்போதும் அவற்றின்உறுப்புகளும் அழகும் தெளிவாய்த் தோன்றும்.

அவை ஒன்றன்பின் ஒன்றாகப் பல கூட்டங்களாய்ச் சிறிது நேரம் பறந்து கொண்டே இருக்கும். அப்பறப்பு நின்றவுடனே, 'அந்தோ! அக்காட்சி இன்னும் சிறிதுபோது இல்லாமற் போயிற்றே!' என உள்ளம் வருந்தும். அக்காட்சியில் சலிப்பு ஏற்படுதல் இல்லை. சிலபோது அப்பறவைகள் மேல்தட்டில் உள்ளவர்கள் அருகிலேயே பறத்தல் போன்று காணப்படும். அவ்வமயம் அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆர்வம் மிகும். ஆனால், அவை கைக்கெட்டுதல் இல்லை.

**கப்பலும் பிரயாணிகளும்:**—முற்காலத்தில் மக்கள் கடற்பிரயாணம் செய்தற்குப் பெரிதும் அச்சங்கொள்வார்கள், இப்போதோ, அவ்வச்சம் முக்காற்பங்கு நீங்கிவிட்டது. ஆயினும், இப்போதும் அஞ்சுபவர் சிலருண்டு, கப்பலேறிச் செல்பவர் திரும்பித் தம் ஊர் வருதல் அருமை என்னும் எண்ணம் முற்காலத்தவருக்கு இருந்தது. இக்காலத்தவருக்கு அவ்வெண்ணம் அறவே நீங்கிவிட்டது. இவ்விரண்டிற்கும் பல காரணங்கள் உண்டு. இக்காலத்தும் கப்பலில் செல்கின்றவர்களுள் சிலருக்கு அதில் ஏறும்வரை மிக நடுக்கமாக இருக்கும். பின்பு, அது வீடுபோன்று இருத்தலினாலும், தண்ணீர் கண்ணுக்குக் காணப்படாமையாலும் அந் நடுக்கம் சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

எவ்வகுப்பில் செல்பவரும் தாம் செல்லும் இடத்திற் கேற்பப் பெறுங் கட்டளைச்சீட்டுடனே உணவுச்செலவையும் செலுத்திவிடுதல்

வேண்டும். இச்செலவு வகுப்பிற்குத் தக்கவாறு குறைந்தும் மிகுந்தும் இருக்கும். மூன்றும் வகுப்புணவு மிகக் குறைந்த நிலையிலும், இரண்டாம் வகுப்புணவு நடுநிலையிலும், முதல்வகுப்புணவு உயர்நிலையிலும் இருக்கும். பிந்திய இருவகுப்புக்களின் உணவு இருபிரிவுகளை உடையது. காய்கறியுணவைப் பிராமண உணவென்றும், மாமிச உணவை ஐரோப்பிய உணவென்றும் கூறுவர். முன்னது நான்கு வேளைகளோடு அமையும். பின்னது ஆறு வேளைகள் நீளும். ஐரோப்பிய உணவிற்கு ஒவ்வொரு வேளையும் உணவுப்பண்டங்கள் இத்தனை எனக் குறித்த அட்டை எல்லாருக்கும் கொடுக்கப்படும். பிரயாணிகள் அதில் தங்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப்பிட்டு அனுப்பின் அதன்படியே அவை பரிமாறப்படும். முதல் இரண்டு வகுப்பினரும், பொதுச்சாப்பாட்டறைக்குச் சென்றோ, அன்றித் தம் அறையிலே இருந்தோ உணவை உண்ணலாம். அவர்களுக்கு நீராடத் தனித்தனி அறைகள் இருத்தலின், அவரவர் விரும்பியபோது குளித்தலும் ஆடைகளைத் துவைத்தலும் செய்துகொள்ளலாம்; மறு உணவு வருமட்டும் தாங்கள் விரும்பிய இடங்கட்குச் சென்று மகிழலாம்.

அவண் நடைபெறும் களியாட்டங்கள் பலப்பல, அவை அவரவர்கள் அறிவிற்கும் இயல்பிற்கும் போக்கிற்கும் ஏற்ப அமையும், சிலர் சீட்டாடுவர்; சிலர் இன்னிசையில் ஆழ்ந்திருப்பர்; சிலர் பந்தாட்டத்தில் பதிவர்; சிலர் மேல்தட்டில் உட்கார்ந்து இயற்கையழகில் ஈடுபட்டிருப்பர்; சிலர் நூல்களின் நுட்பப்பொருளை நுகர்ந்துகொண்டிருப்பர்; சிலர் பொதுப்பொருள்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பர்; முன்பே பழக்கமுள்ள நட்பினர் தம் கல்லூரி அனுபவங்களையும் கடற்கரைக் காட்சிகளையும் கூறிக் குலவிக்கொண்டிருப்பர்; சிலர் செய்தித்தாள் படித்துக்கொண்டிருப்பர், சிலரைத் துயில் ஆட்கொள்ளும், வேடிக்கைக்கதைகள் சிலர் காலத்தைக் கவரும், வேளைக்கு வேளை கிடைக்கும் உயர்ந்த உணவும், விசாலமான படுக்கையும், மகிழ்வை யூட்டும் இயற்கைக்காட்சிகளும், ஆனந்தம் நிறைந்த கூட்டுறவும், உட்கார நாற்காலிகளும், சாய்ந்திருக்கச் சாய்வுபலகைகளும், முழுச்சந்திரன் போன்று ஒளிவீசும் மின்சாரவிளக்குக்களும் அளிக்கும் இன்பத்தை இந்திரலோக இன்பம் என்றுதான் கூறல் வேண்டும். குடும்பத்தொல்லையோ, வேலைச்சிரமமோ, பணக்குறைவோ அவண் ஏற்பட வழி இல்லை. சம்பந்திவீட்டில் மருவு உண்ணும் மாப்பிள்ளை வீட்டாரைக்கூடக் கப்பற்பிரயாணிகளுக்கு ஒப்புக்கூறல்

இயலாது. அவ் வாழ்க்கையை அவர்கள் வாழ்க்கையிலேயே ஒரு சிறந்த அனுபவம் எனத்தான் இயம்பல்வேண்டும். ஆனால், கப்பல் நாகப் பட்டினத்தை விட்டவுடன் சிறிது தொலைவுவரையும் கடல் மிகக் கொந்தளிப்பாய் இருத்தலின், ஏறக்குறைய இரண்டு நாட்கள்வரை சிலருக்கு மயக்கம் உண்டாகும். அதுவே மக்களுக்குச் சிறிது துன்பம் தருவதாகும். பலருக்கு மயக்கம் உண்டாதலே இல்லை. மயக்கமுற்றவரும் மூன்றும் நாள் மிக்க ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் எழுந்து உலவுவர். "முன்பிருந்தவற்றைவிட எங்களுக்குச் சுறுசுறுப்பும் நலமும் ஏற்பட்டுள்ளன!" என அவர்களே கூற யான் கேட்டுள்ளேன். எங்களுக்கு மயக்கம் சிறிதும் உண்டாகாமையின், அவ் வனுபவத்தைப்பற்றி யாங்கள் அறிந்தோமில்லை.

பெரும்பான்மையாக முதலிரு வகுப்புக்களிலும் உணவுப்பொருள்கள் மிகுதியும் வீணாக்கப்படுகின்றன. யாவரும் சேர்ந்து உண்ணும் இடத்திலும் அவர்கள் உண்ணும் அளவைக்காட்டிலும் மிகுதிப்படும் அளவே விஞ்சியிருக்கும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொணர்ந்து கொடுக்கும் உணவும் நிரம்ப இருத்தலின், அதுவும் மீதப்பட்டுப் போகிறது. சோறுமட்டுமா? பிரையிட்ட தயிர், கோக்கோ, சுவையுள்ள காய்கறிகள், நெய்யில் செய்த இனிய பண்டங்கள் யாவுமே கடலில் எறியப்படுகின்றன. வேலைக்காரருக்கும் போதிய உணவு கிடைத்தலின், அவர்களும் அவற்றை விரும்புதல் இல்லை. இம் முறையில் ஒவ்வொரு நாளும் வீணாக்கப்படும் உணவு, பலபேர் வயிற்றை நிரப்பக்கூடும். இதைக்குறித்துப் பிரயாணிகளோ, கப்பல் அதிகாரிகளோ, சிறிதும் கவலைகொள்ளுதலே இல்லை. இங்ஙனம் இவ் வகுப்பினர் வாழ்க்கை இன்பத்துடனும் ஆரவாரத்துடனும் கழிகின்றது.

இனி, மூன்றும் வகுப்பைப்பற்றிச் சிறிது நோக்குவோம்: சிங்கப்பூர்க் கப்பலில் மூன்றும் வகுப்பு ஒன்றுண்டு என்றும், அவ் வகுப்பில் செல்பவர்கள் பெரும்பாலும் கூலிகளே என்றும் முன்னரே தெரிவித்துள்ளோம். அதில் கூலிகள் அல்லாத நம் மனேரும் சிலர் உண்டு. மேல் இருவகுப்பில் உள்ளவர் எத்துணை இன்பம் துய்க்கின்றனரோ அத்துணைத் துன்பம் மூன்றும் வகுப்பினரைச் சார்ந்துள்ளது. கூடம் போன்றிருக்கும் ஒரு பெரிய இடத்தில் அவர்கள் இருப்பினும், கூட்டம் அதிகமாதலால், நெருக்கமாய் உள்ளது. அதில் ஒவ்வொருவருக்கு இத்தனை அடிகள் என அளந்து விடப்பட்டி

ருக்கும். உண்ணல், உறங்கல் யாவும் அங்கேயே நடைபெறும். உலாவவோ, வேறு இடத்திற்குச் செல்லவோ முடியாது. குழந்தைகள் இருப்பின், பெற்றோருக்குப் பெரிதும் துன்பமே. குளித்தற்குத் தண்ணீரும் இடமும் கிடைத்தல் அரிது. அம் மூன்றும் வகுப்பு நீரில் அமைந்து இருத்தலின், அவர்களுக்கு மயக்கமும் அதிகம். அதனால், பலர் வாந்தி எடுப்பர். சிலபோது அந்த அசுத்தத்திலேயே அவர்கள் கிடக்க நேரும், அவர்கள் சுத்தமாக இருத்தற்குப் பழகாதவர்கள். ஆதலின், தங்கள் இடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும் அவர்களுக்குத் தெரிதலில்லை. நம்மவர்களுள் சிலரும் அம் மூன்றும் வகுப்பில் இருந்து பெரிதும் துன்பப்படுவர். என் செய்வது! எல்லாப் போகமும் பணத்தைப் பொறுத்தன்றோ உள்ளது! மூன்றும் வகுப்புக் கட்டணம் முப்பத்தாறு ரூபாய். இரண்டாம் வகுப்புக்கட்டணம் நூற்றிருபது ரூபாய். இவ்விரண்டு வகுப்புக்களுக்கும் இடைப்பட்ட வகுப்பு ஒன்றுளது. அதன் கட்டணம் தொண்ணூறு ரூபாய். இறுதி வகுப்பினரும் இரண்டாம் வகுப்பினரைப் போன்றே சில நலங்களைப் பெறலாம்; ஆயினும், உணவிலும், படுக்கையறையிலும், குளிக்குமிடங்களிலும் சிறிது வேறுபாடு உண்டு. அவை அவர்களுக்கு அத்துணைத் துன்பத்தைத் தருதல் இல்லை. இறுதிவகுப்பினர் பல கஷ்டங்களையும் அடைதற்குக் காரணம், அவர்கள் வறுமையே யாகும். புகை வண்டியிலும் இவ்வேறுபாடும் துன்பங்களும் உண்டல்லவா?

மூன்றும் வகுப்பினருக்குச் சோறும், காய்கறி கலந்த சாம்பாரும், வாரம் இருமுறை மாமிசஉணவும் கொடுக்கப்படுகின்றன. பெரிய பாத்திரங்களில் சோறும் குழம்பும் தனித்தனியே வைத்துக்கொண்டு இருவர் நிற்பர். படுக்கையில் இருக்கும் பிணியாளர் தவிர மற்றவர் யாவரும் தாமே போய் உணவைப் பெற்று வரவேண்டும். இந்தச் சோறுதவிர வேறொன்றும் அவர்கட்குக் கிடைத்தல் இல்லை. புகை வண்டிகளில் பெறுவதைப் போலச் சிற்றுண்டிகளும் அவர்கள் பெற முடியாதன்றோ? இந் நிலையில் அம்மக்களின் துன்பம் பெரிதே! கீழ்த் தட்டில் ஓர் அரிய பண்டமும் கிடைக்காமலிருத்தலையும் மேல்தட்டில் அரிய பண்டங்களும் கடற்கிரையாதலையும் நோக்கின், அவை உலகில் ஏழைகளின் வறுமைத்துன்பத்தையும் செல்வரின் ஆரவாரச் செயலையும் வடித்துக் காட்டுதல் போன்றிருக்கும். முதல் இரண்டுவகுப்பினருக்கும், 'எப்போது கரையைக் காணலாம்!' என்னும் ஆர்வம் இருப்பினும், அக் கப்பலின் செலவு இன்னும் இரண்டு நாட்களுக்கு நீடிப்பி

னும் அவர்கள் மிக்க கவலை அடைதல் இல்லை. மூன்றும் வகுப்பி னருக்கோ ஒருமணி நேரம் அதிகப்படுவதும் பெருந்துன்பந் தாரா நிற்கும். வீடு சேர்ந்தபின்பும் இரண்டொரு நாட்களுக்கு உடல் ஊஞ் சலாடுவதைப் போன்ற உணர்ச்சியே அவர்களுக்கு உள்ளதாம்.

I பொருள் கூறுக :—

ஞாயிறு, மடங்கல், மூசை. துயில், இரை.

II வாக்கியங்களில் அமைக்க :—

தொடுவானம், உவகையை ஊட்டாநிற்கும், பொறுப்பும் கவலையும் இன்றி, இயற்கையழகில் ஈடுபட்டிருப்பர். ஊஞ்சலாடுவதைப்போன்ற உணர்ச்சி.

III விடைதருக :—

1. கப்பற் பிரயாணம் செய்வோர் விடியற்காலையில் ஆகாயத்தில் காணும் இயற்கைத் தோற்றங்கள் எவை ?

2. கடலில் மீன்களின் குதியாட்டத்தைப் பார்ப்பவர் எதனை உணர்வர்?

3. மக்கள் பறவைகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை எவை ?

4. எதனை "இந்திரலோக இன்பம்" எனக் கூறுதல் வேண்டும்?

5. கப்பலில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு உண்டாகும் துன்பங் கள் எவை ?

# 6. அஞ்சியும் அவ்வையாரும்

(ஆ. கார்மேகக் கோன் அவர்கள்)

**வடவேங்கடம்** தென்குமரி என்னும் இவ்வெல்லைக்குட்பட்ட தமிழ் வழங்கும் உலகத்தின் ஒருபகுதியாய் விளங்கிய சேரநாட்டில் தமிழ்ப்பழங்குடியாகிய பாணர்குடியிலே **ஒளவையார்** என்னும் நல்லிசைப்புலமை மெல்லியலார் பன்னூறாண்டுகட்கு முன்னர்த் தமிழகம் தழைக்கத் தோன்றினர்.

அந்நாளில் நம் தமிழ்மொழி மறுவற்ற மதிபோலத் தன்னொளி பரப்பி நன்னிலையுற்று விளங்கிற்று. தமிழ்நாடோ, ஒரு நாட்டின் அறிவு செல்வம் கல்வி நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாமென்ற நுண்மையை நன்கறிந்ததாகலான், ஆடவர் பெண்டிர் என்ற வடிவுவேற்றுமையினாலே இருதிறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை, அறிவுவேற்றுமையே இருவருள்ளும் கருதற்பாலதாம் எனக் கொண்டு, ஆடவர் பெண்டிர் என்ற இருபாலர்க்கும் வேற்றுமையின்றி ஒரே தன்மையான அறிவைக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது; அதனால் அந்நாடு, ஆண் பெண் என்ற பால்வேறுபாட்டை அறவே நீக்கி, விழுமிய கல்வியறிவை வேண்டுவோர்க் கெல்லாம் விழைந்து கொடுத்தது; பிறப்பில் இழிபு கருதாது கடைநிலத்தோராயினும் கற்றறிந்தவர்களைத் தலைநிலத்து வைத்து மகிழ்வு பூத்தது; குடியிலும் தொழிலிலும் கோட்பாட்டிலும் பலதிறப்பட்ட நன்மக்களும் பகைமையின்றி ஒருங்கு குழுமித் தழுவி மகிழ இருந்தது; இத்தன்மையெல்லாம் நம் தண்டமிழ்நாடு கொண்டிருந்தமையினால் குறவர் மறவர் குயவர் பாணர்களது குடியினுள்ளும் அரசர்மரபினுள்ளும் **குறமகள் இளவெயினி, காவற்பெண்டு, வெண்ணிக்குயத்தி, ஆதிமந்தியார், பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவியார், வெள்ளிவீதியார், நப்பசலையார், நக்கண்ணையார், பொன்முடியார்** முதலிய பல நல்லிசைப்புலமை மெல்லியலார்கள் தோன்றி நம் தமிழ் நாட்டிற்கு என்றும் பொன்றாப் புகழை நல்கினர். அக்காலத்திய இந்நாட்டின் இவ்வியல்பால், நம் ஒளவையார் தடையின்றி இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியையும் தம் குடிக்குரிய இசை நாடகக்கலைகளையும் நன்கு பயின்று தேர்ச்சியுற்று, நல்லிசைப் புலமை மெல்லியர் தலைவியராகவும், விறல்பட ஆடும் விறலியராகவும் விளக்கமுற்றிருந்தார்.

இங்ஙனமிருந்து இவர் தம் குலவாழ்க்கையாகிய பரிசில்வாழ்க்கையை மேற்கொண்டு. நம் தமிழகத்தில் நியாயமும் தியாகமும் வீரமும் மிக்க திருவுடை மன்னர் அவைக்களந்தோறுஞ் சென்று, தம் புலமைத் திறலையும், ஆடல் பாடல்களின் விறலையும் வெளிப்படுத்தி, அவர்கள் மனமுவந்தளிக்கும், பெரும் பரிசில்களைப் பெற்று வாழ்ந்துவருவாரா ராயினர்.

இவர்காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதிக்கண் விளங்கிய **தகடூர்** என்னும் ஊரில் **அதியமான் நெடுமானஞ்சி** யென்னும் ஓர் அரசன் அரசு செய்திருந்தனன். அவன் சேரரது உறவினன்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; வீரமிகுந்தவன்; **மழவர்** என்னும் ஒருவகை வீரர்கள் அடங்கிய படையை யுடையவன்; அவன் இவ்விதச் சிறப்புக்களோடு வண்மையும் மிகுந்தவனாய் விளங்குவதை யறிந்த ஔவையார் அவனிடத்துப் பரிசில்பெறக் கருதி அவனது தகடூரை அடைந்து, அவனைப் புகழ்ந்து பாடினர். அவ்வரசன் இவர் மீது பேரன்பு காட்டி உபசரித்தானாயினும் 'இப்போதே பரிசில் அளித்தால் இவர் அகன்று விடுவாராகையால், இவரைப் பிரிய நேரிடும்' எனக் கருதிப் பரிசில் அளியாது, சிலநாள் தாழ்த்திருந்தனன். ஔவையாரும் சின்னாள் அவனது அரண்மனைக்கண் தங்கியிருந்தவர், அவன் பின்னரும் பரிசிலளியாது நீட்டிப்பது கண்டு சினம் மிகுந்து, அவனை நேரிற் பார்ப்பதற்கும் விரும்பாது அவனது வாயிற்காவலாளனிடத்துச் சில கூறிவிட்டுச் செல்லக் கருதினர். அதனால் காவலாளனை நோக்கி, "வாயில்காப்போய், வாயில்காப்போய், கொடையுடையோரது செவியிடத்துப் பொருள் விளங்குஞ் சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் நினைந்த பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மனவலியுடையவர்களும் பெருமைபெறுதற்கே வருந்துகின்றவர்களுமான பரிசில் வாழ்க்கையுடைய புலவர்க்கு அடைக்காத சிறந்த வாயிலைக் காப்போய், குரிசிலாகிய நெடுமானஞ்சி தன் தரம் இத்தன்மையது என்று அறியானோ? அதனை அறியாவிடினும், எம் தரத்தையேனும் அறியான் கொல்லோ? அறிவும் புகழுமுடையோர் அனைவரும் இறந்தொழிந்தாராக, இவ்வுலகம் வறிய இடத்தை உடையதாகி விடவில்லையே! ஆகலான் இப்போதே புறப்படுகின்றோம்; எமது யாழ் முதலான கருவிகளை முட்டையாய்க் கட்டித் தூக்கிச் செல்கின்றோம்; இவனன்றி எங்கட்கு இல்லையோ இடம்? எத்திசைச் செல்லினும், அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர். இதனை நும் அரச

னுக்குக் கூறிவிடுவாயாக" என முனிவுடன் மொழிந்து, அவர் அறிவும் புகழும் உடைய கொடைஞரிடத்துப் பரிசில் பெறுதற்கு விரைந்தெழுந் தார்.

இங்ஙனம் இவர் சினந்து கூறிச் செல்லுதலை வாயில்காப்போனால் அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவுக்கு அஞ்சி விரைந்து வந்து இவரைக் கண்டு, இவர் கொண்ட கோபந் தணிய வேண்டி நின்று, தனது கொடைமன்றத்துக்கு அழைத்துச் சென்று வீற்றிருக்கச் செய்து, வரிசை மிக்க பரிசில் அளவின்றி அளித்து, உணவிற்கு நெல்லும் சிறந்த ஆடைகள் பலவும் கொடுத்து உபசரித்தான். உடனே ஔவையார் உவந்து 'இத்தகைய வண்மையாளனைப் பரிசில் நீட்டித் தானென்று முனிந்தோமே!' என்று மிக வருந்தித் தம் மனத்தோடு கூறுபவராய், "அதியமான் ஒருநாளல்ல, இருநாளல்ல, பலநாளும் பல ரோடும் செல்லினும், முதல் நாள் கண்டபோது கொண்ட அன்பிற் சிறிதுங் குறையாத அன்பையே உடையான்; இவன் பரிசில் நீட்டிப் பினும், நீட்டியாதொழியினும், யானை கையில் எடுத்த கவளம் வாயி னுட் செல்லுதல் தவறுததுபோல, இவன் நமக்குப் பரிசில் தருதல் தப்பாது," என்று, அவன் பழகியோ ரிடத்து என்றும் ஒரு தன்மை யாகக் கொள்ளும் அன்பையும் அருமையையும் மிகுத்துக் கூறி, வண்மையை வாழ்த்திப் புகழ்ந்து, அவனது மனையின்கண்ணே தங்கி யிருந்தனர்.

இங்ஙனம் இருக்குங்கால் ஒருநாள் அதியமான் ஒருமலைப்பக்கத் துக்குச் சென்றிருந்தவன், அம்மலையின் பிளவி லிருந்த ஒரு கருநெல்லிமரத்திற் பழுத்து விளங்கிய கனியொன்றைக் கண்டு, அதனை அரிதின் முயன்று பெற்றான். அவன் அதனை உண்டவர்கள் நெடுங்காலம் உயிர்வாழ்வார் என்றறிந்தும், அக்கனியைத் தானுண்டு உயிர்வாழ்வதினும், தமது நாவன்மையால் சீரிய பாக்கள் இயற்றி உலகை இன்புறுத்தும் ஔவையார்க் கீதலே சாலப் பயனுடையதெனக் கருதி, அக்கனியின் பெருமையைக் கூறாமலே புலவர்க்குக் கொடுத்து உண்ணும்படி செய்தான். உண்ட ஔவைப்பிராட்டியார் பின்னர்க் கனியின் விசேடத்தை உணர்ந்து, அதியமான் தன்னினும் தம்மையே மேம் பட மதித்துத் தாம் சாவாது நெடுங்காலம் வாழ்ந்திருக்கக் கருதியதற்கு வியந்து, அவனை நோக்கி "வீரச்செல்வமுடைய அதியர்கோமானே, பெரிய மலையுச்சியிற் பெற்ற அமிழ்தமயமான இனிய நெல்லிக்கனி

பெறுதற்கரியது என்று கருதாமலும் அதன் பயனை வெளிப்படக் கூறு மலும் மறைத்துச் சாதல் நீங்க எமக்கு அளித்தாயாதலால், சந்திர மவுலியும் நீலகண்டனுமாகிய சிவபெருமான் நஞ்சை யுண்டும் நிலை பெற்றிருப்பதுபோல, நீ நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வாயாக" என்ற கருத்தமைத்து ஒரு செய்யுளைப் பாடி வாழ்த்தினர். பின்பு அவனுக்கு உயிர்த்துணையாய்ச் சிறந்து, அஞ்சியுட னிருந்து அவனது அருள் அன்பு வீரம் தியாகம் நியாயம் முதலிய குணங்களைப் புகழ்ந்து, அவ் வப்போது பல கவிகள் பாடி, அவனை மகிழ்வித்திருந்தனர்.

ஔவையார் அதியமானுடன் இங்ஙனம் அமர்ந்துவரும் நாளில், காஞ்சிமாநகரத்தை ஆண்டுகொண்டிருந்தவனாகிய **தொண்டைமான்** என்னும் அரசன், தனக்குள்ள படைவலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியவனெனக் கருதி, அவனோடு போர்செய்யச் சமயம் நோக்கியிருந்தான். இதனை உணர்ந்த அதியமான் தன் ஆற்றலையும் சிறப்பினையும் அஞ்சாமையையும் தூதுமூலம் தொண்டைமானுக்கு அறிவித்தற்குக் கருதியவன், 'இவ்வரும்பெருஞ்செயலுக்குத் தக்கவர் நாவன்மையும் பாவன்மையும் அரசியலறிவும் மிக்க ஔவையாரே' எனத் துணிந்து, அவரை அவனிடத்துத் தூதுசெல்ல வேண்டினன். ஔவையாரும் அவ்வரசியற் பெருங்காரியத்தைப் பின்னிடைவின்றி ஏற்றுக்கொண்டு, புறப்பட்டுப்போய்க் காஞ்சிமாநகரடைந்து, தொண் டைமானைக் கண்டார். அவனும் புலவராயும் தூதராயும் வந்த ஔவை யாரை முகமன் உரைத்து உபசரித்தான். ஔவையார் அவனது அரண்மனைக்கண் அன்று உண்டியருந்தி இளைப்பாறித் தங்கியிருந்தார்.

பின்னர் தொண்டைமான் தனது அரண்மனைக்காட்சியைப் பகை யரசனாகிய அதியமானிடத்திருந்து வந்த ஔவையாருக்குக் காண்பிப் பான்போலத் தன் படைமிகுதியையும் பேராற்றலையும் உணர்த்த நினைந்து, இவரை அழைத்துச் சென்று பல இடங்களையும் காட்டி வந்தான். தனது ஆயுதசாலைக்கு அழைத்து வந்து அங்கு நெய்பூசி உறையிட்டு அலங்கரித்து அணிஅணியாய் வைத்திருக்கும் ஆயுதங்களை யெல்லாம் காட்டி நின்றான். ஒருவர் மனத்தது அறிந்து பாடும் ஆற்றல் வாய்ந்த ஔவைப்பிராட்டியாருக்கு அவனது உட்கிடையை அறிதல் அரியதாமோ? இவர் படைக்கலங்களைப் பார்த்து, அவனுக்குச் செருக் கடங்க அறிவுகொளுத்த நினைந்து, சில கூறுபவராய், "இப் படைக் கருவிகளெல்லாம் போரில் பயன்படாமையால் மயிற்பீலி அணியப்பட்டு

மாலை சூட்டப்பட்டுத் திரண்ட காம்பு திருத்தி நெய்பூசி, காவலையுடைய அரண்மனைக்கண் வினை இருக்கின்றன ; தான் பெற்ற செல்வத்தைப் பல்லோர்க்கும் பகுத்துண்ணும் வன்மையுடைய எம் அதியமானது ஆயுதங்கள், பன்முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முரிந்து, செப்பனிடக் கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன," என்று கருத்தமைத்து, ஒரு பாட்டினைப் பாடி இவனது படைக்கலத்தைப் புகழ்பவர்போல் இகழ்ந்தும், அதிகமான் படைக்கலத்தைப் பழிப்பவர்போல் புகழ்ந்தும், குறிப்பால் தொண்டைமான் வீரத்தினும் தமது அதியமான் வீரமே சிறந்ததெனக் காட்டினர். அவ்வளவில் தொண்டையர்கோன் ஔவை யாரை நோக்கி, " அம்மையே, அப்படியாயின், நும் நாட்டுள் என்னோடு போர்செய்யும் வலிமையுடையாரு முளரோ ? " என வினவினன். அதற்கு அவர், " வேந்தே, நீ போர்செய்யக் கருதுவையாயின், எம் முடைய நாட்டின்கண், அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரு முளர் ; அவரேயுமன்றி, மன்றின் கண் தூங்கும் மத்தளவாத்தியத்தில் காற்றடித்தலால் எழுந்த ஓசை யைக் கேட்டாலே, அது போர்ப்பறை என்று கருதி மகிழும் போர் விருப்புடைய என்னுடைய தலைவனும் உளன்," என்று அதியமானது போர்விருப்பத்தையும் அஞ்சாமையையும் எடுத்துக் கூறித் தொண்டை மானது தருக்கை அடக்கிவிட்டுத் தகடூர் வந்துசேர்ந்தார்.

இவர் காஞ்சிக்குத் தூதுபோய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர், திருக்கோவலூர் அரசனாகிய **மலையமான் திருமுடிக்காரி** யென் பான், பல வேற்றரசர்களைப் போரில் வென்று அடக்கி, வென்றி மிகுந்து, தனக்கு நிகராவார் ஒருவருமிலரென்று பெருமிதங்கொண் டிருந்தான். இதனை அறிந்த அதியமான் அவனது ஆற்றலை அடக்கித் தன் புகழை மேம்படுத்தக் கருதி, அவனோடு பகைமைகொண்டு, நால்வகைப் பெரும்படையோடும் போய், மலையமானது கோவலூர்மதிலை வளைத்தனன். கோவலூர் அரசனாகிய காரியும் **காரிக்குதிரை** ஊர்ந்து படையுடன் வந்தெதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். அதியமான் தனது வேலாலும் வாளாலும் ஆளாலும் கரியாலும் பரியாலும் காரியின் படையை முறியடித்துப் பெருஞ்சமர் நிகழ்த்தினன். அவ்வமயம் அதியமானுடன் போர்க்களஞ் சென்றிருந்த ஔவையார், காரி அதிய மான் அஞ்சியின் போர்வெல்லுந் திறத்தை யறியானாய் வந்து பொருத லால், பல உயிர்கள் மடிவதற்கிரங்கி, அவனுக்கு அதிகமானின் ஆற்றலை

அறிவுறுத்திப் பணிந்துபோகுமாறு கூறிப் போரை ஒழித்தற்குக் கருத்துக்கொண்டார். மலையமானையும் அவனது துணைவீரர்களையும் நோக்கி, "அதியமான் போர்செய்தற்கு, நின்ற இடத்திலின்று பெயர்ந்து உலாவி, உறையினின்றும் உருவிய வாட்கள், பகைவரது உடம்பின் தசையின்கண்ணே முழுகிப் பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன. அவன் வேல்கள் குறும்பரது அரண்களை வென்று, அவர்களது நாட்டை அழித்தலால் காம்பும் ஆணியும் அசைந்து கெட்டன; அவன் களிறுகள் கணையமரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது பகைவரது அரணை அழித்தலால், பெரிய தந்தங்களிற் கட்டிய பூண்கள் கழன்றன; அவன்குதிரைகள் போர்க்களத்திற் பொருத வீரர்களது மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால், இரத்தக்கறைபட்ட குளம்புகளை யுடையவாயின; அதியமானே, நிலவுலகம் அடங்காத படையையும், கழல்வடிவாகவும் கிண்ணிவடிவாகவுஞ் செய்த செறித்த அம்புகள் துளைத்த கேடயத்தையு முடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? நெல்வளமிக்க உங்களுடைய ஊர்கள் உங்கட்கு உரியன ஆக விரும்புவீர்களாயின், அவனுக்குத் திறைகொடுத்தல் வேண்டும்; அங்ஙனம் நீங்கள் கொடுக்க மறுப்பீர்களாயின், அவ்வுரிமையை நீங்கள் அடைய அவன் உடன்படுவானல்லன்; அவனது போர்த்திறத்தை நான் உள்ளவாறு சொல்லியும் நீங்கள் பிரிதல் வியப்பன்று. ஆகையால், அதனை ஆராய்ந்து போர் செய்மின்;" "எங்கள் வீரன், நாளொன்றுக்கு எட்டுத் தேரைச் செய்யுங் கைவன்மையையுடைய தச்சன் ஒருமாதகாலம் ஆராய்ந்து செய்யப்பட்ட ஒரு தேர் உருளையை ஒத்த விரைவும் வன்மையுமுடையவன்," என்று அதிகமானது ஆற்றலையெல்லாம் எடுத்துரைத்தார். இங்ஙனம் இவர் உரைத்தும், மலையமான் வென்றியில் மிக்க வேட்கையுடையவனாதலின், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இரங்காது எதிர்நின்று போர்செய்து இறுதியில் அதியமான் அஞ்சிக்கு அஞ்சிப் புறங்கொடுத்தோடினன். அவனுடைய படைகளும் நிலைகலங்கிக் கலைந்தன. கோவலூர் அதியமானது ஆட்சிக்குட்பட்டது. அவனது பேரர் வெற்றியைக் கண்ட **பரணர்** என்னும் பெருந்தகையும் ஔவையாரும் வியந்து அதனைப் புகழ்ந்தனர்.

இங்ஙனம் அவ் வதியமான் கோவலூரவரை வென்று கைக்கொண்ட பின்னர், ஔவையாருடன் மீண்டு, தகடூர் புகுமளவில் அவ்வமயத்து நீண்ட நாளாக மகப்பேறில்லாம லிருந்த தனக்குத் தலைமகன் பிறந்

திருக்கிறனென்று தெரிந்து, புதல்வன் பிறந்தவுடன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழவேண்டுமென்பது அறநூல் விதியாகலின், தான் பூண்ட போர்க்கோலத்தைக் களையாமலே விரைவிற் போய் மகன் முகத்தைக் கண்ணுற்றான். உடனிருந்த ஔவையார் அப்போது அத்தன்மையை, "கையின்கண் உள்ளது வேலே; காலின்கண் உள் ளது வீரக்கழல்; உடம்பின்கண் உள்ளது வியர்வை; கழுத்தின்கண்ணது பகைவர்படை பாய்ந்த ஈரம் புலராத பசிய புண்; பகைவரை வெகுண்டு பார்த்த கண், தன் மகனைக் கண்டும் சிவப்பு நீங்கினதில்லை; ஆதலால், இவன் கோபத்துக் காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ? என வியந்து, அதிகமானது வீரத்தைப் புனைந்துரைத்தார்.

இவர்கள்செய்தி இங்ஙனமாக, அதியமானஞ்சியால் வெல்லப் பட்டுத் தனது கோவலூரை இழந்த மலையமான், இழந்த ஊரை எவ் வாற்றாலேனும் மீண்டும் பெறக் கருதி, அதற்குத் துணைதேடி, முன்பு பல முறையும் போரில் தன்னைத் துணையாகப் பெற்றவனும் சிறந்த வீரனுமாகிய **சேரமான் பெருஞ்சேரலிரும் பொறை** என்னும் அரசனை அடைந்து, தனக்கு உதவிபுரியுமாறு வேண்டினன். அவன் தன் நண்பனாகிய அவனுக்குத் துணைசெய்ய ஒருப்பட்டுப் பெரும்படையோடு புறப்பட்டவன் **வல்வில்ஓரி** என்னும் வள்ளலுக்குரிய வளமிக்க **கொல்லி மலையை** முதற்கண் பொருது கைப்பற்றவேண்டுமென்ற கருத்தை வெளியிட்டான். மலையமான் அதற்கிசைய, இருவரும் கூடிக்கொல்லி மலையைமுற்று கையிட்டனர். அவ்வமயம் ஓரி மலையமானுக்குப் பகைவனாகிய அதியமான் நெடுமானஞ்சியைத் தனக்குத் துணையாக உதவும்படி வேண்டினன். அதியமான் தன்மீது படையெடுக்கக் கருதி யிருக்கும் பெருஞ்சேரலிரும்பொறையையும் மலையமானையும் வலி தொலைப்பதற்கு இதுவே நல்ல தருணமென நினைத்து, தன் நட்பரசராகிய சோழனையும் பாண்டியனையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு ஓரியின் கொல்லிக்கூற்றத்துக்கு வந்து ஓரியுடன் சேர்ந்து, சேரமானோடும் மலையமானோடும் பெரும்போர் புரிந்தான். அப்போரில் பெருஞ்சேரல் அதிய மானையும் சோழபாண்டியரையும் வென்றோட்டி, அவரது முரசுங் குடையுங் கவர்ந்து, ஓரியைக் கொன்று, கொல்லிமலையைக் கைப்பற்றிக் கொண்டான். அதியமான் தனது தகடூர் போய் மதிலினுள் மறைந்திருந்தான், மலையமானும் பெருஞ்சேரலும் தகடூர்மேற் படையை நடாத்தி மதிலை வளைத்தனர். அதியமான் மதிலுள்ளிருந்து வெளிவந்து எதிர்த்துப் போர்செய்யாதிருந்தனன். பகைவர் மதிலினை வளைத்தலை

யும் அதியமான் வாளா இருந்தநிலையுங் கண்ட ஔவையார், அதியமானுக்கு அவனது ஆற்றலை எடுத்துக்காட்டிப் போரில் மனஞ்செல்ல ஊக்கமூட்டுதற்குக் கருதி, அவனை அணுகி, ' மலைச்சாரலிலுள்ள புலியானது சீறுமிடத்து, அதற்கு எதிர்நிற்க வல்ல மான்கூட்டமும் உளவோ ? சூரிய மண்டலம் கொதித்து எழுமாயின், ஆகாயத்தினும் திசையின்கண்ணும் இருளுமுளதோ ? அவைபோல, நீ போர்க்களம் புகுந்தால் இவ்வுலகத்தில் உனது நாட்டைக் கவர்ந்து ஆரவாரிக்கும் வீரரும் உளரோ ?' என்று கூறினர்.

இதுகேட்ட அஞ்சி, வீரங்கொண்டு போர்விருப்புற்று அஞ்சாது பகைவரை ஓட்டுதற்கு மதிற்புறத்துப் போர்க்களம் புகுந்து, பகைவர் வேல் வரினும் விழித்த கண் இமையாது வீரதீரமோடு போர் உடற்றினன். அப்போது பகைவர் விடுத்த படைகள் பல அதியமானது மார்பினும் கழுத்தினும் முகத்தினும் பட்டுப் புண்படுத்தின ; அவ்வமையத்தும் ஔவையார் அதியமான்முன் சென்று,"பெருந்தகாய், பெருஞ்சமர் புரிந்து நீ விழுப்புண் பட்டபடியால், உன்னேடு எதிர்த்த அரசர் பலர், தங்களுக்கு யுத்தத்தில் இறவாமையால் உளதாகும் குற்றம் நீங்கும்படி இப்போது உன் வாட்போரில் மாண்டனர். இனி நீ வருந்திப் போர் செய்து வெல்ல வேண்டுவது யாதுளது ?" என்று பின்னரும் அவனை ஊக்கினர்.

அதியமான், அப்புண்பட்ட நிலையினும் தளராது போர்புரிந்தான் ; இறுதியில் பெருஞ்சேரல் விடுத்த வேலொன்று, காற்றினுங் கூற்றினுங் கடுக வந்து, அதிகமான் அஞ்சியின் நெஞ்சிற் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. அதனல், அதியமான் சோர்ந்து தேரிற் சாய்ந்து உயிர்துறந்தான். அந்தோ! அவ்வமயத்து அவனது இன்னுயிர் நண்பரான ஔவை எய்திய கௌவையை எங்ஙனம் கூறுவது! புலவர் அவனது இன்குணங்களையெல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்ருது புலம்புகின்றவராய், "சோறு எல்லார்க்கும் பொதுவாதலால், இது சிறு அளவினதாக உள்ளபோதும், மிகப் பல கலத்தோடும் பலரோடுங் கூட உண்பான் ? அது கழிந்ததே ! மிக்க அளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப்பலரோடுங் கூட உண்பான் ; அது கழிந்ததே ! உணவிருக்கும் இடமுழுதும் எங்களுக்கு (உண்டு களிக்க) அளிப்பான்; அது கழிந்ததே ! அம்பும் வேலும் தைத்து உருவு மிடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பான் ; அது கழிந்ததே! நறுமண

முள்ள தன்னுடைய கையால் எம்முடைய தலையைத் தடவி அன்பு செய்வான்; அது கழிந்ததே! அதியமான் மார்பகத்துத் தைத்த வேல், அவன்மார்பில் மாத்திரம் தைத்ததன்று; அது பாணரது பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னுற் புரக்கப்படும் சுற்றத்தாரது கண்ணின் கருமணிஒளி மழுங்கப் புலவரது நாவின்கண்ணேயும் போய் விழுந்தது. எமக்கு ஆதாரமாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ! இனி, இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை; பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை; குளிர்ந்த நீர்த் துறைக்கண்ணே பூக்கும் பகன்றைப்பூ, பிறரால் பறித்துச் சூடப்படாமல் வீணே கழிந்தாற் போல, பிறர்க்கு ஒருபொருளைக் கொடாது மாய்ந்துபோகும் உயிர்கள் மிகப்பல; அத்தன்மையதே எம்மரசன்!"; "அவனையின்றிக் கழிக்கின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக" என வருந்திக்கூறினர்; பின்னர், துஞ்சிய அஞ்சியை ஈமச்சிதையில் ஏற்றி எரியூட்டினர்; ஈமத்தீ அவனது உடலிற் பற்றியது. அப்போது ஒளவையார், "ஈமத்தீ இவனுடல் சிதையாமல் அவியினும் அவிக; அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்போனது புகழுடம்பு ஒரு காலத்தும் அழியாது," என்று அவன் புகழுடம்பை வியந்து கூறி, இரங்கினவராய்த் தகடூரின்கண்ணே தங்கியிருந்தனர்.

## I பொருள்கூறுக :—

பாணர், நல்லிசைப்புலமை, மெல்லியலார், விழுமிய, பொன்னு, விறலி, வள்ளல், பரிசில், கங்கு பணிக்களரி, கரி, பரி, கதுவாய், கூற்றம், விழுப்புண் சிதை.

## II வாக்கியங்களில் அமைக்க :—

உயர்வு தாழ்வு, மறுவற்ற மதிபோல், திருவுடைமன்னர் முறியடித்து, வீரதீரம், கண்ணின் கருமணி, புகழுடம்பு.

## III விடைகொடு :—

1. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
2. பண்டைத் தமிழ் நாட்டின் தன்மைகள் யாவை?

3. தகடூரை ஆண்ட மன்னன் யார் ?

4. அதியமான் அஞ்சி ஔவையாருக்குப் பரிசில் அளியாது நீட்டித்தது ஏன்?

5. பரிசில் பெற்ற ஔவை அதியமானை எவ்வாறு வாழ்த்தினுள் ?

6. அதியமான் கருநெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுக்கக் காரணமென்ன ?

7. நெல்லிக்கனியின் சிறப்பையறிந்த ஔவை அதியமானை எவ்வாறு வாழ்த்தினுள் ?

8. ஔவையார், தொண்டைமான் வீரத்தினும் அதியமான் வீரமே சிறந்ததென எவ்வாறு புலப்படுத்தினுள் ?

9. அதியமானது போர் விருப்பத்தையும் அஞ்சாமையையும் ஔவையார் எவ்வாறு தொண்டைமானுக்கு எடுத்துக் கூறினுள் ?

10. அதியமான், மலையமான் திருமுடிக்காரியுடன் போர்செய்யக் காரணமென்ன ?

11. அதியமானது வாட்கள் ஏன் கதுவாய் போய் வடிவிழந்தன ?

12. அதியமானது களிற்றுகளின் பூண்கள் ஏன் கழன்றன ?

13. அதியமான் கோபத்துக்காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ ? என்று ஔவை கூறக் காரணம் யாது ?

14. அதியமான் எப்பொழுது தகடூர் மதிலினுள் மறைந்தான் ?

15. மதிலினுள் மறைந்த அதியமான் வீரங்கொண்டு போற்செய்யக் காரணம் யாது ?

16. அதியமான் இறந்ததும் ஔவைதன் கௌவையை எங்ஙனம் வெளியிட்டாள்?

# 7. செல்வத்தின் இரகசியம்

(நேமம், நா. நடராசன் அவர்கள், M. A.)

இந்தியா ஏழைகள் மிகுந்த நாடு. இந்தியருட் பெரும்பாலர் வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கியுள்ளனர். அவர்கள் வறுமை நீங்கச் செல்வம் வேண்டும்; அறியாமை நீங்கக் கல்வி தேவை. கல்வி பரப்பச் செல்வம் வேண்டும். எனவே, மக்களுடைய வறுமையும் அறியாமையும் அகலச் செல்வது செல்வமேயாகும். இதனை நன் குணர்ந்த அரசாங்கத்தார் செல்வ நிலையை உயர்த்தத்தகும் பொருளா தாரத் திட்டங்களை ஆய்ந்துவருகின்றனர். மக்களது வாழ்க்கையை வளப்படுத்துவதே பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படை நோக்க மாக அமைதல் வேண்டும். இவ்வடிப்படை நோக்கத்தை எவ்வாறு நிறைவேற்றுவது ?

அமெரிக்கா செல்வம் மிகுந்த நாடு என்று கூறப்படுகிறது. அங்கு ஓராண்டில் காணப்படும் பொருள் உற்பத்தியின் அளவு, அதே மக்கள் தொகையுள்ள வேறு எந்த நாட்டையும் விட மிகுதியாகும். ஏறக்குறைய ஒவ்வோர் அமெரிக்கனும் உற்பத்தி செய்யும் பொருள் பிறநாட்டுத் தொழிலாளி உற்பத்தி செய்தலைவிட மிகுதியாகும். மேலும் ஓர் அமெரிக்கத் தொழிலாளிக்கு ஒரு மணி நேர வேலை மூலம் கிடைக் கக் கூடும் பணம் வேறெந்த நாட்டுத் தொழிலாளிக்கும் கிடைப்பதை விட மிகுதியாகும். ஒரு நாளில் பத்து அல்லது பதினைந்து ரூபாய் ஊதி யம் பெறும் அமெரிக்கத் தொழிலாளர் லட்சக் கணக்கானவர். மோட் டார்ப் பேரரசர் எனப் புகழப்பெறும் ஹென்றி போர்டின் தொழிற்சாலை யில் வேலை புரியும் தொழிலாளர் பலர் சொந்தத்தில் மோட்டார்களை வைத்துள்ளனர் என்பது, அந்நாட்டுத் தொழிலாளரது வாழ்க்கை வளத்தினை அங்கைக் கனியெனக் காட்டுகிறதன்றோ ?

இங்ஙனம் அமெரிக்கத் தொழிலாளர் வளத்துடன் இருக்கக் காரணம் யாது? உற்பத்திப் பெருக்கமே உற்ற காரணமாகும். பொருள் உற்பத்திப் பெருக்கமே செல்வ வளர்ச்சிக்குரிய இரகசியம் ஆகும். எனவே, உற்பத்திப் செய்யப்படும் பொருள்களின் அளவு மிகுதிப்பட வேண்டும்; மிகுதிப்படச் செல்வம் பெருகும். உற்பத்திப் பெருக்கத்திற் குத் தொழிலாளியின் உழைப்பாற்றலும் நாட்டின், மூலப்பொருள்

களுமே சிறப்புக் காரணங்கள் ஆகும். கடந்த ஒரு நூற்றுண்டாக அமெரிக்காவில் பல இயந்திரங்கள் தொழில் உற்பத்திக்குப் பயன்படுத் தப்பட்டு வருகின்றன. மனித ஆற்றலுக்குத் துணை செய்யும் நீராவிச் சக்தி, மின்சாரச் சக்தி முதலியன பொருள் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. ஆகவே பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தொழி லாளர் மட்டுமே காரணர் அல்லர். அவர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ள இயந்திரங்களும், அவை இயங்குதற்குக் காரணமான பிற சக்தி களும் காரணமாகும். தொழிலாளர் ஆற்றலும் இயந்திர வலியும் இயற் கைச் சக்திகளின் ஆற்றலுமே **மூலதனம்** (Capital) என்று சொல் லப்படும்.

மனிதனது உழைப்பாற்றல் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற் சிறப்பிடம் பெறுகிறது. ஆயின், அவ்வாற்றலைப் பயன்படுத்த உதவும் இயற்கை வசதிகள் இல்லை எனின், உழைப்பாற்றல் மட்டும் இருந்தும் பயன்படாது. ஆகவே, உழைப்பாற்றலைப் பயன்படுத்த நாட்டில் பல துறைகள் இருத்தல் வேண்டும். உழைப்பு, மூலதனம், பொருளா தாரத் துறைகள் முதலியன நாட்டின் செல்வத்தை வளருமாறு செய் கின்றன. ஆதலின், உற்பத்திப் பெருக்கம் என்பது உழைப்பு, உழைப் புத் துறைகள், இயந்திர சாதனங்கள் என்பவற்றைப் பொறுத் துள்ளது.

இயந்திரங்கள் இயற்கைச் சக்திகளை மனிதனுக்கு அடிமையாக்கி விட்டன. இயந்திரம் பல ஆட்களின் வேலையை ஒருவர் மேற்பார்வை யிற் செய்கின்றது; மேலும், பலர் சேர்ந்தும் செய்ய முடியாத வேலை களையும் செய்து முடிக்கின்றது; ஒரு வேலையைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் விரைவாய்ச் செய்கிறது. இதுவே இயந்திரத்தின் உற்பத்தி ஆற்றலுக்கு முக்கிய காரணம்.

இக்கால நாகரிகம் இயந்திர ஆற்றலை அடிப்படையாய்க் கொண் டது. இயந்திரம் சமூக நன்மைக்கு உதவியாயிருக்க வேண்டும். உழைப்பாளியின் நலன், பெருமை ஆகிய இரண்டும் பாதுகாக்கப்படல் வேண்டும். உற்பத்திப் பெருக்கத்துக்குத் தேவையான தொழில் துறைகளையும் கருவிகளையும் ஏற்பாடு செய்வதற்கு மூலதனம் தேவை. இந்த மூலதனம் தொழில் துறைகளை வளர்க்கிறது. ஆதலின் பொருள் உற்பத்தியின் நன்மைகளில் அதற்கு ஒரு பங்குண்டு. உற்பத்தியின் பயனைக் கீழ்க்காணும் நான்கு வகையாகப் பங்கிடல் வேண்டும்: (1)

தேய்மானம், (2) நிருவாகம், (3) மூலதனச் சேமிப்பு, (4) தொழிலாளர் ஊதியம்.

ஒரு நாட்டின் செல்வநிலைக்கும் மக்கள் தொகைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மக்கள் தொகை மிகக்குறைவாக இருப்பின் செல்வ உற்பத்தி தடைப்படும். நாட்டின் செல்வ உற்பத்தியினுல் காப்பாற்றக் கூடும் அளவுக்கு மிகுந்த மக்கள் இருத்தலும் கெடுதலேயாகும். இவ்வாறு மக்கள் தொகை பொருளாதார நலனைப் பாதிக்கிறது.

செல்வத்தைப் பெருக்கி, அதனை நேரிய முறையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒருநாட்டின் செல்வத்தை ஒரு பெரிய ஏரிக்கும் அதன் சமூக, பொருளாதாரத் துறைகளைப் பெரிய வாய்க்கால்களுக்கும் ஒப்பிடலாம். நாட்டின் செல்வம் பிரிந்து போகும் பெரிய வாய்க்கால்கள் பின் வருவன: (1) குடியானவர் ஊதியம், (2) தொழிலாளர் ஊதியம், (3) வணிகர் வருமானம், (4) பலதுறை அலுவலர் பெறும் ஊதியம், (5) குத்தகை, வட்டி எனப் பலவாறு முதலுக்குக் கிடைக்கும் ஊதியம் முதலியன.

முதலாளித்துவ முறையில், சமூகத்தின் செல்வத்தில் ஒரு பெரும் பகுதியை ஒரு சிறு கூட்டத்தார் எடுத்துக் கொள்கின்றனர். பெரும்பாலர்க்குச் சிறிய பகுதி தரப்படுகிறது. இதனுற்றான் குழப்பமும் பூசலும் தொழிலாளர் வேலைநிறுத்தங்களும் உண்டாகின்றன. நாட்டில் எல்லோருக்கும் நல்வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் இன்றியமையாதது. ஒரு நாட்டின் பொருளாதார நிலையை, அதன் மக்களின் சராசரி வருமானத்தால் குறிப்பிடலாம். அந்த நாட்டில் உற்பத்தியாகும் விவசாயப்பொருள்கள், இயந்திரசாலைச் சரக்குகள் இவற்றை மதிப்பிட்டு, தர சமூக வேலைகளையும் மதிப்பிட்டு மொத்தம் கூட்டி மக்கள் தொகையால் வகுத்துவரும் ஈவுக்கு இந்தப் பெயர் தரப்படுகிறது. இதற்கும் மக்களது வாழ்க்கை நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவற்றினை உயர்த்தலே நாட்டின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். இப்பொழுது உள்ளவாறு சொத்தையோ, பிறப்பையோ, செல்வாக்கையோ மனத்திற் கொண்டு செல்வப் பிரிவினை செய்வது ஒழுங்காகாது, அவரவர் அறிவுக்கும் உழைப்பின் தகுதிக்கும் ஏற்றவாறு, ஆனுல் எல்லோரும் சுகவாழ்வு வாழத்தக்க முறையில் ஊதியம் கொடுக்கப்பட வேண்டுவது இன்றியமையாதது. இந்த நாட்டிற் பிறந்த எந்தத் தனிமனிதனும் வீடின்றியோ - உணவின்றியோ - உடை

யின்றியோ-வேலையின்றியோ - போதிய வாழ்க்கை வசதிகள் இன்றியோ வாட்டமுறுதல் கூடாது. இந்த உயிர் நாடி எண்ணத்தை உள்ளத்திற் பதித்து அரசாங்கமும் பொருளாதார அறிஞர்களும் நாட்டிற்கு நலம் விளைக்கும் திட்டத்தை வகுத்தல் வேண்டும்; வகுத்து அதனை நடை முறையில் நடத்திவைத்தல் வேண்டும்.

சீன நாட்டுத்தலைவருட் சிறந்த **சன்யாட் சென்,** மக்களுக்கு இருக்கவேண்டும் மூன்று கொள்கைகளை வகுத்தார். அவை (1) நாட்டுப்பற்று, (2) குடியரசு, (3) வாழ்க்கை வசதி என்பன. "மனித உணர்ச்சி மதிக்கப் படவேண்டும். மனிதனுக்காக நாடு; மனிதனுக்காக அரசு. சுருங்கக் கூறின், மனிதவாழ்க்கைக்கே எல்லாம். எனவே, மனிதனது வாழ்க்கை வசதியோடு நடைபெறல் வேண்டும். அவ்வசதியை ஏற்படுத்துவதுதான் அரசின் கடமை. அரசு தன் கடமையைச் செய்யத் தவறினால், அறிவுள்ள குடிகள் தாங்களாகவே தங்கள் வாழ்க்கை வசதியை அமைத்துக்கொள்வார்கள். அத்தகைய நிலை ஏற்படு முன், அரசு குடிகளுக்கு நலன் புரிதல் வேண்டும்," என்று உருக்கமாகப் பேசிய பேச்சுக் கவனிக்கத் தக்கது.

இன்று இந்தியாவில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை உணவு உற்பத்திக்கென்று செலவிடுகிறது. ஆயின் நமது உணவு உற்பத்தி பெருகி, இறக்குமதியின் மதிப்புக் குறைந்ததாகத் தெரியவில்லை. உணவு இறக்குமதியால் நமக்குள்ள வெளிநாட்டு நாணயச் சொத்தும் நமது கையிருப்புப் பணமும் பெரிய அளவில் சுருங்கிவிட்டன. பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்க நாம் செலவு செய்துள்ள பெருந்தொகை நம்மிடம் இருந்திருப்பின், நாட்டின் கைத்தொழில் வளர்ச்சித் திட்டங்களை நடை முறையிற் கொணர்ந்திருக்கலாம். நமது தேவைக்குத் தகுந்த அளவு உணவு உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பற்றுக் குறையை விரைவில் நீக்க உழைக்கவேண்டும். நாம் ஒவ்வோர் அடி நிலத்தையும் பசிய வயலாக்க முற்படல் வேண்டும்; பெருவாரியான நீர்த்தேக்கத் திட்டங்களைக் கவனித்து நிறைவேற்ற வேண்டும். அவற்றால் உழவுக்குப் பாதுகாப்பு உண்டாதலுடன் உற்பத்தியும் பெருக வழியுண்டு. இந்த நீர்த் தேக்கங்களால் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு சிற்றூர்களிலும் சிறிய கைத்தொழில்கள் பலவற்றைத் துவக்கி நடத்தலாம். பயிர்த்தொழில் நிலைமை உயரவேண்டுமாயின்

உழவர்க்குப் பயிர்த்தொழில் பற்றிய கலைகளைக் கற்பிக்கவேண்டும்; உற்பத்திக்கான முயற்சிகளையும், காலத்தைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளும் முறையையும் அவர்கட்கு அறிவுறுத்த வேண்டும். விஞ்ஞானத் துறையில் வேளாண்மை நடைபெறத் திட்டம் வேண்டும்.

நாம் முதலில் பணத்தைக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களை வாங்கவேண்டும்; அவற்றைப் பயன் படுத்தும் அறிவு பெறவேண்டும்; ஒவ்வொருவரும் சிக்கன வாழ்க்கை நடத்தி மிகுந்த பொருளைச் சேமித்துக் கைத்தொழில் - உழவுத் தொழில்கட்கு மூல தனமாக உதவ வேண்டும். நம் நாட்டுச் செல்வம் நம் நாட்டிலேயே உலவத் தக்கமுறையில் நம் நாட்டுப் பொருள்களையே - வாழ்க்கைக்குத் தேவையானவற்றை - வாங்கவேண்டும்; ஆயின், நாட்டு முன்னேற்றத்துக்கான வழியில் பொருளைச் செலவிட வேண்டும்; ஆலைத் தொழில் ஆராய்ச்சியைச் செய்ய முற்பட வேண்டும்; இந்நாட்டிற் பிறந்த முதலாளி - தொழிலாளி - அரசாங்க அலுவலர் - உழவர் முதலிய அனைவரும் நாட்டு நலனை - நன்கு கருதித் தத்தம் கடமையைத் தவறாது செய்தல் வேண்டும். ஒருவரை ஒருவர் சுரண்ட முற்படுதல் நாட்டிற்குப் பெருங்கேடு விளைப்பதாகும். நாட்டில் வறுமை ஒழிய மூலதனம் பெருக வேண்டும்; பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் வளம் பெறவேண்டும். இவற்றுக்கு அரசாங்கமும் குடிமக்களும் மனமொத்து உழைக்க வேண்டும். முடியாதது உண்டா?

I பொருள் தருக:—

ஆய்ந்து, ஊதியம், அங்கை, குடியரசு.

II வாக்கியங்களில் அமைக்க:—

நன்குணர்ந்த, அங்கைக்கனி. ஒப்படைக்கப்பட்டுள்ள, அத்தகைய, வேளாண்மை.

III விடை எழுதுக:-

1. பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம் யாது?
2. மோட்டார்ப் பேரரசர் யார்?

3. செல்வத்தின் இரகசியம் யாது?

4. எவை மூலதனம் எனப்படும்?

5. நாட்டின் செல்வத்தை வளரச் செய்பவை எவை?

6. இயந்திரங்களால் ஏற்பட்ட நன்மைகள் எவை?

7. உற்பத்தியின் பயனை எவ்வாறு பங்கிடவேண்டும்?

8. நாட்டின் செல்வம் எவ்வழிகளில் செலவிடப்படுகிறது?

9. தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்குக் காரணமென்ன?

10. நாட்டிற்கு நலம் விளைக்கும் திட்டங்களை வகுப்போர் கவனிக்க வேண்டியவை எவை?

11. சன்யாட்சென் மக்களுக்கென வகுத்த மூன்று கொள்கைகள் எவை?

12. அரசின் கடமை யாது?

13. உணவுப் பஞ்சத்தைப் போக்கும் வழிகள் யாவை?

14. நம் நாடு நலனுறச் செய்யவேண்டியவை யாவை?

# 8. கிராமச் சிறு கைத்தொழில்

( ச. முத்தையா அவர்கள் M. A. )

நம் நாட்டினரிடையே 'எல்லாம் கர்ம பலன்' என்று முடிவு கட்டும் குணம் மிகவும் வலுத்து நிற்கின்றது; 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்,' என்ற வாழ்க்கைத் தத்துவமே தலையெடுத்து உலவுகிறது. 'எல்லாம் அவன் செயல்,' என்று எந்தக் காரியத்திற்கும் வியாக்கியானம் கொடுப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. கஷ்டப்படுவோர் அக்கஷ்ட நிவர்த்திக்கான முயற்சி செய்வதில்லை. அக்கஷ்டம் தலையெழுத்தின்படியாம் என்று அநேகர் சும்மா இருப்பது கண்கூடு. இப்படிப்பட்ட போலி வேதாந்தம் பேசிப்பேசி நம்மவர் பலர் விண் பொழுது போக்குகின்றனர். அவர்கள் தங்கள் பொருள் நிலையை விருத்தி செய்ய விரும்புகிறார்களில்லை; அதற்காக முனைந்து முயற்சி செய்கிறார்களில்லை. நகரங்களிலிருக்கும் மாந்தர்களைவிடக் கிராமவாசிகள் இந்த விஷயத்தில் பெரிய குற்றவாளிகளாய் இருக்கிறார்கள்.

கிராமவாசிகள் ஓர் ஆண்டில் சுமார் 4 அல்லது 6 மாதங்களே வேலை செய்கிறார்கள். தக்க இயந்திரங்களின் உதவியைக் கொண்டு சாஸ்திரீயமான முறையில் அதே வேலையை 40 நாட்களுக்குள் செய்துவிடலாமென்று அறிஞர் கூறுகின்றனர். நல்ல நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களிலே வருஷத்துக்கு 150 முதல் 270 நாட்கள் வரையில் வீண் பொழுது போக்க வேண்டியிருக்கிறது எனக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் சிலேட்டர் என்பார், 'வருஷத்தில் பன்னிரண்டில் ஐந்து பங்கு (5/12) காலத்தைத் தான் விவசாயி பயனுள்ளதாகச் செலவிடுகிறான்,' எனக்குறிப்பிடுகிறார். அரசாங்க விவசாயக் குழுவின் அங்கத்தினர், "பொதுவாகக் கூறுமிடத்து விவசாயி மிகக் குறைந்தபட்சம் இரண்டு முதல் நான்கு மாதம் வீண்பொழுது போக்குகிறான்,' என அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். பம்பாய் டெக்காணைப்பற்றி எழுதியுள்ள திரு. கீட்டிஞ்சு, 'விவசாயி சாதாரணமாக 180 முதல் 190 நாள்கட்குமேல் வேலை செய்யக்காணேன்,' என எழுதியுள்ளார். திரு. கால்வர்ட் என்பவர், 'பஞ்சாபு மாகாணத்தில் சுமார் 150 நாள்கட்கு மேல் விவசாயிகட்கு வேலை இல்லை,' எனக் கண்டிருக்கிறார். ஐக்கிய

மாகாண பாங்கு விசாரணைக் கமிட்டியார், 'விவசாயிகட்கு 200 நாள் கட்கு மேல் வேலை இல்லை,' எனக் கூறியுள்ளார்.

எனவே, வேலை செய்த நாட்கள் தவிர ஏனைய நாட்களை விவசாயி கள் வீணேகழிக்கின்றார்கள். விவசாயத்தில் மாத்திரம் போதிய வரும் படி கிடைப்பது அரிதாயிருக்கிறது. எனவே, திரு. டார்லிங்கு என்பார் கூறியுள்ளபடி விவசாயி கடனுண்டு வாழாமல், வறுமையால் வருந்தாமல் இருக்கவேண்டுமானால், ஏதேனுமோர் உதவிக் கைத் தொழிலைக் கைக்கொள்ளவேண்டும். ஐரோப்பிய நாடுகளில், முக்கிய மாகப் பிரான்சு, ஜெர்மனி, இட்டாலித் தேசங்களில், ஆடுமாடு போஷணை செய்தல், பன்றி வளர்த்தல், கோழியைப் பெருக்கல் முத லியவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும். அவை நல்ல பயனையும் தருகின்றன.

இந்திய விவசாயிகட்கு ஏற்றனவாக, அவர்களின் விவசாய முயற் சிக்கு இடையூறு இல்லாதனவாக, வருவாய் தரத்தக்கனவாக, சில கைத்தொழில்களை ஏற்படுத்த வேண்டும். சர் ஆல்பிரட் சேடர்டன் (Sir Alfred Chatterton) கூறியுள்ளது போல இந்தியாவில் அநேக சிறு கைத்தொழில்கள் விருத்தியாவதற்கு ஏற்ற வசதிகள் உள் ளன. கடந்த நூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் எல்லா இடங் களும் எல்லாக் கைத்தொழிலிலும் சிறந்திருந்தன. கிழக்கிந்தியக் கம் பெனியாரின் ஆதரவில் டாக்டர் புக்கனன் (Dr. Buchanan) என் பவர் வட இந்தியா தென்னிந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கைத்தொழில்களின் நிலையைப்பற்றி விவரமாய் எழுதியிருக்கிறார். அக்குறிப்புகள் 1838-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அவற்றைப் பார்த்தால் நாடெங்கும் எல்லாத் தொழில்களும் செய்யப்பட்டன என் பதை அறியலாம். குறித்த சில ஜாதியாரே குறித்த தொழில்களைச் செய்யலாம் என்ற கட்டுப்பாடு அவ்வளவாக அப்போதில்லை. உதா ரணமாகப் பார்ப்பனப் பெண்டிர் தவிர மற்ற எல்லாச் சாதிப் பெண் களும் நூல் நூற்பதையும், பட்டு இழைப்பதையும், தமது வேலையாக வீடுகளில் செய்து வந்தார்களென அவர் குறிப்பிட்டிருக்கிறார். அத் தொழில்களெல்லாம் அரசினர் நோக்கு முறை வேறுபாடுகளாலும், மில்களின் போட்டியாலும் அழிந்தொழிந்து போயின; வறுமை மிகுந் தது. எனவே, அக்கைத்தொழில்களைப் புத்துயிர் பெற்று எழுந்துல வும்படிச் செய்ய வேண்டுவது இன்றியமையாதது.

கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும் போதும், துவக்கும் போதும் சில விஷயங்கள் கவனிக்கற்பாலன. சிறு கைத்தொழிற்சாலைகளில் உண்டாக்கப்படும் பொருள்கள் மிக்க பிரயோஜனமானவையாக இருக்க வேண்டும். திரு. உல்பு (Mr. Wolf) என்பவர், "இங்கிலாந்தில், இந்தியப் பொருள்கள் ஜப்பான் பொருள்களைப்போல அவ்வளவு நன்ருக விற்பதில்லை. இந்தியப் பொருள்கள் அழகியவாகவும் செவ்வையாகவும் செய்யப்பட்டிருப்பினும், ஜப்பான் பொருள்களைப்போல அத்துணை உபயோகமானவையாக இல்லை" எனக் குறிப்பிட்டிருக்கிருர். எனவே, கிராமங்களில் செய்யப்படும் பொருள்கள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கிராமங்களில் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் பெரும்பாலான பாகம் தொழிலாளியின் உழைப்பினுல் ஏற்பட்டதாய் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட பொருள்களை உண்டாக்கின்றருன் தொழிலாளிக்குத் தக்க ஊதியம் கிடைக்கும். அந்தந்த இடத்தில் எந்த மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கின்றனவோ, அவற்றிற்கேற்ற பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும். இங்குக் குறிப்பிட்டவைகளில் இரண்டாந் தன்மையைப் பெற்றுள்ளவை கண்ணுடி வளையல் தொழில் போன்றவை.

மூன்ருவதாகக் கவனிக்கவேண்டிய விஷயம் கிராமங்களில் மிக அழகிய, தனிப்பட்ட மனிதர் விரும்பத்தக்க, பொருள்களையே உற்பத்தி செய்யவேண்டுமென்பதே. சாதாரணமான, பெருவாரியான மக்கள் உபயோகிக்கிற, ஒரே மாதிரியான பொருள்களை இயந்திர உதவியால் அபாரமாக உற்பத்தி செய்து குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருள்களைக் கிராமத்தினர் உற்பத்திசெய்ய முயலுவதில் பயனில்லை. விசேஷத் தன்மையதாய், ஒன்றைப் போல மற்ரென்றில்லாததாய் தனவந்தர் விரும்பக் கூடியதாய் உள்ள பொருள்களைக் கிராமங்களில் உற்பத்தி செய்தால், பெரும் பயன் கிட்டும். உதாரணமாக, இரத்தினக் கம்பளத்தை எடுத்துக் கொள்வோம். நெய்வோன் திறமைக்கேற்றவாறு பல வேறு விதமான அழகிய கம்பளங்கள் நெய்யலாம் அல்லவா?

சமீப காலம் வரையில் நீராவியையே இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகித்தனர். இப்போதோ, மின்சார சக்தியின் உதவியால் கிராமங்களில் சிறு கைத்தொழிற்சாலைகள் எளிதில் ஏற்படுத்தலாம்.

கிராமங்களில் மிக முக்கியமாக வளர்க்கக்கூடிய கைத்தொழில் ஆடுமாடு சம்ரக்ஷணை. பால், பாலேடு வியாபாரத்தில் டென்மார்க்கு தேசத்தினர் மிக்க இலாபம் அடைகின்றனர். அவர்களைப்போல நாமும் நல்ல பசுக்களைச் செவ்வையாகப் போஷித்து, திரண்ட பாலைப் பக்கத்திலுள்ள பட்டினங்கட்கு அனுப்பலாம். வெண்ணெயை டின்களில் அடைத்து, நீண்ட தூரத்திலுள்ள இடங்கட்குக் கூட அனுப்பலாம். அம்மிருகங்களின் சாணம் முதலியவை தக்க எரு ஆகும். திரு. கீட்டிஞ்சு என்பவர், விவசாயிகட்கு இதுவே மிகச் சிறந்த தொழிலாகும் எனக் கூறுகிறார்.

'கோழி வளர்த்தல்' நல்ல தொழில். வற்றிய உடம்புடன் ஊர் முழுதும் திரிந்து வரும்படி கோழிகளை வளர்த்தல் அறிவுடைமையன்று. கோழிகட்கெனக் கூண்டுகள் தயாரித்து, நல்ல போஷணையில் வைத்து, நல்ல ஜாதிக் கோழிகள் வளர்த்தால், முட்டைகளைப் பக்கத்து ஊரிலோ அல்லது சற்றுத் தூரத்தில் உள்ள ஊரிலோ விற்று நல்ல ஊதியம் பெறக் கூடும்.

'தேனீ வளர்த்தல்' இலாபகரமான ஒரு தொழில். தேனீக்கட்கென நல்ல கூண்டுகள் தயாரித்து, நல்ல பூச்சிகளை விட்டு விட்டால், நிறையத் தேனைப் பெறலாம். சென்னையிலுள்ள கோகுலத்தாரும், சென்னை விவசாய டிபார்ட்மென்டாரும் இதைப்பற்றிய முழுவிவரங்களையும் மகிழ்வுடன் தெரிவிப்பார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய சிறு கருவிகளை ஆங்காங்குச் சிறு தொழிற்சாலைகளில் கிராமவாசிகள் செய்ய முயலவேண்டும். அப்போது தொலை தூரத்திலிருந்து கொண்டுவரும் தூக்குக் கூலி இல்லாது போகும்; நமது இஷ்டப்படி வேண்டிய கருவிகளைச் செய்து கொள்ளலாம்.

'பட்டுப் பூச்சி வளர்த்தல்' மிக நல்ல கைத்தொழிலே. ஆனால், அதை எல்லா விடத்திலும் செய்யமுடியாது. சீதோஷ்ண ஸ்திதி முதலியவை ஏற்றவையாக இருக்கு மிடங்களிற்றான் அத்தொழிலைச் செய்ய முடியும்.

'பூ, பழத் தோட்டங்கள் வைத்தல்' மிகப் பிரயோசனகரமானது. பல இடங்களில் காய் கறிகளைப் பயிராக்குவதில்லை; இனிய பல பழங்களை உண்டாக்குவதில்லை; அழகிய மணமுடைய பூச்செடிகளை வளர்ப்பதில்லை. இந்தத் துறையில் கிராமவாசிகள் முயன்றால், நல்ல இலாபம் பெறலாம்.

இவையல்லாமல், குறிப்பிட்டத்தக்க சிறு கைத்தொழில்கள் எத்தனையோ உள. சரிகை நைத்தல், துணிகளில் பூ வேலை செய்தல், அரக்கு வேலை செய்தல், நெட்டி வேலை செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், மூங்கில் பிரம்பு சாமான்கள் செய்தல், கயிறு திரித்தல், பின்னல் வேலைசெய்தல், பீடி, சுருட்டு, சிகரெட்டுச் செய்தல், கண்ணாடி வளையல் செய்தல், மரச் சாமான்கள் செய்தல், கம்பளி ஜமக்காளம் நெய்தல், மா அரைத்தல், நெல் குற்றல், எண்ணெய் ஆட்டல், பழங்களையும் பழங்களாலான பண்டங்களையும் டின்களிலடைத்து அனுப்பி வியாபாரஞ் செய்தல், மண் பாண்டங்கள் செய்தல், தாவரப் பொருள்களிலிருந்து சாயம் இங்கி வர்ணம் முதலிய பொருள்களை உற்பத்தி செய்தல், பொத்தான்கள் செய்தல், பென்சில் பேனாக்கட்டை முதலியன செய்தல், எனாமல் சாமான்கள் செய்தல், சோப்பு வாசனைத் திரவியங்களைச் செய்தல், சர்க்கரை செய்தல், கத்தி முதலிய சாமான்கள் செய்தல், தீக் குச்சி செய்தல், தோல் சாமான்கள் செய்தல், பனியன் கால் மேல்ஜோடு முதலியவைகளைப் பின்னல், காகிதஞ் செய்தல், பிரஷ் செய்தல் (Brush Making) முதலிய பலவாகும். ஒவ்வொரு தொழிலையும் பற்றிய குறிப்புகளையும் இங்கே விரிவாக எழுதுவதற்கிடமில்லை.

எனவே, கிராமவாசிகள், தங்கள் நேரத்தை வீணாக்காது, பல துறைகளில் புகுந்து பல தொழில் மூலமாகவும் பொருள் விருத்தி செய்தால், இல்லாமை இல்லாததாகி விடும்.

I பொருள் எழுதுக:--

வியாக்கியானம், முனைந்து.

II வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக :—

வாழ்க்கைத் தத்துவம், உயிர்ப்பிக்கும் போது.

III. விடை எழுதுக:—

1. கிராம வாசிகள் எந்த விஷயத்தில் பெருங்குற்றவாளிகளாய் இருக்கிறார்கள் ?
2. கிராமவாசிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலையில்லை என்பது எவ்வாறு விளங்குகிறது ?
3. எவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும் ?
4. டாக்டர் புக்கனன் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் யாவை ?
5. கைத்தொழிலகளை உயிர்ப்பிக்கும்போது கவனிக்க வேண்டியவை எவை ?
6. கிராமவாசிகளுக்குரிய கைத்தொழில்கள் எவை ?

# 9. நிலக்கரி

[திருவாளர் R. K. விசுவநாதன் அவர்கள், எம். ஏ.]

சுமார் மூப்பது கோடி ஆண்டுகளுக்கு முன்னர், நிலத்துள் புதைத்து வைத்த பொருள் நிலக்கரி. இதை யார் புதைத்து வைத்தார்கள்? இது எப்படி உண்டாயிற்று? என்பவை பற்றிய உண்மை நெடுநாள்வரை மறைபொருளாகவே இருந்து வந்தது. அண்மையில் இதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். கதிரவனுடைய ஆற்றலைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் இந்த நிலக்கரிக்கு அடிப்படைப் பொருள் மரங்களும் மற்றத்தாவரங்களுமே. உலகில் பல இடங்களில் இருந்த பெரிய காடுகள் அழிந்து மரங்கள் விழ, காலப் போக்கில் அவை மண்ணால் மூடப்பட்டிருக்க வேண்டும். நிலப்பரப்பின் மேடு பள்ளங்கள் மாறும்போது இவை யனைத்தும் நிலத்திற்குள் ஆழப் புதைந்திருக்க வேண்டும். மேலும் மேலும் தாவரங்கள் நசிக்கும் போது அவற்றிற்கும் இத்தகைய நிலையே ஏற்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு கோடிக் கணக்கான ஆண்டுகளாக நிலத்தின் வெப்பத்துக்கும் இறுக்கத்துக்கும் (Pressure) உள்ளாகி வந்ததன் பயனாக இத்தாவரங்களெல்லாம் பல மாறுதல்கள் அடைந்து நிலக்கரியாக மாறி இருக்கின்றன என்று நிலக்கரி ஏற்பட்டதற்கு விஞ்ஞானிகள் காரணம் கூறுகிறார்கள். சில கரிச் சுரங்கங்களில் இலை பழம் முதலியவற்றின் உருவங்களை யொத்த கரித்துண்டுகள் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். மற்றும் நிலக்கரியைச் சோதிக்கும் போது தாவர இனத்துக்குரிய குழல் நரம்பு முதலியவை எல்லாம் நன்கு புலனாகின்றன. கண்ணாடிக் குடுவைக்குள் மருந்தைப் பேணி வைத்திருப்பது போல நிலமடந்தை கதிரவனின் ஆற்றலை இதில் அடைத்து வைத்திருக்கிறாள். நிலக்கரிப் புதையல் முதலில் ஆங்கிலேயருக்குத்தான் கிடைத்தது. அவர்கள் இப்புதையலை வைத்துக்கொண்டு இத்துணைக் காலம் உலகத்தில் ஒரு பெரிய வல்லரசாக ஆட்சி செலுத்தி வந்தார்கள்.

நிலக்கரியை நிலத்திலிருந்து வெட்டி எடுப்பது எளிதான செயலன்று. நிலத்தினடியில் எந்த இடத்தில் நிலக்கரி இருக்கும் என்று ஐயுறுகிறார்களோ அங்கு முதலில் துளைத்துச் சோதித்துப் பார்ப்பார்கள். பிறகு கிணறுகள் இறக்குவது போல நிலத்தைத் தோண்டிக் கொண்டே போய்ப் பக்கத்திலுள்ள மண் சரியாமல் இருப்பதற்குத் தேக்குமரம் அல்லது இரும்புத் தகடு இவற்றைக் கொண்டு சுவர்கள்

அமைப்பார்கள். தோண்ட வேண்டிய இடம் பாறை நிலமாக இருக்கு மானால் வெடி மருந்தைப் பயன் படுத்திப் பாறையை உடைப்பார்கள். சதுப்பு நிலமாக இருந்தால் தண்ணீர் பிறிட்டுக்கொண்டு வரும். அகன்ற அவ்விடங்களில் தோண்டும் போது சிறிது ஆழம் சென்றவுடன் சிமிட்டியைச் (Ferro Concrete) செலுத்தி, பக்கங்களைக் கெட்டிப் படுத்திக்கொண்டு தான் மேலும் தோண்டுவார்கள் ; ஒரு மைல் ஆழம் வரை தோண்டப்பட்ட சுரங்கங்களும் உண்டு ; தோண்டிய பின் அடியி லிருந்து நாலாப்பக்கங்களிலும் செல்லுவதற்கு வழியை வைப்பார்கள். சுமார் ஒரு சதுர மைல் பரப்பு வரை சென்று கரியை வெட்டி எடுப்ப துண்டு. கரியைக் கையினால்தான் வெட்டி எடுக்க வேண்டும் ; கூடிய வரைபெரிய கட்டிகளாகவே வெட்டி எடுப்பார்கள். சுரங்கத் தொழில் தான் பிற தொழில்கள் எல்லாவற்றையும் விட இடர் நிறைந்தது. தொழி லாளிகளின் உடல் நலம் சுரங்கத்தில் விரைவில் கெட்டுவிடும். இச்சுரங் கங்களில் மூச்சு விடுவதற்கு நல்ல காற்று சுரங்கத்தினுள் செலுத்தப் படும், உள்ளிருக்கும் கெட்ட காற்று வெளியேறிச் செல்லுவதற்கும் வழி செய்யப்பட்டிருக்கும். சுரங்கத்துக்கு அடியில் வெளிச்சமும் கிடையாது. விளக்கை வைத்துக்கொண்டுதான் வேலை செய்ய வேண்டும். இதனால் தீப்பற்றுதல் எளிதில் ஏற்பட்டுப் பலர் மாண்டு வந்தார்கள். இச்சுரங்கங்களில் Mathane என்ற வாயு எப்பொழு தும் இருந்து கொண்டிருக்கும். இது விரைவில் நெருப்புப் பிடித்துப் பெரிய வெடியை உண்டாக்கும் தன்மை உடையது. இதனால் பலர் மாண்டார்கள். இவ்விடரை நீக்கியவர் 'டேவி' என்ற விஞ்ஞானி. இவர் புதுவகையாக ஒரு விளக்கை அமைத்து இவ்விடர் ஏற்படாத வாறு செய்தார். இவர் அமைத்த விளக்கில் ஓர் உலோகக் கம்பி சல்லடைக் குழாய் வடிவத்தில் திரியைச் சுற்றி நிற்கும். இச்சல்லடைக் கம்பியின் வெப்பம் கடத்தும் திறனால் (Heat Conductivity) வெளியிலுள்ள Methane வாயு வெடிப்பதற்கு வேண்டிய அளவு சூடேறுவதில்லை.

நிலக்கரியில் பலவகை உண்டு. அவற்றில் பிட் (Peat) என்று சொல்லப்படும் இளங்கரி, லிக்னைட் (Lignite) என்று சொல்லப்படும் பழுப்புக்கரி, பசைக்கரி (Bituminous Coal) கெட்டிக்கரி (Anthracite Coal) என்ற வகைகள் முக்கியமானவை. இவை அவற்றி லுள்ள கார்பன் (Carbon) பிராண வாயுக் (Oxygen) களின் விகிதங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன. நிலக்கரியில் எழுபது

முதற்கொண்டு தொண்ணூற்றிரண்டு சதம் வரை கார்பன் இருக்கும். பிராணவாயு சுமார் நான்கு சதம் முதற்கொண்டு பதினைந்து சதம் வரை இருக்கும். இவ்விரண்டையுந்தவிர, கந்தகம், வளிரம் (Nitrogen) இவையும் சிறிதளவுக்கு நிலக்கரியில் இருக்கும்; சிறிது ஈரமும் சாம்பலும் கலந்திருக்கும். நிலக்கரி உண்டாகிய காலத்தைப் பொறுத்து இவற்றின் அளவு எல்லாம் கரிக்குக்கரி மாறுபடுகின்றன. ஈரம் சாம்பல் இவற்றை நீக்கியபின்தான் நிலக்கரியின் மேல் கீழ் வகைகளை மதிப்பிடுவர். நிலக்கரியின் மதிப்பு அது கொடுக்கக் கூடிய சூட்டின் அளவைப் பொறுத்திருக்கிறது. ஒரு கிராம் நிறை தண்ணீரை ஒரு சென்டிகிரேடு உயர்த்துவதற்கு வேண்டிய சூட்டை அலகாகக் (Unit) கொண்டு பலவகைக் கரிகளின் சூட்டினளவு (Calorific Value) அளக்கப்படும். ஒரு கிராம் நிறையுடைய உயர்ந்த ரக நிலக்கரி சுமார் ஒன்பதினாயிரம் கலோரி (Calorie) சூட்டைத் தரும்.

நிலக்கரியை நீராவி எஞ்சின்களில் காற்றுப்பட அனல் மூட்டுவார்கள். இவ்வாறு நிலக்கரியை எரிப்பதில் சேதம் Temperature சீராக இராது. ஏனெனில் கரி எரிய மேலும் கரியைப் போட வேண்டியிருப்பதால் வெப்பம் உயர்ந்துகொண்டும் குறைந்து கொண்டும் இருக்கும். மற்றும் இதில் புகைத் தொல்லை வேறு உண்டு. புகையினால் சுற்றிலுமுள்ள காற்றுக் கெட்டு விடும். பெரிய ஆலைகள் இருக்குமிடங்களில் இப்புகையினால் மூச்சுவிடுவதற்கு நல்லகாற்று கிடைப்பது அரிதாகிவிடும். இதனால் மக்களின் உடல் நலம் குன்றிவிடும். இவ்வாறு பயன்படுத்தாமல் நிலக்கரியைக் காற்றுப்படாமல் பெரிய பாத்திரங்களில் (Retorts) எரித்தால் ஒரு வாயு வெளிப்படும். இதற்கு நிலக்கரி வாயு (Coal gas) என்பது பெயர். இதை எரிய வைத்துப் பல விதங்களில் சூட்டைப் பயன் படுத்தலாம். வீடுகளில் அடுப்பு மூட்டிக் கொண்டு தொல்லைப்படாமல் இவ்வாயுவைப் பயன்படுத்திப் பெரிய நகரங்களில் மேனாட்டார்கள் சமையல் வேலையைச் செய்வது வழக்கம். மின்சார சக்தியைக் கொண்டு போவதைப் போல இந்நிலக்கரி வாயுவை ஓரிடத்தில் உற்பத்தி செய்து, அதைக் குழாய்களின் மூலமாக வீடுகளுக்குக் கொண்டு செல்வது வழக்கம். விளக்கேற்றுவதற்கும் இவ்வாயு பயன்படும். மேனாட்டில் தெருக்களில் மின்சார விளக்குகள் ஏற்படுவதற்கு முன் இவ் வாயுவைக் கொண்டுதான் விளக்கேற்றி வந்தார்கள். நம் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள ஆய்வுச் சாலைகளிலும் (Laboratories) இவ்வாயுவைக் கொண்டுதான்

புன்ஸன் அடுப்பு (Bunsen burner) என்னும் கருவி வேலை செய்கிறது. இதில் ஒரு பங்கு நிலக்கரி வாயுவும் இரண்டு முதல் மூன்று பங்கு வரை காற்றுஞ் சேர்ந்து எரியும்.

நிலக்கரியைக் காற்றுப்படாமல் எரிக்கும் போது நிலக்கரி வாயுவுடன் நீராவியும் தார் எண்ணெயும் (Tar) வெளிவரும். இவற்றை நீக்கிய பின்னர்தான் நிலக்கரி வாயு பயன் படுத்தப்படும். இவற்றை நீக்குவதற்கு வாயுவை இரும்புக் குழாய்களின் மூலமாகச் செலுத்திக் குழாய்கள் குளிர வைக்கப்படும். தாரும் நீராவியும் குளிர்ந்து குழாயில் தங்கிவிட நிலக்கரி வாயுமட்டும் வெளியேறிவிடும். எரித்த பாத்திரங்களில் தங்கி நிற்கும் சுட்ட நிலக்கரிக்கு Coke என்பது பெயர். இதை எரித்தால் அது புகையாமல் நின்று எரிந்து அதிக சூட்டைக் கொடுக்கும். சுட்டகரி மற்றொரு வழியிலும் பயன் படுகிறது. இரும்பைப் பண்படுத்தும்போது இதையும் சேர்த்துக் கொள்ளுவார்கள். இக்காலம் மோட்டார் வண்டிகளில் எண்ணெய்க்குப் பதிலாகப் உலைக் காற்று (Producer gas) என்ற வாயுவே பயன்பட்டு வருகிறது. இதுவும் சுட்ட கரியிலிருந்துதான் பெறப்படுகிறது. சாதாரணக் கரியும் பயன் படும். கரியை நன்றுகச் சூடு செய்துகொண்டு அதன்மீது காற்றுச் செலுத்தப்படும். அப்பொழுதுதான் இவ்வாயு வெளிப்படும். பெட்ரோலைக் காட்டிலும் இவ்வாயுவை மலிவாகப் பெறலாம். பதினறு பவுண்டு கரியிலிருந்து வெளிப்படும் வாயுவைக் கொண்டு ஒரு காலன் பெட்ரோல் செய்யும் வேலையைப் பெறலாம். பதினறு பவுண்டு கரியின் விலை ஒரு காலன் பெட்ரோலின் விலையைவிட மிகக்குறைவு. போர்க் காரணமாகப் பெட்ரோல் கிடைக்காததனல் இவ்வாயு பயன்படத் தொடங்கிய போதிலும் இனிப் பெட்ரோலுக்குப் பதிலாகப் பஸ் முதலிய பெரிய மோட்டார் வண்டிகளுக்கு இது தான் பயன் தரத்தக்கது என்று சொல்லுகிருர்கள். சூடு செய்த சுட்டகரியின்மீது காற்றைச் செலுத்தாமல் நீராவியைச் செலுத்தினல் அப்பொழுதும் ஒரு வாயு வெளிப்படுகிறது. இதற்கு நீர்-வாயு (Water gas) என்பது பெயர். இதையும் எரிய விட்டு மிகுந்த சூட்டைப் பெறலாம்.

நிலக்கரியை நன்றுகப் பொடி செய்து அப்பொடியைப் பயன் படுத்தும் எஞ்சின்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் வாயுவை எரியவைப்பதுபோலப் பொடியையும் எரியவைப்பதற்குத் தகுந்த அடுப்புகள் இருக்கும். காற்றின் உதவியைக் கொண்டு பெரிய

குழாய்களின் மூலமாக இப்பொடி உறிஞ்சப்பட்டு இவ்வடுப்புக்குள் செலுத்தப்படும். நிலக்கரியை அப்படியே எரியவைப்பதைவிட இம்முறையில் அதிக சூடு பெறப்படுகிறது. மற்றும் பொடியை எளிதில் பல இடங்களுக்கு ஏற்றி அனுப்பலாம்; எல்லாக்கரியையும் சேத மில்லாமல் பயன் படுத்தலாம். ஆனால் பெரிய ஆலைகளில் மட்டுந்தான் இம்முறையில் கரி பயன்பட்டு வருகின்றது.

இக்காலத்தில் நிலக்கரியைக் காட்டிலும் அதிலிருந்து பெறப்படும் தார் எண்ணெய்க்குத்தான் மிகுந்த மதிப்பு. இவ்வெண்ணெயில் உயர்ந்த பயனுள்ள பொருள்கள் பல இருக்கின்றன. இதை உணரா மல் முன்னாளில் ரோடு அமைப்பதற்குத் தார் பயன் படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது இதினின்று பலவகைச் சாயங்களையும், நறுமணப் பொருள்களையும், மருந்துகளையும், வெடி மருந்துகளையும் செய்து வருகிறார்கள். தார் எண்ணெயைக் காய்ச்சி வடித்தால் பல வெப்ப நிலைகளில் பல்வேறு பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பென்ஜீன் (Benzene), டோலுவின் (Toluene), பீனல் (Phenol), நாப்தலீன் (Napthalene), ஆன்திரசின் (Anthracene) என்பவை. முதலிரண்டும் திரவ நிலையில் பெறப்படுகின்றன. கடைசி மூன்றும் திட நிலையில் பெறப்படுகின்றன. பென்ஜீன் என்னும் பொருள்தான் சாயங்கள் செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் மூலப் பொருள். டோலுவின் என்னும் திரவப்பொருள்தான் வெடி மருந்துக்கு மூலப்பொருள். பீனல் என்பது தான் மருத்துவ நிலையங்களில் பயன்படும் கார்பாலிக் ஆசிட். இவை போல எல்லாப் பொருள்களும் பயன்படுகின்றன. எனவே நிலக்கரியின் பயன் முன்னிலும் பெருகி விட்டது.

I. பொருள் எழுதுக:—

தாவரங்கள், நசிக்குப்போது, இறுக்கம், வல்லரசு, அனல், ஆய்வுச் சாலை.

II. விடை கொடு.—

1. நிலக்கரி தோன்றக் காரணம் யாது ?
2. தாவரங்கள் நிலக்கரியாய் மாறின என்பதற்கு ஆதாரங்கள் யாவை?
3. சுரங்கத்தொழில் பிறதொழில்கள் எல்லாவற்றையும் விட இடர்நிறைந்த தென்பது எவ்வாறு பொருந்தும்?
4. டேவியின் விளக்கினால் ஏற்பட்ட நன்மை யாது ?
5. நிலக்கரியில் முக்கியமான வகைகள் எவை ?
6. நிலக்கரியின் மதிப்பு எதனைப் பொறுத்துள்ளது ?
7. நிலக்கரி வாயுவினால் ஏற்பட்ட நன்மைகள் எவை ?
8. தார் எண்ணெய் எவ்வாறு கிடைக்கிறது ?
9. அதிலிருந்து பெறப்படும் பொருள்கள் எவை ?

# 10. ஜேம்ஸ் குக்கின் முதற் கடற் செலவு

(வித்துவான் பு. செல்வராசன் அவர்கள்)

## சொசைடித் தீவுகள் - பெயர் வந்த காரணம்

1772-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13-ஆம் நாள் 'எண்டவர்' கப்பல் மூன்று மாதகாலம் வரை தங்கியிருந்த டாஹிட்டித் தீவினின்று புறப்பட்டது. சுதேசித் தலைவர்கள் கப்பலுக்குவந்து தங்கள் அன்பைத் தெரிவித்துப் பிரியா விடை தந்தனர்; பலர் கண்ணீர் உகுத்தனர். டுப்பியா தன் மகனுடன் கப்பலில் ஏறினர். அவர் தம் உறவினரையும் தாய் நாட்டையும் விட்டுப் போவதால் சுதேசிகள் பெரிதும் வருந்தி அவருக்கு விடை அளித்தனர்.

'எண்டவர்' கப்பல் டாஹிட்டித் தீவினின்று புறப்பட்டு, மூன்று நாள் பயணத்திற்குப்பின் **உவாஹீன்** என்னும் தீவை அடைந்தது; அதன் அரசனாகிய ஓரி என்பானுடன் நட்புக்கொண்டு, அங்கு நான்கு நாட்கள் தங்கினர். போதுமான அளவு உணவுப் பொருள்களை அங்குச் சேர்த்துக்கொண்டபின், உலியட்ட ஓடாஹா, போல போலா முதலிய தீவுகளைக் கண்டு அவற்றை எல்லாம் ஆங்கில ஆட்சிக்கு உட்படுத்தினர். அத்தீவுகள் டாஹிட்டி தீவிலிருந்து சுமார் 60 கல் தொலைவில் இருக்கின்றன. அக்காலத்தில் ஒவ்வொரு தீவிலும் ஒவ்வோர் அரசனும் வெவ்வேறு பழக்கவழக்கங்களுள்ள மக்களும் இருந்தனர். உலியட்ட தீவில் சுதேச ஆண்களும் பெண்களும் இக்காலப் பரத நாட்டியம் போன்றதொரு நாட்டியமும், நாடகமும், இக்கால வட இந்திய நடனம் போன்ற ஒரு வகை நடனமும் ஆடிக்காட்டினர்.

டாஹிட்டி, எய்மியோ, மெய்ட்ட, மையாவிட்டி, டிட்டுவாரோ, என்னும் ஐம்பெருந் தீவுகளும் பல சிறு தீவுகளும் ஒரே கூட்டமாக இருப்பதை முன்னிட்டு, இவை அனைத்தையும் சேர்த்து, ராயல் சொஸைடியின் நினைவாக **"சொஸைடித் தீவுகள்"** என்று ஜேம்ஸ் குக் பெயரிட்டார். இத்தீவுக் கூட்டத்தை முதலில் கண்டவர் ஸ்பெயின் நாட்டவரான பெர்னண்டோ டிகுவிரோஸ் என்பவரே. இவர் 1606-இல் இவற்றைக் கண்டு, 'சகிட்டோரியா தீவுகள்' என இவற்றிற்குப் பெயரிட்டார். இத்தீவுக் கூட்டத்தில் டாஹிட்டித் தீவே பெரியதாகும். அத்தீவின் அரசனுக்கு மற்றத் தீவுகளின் அரசர் பணிய வேண்டியவர்க

ளாவர். டாஹிட்டித் தீவை இதற்குப் பின்னர்க் காப்டன் வாலிஸ் என்பார் 1767-இல் கண்டு, மூன்றும் ஜார்ஜ் தீவு என அதற்குப் பெய ரிட்டிருந்தார்.

## சொஸைடித் தீவுகளின் மக்கள் வாழ்க்கை

டாஹிட்டி உட்பட்ட இத்தீவுகளின் மக்களைப் பற்றியும் அவர் களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஜேம்ஸ் குக் தம்முடைய நாட்குறிப்புச் சுவடியில் குறித்து வைத்திருந்த விவரங்கள் வருமாறு:

"இத்தீவுகளின் சுதேசிகள் ஐரோப்பியரினும் கம்பீரமான தோற் றம் உடையவர்கள். ஆண்கள் நெட்டையாய், வலிமை மிக்கோராய், அழகிய உடலமைப்புடன் பழுப்பு நிறம் உடையவர்களாய் விளங்கினர். பெண்கள், ஐரோப்பியப் பெண்கள் போன்ற வளர்ச்சி உடையவர்கள்; மஞ்சள் கலந்த வெண்மை நிறத்தினர்; பட்டுப் போன்ற மென்மை யான உடல் அமைப்புடையவர்கள்; அவர்களுடைய கண்கள் கவர்ச்சி மிக்கவை; பற்கள் வெண் முத்துக் கோவைபோல வரிசையாயுள் ளவை; கூந்தல்; நல்ல கறுப்பு நிறமுடையது. ஆண்களும் பெண் களும் சினமூட்டப் படாதவரை மிகவும் நல்லவர்கள்; ஆனால் கள வாடும் குணமுடையவர்கள்.

"பெண்கள் கூந்தலை நீள வளர்க்காமல் குட்டையாக வெட்டிக் கொள்வர், ஆண்கள் முடியை நீள வளர்த்து உச்சியில் முடிந்து அதில் பறவைகளின் இறகுகளைச் செருகிக் கொள்வர். ஆண்களும் பெண்களும் அன்றாடம் விடியற்காலை, பகல், இரவு படுக்கைக்குப் போகுமுன் என மும்முறை குளிப்பவர்கள்; துணிகளைத் துவைத்து உடுத்துபவர்கள்; உடல் முழுவதும் 'பச்சை' குத்திக் கொள்பவர் கள்; புதிய முறைகளை விரும்புபவர்கள்.

"அவர்கள் முரட்டுத் துணிகளையும், கோரைப் புற்களால் நெய் யப்பட்டிருந்த பாய்களையும் உடுத்துபவர்கள். பெண்கள் இடுப்பைச் சுற்றிப் பலசுற்றுகளாகத் துணியை உடுத்துவார்கள். ஆண்களும் பெண்களும் சிப்பி, கற்கள், முத்து, கிளிஞ்சல் முதலியவற்றைக் காது களில் துளையிட்டுக் கடுக்கன்களாக அணிவர்.

"பன்றி, நாய், கோழி, மீன் மற்றும் அங்குக் கிடைக்கும் பழ வகைகள் ஆகியவைகளே அவர்களின் உணவு. அவர்கள் இவற்றினை

ஒரு வகையாகச் சமைத்து உண்கின்றனர். தண்ணீரும் தேங்காய்ப் பாலுமே அவர்கள் அருந்தும் குடிவகை. அவர்கள் கைகளையும் வாய்களை யும் கழுவிக்கொண்டு உட்கார்ந்து, எதிரில் இலைகளை விரித்து, அவற் றில் உணவுகளை வைத்து உண்கின்றனர். உண்டு முடிந்த பிறகு, கை, வாய்களை மீண்டும் கழுவிக் கொள்வது அவர்களின் பழக்கம். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி உட்கார்ந்து, தத்தம் பங்கு உணவைத் தனித்தனியே எடுத்துக் கொண்டு, ஒருவரோடொருவர் பேசாமல் உண்கின்றனர்.

"இசை, நடனம், நாடகம், மற்போர், வேட்டை முதலியவை அவர்களுடைய விளையாட்டுக்களாகும். புல்லாங்குழலும் முழவுகளுமே அவர்கள் அறிந்திருந்த இசைக் கருவிகள். அவர்களின் முழவுகள் இப்போதைய கஞ்சிராவை ஒத்தவை.

"அவர்கள் நெகிடிக் கட்டைகள் மூலம் தீ உண்டாக்குபவர்கள்; இரவில் எண்ணெய்ப் பசையுள்ள வித்துக்களை நசுக்கிவைத்துக் கட்டிய பந்தங்களை எரித்து ஒளி உண்டாக்குபவர்கள்.

## கைத்தொழில்

அவர்களுடைய தொழில், நெசவு, வேட்டை, மீன் பிடித்தல் ஆகியவை. அத்திமரம், மல்பெரிமரம் முதலியவற்றின் பட்டைகளி லிருந்து நார் எடுத்துத் துணி நெய்கின்றனர்; இவ்வாறு நெய்யும் நார்த் துணி மென்மையாகப் பட்டுப் போன்றுள்ளது. பிரெட் பழ மரப் பட்டையிலிருந்து நார் எடுத்து நெய்யும் துணி முரடாக இருக்கிறது. மூன்றும் வகையாகக் கோரைப்புற்களின் மூலம் துணி நெய்கின்றனர்; இது மெல்லிய கோரைப்பாய் போன்றுள்ளது. துணிநெசவினும் பாய் நெசவைச் சுதேசிகள் மிகுதியாகச் செய்கின்றனர். இக்கால ஐரோப் பியர்கள் நெய்தவற்றிலும் உயர்ந்த வகைப் பாய்களை இந்தத் தீவுகளில் சுதேசிகள் நெய்து பயன்படுத்தினர்.

"கூடை முடைதல், தென்னைநார்க்கயிறுகள் பின்னுதல் முதலிய வற்றில் அவர்கள் மிகுந்த திறமைசாலிகள். மீன் பிடிக்கும் வலைகளை அவர்கள் பின்னியது போல உலகத்தில் அக்காலத்தில் வேறெங்கும் வேறெவரும் அத்துணை உறுதியாகப் பின்னவில்லை.

"கற்சுத்தியல், கற்கோடாரி, எலும்பு உளி, பவளப் பாறையின் மணல் முதலிவற்றைக் கொண்டு, மரத்தை வெட்டி வழவழப்பாகத் தேய்த்து, மெருகேற்றி வீடு கட்டுதல், படகு கட்டுதல் முதலியவற்றை அவர்கள் செய்தனர். பெரிய வீடுகளும் சிறிய குடில்களுமாக அவரவர்கள் தகுதிக் கேற்ப அவர்கள் வீடு கட்டியிருக்கின்றனர்; சில குடிசைகள் சுவரேயின்றி வெறுங்கால்கள் நட்டுப் பந்தல் போலக் கட்டப் பட்டுள்ளன. ஈட்டி, நீண்ட தடிகள், வில், அம்பு முதலியவைகளே அவர்களுடைய போர்க் கருவிகளாகும்.

## கடவுள் கொள்கை

"நில நடுக்கங்களை உண்டாக்குபவர் கடவுள்" என்பது அவர்கள் மதக்கொள்கை. "புரோகிதர்களே கடவுளிடம் வேண்டுதல் செய்தற்கு உரியவர்கள் புரோகிதர்கள் தலைமுறை தலைமுறையாக வரும் குடும்பத்தினர். அவர்கள் தவிர, பிற எவரும் புரோகிதராக முடியாது. தலைவர்கள். அரசர்கள், அவர்களுடைய இனத்தவர் ஆகியோரே கடவுளுக்குகந்த மக்கள்" என்பது சுதேசிகளின் நம்பிக்கை.

"சொஸைடித் தீவுகள் அனைத்திலுமாகச்சேர்த்து இப்போது சுமார் 6000 சுதேசிப் போர் வீரர்கள் இருக்கின்றனர்.

## உணவுப் பொருள்கள்

"மிகுந்த உழைப்பின்றியே கரும்பு, வள்ளிக்கிழங்கு, மல்பெரி, பிரெட் பழம், தெங்கு, வாழை, அத்தி போன்றவை அங்கு நிறையப் பயிராகக்கூடியவாறு நிலம் நல்ல வளமுடையதாகும். கூலங்கள் ஒன்றேனும் அங்குப் பயிராகவில்லை. பன்றி, நாய், கோழி, புறு, வாத்து முதலியவைகளும், காட்டுப்பறவைகளும் அங்கு இருக்கின்றன. எலிகள் மிக்குள்ளன. பாம்பு ஒன்றேனுமில்லை. கடலில் எண்ண இயலா அளவு எத்தனையோவகை மீன்கள் கிடைக்கின்றன.

## மற்போர்

"அவர்களுடைய மற்போர் குறிப்பிடத்தக்க தாகும். இருவரும் எதிரெதிரே நின்று ஒருவரை ஒருவர் கைகொடுத்துப் பிடித்துத் தூக்கி யடித்து மல்லாத்திக் கிடத்தப் பெரிதும் முயல்வர். எவர் மல்லாந்து

விழுந்தவரோ அவர் தோற்றவர்; மல்லாத்தி விழ்த்தியவர் வென்றவர். வயது முதிர்ந்தவர்கள் கைகொட்டி வென்றவரைப் பாராட்டி வாழ்த்து வர். இவ்விளையாட்டில் ஈடுபடுபவர்கள் மிகுந்த உணர்ச்சியும் ஊக்கமும் காட்டுவர். வென்றவர் தம் வெற்றியின் பெருமை குறித்துக் கொக்கரித்து ஆர்ப்பாட்டம் செய்வதில்லை; தோற்றவர் வெட்கித் தலைகுனிந்து வெளியேறுவதுமில்லை. ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு இரட்டையரிடையே இவ்விளையாட்டு நடைபெறுகிறது. ஓர் இரட்டையரிடை மற்போர் நடந்து ஒரு நிமிடத்துக்குள் எவரும் மல்லாத் தப்படவில்லை எனின், அவ்விருவரும் பிரித்துவிடப் படுகின்றனர். இவற்றைக் கண்காணித்து மேற்பார்வை யிடவும், பார்வையிட அவண் வந்து குழுமியுள்ள மக்களை அமைதியாக இருக்கச் செய்யவும் ஒருவர் குறுந்தடி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு ஒழுங்கை நிலை நாட்டு வார்; ஒழுங்கை மீறித் தள்ளிக்கொண்டு முன்னே வர முயன்றவரைத் தம் கையிலுள்ள குறுந்தடியால் மெல்லத் தட்டி எச்சரிப்பர்; இடை யிடையே அதே மேடையில் நடனமும் நடைபெறும். விளையாட்டிலோ. நடனத்திலோ ஈடுபட்டவர்கள் வேறெதனையும் கவனியாமல், தாங்கள் ஈடுபட்ட ஒன்றிலேயே கருத்தூன்றி வெற்றிபெற முயல்வர்.

**சவ அடக்கச் சடங்கு**

"அச்சுதேசிகள் தங்களுள் இறந்தவரை உடனே புதைப்பது மில்லை; எரிப்பதுமில்லை. அவர்களின் இறுதிச் சடங்கு விந்தை மிக்கது; செத்தவன் உயிருடன் இருந்தபோது வசித்த இடத்தருகில் ஒரு குடிசை எழுப்புகின்றனர்; அதில் ஐந்தடி உயரத்தில் தூண்கள் நட்டுப் பரண்போன்று சிதை அமைக்கின்றனர்; சிதைமீது ஒரு பாய் விரித்து, அதில் ஒரு வெள்ளைத்துணி பரப்பி, அத்துணிமீது பிணத்தைக் கிடத்துகின்றனர்; பிணத்தின் தலையருகில் இரு தேங்காய்க் கொட்டங் கைச்சி (சிரட்டை) களும், காலருகில் பசுந்தழைக் கொத்துக்களும், உலர்ந்த சிறு மரக்கிளைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய கட்டும் வைக்கின்றனர்; எதிரில் ஒரு கல்லைத் தரையில் நடுகின்றனர்; அத னருகில் ஒரு வாழைக்கன்றை நடுகின்றனர்; பனைமரத்துண்டு ஒன்றை எதிரில் புதைத்து அதன்மீது தேங்காய்ச் சிரட்டையில் தண்ணீர் வைக்கின்றனர்; ஒரு பையில் பிரெட்பழச் சதைகளைப் பொரித்து வைக்கின்றனர். இறந்தவனின் உயிர் இவற்றைத் தின்று நீர் அருந்திச் சாந்தி அடையும் என்பது அம்மக்களின் கருத்துப்போ

ஆம்! பிறகு அப்பிணம் காய்ந்து வற்றலாகி எலும்பானதும், அதனை எடுத்துக் குழிவெட்டிப் புதைக்கின்றனர்.

## மூக்கினால் இசைக்கும் இன்னிசைக்கருவி

" அச்சுதேச மக்கள் இன்னிசையில் பெருவிருப்பமுடையவர்கள். அவர்களுட் சிலர் ஜெர்மன் புல்லாங்குழல் போன்றதோர் இசைக்கருவி மூலம் ஒரு நாள் இன்னிசை வழங்கினர். ஆனால், வாய்மூலம் ஒரு நாள் இன்னிசை வழங்கினர். ஆனால், வாய்மூலம் ஊதுவதற்குப் பதிலாக, அம் மக்கள் மூக்கில் அக்கருவியை வைத்து மூச்சை இழுத்து விரைவாக விட்டு அவ்விசைக் கருவியை இயக்கினர். இதனின்று கிளம்பிய இன்னிசைக்கேற்பப் பெண்கள் குரல் மூலம் இசை எழுப்பினர். இந்த இசை கேட்பதற்கு இனிமையாகவும் பார்ப்பதற்கு விந்தையாகவும் இருந்தது.

## அண்ணனுக்கு தங்கை மனைவி

" மற்றொரு வழக்கம் அவர்களிடை இருந்ததை எதிர்பாரா வண்ணம் அறியமுடிந்தது. ஒரு நாள் ஓஆமோ என்னும் சுதேசித் தலைவன் தன்னுடன் ஒரு சிறுவனையும், சிறுமியையும் அழைத்துக் கொண்டு கப்பலுக்கு வந்தான். அவ்வமயம் கப்பலிலிருந்த ஒபரியா அரசி, அவனை மிகுந்த அன்புடன் வரவேற்றாள். அவன் ஒபரியாவின் கணவன் என்றும், சிறுவனும் சிறுமியும் ஒபரியா பெற்ற பிள்ளைகள் என்றும் தெரிந்தது. கணவனும் மனைவியும் சிறிது காலம் பிரிந்து வாழ்வதென்று இருவரும் இணங்கி ஒப்பந்தம் செய்து, அதன்படி பிரிந்து வாழ்கின்றனர். ஒபரியாவின் மகன் தக்க வயதடைந்தவுடன் ஒபரியாவின் மகளை — தன் தங்கையை மணந்து கொள்வான் என்று அங்கிருந்த சுதேசிகள் விளக்கிக் கூறினர். அந்தச் சுதேச மக்களிடையே அண்ணன் தங்கையை மணந்துகொள்ளும் வழக்கம் இருந்தது

" அச்சுதேசிகளுக்குக் கப்பல் ஆட்களுட் சிலரைத் தங்களுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்னும் அவா இருந்தது. இரண்டு முறை கப்பலாட்களுட் சிலர் காணமற் போயினர். அவர்களை அச் சுதேசிகள் ஆசை வார்த்தைகள் கூறிச் சுதேசிகளின் உடுப்பணிவித்துக் கொண்டுபோய் வைத்திருந்தனர். ஒன்றிரு கப்பலாட்கள் சுதேசிப் பெண்களை மணந்துகொண்டு அத்தீவிலேயே இருந்துவிடுவதாகவும்

கூறினர். சில கப்பலாட்களைச் சுதேசிகள் கடத்திச் சென்றும் வைத் திருந்தனர். ஆனால், கடுமுயற்சியின் பலனாக அனைவரும் கப்பலுக்கு அழைத்துவரப்பட்டனர்."

I. விடை எழுதுக :—

1. 'எண்டவர்' டாஹிட்டித் தீவை விட்டு எப்பொழுது புறப்பட்டது?
2. சொசைடித் தீவுகளுக்கு அப்பெயர் வரக்காரணமென்ன?
3. மூன்றும் ஜார்ஜ் தீவின் வேறு பெயர் யாது?
4. சொசைடித் தீவுகளில் உள்ள மக்கள் விளையாடும் விளையாட்டுக்கள் எவை?
5. அவர்கள் இசைக் கருவிகள் எவை?
6. அவர்களுடைய போர்க்கருவிகள் எவை?
7. அவர்களுடைய மற்போரில் வென்றவர் யார்? தோற்றவ:
8. அவர்கள் சவ அடக்கச் சடங்கு எவ்வாறு செய்கின்றனர்?

# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## சிறப்புப் பகுதி


தொகுத்தோர்:

**ஸ்ரீமான். T. S. அருணசலம் பிள்ளை, B.A. L.T.,**
தலைமை ஆசிரியர் போர்டு ஹைஸ்கூல்,
நாச்சியார் கோயில் தஞ்சை ஜில்லா

,, **N. நஞ்சப்பா, M.A. B.O.L. L.T.,**
தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல்,
பாபிரெட்டிபட்டி சேலம் ஜில்லா.

,, **வித்வான் G. சந்திரமௌளீசுவரன்,**
தமிழாசிரியர், லண்டன் மிஷின் ஹைஸ்கூல், சேலம்.



**விந்திய வெளியீடுகள்**

**1-1, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1.**

பதிப்புரிமை] 1952 [விலை அணு 12.

First Edition November, 1952,

T. V. C Press Madras

# முன்னுரை

'**எங்கள் தமிழ்க் கோவை**' என்னும் பெயரோடு வெளிவரும் இக் கோவை நூல்கள் உயர் நிலைப் பள்ளிகளில் நான்கு—ஐந்தாம் படிவங்களில் பயிலும் மாணவர்கட்குப் பாட நூல்களாக அமைவதற்குரியனவாகும். மண்டல மொழி முதன்மையாக்கப்பட்ட பின்னர், அந்நிலைக்கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாட வியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கவும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப்புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக்கெனப் பாட வியலில் குறிக்கப்பட்டுள்ள அளவினும் சிறிது மிகுதியாகவே செய்யுட்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும், மாணவர்களின் தகுதிக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துதற்கு இடமிருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும், உரை நடைப் பாடங்களுக்குப் பயிற்சி வினுக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணை கொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சியும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவதாக வெளிவரும் இக் 'கோவை' நூல் வரிசையை ஆசிரியர்களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான் ம. வி. இராகவன், வித்துவான். எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகம் கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட்களையும் கட்டுரைகளையும் இக் 'கோவை' வரிசையில் கோத்துக் கொள்ள இசைவுதந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# உள்ளுறை

## செய்யுள்

## உரை நடை

# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## சிறப்புப் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

### புறநானூறு

கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப,
கறைமிட றணியலு மணிந்தன்(று), அக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு ஒருதிற னாகின்(று), அவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின்(று), அப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே.
எல்லா உயிர்க்கும் ஏம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

— பாரதம் பாடிய பெருந்தேவனார்.

### குறிப்புரை

இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களால் ஆகியதால் புறநானூறு என்று பெயர் பெற்றது. இது கடைச்சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத்தொகை நூல்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

இந்நூலிலுள்ள பாட்டுக்களைப் பாடிய புலவர் பலர். அவர்கள் ஒரு காலத்திருந்தவர் அல்லர்; ஒரு நாட்டினரும் அல்லர்; ஒரு குலத்தவரும் அல்லர். தமிழ் மக்களது அரசியல்முறை, போர்முறை, கொடைத்திறம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நன்கு அறிதற்கு இந்நூல் பெரிதும் துணை செய்கிறது.

### அருஞ் சொற்கள் :

கண்ணி — மாலை
காமர் — அழகிய
ஊர்தி — வாகனம்.
கரகம் — கமண்டலம்.

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### வாய்மை

வாய்மை எனப்படுவது(து) யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 4

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 10

—திருவள்ளுவர்.

### குறிப்புரை

திருக்குறள்—குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவுகளை உடையது. இதனை முப்பால் என்றும் கூறுவர்.

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் வள்ளுவர் குடியைச் சேர்ந்தவர்; நீல் லொழுக்கமுடையவர்; அரசருடன் நன்கு பழகியவர். புல்கலைப் பயிற்சியுடையவர்.

இவரை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் பாராட்டினார்.

வாய்மையாவது மெய்யினது தன்மை. வாய்மை, மெய்ம்மை, உண்மை என்னும் மூன்றனையும் நாம் ஒரே பொருளில் எடுத்தாளுகின்றோம். அவை முறையே வாயினது தன்மை, மெய்யினது தன்மை, உள்ளத்தினது தன்மை என்று பொருள் படும். வாயாற் சொல்வன தூயனவாயிருத்தல் வேண்டும், மெய்யினால் செய்வன தூயனவாயிருத்தல் வேண்டும், உள்ளத்தினால் கருதுவன தூயனவாயிருத்தல் வேண்டும்.

1. வாய்மை—மெய்ம்மை, எனப்படுவது-என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. யாதொன்றும்-சிறிதும், இலாத-பயவாத சொற்கள்.

2. புரை தீர்ந்த—பிறர்க்குக் குற்றம் தீர்ந்த, பொய்ம்மை-பொய்ம்மைச் சொற்கள், குற்றம் தீர்ந்த நன்மை-அறம்.

3. தன்நெஞ்சு அறிவது – தனது நெஞ்சு அறிவதொன்றினை, பொய்யற்க-பொய்யாதொழிக, தன்னைச் சுடும்- அதன் பயனாய்த் துன்பத்தை எய்துவிக்கும்,

4. உள்ளத்தால்-ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்ப: வேற்றுமை மயக்கம். உலகத்தார்—உயர்ந்தோர்.

5. மனத்தொடு—ஒருவன் தன் மனத்தொடு பொருந்த, தவத்தொடு தானம் செய்வாரின்—தவமும் தானமும் ஒருங்கு செய்வாரைக் காட்டிலும்.

6. பொய்யாமை—பொய் கூறாமை, எய்யாமை – மறுமைக்கு மெய் வருந்தாமல், புகழ்—ஆகுபெயர்.

7. பொய்யாமைபொய்யாமை ஆற்றின்-பொய்யாமையையே பொய்யாமல் செய்ய வல்லனாயின். முதல் அடுக்கு இடைவிடாமைப் பொருளிலும், இரண்டாவது அடுக்கு துணிவுப் பொருளிலும் வந்தன.

8. புறம்—உடம்பு, அமையும் – உண்டாம், அகம்தூய்மை – மனத்தூய்மை, காணப்படும்-உண்டாம், மனந்தூய்தாதல் மெய்யுணர்தலாகும்.

9. எல்லா விளக்கும்—புறத்து இருளைப் போக்கும் உலகத்தார் விளக்குகள், சான்றோர்-துறவான் அமைந்தோர், வாய்மை மனத்திருள் போக்கும் விளக்காகும்.

10. மெய்யா – மெய்ந் நூல்களாக, எனைத்தொன்றும் – யாதொரு தன்மையாலும், வாய்மையின் நல்ல-வாய்மையான் மிக்கனவாக, பிற-பிற அறங்கள்.

## 2. திருமந்திரம்

யாவர்க்கும் ஆம்இறை வற்குஒரு பச்சிலை ;
யாவர்க்கும் ஆம்பசு வுக்குஒரு வாய்உறை ;
யாவர்க்கும் ஆம்உண் ணும் போதுஒரு கைப்பிடி ;
யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்உரை தானே. 1

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார் ;
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிகிலார் ;
அன்பே சிவம்ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவம்ஆய் அமர்ந்துஇருந் தாரே. 2

படமாடக் கோவில் பகவற்குஒன்று ஈயின்
நடமாடக் கோவில் நம்பர்க்குஅங்கு ஆகா ;
நடமாடக் கோவில் நம்பர்க்குஒன்று ஈயின்
படமாடக் கோவில் பகவற்குஅது ஆமே. 3

கண்காணி ஆகவே கைஅகத் தேஎழும் ;
கண்காணி ஆகக் கருத்துள் இருந்திடும் ;
கண்காணி ஆகக் கலந்துவழி செய்யும் ;
கண்காணி ஆகிய காதலன் தானே. 4

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும் ;
நன்றே நினைமின்; நமன்இல்லை நாளுமே;
சென்றே புகும்கதி இல்லை;நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே. 5

—திருமூல நாயனார்.

**குறிப்புரை**

இதன் ஆசிரியர் திருமூலநாயனார். இவர் திருவாவடுதுறையில் ஓர் அரசமரத்தின்கீழ் மூவாயிரம் ஆண்டு சிவயோகம் இருந்து, ஓர் ஆண்டிற்கு ஓர் அருட்பாவாகத் திருமந்திரம் மூவாயிரத்தையும் திருவாய் மலர்ந்தருளினர் என்பர்.

**அருஞ்சொற் பொருள்**

1. உறை-உணவு, ஆம்-முடியும்.
2. அன்பே சிவம்.
3. படமாடக் கோவில் - கூடாரம்போல் கட்டப்பட்ட கோவில். நடமாடக் கோவில்-நடமாடும் உயிர்களாகிய மாடக்கோவில். உயிருள்ள உடலங்களுக்கு உணவு கொடுப்பதே சிறந்த பூசையாம்.
4. கண்காணி - கண்ணால் எல்லாம் காண்பவன். ஒருவன் செய்யும் கூடா ஒழுக்கங்களை எல்லாம் கண்காணிப்பவன் இறைவன்; அவனை மறைத்து ஒன்றும் செய்யமுடியாது.
5. நமன்—எமன், உய்ம்மின்-ஈடேறுங்கள்.

## 3. பழமொழி நானூறு

### அறிவுடைமை

அறிவினால் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும்—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 1

### முயற்சி

தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்
சென்னீர் அருவி மலைநாட! பாய்பவோ
வெந்நீரும் ஆடாதார் தீ? 2

### பொருள்

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல். 3

### அரசியல்

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தனாகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 4

### ஈகை

இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறும் கிணறு. 5

—முன்றுறையரையனார்.

### குறிப்புரை :

ஒவ்வொரு பழமொழியையும் இறுதியில் பெற்ற 400 வெண்பாக்களை உடைய நூல் "பழமொழி" என்று வழங்குகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார்.

1. 'ஆடையற்றவன் அரை மனிதன்' ஆகையால் நகைகளைவிட ஆடையே மேலானது. அவ்வாறே செல்வம், குலம் முதலியவற்றைவிட அறிவே மேலானது-மாட்சி-பெருமை, மாண்டது-பெருமை பெறுதல், எவனும்-எப்படிமுடியும், சாந்தம் சந்தனம்.

2. செல்நீர்-பரந்து செல்லும் அருவிநீர்.

3. நல்கூர்ந்து - வறுமையடைந்து, வட்குபவோ - பிறர்க்குத் தாழ்வரோ ? வலித்து - நரம்புவலித்து, திரங்கி-சுருங்கி.

4. நடக்கை-ஒழுக்கம், ஒள்ளியன்-உயர்ந்தவன்.

5. தூங்கு-செறிந்த, சேர்ப்ப-செய்தல் நிலத்தலைவனே, கரப்பவர்-கொடாமல் ஒளிப்பவர்.

# III காதை

## 1. திருவிளையாடற் புராணம்

### குண்டோதரனுக்கு அன்னம் அளித்தது

### மீனாட்சியம்மையார் குண்டோதரனுக்கு அன்னமிடப் பணியாளர்க்குப் பணித்தல்

''குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடுமின்; அப்புறஞ் சோறுமால்'' எனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினள்; குறியனும் உடனே
நடைத ளர்ந்துகண் புகைந்துவாய் புலர்ந்திட நடந்தான். 1

### குண்டோதரன் உண்ணத் தொடங்கல்

படைக்கண் ஏவலர் இறைமகள் பணியினல் பசிநோய்
தொடுத்த வன்தனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார் ;
அடுத்தி ருந்ததே கணடனர் ; அன்னமா மலையை
எடுத்த யின்றதும், அடிசிலங் கிருந்ததுங் காணர். 2

முரவை போகிய முரிவில்வான் மூரல், பால் வறையல்,
கருனை, தீம்பய றடுதுவை, பல்வகைக் கறிகள்,
விரவு தேம்படு பால்தயிர், இழுதுதேன் வெள்ளம்,
வரைவி லாதன மிடவொடு வாரிவாய் மடுத்தான். 3

பல்ப ழக்குவை, வேற்றுருப் பண்ணியங், கன்னல்,
மெல்சு வைத்தண்டு, தெங்கிவை யன்றியும், வேவா
வல்சி, காய்களின் வருக்கமும் நுகர்ந்து மாறுமல்
எல்லை தீர்நவ பண்டமும் எடுத்துவாய் மடுத்தான். 4

### உண்டும் பசியாருமை

பாரித் துள்ளவிப் பண்டமும் பருஉங்குறுங் கையால்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவும், துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் கொளுத்த. 5

### குண்டோதரன் முறையீடு

"நட்ட மாடிய சுந்தர! நங்கையெம் பிராட்டி
அட்ட போனகப் பனிவரை அனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் கடும்பசி தணியா
திட்டு ணாதவர் வயிறுபோல் காந்துவ" தென்றான். 6

### அன்னக்குழி அழைத்தல்

கவன மால்விடை யாளிபின் கடிகமழ் தென்றல்
பவன மாமலை யாட்டியைப் பார்த்துளே நகைத்துத்
தவன மாப்பசி யுடையவன் தன்பொருட் டன்ன
புவன மாதினை நினைந்தனர் ; நினைக்குமுன் போந்தாள். 7

### குண்டோதரன் பசி ஆறுதல்

அத்த யிர்ப்பதக் கிடங்கரில் அலைகடல் கலக்கும்
மத்தெ னக்கரம் புதைத்தெடுத் தெடுத்துவாய் மடுத்துத்
துய்த்தி டப்பசி விடுத்தது, சுகுதிநா யகன்தாள்
பத்தி வைத்துவீ டுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல். 8

### தண்ணீரைத் தேடுதல்

வாங்கி வாங்கிவாய் மடுத்தலும், உடம்பெலாம் வயிருய்
வீங்கி னான்; தரை கிழிந்திடப் பொருப்பென வீழ்ந்தான் ;
நீங்கு நீடுயிர்ப் பிலனுடல் புரண்டனன் ; நீர்வேட்
டாங்குநீர்நிலை தேடுவா னயினான் எழுந்தான். 9

### நீரைப்பருகிக் குண்டோதரன் மகிழ்தல்

தீர்த்தன் சடைநின் றிழிதீர்த்த மருந்தி, வாக்குக்
கூர்த்தின் புகொண்டு, குழகன்திரு முன்னர் எய்திப்
பார்த்தன் பணிந்த பதமுன்பணிந் தாடிப் பாடி,
ஆர்த்தன் புருவாய்த் துதித்தானள வாத கீதம். 10

—பரஞ்சோதி முனிவர்.

**குறிப்புரை**

இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில் அபிடேகத்தர் மரபில் ஆதிசைவ சமயத்தில் பிறந்தார்.

**அருஞ் சொற்கள்**

1. குறள் - (குண்டோதரன்.) நாயகி - மீனாட்சியம்மையார். 2. படை-வேற்படை, இறை மகள் - அரசி, (மீனாட்சியம்மையார்). பணி-கட்டளை, சொன்றி-சோறு. அடிசில்-உணவு. 3. முரவை-அரிசியில் உள்ள வரி. வான்மூரல்-வெண்மையான சோறு, கருனை-பொரிக்கறி, துவை-துவையல், விரவு-கலந்த. தேம்படு-இனிமை நிறைந்த, இழுது-நெய், வரைவு-அளவு. 4. குவை-குவியல், பண்ணியம்-பட்சணம், கன்னல்-கரும்பு, வல்சி-அரிசி, நவ-புதிய. 5. பரு-பருத்த, துடுவை-நெய் அகப்பை. ஆகுதி-ஓமத்தீயில் நெய்விடுதல். 6. நட்டம்-நடனம், அட்ட - சமைத்த, போனகம் - உணவு, பனிவரை-இமயமலை. 7. கவனமால் விடையாளி-வேகமாகச் செல்லும் பெரிய இடபத்தில் வரும் சிவபெருமான், தவனர்-தாகம், 8. துய்த்திட-புசிக்க. சுருதி நாயகன்-வேத முதல்வன் (சிவபெருமான்). 9. பொருப்பு-மலை, உயிர்ப்பு-மூச்சு. வேட்டு-விரும்பி. 10. பார்த்தன்-அருச்சுனன்.

## 2. பாகவத புராணம்

### குசேலர் வரலாறு

பாயும் வல்லிருள் பருகுமொண்
கதிர் மணிச் செஞ்சூட்(டு)
ஆயி ரந்தலை அலர்த்துபாம்
பணைத்துயி லகற்றி,
காயும் வெஞ்சினக் கட்செவித்
தலையில்நின் றாடும்
மாய னன்பினன், குசேலன்என்
றுளனொரு மறையோன்.

### சுசீலை வறுமை நிலையை வெளியிட எண்ணுதல்

எனைத்தொன் றாயினும் எதிர்ந்தது
மிசைந்துவண் டிரைக்கும்
புனத்து ழாய்முகில் பொன்னடி
கருதுமம் மறையோன்
மனைக்கி ழத்திவெம் பசியினால்
வாடிய முகத்தாள்,
பனித்த கண்ணினள், பவளவாய்
திறந்தனள் பகர்வாள். 2

### 'கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருக' என்றல்

'பொன்பி றங்கிய பூண்திகழ்
 திருமகள் கொழுநற்(கு)
அன்ப ளுகியும் அகன்றிலே
 வறுமை ; மற்றென்னே ?
மின்பி றங்கிய விழுமணி
 மார்பினர்க் கண்டு
மன்பெ ரும்பொருள் வாரினை
 வரு'கென வகுத்தாள். 3

### கண்ணனுக்காகக் கையுறை தந்தனுப்பல்

வடித்த நான்மறை அந்தணன்,
 'மாயனைக் காணின்
கொடுப்ப தென்?' என, குறுநுதல்
 அறவர்பாற் கொடுவந்(து)
இடித்த பாசவல் இரந்தவெண்
 துகில்பொதிந் தீந்து
'நடத்தி' என்னலும், நசையிலன்
 மென்மெல நடந்தான். 4

### குசேலன் துவாரகை அடைதல்

தெரியு நான்மறை இன்னமும்
 தெரிவுறக் காண்டற்(கு)
அரிய ளுகிய அரக்கிதழ்
 முளரியஞ் செங்கண்
கரிய வன்தனைக் காணுறக்
 கடுகுபே ரன்பு
விரிய ஏகினன்; விழுப்பெருங்
 கோயின்மே யினளுல். 5

### கண்ணனைக் காணுதல்

மன்னர் மன்னவர் மணிமுடித்
 திரள் பொரு துக்க
பொன்நி வந்தொளிர் பொற்கடை
 முன்னிறந் தேகி,

கன்னி யந்துழாய்க் கருமுகி
லொருகனித் துவர்வாய்
அன்ன மென்னடை அரிவையோ
டிருந்துழி அடைந்தான். 6

### கண்ணன் குசேலனை வரவேற்றல்

உருகு காதலன் பைப்பைய
வொல்கினன் வருதல்
முருகு வெம்புசெம் முளரியஞ்
செங்கணன் நோக்கி,
எரிபொன் சேக்கைநின் றெழுந்தெதிர்
சென்'றிவண் வருக!
வருக!' என்றுபொன் மார்புறத்
தழீ இயினன் மகிழ்ந்தான். 7

### கண்ணன் குசேலனை உபசரித்தல்

களித்த செங்கயல் கருங்கண்மா
மாதுவெண் கவரி
வளைத்த ளிர்க்கையால் இரட்டமா
மணியணை இருத்தி,
'இளைத்தி சால!' என் றிளநிலா
ஒழுகு நூல் மார்பின்
அளிக்கு லஞ்செறி செய்யதா
ரணிந்துபா களித்தான். 8

### கண்ணன் பழமை பாராட்டல்

பயிற்று நான்மறைக் குரவன் அம்
மனையவள் பணியால்,
வெயிற்கு வெம்பிய கானிடை
விராய்தரற் கேகிப்
புயற்க சைந்தொரு பொதும்பரி
னிரவுநா மிருந்த(து)
அயர்த்தி போலும்! என் றளவளாய்
உசாவின னன்றே. 9

## கண்ணன் கையுறை ஏற்றல்

முளைத்த வெண்ணிலா முறுவல்வாள்
முகத்தின ளாகி
'அளிப்ப மற்றெனக் கென்கொடு
வந்தனை? அன்ப!
ஒளிப்ப தென்னை நீ? உதவு'கென்
றுள்ளரக் கூட்டும்
தளிர்க்கை யால்துகில் வாங்கினன்
தனிமறை முதலி. 10

## கண்ணன் அவல் உண்ணல்

'பொருள்வி ழைந்திவன் போற்றலன்
நமையொரு பொழுதும்;
திருவி ழைந்திவன் திருமனைக்
கிழத்திசெல் கென்ன,
வரவு வந்தனன்; மற்றிவற்
களித்து'மென் றள்ளி
விரைக மழ்ந்தபூந் துளவினன்
பாசவல் மிசைந்தான். 11

## கண்ணன் அவல் உண்டலை ருக்மணி தடுத்தல்

'ஊர்ந்த காதலின் ஒரு முறை
அருந்திய திறத்தால்
ஏந்த லிந்திரன் எனக்கருஞ்
செல்வமெய் தினனால்;
மாந்தல் மற்றினி' என்றுசெம்
மலர்க்கரம் பிடித்தாள்
பூந்து ழாய்வரை மார்பக
மகன்றிலாப் பூவை. 12

## குசேலன் கண்ணனிடம் விடைபெறுதல்

தடநெ கிழ்ந்தசெந் தாமரை
யவள்குறிப் பறிந்து,
விடுசு டர்ப்பனி வெண்ணகை
முகிழ்த்தருள் சுரந்து,

மடைதி றந்துசெங் கண்ணினுன்,
மறையவன் தனக்கு
விடைபு ரிந்தனன்; வீறுசால்
வேதியன் எழுந்தான். 13

### குசேலன் தன் ஊரடைதல்

'அம்ம வுய்ந்தனம் உய்ந்தனம்!
அரும்பொரு ளெய்தின்
மம்மர் கூர்தர மறக்குவன்
நமை'யென மதித்தே,
மும்மை சாலுல(கு) அளித்தருள்
முளரியஞ் செங்கண்
செம்மல் நல்கலன் 'செல்வ'மென்
றுவந்தனன் சென்றுன். 14

### குசேலன், செல்வச் சிறப்பெய்தியிருக்குந் தன் வீட்டினை அடைதல்

களித்த வண்டினம் கஞலவாய்
விரிந்துதண் தேறல்
துளித்த நாண்மலர்ச் சோலையும்,
சுடர்மணித் தொகுதி
தெளித்தெ னத்திகழ் தீம்புனல்
வாவியுஞ் செறிந்து,
பளிக்கு மண்டபம் பல்குதன்
மனையகம் படர்ந்தான். 15

### குசேலன், தன் மனைவியின் மாறுதலைக் கண்டு மயங்கல்

தெளிநி லாக்கதிர் சிந்திய
வெள்ளிவெண் மாடம்
முளையி ளம்பிறை தவழவிண்
முகடுகீண் டோங்கி
அளகை காவலன் அருநிதி
அறைதிறந் தென்ன
வளம லிந்தஅம் மனையகம்
நோக்கினன் மயர்ந்தான். 16

**குசேலன், சுசீலை ஆடை அணி திகழவருவது கண்டு அயிர்த்தல்**

விலகி வில்லுமிழ் மீன்குழாத்
　　தொள்ளரி விரிக்கும்
கலைநி றைந்தவெண் மதியென,
　　கவின்வழிந் தொழுகு
திலக வாள்நுதல் சிற்றிடைத்
　　தெரிவையர் செறிய,
இலகு பூணணிந்(து) இல்லவள்
　　வருதல்கண் டயிர்த்தான். 17

**குசேலன்; கண்ணன் கருணையை எண்ணி வியத்தல்**

பதியை நோக்கினன்; பதிதொறும்
　　பதிதொறுங் கிடந்த
நிதியை நோக்கினன்; நேரிழை
　　மடப்பிணை மருட்டும்
புதிய நோக்கொடு போதரு
　　மனையவள் வதன
மதியை நோக்கினன்; 'மால்செயல்
　　இது!'வென வலித்தான்.

—**செவ்வைச் சூடுவார்.**

**குறிப்புரை :**

பழைய வரலாறுகளை உலகத்தின் தோற்றம் முதலிய பல செய்திகளுடன் விவரித்துக் கூறும் நூல் 'புராணம்' எனப்படும். இவ்வகைப் புராணங்களுள், பாகவத புராணம் ஒன்று. 'ஸ்ரீமத்' என்பது 'பொலிவை யுடையது' எனப் பொருள்படும். பாகவதம் என்னும் பெயர் பகவானைக் குறித்துச் சொல்வது என்ற பொருளது. இதனை வடமொழியில் இயற்றியவர்—வியாசமுனிவர். இதனைச் சொல்லி யருளியவர் சுகமுனிவர். கேட்டவர் பரீட்சித்து மன்னர். இந்தத் தமிழ்ப் பாகவத புராணம் அந்த வடமொழி நூலின் வழிநூலாகச் செய்யப்பட்டது.

பாகவதத்தைத் தமிழில் **ஆக்கியவர்—செவ்வைச் சூடுவார்** என்பவர். இவர் பிறந்து வாழ்ந்த இடம், **வேம்பத்தூர்.** இது பாண்டிய நாட்டிலுள்ளது. செவ்வைச் சூடுவார் என்பது செவ்வையாகச் சூடும் பாமாலையை யுடையவர் என்ற காரணம்பற்றி இவர் பெற்ற சிறப்புப்பெயர். இவரது இயற்பெயர் **மாதவ பண்டிதர்** என்பது. இவர் அந்தண குலத்தினர். **காலம்:** முந்நூறு வருடங்கட்கு முன்.

1. பருகும்—குடிக்கும் (போக்கும்). சூடு—உச்சிக்கொண்டை, அணை—படுக்கை, துயில்—தூக்கம், கட்செவி—பாம்பு, மாயன்—கண்ணன்,

2. மிசைந்து-உண்டு, இரைக்கும்-ஒலிக்கின்ற, துழாய்-துளசி, முகில்-மேகம் போலும் கருநிறமுடைய கண்ணன், மறையோன்-குசேலன், மனைக்கிழத்தி-மனைவி, பனித்த-நீர் ததும்பிய, பவளவாய்-பவளம்போன்ற வாய்; உவமைத் தொகை.

3. பிறங்கிய-விளங்கிய, பூண்-ஆபரணம், திருமகள் கொழுநன்-இலக்குமியின் கணவனை திருமால் (கண்ணன்). மின்-மின்னலைப்போல், விழுமணி-சிறந்த இரத்தினம், மன்-நிலைபெற்ற, வாரினை வருக-வாரிக்கொண்டு வருவாய், வருத்தாள்-சொன்னாள்.

4. வடித்த – ஆராய்ந்தெடுத்த. நான்மறை – நான்கு வேதங்கள்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என் – என்ன, குறுநுதல் - சிறிய நெற்றியையுடைய சுசீலை; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அறவர்-குசேலர், பாசவல்–செவ்விய அவல், துகில்-துணி, பொதிந்து–மூடிக்கட்டி, நடத்தி-செல்லுவாய், நசை–விருப்பம்,

5. காண்டற்கு – பார்ப்பதற்கு, அரக்கு இதழ்-அரக்கைப் போன்ற உதடு; உவமைத் தொகை, கோயில் மேயினன் - அரண்மனையை யடைந்தான், கோயில், கோவில் என்பதன் இலக்கணப் போலி,

6. நிவந்து–உயர்ந்து, பொன் கடை-அழகிய தலைவாசல், இறந்து–கடந்து, கருமுகில்-கண்ணன்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அரிவை-பெண்(கள்).

7. காதலன் – அன்புடையவன்; குசேலன், பைப்பைய - மெல்ல மெல்ல; 'பையப்பைய' என்பதன் விகாரம், ஒல்கினன்-தளர்ந்தவனாய்; முற்றெச்சம், முருகு-வாசனை, செங்க(ண்)ணன் கண்ணன். சேக்கை–படுக்கை, இவண்-இவ்விடம், தழீஇயினன்-தழுவினான்.

8. மாமாது - உருக்குமணி, கவரி–சாமரை, தளிர்க்கை–தளிர்போன்ற கை; உவமைத் தொகை. இரட்ட–வீச. இளைத்தி-மெலிந்திருக்கிறாய்; முன்னிலை யொருமை வினைமுற்று, அளி–வண்டு, செய்ய–சிவந்த, தார்–மாலை.

9. குரவன்–ஆசிரியன்; சாந்தீபினி முனிவர், புயல்–மழை, அசைந்து–வருந்தி; பொதும்பர்-சோலை, அயர்த்தி-மறந்தாய், அளவளாய்-மனங்கலந்து, உசாவினன்-கேட்டான்.

10. முறுவல்–பல், என்–என்ன, கொடுவந்ததனை–கொண்டுவந்தாய். அரக்கு-செந்நிறம், முதலி-முதன்மை யானவன்.

11. விழைந்து – விரும்பி, போற்றலன் – போற்றினானில்லை, திரு-செல்வம் செல்க + என; அகரம் தொகுத்தல் விகாரம். அளித்தும்-கொடுப்போம்; தனித் தன்மைப் பன்மை வினைமுற்று, விரை-வாசனை, துளவினோன்-கண்ணன்.

12. கருஞ்செல்வம்-பெருஞ் செல்வம், மாந்தல்-உண்ணுதிருப்பாயாக; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, பூவை–உருக்குமணி; உவமையாகு பெயர்.

13. செந்தாமரையவள் - இலக்குமியாகிய உருக்குமணி, நகை முகிழ்த்து–சிரித்து, வீறு சால்-பெருமை மிகுந்த.

14. அம்ம - வியப்பிடைச் சொல், உய்ந்தனம்-பிழைத்தோம், மம்மர்-மயக்கம், கூர்தர-மிக, மறக்குவன் - மறப்பான், மும்மை – மூன்று; பண்பாகு பெயர், முளரி-தாமரை; காரண இடுகுறிப் பெயர், செம்மல்-கண்ணன், நல்கலன்-கொடுத்தானில்லை.

15. கஞல-ஒலிக்க, தேறல்-தேன். நாள் மலர்-அன்றலர்ந்த மலர், தொழுதி-தொகுதி, பல்கு-மிகுந்த, படர்ந்தான்-சென்றான்.

16. முகடு-உச்சி, கீண்டு-கிழித்து, அளகை காவலன்-அளகாபுரிக்கு அரசனாகிய குபேரன். நோக்கினன் மயர்ந்தான்-பார்த்து மயங்கினான்.

17. வில்-ஒளி, கவின்-அழகு, நுதல்-நெற்றி, நேரிவையர்-தோழிப் பெண்கள், செறிய – நெருங்க, இலகு - விளங்குகின்ற, பூண்-ஆபரணம், அயிர்த்தான்-சந்தேகித்தான்.

18. பதி-வீடு, நிதி-செல்வம், பிணை-பெண்மான், போதரும்-வருகிற, வதன மதி, உருவகம்.

## 3. மணிமேகலை

### பாத்திரமரபு கூறிய காதை

இது தமிழிலுள்ள பழைய பெருங் காப்பியம் ஐந்தில் ஒன்று. இதனை இயற்றியவர் **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** என்பவர். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளான **மணிமேகலை**யின் வரலாறு இதில் கூறப்படுகிறது. இவ்வரலாறு **முப்பது காதை**களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அமைந்துள்ள இயற்கை வருணனைகளும் அறவுரைகளும் கற்போர்க்கு இன்பம் பயப்பன. பௌத்த சமயக் கொள்கைகள் இந்நூலில் ஆங்காங்கே விளக்கப்படுகின்றன. இந்நூல் கடைச்சங்க காலத்தில் இயற்றப் பெற்றது என்பர்.

### ஆபுத்திரன் தன்னை அடுத்தோர்க்கு உணவளிக்க இயலாமைக்கு வருந்துதல்

ஆங்கவற் கொருநாள் அம்பலப் பீடிகை
பூங்கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்:
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்(து)
ஆரிடை யுழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி

வயிறுகாய் பெரும்பசி மலைக்கு மென்றலும்,
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆரஞர் எய்த,

### சிந்தாதேவி அமுதசுரபி என்னும் பாத்திரத்தை ஆபுத்திரனுக்கு அளித்தல்

''கேளிது மாதோ கெடுகநின் தீ(து)'' என
யாவரு மேத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத்தோன்றி,
''ஏடா! அழியல் எழுந்திது கொள்ளாய் :
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது;
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய'' தென்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்,

### ஆபுத்திரன் சிந்தாதேவியைப் போற்றி வணங்குதல்

''சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோ ருற்ற இடர்களை வா''யெனத்
தான்றொழு தேத்தித் தலைவியை வணங்கி,

### அமுதசுரபியின் உதவியால் ஆபுத்திரன் மன்னுயிர்களின் அரும்பசி களைதல்

ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களு மாவும் மரஞ்சேர் பறவையுந்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்
இழுமென் சும்மை யிடையின் றொலிப்ப
ஈண்டுநீர் ஞாலத் திவன் செயல் இந்திரன்

### இந்திரன் வருகை

பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின்,
தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
மாயிரு ஞாலத்து மன்னுயி ரோம்பும்
ஆருயிர் முதல்வன் றன்முன் றோன்றி
''இந்திரன் வந்தே னியாது நின்கருத்(து)?
உன்பெருந் தானத் துறுபயன் கொள்'' கென,

### தனக்கு வரம் வேண்டுவதில்லை என்றும், பசிப்பிணி ஒழிக்கும் அரும்பேறு ஒன்றே போதுமென்றும் ஆபுத்திரன் கூறுதல்

வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்(கு)
எள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்:
''ஈண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினும் கடவுள ரல்ல(து)
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்

நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்(கு)
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே!
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை;
உண்டி கொல்லோ, வுடுப்பன கொல்லோ,
பெண்டிர் கொல்லோ, பேணுநர் கொல்லோ,
யாவையீங் களிப்பன? தேவர்கோன்!'' என்(றான்).

—சீத்தலைச் சாத்தனார்.

### குறிப்புரை

**அடி 1–8 :** அம்பலம்-ஊர்ப் பொது இடம். பூங்கொடி நல்லாய்—பூங்கொடி போன்ற மணிமேகலையே. புகுந்தது-நேர்ந்தது, ஆர் இடை உழந்தோர்—அரிய வழியில் வருந்தி வந்தோராகிய கூத்தர் முதலியோர். மலைக்கும்-வருத்துகின்றது. ஏற்று-யாசித்து. ஆர் அஞர்-மிக்க வருத்தம்.

9–16 : நியமம்-கோயில். அழியல்—வருந்தாதே. வறம் கூரினும்—பஞ்சம் மிகுந்தாலும். இ ஓடு—இந்த அட்சய பாத்திரம். தான் தொலைவு-தான் (உணவைத் தராமல்) ஒழிவது.

17–21 : நந்தா-அழியாத. ஏனோர்-மற்றையோர்.

22–27 : விடாஅ-நீங்காதனவாய். பழுமரத்து-பழுத்த மரத்திலே. இழும் என் சும்மை-இழுமென்னும் ஓசையைக் கொண்ட ஒலி.

28–35 : பாண்டு கம்பளம் - வெள்ளைக் கம்பளத்தினலியன்ற ஆசனம். துளக்கியது-நடுங்கச் செய்தது. மன்-தங்கியுள்ள. ஓம்பும்-பாதுகாக்கும்.

38–48 : வெள்ளை மகன்-அறிவில்லாத சொல்லையுடையவன். இற—முறியும்படி. எள்ளினன்-இகழ்ந்தனன். புறங்காத்து ஓம்புநர்-பாதுகாத்தலைச் செய்பவரும். திருந்து முகம்-(வருத்தம் நீங்கியதால்) மகிழ்ச்சி கொண்ட முகம். கடிஞை-அட்சய பாத்திரம்.

## 4. மனோன்மணீயம்

பேராசிரியர் ராவ்பகதூர்—P. **சுந்தரம் பிள்ளை** அவர்களால் இந் நூல் இயற்றப் பெற்றது. இவ்வாசிரியர் கி. பி. 1855—இல் ஆலப்புழையிற் பிறந்து 1898—இல் மறைந்தார். இவர் **எம். ஏ.** பட்டம் பெற்றுத் திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் வரலாறு, தத்துவம் முதலியன போதிக்கும் பேராசிரியராய் விளங்கினர்.

### கதைத் தொடர்பு

[**மனோன்மணி** ஜிவகன் என்ற பாண்டியனுக்கு மகள். அவளது உயிர்த் தோழி **வாணி** என்பவள். வாணி **நடராஜன்** என்னும் இளைஞனை மணக்க விரும்பினள். அவள் தந்தையான சகடர் அவளை மந்திரி குடிலனுடைய மகனை ஒழுக்கம் கெட்ட பலதேவனுக்கு மணமுடிக்க விரும்பினர். வாணி அதற்கு இசையவில்லை. அரசனுக்கும் வாணிக்கும் நடந்த உரையாடல் இங்குப் பாடப்பகுதியாகும்.]

**ஜீவ :**

**மின்னேய்**

மருங்குல் வாணீ ! வாராய் இப்புறம் ;
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொன் மதியும்
உன்புத் தியுமுகுத் துழல்வதென் வம்பில் ?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனுமொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னைநீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை ? சீச்சீ!
நகையே யாகும் நீசெய்யும் வகையே.

**வாணி :**

அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே !
நிகழுமென் சிறிய நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா தடக்கு மாயினும்,
பேணி யொருமொழி பேசுவன் :
நேசமில் வதுவை நாசகா ரணமே.

**ஜீவ :**

புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றோ ராற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு

வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ? தருமமோ ? சாற்றே.

வாணி :

கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்
ஆக்கப் படும்பொரு ளாமோ ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்று யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்,
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற் களவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றுந் தன்மை யன்றி, யொருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே !

ஜீவ :

ஆமோ, அன்றே, யாமஃ தறியேம்;
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கைய ரென்றுஞ் சுதந்திர பங்கர்;
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடு முளத்தர்;

முதியவுன் தந்தை மதியிலுன் மதியோ
பெரிது ? மற் றவர்தமில் உன்னயம் பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதே வனுக்கே யுடன்படல் கடமை.

**வாணி :**

இலையெனில் ?

**ஜீவ .** கன்னியா யிருப்பாய் என்றும்.

**வாணி :**

சம்மதம்.

**ஜீவ :** கிணற்றிலோர் மதிகொடு சாடில்
எம்மதி கொண்டுநீ யெழுவாய் ? பேதாய் !
கன்னியா யிருக்கில் உன்னழ கென்னும் ?
அரைக்கி லன்றோ சந்தனங் கமழும் ?

**வாணி :**

விரைதரு மோசிறு கரையான் அரிக்கில் ?

**ஜீவ :**

நானே பிடித்த முயற்கு மூன்றுகால்
ஆணு லெங்ஙனம்

**வாணி :**

அரிவையர் பிழைப்பர் ?

(சேடி வர)

**சேடி ;**

சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
கால நோக்கினர்.

**ஜீவ :** சாலவு மினிதே;

ஆசனங் கொணர்தி.
(வாணியை நோக்கி) யோசனை வேண்டா;
எப்படி யாயினுஞ் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்; நன்குநீ யுணர்தி;
ஆயினுந் தந்தன மைந்துநாள்;
ஆய்ந்தறி விப்பாய் வாய்ந்தவுன் கருத்தே.

**வாணி :**

இறக்கினு மிறைவ ! அதற்குயா னிசையேன் ;
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும் மாற்றல ரேறே!

**—ஆசிரியர் சுந்தரம்பிள்ளை.**

## குறிப்புரை

வரி. 1–9. மருங்குல்-இடை, ஆய்ந்த-ஆராய்ந்த, உகுத்து-விட்டு, நச்சியது-விரும்பியது.

வரி. 10–15. அகலிடம்-அகன்ற பூமி, தனி புரந்து-சிறப்பாகப் பாதுகாத்து, நேசம் இல் வதுவை'- அன்பு இல்லாத மணம், நாச காரணம்-அழிவுக்குக் காரணமாகும்.

வரி. 16–20. மங்கையர், தையலார்—பெண்கள், நேயம்-அன்பு, சாற்று-சொல்.

வரி. 21–39 கற்பனை - கல்வியறிவு, ஐயம் - சந்தேகம், ஆக்கப்படும் பொருள்-உண்டாக்கப்படும் பொருள், தாரு-தரு; மரம், நிமல ஊற்று-அழுக்கற்ற ஊற்று நீர். ஆறலைகள்வர்-வழியில் வருவாரை வருத்திக் கொல்லும் கள்வர், உறு துணை-பொருந்திய துணை, அயர்ச்சி-சோர்வு; களைப்பு, நேரிடில்-நேருமானால், இகம்-இவ்வுலக வாழ்வு. பரத்துள சுகம்-மேலுலகத்து வரும் சுகம்.

40–44. கழல்-வீரக்கழல்; மன்னர் காலில் அணிவது, வீக்கிய-கட்டிய.

45-52. பிஞ்சிற் பழுத்த பேச்சு-இளமைப் பருவத்தில் முதியோர் போலப் பேசுதல், சுதந்திர பங்கர் - உரிமை யில்லாதவர், பேதையர்-அறிவு இல்லாதவர், பிறழ்ந்திடும் உளம்-மாறுபடும் மனம், உன் நயம்பேண-உன் நன்மையைப் பாதுகாக்க.

58–60. விரை தருமோ-மணம் வீசுமோ, "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்"—பழமொழி.

62–70. காலம் நோக்கினர் - அரசனைக் காண நேரம் அறிந்து வரச்சொன்னார். சாலவும் - மிகவும், சகடர் – வாணியின் தந்தை, மாற்றலர் ஏறு-பகைவரை அழிப்பதில் ஆண் சிங்கம் போன்ற வன்மையுடையவர்.

# IV. சிறு நூல்கள்

## 1. மீனாட்சியம்மை குறம்

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா;
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை! அம்மே;
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே;
உன்னாமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்;
உனக்கினியெண் ணினகருமம் இமைப்பினிற் கைகூடும்.
என்ஆணை எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகாண் அம்மே.

—குமரகுருபர சுவாமிகள்

## 2. முக்கூடற் பள்ளு

### குயில்

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே
பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையும் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே. 1

### மழை பெய்தல்

காவுக் கிறைவன் ஆகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்தகார்
கடலிற் படிந்து திருவில் கோட்டி
அடல்முக் கூடல் அரியுமாய்ப்
பூவுக் குயர்ந்த கலைமின் னோடு
மேவிக்க மலத் தயனுமாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனுமாய்த்

தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்
தானே யாகி உலகுக் குரிமை
ஊனே யாகி உயிருமாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துப் பொழிந்தபின்
குளிரு கின்றது கோன்க ழுத்தினில்
வெளிறு கின்றது வானமே 2

**பயிர் விளைவு**

பதிந்த நடவுதேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்துமென்மேல் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வர் எனத்தழைத்து முதல் குழைந்தே
பொதிந்த பொதியை நீட்டிப் பூட்டிக் காட்டிப்
புரப்போர் பொன்இணங்குகை போல வணங்கி
எதிர்ந்த கதிர்முளைத்தே இடைபழுத்து
ஏற்ற விளைவுதோற்றந் தோற்றியதே.

## 3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு;
தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலம்தனக்கும்
கூறும் தரமுண்(டு); உன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை;
முருகா ! முத்தம் தருகவே !
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா ! முத்தம் தருகவே.

## 4. அழகர் கலம்பகம்

பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலே
    யையெட்டிப் பார்த்துமந்தி
குதிக்கின்ற மாலிருஞ் சோலேவெற்
    பா! நின் குளிர்வதனம்
உதிக்கின்ற திங்கள், மெய் யுற்பலக்
    கா(டு), அங் கொழுகுபைந்தேன்
மதிக்கின்ற கட்டழ(கு), எங்கள்கண்
    மூழ்கு மதுகரமே.

## 5. குற்ருலக் குறவஞ்சி

சூழ மேதி யிறங்குந் துறையில்
    சொரியும் பாலேப் பருகிய வாளே
கூழை வாசப் பலாவினிற் பாயக்
    கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
    வருவி ருந்துக் குபசரிப்பார் போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
    சந்திர சூடர்தென் ஞரியநாடே.

### மீனுட்சியம்மை குறம்

இது மீனுட்சியம்மைமீது இயற்றப்பெற்ற குறம். மீனுட்சியம்மை என்பது மதுரையில் உள்ள அம்பிகையின் பெயர். தலேவனிடத்துக் காதல்கொண்ட தலேவியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாகச் செய்யும் பிரபந்தம் குறம் என்று வழங்கப்படும். இதனே இயற்றியவர் குமரகுருபரர்.

முச்சிறங்கை-மூன்று கைந்நிறையளவு.

### முக்கூடற்பள்ளு

இது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநையாற்றின் வடகரையில் உள்ள முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் திருமாலேப் பாட்டுடைத் தலேவராகக் கொண்டு பள்ளர் வாழ்க்கையைக் கூறுவது. முக்கடலின் வேறுபெயர் சீவலப்பேரி, இது சித்திரநதி, கோதண்டராம நதி, பொருநை நதி ஆகியமூன்று நதிகளும் கூடுமிடத்தில் இருக்கிறது. இங்குள்ள திருமாலின் பெயர்அழகர். இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லே. இவரை ஆதரித்தவர் காவை வடமலேந்திரன்.

1. பள்ளியர் குயிலேநோக்கிக் கூறுதல், சீவலப்பேரி—முக்கூடல். தாவளக்குடிகள்—மருத நிலத்துக் குடிகள், தேர்ப்பாலழகர்—பார்த்தசாரதி.

2. கா-கற்பகச் சோலை, கார்-மேகம், திருவில்கோட்டி-வானவில்லை ஆகாயத்தில் வளைத்து, அரி-திருமால், கடலில் படிந்ததாலும், வில்லை வளைத்ததாலும் மேகம் திருமாலாயிற்று. கலைமின்—சரசுவதி; கலைகின்ற மின்னல். கலைமின்னோடு சேர்ந்ததால் மேகம் பிரமனைப் போன்றதாகும். பணி-பாம்பு.

3. பசப்பு—பசுமை, முதல்வர்—திருமால், பொதி-கதிர்த்தொகுதி, இணங்கு-பொருந்திய, வணங்கி—வளைந்து, தோற்றம்-அழகு.

## திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது ஒருவகைப் பிரபந்தம், பிரபந்தத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்து, குழந்தைக்குரிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடப்படுவது. இது திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைக் குறித்துப் பாடப்பட்டது. குழந்தைக்குரிய பத்துப் பருவங்கள்: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை—அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவாம்.

இந்நூலின் ஆசிரியர் பகழிக்கூத்தர். இவர் இராமநாதபுரத்தை யடுத்த சன்ஞசிக் கிராமத்தில் வைணவப் பிராமணர் குலத்தில் தோன்றியவர்.

கந்நும் தரங்கம் - ஒலிக்கும் கடல், சூல்-கருப்பம், வாலுகம் - மணல்மேடு, கான்ற-ஈன்ற, மணி-முத்து, தந்நும் — மதம் பெருகும், கரடம் — கன்னம், மருப்பு-கொம்பு, தந்தம், சாலி—நெற்பயிர், தரம்—தகுதி. அலைவாய்-திருசெந்தூர்.

**அழகர் கலம்பகம் :—**இது மதுரைக்கு அருகேயுள்ள திருமாலிருஞ் சோலைமலையில் உள்ள அழகரைப்பற்றிப் பாடப்பெற்ற கலம்பகம், பலவகைப் பாக்களும் துறைகளும் கலந்து பாடப்படும் நூல் கலம்பகம் எனப்படும்.

பதிக்கின்ற — மேன்மேல் வளர்கின்ற, மந்தி—பெண் குரங்கு, வதனம்-முகம், உற்பலம்—குவளை, மதுகரம்-வண்டு.

## குற்றாலக் குறவஞ்சி

இது வஞ்சிக்கொடி போன்ற குறத்தி தான்வாழும் குற்றால மலையின் வளத்தைக் கூறுவதாகக் கவி புனைந்து இயற்றிய நூல். ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர்.

மேதி-எருமை, வாளை—ஒருவகை மீன், கூழை—குள்ளமான, சந்திரசூடர்-சிவபிரான், குற்றால மலையுள்ள பகுதி தென்னாரிய நாடெனப்படும்.

# V. வருணனை

### கந்துக் வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதைவில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே; 1

பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின்னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்களன்று சென்றுபந் தடித்துமே.
தேவராரமார் பன்வாழ்க என்றுபந் தடித்துமே ; 2

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவராரமார் பன்வாழ்க என்றுபந் தடித்துமே. 3

—இளங்கோவடிகள்.

### குறிப்புரை

பொலம் செய்கோதை – பொன்னாற் செய்தமாலை, வில்லிட–ஒளிவிட. தேவர் ஆரமார்பன் – தேவர்க்கரசன். வஞ்சனையால் இட்ட ஆரமணிந்த மார்பினையுடைய பாண்டியன், கந்துகம்-பந்து.

# IV. தனிப்பாடல்கள்

### கண்ட சுத்தி

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்
டகலா துறையும் அகளங்கா,
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே தேவ சிங்கமே,
திக்கு விஜயஞ் செலுத்திவரும்
செங்கோல் நடாத்தும் எங்கோவே.

## ஆற்றுப் படை

தேருளைப் புரவி வாரணத் தொகுதி
திறைகொணர்ந்து வருமன்ன ! நின்
தேயமே துனது நாமமேது ? புகல்;
செங்கையாழ் தடவுபாண ! கேள்:
வாரு மொத்தகுடி நீரும் நாமுமத்
தேவன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்தளித்த வெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரும் இப்பரிசு பெற்று மீள
வரலாகும், ஏகும் அவன் முன்றில்வாய்.
நித்தலச் சிகர மாடமாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கும்; உயர்வேம்பு நிற்கும் ; வளர்
பனையும் நிற்கும் ; அதன் அருகிலே
அரசு நிற்கும் ; அரசைச் சுமந்தசில
அத்தி நிற்கும் அடையாளமே. 2

### குறிப்புரை

1, கண்டசுத்தி என்பது ஒருவர் கருத்தை அறிந்து புலவர் செய்யுளாகப் பாடுவது. இச்செய்யுள் வீரராகவ முதலியார் பாடியதாக வழங்கி வருகிறது.

புடவி-பூமி, அடவி–காடு, நச்சுக்குழல்–பாம்பு, பஞ்சரம்–கூடு, அகளங்கன்–களங்கமில்லாதவன், வாரணம்-யானை.

2. ஆற்றுப்படை–வழிப்படுத்தல், ஆறை நகர்வாண பூபதியைப் பாடிப் பரிசில் பெற்று மீண்ட புலவன் வழியில் வரும் பாணனைக்கண்டு அவனை ஆற்றுப் படுத்தியது.

புரவி–குதிரை, வாரணம்-யானை, யாழ்-வீணை, நித்திலம்–முத்து, ஆர்-ஆத்திப்பூ; ஆத்திமாலை அணிந்த சோழன், வேம்பு-வேப்பமாலை அணிந்த பாண்டியன், பனை–பனைமாலை தரித்த சேரன், அரசு-அரசன், அத்தி–யானை, ஆர், வேம்புமுதலிய மரங்களின் பெயராதலையுங் காண்க.

# உரை நடை

## 1. இலக்கியமும் வாழ்க்கை முறையும்

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள். M.A.

### அரசு

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை அடுத்தது காட்டும் பளிங்குபோல் எடுத்துக் காட்டுவது அந்நாட்டின் இலக்கியமேயாகும். தமிழ் இலக்கியத்தினின்று, தமிழர் நாகரிகம், தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, சமூக நிலை, அரசியல் நிலை முதலிய இன்னோரன்ன பிற பொருள்களைப்பற்றி நன்கு அறியலாமெனினும் ஈண்டுப் பேசப் படும் பொருள், தமிழ் இலக்கியத்தினின்று தமிழ் நாட்டின் அரசு எவ்வாறு விளங்கியது என்பதையும், அவ்வரசின் துணையால் மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு பண்படுத்தப்பட்டது என்பதையும் ஆராய் வதாகும். இனி, சங்க இலக்கியமும் அதற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியமும் அரசினைப் பற்றிக் கூறுவன யாவை என்பதைக் காண் போம்.

பழந்தமிழர், மன்னனைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. தமிழ் மொழி யில் இறைவன் என்ற சொல் கடவுளையும் அரசனையும் குறிக்கும். அதுபோலவே கோவில் என்ற சொல் கடவுளர் உறையும் கோவிலை யும், மன்னன் வதியும் அரண்மனையையும் குறிப்பதாகும். இறைவன் என்ற பெயர் அரசனுக்கு எம்முறையில் பொருத்த முடைத்து என் பதை ஆராய்வோம். 'இறை மாட்சி' என்ற சொல்லுக்குப் பொருள் கூறப்போந்த பரிமேலழகர், 'இறை மாட்சியாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகள். உலகபாலர் உருவாய் நின்று (உலகத் தைக் காக்கும் காப்புக் கடவுள்போல் வீற்றிருந்து) உலகத்தைக் காத்தல் இறை என்றார்,' என்பர். ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்'' என்ற திருவாய்மொழி ஈண்டு நோக்கத்தக்கது. தலைவி தன் தோழிக்குக் கூறுவதாகவுள்ள பொரு நராற்றுப் படையின் ஈற்றிலுள்ள ஒரு வெண்பாவை நோக்குவோம்;

"அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன்—திருமார்பின்
மானமால் என்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை."

"தோழி! அரியணையின்மீது வீற்றிருந்த திருமாவளவன் என்ற கரிகாலனை யான் கண்டேன். யான் அவனை எளிய மனிதனாகக் கருதவில்லை. இலக்குமி வீற்றிருக்கும் திரு மார்பையுடைய திருமாலே அவன் எனக் கருதி அவனை வணங்கினேன்," என்றாள் தலைவி.

மன்னர் புகழிற்கு மாயோன் புகழை உவமையாகக் கூறுதல் 'பூவை நிலை' என்ற புறத்துறையின் பாற்படும் என்பர் தொல் காப்பியர்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்பது பொய்யாமொழி யன்றோ! மன்னன் மன்னுயிர்க்கு உயிர் போன்றவன் என்ற கருத்தில் மோசிகீரனார் என்ற சங்கப் புலவர்,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம்—186)

என்றார். தேவரினும் மன்னர் சிறந்தவர் என்பர் திருத்தக்க தேவர் தேவர் ஒருவனுக்கு இப்பிறவியில் நன்மையோ தீமையோ செய்ய எண்ணினால், அதை உடனே செய்ய இயலாது. ஆனால் மன்னன், ஒருவனுக்கு நன்மையோ தீமையோ செய்ய நினைப்பின், அதை உடனே செய்து முடிக்க வல்லவனாகின்றான்.

"அருளு மேலரச சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தேனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ?"
(சிந்தாமணி—247)

என்ற திருத்தக்க தேவரின் திருவாக்கிற்கு இலக்காக 'அரசன் அன்று சாதிக்கும்; தெய்வம் நின்று சாதிக்கும்' என்பது பெறப்படுகிறது.

அரச பதவி என்பது இத்துணைச் சிறப்புடையதேனும் மிக்க பொறுப்பு வாய்ந்ததாகும். இதனாலன்றோ அரசாட்சியானது அரச பாரம் என்றே வழங்கப்படுகின்றது. "Uneasy lies the head

that wears the crown" என்ற ஆங்கில அறிவுரையினைத் தமிழ் மன்னர் நன்கு உணர்ந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. மழை பெய்யாதிருக்கும்போதும் உயிர்கள் துன்பம் அடையும்போதும் மன்னனுக்குக் கவலை உண்டாகும். எனவே, அரச குடியிற் பிறந்து அரசாள்வது துன்பமே ஒழிய அதில் சிறப்பில்லை என்ற கருத்தில் சேரன் செங்குட்டுவன் கூறுவதைக் காண்க:

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென" (சிலப்பதிகாரம்)

கைகேயி இராமனைக் காட்டிற்குப் போகப் பணித்தபோது வண்டியில் பூட்டப்பட்ட ஓர் எருதினை அருட்குணமுடையான் ஒருவன் அவிழ்த்து விட்டால், அந்த எருது எவ்வாறு மகிழ்ச்சி அடையுமோ, அவ்வாறே இராமன் அரசபாரம் பெறுவதினின்றும் விலகியதற்கு மிகவும் மகிழ்ந்தான் என்பர் கம்பர். அரசபாரத்தின் பொறுப்பினை எடுத்துக் காட்ட வந்த சேக்கிழார், "அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ தான்" என்றார்.

தமிழ் நாட்டில் கோனாட்சியே (Monarchy) சிறப்பாக நடைபெற்று வந்தது. சேர சோழ பாண்டியர் என்ற வேந்தர் குடும்பங்கள் தமிழரிடையே மிகப் பழமையுடையனவாக விளங்கின. பழங்குடி என்பதற்குப் பொருள்கூற வந்த பரிமேலழகர், பழங்குடி என்பது தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார். 'தொன்று தொட்டு வருதலாவது சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்' என்றார். தந்தையின் பின் மைந்தன் அரசாள்வது மரபாகும். வாட்போரில் வெற்றி பெற்ற அரசிளங் குமரனுக்கு அந்நாட்டில் உள்ளார் வேண்டிய சிறப்புக்கள் செய்து அவனைத் தம் அரசனாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது 'பிள்ளையாட்டு' என்று தொல் காப்பியர் கூறும் புத்துறையால் விளங்குகின்றது. எனவே அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குடிமக்கள் அக்காலத்தில் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

இனி, அரசனது ஆட்சிமுறை எவ்வாறு விளங்கியது என்பதைக் காண்போம். அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என

இவைகள் அரசனுக்கு அங்கங்களாம். மன்னன் காட்சிக்கு எளியனு யும் கடுஞ் சொல் அற்றவனுயும் இருத்தல் வேண்டும். அக்காலத் தில், ஆட்சிபுரியும் அரசனுக்குத் துணையாக 'ஐம்பெருங்குழு', 'எண் பேராயம்'' என்ற இரண்டு பேரவைகள் விளங்கின. அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதுவர், சாரணர் என இவர்கள் கூடியது ஐம்பெருங்குழுவாம். கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற் றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்பாரடங்கியது எண்பேராயமாகும். இவருள் கர ணத்தியலவர் என்பார் அரசாட்சியின் வரவு செலவாகிய கணக்குப் பார்ப்பவர். அரசனது ஆணையை நிறைவேற்றும் அதிகாரிகள் கரும விதிகள் எனப்படுவர். கனகச்சுற்றம் என்பார் பொருட்காப்பாளர். கடைக்காப்பாளர் என்போர் அரண்மனைக் காவலர். நகரமாந்தர் என்போர் நகரத்திலுள்ள மூதறிஞர். எனவே நகரத்திலுள்ள சில மூதறிஞரும் அரசன் அவையில் இடம் பெற்றனர் என்பது புலனுகின் றது. நீதி தவருது அரசாட்சி செய்வதே மன்னனுக்கு வெற்றியாகும் என்பதைத் தமிழ் நாட்டு மன்னர் நன்கு உணர்ந்தனர். மன்னனுக்கு வெற்றி தருவது வேல் அன்று செங்கோலே என்பதனைப் புலவர்கள் அரசர் பலர்க்கும் அறிவுறுத்தினர்.

> ''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' (புறம் - 55)

என்ருர் ஒரு புலவர். மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதி அரசா ளும் வேந்தனைக் குடிகள் மிகவும் விரும்புவர். உதாரணமாக இராம பிரானுடைய முடிசூட்டு விழாவினைக் கேட்ட அயோத்தி மக்கள் மிக வும் மகிழ்ச்சி அடைந்து இராமன் அரசாள்வது குடிகளே அரசாள்வது போலாகும் என்ற கருத்தில்,

> ''பாவமும் அருந்துயரும் வேர்பறியு மென்பார்
> பூவலய மின்றுதனி யன்றுபொது வென்பார்.''

எனக் கம்பர் கூறியதைக் காண்க. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்பதற்கு ஏற்ப, அரசன் செங்கோலனுயின் அவன் நாட்டு மக்களும் நீதியினின்று வழுவார். குடிமக்களுக்கு நல்லொழுக்கத் தைப் புகட்டுபவன் வேந்தன் என்பது,

> ''நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே.'' (புறம் - 312)

என்ற புறப்பாட்டால் விளங்குகின்றது. மன்னனது முறை காவல் குறையின், நாட்டில் மாதவர் நோன்பும் பெண்களின் கற்பும் காண் பது அரிதாகும் என்பதை,

"மாதவர் நோன்பு மடவார் கற்பும்
காவலன் காவ லினறெனி னின்றால்" (மணிமேகலை 22: 208-9)

என்று மணிமேகலை வற்புறுத்துகின்றது. செங்கோல் முறையினைத் தமிழ் மன்னர் உணர்ந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் தருவேன். பசுவின் கன்று இறப்பதற்குக் காரணமாயிருந்த தன் மைந்தன் வீதி விடங்கனை மனுச்சோழன் என்பான் தேர்க்காலில் கிடத்தித் தேரினை அவன் மீது செலுத்தினான் என்பதைப் பெரியபுராணம் கூறும். கோவலன் கொலையுண்டதற்குத் தானே காரணம் என்பதை உணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்ததை,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே"

(சிலப்பதிகாரம் 20: 74 - 78)

என இளங்கோவடிகள் கூறும் மாற்றம் தமிழ்நாட்டு மன்னர் செங்கோல் முறையினின்று தாம் தவறியது உணர்ந்த பின் உயிர் வாழார் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இனி, அரசனுக்குரிய தொழில்கள் எவை என்பதை ஆராய்வோம்: ஓதல், வேள்வி செய்தல், ஈதல், காத்தல், தண்டித்தல் என அரசர்க்கு ஐவகைத் தொழில் உண்டு என்பர் தொல்காப்பியர். அரசன் நீதிநூல்களைக் கற்றவனும், யானையேற்றம் படைக்கலம் பயிலல் முதலியவற்றில் பழக்கமுள்ளவனும் இருத்தல் வேண்டும். அரசன் கல்வியின் பயனால் அறிவுடையவனா யிருப்பின் அது தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன் படுவதால் அரசனுக்குக் கல்வி இன்றி யமையாததாகும். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற அரசர்களின் பெயரிடைக் காணும் அடைமொழிகளால் பண்டைக்கால மன்னர் வேத வேள்விகள் இயற்றினர் என்பது பெறப்படுகின்றது. சேர சோழ பாண்டியராகிய முடிமன்னரும் பாரி, ஆய், அதியமான் முதலிய கடையெழு வள்ளல்களும் புலவர் பெருமக்களை ஆதரித்து வந்த வரலாற்றால் மன்னரின் கொடைச் சிறப்பு விளங்குகின்றது. எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தினைப் பாடிய அரி

சில்கிழார் என்ற புலவருக்கு அப் பாட்டுடைத் தலைவனாகிய பெருஞ் சேர லிரும்பொறை என்ற அரசன் ஒன்பது நூறாயிரம் பொற்காசு பரிசில் கொடுத்ததன்றித் தனது அரச பதவியினையே புலவருக்கு அளித்தான். ஆனால் அப்புலவர் அவ்வரச பதவியை அவனுக்கே மீட்டும் திருப்பிக் கொடுத்து அவனிடம் தாம் அமைச்சராய் விளங்கினார். மன்னன் பிறருக்குப் பொருள் வழங்குவானே யன்றி, குடிமக்களிடமிருந்து தான் பரிசு பெறமாட்டான் என்பது 'பிறரைத்தா னிரப் பறியலன் இரந்தோர்க்கு மறுப்பறியலன்' (புறம்-239) என்ற புறப்பாட்டால் தெரியவருகின்றது.

இவ்வுலகத்தில் வாழும் மன்னன் தன் நாட்டில் வாழும் மக்களுக்கு, தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், ஏனை உயிர்களால் வரும் ஐந்து அச்சங்களையும் போக்கி ஆளுதல் வேண்டும் என்பர் சேக்கிழார். குற்றம் செய்யும் மக்களை மன்னன் தண்டித்தல் வேண்டும். தீக்கொளுத்துபவர், நஞ்சிடுபவர், கொலைசெய்வோர், திருடர், வழியில் கொள்ளை அடிப்பவர், ஊரில் உள்ள பொருளைச் சூறையாடுபவர், பிறர் மனை விழைபவர் ஆகிய இவர்களை அரசன் கொன்று ஒழுக்கமுடைய பெரியோரைக் காப்பாற்றுதல் வேண்டும். இவ்வாறு அரசன் செய்தல் உழவன் ஒருவன் தன் பயிர்க்குச் சேதம் விளைக்கும் களைகளைப் பிடுங்கிப் பயிரைக் காப்பதைப் போன்றதாகும் என்ற கருத்துடன் விளங்கும்,

> ''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்''

என்ற திருக்குறள் ஈண்டு நோக்கத் தக்கது.

தமிழ் நாட்டில் அரசனுக்குரிய வருவாய் எவை என்பதை இனி ஆராய்வோம்: மக்கள் தம் நிலத்தில் விளைந்த விளையுளில் ஆறில் ஒரு பகுதி மன்னனுக்குக் கொடுத்தனர். இல்லறத்தான் ஒருவன் தனக்குள்ள பொருளை, தென் புலத்தார், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான், அரசன் என அறு வகையாகப் பிரித்துக்கொண்டான் என்பது, 'தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்(கு) ஐம்புலத் தாறோம்பல் தலை' என்ற திருக்குறளின் விளக்கவுரையால் விளங்குகின்றது. தன் குடிமக்களில் சிலர் வறுமையால் பிடிக்கப்பட்டு அரசனுக்கு வரி செலுத்த இயலாத நிலையில் இருந்த போது அரசன் அவர்களிடத்து வரி வாங்கவில்லை என்பதற்கு இலக்கியச் சான்று உள்ளது.

வெள்ளைக்குடி நாகனார் என்பவர் தம் நிலங்களுக்குரிய வரிப் பணத்தைச் செலுத்த இயலாத தம் நிலையைச் சோழன் கிள்ளிவளவனிடம் முறையிட, அவ்வளவன் அந்நிலங்களை இனமாகவே அப்புலவர்க்குக் கொடுத்துவிட்டான். மன்னர் கடல் வாணிகத்துக்குரிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கம் வாங்கினர் என்பது பட்டினப்பாலையில் வந்துள்ள கரிகால் வளவனின் சுங்கச் சாலையின் சிறப்பால் தெரிகின்றது. உள்நாட்டு வாணிகத்திலும் அரசனுக்குச் சுங்கம் கிடைத்தது என்பது 'சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி' என்ற பெரும்பாணாற்றுப்படையால் விளங்குகின்றது. சுங்கம் என்பது அக்காலத்தில் உல்கு என்ற பெயரால் வழங்கப்பட்டது. இவைகளன்றிச் சிற்றரசர்களும் பிறரும் முடிமன்னருக்குத் திறை செலுத்திவந்தனர். சிலர் தம் திறைகளைக் காசாகச் செலுத்தினர். குடிமக்கள் சிலர் தம் நிலத்தில் விளையும் பண்டங்களையும் அரசனுக்குத் திறையாகச் செலுத்தினர் என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். இவ்வாறு குடிகளிடத்துப் பெற்ற பொருளினை மன்னன் நாட்டின் நலத்திற்கே செலவிட்டு வந்தான். கரிகால் சோழன் குடிகளின் பயிர்த் தொழிலுக்குப் பயன்படும் வண்ணம் காவிரி ஆற்றிற்கு அணைகட்டி நாட்டின் நீர்வளத்தைப் பெருக்கினான். தமிழ் மன்னர் பூஞ்சோலைகளையும், தெருக்களையும் சிறந்த முறையில் அமைத்தனர். அரசனது பிறந்த நாளினைப் 'பெருநாள்', 'பெருமங்கலம்' என வழங்கிக் குடிமக்கள் சிறந்த முறையில் கொண்டாடினர்.

தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் விளங்கிய போர், அறப்போரன்றி மறப்போரன்று. இத்துறையில் அரசர் சாம, பேத, தான, தண்டம் என்ற முறையினைக் கையாண்டனர். அரசன் போர் தொடங்குவதற்கு முன்னர், குறிப்பிட்ட நன்னாளில் தனது வெற்றிவாளையும் கொற்றக்குடையினையும் யானைமேலேற்றிக் கோட்டைக்கு வெளியில் செலுத்துவதுண்டு. இதனை 'நாட்கோள்' என்பர் தொல்காப்பியர். பண்டை நாளில் அரசனுக்குத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என நால்வகைச் சேனைகளும் இருந்தன. அரசர் சிலர்க்குக் கப்பற்படையும் உண்டு. வாள், வில், வேல், குந்தம், சக்கரம் முதலியன போர்க்கருவிகளாக விளங்கின. புலித்தோலாற் செய்த கவசத்தை வீரர்கள் அணிவதுண்டு. போருக்குப் புறப்படுவ

தற்கு முன் மன்னன் தன் படைகளுக்கு விருந்தளிப்பான். இதற்குப் 'பெருஞ்சோற்றுநிலை' என்பது பெயர். போர் நாட்டில் ஒரு குறிப் பிட்ட இடத்தே நிகழும். போர் துவங்குவதற்கு முன் ஓர் அரசன் தான் போர் துவங்கப்போவதாகவும் அவ்வூரிலுள்ள பசு, பார்ப் பன மக்கள், பெண்டிர், பிணியுடையோர், மக்கட் பேறு அற்றோர் முதலியோர் அவர்க்குரிய பாதுகாப்பான இடத்துக்குப் போகலாம் என்றும் அறிவிப்பான். பகைவரின் பசுக் கூட்டத்தைக் கவர்தல் போரின் தொடக்க மாகும். இதனை 'வெட்சித்திணை' என்பர். போரில் தமது பல்வேறுபட்ட வீரச் செயல்களைப் பிறருக்கு எடுத்துக் காட்ட வேண்டி மன்னனும் அவனது வீரர்களும் வஞ்சி, உழிஞை, வாகை முதலிய பூக்களை அணிவர். போர் நடக்குங் காலத்தில் அஞ் சிப் புறங்காட்டிச் செல்லும் வீரர், நடுங்கும் உள்ளமுடையோர், தலை மயிர் குலைந்தோர், படையிழந்தோர் ஆகிய இவர்மீது வீரர் அம்பினைச் செலுத்தார். இதுவே பண்டைக்கால அறப் போருக்குச் சான்றாக விளங்குகின்றது. போரில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மன்னன் பொன்னாலாகிய வாகைப் பூவினை அளிப்பதுண்டு. வீரத்துடன் சண்டை செய்து போரில் இறந்தவர்க்கு வீரக்கல் என்ற நடுகல் நாட்டுவது பண்டைக்கால மரபாகும்.

அக்காலச் சமய நிலையை நோக்கும் போது மன்னன் குடிகளுக் குச் சமயத் துறையில் முழு உரிமை அளித்ததாகத் தெரிகின்றது. அருகன், அறுமுகன், இந்திரன், காமன், சிவன், திருமால், பல தேவன், பித்தன் முதலிய கடவுளர்க்குத் தனிப்பட்ட கோவில்கள் தமிழ் நாட்டில் விளங்கின என்பதிலிருந்து மக்கள் அவரவர்க்குகந்த கடவுளரை வழிபட்டனர் என்பது பெறப்படுகின்றது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே நாட்டில் சைவ வைணவ சமண சமயத் தார்க்குள் பூசல் ஏற்பட்டது என்பது வரலாற்றால் அறியக் கிடக்கும் உண்மையாகும்.

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழர், மன்னரைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதும், தமிழ் நாட்டில் முடியாட்சியாகிய கோனாட்சியே சிறந்த முறையில் நடை பெற்றது என்பதும், பண்டைக் காலப் போர் அறப்போராக விளங்கியது என்பதும், குடிமக்களுக்குச் சமயத் துறையில் உரிமை அளிக்கப்பட்டது என்பதும், ஒருவாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றின் விரிவினைத் தமிழ் இலக் கியக் கடலுள் புகுந்து காண்மின்.

**I. பொருள் கூறுக :—**

பளிங்கு, உலகபாலர், சான்று, அமளி, மாயோன், பூவைநிலை, அமைச்சு, பேரவை, இரப்பு, சூறை, விழைபவர், திறை.

**II. வாக்கியங்களில் அமைக்க :—**

அடுத்தது காட்டும் பளிங்குபோல், பண்படுத்தப்பட்டது, உலகபாலர் உருவாய் நின்று, உவமையாகக் கூறுதல், திருவாக்கிற்கு இலக்காக, மிக்க பொறுப்பு வாய்ந்தது, தொன்றுதொட்டு, காட்சிக்கு எளியன், அறிவுறுத்தினர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் கருதி.

**III. விடை எழுதுக :—**

1. நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுவது எது ?
2. தமிழ் இலக்கியத்திலிருந்து நாம் அறிவன யாவை?
3. பழந்தமிழர், மன்னனைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதற்குச் சான்று கூறுக.
4. திருத்தக்க தேவர் யார் ?
5. " மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பம் " என்று சேரன் செங்குட்டுவன் கூறக் காரணம் என்ன ?
6. பழங்குடி என்பதற்குப் பரிமேலழகர் காட்டும் உரை யாது ?
7. அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்குப் பழங்காலத்திலே உண்டு என்பது எதனுல் பெறப்படுகிறது ?
8. அரசனுக்குரிய அங்கங்கள் எவை ?
9. ஐம் பெருங்குழு எனப்படுவது எது ?
10. கருமவிதிகள் என்பார் யார் ?
11. பொருட் காப்பாளருக்குப் பழங்காலத்தில் வழங்கிய பெயர் யாது ?
12. மன்னனுக்கு வெற்றி தருவது எது ?
13. காவலன் காவல் இன்றெனில் நாட்டில் எவை அரிதாகும் ?
14. செங்கோல் முறையினைத் தமிழ் மன்னர் உணர்ந்தனர் என்பதற்குச் சில சான்றுகள் தருக.
15. அரசனுக்குரிய தொழில்கள் எவை ?
16. மக்களுக்குத் தோன்றும் ஐவகை அச்சங்கள் எவை ?
17. 'பெருநாள்' எனப்படுவது எது ?
18. போரில் மன்னர் மேற்கொண்ட நால்வகை முறைகள் எவை ?
19. நாட்கோள்—பொருளை விளக்குக.
20. தமிழர் எவர்மீது அம்பினைச் செலுத்தார் ?
21. பழங்காலத்தில் குடிகள் சமயத்துறையில் முழு உரிமை பெற்றிருந்தனர் என்பது எவ்வாறு விளங்கும் ?

# 2. அவன் யார் ?

மகாமகோபாத்தியாய. டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர்.

தமிழ் இலக்கிய நூல்களில் இப்பொழுது நமக்குக் கிடைப்பன வற்றுள் மிகவும் பழையன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பனவாம். இவற்றைச் சங்க நூல்களென்று கூறுவர். கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்களாற் பாடப்பெற்ற செய்யுட்களை உடைமையின் இவை இங்ஙனம் வழங்கப்படுகின்றன. இந்த நூல்களால் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்த புலவர் வரலாறுகளையும், அவர்களை ஆதரித்துப் போற்றிய செல்வர்கள் வரலாறுகளையும், அக்காலத்துத் தமிழ் நாட்டினரது நாகரிக நிலை, ஒழுக்கம் முதலியவற்றையும் செவ்வனே அறிந்து கொள்ளுகிறோம். புறநானூறு முதலிய நூல்களால் பல அரசர்களுடைய சரித்திரங்களையும், சிற்றரசர்களுடைய வரலாறுகளையும், வீரப் பெருமக்கள் அருஞ் செயல்களையும் தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய குணங்களுட் சிறந்தனவாகக் காணப்படுவன வீரமும், ஈகையுமாம். வெற்றிச் சிறப்பும் கொடைச் சிறப்புமாகிய இவ்விரண்டு சிறப்புக்களை அவ்வரசர்கள் தங்களுடைய வாழ்வுக்கு இரண்டு கண்ணாகக் கொண்டு வாழ்ந்தார்கள். தங்களுக்கு எவ்வகையான குறை நேர்ந்தாலும் அதனை அவர்கள் இழிவாகக் கருதார்கள். வீரமிலரென்றேனும், கொடை இயல்பிலரென்றேனும் கூறப்படுவதைக் காட்டிலும் இறந்துபடுவதை அவர்கள் மேலாக விரும்புவார்கள்.

> "விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
> வைக்குந்தன் னாளை யெடுத்து"

என்ற குறள் வீரமின்மையால் வாழ்வு பயனற்றொழியும் என்ற அரிய கருத்தை வெளியிடுகின்றது. இப்படியே,

> "சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
> ஈதல் இயையாக் கடை"

என்ற குறள் ஈயாமல் இருப்பதினும் இறந்து படுதல் இனியதென்று கூறுகின்றது. இவ்விரண்டும் பண்டைக் காலத்துப் பெருமக்கள் கடைப்பிடித்த பேரறம்.

இங்ஙனம் வாழ்ந்தவர்களுள் **கண்டீரக்கோப்பெருநள்ளி** என்பவன் ஒருவன். அவன் ஒரு சிற்றரசன்; ஏழு வள்ளல்களில் ஒரு

வன்; தோட்டி யென்னும் மலைக்குத் தலைவன். அவனைப் புலவர் பலர் பாடிய செய்யுட்கள் புறநானூற்றில் இருக்கின்றன. அவற்றுள் **வன்பரணர்** பாடிய 150-ஆம் செய்யுளிற் கண்ட வரலாறு இங்கே சில வேறுபாடுகளுடன் வெளியிடப்படுகிறது.

ஒரு பெரிய மலையின் மேலுள்ள காட்டு வழியில் ஒரு புலவன் தன் சுற்றத்தாருடன் நடந்து சென்றான். அவனுடைய ஓய்ந்த நடையும் முகத்திலுள்ள வாட்டமும் பல நாளாக அவன் பட்டினி கிடந்த நிலையைப் புலப்படுத்தின. உடன் வந்த சுற்றத்தாருடைய நிலையும் அப்படியே இருந்தது. அவனது இடையிலுள்ள ஆடை கறுப்படைந்தும் கிழிந்தும் மக்கியும் இருந்தது. குளிர்காலத்தில் மழைத்துளியால் நனைந்த பருந்தினது கரிய சிறகைப்போல அது தோற்றியது. அவனுக்கு 'நாம் எங்கே போகிறோம்?' என்ற நினைவுகூட இல்லை, 'யாரிடம் போகவேண்டும்?' என்ற குறிப்பும் இல்லை. கால்போன வழியே போய்க்கொண்டிருந்தான், அவனைத் தொடர்ந்து அந்தப் பட்டினிச் சுற்றத்தார் சென்றனர்.

கால்கள் ஓய்ந்தன. சிறிது இளைப்பாறலாமென்ற எண்ணம் புலவனுக்கு உண்டாயிற்று. அம்மலைவழியே இருந்த ஒரு பெரிய பலா மரத்தடியில் அவனும் சுற்றத்தாரும் தங்கினார்கள். 'எங்கே போவது? என்ன பண்ணுவது?' என்று திக்குத் தெரியாமல் அலைகின்ற அவர்களுக்கு எதிரே ஒரு வீரன் தோன்றினான். அவன் அந்தக் காட்டில் வேட்டையாடி விட்டு வந்தான். அவன் கையிலிருந்த வில்லைப் பார்த்தாலே ஒரே காலத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விடுபவன் அவனென்று தோற்றியது, அவன் காலில் அழகிய வீரக்கழல் இருந்தது. அவனுடைய உச்சியில் ஒரு சிறந்த நீலமணி ஒளி வீசியது. அவனது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலே புலவனுக்கு அவனிடத்தில் ஒரு பெருமதிப்பு உண்டாயிற்று. அஞ்சலி செய்த வண்ணமே புலவன் எழுந்தான். பாவம்! நெடுந் தூரம் நடந்து வந்த வலியினால் அவனது கால் அவன் ஸ்வாதீனத்தில் இல்லை; நடுங்கியது. வீரன், "பேசாமல் அப்படியே உட்காருங்கள்" என்று கையமர்த்திப் புலவனை இருக்கச் செய்தான். அனுடைய வார்த்தைகள் அன்பில் ஊறி வெளிவந்தன.

புலவனும் அவனுடைய சுற்றத்தாரும் பசிப்பிணிக்கு இலக்காகி உயிரை விடும் தறுவாயிலுள்ளனரென்பதை அவ்வீரன் அறிந்து

கொண்டான். "நீங்கள் எந்த ஊர்? எதற்காக வருகிறீர்கள்? யார் வரச் சொன்னார்கள்? என்னைத் தெரியுமா?" என்ற கேள்விகளை அவர்களிடம் கேட்கவில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுக்கு முதலில் வேண்டுவது ஆகாரமே என்பதை அவன் நன்றாக அறிந்தான். ஆதலின், தான் வேட்டையாடிக் கொணர்ந்திருந்த மான் தசையை ஓரிடத்தில் வைத்து விட்டு அங்கிருந்த சுள்ளிகளைப் பொறுக்கி ஒரு கட்டையிலே தீயைக் கடைந்து மூட்டினான். அவனுடன் வந்திருந்த இளைஞர்கள் காட்டு வழியில் தனித்தனியே பிரிந்து விட்டார்கள். அவர்களெல்லாரும் வருவதற்குமுன் தன் கையாலேயே மூட்டிய அத்தீயில் அத்தசையைச் சுட்டுப் புலவனுக்கும் பிறருக்கும் கொடுக்கவேண்டுமென்பது அவன் ஆசை. அவ்விளைஞர்கள் வரும் வரையில் பசி காத்திருக்குமா?

மிக்க விரைவில் நெய்விழுதுபோல் இருக்கும் வெள்ளிய நிணத்தைப் பக்குவம் பண்ணிச் சுடச் சுடப் புலவனுக்கும் உடனிருந்தவர்களுக்கும் அவ்வீரன் கொடுத்தான். ஆகாரத்தைக் கண்டு எத்தனையோ நாளான அவர்களுக்கு அந்த உணவு தேவாமுதத்தைப்போல் இருந்தது. சுடச்சுட இருந்த அந்த ஆகாரம் அவர்களுடைய சுடுபசியை நீக்கியது.

அதுவரையில் புலவனுக்குத் தன்னைச் சுற்றிலுமுள்ள காட்சிகளைக் கவனித்துப் பார்க்கும் உணர்ச்சியில்லை. பசி எல்லாவற்றையும் அமுத்தி மேலோங்கியிருந்தது. வயிற்றில் ஆகாரம் விழுந்தவுடன் அவனுடைய கண்ணுக்கும் மூக்குக்கும் மற்றப் பொறிகளுக்கும் உணர்ச்சி உண்டாயிற்று. அருகிலுள்ள அருவி நீரைக் கையால் அள்ளி அள்ளிக் குடித்தான். யாவரும் குடித்து ஏப்பம் விட்டார்கள். புலவனுடைய கண்கள் அம்மலையிலுள்ள மரச்செறிவைக் கண்டு களித்தன; அவனுடைய உடம்பு அந்தக் காட்டின் குளிர்ச்சியை உணர்ந்தது; அவனுடைய மூக்கோ காட்டு மலர்களின் நறுமணத்தை நுகர்ந்தது. "ஆகா! என்ன அழகிய மலை!" என்று பரம திருப்தியோடு அவன் அந்த மலையையும் காட்டையும் கண்ணாரப் பார்த்து மகிழ்ந்தான்; அப்பால் தனக்கும் தன் சுற்றத்தாருக்கும் விருந்தளித்த வீரனை நோக்கினான். என்ன அழகிய கோலம்! அவனைப் பிரிவதற்கு மனம் வரவில்லை. ஆயினும் பிரியத்தானே வேண்டும்.

"தெய்வம்போல வந்து உதவி செய்தீர்கள். நாங்கள் போய் வருகிறோம்" என்றான் புலவன்,

"அப்படியா! நீங்களெல்லோரும் நன்ருகப் படித்தவர்களைப் போலவே காணப்படுகிறீர்கள். உங்களுக்குப் பரிசாக ஏதாவது கொடுக்கவேண்டும். காட்டு வாசிகளாகிய எங்களிடத்தில் என்ன உயர்ந்த பொருள் இருக்கிறது? இவற்றையாவது பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் சொல்லிக்கொண்டு அவ்வீரன் தன் கழுத்திலிருந்த பலமுத்து வடங்களாலாகிய ஆரத்தையும், கையிலணிந்திருந்த பொற்கடகத்தையும் கழற்றினன்; புலவனது கையிற் கொடுத்து அஞ்சலி செய்தான்.

புலவனுக்கு உண்டான வியப்பின் அளவை வரையறுத்துச் சொல்ல முடியுமோ? முன்பின் அறியாத இவன் நம்மை உபசரித்து இவ்வளவு உயர்ந்த பரிசைத் தருகிறன். கொடுப்பதோ மிக அரிய பரிசு; சொல்வதோ 'நான் எதைக் கொடுக்கப் போகிறேன்' என்ற பணிவான சொல். "இந்தக் குணக்குன்ருகிய பெரியோன் யாரோ தெரியவில்லையே?" என்ற எண்ணத்துடன், "தங்களுடைய நாடு யாதோ?" என்று புலவன் மெல்லக் கேட்டான். அவ்வீரன் ஒன்றும் கூறவில்லை. "தங்கள் திருநாமத்தை யான் அறிந்து கொள்ளக் கூடுமோ?" என்று பணிவுடன் பின்னும் புலவன் கேட்க, அதற்கும் விடையில்லை.

"அவற்றைப் பற்றி நீங்கள் ஏன் அறிந்து கொள்ளவேண்டும்? நல்லது; போய் வாருங்கள், வந்தனம்" என்று சொல்லி அரைக்கணத்தில் அவன் காட்டுக்குள் போய்விட்டான்.

"அவன் யார்? அவன் யார்?" என்று புலவன் நெஞ்சம் கேட்டுக் கொண்டே யிருந்தது.

மிக்க உவகையுடன் அவன் தன் சுற்றத்தாரோடு புறப்பட்டான். வழியில் கண்டவர்களிடமெல்லாம், தன்னைப் போற்றிய உபகாரியைப் பற்றிச் சொல்லி, "அவன் யார்?" என்று கேட்டான். "அவனு? அவன்தான் நள்ளி! இந்தத் தோட்டி மலைக்குத் தலைவன்" என்று அவர்கள் அவனுக்குச் சொன்னுர்கள்.

"நள்ளியா!" என்று புலவன் ஸ்தம்பித்து விட்டான். நள்ளியைப் பற்றியும், தோட்டி மலையைப் பற்றியும் உலகமெல்லாம் புகழ்வதை அவன் கேட்டிருந்தான். தான் வந்த மலை தோட்டியென்றும், தான் கண்ட வீரன் நள்ளியென்றும் அதுகாறும் அவன் அறியவில்லை. அவ்வீரனும் அறிவித்துக் கொள்ளவில்லை. அவ்வள்ளல் தன் கடமை

யைப் பிறர் அறியாமற் செய்துவிட்டு அகன்ருன். புலவனே அவன் செய்த உபகாரத்தை அது முதல் உலக முழுவதும் அறிவித்துக் கொண்டு வாழ்ந்தான்.

I. **பொருள் கூறுக :—**

விழுப்புண், கடகம், திருநாமம்.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

வாழ்வுக்கு இரண்டு கண்ணுகக் கொண்டு, ஓய்ந்த நடை, கால்போன வழியே போய், கண்ணுரப் பார்த்து.

III. **விடை எழுதுக:—**

1. சங்க நூல்கள் எனப்படுபவை எவை ?
2. தமிழருடைய இரண்டு சிறந்த குணங்கள் எவை ?
3. எப்பொழுது சாதல் இனிதாகும் ?
4. கண்டீரக்கோப் பெருநள்ளி யார் ?
5. அவனது மலை எது ?
6. வீரன் புலவரை எவ்வாறு உபசரித்தான் ?
7. வீரன் புலவருக்குக் கொடுத்த பரிசு யாது ?
8. அவன் யார் ?—சுட்டுப் பெயர் யாரைக் குறிக்கிறது ?

# 3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., பிஎச். டி;**

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில், ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே " என முழங்கினர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். " ஒற்றுமையாக உழைத்திடுவோம், நாட்டில் உற்ற துணை வராய் வாழ்ந்திடுவோம் " என்ருர் கவிமணி தேசிக விநாயகம். இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்ருகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் ஒடிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றினை ஒடித்த பிள்ளைகள் கட்டினை முறிக்கக்கூடாத காரணத்தை வைத்து. அவர்களுக்கு ஒற்றுமையுபதேசம் செய்தார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்மில் பலர் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயிற்றேகையை நிரம்ப நிரம்ப, வாரி

வாரிப் போட்டுக்கொண்டே யிருந்தால்; அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ மிகவும் நொய்மையானது. வண்டியின் அச்சோ மிகவும் வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலும் மேலும் திரண்டு கூடித் தோகைகள் வருவதால் அச்சு இற்றுப்போகி றது. அதைப்போலவே, எத்துணை எளியராயினும், நமது பகைவர் சேர்ந்து சேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரிய தாயினும் பயனின்றிப்போம். நாமே ஒற்றுமை மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப் பெரி தன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக் கொண்ட வள்ளு வப் பெருந்தகையார், "பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" என்று வழங்கியருளினார்.

நம் சுற்றத்தாரேயன்றி நமது ஏவல் செய்வோர்தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக் காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தரு வாராயின், அவ்வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாறாகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண் டாவது உறுதி. கவலையேற்பட்டாலோ, கருமயிர் நரைத்தல் ஒரு தலை. எனவே, நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள் இல்லை யேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம். இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப்படுகிறது. முன்னாளில் பிசிராந்தையார் என்னும் ஒரு புலவர் இருந்தார். அவ ருக்கு வயது பல ஆகியும் நரை தோன்றவில்லை. சில புலவர், அவரை ஒரு நாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங் களுள் ஒன்று, "யான் கண்டனையர் என் இளையரும்' என்பது அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய்வோரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரிகின்றனர். என் இல்லத்தில் சண்டைத் தொல்லைகள் இல்லை' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலகமும் விளையக்கூடிய வேளைகளில், புலவர்கள் சிலர் ஒற்றுமையுரை நல்கித் தடுத்துள்ளனர் என்று அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும் நெடுங்கிள்ளி என்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்தவன்; சேர, பாண்டிய அரசரை வென்று, அவர் தம் வஞ்சி யென்னும் ஊரையும் மதுரை யென்னும் ஊரையும் புலவர்க்கு வழங்

கத் தக்க ஆற்றலுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளியாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர், 'அழகிது' என நினைத்தார். நலங்கிள்ளியிடம் 'ஒன்றுபட்டால் வாழ்வுண்டு, இன்றேல், இருவர்க்கும் தாழ்வே என்று கூறினர். இக்கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. அதன் போக்கு, "அரசே! நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன், பாண்டியனும் அல்லன், சோழனே ஆவன். நீயும் சோழன், அவனுஞ் சோழன்; நீயும் ஆத்திமாலை சூடி யிருக்கிறாய்; அவனும் ஆத்திமாலை சூடி யிருக்கிறான். அஃது ஒன்றே நீங்கள் இருவீரும் ஒரு குடிப் பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவருள் எவர் தோற்றாலும், தோற்பதுநும் குடியன்றோ? அவ்வசை வரலாமா? நீங்கள் இருவீரும் வெற்றி கொள்ள முடியாது என்பது வெளிப்படை. உமது குடிக்கு வரும் பழியை நீக்கவேண்டுமானால் இம்மாறுபாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொருவீரானல், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று," என்பதாகும்.

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்' என்று கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப் படுத்திய புலவரது பெயரை நாம் அறியவேண்டாவோ? வேண்டினும் அவர் பெயரை அறியோம், ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள் வரை அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்போமாக! **கோவூர் கிழார்** வாழ்க!

மற்றொரு புலவர், பாண்டியன் ஒருவனுக்கும் சோழன் ஒருவனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனப்படுவர். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் அப்பாண்டியனையும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன் என்னும் அச்சோழனையும் ஒரு நாள் ஒருசேரக் கண்ட அப்புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார். "பால்நிறக் கடவுளும், நீலநிறக் கடவுளும் உடனிருப்பதுபோல் உள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணபிரானும்

ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீங்கள் இருவீரும் ஒருவீர் ஒருவீர்க்கு உதவி புரிவீராகுக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினுல் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொருமை கொண்டு, நல்லன சொல்லுவார் போல் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவ தெல்லாம், இன்று போலவே என்றும் இருங்கள் என்பது. இருப்பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நுங்கள் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின், பிரியன்மின்.'' என்பது அவர் பாட்டின் கருத்து

மற்றுமோர் புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்று படுத்தி வைத்தார் என்றும் அறிகிறோம். அப்புலவர் பெயர் **எயிற்றியனுர்** என்பது; ஊர் புல்லாற்றூர். கோப்பெருஞ் சோழன் என்னும் அரசன், உறையூரை ஆண்டுவரும் நாளில், ஒருநாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனேடு மாறுகொண்டனர். எதிர்த்து நின்ற அவரொடு பொரக் கருதி எழுந்தான் சோழ மன்னன். அப்பொழுது அங்கேயிருந்த பைந்தமிழ்ப் புலவர், "விறல் கெழுவேந்தே!" என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றுன் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரையைப் புகலத் தொடங்கினுர். அதன் சாரம், "பற் பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே! இப்பொழுது உன்னேடு எதிர்த்து வந்து நிற்போர் உன் பகைவுர் அல்லரே. நீயும் அவர்க்குப் பகைவுன் அல்லை. பகைவுரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ! புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க்குத் தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே!" என்பது ஆகும்.

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்று புலவருக்கு. "இன்னும் கேட்பாயாக, இசையில் விருப்ப முடையோய்! பெரிதும் கேட்பாயாக! புகழில் இச்சையுடையோய்!" என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றுர். "புதல்வர் ஆலோசனை யின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். தோற்றுப்போனுல் உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறுய்? போரினை விரும்புகின்ற செல்வ! ஒருகால் நீ அவர்க்குத்

தோற்ருல், உன் பகைவரெல்லாம் உன்னை இகழ்ந்து மகிழ்வர். உலகில் பழியையே வைத்துச் செல்லவேண்டியிருக்கும். நான் உன் ஆற்றலில் ஐயமுள்ளேன் என்பதன்று. அவ் வாற்றலை இவரிடம் காட்ட வேண்டா என்பதே எனது வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னைவிட்டு இப்பொழுது நீங்கி யிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நல்வினைகள் பல செய்வாயாக. வாழிய அரசே!" என்று நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரோடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக்குமோ? புலவர் உரைக்குங் காலே, வேம்பும் கரும்பும் போல இடையிடையே கடுஞ் சொல்லும் புகழ் மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அவர் அழைக்கும்போதே, அவன் பெருமையையும், வீரத்தையும் வெற்றியையும் உரைத்து அழைத்தார்; இடையிடை அவன் ஆற்றலின் சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினர்; "உனக்குத் தெரியாத தன்று" என்று சொன்னர்; புகழ் விருப்பம் உள்ள அவன், பழி தரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினர்; புதல்வரை வெறுத்துரைப்பார் போன்று சில சொன்னர். இவை யெல்லாவற்றினும் மிக்கதாக, "அமரில் விருப்பமுள்ள செல்வ" என்றும், "உன் வீரம் இப்பொழுது உன்னை விட்டு இருக்கட்டும்" என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழாதிருக்க முடியாது. ஓர் அரசன் முன் நின்று, "நீ உன் புதல்வர்க்குத் தோற்ருல்" என்ற கூற்றைக் கூறுவது எளிதன்று. அரசன் வெகுளாதிருக்கும் பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்து விடாதிருக்கும் பொருட்டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டும் அன்றே அத் தண்டமிழ்ப் புலவர்,

"அமர்வெஞ் செல்வ! நீ யவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே;
அதனல், ஒழிகதில் அத்தைநின் மறனே"

ஏன இருமருங்கும் கட்டியைக் கூட்டி, இடையே கடுக்காய்த் தூளை வைத்தார்! இங்ஙன மெல்லாம் நன் மருந்து தரவல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர் தம் ஊர்பேர் உரைகளை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர்தம் பொன்னுரைகளை யறிந்து வாழ்வம் ஒன்ருகவே!

I. பொருள் கூறுக:—

தறுவாய், பனித்தார், பீலி, இளிவரல், துஞ்சிய, நிருபன், வெகுண்டு.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

உடம்பு பூரித்து, உவகை எய்துவர், செவிசாய்த்து நின்றான். நயம்பட உரைக்கப்பட்ட, வற்புறுத்தினர்.

III. **விடை எழுதுக :—**

1. ஒற்றுமையைப் பற்றிப் பாரதியார் யாது கூறினர் ?
2. முதியவர் பிள்ளைகளுக்கு ஒற்றுமையின் சிறப்பை எவ்வாறு எடுத்துக் காட்டினர் ?
3. பிசிராந்தையாருக்கு நரை தோன்றாமைக்குக் காரணம் யாது ?
4. போர் தொடுத்த சோழமன்னர் யார் ?
5. கோவூர் கிழார் எவ்வாறு போரைத் தடுத்தார் ?
6. சோழர்க்குரிய மாலை எது ?
7. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் கூறிய அறவுரை யாது ?
8. எயிற்றியனார் கோப்பெருஞ் சோழனிடம் வேண்டியது யாது ?
9. எயிற்றியனார் கோப்பெருஞ் சோழனுக்குக் கூறிய பொருளுரை யாது ?

# 4. அணு வெடிக் குண்டு

**திரு. அ. சி. சுப்பிரமணிய பிள்ளை, பி. ஏ., எல். டி.,**

வெடிக்குண்டுகளெல்லாவற்றிற்குமே பொதுவான சில அபாயங்கள் உண்டு. ஆனால் ஒளிச்சிதறல் என்ற அபாயம் இதற்கே சிறப்பானது. அணுகுண்டு வெடிக்கும் போது கடற் பரப்பில் ஏற்படுவதைவிட அதிகச் சேதம் நிலப் பரப்பிலேயே ஏற்படும். தீ, சூடு, காற்றுப் புயல், ஒளிச் சிதறல் இவைகளால் கடலில் இந்த அபாயம் சுமார் ஒரு மைல் வட்டத்திற் குள்ளாகவே யிருக்கும். நிலத்திலோ இது இரண்டு மைல் வட்டங் கொண்டதாக இருக்கும். இந்த எல்லைக்குள் காற்றுப் புயலால் வீடுகள் தூளாகும்; நாலு பக்கங்களிலும் துண்டுகள் வீசும். கடலில் இந்த அபாயங்கள் இல்லை. அணுகுண்டு வெடித்த ஒருமைல் தூரத்துக்குள் ஒளிச்சிதறல் அபாயம் நிறையப் பரவிக் கிடக்கும். ஒளிச்சிதறல் பகுதியில் உயிர்கள் வாழ முடியா. மக்கள் அந்தப் பகுதியை விட்டு உடனே வெளியேறி விடவேண்டும். இதன் வேகம் மாதக்கணக்கில் கூட இருக்கும். எனவே பலமாதங்கள் வரைக்கும் இந்த இடம் மக்கள் வாழ்க்கைக்கு உதவாமல் போய் விடும். குண்டு எவ்வளவுக் கெவ்வளவு தரையருகே வெடிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு இந்த அபாய எல்லையும் விரியும்.

போர் முடிந்த பின்பும் இந்த அணுகுண்டு வீச்சுப் பரிசோதனை ஒன்று நடத்தி அதன் பலா பலன்களை ஆராய அமெரிக்க அரசாங்கத்தினர் தீர்மானித்தனர். பசிபிக்குப் பெருங்கடலின் இடையிலிருந்த **பிகினி** என்ற தீவுக்கு அருகே ஓர் இடத்தை அவர்கள் இதற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். பல வகையான பொறிகளைக் கொண்ட கப்பல்களும், ஆகாய விமானங்களும், மனிதர்களும் இந்த எல்லைக்கு வெளியே காத்திருந்தார்கள். பொறிகள் வெப்பப் பெருக்கம், காற்றழுத்தம், ஒளிச்சிதறல் முதலிய பல நிகழ்ச்சிகளைக் குறித்துக் காட்டும் சக்தி வாய்ந்தவை. ஆனல் எதிர்பார்த்தபடி பெருமிதமாக ஒன்றும் நிகழவில்லை. ஏனவே மற்றுமொரு சோதனையும் நடத்தப்பட்டது. அதில் கடலுக்குள் போட்ட குண்டு ஒரு கப்பலை நெடுந்தூரம் தூக்கி அடித்தது. 2200 அடி சுற்றளவுள்ளதும், ஒருகோடி டன் எடையுள்ள தண்ணீரைக் கொண்டதுமான ஒரு பெரிய நீர்த்தூண் ஒரு மைல் உயரம் கிளம்பிற்று. இந்த உயரத்தை அடைந்த இந்த நீர்க்கம்பம் வெடித்து, அதன் விளைவாக ஆவியும் நீரும் கலந்த மேகப்படலம் ஒன்று மூன்று மைல் வட்டத்திற்குக் கவிந்தது. இது பிறகு சாதாரண மேகம்போலவே எங்கும் பரவிற்று; மழையும் பெய்தது. இதன் மழைத்துளி ஒவ்வொன்றும் ஒளிச்சிதறல் இயக்கம் பெற்றதாயிருந்தது. கட்டுக்கதையும் அச்சமுமே அணுச்சக்தியின் மிகப் பாராட்டத் தகுந்த பலன்களை மறைக்கின்றன.

இந்நாள் வரையிலும் அணுச்சக்தியைப் பற்றிப் பலர் எழுதியவைகளிலும், பேசியவைகளிலும் இருபெரும் பிழைகள் இருப்பதைக் காணலாம்.

முதலாவது பிழை யாதெனில், போரில் உயிர் இனத்தையே அழிக்கவல்ல அணுகுண்டைப் பற்றிய கவனமே பெரிதாக இருந்ததே யன்றி, மனித இனத்தின் நன்மைக்குச் சமாதான காலத்தில் அணுச்சக்தியை எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொள்ளலாமென்ற எண்ணமே சிறிதேனும் யாருக்குமே தோன்றியதாகத் தெரியவில்லை.

இரண்டாவது பிழை என்னவென்ருல், எவராவது ஒருவர் போர்ச் செயல்களுக்குப் புறம்பாக அணுச்சக்தியைப் பயன்படுத்தும் வழிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினுல், அவரைப் பகற்கனவு காண்பவரென்றும், அவர் புகலும் செய்திகளெல்லாம் உதவாக்கரையான கட்டுக் கதைகளெனவும், அவருடைய முயற்சிகளெல்லாம்

கி. பி. 2000 ஆண்டில் உலகத்து உயிர்களின் வாழ்க்கை நிலை எவ்வாறிருக்குமென முடிவு கட்டுவதற்கே உதவக்கூடியன என்றும் பலர் அவரை நகையாடி இகழ்ந்து வந்தார்கள்; மேலும் அவர்களுடைய கூற்றுக்களெல்லாம் பழையன வற்றையும் புதியன வற்றையும் கண்டபடி குழப்பிக்கூறும் புனைசுருட்டு என்றும் நையாண்டி செய்து வந்தார்கள்.

ஆனால் நமக்கு இன்றியமையாது தெரிய வேண்டியது அணுச்சக்தி வருங்காலத்தில் நம்மனோர்க்குச் செய்யக் கூடியது என்ன என்பதை அறிந்து கொள்வதே யாகும்.

இவ்வளவு முதன்மையான அணுவின் வரலாற்றை யாருமே சரியான முறையில் விளங்க வைக்காததற்குக் காரணங்களும் பலஉள. அவையாவன.

(1) அணுகுண்டைப் பற்றிய அச்சமே பலருடைய சிந்தனையைச் சிதறவடித்து மழுங்கவைத்து விட்டது.

(2) ஓர் அணுகுண்டின் விலையே கோடிக் கணக்கான டாலர்களாகின்றது என்ற எண்ணமே அணுச்சக்தியைப் பயன்படுத்தும் முயற்சி வீண் பணச் செலவில் கொண்டு விட்டுவிடும் என்று தயங்க வைத்தது.

(3) அணுச்சக்தியின் உதவியால் ஓர் அம்பைச் சந்திரனிடம் அனுப்ப ஒரு நிலக்கரித் துண்டும் ஒன்றிரண்டு தேயிலைத் துணுக்குகளுமே விறகாகப் பயன் படுத்தினால் போது மென்ற வாதம் ஒருவராலும் நம்பப்படவில்லை.

(4) ஒருவரிடமும் இந்த அருமையான அணுச்சத்தியைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய அறிவும் ஆற்றலும் தோன்றவில்லை.

(5) கடைசியாக, உண்மை ஒரு பெரிய போர் மறையாக வைக்கப்பட்டிருந்ததால் இதைப்பற்றிப் பெரிய விஞ்ஞானிகள் மட்டும் மிக எச்சரிக்கையுடன் தங்களுக்குள் பேசிவந்தார்கள். பொது மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அளவுக்கு இது பரவவில்லை. ஆனால் இந்த உண்மையை இம்மாதிரி, ஒளித்து வைத்திருந்ததற்காகப் போர் அதிகாரிகளையோ, சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளையோ நாம் குறைகூற முடியாது. ஏனெனில் இவ்வுண்மை வெளிப்பட்டால் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடுந்தண்டனையைக் குறிப்பிட்டு

அரசியலாளர் பயப்படுத்தினார்கள். எனவே, உலகத்தின் கதியையே மாற்றவல்ல இச் சக்தியைப் பற்றிய விவரங்களை அமெரிக்கர்கள் மிக மறைவாகக் காத்து வந்தனர்.

இவ்வளவு தடைகள் போடப்பட்டிருந்தும், அணுகுண்டைப் பற்றியவேகம் சற்றுத் தெளிந்ததும், அணுச்சக்தியின் மறை உண்மைகள் மெல்ல வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. ஒரு சிலர் இச்சக்தி கூடிய விரைவில் என்ன வெல்லாம் செய்யவல்லது என்பதைப் பற்றியும் உணர ஆரம்பித்து விட்டார்கள். இச்சக்தியை உள்ளபடி அறிந்த உடனே, அவர்கள் இது மனித சமூகத்திற்குப் பெருந்துன்பத்தை விளைப்பதை ஒழித்து அதற்குப் பதிலாக மிகுந்த நன்மையையும் விளைவிக்கும் என்று அறிந்தனர். அவ்வளவு வியக்கும் படியான சக்தி அணுவுக்குள் அடங்கிக் கிடப்பதை அவர்கள் கண்டனர்.

இந்நிலைக்கு வந்தபிறகு இந்தச் சக்தியை ஒரு மூடுமந்திரமாக வைத்திருப்பது நேர்மையல்ல வென்று அவர்கள் நினைத்தார்கள். ஏனெனில் இப்பூவுலகத்தைப் பிற்போக்கான நிலையிலேயே வைத்திருப்பது தகாத காரியம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். அணு குண்டை எறிவதில் கண்டிப்பான தடையை விதிப்பதுதான் பொருத்தமான தாகும். இந்த நாசகாரியத்தைத் தடுத்த கணமே, இச்சத்தி நமது நாகரிகத்தை மேன்மேலும் வளர்க்கப் பயன்பெறும் விதங்களை ஆராய்வதே நமது கடமையாகும்.

இச்சக்தியை ஏராளமான செலவில்தான் தயாரிக்க முடியும் என்ற எண்ணமும் அவ்வளவு சரியான தன்று. ஏனெனில், ஓர் அணுகுண்டைத் தயாரிக்கப் பல கோடி டாலர்கள் செலவாகுமென்றால், அது பல காரணங்களைப் பொறுத்திருக்கின்றது. போர்க்கால விலை உயர்வு, கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் உழைப்பின் செலவு ஆகிய இப்போர்ப் பட்ட உண்மைகளே அதன் அளவு கடந்த விலைக்குக் காரணங்களாகும். சராசரியாகக் கணக்கிட்டால் ஓர் அணுகுண்டைத் தயாரிக்கச் சுமார் 500 மிலியன் டாலர்கள் போதுமென்பது தெரிகிறது. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இதன் செலவைச் சுமார் 350 மில்லியன் டாலர்களாகக் குறைத்துக் கொள்ளவும் முடியுமென்று நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆகவே நமது நினைவையே தடுமாற வைக்கும் அதன் விலை நிலைமையானது முதலீடு, ஆராய்ச்சி, மூலப் பொருள்கள், செய்முறை, ஓரிலக்கம் தொழிலாளிகளும் அவர்கள்

குடும்பங்களின் குடியிருப்புச் செலவும் சம்பளமும் ஆகிய பல இனங்களைப் பொறுத்ததாகும்.

இச்சக்தியை உண்டாக்க விலைஉயர்ந்த சாதனங்கள் தேவை. இதற்காக மிகப்பெரிய ஆறு இயந்திரங்கள் தேவையாக இருந்தன. யுரேனியத்தைப் பிரிக்கும் முறைக்கு நான்கு இயந்திரங்களும், அணுச் சக்தியைப் பெறுவதற்கு மூன்றும், இன்னும் சக்தியைப் பற்றித் தொடர்ந்து ஆராய்வதற்குப் பல ஆராய்ச்சி நிலையங்களும் அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் நிறுவப்பட்டன.

மற்றும், இச்சக்தியை உருவாக்குவதில் மூன்று புதிய நகரங்களே எழுப்பப்பட்டன. அந்த நகரங்களின் மக்கள் தொகையே நம்மை வியப்பில் ஆழ்த்தும். 78,000 மக்களைக் கொண்டது ஒரு நகரம்; மற்றொன்று 18,000 ஆட்களைக் கொண்டது; மூன்றாவது நகரத்தில் 6000 மக்கள் இருந்தார்கள். இவ்வளவு பெரிய நகரங்கள் தோன்றினது அணுச்சக்தியை உண்டாக்குவதற்காகவேதான் என்றால் இச்சக்தியின் மாயம் தான் என்ன!

இவ்வளவு செலவினங்களிலும் மிகப் பெரியது வாயுக்கள் பரவுவதற்கான இயந்திர சாதனமேயாகும். இதற்கு அடுத்தபடியாகப் பெரும் செலவில் அமைக்கப் பெற்றது ஒரு பெரிய இயந்திரசாலை ஆராய்ச்சி நிலைய மாகும்.

இவ்வாறிருப்பினும் இந்தச் செலவினங்களில் நாம் கவனிக்க வேண்டியதொரு மிக முதன்மையான செய்தி என்னவென்றால், அமைதிக் காலத்தில் அணுச்சக்தியை உண்டாக்குவதற்கு இவ்வளவு ஏராளமான பணச்செலவு ஆகாது என்பதே யாகும். என்னதான் செலவாகுமென்பதை இப்பொழுதே திட்டமாகச் சொல்வது முடியாது. ஏனெனில் அம்மாதிரியான முயற்சி ஒன்று எங்குமே இதுவரை ஆரம்பிக்கப்படவேயில்லை. ஆனால் இச்சமயம் அமெரிக்காவில் படைகளின் கண்காணிப்பில் நடைபெறும் சோதனைகளின் நோக்கம் யாதோவெனில் அமைதிக்காலத்தில் உதவக்கூடிய அணுச்சக்தியைத் தயாரிக்கும் சிறிய ஆக்க நிலையங்களை அமைப்பதே யாகும்.

இச்சமயம் மூன்று டாலர்களாக விற்கப்படும் ஓர் இராத்தல் யுரேனியத்திலிருந்து பெறும் சக்தியை அதே விலைக்குக் கிடைக்கும் ஒரு டன் நிலக்கரியிலிருந்து பெறலாமென்பது திட்டமான உண்மை. அதாவது ஏராளமான எடையுள்ள நிலக்கரியிலிருந்து பெறக்கூடிய

சக்தியை மிகச்சிறிய அளவு எடையுள்ள யுரேனியத்திலிருந்தே பெற லாமென்பது வெளிப்படை. ஆனால் இப்பொழுது விஞ்ஞானப் புல வர்களால் ஆக்க முடிந்தது மிகச்சிறு அளவு அணுச்சக்தியே யாகும். இப்போதைய நிலைமை இவ்வாறிருந்த போதிலும், ஆராய்ச்சியாளரு டைய நோக்கம் இச்சக்தியை ஏராளமாகப் பெறுவது எப்படி என்று காணும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருத்தலேயாகும்.

I. **பொருள் கூறு :—**

ஒளிச் சிதறல், பொறிகள்.

II. **வாக்கியங்களில் அமைக்க :—**

வெப்பப் பெருக்கம், காற்றழுத்தம், எவ்வளவுக் கெவ்வளவு, உயிரினத் தையே அழிக்கவல்ல, பகற்கனவு, நையாண்டி செய்தல்.

III. **விடை எழுதுக :—**

1. வெடிக்குண்டு வெடிப்பதால் ஏற்படும் அபாயங்கள் எவை ?
2. பிகினி என்ற தீவுக் கருகே கடலுக்குள் போட்ட குண்டினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?
3. அணுச் சக்தியைப் பற்றிப் பேசியவரிடம் இருந்த இரு பெரும் பிழைகள் யாவை ?
4. அணுவின் வரலாற்றை எவரும் சரியான முறையில் விளங்க வைக்காத தற்குக் காரணங்கள் எவை ?
5. ஓர் அணுகுண்டைத் தயாரிக்க எவ்வளவு தொகை செலவாகும் ?
6. யுரேனியத்தின் மதிப்பினை எவ்வாறு அறிகிறோம் ?

# 5. சங்கப் புலவர் நக்கீரனார்

**வித்துவான். திரு. ம. வி. இராகவன்.**

முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும் கல்வியிற் சிறந்தோர் பாண்டிய மன்னர் ஆவர். பண்டியர் தம் தலை நகரமாகிய மதுரையம்பதி யில் மும்முறை தமிழ்ச் சங்கத்தை நிறுவி, செந்தமிழ் மொழியைச் சிறப்பாக வளர்த்து வந்தனர். அங்ஙனம் அவர்களால் கடை முறை யில் நிறுவப்பட்ட சங்கம் கடைச்சங்கம் எனப் பெயர் பெற்றது. அஃது இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விளங்கியது. அதன் கண் நல்லிசைப் புலவர் நாற்பத்தொன் பதின்மர் குழுமியிருந்து விழுமிய பாக்கள் பல பாடினர்; நூல்கள் பல

செய்தனர்; பயன்மிக்க பல நூல்களை அரங்கேற்றினர்; பல இலக்கண நூல்களை வகுத்தனர்; இன்றமிழ் நூல்கள் பலவற்றை நன்கனம் ஆராய்ந்தனர். இத்தகைய தமிழ்ப் பணிகளால் அச் சங்கம் தனிப் புகழ் பெற்றுத் தழைத்தோங்கியது.

அச் சங்கத்து வீற்றிருந்து தமிழாராய்ந்த தண்டமிழ்ப் புலவர் நாற்பத்தொன்பதின்மருள் தலைமையானவர் **நக்கீரர்** என்பவர். கீரன் என்பது அவரது இயற் பெயர். 'ந' என்பது சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல். இவர் அச்சங்கத்து இருந்த புலவர்கள் அனைவரினும் புலமையில் தலைமை பெற்றுச் சிறந்து விளங்கியதால் அக் காலத்திருந்த அறிஞர் அனைவரும் இவரை நக்கீரர் என அழைப்பாராயினர். இவர் மதுரை நகரில் தமிழாசிரியராக விருந்து **மதுரை கணக்காயனுர்** எனப் பெயர் பெற்ற தமிழ்ப் பெரியாரின் தவப் புதல்வராவர். எனவே இவர் **மதுரை கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்** எனப் பெயர் வழங்கப்பட்டார். இவர் அந்தணர் மரபினர்; சிவபெருமானை வழிபடும் செந்நெறியினர்; கல்விச் செருக்கும் பெருமிதமும் அஞ்சாமையும் உடையவர். இவர் தம் புலமைப் பேரொளியால் தமிழ்ச் சங்கத்தைப் பொலிவுறுத்தி வந்தார்.

அக் காலத்தில் பாண்டிய மன்னனுக இருந்தவன் **வங்கிய சூடாமணி** பாண்டியன் என்பவன். அவன் சண்பகவனம் ஒன்று வைத்து, அதில் மலரும் மலர்களைக் கொய்து, அவற்ருல் பலவித மாலைகளைத் தொடுத்து, சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்தி வந்தான். அதனுல் அவன் **சண்பக பாண்டியன்** எனப் பெயர் பெற்ருன். அச் சண்பக பாண்டியன் ஒருநாள் மாலை தன் அரசமாதேவியோடு இளமரக்காவில் இன்புற்று உலாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது தென்றற் காற்று மெல்லென வீசியது. அதில் வியக்கத்தக்க நறுமணமொன்று கலந்து கமழ்வதை அரசன் உணர்ந்தான்; அப்புது மணம் தன் கோப்பெருந்தேவியின் கூந்தலிலிருந்து வருவதை அறிந்தான். 'இஃது இம்மண்ணுலகத்திற்குரிய மணம் அன்று; இத்தகைய நறுமணமுள்ள மலர் எதுவும் இவ்வுலகத்தில் இருப்பதாக நாம் அறிந்ததில்லையே! இது புது மணமாக அன்ருே உள்ளது!' என்று எண்ணி வியந்தான்; 'இவ்வாசம் இவள் கூந்தலுக்கு இயற்கையோ? அல்லது செயற்கையோ?' என்று ஐயுற்ருன். அவன் அதன் உண்மையை அறிய விரும்பி, ஆயிரம் பொன் அடங்கிய கிழி ஒன்றைச் சங்க மண்டபத்தில் தூக்கி, 'என் ஐயத்தைப் போக்கக் கூடியதாக ஒரு பாடல்

பாடித் தருவார் இவ்வாயிரம் பொன் கொண்ட கிழியைப் பெறுவர்' என்று நாடெங்கும் பறையறைவித்தான். சங்கப் புலவர்கள் யாவரும் ஆராய்ந்தும் அதன் உண்மையை அறியமாட்டாது வருந்தினர்.

அந்நாளில் மதுரையில் சோமசுந்தரக் கடவுளுக்கு அருச்சனை புரியும்அருச்சகர்மரபினனை தருமி என்னும் ஏழைப் பிரமசாரி ஒருவன் இருந்தான்.அவன் இச்செய்தியை அறிந்து, சோமசுந்தரக் கடவுள் திருமுன்அடைந்து, 'எம்பெருமானே! எளியேனுக்குத் தந்தையும் இல்லை தாயுமில்லை; அடியேன் விவாகத்தில் விருப்பமுற்றிருக்கிறேன்; அதற்குப் பொருள் சிறிதும் இல்லை; ஆகவே அரசன் ஐயத்தைப் போக்கும் பாடல் ஒன்றைத் தேவரீர் பாடித்தரின் அதனைக்காட்டி அரசனிடம் ஆயிரம் பொன் பெற்றுத் திருமணத்தை முடித்துக் கொள்வேன்' என்று வேண்டினன். சோமசுந்தரக் கடவுள் அவன் கள்ளமற்ற உள்ளத்தையும், அன்பின் மிகுதியையும் கண்டு, அவன் பால் திருவுள்ளம் இரங்கி, ஓர் ஓலை நறுக்கில்,

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ;
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே?''

என்னும் பாடலை எழுதித் தந்தருளினர். சிறந்த பெண்களின் கூந்தலுக்கு மணம் இயற்கையே என்பது இச்செய்யுளின் கருத்து.

தருமி பெருமகிழ்ச்சியோடு கோயிலினீங்கிப் பாண்டியனிடம் விரைந்து சென்று அச் செய்யுளை அரசன் கையில் நீட்டினன். அதனை வாங்கிப் படித்துப் பொருள் உணர்ந்த பாண்டியன், அதன் கருத்துத் தான் கொண்டிருந்த ஐயத்தைப் போக்குவதாக இருத்தலைக் கண்டு மகிழ்ந்து, 'இவன் சங்க மண்டபத்தில் தூக்கப்பட்டுள்ள பொற்கிழியைப் பெறக்கடவன்' என்று கூறினன். தருமி அரசன் ஏவலினல் சங்க மண்டபத்தை அடைந்து, அதன் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கலுற்ருன். அப்பொழுது அங்குத் திடீரென்று தோன்றிய நக்கீரர், அவன் கொண்டுவந்த பாடலை வாங்கிப் படித்துப் பார்த்து, 'இச்செய்யுள் குற்றமுடையது. ஆகவே, நீ பொற்கிழி பெறுதற்கு உரியை அல்லை' என்று கூறி, அவன் கிழியை அறுப்பதைத் தடுத்தனர். புலவர்கள் அது கண்டு திகைத்து நின்றனர்,

தருமி, "கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றே!" என்று ஏங்கினவனாய், சங்க மண்டபத்தினீங்கி, மெல்லச் சென்று, மீண்டும் சோமசுந்தரக்கடவுள் சந்நிதியை அடைந்து, அப்பாடலை அவர் திருமுன் வைத்து, தலை வணங்கி நின்று நிகழ்ந்தவற்றைக் கூறி முறையிட்டான்; "இறைவனே! உம்மால் படைக்கப்பட்ட மனிதனாகிய நக்கீரனே உமது பாடலுக்குக் குற்றம் கூறினான் எனின் உமக்கு உள்ள பெருமைதான் யாது? எளியேனால் அன்றோ உமக்கு இவ் விகழ்ச்சி நேர்ந்தது!" என்று இரங்கினான்.

அப்பொழுது சொக்கலிங்கப் பெருமான் **இறையனார்** என்னும் பெயரோடு ஒரு புலவர் வடிவங்கொண்டு சங்க மண்டபத்தை அடைந்தார். அங்குப் புலவர்களுள் பலரும் கூடித் தமிழ் ஆராய்ந்து கொண்டு இருந்தனர். நக்கீரர் தம் பெருமிதம் தோன்ற உயர்ந்த பீடத்தில் அமர்ந்து அப்புலவர் கூட்டத்திற்குத் தலைமை வகுத்திருந் தார். வந்த புலவர் அங்கிருந்த புலவர்களை நோக்கி, 'எமது கவிக் குக் குற்றம் கூறியவர் யாவர்?' என்று வினவ, அவ்வினா முடிவதற்கு முன்னரே அங்கு வீறுபெற வீற்றிருந்த நக்கீரர், 'நானே சொன்னேன்' என்றார்.

**இறையனார்:**—ஆயின் அப் பாடலில் நீர் கண்ட குற்றம் யாது?

**நக்கீரர் :**—அதில் சொற் குற்றம் ஏதும் இல்லை ; பொருட் குற்றம் உள்ளது.

**இறையனார் :**—அப்பொருட் குற்றம்தான் என்ன ?

**நக்கீரர் :**—பெண்களின் கூந்தலுக்கு மணம் பூவின் சம்பந்தத் தாலேயே உண்டாகிறது. ஆகவே, அதற்கு இயற்கையில் மணம் இல்லை. உமது பாடல் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்னும் கருத்துடையதாக இருக்கிறது. ஆகவே அது பொருட் குற்றம் உடையதே ஆகும்.

**இறையனார் :**—பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை என்பது உமது துணிபோ ?

**நக்கீரர் :**—ஆம்.

**இறையனார் :**—தெய்வப் பெண்கள் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையோ ?

**நக்கீரர்** :—இல்லை. அவர்கள் கூந்தலும் மந்தார நறுமலரின் சேர்க்கையாலேயே வாசம் பெறுவதால் அதுவும் செயற்கை மணம் உடையதே.

**இறையனர்** :—நீ வழிபடும் உமையாள் கூந்தலும் அத்தன்மை யதேயோ ?

**நக்கீரர்** :—ஆம். அஃதும் அத்தன்மையதே.

இறையனராக வந்த சிவபெருமான் நக்கீரரின் கல்விச் செருக்கைக்கண்டு சினம் கொண்டார். அவர் தமது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்டினர். வந்துள்ளவர் நுதல்விழி நாட்டத்து இறைவன் என்பதை அறிந்த பின்னரும், நக்கீரர் சிறிதும் அஞ்சாராய், 'நீர் நெற்றிக் கண்ணைக் காட்டினும் உமது பாடல் குற்றமுடையதே. நீர் கண்ணைக் காட்டி என்னை வெருட்டக் கருத வேண்டா. நான் உமது கண்ணைக் கண்டு அஞ்சுவேன் அல்லேன்' என்று செருக்குடன் கூறினர். சிவபெருமான் அவர் செருக்கை அடக்க எண்ணி, தம் நெற்றிக் கண்ணை முற்றவும் திறந்து நக்கீரரை நேருற நோக்கினர். நக்கீரர் அவ்வெரிவிழி நோக்கின் வெம்மையைப் பொறுக்கலாற்ருது, அருகில் உள்ள பொற்ருமரைக் குளத்தில் விழுந்து அழுந்தினர். சிவபெருமான் புலவர்கள் காண மறைந்தருளினர்.

சங்கப் புலவர்கள் அச் செயலைக்கண்டு நடுக்கம் எய்தினர். நக்கீரர் இல்லாத சங்கம் மதியில்லாத வான்ம்போலப் பொலிவிழந்து இருப்பதைக் கண்ட சங்கப் புலவர்கள் ஒருங்குகூடிச் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியை அடைந்து, அவரை வணங்கித் துதித்து, நக்கீரர் செய்த பிழையைப் பொறுத்து, அவரை உய்வித்தருளுமாறு வேண்டினர். சோமசுந்தரக் கடவுள் புலவர்கள் வேண்டுகோட்கு இசைந்து, மீனுட்சி அம்மையாரோடு பொற்ருமரைவாவிக் கரையை அடைந்து, அதில் அழுந்திக் கிடந்த நக்கீரரை அருட்பார்வையால் நோக்கியருளினர். அத்திருவருள் நோக்கத்தால் நக்கீரர் வெம்மை நீங்கப் பெற்றுக் கரைசேர்ந்து, கண்ணுதற் கடவுளை வணங்கி, அவர்தம் திருவருள் திறத்தை வியந்து வாழ்த்தினர். புலவர்கள் நக்கீரரது உறுதியையும், சிவபெருமானது தண்ணளியையும் வியந்து மகிழ்ந்தனர்.

பின்பு நக்கீரர் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக வீற்றிருந்து மற்றப் புலவர்களுடன் நற்றமிழ் ஆராய்ந்து நலமுற வாழ்ந்தனர்.

நக்கீரர் சிறந்த பல தனிப்பாடல்களையும், நூல்களையும், உரைகளையும் இயற்றினர். சங்கநூல் தொகைகளுள் ஒன்றாகிய **எட்டுத் தொகையில்** அடங்கிய **அகநானூறு, புறநானூறு** முதலிய நூல்களுள் இவர் பாடியனவாகப் பல பாடல்கள் உள்ளன. பத்துப்பாட்டு என்னும் தொகைநூலுள் **திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை** என்னும் இரு பெரும் பாடல்கள் இவரால் இயற்றப்பட்டனவாகும். **இறையனார் அகப்பொருள்** என்னும் சீரிய செந்தமிழ் நூலுக்கு இவர் செய்ததாகக் கருதப்படும் **உரை** மிகச் சிறந்ததாகப் புலவர்களால் போற்றப்படுகிறது. **திருவீங்கோய் மலை எழுபது, கோபப் பிரசாதம், திருவெழுகூற்றிருக்கை** முதலிய பல பிரபந்தங்களும் இவரால் பாடப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. இவர் பாடல்கள் யாவும் சொற் சுவையும், பொருட் செறிவும், பெருமித நடையும் உடையனவாகஅமைந்து விளங்குவன. தமிழ்நாட்டு இளைஞர் அப் பழம்பாடல்களைப் படித்து இன்புறமுயல்வாராக.

**I. பொருள் கூறுக :—**

நல்லிசைப் புலவர், குழுமி, விழுமிய, இயற்பெயர், செந்நெறி, கா, வாசம், பொற்கிழி, திருமுன், தூங்கிய, வீறுபெற, தண்ணளி, உசாவி, புனல், பொருள் செறிவு.

**II. விடை தருக :—**

1. தமிழரசர்களுள் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தவர் யார் ?
2. கடைச் சங்கத்தில் தமிழ் வளர்ந்த வரலாறு யாது ?
3. நக்கீரர் யார் ? அவர் எத்தன்மையர் ?
4. சண்பக பாண்டியன் யார் ? அவன் கொண்ட ஐயம் என்ன ? அதனைத் தீர்த்துக்கொள்ள அவன் என்ன செய்தான் ?
5. தருமி என்பவன் யார் ? அவன் அரசன் ஐயத்தைப் போக்கக் கூடிய பாடலை எவ்வாறு பெற்றான் ?
6. தருமி பொற்கிழி பெறாது தடுத்தது யார் ? ஏன் தடுத்தார் ?
7. பொற்கிழி பெறாமல் திரும்பிய தருமியின் முறையீட்டைக் கேட்டு, சிவபெருமான் என்ன செய்தார் ?
8. சிவபெருமான் பாடலில் நக்கீரர் கூறிய குற்றம் என்ன ?
9. சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டியபோது நக்கீரர் என்ன கூறினர் ?
10. சிவபெருமான் நக்கீரரை எவ்வாறு தண்டித்தார் ?

11. நக்கீரர் மீண்டும் உய்ந்து வந்தது எப்படி ?
12. நக்கீரர் பாடிய பாடல்கள் எவ்வெந் நூல்களில் காணப்படுகின்றன ? அவர் இயற்றிய வேறு பிரபந்தங்கள் எவை ?
13. நக்கீரர் பாடல்கள் எத்தகையவை ?
14. இவ் வரலாற்றினின்றும் சிவபெருமானைப்பற்றி அறியப்படுவது என்ன ?

# 6. சிங்கப்பூர்

திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர்கள், B.A.

**சிங்கப்பூர் துறைமுகம்**

நான் ஆஸ்திரேலியப் பிரயாணத்தின் முடிவில், பிரமாண்டில் துறைமுகத்திலிருந்து 'எஸ். எஸ். சாரன்' என்ற கப்பலில் சிங்கப்பூருக்கு வந்தேன். '6 மாதங்களுக்குப் பின் மீண்டும் ஆசியாவுக்கு (அதன் முச்சந்தியான சிங்கப்பூருக்கு) வருகிறேன்' என்ற எண்ணமே என் மனத்தில் குடி கொண்டிருந்தது. வெள்ளை நாகரிகம் நிறைந்த மூன்று கண்டங்களில் பல மாதங்களைக் கழித்த எனக்கு, மலேயா அயல் நாடாகத் தோன்றவில்லை. 1949-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ஆம் நாள், அதாவது தைப் பொங்கலுக்கு இரு நாட்கள் முன்னதாக நான் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தேன். நான் வந்த கப்பல் துறைமுகத்தை அடைந்தபோது காலை 6 மணி இருக்கும். உரிய அதிகாரிகள் கப்பலுக்கு வந்து எனது பாஸ்போர்ட்டில் ''சாப்புக்'' குத்தினர். ''சாப்பு'' என்னும் மலேயா மொழிக்கு முத்திரை அல்லது 'ரப்பர் ஸ்டாம்பு' என்பது பொருள். நான் ஓர் ஐரோப்பிய இனத்தவரின் நாட்டிலிருந்து வந்ததால் என்னுடைய உடல் நிலையைப் பற்றிய உறுதி மொழிகளை ஒருவரும் சரிபார்க்கவில்லை. இந்தியாவில் மட்டுமே எல்லா நோய்களும் இருப்பதாக மலேயா அரசியலார் கருதுவதே இந்த விதிவிலக்கிற்குக் காரணம் ஆகும்.

'சிங்கப்பூர் பெரிய கப்பல் தளம்' என்பது உலகத்தார் அனைவர்க்கும் தெரிந்ததே. அதைக் கட்டி முடிக்கப் பதினைந்து ஆண்டுகள் ஆயினவாம். அதற்குப் பிரிட்டிஷார் 20 மிலியன் பவுன், அதாவது 27 கோடி ரூபாய் செலவிட்டனராம். எனவே ஆசியாவில் சிங்கப்பூரே பெரிய துறைமுகமாக இருப்பது இயற்கையே. பல தீவு

களுக்கு இடையே அமைந்திருப்பதும் அதன் சிறப்பாகும். நாள் தோறும் ஒரு கோடி ரூபாய் பெறுமான பொருள் ஏற்றுமதியும் அதே அளவு இறக்குமதியும் சிங்கபபூர் துறைமுக வாயிலாக நடைபெறு கின்றன.

பிரிட்டனின் தென் கிழக்கு மூலையிலுள்ள சதாம்ப்டன் துறை முகத்தில் பிரயாணிகள் கப்பலில் ஏறுவதற்குச் செய்யப்பட்டுள்ளது போன்ற வசதிகளை நான் சிங்கப்பூர் துறைமுகத்தில் காணவில்லை. கப்பலை விட்டு இறங்கியதும் நியூயார்க்குத் துறைமுகத்திலுள்ளதைப் போன்ற சுங்கச் சோதனை அமைப்புக்களோ, தந்தி-டெலிபோன் நிலை யங்களின் பிரதிநிதிகளோ கண்ணெதிரில் இல்லை. பிரயாணிகள் கொண்டுவந்த பொருள்களைக் கப்பலிலிருந்து தாமே இறக்கிவிடும் கருவிகளும் சிங்கப்பூரில் இல்லை. எனக்குச் சிறப்பாகத் தெரிந்தது, சிங்கப்பூர் பொதுத் துறைமுகமாக (**பிரீ போர்ட்டாக**) இருந்ததால், சுங் கச் சடங்குகள் குறைவாயிருந்தது ஒன்று மட்டுமே. பொதுத் துறை முகங்கள் என்பன உலகில் சில இடங்களில் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஹாங்காங்கும் ஹாம்பர்கும் ஆகும். சிங்கப் பூர் துறைமுகம் இந்தோனேசியா, மலேயா, போர்னியோ முதலிய வளம் பொருந்திய பல நாடுகளுக்கு இன்றியமையாத துறைமுகமாக இருந்து வருகிறது. இந்த நாடுகளுக்கிடையே நடைபெறும் வியா பாரம் சிங்கப்பூர் வாயிலாகவே நிகழ்கிறது. அதுமட்டுமன்று. இந்த நாடுகளுக்கு மற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களும், இந்த நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குச் செல்லும் பொருள்களும் சிங் கப்பூர் வாயிலாகவே செல்லவேண்டும். இந்த நாடுகளில் சுங்கவரி விதிக்கப்படுவதால் சிங்கப்பூரிலும் சுங்கவரி விதிப்பது சரியன்று. எனவே சிகரெட், தங்கம், மது போன்ற ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படுகிறது. இதன் பயனைகச் சிங்கப்பூரில் பொருள்களெல்லாம் மலிவாகக் கிடைக்கின்றன. வெளி நாட்டு வாணிகமும் அந்நாட்டில் பெரிய அளவில் நடைபெறுகிறது.

**ஓட்டலுக்குப் புறப்பாடு**

இனிச் சிங்கப்பூருக்குள் செல்லுவோம்: கப்பல் துறைமுகத்தை யடைந்து 10 நிமிடங்களில் நான் எனது ஓட்டலுக்குப் புறப்பட்டேன். 'ஸீவியூ' ஓட்டலில் தங்குவதற்கு நான் ஏற்பாடுகள் செய்திருந்தேன். இந்த ஓட்டல் மேயர் ரோடில் கடலுக்கு எதிரே அமைந்திருக்கிறது.

துறைமுகத்திற்கும் இதற்கும் உள்ள தொலைவு நான்கு மைல்கள். நான் ஓட்டலுக்குச் செல்லும் வழியில் சிங்கப்பூரின் முக்கிய சாலைகளைக் கடந்தேன். போருக்கு முன் சிங்கப்பூர்தான் ஆசியாவிலேயே துப்புரவான நகரமாக இருந்தது; ஆனால் இன்று அங்கு வழங்கும் பத்துக்காசு 20 காசு நோட்டுகளில்கூட அவற்றை நாம் கையால் தொடமுடியாத நிலையில் அழுக்கு நிறைந்திருக்கிறது. இத்தகைய துப்புரவின்மையும், வெப்பமும், விதவிதமான ஆடைகளும் வழி நெடுகக் காணப்பட்டன. ஆதலால், சிங்கப்பூருக்கும் சில இந்திய நகரங்களுக்கும் எனக்கு வேறுபாடு தெரியவில்லை. மக்கள் உரத்த குரலில் பேசுவதையும், கொள்வோரும் கொடுப்போரும் விலைகளில் "பேரம்" செய்வதையும் சில நாட்களில் நான் அறிந்தேன். இவை முதல்நாள் நான் எண்ணிய கருத்துக்களை உறுதி செய்தன.

## என் அலுவல்கள்

ஓட்டலில் இறங்கியதும், மலேயாவில் என்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினேன். மலேயாவின் பல பகுதிகளைப் பார்க்கவும், அந்த நாட்டில் வேறுபட்ட வழக்கங்களைப் புரிந்துகொள்ளவும் நான் முயன்றேன். அங்கு எனக்கு, சிங்கப்பூர் செட்டியார் வணிக மன்றச் செயலாளர் திருவாளர் சே. சுப்பைய செட்டியாரவர்கள் பேருதவியாய் இருந்தார்கள். மலேயாவில் என்னை அன்புடன் உபசரித்த அன்பர்கள் மிகப்பலர். நாட்டுக்கோட்டை நகரத்தாரின் விருந்தோம்பலை அறிந்தவர்களுக்கு இதை விரித்துக் கூறவேண்டியதில்லை. அவர்கள் எனது வெளி நாட்டுப் பட்டறிவுகளை அறிவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்ததால், அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டங்களிலும் மற்ற வாய்ப்புக்களின் வாயிலாகவுமே நான் மலேயா நாட்டைப்பற்றி அறிய முடிந்தது. சிங்கப்பூரிலும் மலேயாவின் மற்ற நகரங்களிலும் பல சமூகத்தினரைச் சந்திக்க முடிந்தது. அப்போது இந்திய அரசியலின் பிரதிநிதியாயிருந்த திரு. திவி அவர்களையும் அவர் இல்லத்தில் கண்டு மலேயா பற்றிய செய்திகளை அவருடன் விரிவாக விவாதித்தேன்.

## சிங்கப்பூரும், மலேயாவும்—அரசியல் நிலை

சிங்கப்பூர், மலேயா என்ற பெயர்கள் எதைக் குறிக்கின்றன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே இவற்றை விளக்கிக் கூறுவேன்.

ஜப்பான் போர் தொடுக்குமுன் மலேயாவில் 1. ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில் மெண்ட்ஸ், 2. பெடரேட்டட் ஸடேட்ஸ், 3. அன்பெட ரேட்டட் ஸ்டேட்ஸ் என்று மூன்று தனித்தனி அரசாங்கங்கள் இருந் தன. சிங்கப்பூர், பிளுங்கு, மலாக்கா என்ற மூன்று தீவுகளும் ஸ்ட் ரெயிட்ஸ் செட்டில் மெண்டில் அடங்கியன. மூன்ருவது பிரிவில் பல சிற்றரசுகள் இருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அர சாங்கம் இருந்து வந்தது.

போரில் வென்ற பின்னர், பிரிட்டிஷார் நிறுவிய அரசியல் சட்டப் படி இப்போது மலேயாவில் இரண்டு அரசாங்கங்கள் மட்டுமே உள் ளன; சிங்கப்பூர் தீவுக்கு மட்டும் ஓர் அரசாங்கமும் மலேயா மற் றெல்லாப் பகுதிகளுக்கும் ஒரு அரசாங்கமும் இருந்து வருகின் றன. அரசியல் மொழியில் முன்னதற்குக் காலனி என்றும், பின்னதற் குப் பெடரேஷன் என்றும் பெயர். முன்னதற்கு ஒரு கவர்னர் இருக் கிருர். பின்னதற்கு ஒரு மலேயா சுல்தானும் ஒரு பிரிட்டிஷ் ஹைகமி ஷனரும் நிர்வாகத் தலைவர்களாக இருக்கின்றனர். ஈரிடங்களிலும் அரசாங்கத்தார் நியமித்த ஆலோசனைக் குழுக்கள் மட்டுமே உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகள் இல்லை. இந்தப் பகுதிக்கும் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பிரிட்டிஷாரின் மற்ற நாடுகளுக்கும் எல்லா அதிகாரங்களும் படைத்தவர் கமிஷனர் ஜெனரல் மால்கம் மாக்டனல்டு என்பவர்.

**சிங்கப்பூரின் வரலாறு**

சிங்கப்பூர் என்பது ஒரு வடசொல். சிங்கநகரம் என்பது இதன் பொருள். 1819-இல் இது மீன் பிடிக்கும் சிற்றூராக இருந்தது. ஜோஹூர் சுல்தானிடமிருந்து ராபில்ஸ் என்ற வெள்ளையர் ஆண் டுக்கு 3000 வெள்ளி (5000 ரூபாய்) வாடகை கொடுப்பதென்ற உடன்பாட்டின் மூலம் சிங்கப்பூரைப் பிரிட்டிஷாரின் உடைமையாக்கி ஞர். இவர்தாம் சிங்கப்பூரை உண்டாக்கிய வீரர். அதன் முதல் கவர் னராக இருந்தவரும் இவரே. கடலிற் பிறந்து, கடற்படையில் பணி யாற்றிய ராபில்ஸ், உலகின் சிறந்த கடற்படைத் தளத்தை அமைத் தது இவரது வீரத்தை வெளிப்படுத்துகிறது. ராபில்ஸின் நினைவாகச் சிங்கப்பூரில் பல சின்னங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில வரு மாறு : ராபில்ஸ் பிளேஸ், ராபில்ஸ் மியூஸியம், ராபில்ஸ் பஜார், ராபில்ஸ் போஸ்டாபீஸ், ராபில்ஸ் ஓட்டல் முதலியன. ராபில்ஸின் சிலை

யும் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. இது செம்பால் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இச்சிலையைத் தமிழ் மக்கள் ''செம்புத் துவான்'' என்று சொல்லுகிறார்கள். துவான் என்றால் மலாய் மொழியில் துரை என்பது பொருள்.

**நகரச் சிறப்பு**

சிங்கப்பூரின் நீளம் 26 மைல்; அகலம் 14 மைல். தெற்குக் கோடியில் ஒரு மைல் நீளமுள்ள பாலம் ஒன்று இத் தீவை மலேயா நாட்டுடன் இணைக்கிறது. மணிலா, பாங்காக், ஹாங்காங், ஷாங்ஹை ஆகிய ஆசிய நகரங்கள் முறையே கீழ் நாட்டின் முத்து, ஆசியாவின் வெனிஸ், தென்கிழக்கு ஆசியாவின் ரிவரியா, தூரக் கிழக்கின் நடு நாயகமான இடம் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பெயர்கள் அனைத்துமே தென்கிழக்கு ஆசியாவின் தலைவாயிலான சிங்கப்பூருக்குப் பொருந்தும். அதன் கட்டடங்களும் கடைத் தெருக்களும் கண்டோரை மயக்கும் தன்மையுடையவை. பீச் ரோடிலுள்ள பேங்குகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் இவற்றின் கட்டடங்கள் மிகப் பெரியவை. இத்தகைய சிங்கப்பூர் ஓர் அழகான நகரந்தான், அதனாலேயே இதற்கு ஜப்பானியர் 'சோனன் டோ' என்று பெயரிட்டனர். இப்பெயருக்கு ஜப்பான் மொழியில் அழகிய தெற்குத் தீவு என்பது பொருள். ஆனால் பாரிஸ், ஸ்டாக்ஹோம், ஜினீவா ஆகிய நகரங்களை நான் முன்னரே பார்த்திருந்ததால், சிங்கப்பூரின் அழகு எனக்கு மிகுதியாகத் தெரியவில்லை. பலமாடிகளுள்ள கட்டடங்கள் சிங்கப்பூரிலிருந்த போதிலும், பம்பாயின் மெரைன் டிரைவைப்போல ஒரு வான வீதி அங்கே இல்லை. அங்கே என்னைக் கவர்ந்த கட்டடங்கள் சுப்ரீம் கோர்ட் கட்டடமும் கத்தே பில்டிங்குமே ஆகும்.

சுப்ரீம் கோர்ட் உள்ள மாளிகை அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள காபிடல் பில்டிங்கைப் பின்பற்றி அமைக்கப் பட்டது. நகராண்மைக் கழகக் கட்டடம் இதற்கடுத்தாற்போலிருக்கிறது. இவற்றுக்கு எதிரில்தான் இந்திய தேசீய இராணுவத்தினருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்ததாம். கத்தே பில்டிங் 14 மாடிகள் உடையது. இதுவே ஆசியாவில் மிக உயர்ந்த கட்டடம். இதில் சிங்கப்பூர் அரசியலாரின் அலுவலகங்களும், ரேடியோ நிலையமும். மலேயாவின் ஸ்டுடியோக்களும், ஒரு தியேட்டரும், அழகிய அறைகளுடன் கூடிய ஒரு நல்ல ஓட்டலும் இருக்கின்றன. இக்கட்ட

டத்தின் ஒரு பகுதியில் மலையிருப்பதால், உச்சி வரையிலும் வாகனங்களை ஓட்டிச் செல்ல இயலுமென்று கேள்விப்பட்டேன். டில்லிக்குச் செங்கோட்டைபோல, சிங்கப்பூருக்குக் கத்தே பில்டிங் இருந்துவருகிறது. நேத்தாஜியின் சுதந்திர இந்தியத் தாற்காலிக அரசாங்கம் கத்தே பில்டிங்கில்தான் நிறுவப்பட்டது. மவுண்ட்பாட்டன் பிரபுவின் தலைமை இடமும் இக்கட்டடத்தில் தான் இருந்தது. அவரே ஜப்பானியரிடம் சரணாகதியைச் சிங்கப்பூரில் ஏற்றுக்கொண்டவரென்பதும், அமைதி குலைந்த நிலையில் ஜப்பானியர் விட்டுச் சென்ற மலேயாவை மீண்டும் அமைதிநிலைக்குக் கொண்டு வந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடுவது பொருந்தும். சிங்கப்பூரில் ஒரு சாலைக்கு அவருடைய பெயர் இடப்பட்டிருக்கிறது. கத்தே பில்டிங் லோகி வான் தோ என்ற சீனக் கோடீசுவரரைச் சேர்ந்தது.

மலேயாவில் மற்றொரு பெரிய செல்வர் அலிபூன்ஹா என்பவர். இவரும் ஒரு சீனரே. இவர் "டைகர் பாம்" என்ற தலைவலி மருந்தைச் செய்து விற்றுப் பெரும் பொருள் ஈட்டியவர். இதனால் இவருக்கு "டைகர் பாம் மன்னர்" என்ற பெயர் வழங்கிவருகிறது. இவர் ஹாங்காங்கிலும் மலேயாவிலும் பல பத்திரிகைகளை நடத்துகிறார். இவருடைய பத்திரிகைகள் பிரிட்டிஷ் அரசியலாரின் மலேயாக் கொள்கையை ஆதரிக்காததால் நாடு இல்லாத இந்த மன்னர், நாடு கடத்தப்பட்டிருக்கிறார்.

### மூன்று உலகங்கள்

'சிங்கப்பூர்' என்றதும் என் நினைவுக்கு வருவனவற்றுள் அங்குள்ள மூன்று உலகங்களைக் குறிப்பிடுவேன். ஜாலன் பஜாரிலுள்ள நியூ வோர்ல்ட், கிம்செங் ரோட்டிலுள்ள கிரேட்வோர்ல்ட், கேலாங் ரோட்டிலுள்ள ஹாப்பி வோர்ல்ட் ஆகியவைகளே இம் மூன்றும். இவை ஒவ்வொன்றும் ஏராளமான மின்சார விளக்குகள் போடப்பட்ட திறந்த வெளிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே குழு நடனங்களும், திரைப்படங்களும், துப்பாக்கியால் சுட்டுப் பரிசுபெறும் போட்டிகளும், தத்தம் ஊழ்வினையைச் சோதிக்கும் பற்பல ஆட்டங்களும், கடைகளும், சிற்றுண்டிச் சாலைகளும், சீனரின் சினிமாத் தியேட்டர்களும் உண்டு.

குழு நடனங்களில் ஆடும் பெண்கள் சிங்கப்பூரில் 600 பேருளர். தொழிலுக்கேற்ற நல்ல தோற்றம் இருப்பதற்காக இவர்கள்

ஒவ்வொருவரும் மாதம் 155 வெள்ளி அதாவது 945 ரூபாய் செல விடுகின்றனர். உடை, செருப்பு, தலைமயிரை ஒழுங்கு படுத்தல், வாசனைப் பொருள்கள் வாங்குதல், போக்குவரவுச் செலவு இவற்றில் முறையே 40, 20, 25, 40, 30 வெள்ளிகள் இவர்களுக்குச் செல வாகுமாம்.

'ரோங்கிங்' என்ற மலாய் நடனத்தை இந்த உலகங்களிலேதான் நான் கண்டு களித்தேன். இஃது திறந்த வெளியில் ஒரு மேடைமீது நடைபெறுகிறது. இது ஒரு நுண்கலை. நடனம் ஆடுவோர் ஒரு காலை மட்டுமே ஊன்றிக்கொண்டு ஆடவேண்டும். பெண்ணுக்கு மிக அருகில் ஆண் செல்ல வேண்டும். ஆனால் அவளைத் தொட்டுவிடக் கூடாது. அவனிடமிருந்து தப்புவதற்கே அவளும் முயலுவாள். இதைப் போன்ற நடனத்தை நான் வேறெங்கும் காணவில்லை.

**மற்றச் சிறப்புக்கள்**

சிங்கப்பூரின் மற்றொரு சிறப்பு, அது உலகத்தினர் அனைவருக்கும் பொதுவான ஒரு நகரமாக இருப்பதாகும். இந்தியர், சீனர், மலாய்க்காரர்கள், டச்சுக்காரர், பிரிட்டிஷார், பிலிப்பைன்ஸ்காரர், அரேபியர் ஆகிய எல்லா இனத்தினரும் வாழும் பெருமை சிங்கப்பூரைச் சேரும். சிங்ப்பூரின் மொத்த ஜனத்தொகை 10 லட்சம். ஏழு லட்சம் பேருக்கு மேற்பட்ட சீனரும் ஒரு லட்சத்துக்குட்பட்ட இந்தியரும் இந்நகரில் இருக்கின்றனர்.

சிங்கப்பூரின் நடு நாயகமான இடமாக விளங்குவது ராபில்ஸ் பிளேஸ் ஆகும். இந்த மைதானத்தைச் சுற்றிலும் புகழ்பெற்ற கடைகள் இருக்கின்றன. 'பி. பீ. டிசெல்வா' என்ற நகைக்கடையினர், இளவரசி எலிசபெத் திருமணத்துக்குத் தாம் நகை அனுப்பியதை விளம்பரப்படுத்துகின்றனர். 'வாசிமல்ஸ்' என்ற சில்க் வியாபாரிகள் தம் கடையில் 'ஜீன் சிம்மன்ஸ்' என்ற உலகப் புகழ்பெற்ற திரை நட்சத்திரம் பொருள் வாங்கியதை விளம்பரப்படுத்துகின்றனர். இங்குள்ள துணிக்கடைகள் அனைத்தும் சிந்திக்காரர்களைச் சேர்ந்தவை. அருகிலுள்ள (சிங்கப்பூரின் வால் ஸ்ட்ரீட்டாகிய) மார்க்கெட் தெருவிலுள்ள வட்டிக் கடைகள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களையும் வங்குசாக்கள் நாடார்க்களையும் சேர்ந்தவை. ராபில்ஸ் ்ளேசிலுள்ள கட்டடங்களை எல்லாம் 'கியான்சிங்' என்ற இந்திய ்கர் போர்க் காலத்தில் விலைக்கு வாங்கிவிட்டார். எனவே

இன்னும் சில மாதங்களில் ராபில்ஸ் பிளேசின் பெயர் 'கியான்சிங் பிளேஸ்' என்று சிங்கப்பூர் நகராண்மைக் கழகத்தாரால் மாற்றப்பட்டால், நான் வியப்படையமாட்டேன்.

## கதம்பம்

### சிங்கப்பூரில் இருப்பவை

விமான நிலையங்கள், பல்லாயிரம் திரிஷாக்கள் (சைக்கிளின் துணைகொண்டு மனிதன் இயக்கும் ஒரு வகை ரிக்ஷாக்களுக்குத் திரிஷா என்பது பெயர்), பலநாட்டு நாணயங்களைக் குறைந்த விலைக்கு மாற்றுவதைத் தொழிலாக உடையோர், சீர்கெட்ட கப்பலைச் செப்பனிடுவோர், துபாஷ்கள் (இது துவிபாஷி என்பதன் திரிபு; இருமொழி பேசுதலில் வல்லுநர் எனப் பொருள்படும்), பல ஆயிரம் காடிகள் (மோட்டார்கள்), ஓர் ஆயிரம் யூதர், எப்போதும் ஒரே விதமான தட்பவெப்ப நிலை.

### சிங்கப் பூரில் இல்லாதவை

எண்ணெய்க் கிணறுகள், கலைச்சிறப்பு, காக்கை.

### சிங்கப்பூரிலும் மலேயாவிலும் சிறப்பான ஆட்டம்

பாட்மின்டன்.

### தொழிற்சாலைகள்

ரப்பரால் ஓடு, மிதி போன்ற பலவிதப் பொருள்கள் செய்வது, மூலப்பொருளாகக் கிடைத்த ஈயத்தை ஏற்றுமதிக்குத் தக்கபடி பக்குவப்படுத்துவது, தேங்காய் எண்ணெய் செய்வது, சோப் உற்பத்தி செய்வது ஆகிய தொழில்கள் சிங்கப்பூரில் சிறப்பாக நடைபெறுகின்றன. ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி போன்ற அமெரிக்கக் குழுக்கள் சிங்கப்பூரில் உள்ளன. இவைகளுக்கு உதவியாயில்லாத எந்த அரசியலாரும் இன்றைய மலேயாவில் பல நாட்கள் நீடித்திருக்க இயலாது.

### சீனர்

சிங்கப்பூரில் பெரும்பான்மையான சமூகத்தினர் சீனரே. ஆகையால் அவர்களைப் பற்றிய ஒரு குறிப்புடன் இக் கட்டுரையை முடிப்போம்.

உலகில் சீனர் இல்லாத இடமே இல்லை. மலேயா, சைன கருகில் உள்ள நாடு. இரு நாடுகளுக்குமிடையே சப்பல் ஏ

வரத்து மிகுதியாக இருக்கிறது. விமானத்தில் சீனுவிலிருந்து புறப்பட்டால் 10 மணி நேரத்திற்குள் மலேயாவை அடைந்து விடலாம். தவிரவும் மலேயா போதிய ஜனத்தொகை இல்லாத நாடு; வளம் மிகுந்தது. அருகிலுள்ள ஏழ்மை நாடுகளில் வாழும் மக்களைத் தன்னகத்தே இழுக்கும் சக்தி அதனிடம் உண்டு. இக்காரணங்களால் சீனர் மலேயாவில் இருப்பது இயற்கையே.

மலேயா வாழ்சீனருள் பல சாரார் உள்ளனர். அவர்களை இரு பொதுப் பிரிவினராகப் பாகுபாடு செய்யலாம். ஒரு பிரிவினர், கடந்த சில ஆண்டுகளில் சீனுவிலிருந்து வந்தவர்கள்; மற்றொரு பிரிவினர் மலேயாவில் பிறந்து வளர்ந்த சீனர். இவர்கள் சீனுவைப் பார்த்ததில்லை. சீனமொழியையும் அறியார். மலாக்காவில் வாழும் சீனர் 'பாவா சீனர்' என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஏனைய சீனரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில்லை. சீனமொழி, கலை, வரலாறு, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பரப்பும் நோக்கத்தோடு சிங்கப்பூரில் ஓர் இயக்கம் அண்மையில் தோன்றியுள்ளது.

சிங்கப்பூரில் ஒரு திரிஷாவிலோ, டாக்ஸி காரிலோ சென்று கொண்டிருக்கும்போது, மிகுதியான ஜனநெருக்கமும் கூடுதலான துப்புரவின்மையும் குறுகிய தெருக்களும் ஓரிடத்திலேயே கண்டால், அதுதான் சைனு டவுன் என்று முடிவு செய்துவிடலாம். இங்கே பலவிதமான உணவுச் சாலைகள் உண்டு. இவற்றில் உணவருந்த வேண்டுமென என்னுடன் வந்த சிலர் கப்பலிலேயே மனக் கோட்டை கட்டினர். சீனர் சிற்றுண்டிச் சாலைகள் நடத்துவதில் திறமையுடன் விளங்குகின்றனர். மலேயா நாட்டின் பெருஞ் செல்வர் சிலர் சீனரே என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். மற்றச் சீனரும் பிற இனத்தவரை விட நல்ல பொருளாதார நிலையில் இருக்கின்றனர். வியாபாரிகளாகவும், பல் வைத்தியர்களாகவும், அரசியலாரின் ஊழியர்களாகவும், தொழிலாளராகவும், வழக்கறிஞராகவும் சீனர் பல்லாயிரவர் வாழ்க்கை நடத்துகின்றனர். திரிஷா இயக்குவதும் சீனருக்கே உரிய தொழில்போல் தென்பட்டது. மலேயா நாடு முழுவதும் கித்தாக்கடைகளைச் சீனரே நடத்துகின்றனர். கித்தாக்கடை என்பது ரப்பரை வாங்கி விற்கும் தரகு மண்டி போன்றது. மலேயாவின் வாணிகத்தில் சீனரின் பங்கு என்ன என்பதை, அவர்கள் பயன்படுத்தும் நிறுத்தலளவை மட்டுமே மலேயாவில் வழங்கி வருவதிலிருந்து அறியலாம். விலை வாசிகள் பீக்கல் கணக்

கில் தான் சொல்லப்படுகின்றன. 100 கட்டி கொண்டது ஒரு பீக்கல், அதாவது 133/13 பவுண்டுக்குச் சமம்.

சீனரின் முக்கியப் பிரச்சினை எப்படித் தம் குழந்தைகளுக்கு உணவளிப்பது என்பதே. ஒரு டஜன் குழந்தைகளிருப்பது அவர்கள் குடும்பங்களில் பொதுவான பண்பு. குழந்தைகளைப் பெற்றோர்கள் எண் வரிசைப்படி அழைப்பதும் அவர்கள் மரபு.

சீனரின் புத்தாண்டு விழாவன்று நான் சிங்கப்பூரில் இருந்தேன். அன்று அவர்கள் தம் உறவினரையும் நண்பர்களையும் காணச் சென்றனர்; பழைய கணக்குகளைத் தீர்த்தனர்; சிவப்புப் பூக்களை வாங்கினர். பெண்கள் தலையலங்காரக் கடைகளுக்குச் சென்று தம்மீது பல பூச்சுக்களைத் தடவிக்கொண்டனர்; பல நாட்களுக்கு முன்பே பல் இழந்தவர்கள் அன்றுதான் தங்கப்பல் கட்டிக்கொண்டனர்.

**I. பொருள் கூறுக :—**

பாஸ்போர்ட், வங்குசா.

**II. விடை எழுதுக :—**

1. ஆசிரியர் உடல் நிலையை அதிகாரிகள் ஏன் சோதிக்கவில்லை ?
2. இந்தியாவைக் குறித்து மலேயா அரசியலார் கருதுவது யாது ?
3. சிங்கப்பூர் துறைமுகம் சிறப்புடையது என்று கூறக் காரணம் யாது ?
4. சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படும் பொருள்கள் எவை ?
5. போருக்குப்பின் சிங்கப்பூர் எத்தகைய நிலையில் இருக்கின்றது ?
6. ஆசிரியர் மலேயா நாட்டைப்பற்றி அறியத் துணை செய்தவை எவை ?
7. ராபில்ஸன் நினைவுச் சின்னங்கள் சிங்கப்பூரில் இருக்கக் காரணங்கள் எவை ?
8. செம்புத்துவான் எனப்படுவது எது ?
9. ஜப்பானியர் சிங்கப்பூருக்கு வைத்த பெயர் யாது ?
10. ஆசிரியர் சிங்கப்பூரில் கண்ட சிறந்த இரண்டு கட்டடங்கள் எவை ?
11. ஆசிரியர் சிங்கப்பூரில் கண்ட மூவுலகங்கள் எவை ?
12. ரோங்கிங்-என்பது யாது ? அதைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
13. சிங்கப்பூரில் இருப்பவை எவை ? இல்லாதவை எவை ?
14. 'பாவா சீனர்' – யாவர் ?
15. சீனரின் முக்கியப் பிரச்சினை யாது ?
16. சீனர் புத்தாண்டு விழாவை எவ்வாறு கொண்டாடுகின்றனர் ?